தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 16, பவ—திருவள்ளுவர் ஆண்டு 2025

1994, ஏப்ரல் 29, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்."

அரிய பயன்மிகு பொருள்களை ஆராய்ந்தறியவல்ல அறிவினை உடையோர், பயன் இல்லாத சொற்களை ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

வினாக்கள்-விடைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 441 திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

441—

தமிழக வழக்கறிஞர்கள் நல நிதித் தொகையை அதிகரித்தல்

** 21702—திரு.ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வழக்கறிஞர்களின் நலநிதித் தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 29

தமிழக வழக்கறிஞர்களின் நல நிதித் தொகையை - கார்பஸ் ஆப் தி பண்ட்— அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் வழக்கறிஞர் நல நிதித் தொகையாக ஒரு வழக்கறிஞர் இறப்பாரேயானால் அவருக்கு அதிகபட்சமாக 60 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்காக ஒரு சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வந்து, இப்போழுது இருக்கக்கூடிய சட்டப்படி 60 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. தமிழக வழக்கறிஞர்கள் இன்று 90 சதவிகிதம் பேர் வறுமையிலே வாடி வாழ வழி இன்றி தவித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே ஒருவர் இறந்துவிடுவாரானால் இந்த 60 ஆயிரம் ரூபாய் என்பது இந்த விலைவாசி ஏறியிருக்கிற இந்தக் காலக் கட்டத்தில் போதாமல் இருக்கிறது. ஏற்கெனவே பார் கவுன்சில் ஒரு லட்சம் ரூபாயை ஒரு வழக்கறிஞர் இறப்பாரானால் கொடுக்கலாம் என்று ஒரு புரப்போசலை அரசுக்கு அனுப்பிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு அந்த நல நிதி ஸ்டாம்ப் ஒட்டிக்கொண்டிருந்த நீதிமன்றத்தில் இப்போது 2 ரூபாய் ஸ்டாம்பை ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது பார் கவுன்சிலில் பணமும் அதிகமாக இருக்கிறது. இந்த நேரத்தில் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கருணையோடு ஏற்கெனவே அவர்கள் அரசுக்கு அனுப்பி இருக்கிற புரப்போசலை ஏற்று ஒரு வழக்கறிஞர் இறந்தால் கொடுப்பதற்கான நல நிதித் தொகையை 1 லட்சம் என்று உயர்த்தித் தருவதற்கு ஆவன செய்வாரா? அரசாங்கம் ஏற்கெனவே இந்த நல நிதிக்காக ஏதாவது பணத்தை அரசாங்கத்தின் தொகுப்பாக கொடுத்திருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழ்நாடு பார் கவுன்சில் குடும்ப நலத் திட்ட நிதியை 60 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்த, அதற்காக வழக்கறிஞர் நல நிதி வில்லையை- அட்வகேட்ஸ் வெல்பேர் பண்ட் ஸ்டாம்பை, 2 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக உயர்த்துவதற்கு சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வர அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக பார் கவுன்சில் அளித்துள்ள விளக்கங்களை அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இரண்டாவது தகவல், இந்த வழக்கறிஞர்களுடைய நிதிக்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, வழக்கறிஞர்கள் சந்திக்கிறபொழுது ஏதாவது நிதி வழங்க

1994 ஏப்ரல் 29]

வேண்டுமென்று கேட்டபொழுது, அவர்கள் பெரு மனது வைத்து 5 லட்சம் ரூபாய் மானியமாக வழக்கறிஞர்களுடைய நிதிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான். குறுக்கே வந்தவர்களுக்கு இரண்டாவது கேள்விக்கு அனுமதி இல்லை. திரு. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கு நிதி கொடுப்பதில் சட்டத்தில் இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மிகவும் நலிவடைந்து, மிகவும் வயதான பிறகு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை கணக்கில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஒரு லட்சமாவது ஒட்டுமொத்தமான நிதியை அளிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு லட்சம் ரூபாய் திட்டத்தை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. விரைவில் அதை அறிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பயிற்சி படித்து முடித்த உடனே, அந்தந்தப் பகுதிகளில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களிலே வழக்கறிஞர்களாகப் பயிற்சி செய்கிறார்கள். அவர்கள் பயிற்சி செய்கின்ற காலத்திலே அல்லது வழக்கறிஞர் தொழிலில் இருந்து ஓய்வு பெறும் நேரத்திலே அவர்களுக்கு ஒரு நல நிதித் தொகை வழங்க வேண்டுமென்று தமிழகத்திலே உள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமான கோரிக்கையை விடுத்துள்ளார்கள். வழங்கப்பட இருக்கின்ற அந்த 60 ஆயிரம் ரூபாய் தொகையை ஒரு லட்சமாகக் கூட்ட வேண்டுமென்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த மாவட்டத்தில் பயிற்சி செய்கின்ற வழக்கறிஞர்கள் அந்த நல நிதிக்கு பங்கு செலுத்தும் வகையில் அவர்கள் மாதாமாதம் ஒரு தொகையைக் கட்டி, அரசும் ஒரு பங்குத் தொகையாக அந்தந்த வழக்கறிஞர்கள் பெயரிலே கட்டி, வழக்கறிஞர்கள் செலுத்துகின்ற தொகையையும், அரசு செலுத்துகின்ற தொகையையும் சேர்த்து, இந்த அரசு ஒரு லட்சமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 ஏப்ரல் 29

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு கொடுப்பதல்ல. வழக்கறிஞர்கள் ஒவ்வொரு வழக்குக்கும் இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி, அதன்மூலம் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு, இப்போது 60,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை ஒரு இலட்சமாக ஆக்க வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சங்கம் — பார் கவுன்சில் — கேட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு நல்ல முடிவெடுப்பார்கள். ஆனால் அதற்கு மத்தியிலே என்னைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுகோள். இங்கே பேசிய வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களுடைய குறைகளை மட்டும் சொன்னார்கள். அவர்கள் சில கடமைகளையும் செய்ய வேண்டும். 25,000 வழக்கறிஞர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தில் 7100 பேர்கள்தான் இன்றைக்கு உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர், திரு. ஞானசேகரன் அவர்களை கேட்டுக்கொள்வது, நீங்கள் மிகுதியாக இருக்கிறவர்களையும் உறுப்பினர்களாக்கினால் 1 இலட்சம் அல்ல, 2 இலட்சம் அல்ல, 3 இலட்சம் ரூபாய் கூடக் கொடுக்கலாம். உங்களுக்கு நிதி சேரும். இன்றைக்கு இருக்கின்ற வழக்கறிஞர்களை எல்லாம் உறுப்பினர்களாக்கினால் அவர்கள் சந்தா செலுத்துவார்கள். ஸ்டாம்ப் ஃபீ செலுத்துவார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 5 இலட்சம் ரூபாயை அந்த 'கார்பஸ் பண்ட்'-க்கு மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே 25,000 வழக்கறிஞர்களில் இன்னும் 18,000 பேர்கள் உறுப்பினர்கள் ஆகாமல் இருந்து கொண்டு, 1 இலட்சமாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, தயவு செய்து முதலிலே அவர்களை உறுப்பினர்களாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா. எண் 442, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

442—

ஆண்டிமடம் புக்குழி கிராமத்திற்கு நியாய விலைக்கடை அமைத்தல்

** 13025*—*திரு. ஆர் தங்கராஜ்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, புக்குழி கிராமத்திற்கு ஒரு நியாய விலைக்கடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1994 ஏப்ரல் 29

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு கொடுப்பதல்ல. வழக்கறிஞர்கள் ஒவ்வொரு வழக்குக்கும் இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி, அதன்மூலம் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு, இப்போது 60,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை ஒரு இலட்சமாக ஆக்க வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சங்கம் — பார் கவுன்சில் — கேட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு நல்ல முடிவெடுப்பார்கள். ஆனால் அதற்கு மத்தியிலே என்னைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுகோள். இங்கே பேசிய வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களுடைய குறைகளை மட்டும் சொன்னார்கள். அவர்கள் சில கடமைகளையும் செய்ய வேண்டும். 25,000 வழக்கறிஞர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தில் 7100 பேர்கள்தான் இன்றைக்கு உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர், திரு. ஞானசேகரன் அவர்களை கேட்டுக்கொள்வது, நீங்கள் மிகுதியாக இருக்கிறவர்களையும் உறுப்பினர்களாக்கினால் 1 இலட்சம் அல்ல, 2 இலட்சம் அல்ல, 3 இலட்சம் ரூபாய் கூடக் கொடுக்கலாம். உங்களுக்கு நிதி சேரும். இன்றைக்கு இருக்கின்ற வழக்கறிஞர்களை எல்லாம் உறுப்பினர்களாக்கினால் அவர்கள் சந்தா செலுத்துவார்கள். ஸ்டாம்ப் ஃபீ செலுத்துவார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 5 இலட்சம் ரூபாயை அந்த 'கார்பஸ் பன்ட்'-க்கு மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே 25,000 வழக்கறிஞர்களில் இன்னும் 18,000 பேர்கள் உறுப்பினர்கள் ஆகாமல் இருந்து கொண்டு, 1 இலட்சமாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, தயவு செய்து முதலிலே அவர்களை உறுப்பினர்களாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா. எண் 442, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு உணவு அமைச்சர்.

442—

ஆண்டிமடம் புக்குழி கிராமத்திற்கு நியாய விலைக்கடை அமைத்தல்

***13025**—திரு. ஆர் தங்கராஜ்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, புக்குழி கிராமத்திற்கு ஒரு நியாய விலைக்கடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆண்டிமடம் தொகுதி புக்குழி கிராமத்தில் அழகாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் சிலம்பூர் நியாயவிலைக் கடையை பிரித்து 300 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு 16-6-93 முதல் செயல்பட்டு வருகிறது.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்ட பிறகு, அங்கே பகுதி நேர கடை திறக்கப்பட்டிருக்கிறது. சிலம்பூர் கிராமத்திலிருந்து புக்குழி கிராமம் 5 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. அங்கே சரியான சாலை வசதிகள் இல்லை. எனவே, அந்தப் பகுதி நேரக் கடையை முழு நேரக் கடையாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 300 குடும்ப அட்டைகள்தான் அந்தக் கிராமத்திலே இருக்கிறது. ஆகவேதான் பகுதி நேரக் கடை திறக்கப்பட்டிருக்கிறது. தனியாக முழு நேரக் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமானால் குறைந்தபட்சம் 800 அட்டைகள் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இப்போது அப்படிப் பார்க்க முடியாமல், அந்த விதிகளை எல்லாம் மீறிக்கூட சுமார் 69 சதவிகிதம் — 15,338 கடைகள் இப்போது தமிழகத்திலே 800 அட்டைகளுக்கும் குறைவாக உள்ள கடைகளாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இப்படிக் குறைந்த அளவிலே அட்டைகளைக் கொண்ட கடைகளை மேலும் திறப்பதற்கு அரசு மிக அதிகமான செலவைச் செய்ய வேண்டியதொரு சூழ்நிலையில், இப்போது இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் தமிழகம் முழுவதும் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற விருப்பத்தைக் கேள்வியின் மூலம், கோரிக்கையின் மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நான் மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே மிகவும் அக்கறை எடுத்து,கிராமப் பகுதிகளில், குறிப்பாக குக்கிராமப் பகுதிகளில் அதிக அளவுக்கு குடும்ப அட்டைகள் இல்லை என்றாலும், அங்கேயெல்லாம் தனியாகக் கடைகள் திறப்பதற்கு எப்படிச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை உடனடியாக ஆராயவேண்டுமென்று அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதையொட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கருத்து கேட்கப்பட்டுள்ளது. ஆகவே மிக விரைவில் இப்படிப்பட்ட குக்கிராமப் பகுதிகளில் குறிப்பாக பெண்கள் அதிக தூரம்

[1994 ஏப்ரல் 29

சென்று இந்த உணவுப் பொருள்களை வாங்குகிற சூழ்நிலையிலிருந்து அவர்களைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு மிகத் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஒட்டி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படுகிறபோது, அந்தக் கடைகளுக்குக் கொண்டு செல்லப்படுகிற அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை, ஆகிய பொருட்களை கொண்டு செல்கிறபோது, அதற்கு உண்டான வண்டி வாடகையையும், அதை வைத்து விற்கப்படுகின்ற இடத்தையும் கிராமப் பொதுமக்கள் கொடுத்தால்தான் முடியும் என்ற நிலையை அரசு எடுத்திருக்கிறது. அப்படி இருக்கிறபோது, பல்வேறு கிராமங்களில் பிரச்சினை எழுகிறது. எனவே அந்த வண்டி வாடகையையும் அந்த இடத்திற்குரிய வாடகையையும் அரசு தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை இந்த நேரத்தில் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கவேண்டுமானால், அங்கே அந்தக் கிராமத்தில் அந்தக் கடையை நடத்துவதற்கான இடத்தை அந்தக் கிராம மக்கள் இலவசமாக வழங்கவேண்டுமென்றுதான் விதி இருக்கிறதே தவிர, போக்குவரத்துச் செலவுக்காக அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற விதி இல்லை. அப்படி யாரும் வாங்கக் கூடாது. அதைக் கூட்டுறவு துறைதான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி யாராவது அங்கே வருகிற பகுதிநேர நியாயவிலைக் கடையில் பணிபுரிவோர்கள் அல்லது அந்த கிராமத்திற்கு அந்த சரக்குகளைக் கொண்டு வருகிறவர்கள் போக்குவரத்துச் செலவுக்கும் வேண்டுமென்று கேட்டால் அதை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அந்தக் கடைகளை அந்த கிராம மக்கள் இலவசமாகத் தரவேண்டும் என்பதுதான் விதி. அதுதான் இப்போது நடைபெற்று வருகிறது. இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை எப்படி, இந்தக் கஷ்டத்திலேயிருந்து மக்களை விடுவிப்பது என்பதைப் பற்றி, துறை மிகத் தீவிரமாக ஆராயவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 443, டாக்டர் எம்.பி.சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

குடிசைப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்தல்.

***21689—டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசைப் பகுதி மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கின்ற வகையில் சுகாதாரம் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

ஏற்கெனவே நடத்தியிருக்கிற 10 மருத்துவ முகாம்கள், குடிசைப் பகுதிகளிலேயும் இடம் பெற்றிருக்கின்றன. இப்போது நடந்துகொண்டிருக்கின்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்களும் குடிசைப் பகுதிகளிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன. நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் ஏற்படுத்தப்படுகின்ற மருத்துவ வசதிகள் அனைத்தும் குடிசைப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் பயன்படுகின்ற வகையிலேதான் அமைகிறது என்ற காரணத்தால் தனியாக இதற்கு திட்டம் அவசியம் இல்லை.

டாக்டர் எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே பெரிய மறுமலர்ச்சியை எல்லாம் ஏற்படுத்தி மக்கள் மற்றும் மருத்துவத்துறையில் உள்ள எல்லோராலும் ஏகமனதாகப் பாராட்டப்பட்டுவரும் நமது திறமை மிக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் முன் நின்று நடத்துகின்ற இந்த நமது மாண்புமிகு முதல்வர், the most super Chief Minister டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரால் நடத்தப்பட்டு வரும் இத் திட்டத்தினால் ஏழை எளிய நடுத்தர வர்க்க தாய்மார்களும் குழந்தைகளும், பள்ளி மாணவர்களும் — 5 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களும்— பயன் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்காக ஒரு வாரியம் அல்லது தனி இயக்ககம்-டைரக்டரேட் - அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக தனி வாரியமோ அமைப்போ தேவையில்லை.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 443, டாக்டர் எம்.பி.சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

குடிசைப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்தல்.

***21689**—டாக்டர் எம்.பி. சேகர்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசைப் பகுதி மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கின்ற வகையில் சுகாதாரம் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

ஏற்கெனவே நடத்தியிருக்கிற 10 மருத்துவ முகாம்கள், குடிசைப் பகுதிகளிலேயும் இடம் பெற்றிருக்கின்றன. இப்போது நடந்துகொண்டிருக்கின்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்களும் குடிசைப் பகுதிகளிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றன. நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் ஏற்படுத்தப்படுகின்ற மருத்துவ வசதிகள் அனைத்தும் குடிசைப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கும் பயன்படுகின்ற வகையிலேதான் அமைகிறது என்ற காரணத்தால் தனியாக இதற்கு திட்டம் அவசியம் இல்லை.

டாக்டர் எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே பெரிய மறுமலர்ச்சியை எல்லாம் ஏற்படுத்தி மக்கள் மற்றும் மருத்துவத்துறையில் உள்ள எல்லோராலும் ஏகமனதாகப் பாராட்டப்பட்டுவரும் நமது திறமை மிக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் முன் நின்று நடத்துகின்ற இந்த நமது மாண்புமிகு முதல்வர், the most super Chief Minister டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரால் நடத்தப்பட்டு வரும் இத் திட்டத்தினால் ஏழை எளிய நடுத்தர வர்க்க தாய்மார்களும் குழந்தைகளும், பள்ளி மாணவர்களும் — 5 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவர்களும்— பயன் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்காக ஒரு வாரியம் அல்லது தனி இயக்ககம்-டைரக்டரேட் - அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக தனி வாரியமோ அமைப்போ தேவையில்லை.

ஏற்கெனவே இருக்கிற அமைப்பை வைத்தே ஏற்கெனவே இருக்கிற பணியாளர்கள், மருத்துவர்களை வைத்தே இந்தக் காரியத்தை நம்மால் செய்யமுடியும். எனவே நிரந்தரமாக ஆண்டு முழுவதும் நடந்து கொண்டிருக்கிற திட்டமாக இது இருக்காது. அவ்வப்போது தேவைக்கேற்ப இருக்கிற நோயைக் கண்டுபிடித்து அதற்கேற்ப முகாம்கள் நடத்தப்படுகின்றன. எனவே ஏற்கெனவே இருக்கிற அமைப்பை வைத்தே நம்மால் அதைச் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ முகாம்கள் என்பது சிறந்த அமைப்பு. ஆனால் சென்னை நகரைப் போன்ற நகரங்களில் அதை நடத்துகிறபோது, அக்கம்பக்கங்களில் பெரிய மருத்துவமனைகள் இருப்பதாலும், ஆங்காங்கே டிஸ்பென்சரிகள் இருப்பதாலும் அங்கே மருத்துவ முகாம்களுக்கு வருபவர்கள் எல்லாம் எங்களுக்கு பால் டின்கள், டானிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகையினால் சென்னையில் நடத்துகிறபோது முக்கியமாக எனது தொகுதியில் நடத்துகிறபோது பால் டின்களும் டானிக்குகளும் அதிகமாகக் கொடுக்க முன்வருவார்களா? அல்லது அதைத் தவிர்த்து நாட்டுப் புறங்களில் நடத்த முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ முகாம் நடத்துவது என்பது ஒரு அவார்னஸ் கிரியேட் பண்ணுகிற நோக்கமேயொழிய, அங்கேயே நாம் ட்ரீட்மென்ட் கொடுப்பது என்பது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது முழுக்க முழுக்க சரியான ஒன்று. ஏற்கெனவே அந்த அனுபவம் எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால், பெரிய மருத்துவ மனைகள் இருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் சில நேரங்களிலே மருத்துவமனைக்கு வருவதற்கு நேரம் இல்லாத காரணத்தாலோ அல்லது போனால் கூட்டமாக இருக்கும் என்ற காரணத்தாலோ வராமல் போய்விடுவார்கள். எனவே, அவர்களுக்கு இது பயன்படுமே என்ற காரணத்தினால்தான் இதை நடத்துகிறோம். எனவே, இவ்வளவு குறைவாக வந்தாலும்கூட, அதன் மூலமாக அவர்கள் ஒரு விழிப்புணர்ச்சி பெற வேண்டும்: அவர்களுக்கு இருக்கிற நோய் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்குச் சொன்னால், தேவையான மருத்துவமனையிலே தொடர்ந்து

1994 ஏப்ரல் 29]

அவர்கள் மருத்துவச் சிகிச்சை பெற வேண்டும் என்பதற்காகவும் இந்த முகாம் நடத்தப்படுகிறது. அதிலே டானிக்கோ, மருந்தோ கொடுப்பது என்பது முக்கியம் அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதி மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவர்களை நோக்கிப் போகின்ற காலம் போய், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே குடிசைப் பகுதி மக்களை நோக்கி மருத்துவர்கள் வருகின்ற காலத்தை ஏற்பாடு செய்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த வகையிலே சென்னை மாநகரத்திலே மருத்துவ முகாமை முதலிலே என்னுடைய தொகுதியிலே துவக்கி வைத்து, குடிசையிலே வாழுகின்ற ஏழை மக்களுக்கு, குறிப்பாக நல்லான்குப்பம், புதூர், ஒட்டப்பாளையம், காமராசர் காலனி போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய குடிசைவாழ் மக்களுக்கு நீங்கள் மருத்துவ சிகிச்சை செய்வதற்கு நன்றி சொல்கிறேன். நீங்கள் சொல்லி இருப்பதுபோல பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு மருத்துவ முகாம் அமைக்கப்பட இருப்பதாக சொன்னார்கள். அதை என்னுடைய தொகுதியிலே முதலில் துவக்க அமைச்சர் அவர்கள் முற்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவருடைய தொகுதியிலேதான் துவக்கப்பட்டு இருக்கிறது. முடிக்கிறபோதும் அவருடைய தொகுதியிலே முடிப்பதற்கு முயற்சியை மேற்கொள்ளலாம். அடுத்து, புதிய திட்டமாக இப்போது பள்ளியிலே இருக்கிற குழந்தைகளுக்காக நடத்த இருக்கிறோம். எனவே, இந்த மருத்துவ முகாம்கள் அங்கே ட்ரீட்மெண்ட் கொடுக்கிற நோக்கத்தோடு அல்லாமல், அந்த மக்களுக்கு இந்த நிலைமைகளைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இது நடத்தப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தர்மபுரியிலே நடத்தப்பட்ட ஒரு மருத்துவ முகாமில் அந்த பெண்களுக்கு இருந்த கேன்சர் நோய் அவர்களுக்குத் தெரியாமலேயே இருந்து இருக்கிறது. இந்த முகாம் மூலமாக அது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு இப்போது தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இப்படி இந்த முகாம் மூலமாக ஏற்கெனவே நடத்திய அந்த 10 ஆயிரம் முகாம்கள், அதற்கு பின்னாலே இப்போது நடந்துகொண்டு இருக்கிற பணிகள் மற்றும் குழந்தைகளுக்கான முகாம்-இதன் மூலம்

கண்டுபிடிக்கப்பட்டவர்கள் பல பேர் இன்றைக்கு தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த முகாம் நடந்ததன் மூலமாக, அவர்களுக்கு அந்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இல்லை என்றால், அதை அதற்குப் பின்னால் சரி செய்ய முடியாத அளவிற்கு, அது கட்டுக்கு மீறிப் போய் இருக்கும் என்ற நிலையிலே அவர்களுக்கு அதுபற்றித் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே குடிசையிலே வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள்தான் ஒரு நாட்டுக்கு, ஜனநாயகத்துக்கு, அரசாங்கத்தை உருவாக்குவதற்கு வாக்கு அளிக்கக் கூடியவர்கள். அவர்கள் அன்றாடம் சுகாதாரமான முறையிலே இருப்பதற்கு வாய்ப்பற்ற நிலையிலே வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள். எனவே, அவர்களுடைய் குடிசைப் பகுதிகளுக்கே நடமாடும் மருத்துவ வேன்களை அனுப்பி அவர்களுடைய குழந்தைகளுக்கும் அவர்களுக்கும் தினந்தோறும் நோய்ப் பிரிவிலே மருத்துவ சிகிச்சை கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த குடிசைப் பகுதி என்பது, பெரும் பகுதி குடிசைகள் இருப்பது நகர்ப்புறங்களிலேதான். கிராமப்புறங்களிலே இருக்கிற குடிசைப் பகுதிகளிலே அவ்வளவாக சுகாதாரக் கேடு இருப்பது இல்லை. நகர்ப்புறங்களிலேதான் இந்த சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. நான் ஏற்கெனவே ஒரு முறை பதில் அளிக்கிறபோது சொல்லி இருக்கிறேன். நடமாடும் மருத்துவமனைகள் என்பது இங்கே நடமாடுகிறதா என்று தெரியாமல் நடமாடிக் கொண்டிருக்கிறதே; கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தால், நடமாடும் மருத்துவமனையை அதிகமாக கொண்டுவருவதைப்பற்றி அரசு ஆலோசிக்கவில்லை. ஆனால், அதற்குப் பதிலாக எந்தெந்தப் பகுதியிலே சுகாதார மையங்களை அமைத்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற ஏற்பாட்டை நாம் இப்போது செய்து இருக்கிறோம். குறிப்பாக நகரங்களில் I.P.P.-V திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 29 நகராட்சிகளில் இப்போது புதிதாக அந்த மருத்துவமனையை நாம் துவக்க இருக்கிறோம். இது குறிப்பாக குழந்தைகளுக்காகவும்,

1994 ஏப்ரல் 29]

பெண்களுக்காகவும், அதுவும் அந்த குடிசைப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு அதிகமான கவனம் செலுத்தி பணியாற்றக் கூடிய ஒரு திட்டமாக அமைய இருக்கிறது. ஏனெனில், ஏற்கெனவே இருக்கிற மருத்துவமனைகள் நிச்சயமாக குடிசைப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு முழுமையான மருத்துவ வசதியை ஏற்படுத்திக் கொடுக்கிற வகையிலே அமைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் சார்பாக குடிசைப் பகுதியிலே அந்த மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தை முழுமையாக நாம் செயல் படுத்திக்கொண்டு இருக்கிறோம். இருந்தாலும் கூட இந்த பழங்குடியினர், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் இருக்கக்கூடிய ஹேம்லட்ஸ் இன்றைய தினம் பாரஸ்ட் பகுதிகளில் இருக்கின்றன. இங்கே நம்முடைய அருமையான திட்டங்கள் முழுமையாக செயல் படுத்தப்படுவதில் சில சங்கடங்கள் இருக்கிற காரணத்தால், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால் அவர்களோடு அரசு மருத்துவ அதிகாரிகளும், 6 மாதத்திற்கு ஒரு தடவை அல்லது வருடத்திற்கு இரண்டு, மூன்று தடவையாவது வருவதற்கு மண்டல இணை இயக்குநர் அவர்களுக்கு உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை பகுதிகளில் எப்படி கவனிக்கப்பட வேண்டுமோ, அப்படி மலைப் பகுதிகளும் கவனிக்கப்பட வேண்டிய இடம் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. ஏற்கெனவே நாம் நடத்திய முகாம்கள் அங்கே நடத்தப்பட்டிருக்கின்றன. நாம் ஏற்கெனவே நடத்திய முகாம்களில் தனியார் மருத்துவர்களும் பங்கு பெற வேண்டுமென்ற வேண்டுகோளை விட்டிருக்கிறோம். பல இடங்களில் அப்படி வந்திருக்கிறார்கள். ஆனால் இந்த மலைப் பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, யாராவது தனியார் முன்வந்தால் நிச்சயமாக அவர்களோடு சேர்ந்த ஒரு குறிப்பிட்ட நாளில் அரசு மருத்துவர்களும் போய் அங்கேயிருந்து, பணியை கவனிக்கலாம் என்ற உத்தரவை நிச்சயமாக வழங்க முடியும். அதற்கான நடவடிக்கையை அந்தந்த பகுதிகளில் யாராவது முனைப்பாக நின்று எடுத்தால் அது வெற்றிகரமாக முடியும். எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களே மருத்துவராக இருப்பதால்,

அவரே, அதைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 444. திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

444—

மதுரையில் புறநகர் மருத்துவமனை அமைத்தல்

**** 23394—*** திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், சென்னையில் உள்ளதுபோல் புறநகர் மருத்துமனை (Peripheral Hospital) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரையில் பாலரங்காபுரத்தில் உள்ள மருத்துவமனை புறநகர் மருத்துவமனையாக செயல்பட்டு வருவதால், மற்றுமொரு புறநகர் மருத்துவமனை ஏற்படுத்த அவசியம் இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை என்பது பெரிய மாவட்டமாக இருக்கிறது. மதுரை நகரில் ஆரம்பித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய சேடப்பட்டி தொகுதி வரை சென்று, போடி மேற்கு தொடர்ச்சி மலை வரையில் செல்கிறது. ஆகவே, நிறைய நோயாளிகள் மதுரை அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதற்காக வருகிறார்கள். அங்கே சிகிச்சை பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. பொது மருத்துவமாக இருந்தாலும், சிறப்பு மருத்துவ சிகிச்சையாக இருந்தாலும், அங்கே குறிப்பிட்ட அளவு தான் படுக்கை வசதிகள் உள்ளன. இதனால் சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள பெரிபெரல் ஆஸ்பத்திரி போல ஒரு புறநகர் மருத்துவமனை மதுரையில் வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலரங்காபுரத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள்.

அவரே, அதைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 444. திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

444—

மதுரையில் புறநகர் மருத்துவமனை அமைத்தல்

**** 23394***— திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், சென்னையில் உள்ளதுபோல் புறநகர் மருத்துமனை (Peripheral Hospital) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரையில் பாலரங்காபுரத்தில் உள்ள மருத்துவமனை புறநகர் மருத்துவமனையாக செயல்பட்டு வருவதால், மற்றுமொரு புறநகர் மருத்துவமனை ஏற்படுத்த அவசியம் இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை என்பது பெரிய மாவட்டமாக இருக்கிறது. மதுரை நகரில் ஆரம்பித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய சேடப்பட்டி தொகுதி வரை சென்று, போடி மேற்கு தொடர்ச்சி மலை வரையில் செல்கிறது. ஆகவே, நிறைய நோயாளிகள் மதுரை அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதற்காக வருகிறார்கள். அங்கே சிகிச்சை பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. பொது மருத்துவமாக இருந்தாலும், சிறப்பு மருத்துவ சிகிச்சையாக இருந்தாலும், அங்கே குறிப்பிட்ட அளவு தான் படுக்கை வசதிகள் உள்ளன. இதனால் சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள பெரிபெரல் ஆஸ்பத்திரி போல ஒரு புறநகர் மருத்துவமனை மதுரையில் வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலரங்காபுரத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள்.

1994 ஏப்ரல் 29]

அது ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி - அரசு தொழிலாளர் காப்பீட்டு மருந்தகம் தான். அங்கே தொழிலாளர்கள் தான் செல்கிறார்கள். எனவே, அது நகரில் தான் இருக்கிறது. மதுரை புறநகரில் பெரிய நகரங்களில் இருப்பதைப்போல தனியாக பெரிபெரல் மருத்துவமனையை இந்த அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மதுரையில் இருக்கிற இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளிகளுக்காக ஏறத்தாழ 1,574 படுக்கைகளை இப்போது அனுமதித்து இருக்கிறோம். மொத்தத்தில் ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 77,000 பேர் அங்கே உள் நோயாளிகளாக சிகிச்சை பெறுகிறார்கள். புற நோயாளிகளாக ஒரு ஆண்டுக்கு 21 இலட்சம் பேர் அங்கே சிகிச்சை பெறுகிறார்கள். இதிலே பெரிபெரல் ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரையில் இருக்கிற சங்கடம் என்னவென்றால், அங்கே எல்லா பிரிவுகளையும் நாம் தொடங்கி விட முடியாது. எனவே, பொதுமக்களே கூட பெரிய மருத்துவமனைகளை நோக்கி தான் வருகிறார்களே ஒழிய, மற்ற இடங்களுக்கு செல்வதில்லை. சென்னையில் கூட அப்படி சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. பெரிபெரல் ஆஸ்பத்திரியை ஏற்படுத்தினாலும் கூட ஒரு தலைவலி, காய்ச்சல் வந்தால் கூட அந்த மருத்துமனைக்கு போவது கிடையாது. உடனே அரசு பெரிய மருத்துவமனைக்கு போக வேண்டுமென்ற உணர்வு தான் ஏற்படுவதை நாம் பார்த்திருக்கிறோம், இருந்தாலும் கூட அவுட்-பேஷண்ட்ஸ்-ஐ பார்ப்பதற்காக, சாதாரண நோய்க்காக, நாம் பெரிபெரல் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்காக மக்களை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. பாலரங்காபுரத்தில் இருக்கிற அந்த மருத்துவமனை இப்போது 40 படுக்கை வசதியோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. அது ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை அல்ல. அது பொது மருத்துவமனைதான். அதை விரிவு படுத்துவதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதற்கான புரபோசல் கூட வந்திருக்கிறது. அடுத்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப அதுபற்றி யோசிக்கலாம். 40 படுக்கைகளாக இருப்பதை 200 படுக்கைகளாக உயர்த்த வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. எனவே, அந்த அளவுக்கு அதை உயர்த்துவதன் மூலம் அங்கேயிருக்கிற பிரச்சினையை குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, புதிதாக ஒரு ஆஸ்பத்திரியை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத்தான் தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில் இன்றைக்கு மேலூர் ரோடில் நவீன பேருந்து நிலையம்

[*1994 ஏப்ரல் 29*

கூட கட்டுகிறார்கள். அந்த இடத்தில் அரசுக்கு சொந்தமான நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. எனவே, அந்த இடத்தில் புறநகர் பகுதிகளிலிருந்து நோயாளிகள் அவசர சிகிச்சை பெறுகிறவகையில் மதுரை புறநகர் பகுதியில் மேலூர் ரோடில் ஒரு பெரிபெரல் ஆஸ்பத்திரியை நிறுவுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இடத்திற்கு பிரச்சினை இல்லை. அதற்கு மேல் கட்டடங்கள் கட்டுவது, அதற்குப் பணியாளர்களை ஏற்படுத்துவது என்ற தொடர் செலவினம் தான் பிரச்சினை. எனவே அந்தக் காரணத்தால்தான் நான் ஏற்கெனவே அதைத் தெரிவித்திருக்கிறேன். பெரிபெரல் ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரையில், பாலரங்காபுரத்தில் இருப்பதை நாம் விரிவாக்கம் செய்தால் எதிர்காலத்திலே அதுவே போதுமானதாக இருக்கும். புதிய மருத்துவமனையைத் துவங்குவதைப் பற்றி இப்போது என்னால் சொல்ல இயலாது. எதிர்காலத்திலே இருக்கிற சூழ்நிலையைப் பார்த்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தவசி.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மதுரையிலே ராஜாஜி மருத்துமனை இருக்கிறது. 1700 படுக்கை வசதி கொண்ட மருத்துமனையாக இயங்கி வருகிறது என்று கூறினார்கள். தற்போது மதுரை மாவட்டமானது வளர்ந்து வருகிற ஒரு நகரமாகும். அதைச்சுற்றியுள்ள புறநகர் பகுதிகளும் வளர்ந்து வருகின்றன. மதுரை ராஜாஜி மருத்துவமனையைப் பொறுத்தவரையில், புறநகர்ப் பகுதி, நகர்ப்பகுதி மட்டுமல்லாமல், தென் மாவட்டங்களிலேயிருந்தும் மற்றும் வட மாவட்டங்களிலேயிருந்தும் கூட, அங்கே சிகிச்சைக்கு வருகிறார்கள். எனவே, படுக்கை வசதியை அடுத்த ஆண்டிலாவது அதிகமாக அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தசெயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிபெரல் ஆஸ்பத்திரியை அமைக்கவேண்டும் என்பதைப் பற்றி இந்தக் கேள்வி வந்திருக்கிறது. அந்த மருத்துவமனையிலே அதிகமான படுக்கைகளைக் கூடுதலாகச் செய்ய முடியுமா என்பதைப் பற்றி நாம் ஒன்றும் ஆய்வு செய்யவில்லை. ஆனால், ஏற்கெனவே, மிகப் பெரிய

1994 ஏப்ரல் 29]

அளவிலே ஏறத்தாழ 1577 படுக்கைகள் அங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, அதே இடத்திலே படுக்கைகளை கூட்டுவது என்பது அவ்வளவு சரியாக இருக்காது என்றே கருதுகிறேன். எனவேதான், அதற்கு அருகாமையிலே இருக்கிற தாலுகா மருத்துவமனைகள், மற்றும், –தாலுகா அல்லாத மருத்துவமனைகளினுடைய தரத்தை உயர்த்துவதன் மூலமாக, படுக்கைகளை உயர்துவதன் மூலமாக அங்கே வருகிற கூட்டத்தைக் கொஞ்சம் குறைக்க முடியும் என்ற ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு தாலுகா மருத்துவமனைகளிலேயும் குறைந்தபட்சம் 32 படுக்கைகள் இருக்கவேண்டும் என்ற நடவடிக்கையை நாம் எடுத்ததன் மூலமாக, அங்கே வருகிற கூட்டத்தை ஓரளவிற்கு குறைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதைப்பற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள ராஜாஜி மருத்துவமனையிலே இன்னும் எத்தனைபடுக்கை வசதியை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் அங்கே தண்ணீர் வசதி இல்லாமல் - இன்றைக்கு ஒவ்வொரு வார்டிலும் தண்ணீர் வசதி இல்லை, ஆப்பரேசன்களைச் செய்ய முடியவில்லை. அந்த அளவிற்கு இருக்கின்றது என்று டாக்டர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையினாலே, உடனடியாக தண்ணீர் வசதியைச் செய்து கொடுப்பதற்கு - அங்கே உள்ள லெட்ரின் பெசிலிட்டீஸ், அங்கேயும் தண்ணீர் கிடையாது - உடனடியாக அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே இந்தப் பிரச்சினை சொல்லப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இப்போது தண்ணீர் இல்லாத பிரச்சினை என்பது, மிக அதிகமான அளவிலே தண்ணீர் உள்ளே வந்து நுழைந்த காரணத்தாலே, பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. எனவே, இப்போது அதைச் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக இதிலே நான் சொல்லவேண்டும் என்று சொன்னால், ராஜாஜி மருத்துவமனை மட்டுமல்லாமல், தமிழகத்திலே இருக்கிற மருத்துமனைகள் அத்தனையுமே, மிக நீண்டகாலமாக, மிகப் பெரிய பழங்காலத்துக் கட்டிடங்களாக இருக்கின்றன. எவ்வளவு செலவழித்தாலும் அதைச் சீர் செய்து கொண்டு வருவது என்பது மிகக் கடினமாக இருக்கிறது. சென்னையிலே இருக்கிற அரசு மருத்துவமனையை நானே

[1994 ஏப்ரல் 29

நேராகப் போய்ப் பார்த்தேன். பல இடங்களை பொதுப்பணித்துறையோடு சேர்ந்து போய்ப் பார்த்து, அதைச் சீர்செய்யவேண்டும் என்ற முயற்சியை எடுத்து, அதிலே மிகப் பெரிய கஷ்டத்தை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதோடு அங்கேயுள்ள பைப் லைன்கள், மற்றும் எலக்ட்ரிக்கல் லைன்கள், இவைகள் எல்லாம், பல நூறு ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே போட்ட காரணத்தாலே இப்போது மிகப் பெரிய சிரமத்திற்கு நாம் ஆளாகி இருக்கிறோம். அந்தச் சிரமங்களை எல்லாம் சரி செய்வதற்கு மிகப் பெரிய அளவிலே நிதி தேவைப்படுகிறது. இப்போது இருக்கிற குறைந்த நிதியை வைத்துக் கொண்டு ஓரளவிற்கு அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

445—

பச்சைமலை மணலோடை— நாவூர் வரை சிறுபேருந்து இயக்குதல்

** 23301— திரு. வி. ரவிச்சந்திரன்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை மணலோடையிலிருந்து நாவூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக சிறுபேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாலை அமைக்கும் பணி முடிந்ததும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நல்லாட்சியில் உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை மணலோடையிலிருந்து நாவூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக சிறுபேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 29

நேராகப் போய்ப் பார்த்தேன். பல இடங்களை பொதுப்பணித்துறையோடு சேர்ந்து போய்ப் பார்த்து, அதைச் சீர்செய்யவேண்டும் என்ற முயற்சியை எடுத்து, அதிலே மிகப் பெரிய கஷ்டத்தை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதோடு அங்கேயுள்ள பைப் லைன்கள், மற்றும் எலக்ட்ரிக்கல் லைன்கள், இவைகள் எல்லாம், பல நூறு ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே போட்ட காரணத்தாலே இப்போது மிகப் பெரிய சிரமத்திற்கு நாம் ஆளாகி இருக்கிறோம். அந்தச் சிரமங்களை எல்லாம் சரி செய்வதற்கு மிகப் பெரிய அளவிலே நிதி தேவைப்படுகிறது. இப்போது இருக்கிற குறைந்த நிதியை வைத்துக் கொண்டு ஓரளவிற்கு அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

445—

பச்சைமலை மணலோடை—நாவூர் வரை சிறுபேருந்து இயக்குதல்

** 23301— திரு. வி. ரவிச்சந்திரன்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை மணலோடையிலிருந்து நாவூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக சிறுபேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாலை அமைக்கும் பணி முடிந்ததும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நல்லாட்சியில் உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை மணலோடையிலிருந்து நாவூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக சிறுபேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். அந்தப் பாதையை சீரமைத்தவுடனே - அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொள்வதாக சொல்லியிருக்கிறேன் - பாதை சீரமைத்த அடுத்து நாளிலிருந்து அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பஸ் இயக்கப்படும் என்று கூறியதற்கு உப்பிலியாபுரம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 446, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

446—

கிருட்டிணகிரியில் அன்னை சத்தியா போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்

** **24497**—திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி நகரில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கிருட்டிணகிரி பகுதியில் வீடுகட்ட வேண்டிய பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. அவ்வாறு வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-30

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக்

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். அந்தப் பாதையை சீரமைத்தவுடனே - அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொள்வதாக சொல்லியிருக்கிறேன் - பாதை சீரமைத்த அடுத்து நாளிலிருந்து அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பஸ் இயக்கப்படும் என்று கூறியதற்கு உப்பிலியாபுரம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 446, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

446—

கிருட்டிணகிரியில் அன்னை சத்தியா போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்

** 24497*—*திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி நகரில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கிருட்டிணகிரி பகுதியில் வீடுகட்ட வேண்டிய பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. அவ்வாறு வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-30

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக்

கொடுக்கப்படவேண்டுமென்ற திட்டத்தை தீட்டி, இன்றைக்கு நல்லாட்சி நடத்திவருகின்றார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரு சிறந்த போக்குவரத்துக் கழகமாக அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே சுமார் 1000 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் வேண்டுமென்று ஏற்கெனவே மனுக்கள் கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே அந்த மனுக்களின்மீது அது கிடைக்கவில்லை என்றாலும் அவர்கள் மறுபடியும் மனு செய்யத் தயாராக இருக்கின்றார்கள். ஆகவே அந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு, கிருட்டிணகிரியிலே அடுத்த ஆண்டாவது கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையாக இருக்கின்ற ஒழுகாத வீடு, கிழியாத உடை, ஆறாத சோறு அதை தமிழ் மக்களுக்குத் தரவேண்டுமென்பது தான் நம்முடைய தமிழகத்தின் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய லட்சியம். அந்த லட்சியத்தின் அடிப்படையிலேதான் தர்மபுரி மாவட்டத்திலே இருக்கின்ற கிருஷ்ணகிரி பகுதியில் வெள்ளைகவுண்டன் பாளையத்தில் 9.77 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை மேற்கொண்டு, அதன் வாயிலாக இன்றைக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம். அதன் அடிப்படையிலே விண்ணப்பங்கள் வரவில்லையென்று தான் குறிப்பிட்டேன். விண்ணப்பங்கள் வந்தவுடனே அங்கேயிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு உடனடியாக அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ண உணவும், உடுக்க உடையும், குடியிருக்க வீடும் செய்து தருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். அதே மாதிரி அங்கே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் கிளை இருக்கிறது. அந்த தொழிலாளர்களுக்கும் இதிலே சேர்த்து கட்டிக்கொடுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியம் என்று நான் சொன்னேன். ஆக தொழிலாளர்களுக்கு உணவு இருக்கிறது. உடுக்க உடையும் நாம் தருகிறோம்.

1994 ஏப்ரல் 29]

இருக்க வீடுகளும் அமைத்துத் தருவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி நகரின் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக இதே தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக கிருஷ்ணகிரி நகரிலும் ஹோசூர் நகரிலும் தொழிலாளர்களுக்கு சங்கத்தின் வாயிலாக வீடு கட்டுவதற்குரிய கடன் வசதியைச் செய்து கொடுப்பாரா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து அதற்கான தொகையில் மூன்றில் ஒரு பகுதியை, குறைந்த வட்டியில் வாங்கி வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆகவே அந்த தொழிலாளர்களுடைய கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைத்து அவர்களே வேண்டுமென்றாலும் கட்டிக்கொள்ளலாம் அல்லது தொழிலாளர்கள் வேண்டுமென்றால் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும் கடனைப் பெற்று அந்த வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம். இதற்கு முன்னால் இருந்த முறைகள் வேறு. நாம் அங்கேயிருக்கிற நிலத்தை முதலில் ஆர்ஜிதம் செய்து, நாமாகவே முன்வந்து அவர்களை எல்லாம் அதிலே அங்கத்தினர்களாகச் சேர்த்து அதற்குப் பிறகு அந்தக் கட்டிடங்களைக் கட்டுகிறபோது சில இடங்களில் தவறுகள் ஏற்படுகிறது என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு தாழ்வான பகுதியிலே அந்த வீடுகளை பலயிடங்களிலே கட்டிமுடித்திருக்கிறார்கள். குறிப்பாக காஞ்சிபுரத்திலே ஒரு இடத்திலே குளத்தினுடைய பகுதிக்குள்ளேயே அந்த வீடுகளை அமைத்த காரணத்தினாலே, அதேபோன்று தீரன் சின்னமலைப் பகுதியில் இந்த நிலைமைகள் ஏற்பட்ட காரணத்தினாலே கூட்டுறவுச் சங்கங்களை அவர்களாவே முன்வந்து அமைத்து, அந்தச் சங்கத்தின் வாயிலாகத்தான் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஹோசூர் போன்ற பகுதிகளில் அந்தப் பணிகளைச் செய்ய அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 447, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

447—

கோவை குறிச்சி, பெரியகுளம் ஊர்களில் குட்டைகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்

*** 9163—திரு. கே. செல்வராஜ்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை குறிச்சி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குட்டைகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவை குறிச்சி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குட்டைகளை தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் இல்லை என்று அறிவித்தார்கள். இந்தக் குறிச்சிக் குளமும், பெரியகுளத்திற்கு சுமார் சங்கிலித் தொடர் போல் 8 குளங்களிலிருந்து மழை காலங்களில் அதிக நீர் வர இருக்கிறது. இந்தக் குளங்கள்தான் கோவை மாநகரப் பகுதிக்கு மட்டும் சுமார் 20 கிலோமீட்டர் சுற்றளவிற்கு கிணறுகளுக்கும், ஆழ்குழாய் கிணறுகளுக்கும் நீர் வரத்து ஏற்படுத்திக் கொடுக்கின்ற குளங்களாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குளங்களைத் தூர் எடுத்து, அணைக்கட்டு போல் சுவர்கள் அமைத்து சிறந்தமுறையில் பராமரித்தால், ஆண்டுக்கணக்காக அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை வராமல் இருக்கும். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலித்து முடிவு எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே கூட ஆக்கிரமிப்புகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன என்ற புகார் வந்திருக்கின்றது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக இந்தக் குளங்களில் பெருமழை பெய்தால்தான் வெள்ளம் ஏற்படும் காலங்களிலேதான் இந்தக் குளங்கள் பெருகுகின்ற நிலை ஏற்படுகின்றது. ஆகவே தொடர்ந்து இந்தக் குளங்களுக்கு தண்ணீர் வரத்து

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 447, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

447—

கோவை குறிச்சி, பெரியகுளம் ஊர்களில் குட்டைகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்

* ***9163*—திரு. கே. செல்வராஜ்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை குறிச்சி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குட்டைகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவை குறிச்சி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குட்டைகளை தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் இல்லை என்று அறிவித்தார்கள். இந்தக் குறிச்சிக் குளமும், பெரியகுளத்திற்கு சுமார் சங்கிலித் தொடர் போல் 8 குளங்களிலிருந்து மழை காலங்களில் அதிக நீர் வர இருக்கிறது. இந்தக் குளங்கள்தான் கோவை மாநகரப் பகுதிக்கு மட்டும் சுமார் 20 கிலோமீட்டர் சுற்றளவிற்கு கிணறுகளுக்கும், ஆழ்குழாய் கிணறுகளுக்கும் நீர் வரத்து ஏற்படுத்திக் கொடுக்கின்ற குளங்களாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குளங்களைத் தூர் எடுத்து, அணைக்கட்டு போல் சுவர்கள் அமைத்து சிறந்தமுறையில் பராமரித்தால், ஆண்டுக்கணக்காக அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை வராமல் இருக்கும். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலித்து முடிவு எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே கூட ஆக்கிரமிப்புகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன என்ற புகார் வந்திருக்கின்றது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக இந்தக் குளங்களில் பெருமழை பெய்தால்தான் வெள்ளம் ஏற்படும் காலங்களிலேதான் இந்தக் குளங்கள் பெருகுகின்ற நிலை ஏற்படுகின்றது. ஆகவே தொடர்ந்து இந்தக் குளங்களுக்கு தண்ணீர் வரத்து

1994 ஏப்ரல் 29]

குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய அதிகாரிகள் தற்போது அந்தக் குளங்களை ஆழப்படுத்த வேண்டியதில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளங்களில் இருக்கிற ஆக்கிரமிப்புகள் எல்லாம் கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு சுத்தமாக அகற்றப்பட்டு விட்டது. இப்போதும் கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக அதிக நீர் வரத்து வந்து இப்போது தண்ணீர் பிரச்சினையை - குடிநீர் பிரச்சினையை தீர்த்து இருக்கிறது. மீண்டும் அந்த குளங்களை ஆழப்படுத்துகிறபோது நிச்சயமாக கோவை மாநகரப் பகுதியிலே குடிநீர்ப்பிரச்சினை என்பதே எப்போதும் வராது என்பதற்காகவும் அந்த சுற்று வட்டாரங்களில் இருக்கிற கிராமங்களில் உள்ள விவசாயிகள், குளங்களில் நீர் வரத்து அதிகரிக்கிற போது பயன்பெறும் விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயம் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த பெரிய குளம், குறிஞ்சி குளம் ஆகியவற்றை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே நம்முடைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல தமிழ்நாடு முழுவதும் இருக்கிற குளங்களை ஆழப்படுத்துவதற்கு பல கோடி ரூபாய் செலவிலே திட்டங்கள் போட வேண்டியிருக்கிறது என்று சொல்லி அதற்காக மைய அரசுக்கு ஒரு கருத்துரு அனுப்பப்பட்டு பல நிலைகளிலே அது ஆய்விலே இருக்கிறது. பொதுவாக இன்றைக்கு பொதுப்பணித் துறையைப் பொறுத்த மட்டிலே பெரிய குளங்களை சீரமைப்பதற்கு போதிய நிதி ஆதாரங்கள் திரட்டவேண்டியிருக்கிறது. வெளிநாடுகளிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் தான் நாம் உதவி பெற வேண்டியிருக்கிறது. நம்மிடத்திலே நிதி ஆதாரம் குறைவாக இருக்கிற காரணத்தாலே தான் முன்உரிமைகள் அடிப்படையிலே பிரையாரிட்டி பேசிஸ்லே சில வேலைகளை நாம் செய்து வருகிறோம். அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு அனைத்து குளங்களையும் எடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அது குறித்து அவசியம் இருக்குமானால் அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

[1994 ஏப்ரல் 29

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிச்சி குளம் என்பது கோவை நகருக்கு அருகாமையிலே இருக்கிற பேரூர் பகுதியிலே இருக்கிறது. இது 342 ஏக்கர் நிலப்பரப்புள்ள குளம். இதுபோன்ற குளங்கள் கரிகால் சோழன் காலத்திலே கட்டிய குளங்கள். அந்த குளங்களில் தண்ணீர் வந்து தேங்கி நின்றால் அங்கேயிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிலத்தடி நீர் உயரும். ஆகவே இதற்கு முன்பிருந்த அரசுகளில் இந்தக் குளங்களில் தண்ணீர் வருவதை சிலர் தடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நமது ஆட்சி வந்தவுடன் நமது அமைச்சரிடம் சொல்லி அந்தக் குளத்திலே தண்ணீர் நிரப்புங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் உத்தரவிட்டு தண்ணீரை நிரப்பினார்கள். அந்தக் குறிச்சி குளம் நிறைந்ததன் காரணமாக 30 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு இன்னும் குடிநீர் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. நீர்நிலை உயர்ந்துள்ளது புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்காலத்திலே. ஆகவே அந்தக் கரைகளை உயர்த்துவதன்மூலம் தூர் வாருவதன் மூலம், ஆழ படுத்துவதன்மூலம் தண்ணீர் தேங்கி நின்றால் இன்னும் விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே இந்த ஆண்டாவது அரசு இதை பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்த குறிச்சி குளத்தை நான் கோவைக்கு சென்றிருந்தபோது நேரிலேயே பார்வையிட்டேன். அதை ஆழப்படுத்த வேண்டும் என்பதில் அரசுக்கு 2 கருத்துக்கள் கிடையாது. ஆனால் இருக்கிற நிதி ஆதாரங்களை பொறுத்துத்தான் - ஏனென்றால் இதைவிட மோசமாக இருக்கிற குளங்கள் எல்லாம் நிறைய தமிழ்நாட்டிலே இருக்கின்றபோது அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து நாம் செய்துக் கொண்டு வருகிறோம். ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின் கீழேயும், பல்வேறு திட்டங்களின் கீழேயும் நாம் செய்து வருகிறோம். ஆகவே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல - இந்தக் குளத்தினால் பயன் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. அந்தப்பகுதியிலே நிலத்தடி நீர் உயரும், குடிநீர் பிரச்சினை தீரும். கிணறுகளிலேயெல்லாம் ஊற்று சுரக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் செய்யப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்தேன். ஆகவே இந்த ஆண்டில் முடியாது. வருகின்ற நிதி ஆண்டுகளிலே நிதி ஆதாரத்திற்குத் தகுந்தவாறு அதைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 448, டாக்டர் க. கோபால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

1994 ஏப்ரல் 29]

448—

முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே ஆதினக்குடி கிராமத்தில் படுகை அணை கட்டுதல்

*** 14451—டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், முடிகொண்டான் ஆற்றின் பாசனத்தில் ஆதினக்குடி, குருவாடி, பண்டாரவடை போன்ற கிராமங்களில் தண்ணீர் பாய்வது இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ ஆம் எனில், முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே ஆதினக்குடி என்ற கிராமத்தில் ஒரு 'பெட் டாம்' (Bed-Dam) கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதினக்குடி, பண்டாரவடை மற்றும் தென்பிடாகை ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 640 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே ஒரு ரெகுலேட்டர் கட்டுவதற்கு ரூ.10 இலட்சங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்பு இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு இசைவை அளித்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆண்டுக்காலமாக அந்தப்பகுதிகளுக்கு தண்ணீர் பாய முடியாமல் இருக்கிற காரணத்தினாலே, அந்த ரெகுலேட்டருக்கும் ஆதினகுடி பகுதிகளுக்கும் இடையே கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறபடியால் தண்ணீர் மேலே ஏற வழி இல்லாத காரணத்தாலும் இந்த ஆண்டே ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல அந்த வேலை காவிரி டெல்டா சீரமைப்பு திட்ட பணிகளின் கீழ் செயல்படுத்துவதற்கு திட்டம் இடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கோப்பு தற்போது நிதித்துறைக்கு 21.3.1994 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

[1994 ஏப்ரல் 29

மேற்படி ரெகுலேட்டர் போடுவதால் ஆதினக்குடி, பண்டாரவடை மற்றும் தென்பிடாகை ஆகிய கிராமங்களிலே சுமார் 640 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மறுக்க இயலாது. ஆகவே நிதித்துறையின் ஒப்புதல் கிடைத்தவுடனேயே இந்தப் பணியைத் தொடங்கலாம் என்று அரசு கருதுகிறது. (குறுக்கீடு)

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் தொகுதிக்குப் பக்கத்திலே வருகிறது. எல்லாவற்றிற்கும் நீங்கள் எழுந்து நிற்கக் கூடாது. திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே ஒரு ரெகுலேட்டர் கட்டப்படுவது ஆய்விலே இருக்கிறது என்ற நல்ல செய்தி சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவாக முடித்து இந்த வருடமே கட்டித்தர வேண்டும் என்ற வேண்டுகோளை முன்னாலே வைத்து 15 ஆண்டுகளுக்கு முன்பே இந்த இடத்திலே ஒரு ரெகுலேட்டர் கட்டுவதற்கு எஸ்டிமேட் எல்லாம் சாங்ஷன் செய்யப்பட்டது. டெண்டர் எல்லாம் கால்பார் செய்யப்பட்டு ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நேரத்தில் அந்த கிராமங்களுக்கு கிழக்கே வசிப்பவர்கள் அதிலே தடையுத்தரவு வாங்கி கோர்ட்டிலே வழக்கு முடிந்து இன்றையதினம் அந்த ரெகுலேட்டரை பொறுத்தவரை அந்தப் பகுதி மக்கள் வெகு ஆர்வமாக இருக்கிறார்கள். எனவே அவர்கள் குறைகளைத் தீர்க்கும் வகையில் இந்த ஆண்டு அந்த ரெகுலேட்டரைக் கட்டித்தர வேண்டும் என்ற வேண்டுகோளை மீண்டும் வைத்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல பொதுப்பணித்துறையிலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தாகிவிட்டது. நிதித்துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. நிதித்துறையினுடைய ஒப்புதல் கிடைத்தவுடனேயே அந்தப் பணிகளைத் தொடங்கலாம் என்று அரசு கருதுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியன், நீங்கள் மற்ற மற்ற தொகுதிகளுக்குள்ளே இருப்பதற்கெல்லாம் எழுந்து நின்றுகொண்டே இருக்கக்கூடாது. கைதூக்குவதோடுதான் இருக்க வேண்டும்.

1994 ஏப்ரல் 29]

திரு. கி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பாட்டனாச்சியார் என்ற ஆறு குறுக்கே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக்கேள்வி போடவும். இது அவர் தொகுதியிலே இருக்கின்ற ஒரு கால்வாய் பிரச்சினை. உங்கள் தொகுதியிலே ஒன்றும் வராது.

வினா எண் 449, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

449—

வேதாரண்யத்தில் காய்கறி மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைத்தல்

** 22765—திரு. பி. வி. இராஜேந்திரன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலைப் பயிர்களான மா, முந்திரி மற்றும் காய்கறிகளைப் பயிரிடும் விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு காய்கறி மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையத்தை (Regulated Marketing Centre) வேதாரண்யம் தொகுதியில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தோட்டக்கலை பயிர்களான மா, முந்திரி மற்றும் காய்கறிகளுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம், வேதாரண்யம் தொகுதியில் ஏற்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டப் பயிர்கள் வேதாரண்யம் பகுதியில் மட்டும் அல்ல, இன்றைக்கு பல இடங்களில் மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் பகுதி, மேகமலை பகுதி, நீலகிரி மாவட்டம் இங்கெல்லாம் இருந்து வருகிறது. இவற்றிற்கு ஒரு ரெகுலேட்டட் மார்க்கெட் வேண்டும். காரணம் எல்லா இடத்திலும் இன்றைக்கு இடையிலே கமிஷன் மண்டி இருக்கிறது. அதிலும் இன்றைக்கு அவர்கள் பெர்ஸன்டேஜ் கொடுக்கிறார்கள். அவர்கள் ஒரு வேலையும் செய்வதில்லை. அவர்கள் வழியாக போகிறது அந்த காய்கறிகள். இதில் பெர்ஸன்டேஜ் கலாச்சாரம் மிக வேகமாக பரவி

1994 ஏப்ரல் 29]

திரு. கி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பாட்டனாச்சியார் என்ற ஆறு குறுக்கே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக்கேள்வி போடவும். இது அவர் தொகுதியிலே இருக்கின்ற ஒரு கால்வாய் பிரச்சினை. உங்கள் தொகுதியிலே ஒன்றும் வராது.

வினா எண் *449*, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

449—

வேதாரண்யத்தில் காய்கறி மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைத்தல்

** 22765—திரு. பி. வி. இராஜேந்திரன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலைப் பயிர்களான மா, முந்திரி மற்றும் காய்கறிகளைப் பயிரிடும் விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு காய்கறி மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையத்தை (Regulated Marketing Centre) வேதாரண்யம் தொகுதியில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தோட்டக்கலை பயிர்களான மா, முந்திரி மற்றும் காய்கறிகளுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம், வேதாரண்யம் தொகுதியில் ஏற்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டப் பயிர்கள் வேதாரண்யம் பகுதியில் மட்டும் அல்ல, இன்றைக்கு பல இடங்களில் மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் பகுதி, மேகமலை பகுதி, நீலகிரி மாவட்டம் இங்கெல்லாம் இருந்து வருகிறது. இவற்றிற்கு ஒரு ரெகுலேட்டட் மார்க்கெட் வேண்டும். காரணம் எல்லா இடத்திலும் இன்றைக்கு இடையிலே கமிஷன் மண்டி இருக்கிறது. அதிலும் இன்றைக்கு அவர்கள் பெர்ஸன்டேஜ் கொடுக்கிறார்கள். அவர்கள் ஒரு வேலையும் செய்வதில்லை. அவர்கள் வழியாக போகிறது அந்த காய்கறிகள். இதில் பெர்ஸன்டேஜ் கலாச்சாரம் மிக வேகமாக பரவி

இருக்கிறது. இத்தனை பெர்ஸன்டேஜ் கொடுத்தால்தான் என்று அவர்கள் அப்படி கேட்பது கூட கிடையாது, எடுத்துக்கொண்டுதான் மிச்சத்தையே வெளியே தருகிறார்கள். யார் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பணம் கிடைப்பதில்லை. அதனால் இன்றைக்கு ரெகுலேட்டட் மார்க்கெட் வரவேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால் நீங்கள் ஒட்டுமொத்தமாக இந்த தோட்டக் கலை பயிர்களை உற்பத்தி செய்கின்றவர்களை காக்கின்ற விதத்தில் இன்றைக்கு இந்த பெர்சன்டேஜ் கலாச்சாரத்தை வீழ்த்துகின்ற வகையில் தங்களிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வேளாண்மைத்துறை மானிய கோரிக்கையின் மீது பதில் அளிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இல்லாத காரணத்தினால் அவருக்கு வேண்டிய பதிலுரை அவருக்கு கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தோட்டக்கலை பயிர்கள் பயிரிடக் கூடிய விவசாயிகள், இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் வேளாண்மை விற்பனை வாரியமே பல நகராட்சிகளில் அந்த நகராட்சிகளுடைய ஆணையரைக் கலந்து ஆலோசித்து அவர்களே பாதுகாக்கப்பட்ட ஒரு அங்காடி கட்டி அந்த அங்காடியிலே விவசாயிகள் தாங்களே தங்களுடைய பொருள்களை எந்தவித தரகரும் இன்றி விற்பனை செய்வதற்கு வழிவகை இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: தலைவர் அவர்களே, காய்கறி பழங்கள் இவற்றிற்கெல்லாம் அந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டில் எப்படி கையாள முடியும்? அழுகுகின்ற பொருள்களை - இன்றைக்கு மதுரை மாநகராட்சியை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது கோயம்புத்தூரிலும் சரி, நீலகிரி மாவட்டத்திலிருந்து வருகின்ற பொருள்கள் இவற்றையெல்லாம் எப்படி அந்த ரெகுலேட்டட் மார்க்கெட் கையாளும்? இந்த நடைமுறைக்குச் சாத்தியமான வழிகளை அவர் ஏற்கனவே அறிவித்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நான் ஒரு மணி நேரம் பதில் சொன்னேன். அதிலே ஒரு வினாடிதான் இந்த பதிலை சொல்லியிருக்கிறேன். மற்றபடி நீண்ட விளக்கத்தை சொல்லியிருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு தோட்டக்கலை

1994 ஏப்ரல் 29]

பயிர்களை வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு 3 மாவட்டங்களிலே 3 குளிரூட்டப்பட்ட கிட்டங்கிகள் உருவாக்குவதற்காக 3 கோடி ரூபாய் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி இது வேதாரண்யம் பற்றிய கேள்வி. (குறுக்கீடு) வேதாரண்யத்தை தாண்டிப் போனால் விவரம் இல்லை என்று நான் வெளியிலே சொல்ல வேண்டி வரும். (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீங்கள் என்னைக் கொஞ்சம் காப்பாற்றித் தான் ஆகவேண்டும். (சிரிப்பு) அப்படிப்பட்ட நிலைமையில் நான் இருக்கிறேன், அது உங்களுக்கும் தெரியும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பவானி சாகரிலே பழச் செடிகள் நாற்றுங்கால் ஒன்றும், பழப் பண்ணை ஒன்று அமைப்பதற்கான அனுமதியை அளித்ததற்கு அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பவானி சாகர் வருகின்ற நேரத்தில் அதிகப்படியாக ... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பவானி சாகருக்கு ஒரு நன்றியோடு இருக்கட்டும். அடுத்து வேதாரண்யம் போக வேண்டும். இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி இல்லையென்றால் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு)

திரு. வி. கே. சின்னசாமி: அவர் அடிக்கடி என்னுடைய தொகுதிக்கு; குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் பவானி சாகர் பகுதியில் அதிக அளவில் இப்போது இருக்கின்ற ஹை கிரேடு வெரைட்டியான நேந்திர வாழைப்பழம், மொரீஸ் வாழைப்பழம், எல்லாம் அதிக அளவில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிர் செய்கிறார்கள். ஆனால் கடலை விற்பனைக்கு மார்க்கெட் ஒன்று நல்லமுறையில் புளியம்பட்டியில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதே அடிப்படையில் இந்தப் பழ வகைகளைக் கேரள மாநிலத்திலிருந்து வந்து பழ வியாபாரிகள் கடனாக வாங்கிச் சென்று விடுவதால் பல விவசாயிகள் இன்றைக்கு ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் நஷ்டப்பட்டு மூழ்கிப் போயிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை எல்லாம் காப்பாற்றி அல்லது மைசூருக்கு லாரிகளில் எடுத்துச் செல்கிறார்கள். அங்கே மார்க்கெட் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரி, தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பதில் சொல்லுவார். அவர் டிபார்ட்மெண்டு பற்றி என்ன வேண்டுமானாலும் பதில் சொல்லுவார். (குறுக்கீடு) இது வேதாரண்யம் விற்பனை மையம், இதே மாதிரி ஒரு இடத்திலே ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டாலும் பரவாயில்லை. நான் திரு. பாலசுப்பிரமணியத்திற்கு சொன்ன பதில்தான் உங்களுக்கும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா எண் 450, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) தனிக் கேள்வி போடவும்.

450—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

* ***30201***—திரு. எஸ். சண்முகநாதன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதியில் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதி, மழையூர், இராமக்குடி போன்ற பகுதிகள் எல்லாம் இந்த வேளாண்மை பொறியியல் துறையின் கீழே ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரவேண்டுமென்று அந்த கோரிக்கையை நீண்ட நெடும் காலமாக அங்கே வைத்திருக்கிறது. இந்த வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் இன்றைக்கு கணக்கு

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரி, தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பதில் சொல்லுவார். அவர் டிபார்ட்மெண்டு பற்றி என்ன வேண்டுமானாலும் பதில் சொல்லுவார். (குறுக்கீடு) இது வேதாரண்யம் விற்பனை மையம், இதே மாதிரி ஒரு இடத்திலே ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டாலும் பரவாயில்லை. நான் திரு. பாலசுப்பிரமணியத்திற்கு சொன்ன பதில்தான் உங்களுக்கும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா எண் 450, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) தனிக் கேள்வி போடவும்.

450—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

* ***30201***—திரு. எஸ். சண்முகநாதன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதியில் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதி, மழையூர், இராமக்குடி போன்ற பகுதிகள் எல்லாம் இந்த வேளாண்மை பொறியியல் துறையின் கீழே ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரவேண்டுமென்று அந்த கோரிக்கையை நீண்ட நெடும் காலமாக அங்கே வைத்திருக்கிறது. இந்த வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் இன்றைக்கு கணக்கு

1994 ஏப்ரல் 29]

எடுத்து அதிலே ஆய்வை நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஆய்வின் அடிப்படையில் நீங்கள் வருகிற காலக் கட்டத்திலாவது அந்த வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக ஏன் என்றால் அந்த ஆலங்குடி தொகுதியில் அந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்துகின்ற அந்த கிணற்றுப் பாசனத்தை நம்பி இருக்கின்ற காரணத்தால் ஏழை எளிய விவசாயிகளுக்கு பயன் தரத்தக்க வகையில் எதிர் வரும் காலத்திலாவது அந்த வெட்டன் விடுதி பகுதியில் ஆழ் குழாய்க் கிணறு அமைப்பதற்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுகின்ற வேளாண்மைப் பொறியியல் துறை ஆண்டுதோறும் 5500 குழாய்க் கிணறுகள், 3300 வடி முனைக் குழாய் கிணறுகள் அமைத்து வருகிறது. மேலும் திறந்தவெளி கிணறுகளாக 5500 கிணறுகளை அமைத்து வருகிறது. சிறு பாசன திட்டத்தின் கீழ் 2000 சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மானியம் வழங்கும் பொருட்டு 1992-93 ஆம் ஆண்டு 100 லட்சம் ரூபாய் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்தத் தொகை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் பொறுப்பில் நிர்வகிக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதி பகுதியில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான வாய்ப்பு இருப்பின் அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அமைத்துத் தரப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது அந்த வெட்டன் விடுதிப் பகுதியில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான வாய்ப்பு இருந்தால் அவை ஏற்படுத்தித் தரப்படும் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெட்டன் விடுதிப் பகுதி மட்டுமல்ல, அங்கே இருக்கின்ற ஆலங்குடி, வடகாடு, கீரமங்கலம் போன்ற பகுதிகள் எல்லாம் அந்த நிலத்தடி நீரை நம்பியிருக்கின்ற காரணத்தால் அங்கே ஏழை எளிய விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இந்த வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அங்கே ஒதுக்கி இருக்கிறார்கள். அதை பிரையாரட்டி அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் அந்தப்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பகுதிகளுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் பற்றிய ஆய்வு செய்து பொதுப்பணித் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு அறிக்கை தந்து இருக்கிறார்கள். அதிலே 84 வட்டங்களில் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்து இருக்கிறது. அதேபோல் 84 வட்டங்களிலே நிலத்தடி நீர் ஓரளவுக்கு குறைந்து இருக்கிறது. மற்ற பகுதிகளிலே நிலத்தடி நீர் உள்ளது என அந்த ஆய்வினுடைய அறிக்கை கூறியிருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையிலே இன்றைக்கு தமிழகம் முழுவதும் ஒரு சர்வே செய்யப்படுகிறது. அந்த சர்வேயின்படி நிலத்தடி நீர் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம், அங்கே ஆழ்-குழாய்க் கிணறு அமைக்க வேண்டுமென்று உயரிய நோக்கோடுதான், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதுபோன்ற பணிகள் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதனைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 451, திரு. செ. து. வரதராஜன். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

451—

ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஆவின் பாலகங்களை நடத்த முன்னுரிமை வழங்குதல்

*** 15249**—திரு. செ. து. வரதராஜன்:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பாலகங்களை நடத்த முன்வரும் ஆதிதிராவிடப் பெண்களுக்கு அரசு முன்னுரிமை வழங்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

பகுதிகளுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் பற்றிய ஆய்வு செய்து பொதுப்பணித் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு அறிக்கை தந்து இருக்கிறார்கள். அதிலே 84 வட்டங்களில் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்து இருக்கிறது. அதேபோல் 84 வட்டங்களிலே நிலத்தடி நீர் ஓரளவுக்கு குறைந்து இருக்கிறது. மற்ற பகுதிகளிலே நிலத்தடி நீர் உள்ளது என அந்த ஆய்வினுடைய அறிக்கை கூறியிருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையிலே இன்றைக்கு தமிழகம் முழுவதும் ஒரு சர்வே செய்யப்படுகிறது. அந்த சர்வேயின்படி நிலத்தடி நீர் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம், அங்கே ஆழ்-குழாய்க் கிணறு அமைக்க வேண்டுமென்று உயரிய நோக்கோடுதான், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதுபோன்ற பணிகள் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதனைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 451, திரு. செ. து. வரதராஜன். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

451—

ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஆவின் பாலகங்களை நடத்த முன்னுரிமை வழங்குதல்

* **15249**—திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பாலகங்களை நடத்த முன்வரும் ஆதிதிராவிடப் பெண்களுக்கு அரசு முன்னுரிமை வழங்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1994 ஏப்ரல் 29]

(ஆ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையமும் நடத்தும் பாலகங்களில் 20% ஆதிதிராவிடப் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆவின்' பாலகத்தை நடத்துவதற்கு முன்வரும் ஆதிதிராவிடப் பெண்களுக்கு எந்தச் சலுகை அடிப்படையிலே, எந்தவகையில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பதனையும், அது, புறநகரங்களிலும், மாநகரங்களிலும் எந்தெந்த அளவிலே அவர்களுக்கு இதுவரை ஒதுக்கப்பட்டிருக்கிறது; இனி ஒதுக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் இருக்கின்ற இடங்களிலும், சென்னையிலும் 20 சதவீதம் ஒதுக்க அரசு 24.3.94 இல்தான் ஆணையிட்டிருக்கிறது. அதனாலே இனிமேல் ஒதுக்கப்படுகின்ற கடைகளில், 20 சதவீதம் ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.*

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆதிதிராவிடப் பெண்களுக்கு எந்தத் தகுதியின் அடிப்படையில் எப்படி ஒதுக்கப்படும் என்பதை விளம்பரப்படுத்தி, ஒன்றும் அறியாத அந்த ஆதிதிராவிட மக்கள் அறிகின்ற வகையில், குறிப்பாக விளம்பரம் மூலமாக அதைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 452 மற்றும் வினா எண் 453, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.*

வினா எண் 454, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

454 —

சந்தனக்கட்டைகள் கடத்தலில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களை ஏலம் விடுதல்

**** 16989** — திரு. கா. பூ. முனுசாமி:*

மாண்புமிகு வனத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 29]

(ஆ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையமும் நடத்தும் பாலகங்களில் 20% ஆதிதிராவிடப் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆவின்' பாலகத்தை நடத்துவதற்கு முன்வரும் ஆதிதிராவிடப் பெண்களுக்கு எந்தச் சலுகை அடிப்படையிலே, எந்தவகையில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பதனையும், அது, புறநகரங்களிலும், மாநகரங்களிலும் எந்தெந்த அளவிலே அவர்களுக்கு இதுவரை ஒதுக்கப்பட்டிருக்கிறது; இனி ஒதுக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் இருக்கின்ற இடங்களிலும், சென்னையிலும் 20 சதவீதம் ஒதுக்க அரசு 24.3.94 இல்தான் ஆணையிட்டிருக்கிறது. அதனாலே இனிமேல் ஒதுக்கப்படுகின்ற கடைகளில், 20 சதவீதம் ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆதிதிராவிடப் பெண்களுக்கு எந்தத் தகுதியின் அடிப்படையில் எப்படி ஒதுக்கப்படும் என்பதை விளம்பரப்படுத்தி, ஒன்றும் அறியாத அந்த ஆதிதிராவிட மக்கள் அறிகின்ற வகையில், குறிப்பாக விளம்பரம் மூலமாக அதைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 452 மற்றும் வினா எண் 453, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண் 454, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

454 —

சந்தனக்கட்டைகள் கடத்தலில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களை ஏலம் விடுதல்

*** 16989 — திரு. கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 ஏப்ரல் 29

(அ) சந்தனக்கட்டைகள் கடத்தலில் ஈடுபட்டதற்காக கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பயனற்றுப் போவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இவற்றை ஏலம் விட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சந்தனக் கட்டைகள் கடத்தலில் ஈடுபட்டதற்காக கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பயனற்றுப் போவதை தவிர்க்க தற்போது 1992 ஆம் வருட வனச் சட்டத்தின் 44 - வது பிரிவு திருத்தத்தின்படி 1.10.92 முதல் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் உட்பட்ட அனைத்துப் பொருட்களையும் உதவி வனப் பாதுகாவலர் அந்தஸ்த்திற்கு குறையாத அலுவலரின் ஆணையின்பேரில் அரசுக்கு பறிமுதல் செய்யவும், பொதுநலன் கருதி அவற்றை பொது ஏலத்தில் விற்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த பழமையான அரசு ஆணைகளை ரத்து செய்து, காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப புதிய அரசு ஆணையை வழங்கி, அவ்வாறு ஆணை பிறப்பித்த பின்பு எவ்வளவு வாகனங்கள் ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் 350 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழகத்தினுடைய பல இடங்களிலும் ஏலம் விடப்பட்டுள்ளது. சில இடங்களில் ஏலம் விடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்ட உடனேயே அதை ஏலத்திற்கு விடுவதற்கு முன்னதாகவே, சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று பல்வேறு தடைகளைச் செய்கிற காரணத்தால், பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் இதுகாறும் ஏலத்தில் விடப்பட முடியவில்லை. சில இடங்களில் ஏலத்தில் விடப்பட்ட வாகனங்கள்கூட, சிலர் ஏலம் எடுப்பதற்குத் தயாராகவும் இல்லை. ஏனென்றால், மிகவும் பழுதுபட்ட வாகனங்களாக இருப்பது ஒரு காரணம். எனவே, அந்த நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குறிப்பாக, இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்து இருக்க வேண்டும். ஆனால் அதுகுறித்த, மிகக் குறிப்பான விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 29]

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிடிபட்ட பல வாகனங்கள், பிடிபட்ட நேரத்தில் இருக்கின்ற நிலையில் இல்லாமல், ஏலத்திற்கு வருகின்றபோது, அவை, தன்னுடைய நிலை மாறி, உருக்குலைந்த நிலையிலே வருகின்றன. அதைத் தவிர்க்கின்ற விதத்தில் பிடிபட்ட வாகனங்களுடைய அந்த எண்ணையும், அதே நேரத்தில் அந்த வாகனத்திற்குள்ள எக்ஸ்ட்ரா பிட்டிங் போன்ற உதிரி பாகங்களையும் பதிவேட்டிலே பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்புகின்ற பட்சத்தில் அது தவிர்க்கப்படும் என்று கருதுகிறேன். எனவே, அப்படி நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுமா ? அதோடுமட்டுமல்லாமல் இதுபோன்ற வாகனங்கள் அலுவலகத்தைச் சுற்றியே இருக்கின்ற காரணத்தினால் அது ஏதோ ஒரு பட்டறை போலக் காட்சியளிக்கின்றது. எனவே, இதுபோன்ற வாகனங்களை முறைப்படுத்த அதற்கென்ற ஒரு கோடவுனை ஏற்படுத்தி அதில் வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-55*

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று சட்டத் திருத்தங்களுக்கு முன்னால் கைப்பற்றப்பட்ட வாகனங்களை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டிய சூழ்நிலை இருந்தது. அப்படி நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படுகின்ற சூழ்நிலையில், அந்த வழக்கு முடியும் வரை நம்முடைய துறை காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உண்டு. சில நேரங்களில் அவைகளை அரசு பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும்: சில நேரங்களில் அவர்களை விடுவிக்கவும் ஆணை பிறப்பிக்கும். ஆனால், அன்றைக்குக் கைப்பற்றப்பட்ட நேரத்திலேயே அவைகள் என்னென்ன பொருட்கள் என்பதைத் தெளிவாகவே தெரிந்து கொண்டு நீதிமன்றத்திலே ஒப்படைக்கிறார்கள். எனவே, நீதிமன்றத்திலே ஒப்படைக்கப்பட்ட பின்னர் அதில் ஏதாவது குறைவு இருக்குமேயானால் நீதிமன்றத்தில் எடுத்து வைப்பதற்கு அந்தக் குற்றவாளிகள் அல்லது வாகன உரிமையாளர்களுக்கு எல்லாவிதமான ரைட்ஸ் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இப்படிக் கைப்பற்றப்பட்ட வாகனங்களை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்காக சட்டத்திருத்தத்தின் மூலமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவிக்கிறேன். எனவே, கைப்பற்றப்பட்ட பொருட்களில் எல்லாமே சட்ட ரீதியாக என்னென்ன இருக்கிறது என்பதைத் தெளிவாக ரிஜிஸ்தரில் எண்ட்ரி பண்ணி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[*1994 ஏப்ரல் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடத்தல் தொழிலில் - சந்தனக் கடத்தல் தொழிலில் ஈடுபடுகின்ற வாகனங்களை அரசு பறிமுகல் செய்து ஏலத்தில் விடுவதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதேநேரத்திலே, வழக்கு மன்றத்திற்கும் செல்கிறார்கள். ஆகவே வண்டிகள் பழுதடைகிறது என்றும் சொன்னார்கள். நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சந்தனக் கடத்தல் மட்டுமல்ல, எந்தக் கடத்தலில் ஈடுபடுகின்ற வாகனங்களாக இருந்தாலும் அந்த வாகனங்களை ஒரு வார காலத்திற்குள்ளாகவே நீதிமன்றத்திலே ஒப்படைத்து, நீதிமன்றக் காவலிலே அதை ஏலம் விட்டால் ஏலம் எடுப்பவர்களும் வண்டியை எடுப்பார்கள். இன்றைக்கு ஏலம் எடுக்க ஆள் வரவில்லை என்றும் சொல்கிறார்கள். காரணம் பல வருஷங்கள் அந்த வண்டிகள் நிறுத்தப்பட்டால் பழுதடைகிறது ; வண்டியிலே இருக்கின்ற வீல் இருப்பதில்லை ; என்ஜின் இருப்பதில்லை. அந்த வண்டிகள் மட்டும் இருக்கின்றன. மற்றப் பொருட்கள், காவல் துறையில் வைத்திருந்தாலும், வேறு எங்கு வைத்திருந்தாலும் காணாமல் செல்கிறது. ஆகவே, அந்த வண்டி - டப்பா வண்டியை வாங்குவதற்கு யாரும் வருவதில்லை. கடத்தல் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள், ஈடுபடுகின்ற வண்டி வாகன உரிமையாளர்களை எச்சரிக்கின்ற விதத்திலே ஒரு வார காலத்திலேயே அந்த வண்டி பொது ஏலத்தில் விட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்ட பின்னர் ஏற்கனவே இருந்த சட்டத்தின்படி, வழக்கு முடிவு என்பது மிகுந்த காலதாமதம் ஆகிறது. எனவே, நீதிமன்றத்தின் ஆணையைத்தான் இந்தத் துறை ஏற்று நடவடிக்கை எடுக்க முடியும். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இரண்டு. ஒன்று, வாகனங்களைக் கைப்பற்றுவது ; இன்னொன்று பறிமுதல் செய்வது. கைப்பற்றுவது என்பது வேறு ; பறிமுதல் செய்வது என்பது வேறு. கைப்பற்றப்பட்ட உடனேயே அதற்குரிய வாகன உரிமையாளர்கள் அல்லது குற்றவாளிகள் இதைப் பறிமுதல் செய்யாமல் இருப்பதற்காகவே பல்வேறு தடைகளை நீதி மன்றத்தின் மூலமாகப் பெற்று விடுகிறார்கள். பறிமுதல் செய்யப்பட்ட பின்னரும் அதை ஏலத்திற்கு விடாமல் இருப்பதற்காக அல்லது பறிமுதல் செய்ததையே தவறு என்பதற்காக அவர்களுக்கு என்னென்ன முறைகள் உண்டோ

1994 ஏப்ரல் 29]

அவைகளையெல்லாம் செய்கிறார்கள். எனவே, என்ன முறைகளைச் செய்தாலும் அவைகளையெல்லாம் கடந்து இந்த அரசு பறிமுதல் செய்கிறது என்பதையும், பறிமுதல் செய்தவைகளை ஏலம் விடுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நடைமுறையில் இருக்கிற சிக்கல்களைத் தவிர, அரசு இந்தச் சந்தனக் கடத்தல் அல்லது வனப் பொருட்கள் கடத்தல்காரர்களைத் தடுக்கிறபொருட்டு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினா எண் 455,* திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் *456,* திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

456 —

திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்.

***21044*—திரு. எம். கே. சுந்தரம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒன்றியத்திலே இருக்கிற தச்சம்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொல்லி

1994 ஏப்ரல் 29]

அவைகளையெல்லாம் செய்கிறார்கள். எனவே, என்ன முறைகளைச் செய்தாலும் அவைகளையெல்லாம் கடந்து இந்த அரசு பறிமுதல் செய்கிறது என்பதையும், பறிமுதல் செய்தவைகளை ஏலம் விடுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நடைமுறையில் இருக்கிற சிக்கல்களைத் தவிர, அரசு இந்தச் சந்தனக் கடத்தல் அல்லது வனப் பொருட்கள் கடத்தல்காரர்களைத் தடுக்கிறபொருட்டு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *455*, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் *456*, திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

456 —

திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்.

***21044*—திரு. எம். கே. சுந்தரம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒன்றியத்திலே இருக்கிற தச்சம்பட்டு அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொல்லி

அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு, இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற அத்தனை மாநிலங்களைக் காட்டிலும், கல்வித் துறையிலே அதிகமான நிதியை ஒதுக்கி, மிகப் பரவலான திட்டத்தின்கீழ், தமிழகத்திலே கல்வி கற்காதவர்கள் இல்லை என்று கூறுகிற அரசு, புரட்சித்தலைவியினுடைய அரசு என்று மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிற இந்த இனிய வேளையில், திருவண்ணாமலை ஒன்றியத்திலே இருக்கிற எந்த ஒரு கிராமத்திலும் இருக்கிற பள்ளியும், மேல்நிலைப் பள்ளியாக இல்லாத நிலையிலே, அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து ...

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு, வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சுந்தரம், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். கே. சுந்தரம் : அமைச்சர் அவர்கள், அதற்கான தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளை மேம்படுத்துவது பகுதி-2 திட்டத்திலே அனுமதிக்கப்படுகிற நிதியின் அடிப்படையிலேதான் செய்யப்படுகிறது. ஒரு மேல்நிலைப் பள்ளி அமைவதற்கு, பொதுமக்கள் பங்குத் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் செலுத்த வேண்டும். 8 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு மேல்நிலைப் பள்ளி இருக்கக் கூடாது. இந்தப் பள்ளியைப் பொறுத்தவரை, 15 கிலோ மீட்டர் சுற்றளவில், வேறு எந்தப் பள்ளியும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. பத்தாவது வகுப்பிலே 60 மாணவர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. பள்ளிக்கு ஆய்வகம், வகுப்பறைகள், விளையாட்டு இடம் ஆகியவை இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை இருக்கிறது. இந்த அடிப்படையில் தகுதி மற்றும் தேவை கருதி, பள்ளிகள் மேம்படுத்தப்படுகின்றன. இதற்கான கருத்துரு அரசுக்கு வரப்பெற்று இருக்குமானால், உயர் மட்டக் குழு, இதுகுறித்து ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, தச்சம்பட்டு கிராமத்தைச் சுற்றியிருக்கிற எந்த ஒரு குறிப்பிட்ட தொலைவிலேயும், மேல்நிலைப்

1994 ஏப்ரல் 29]

பள்ளி இல்லை. தச்சம்பட்டு கிராமத்தில் இருப்பவர்களோ அல்லது அதைச் சுற்றியிருக்கிற கிராமத்திலே பயில்கிற மாணவர்களோ, மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று பிளஸ் 2 படிப்புப் படிக்க வேண்டுமென்று சொன்னால், அருகிலே இருக்கிற வானவபுரம் கிராமத்திற்கோ அல்லது திருவண்ணாமலை நகரத்திற்கோ செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், இன்றைக்கு அங்கே இருக்கிற கிராமத்திலே பயில்கிற மாணவர்கள் மிகவும் கஷ்டமான நிலையிலே கல்வியைக் கற்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. மேலும், அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இந்த தச்சம்பட்டு கிராமத்திலே இருக்கிற உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று சொல்லி, அதற்குத் தேவையான இட ஒதுக்கீடுகள் மற்றும் அதற்குத் தேவையான பணத்தையெல்லாம் செலுத்தி, மீதமுள்ள தொகையையும் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். புரட்சித் தலைவியினுடைய புனித அரசிலே, இன்றைக்குத் தமிழர்களுடைய வாழ்விற்கு ஒளி விளக்காகவும், தாழ்ந்துவிட்ட தமிழினத்தை வழிகாட்டுகிற ஒரு சிறந்த தலைவியாகவும் விளங்கிக் கொண்டிருக்கிற எங்களுடைய இதயதெய்வம் மரியாதைக்குரிய, என்றும் போற்றுகின்ற மனித தெய்வம், அன்னை சந்தியத் தாய் ஈன்றெடுத்த அருந்தவம், எங்களுடைய இதயத்திலே என்றைக்கும் வீற்றிருக்கிற மனித தெய்வத்தினுடைய புனித ஆட்சியிலே, இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கு முன்னுரிமை தந்து, அதை மாற்றிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வாரா என்பதை எங்களுடைய இதயதெய்வம் புரட்சித்தலைவியினுடைய பாதத்தைத் தொட்டு, தங்களின் வாயிலாக அமைச்சரிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இருக்கிற மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் மிக அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மிகவும் முனைப்போடு செயலாற்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்குத் தேவையான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்குமானால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 457, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1994 ஏப்ரல் 29

457 —

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரத்திற்கு குடிநீர் வழங்குதல்.

21260—திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் நகரத்தில் 14-வது, 15-வது வார்டு பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு குடிநீர் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் நகர பேருராட்சியில் ஏற்கனவே விடுபட்ட தெருக்களுக்கும், 14-வது, 15-வது வார்டுகளுக்கும் குடிநீர் வழங்க குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14, 15 வார்டு என்பது, விக்கிரமசிங்கபுரத்தினுடைய பேரூராட்சியினுடைய குக்கிராமங்களைச் சேர்ந்த பகுதிகளாகும். இந்தப் பகுதிகளிலே, சாதாரணமாக குடிநீர் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றபிறகு, இந்தக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவதற்காக குடிநீர் சம்பந்தப்பட்ட வேலைகள் துவக்கப்பட்டன. ஆனால், இந்த வேலைகளிலே சமீபகாலமாக கொஞ்சம் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று கேட்டால் பைப்புகள் வரவில்லை, குழாய்கள் வரவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிற காரணத்தால் வேலை தாமதப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பைப்புகளை வாங்கிக் கொடுத்து, வேலையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29]

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்த இரண்டு பகுதிகளுக்கும் இன்றைக்கு பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. கடந்த ஆண்டு இந்தக் குழாய்கள் கிடைக்கப்பெறாத நிலை இருந்து வந்தது. இந்த ஆண்டு அது நிவர்த்தி செய்யப்பட்டு தமிழகத்திலேயிருக்கிற அனைத்துப் பகுதிகளுக்கும் முறையாக, மெட்டீரியல்ஸ் என்று சொல்கின்ற குழாய்கள் மற்றும் மோட்டார்கள் கிடைக்கப்பெற்று வழங்கப்பட்டிருக்கின்றன. கூடிய விரைவில் அந்தப் பணி முடிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14, 15 வார்டு என்பது பல கிராமங்களைக் கொண்டது. இருந்தாலும்கூட, அந்தத் திட்டம் தயார் செய்யும்போது பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆய்வு செய்யப்பட்டது. இப்பொழுது அதிலே பல குடியிருப்புகளும் புதியதாகத் தோன்றியுள்ளன. அதேபோன்று அந்த விக்கிரமசிங்கபுர நகரத்திற்குள்ளாகவே பல தெருக்களும் விடப்பட்டுள்ளன. இதையெல்லாம் சேர்த்து, இந்த ஆண்டு திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் சம்பந்தப்பட்ட பொறியாளரிடத்திலே கேட்ட நேரத்தில், மதிப்பீட்டிலே பணம் இருக்கிறது, எனவே அதை செய்து முடிக்கிறோம் என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் இந்தத் திட்டத்தில் விட்டுப்போன தெருக்களையும் இதோடு சேர்த்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே, இந்த வருட கடைசிக்குள்ளாக, அந்தப் பொதுமக்களுக்குத் தண்ணீர் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருவார்களா ? அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கின்றவகையிலே, அந்த விழாவிலே கலந்துகொண்டு திறந்து வைக்க வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்தப் பகுதிகளுக்கும் புதியதாக உருவாகியிருக்கின்ற குடியிருப்புகள் பகுதிகளுக்கும் இப்பொழுது பணிகள் தொடங்கியிருக்கின்றன. காரணம் சுமார் 24 கிலோ மீட்டர் அளவிற்கு விடுபட்ட மற்றும் புதிய பகுதிகளுக்காக பதிமானக் குழாய்கள் எல்லாம் பதிக்கப்பட்டு இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பகுதியைப் பொறுத்தவரை ஒரு வார்டுக்கு அகஸ்தியர்புரத்திலும், 15-வது வார்டுக்கு மேட்டுத்தங்கம்மன்

[1994 ஏப்ரல் 29

கோவில் அருகிலும் நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகையினால், அபிவிருத்தி அடைகின்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் செயலாக்கத்திற்கு விடப்படும். கூடியவிரைவிலே உங்களுடைய கோரிக்கையை கருத்திலே எடுத்து போர்க்கால அடிப்படையிலே இந்தப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு இந்த ஆண்டிலே குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 458, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை.

வினா எண் 459, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

459 —

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் மாணவ விடுதிகளின் விவரம்.

***22243*—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் மற்றும் மாணவியர் விடுதிகள் எத்தனை ?

(ஆ) இதில் சொந்தக் கட்டிடம் உள்ள விடுதிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலே 17 ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகளும், 6 மாணவியர் விடுதிகளும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் உள்ளன.

(ஆ) இதில் 4 விடுதிகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு 17 மாணவர்கள் விடுதிகளும், 6 மாணவியர் விடுதிகளும், ஒரு

கோவில் அருகிலும் நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகையினால், அபிவிருத்தி அடைகின்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் செயலாக்கத்திற்கு விடப்படும். கூடியவிரைவிலே உங்களுடைய கோரிக்கையை கருத்திலே எடுத்து போர்க்கால அடிப்படையிலே இந்தப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு இந்த ஆண்டிலே குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 458, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை.

வினா எண் 459, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

459 —

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் மாணவ விடுதிகளின் விவரம்.

***22243*—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் மற்றும் மாணவியர் விடுதிகள் எத்தனை ?

(ஆ) இதில் சொந்தக் கட்டிடம் உள்ள விடுதிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலே 17 ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகளும், 6 மாணவியர் விடுதிகளும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் உள்ளன.

(ஆ) இதில் 4 விடுதிகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு 17 மாணவர்கள் விடுதிகளும், 6 மாணவியர் விடுதிகளும், ஒரு

1994 ஏப்ரல் 29]

கல்லூரி மாணவர்கள் விடுதி இருந்தும் கிட்டத்தட்ட 4 விடுதிகள்தான் சொந்தக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பின்தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே தொடங்கப்பட்ட விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை முக்கியத்துவம் கொடுத்து அங்கே அதிகக் கட்டிடம் கட்ட இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மொத்த ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள் விடுதிகள் 952, அரசுக் கட்டிடங்களில் இயங்குவது 394. தனியார் கட்டிடத்தில் இயங்குவது 558. தமிழக அரசு ஆண்டுதோறும் 12 விடுதிகள் கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது— 6 மாணவர் விடுதிகள், 6 மாணவியர் விடுதிகள். வருகின்ற நிதியாண்டில், அந்த மாவட்டத்திற்கு ஒரு மாணவர் விடுதி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கை துரித நடவடிக்கை எடுத்து கடந்த 8 ஆண்டுக் காலமாக நிலுவையில் உள்ள வழக்கை ரத்து செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியில், அதிக மாணவர்களைக் கொண்ட பரமக்குடியில், மாணவர்கள் விடுதி கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-ல் உத்தரவிடப்பட்ட அந்த மாணவர் விடுதியைப் பொறுத்தவரையில் அதற்கான தொகை மாண்புமிகு உறுப்பினர் தொகுதியான சத்திரப்பட்டிக்கு ஒதுக்கப்பட்டு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோர்ட்டில் இருக்கிற வழக்கு குறித்து துரித நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு எடுக்கப்பட்டு பிறகு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*1994 ஏப்ரல் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 460, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

460—

மலைவாழ் மக்கள் தேனீ வளர்க்க கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பாடு செய்தல்.

***22668*—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏலகிரி மலை, ஜவ்வாது மலை மலைவாழ் மக்கள் தேனீ வளர்க்க கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு முதல் ஏலகிரி, ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டு அன்று முதல் இன்று வரை இந்தத் தேனீ வளர்ப்புத் தொழில் மிக இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை ஆகியவற்றில் சுமார் 25000 மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே தலைவி நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் மீது அவர்கள் அன்பையும் பாசத்தையும் வைத்திருக்கிறார்கள். அங்கே விவசாயம் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லை. மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்பதற்குக் கடன் கொடுத்திருப்பது குறித்து அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது தேனீக்களுக்கு ஒரு வகையான நச்சு நோய் பரவி வருகிறது. அது ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளிலும் பரவ ஆரம்பித்துள்ளது. இதைத் தடுக்க வாரியம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் நேற்று எனது பதிலுரையில் மிக விளக்கமாகக் கூறினேன். தேனீக்களுக்கு வரக்கூடிய இந்த நச்சு நோயைக்

[*1994 ஏப்ரல் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 460, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

460—

மலைவாழ் மக்கள் தேனீ வளர்க்க கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பாடு செய்தல்.

***22668*—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏலகிரி மலை, ஜவ்வாது மலை மலைவாழ் மக்கள் தேனீ வளர்க்க கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு முதல் ஏலகிரி, ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டு அன்று முதல் இன்று வரை இந்தத் தேனீ வளர்ப்புத் தொழில் மிக இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை ஆகியவற்றில் சுமார் 25000 மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே தலைவி நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் மீது அவர்கள் அன்பையும் பாசத்தையும் வைத்திருக்கிறார்கள். அங்கே விவசாயம் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லை. மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்பதற்குக் கடன் கொடுத்திருப்பது குறித்து அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது தேனீக்களுக்கு ஒரு வகையான நச்சு நோய் பரவி வருகிறது. அது ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளிலும் பரவ ஆரம்பித்துள்ளது. இதைத் தடுக்க வாரியம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் நேற்று எனது பதிலுரையில் மிக விளக்கமாகக் கூறினேன். தேனீக்களுக்கு வரக்கூடிய இந்த நச்சு நோயைக்

1994 ஏப்ரல் 29]

கட்டுப்படுத்துவதற்காக தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த மலைவாழ் மக்களுக்கு தனியான முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சி வகுப்புக்கு நானே நேரடியாகச் சென்று அந்த மக்கள் மத்தியிலே அமர்ந்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரியாகக் கொடுக்கிறார்களா என்பதைக் கவனித்து வருகிறேன். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை மலைவாழ் மக்களுக்கு எடுத்துக்கூறி வருகிறோம். நச்சு நோயை அழிக்க வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தற்போது எத்தனைபேர் பயனடைந்து வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகளில் முழுநேரத் தொழிலாக 2000-க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்து வருகிறார்கள். பகுதி நேரத் தொழிலாக சுமார் 8500-க்கு மேற்பட்ட மக்கள் இந்தத் தொழிலை நம்பி இருக்கிறார்கள். ஆகவே கிட்டதட்ட அந்த ஏலகிரி, ஜவ்வாது மலைப்பகுதியில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் இந்தத் தேனீ வளர்ப்புத் தொழிலை நடத்தி அவர்கள் வாழ்க்கையில் சமுதாய மேம்பாடு அடைய வழிகாட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்விகள் இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன. வினா எண் 452, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

452—

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஆற்று மணல் எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

** 10275*—திரு. கு. சீனிவாசன் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் தாலுகா அரண்வாயில் பகுதியில் (கூவத்தில்) மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா,

TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

கட்டுப்படுத்துவதற்காக தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த மலைவாழ் மக்களுக்கு தனியான முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சி வகுப்புக்கு நானே நேரடியாகச் சென்று அந்த மக்கள் மத்தியிலே அமர்ந்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரியாகக் கொடுக்கிறார்களா என்பதைக் கவனித்து வருகிறேன். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை மலைவாழ் மக்களுக்கு எடுத்துக்கூறி வருகிறோம். நச்சு நோயை அழிக்க வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தற்போது எத்தனைபேர் பயனடைந்து வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகளில் முழுநேரத் தொழிலாக 2000-க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்து வருகிறார்கள். பகுதி நேரத் தொழிலாக சுமார் 8500-க்கு மேற்பட்ட மக்கள் இந்தத் தொழிலை நம்பி இருக்கிறார்கள். ஆகவே கிட்டதட்ட அந்த ஏலகிரி, ஜவ்வாது மலைப்பகுதியில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் இந்தத் தேனீ வளர்ப்புத் தொழிலை நடத்தி அவர்கள் வாழ்க்கையில் சமுதாய மேம்பாடு அடைய வழிகாட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்விகள் இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன. வினா எண் 452, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

452—

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஆற்று மணல் எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

* *10275*—திரு. கு. சீனிவாசன் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் தாலுகா அரண்வாயில் பகுதியில் (கூவத்தில்) மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா,

கோலப்பன்சேரிப் பகுதியிலும் சவுடு எடுப்பதாக உரிமம் பெற்று ஆற்று மணலைத் தனியார் எடுப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் வட்டம் அரண்வாயில் பகுதியிலும், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் கோலப்பன்சேரிப் பகுதியிலும் சவுடு மண் எடுக்க இரண்டு நபர்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதிகளைப் பயன்படுத்தி கள்ளத்தனமாக மணல் எடுப்பதாகக் கிடைத்த தகவல் பேரில் திடீர் சோதனை செய்யப்பட்டு கள்ளத்தனமாக மணல் எடுப்பதைக் கண்டுபிடித்து வாகனங்களைக் கைப்பற்றி, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு அபராதமும் விதிக்கப் பட்டிருக்கிறார்கள். சவுடு மண் எடுப்பதற்கான அந்த உரிமமும் ரத்து செய்யப் பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக சரியான முறையில் முறையாக அவர்கள் தட்டிக் கேட்கப்படுவார்கள். தண்டனை கொடுக்கப் படுவார்கள் என்று சொல்கிற அளவுக்கு இன்றையதினம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இங்கே நான் கேட்ட கேள்விக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபோன்ற தவறுகள் மறுபடியும் நடக்காமல் இருக்க அப்படிக் கைப்பற்றிய வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுச் சொத்தாக அரசுக்கே சேர்கிற வகையில் இனிமேல் நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணல் போன்ற கனிமங்களைக் கள்ளத்தனமாக எடுக்கிறபோது அந்த வாகனங்களைக் கைப்பற்றி நாம் அபராதம் விதிப்பதற்குத்தான் சட்டத்தில் இடம் இருக்கிறதே தவிர அவர் சொல்வது போல் 'கான்பிஸ்கேட்' செய்கிற அளவுக்கு விதியில் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 29]

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான முறையிலே மண் எடுப்பது பற்றி சொல்லியிருக்கிறார்கள். இது என்னுடைய தொகுதி என்கின்ற காரணத்தால் எனக்கு நன்றாகத் தெரியும். 300 முதல் 400 லாரிகள் மணல் எடுத்துக் கொண்டிருக்கின்றன. இதிலே சமூக விரோதிகள் 6, 7 பேர் ஒன்றாகச் சேர்ந்து அதிகாரிகளை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு 60 ஆயிரம் 70 ஆயிரம் என்று வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தால்தான் இந்த மணல் எடுப்பதை நிறுத்தமுடியும். இப்படி மணல் எடுக்கப்பட்ட காரணத்தால் 60,000 ரூபாய் செலவிலே கட்டப்பட்ட ஒரு அணை சென்ற ஆண்டு மழையின்போது உடைந்துபோய்விட்டது. அப்படி இருந்தும்கூட அதிகாரிகள் வருகிறார்கள் நடவடிக்கைகள் தினமும் எடுக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று நான் சொல்லவில்லை. ஒரு தடவை பிடிபட்டால் லாரிக்கு ரூ. 2500 என்றும், 2-ம் தடவை பிடிபட்டால் ரூ. 5000 என்றும் 3-ம் தடவை பிடிபட்டால் ரூ. 10,000 என்றும் வசூலிக்கிறார்கள். இருந்தும்கூட அந்த சமூக விரோதிகள் அதிகாரிகளை மிரட்டி அங்கே பணம் பறித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த சமூக விரோதிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக விரோதிகள் ஆனாலும் சரி தேச விரோதிகள் ஆனாலும் சரி இந்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் அவர்களுடைய பகுதியிலே கள்ளத்தனமாக மண் எடுக்கப்படுவதாக சொன்னார்கள். அவ்வப்போது திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்படி ஏதாவது குறிப்பிட்ட சம்பவம் நடைபெறுகிறபோது அதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவரவேண்டியது திரு. சுதர்சனம் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடமையாக இருக்கிறது. அங்கே இருந்து அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால்

[1994 ஏப்ரல் 29

கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி டி. சக்குபாய் தேவராஜ்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிதான் அரண்வாயில். மீண்டும் மீண்டும் இந்தத் தவறை செய்து கொண்டிருக்கிறார்கள். மாவட்ட கலெக்டரும், ஆர்.டி.ஓ-வும் அடிக்கடி வண்டிகளைப் பிடித்தாலும், பணம் கட்டிவிட்டு, மீண்டும் அதே தவறை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசு இதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுதர்சனம் அவர்களுக்கு சொன்ன பதில்தான் திருமதி சக்குபாய் அவர்களுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான சவுடு மண் என்னுடைய தொகுதியில் எடுக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் வட்டாட்சியரிடமும் பலமுறை புகார் செய்திருக்கிறேன். புகார் செய்தாலும், ஆயிரக் கணக்கான லாரிகள் மூலம் அந்த மண் எடுக்கப்படுகிறது. என்னுடைய தொகுதியில் 71 செங்கல் சூளைகள் உள்ளன. அந்த 71 செங்கல் சூளைகளுக்கும் அந்த இடத்திலிருந்துதான் தவறான வழியிலே மண் எடுக்கப்படுகிறது. உரிமம் பெற்று மண் எடுக்கப்படுவதில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுதர்சனம் 300, 400 லாரிகள் என்று சொன்னார்கள். நீங்கள் ஆயிரக்கணக்கான வண்டிகள் என்று சொல்லுகிறீர்கள். பல வண்டிகள் என்றால் பொருத்தமாக இருக்கும். நீங்கள் ஒவ்வொருவரும் கூட்டிக்கொண்டே போனால் எப்படி ? இது கேள்வி நேரம், சரியாக வராது. பல வண்டிகள் என்று சொல்லுங்கள்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வண்டிகளில் மண் எடுக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான குவாரீஸ் - கல் உடைக்கும் குவாரிகள், என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. கடந்த ஆண்டு கோடம்பாக்கம் வழியாக ஸ்ரீபெருமந்தூருக்கு சாலைகள் நெடுஞ்சாலைத் துறையால் நல்ல முறையில் போடப்பட்டன. இன்றைக்குப்

1994 ஏப்ரல் 29]

போய் பார்க்கின்றபோது வண்டிகள் ஏதும் போக முடியாத நிலையில் அந்தச் சாலைகள் பழுதடைந்து இருக்கின்றன. இதற்குக் காரணம் தவறான வழியிலே மண் எடுப்பதும் கல் உடைப்பதும் தொழிலாகக் கொண்ட சமூக விரோதிகள் என்னுடைய தொகுதியிலே நிறைந்து இருக்கிறார்கள். ஸ்ரீபெருமந்தூர், பூந்தமல்லி, திருவள்ளூர் போன்ற தொகுதிகளில்தான் இந்த மண் எடுக்கும் தொழில் நடந்துகொண்டிருக்கிறது. இதைச் சரியான வழியிலே அரசு கடுமையான சட்டத்தின் மூலம் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் மற்றும் திருமதி சக்குபாய் அவர்களுக்கும் சொன்னேன். அப்படி யாராவது தவறான முறையில் அந்த சவுடு மண் அல்லது மணல் எடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் போன்றவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சி அலுவலர் அல்லது தாசில்தாரிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் அரசு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 453, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

453 —

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத் தொழில்களில் பங்கேற்க தகவல் மையங்கள் அமைத்தல்

** 24086—திருமதி கே. மரியம் உல் ஆசியா :*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத் தொழில்களில் பங்கேற்க, வெளிநாடுகளில் தகவல் மையங்கள் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994 ஏப்ரல் 29]

போய் பார்க்கின்றபோது வண்டிகள் ஏதும் போக முடியாத நிலையில் அந்தச் சாலைகள் பழுதடைந்து இருக்கின்றன. இதற்குக் காரணம் தவறான வழியிலே மண் எடுப்பதும் கல் உடைப்பதும் தொழிலாகக் கொண்ட சமூக விரோதிகள் என்னுடைய தொகுதியிலே நிறைந்து இருக்கிறார்கள். ஸ்ரீபெருமந்தூர், பூந்தமல்லி, திருவள்ளூர் போன்ற தொகுதிகளில்தான் இந்த மண் எடுக்கும் தொழில் நடந்துகொண்டிருக்கிறது. இதைச் சரியான வழியிலே அரசு கடுமையான சட்டத்தின் மூலம் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் மற்றும் திருமதி சக்குபாய் அவர்களுக்கும் சொன்னேன். அப்படி யாராவது தவறான முறையில் அந்த சவுடு மண் அல்லது மணல் எடுத்தால் மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் போன்றவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சி அலுவலர் அல்லது தாசில்தாரிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் அரசு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 453, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

453 —

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத் தொழில்களில் பங்கேற்க தகவல் மையங்கள் அமைத்தல்

*** *24086*—திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத் தொழில்களில் பங்கேற்க, வெளிநாடுகளில் தகவல் மையங்கள் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 29

மைய அரசு அயல் நாடுகளில் இருந்த தகவல் மையங்களை மூடிவிட்டு, அதற்குப்பதில் இந்திய தூதரகங்களின் மூலம் அயல் நாட்டு வாழ் இந்தியர்கள் இந்தியாவில் முதலீடு செய்வதற்குத் தேவையான தகவல் குறிப்புகளை அளித்து வருகிறது. அவ்வாறே தமிழ் நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் கொண்ட தகவல் குறிப்புகள் குறிப்பிட்ட சில வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் சங்கங்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-20

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வதற்கான தகவல் குறிப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள இந்திய தூதரகம் மூலம் அளிக்கப்படுகின்றன என்று சொன்னார். ஆனால் அவர்கள் மூலம் அவைகள் அவ்வாறு அளிக்கப்படுவதில்லை என்ற கசப்பான உண்மையை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கும் தொழிலுக்கு வேண்டி வெளிநாடுகளுக்கு, வளை குடா நாடுகளுக்கு சென்றார்கள். அங்கே மர்மமான முறையில் சிலர் இறந்திருக்கிறார்கள். கடலில் மீன்பிடிக்கச்சென்று காணாமல் போனவர்களைப் பற்றியும் இறந்தவர்களைப் பற்றியும் நம்முடைய இந்தியத் தூதரகம் கண்டுகொள்வதேயில்லை. அவர்களுடைய உறவினர்கள் அல்லது நண்பர்கள் அல்லது அவரோடு வேலை செய்பவர்கள் தான் உடனடியாக நம்முடைய தமிழகத்திலே உள்ள அவர்களுடைய உறவினர்களுக்கு தகவல் சொல்கின்றார்கள். அப்படி இறந்தவர்களையே கண்டுகொள்ளாத இந்தியத் தூதரகம் இங்கே தமிழகத்திலே தொழில் முதலீடு செய்வதற்குரிய அந்த தகவல் குறிப்புகளை அவர்கள் கொடுப்பதில்லை.

மேலும் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான அனுமதியுடனும், நல்லாசியுடனும் நான் ஐக்கிய அரபு குடியரசு நாடுகளுக்கு சென்றிருந்தபோது இவற்றை நான் நேரிலே கண்டேன். அங்கே என்.ஆர்.ஐ. என்று அழைக்கப்படுகின்ற வெளிநாட்டு இந்தியர்கள் மற்றும் அங்கேயுள்ள பெரிய முதலீட்டாளர்கள், பன்னாட்டு தொழில் அதிபர்கள் இவர்கள் எல்லாம் இந்தியாவில் தொழில் முதலீடு செய்வதற்கு பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிலையில்தான் இருந்தனர். மேலும் தமிழக அரசினுடைய செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மூலம்

1994 ஏப்ரல் 29]

நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய, அந்த என்.ஆர்.ஐ.க்கள் தமிழகத்தில் தொழில் துறையில் முதலீடு செய்யவேண்டும் என்ற அன்பு அழைப்பை விளக்குகின்ற வகையிலே உள்ள அந்த தொழில் தகவல் குறிப்புகளை நான் அங்கே எடுத்துச் சென்று அங்கேயுள்ள I.S.C என்ற இந்தியன் சோசியல் சென்ட்டர் என்ற அசோசியேஷனுக்கும் மற்றும் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி, அரபு இந்தியன் அசோசியேஷன், தமிழ் சங்கங்கள் மேலும் அந்த நாடுகளிலுள்ள புரட்சித் தலைவி பேரவை சங்கங்கள் இப்படி பல்வேறு அமைப்புகளின் கூட்டங்களில் எல்லாம் நான் அவற்றைக் கொடுத்தேன். அண்மையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் வளைகுடா நாடுகளுக்கு சென்றிருந்தபோது, இந்த விவரங்களை அறிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். மேலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று அயல்நாட்டு இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் துவங்க மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள். தொழில் துவங்க வேண்டுமென்றால் அமைதி நிலவவேண்டும். அந்த அமைதி இந்தியாவிலேயே நம் தமிழகத்தில் மட்டும் தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பாதுகாப்பு மட்டுமல்லாமல் இங்கே அரசு உதவி தமிழகத்தில் உடனடியாக கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனே புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஸ்தலமான தமிழகத்திற்கு இன்று தேடி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே தமிழகம் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதன் மாநிலமாக விளங்கவேண்டும் என்பதற்காகவும், தமிழகத்தை ஜப்பான் போன்ற ஒரு நாடாக உருவாக்கவும், முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ள முயற்சிகள் வெற்றிகரமாக அமையும் வகையில் தொழிற்சாலைகள் அமைப்பு முறைகள், அதில் கிடைக்கும் வருமானம், மற்றும் முதலீடுகள் பற்றி ஆலோசனைகள் வழங்க தொழில் தகவல் மையங்களைத் தனியாக அயல்நாடுகளில் அமைப்பதற்கும் மேலும் புதுடெல்லி, பம்பாய் போன்ற இடங்களில் இதுபோன்ற மையங்கள் அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே தொழில்துறை விவாதம் முடிந்துவிட்டது

என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இன்றும் தொடருகிறதோ என்று ஐயப்படும் வகையில் நம்முடைய உறுப்பினர் மரியம் உல் ஆசியா அவர்கள் தன்னுடைய வெளிநாட்டு அனுபவங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு எந்தெந்த நாடுகளுக்குச் சென்றார்களோ அதே நாடுகளுக்கு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதியோடு நான் அவர்களைத் தொடர்ந்து சென்றேன் என்பதை இப்போது நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இந்த கேள்வியில் குறிப்பிட்டிருப்பது எல்லாம் அங்கே இருக்கின்ற தொழில் முனைவோர்களுக்கு வழி காட்டுகிற தகவல் மையங்களை மத்திய அரசு வைத்திருக்கிறதா என்று தான் கேட்டார்கள். மத்திய அரசு அதை ஏற்கனவே மூடிவிட்டது. அங்கே இருக்கிற இந்திய தூதரகங்கள் மூலமாக அந்த பணிகளைச் செய்து வருகின்றார்கள். நான் சென்றபோதுகூட அந்த மூன்று நாடுகளிலும் உள்ள இந்தியத் தூதுவர்கள் என்னோடு வந்தார்கள். நாங்கள் நடத்திய கருத்தரங்குக்கு அவர்கள் எங்களை எல்லாம் வரவேற்றுப் பேசினார்கள். நாங்களும் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறோம். இந்தியாவில் எந்த பகுதியில் இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டிலே நீங்கள் தொழில் முனைவோர்கள் வருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் உதவியையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் செய்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் இந்த தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் என்கின்ற அமைப்பினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1992 ஆம் ஆண்டு இங்கே அறிமுகப்படுத்தி நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த நிறுவனம் திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள் கேட்ட கேள்வியினுடைய பதிலுக்கு ஏற்ற செயல்பாடுகளை கவனித்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தினால் இதற்காக தமிழ்நாடு அரசு தனியாக வெளிநாடுகளில் தகவல் மையம் அமைக்கத் தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி மரியம் உல் ஆசியா, கேள்வியாக மட்டும் கேளுங்கள்.

1994 ஏப்ரல் 29]

முற்பகல் 11--25

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.டி.பி.ஓ. என்ற இந்திய வர்த்தக மேம்பாடு அமைப்பு வரும் செப்டம்பர் மாதத்தில் துபாய் நாட்டில் நடத்த இருக்கும் இந்திய வர்த்தகப் பொருட்காட்சியிலும் மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் இந்திய வர்த்தகப் பொருட்காட்சிகளிலும், என்.ஆர்.ஐ. மற்றும் பன்னாட்டு தொழில் முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் இதுபோன்ற அதாவது பொருட்காட்சிகளிலே இதுபோன்ற வகையில் தொழில் தகவல் மையங்களை வைக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும், அதேநேரத்திலே துபாய் நாட்டிலே தமிழ்நாடு சார்பில் அரசு அதிகாரிகள் இல்லாத பிரதிநிதி ஒருவரை நியமிக்க இருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் அண்மையில் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் அறிவித்ததை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். என்.ஆர்.ஐ. -க்கள் மட்டுமல்லாமல், அயல்நாட்டு தொழில் முதலீட்டாளர்கள் தமிழகத்தில் தொழில் துறையில் முதலீடு செய்வதற்கு ஏதுவாக செல்வாக்குப் பெற்ற 3, 4 பேர்களைக் கொண்ட ஒரு குழுவினரை நியமித்து அந்தக் குழுவிலே ஒருவர் தலைமை பிரிதிநிதியாக இருப்பதற்கும், அதைப்போன்று சவுதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளில் இப்படிப்பட்ட குழுவினரை நியமிப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளைகுடா நாடுகளில் இருக்கிற இந்தியத் தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் வளைகுடா நாடுகளின் தொழில் முதலீட்டாளர்கள் எல்லாம், அனைவரையும் சந்தித்து விளக்கமாக தமிழக அரசினுடைய தொழில் கொள்கை, தமிழக அரசினுடைய நிலைமை, வெளிநாட்டு தொழில் அதிபர்களை எந்த அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் ஆர்வத்தோடு அழைக்கிறார்கள், பேசுகிறார்கள் என்ற விவரத்தை எல்லாம் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறோம். இங்கே திருமதி மரியம் உல் ஆசியா அவர்கள் பேசும்போது அங்கே ஒரு அதிகாரியை நியமிப்பதாகச் சொன்னார்கள். அப்படி இல்லை. அங்கே ஒருவரை நமது சார்பில் அங்கே இருக்கிற வெளிநாட்டு தொழில் அதிபர்கள் யாராவது சந்தேகம் கேட்டால் அதைச் சொல்வதற்கும், நம்மோடு தொடர்பு கொள்வதற்கும் அதிகாரப் பற்றற்றவர்களை நியமிப்பதாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியைப்

பெற்று ஒருவரை நியமிப்பதாக இருக்கிறோம். இருந்தாலும் அங்கே இருக்கிற தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் கெய்டன்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட் புரமோசன் பியூரோ என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு தொழில் வழிக்காட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் அந்தப் பணியை தொடர்ந்து செய்கின்ற காரணத்தாலே அதுபோன்ற அதிகாரிகளை இப்பொழுது நியமிக்க தேவையில்லை என்பதும், பின்னாலே தேவைப்பட்டால் அப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

455—

கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரியில் கிளை நூலகம் அமைத்தல்

** 20687—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை

458—

புவனகிரி பேரூராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைத்தல்

** 22087—செல்வி கோ. மல்லிகா :*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி, கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பெற்று ஒருவரை நியமிப்பதாக இருக்கிறோம். இருந்தாலும் அங்கே இருக்கிற தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் கெய்டன்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட் புரமோசன் பியூரோ என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு தொழில் வழிக்காட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் அந்தப் பணியை தொடர்ந்து செய்கின்ற காரணத்தாலே அதுபோன்ற அதிகாரிகளை இப்பொழுது நியமிக்க தேவையில்லை என்பதும், பின்னாலே தேவைப்பட்டால் அப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

455—

கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரியில் கிளை நூலகம் அமைத்தல்

** 20687—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

458—

புவனகிரி பேரூராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைத்தல்

** 22087—செல்வி கோ. மல்லிகா :*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி, கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும் ?

பெற்று ஒருவரை நியமிப்பதாக இருக்கிறோம். இருந்தாலும் அங்கே இருக்கிற தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் கெய்டன்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட் புரமோசன் பியூரோ என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு தொழில் வழிக்காட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் அந்தப் பணியை தொடர்ந்து செய்கின்ற காரணத்தாலே அதுபோன்ற அதிகாரிகளை இப்பொழுது நியமிக்க தேவையில்லை என்பதும், பின்னாலே தேவைப்பட்டால் அப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

455—

கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரியில் கிளை நூலகம் அமைத்தல்

** **20687**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை

458—

புவனகிரி பேரூராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைத்தல்

** **22087**—செல்வி கோ. மல்லிகா :*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி, கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும் ?

1994 ஏப்ரல் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புவனகிரி பேரூராட்சி கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் ஒரு கைதி மரணமுற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறப்புக் கவன ஈர்ப்பு. இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் — (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்—காவல் கைதி ஒருவர் மரணம் அடைந்தது பற்றிய ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று என்னிடத்தில் திரு. சி. ஞானசேகரன் மற்றும் ச. அழகிரி ஆகியோர் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றிச் சுருக்கமாக பேரவையில் விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினையை மட்டும். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வெண்ணத்தூர் கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி என்பவர் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய ஆய்வாளர், தலைமைக் காவலர், ஜீப் டிரைவர் ஆகிய 3 காவல் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சாராய வழக்கு சம்பந்தமாக எடுத்துச்சென்று லாக்கப்பிலே வைத்திருந்தபோது அவர் காவல் நிலையத்திலே சந்தேகமான முறையிலே மரணம் அடைந்தார் என்ற ஒருவகை செய்தியும், ஜீப்பிலே எடுத்துச்சென்றபோது ஜீப்பிலே தாக்கப்பட்டு, ஜீப்பிலே அவர் இறந்துவிட்டார், உடன் அரஸ்ட்

1994 ஏப்ரல் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புவனகிரி பேரூராட்சி கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி () இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் ஒரு கைதி மரணமுற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறப்புக் கவன ஈர்ப்பு. இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் — (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்—காவல் கைதி ஒருவர் மரணம் அடைந்தது பற்றிய ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று என்னிடத்தில் திரு. சி. ஞானசேகரன் மற்றும் ச. அழகிரி ஆகியோர் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றிச் சுருக்கமாக பேரவையில் விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினையை மட்டும். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வெண்ணத்தூர் கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி என்பவர் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய ஆய்வாளர், தலைமைக் காவலர், ஜீப் டிரைவர் ஆகிய 3 காவல் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சாராய வழக்கு சம்பந்தமாக எடுத்துச்சென்று லாக்கப்பிலே வைத்திருந்தபோது அவர் காவல் நிலையத்திலே சந்தேகமான முறையிலே மரணம் அடைந்தார் என்ற ஒருவகை செய்தியும், ஜீப்பிலே எடுத்துச்சென்றபோது ஜீப்பிலே தாக்கப்பட்டு, ஜீப்பிலே அவர் இறந்துவிட்டார், உடன் அரஸ்ட்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

செய்யப்பட்ட கோ-அக்யூஸ்ட் சூளை என்பவர் ஜீப்பிலே இருந்து தப்பிச் சென்று வெண்ணத்தூர் கிராமத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு இந்தச் செய்தியை எடுத்துச்சொல்ல, கிராம மக்கள் எல்லாம் காவல் நிலையத்திற்கும், பிறகு மருத்துவமனைக்கு அவருடைய உடலை எடுத்துச் சென்றபொழுது மருத்துவமனையைச் சுற்றியும் முற்றுகையிட்டார்கள் என்றும், பிறகு பஸ் மறியலிலே ஈடுபட்டார்கள் என்றும், ஊர்வலத்தில் எடுத்துச்சென்றபோது, அந்த இடத்திலே ஊர்வலத்திற்கு சென்ற காவலர்கள் எல்லாம் தாக்கப்பட்டு, 4 காவலர்கள் ஆய்வாளர் உட்பட அங்கே காயம் அடைந்திருக்கிறார்கள். இப்படி, போலீஸ் கஸ்டடியிலே ஒருவர் இறந்துள்ளார் என்பது மிகத் தெட்டத் தெளிவாக தெரிகிறது. அதனாலே அந்த மூன்று ஆய்வாளர் அவர்களும், தலைமைக் காவலரும், ஜீப் டிரைவரும் ஏற்கெனவே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. ஆர்.டி.ஓ. என்கொயரியும் போடப்பட்டு இருக்கிறது என்று கூறுகிறார்கள். எத்தனையோ – சாராய வியாபாரியாக இருந்தாலும்கூட அவரை தண்டிப்பதற்கு ஜனநாயக நாட்டிலே இன்று மதுவிலக்குச் சட்டம் இருக்கிறது, குண்டர் சட்டம் என்று இருக்கிறது. இத்தனைச் சட்டங்கள் வழியாக காவல் துறையினர் நடவடிக்கை கடுமையாக எடுத்து சாராயத்தை நிச்சயமாக கட்டுப்படுத்த முடியும். ஆனால், போலீஸ் கஸ்டடியிலே இருக்கும்போது ஒருவரை தாக்கி இறந்தார் என்கிற அளவிற்கு இந்த இடத்திலே சந்தேகம் இன்று தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது எல்லாம், அதனாலே பதட்ட நிலை எழுந்து இருக்கக்கூடிய காரணத்தினாலே நான் வேண்டுவது எல்லாம் ஏற்கெனவே ஆர்.டி.ஓ. என்கொயரி போட்டிருக்கிறீர்கள். இதுவரைத் அவரை தாக்கியவர்கள் யாரையும் கைது செய்யவில்லை. தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆர்.டி.ஓ. என்கொயரி போடப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஒரு தெளிவான விளக்கம் தமிழக மக்களுக்குக் கிடைப்பதற்காக ஒரு நீதி விசாரணைக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் உத்தரவிட்டு, ஏற்கெனவே இறந்து இருக்கிறவருடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்கி, அதைப்போல காவல் துறையில் தாக்கப்பட்டவர்களுக்கும் நஷ்ட ஈடு வழங்கி, இனிமேல் லாக்கப் மரணமே இராது என்ற அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1994 ஏப்ரல் 29] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26.4.1994 அன்று மாலை ஆர்.எஸ்.மங்கலம் காவல் துறை ஆய்வாளர் திரு. ஆர். விஜயகுமார், காவலர் திரு. காசிநாதன், ஜீப் ஓட்டுநர் திரு. முருகன் ஆகியோருடன் காவல் துறை ஜீப்பில் ஏறிக்கொண்டு தேவிப்பட்டினம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முத்துசாமிபுரம் என்ற கிராமத்திற்குச் சென்று மதுவிலக்கு ரெய்ட் நடத்தியுள்ளார். மது விலக்குக் குற்றங்களில் ஈடுபட்டிருந்ததாகக் கருதப்பட்ட பெரியண்ணன் என்பவரை காவல் துறையினர் பிடித்து வைத்து, விசாரணை செய்துள்ளார்கள். அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் காவல் துறையினர் நாரல் கிராமத்திற்குச் சென்று, உலகுத்தேவர் மகன் முனியாண்டித் தேவர் என்பவரைப் பிடித்துள்ளார்கள். முனியாண்டித் தேவர் என்பவர் ஏற்கெனவே மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் தேவிப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 545/91 மற்றும் 475/93 ஆகிய இரு வழக்குகளிலும் தண்டனை அடைந்துள்ளவர். முனியாண்டித் தேவரை காவல் துறையினர் கொண்டு செல்லும்போது, அந்தக் கிராமத்தில் டீ கடை வைத்துள்ள சோலை என்பவர், முனியாண்டி ஒரு இருதய நோயாளி என்றும், அவரை விட்டுவிடும்படியும் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. ஆனால் காவல் துறை ஆய்வாளர் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்ததோடு, சோலை என்பவரையும் ஜீப்பில் ஏற்றி, அழைத்துக் கொண்டு சென்றுள்ளார். காவல் துறையினர் ஆர். எஸ். மங்கலத்திற்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது, வழியில் முனியாண்டித் தேவர் தனக்கு நெஞ்சு வலிப்பதாகக் கூறியுள்ளதாகத் தெரிகிறது. காவல் துறை ஆய்வாளர் திரு. விஜயகுமார், காவலர் திரு. காசிநாதன் இருவரும் ஆர். எஸ். மங்கலம் -தேவிப்பட்டினம் சாலைகளின் சந்திப்பில் இறங்கிக்கொண்டதாகவும், முனியாண்டித் தேவரை ஆர். எஸ். மங்கலத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லச் சொன்னதாகவும் தெரிகிறது. ஜீப் ஓட்டுநர் திரு. முருகன் ஆர். எஸ். மங்கலத்தில் உள்ள சையத் அம்மாள் கிளினிக்குக்கு முனியாண்டித் தேவரை அழைத்துச் சென்றுள்ளார். அங்கே அவரைப் பரிசோதனை செய்த மருத்துவர் முனியாண்டித் தேவர் இறந்துவிட்டதாக அறிவித்துள்ளார். ஜீப் ஓட்டுநர் முனியாண்டித் தேவர் பிரேதத்தை ஏற்றிக்கொண்டு, சோலை மற்றும் பெரியண்ணன் ஆகியோருடன் ஆர். எஸ். மங்கலம் - தேவிப்பட்டினம் கூட்டு சாலைக்குத் திரும்பச் சென்றுள்ளார். அங்கே காவல் துறை ஆய்வாளர் திரு. விஜயகுமார், மற்றும் காவலர் திரு. காசிநாதன் ஆகியோர் மீண்டும் ஜீப்பில் ஏறிக்கொண்டதாகத் தெரிகிறது. அவர்கள் பின்னர் இராமநாதபுரம் நோக்கிச் சென்றுள்ளனர். ஜீப் நாரல் கிராம சந்திப்பை

ஓட்டி சென்று கொண்டிருக்கும்போது சோலை என்பவர் ஜீப்பிலிருந்து குதித்து தப்பி ஓடியுள்ளார். இருப்பினும் காவல் துறை ஆய்வாளர் மற்றவர்களை அழைத்துக்கொண்டு, இராமநாதபுரம் பொது மருத்துவ மனைக்கு சென்றுள்ளார். தப்பி ஓடிச் சென்ற சோலை நாரல் கிராமத்திற்குச் சென்று, முனியாண்டித் தேவர் இறந்துவிட்டார் என்பதைத் தெரிவித்ததோடு, 50 பேர்களை அழைத்துக்கொண்டு, இராமநாதபுரத்திற்கு வந்துள்ளார். அந்தக் கூட்டம் அரசு மருத்துவ மனையைச் சென்றடைந்ததும், அங்கே இருந்த காவல் துறை ஆய்வாளர் விஜயகுமாரை கடுமையாகத் தாக்கி உள்ளனர். இதில் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இராமநாதபுரம் நகரக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு விரைந்து சென்று, அங்கே கூடியிருந்த கூட்டத்தை கலைத்துள்ளார்.

முனியாண்டித் தேவர் மரணம் அடைந்தது தொடர்பாக இராமநாதபுரம் நகர காவல் நிலைய குற்ற எண் 130/94-ன்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் இராமநாதபுரம் கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்னொரு வழக்கு இராமநாதபுரம் நகர காவல் நிலைய குற்ற எண் 131/94-ன்கீழ் காவல் துறை ஆய்வாளர் தாக்கப்பட்டது தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் காவல் துறை ஆய்வாளர் திரு. விஜயகுமார், காவலர் திரு. காசிநாதன், ஜீப் ஓட்டுநர் திரு. முருகன் ஆகியோர் பணியிலிருந்து தற்காலிகப் பணி நீக்கம் – சஸ்பென்ஷன் – செய்யப்பட்டுள்ளனர். இராமநாதபுரம் கோட்டாட்சித் தலைவர் முனியாண்டித் தேவர் சடலத்தைப் பார்வையிட்டு பின்பு, பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். 27.4.1994 அன்று பிரேதப்பரிசோதனை நடைபெற்றுள்ளது. பிரேதப்பரிசோதனைச் சான்றிதழ் மருத்துவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. பக்கத்து கிராமங்களைச் சேர்ந்த 800 பேர் இராமநாதபுரம் பொது மருத்துவமனைக்கு அருகில் ஒன்றாகக் கூடி காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரியுள்ளார்கள். மேலும் சாலையில் செல்லுகின்ற பேருந்துகளை மறித்து சிறிது நேரம் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளார்கள். காவல்துறை மற்றும் வருவாய்த்துறையின் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் கூறியதைத் தொடர்ந்து அந்த இடத்தை விட்டுக் கலைந்து சென்றுள்ளனர்.

முற்பகல் 11.35

முனியாண்டி தேவரின் பிரேதம் அவரது உறவினர்களிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. அவரது இறுதி ஊர்வலம் கொடைவாசல்

பிள்ளையார் கோயில் அருகே சென்றுகொண்டிருந்தபோது ஊர்வலத்தில் இருந்தவர்கள் திடீரென வன்முறையில் ஈடுபட்டு, பாதுகாப்புப் பணிக்காக ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த காவலர்கள் மீது கற்களை வீசித் தாக்கியுள்ளார்கள். இந்தக் கல்லெறிச் சம்பவத்தில் தியாகராஜன் என்கின்ற காவலருக்கு வலது தோளில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் முனியாண்டி தேவரின் சடலம் இராமநாதபுரம் இடுகாட்டில் 27.4.1994 அன்று புதைக்கப்பட்டது. தற்போது அங்கே அமைதி நிலவி வருகிறது. தேவையான காவலர்கள் பாதுகாப்புப் பணியிலும், ரோந்துப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். எனவே இது தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை. காவல் நிலை ஆணை, போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் பிரிவு 145-ன் கீழ் இராமநாதபுரம் கோட்டாட்சித் தலைவர் தனது மாஜிஸ்டேரியல் விசாரணையை முடித்து விபரமான அறிக்கையை அனுப்பிவைத்த பின்பு அதன் மீது சரியான நடவடிக்கையை எங்கள் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை – பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது என்று நீங்கள் தீர்ப்பினை வழங்கியிருக்கிறீர்கள். இதன் காரணமாக கடந்த 12 தினங்களாக அவர் சட்டமன்ற நடவடிக்கைகளிலே கலந்து கொள்ள முடியவில்லை. தொடர்ந்து உங்களுடைய தீர்ப்பினை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலே சபை நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகின்றோம். மீண்டும் கேட்கிறேன், உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மீண்டும் இந்த அவைக்கு வருகை தந்து ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்கு உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே இதுபற்றி அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். அதே நிலை இப்போதும் இருக்கிறது என்பதை திரு. டேனியல்ராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 29] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பிள்ளையார் கோயில் அருகே சென்றுகொண்டிருந்தபோது ஊர்வலத்தில் இருந்தவர்கள் திடீரென வன்முறையில் ஈடுபட்டு, பாதுகாப்புப் பணிக்காக ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த காவலர்கள் மீது கற்களை வீசித் தாக்கியுள்ளார்கள். இந்தக் கல்லெறிச் சம்பவத்தில் தியாகராஜன் என்கின்ற காவலருக்கு வலது தோளில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் முனியாண்டி தேவரின் சடலம் இராமநாதபுரம் இடுகாட்டில் 27.4.1994 அன்று புதைக்கப்பட்டது. தற்போது அங்கே அமைதி நிலவி வருகிறது. தேவையான காவலர்கள் பாதுகாப்புப் பணியிலும், ரோந்துப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். எனவே இது தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை. காவல் நிலை ஆணை, போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் பிரிவு 145-ன் கீழ் இராமநாதபுரம் கோட்டாட்சித் தலைவர் தனது மாஜிஸ்டேரியல் விசாரணையை முடித்து விபரமான அறிக்கையை அனுப்பிவைத்த பின்பு அதன் மீது சரியான நடவடிக்கையை எங்கள் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை – பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்து கொள்ளக்கூடாது என்று நீங்கள் தீர்ப்பினை வழங்கியிருக்கிறீர்கள். இதன் காரணமாக கடந்த 12 தினங்களாக அவர் சட்டமன்ற நடவடிக்கைகளிலே கலந்து கொள்ள முடியவில்லை. தொடர்ந்து உங்களுடைய தீர்ப்பினை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலே சபை நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகின்றோம். மீண்டும் கேட்கிறேன், உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மீண்டும் இந்த அவைக்கு வருகை தந்து ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்கு உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே இதுபற்றி அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். அதே நிலை இப்போதும் இருக்கிறது என்பதை திரு. டேனியல்ராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 ஏப்ரல் 29

4. கவன ஈர்ப்பு

(அ) வால்பாறை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தற்காலிகத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் தற்காலிகத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்திவிட்டது குறித்து" மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் வால்பாறை பகுதியில் சுமார் 1000 தற்காலிகத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இத்தற்காலிகத் தொழிலாளர்கள் தேயிலைத்தோட்ட சம்பந்தமான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேலும் இத்தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களுக்கு இணையான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. 27.67 தரப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் முந்தைய சின்கோனா துறையில் வேலை செய்து வந்த நிரந்தரப் பணியிலுள்ள 837 தொழிலாளர்களுக்கு வேலை வழங்கிய பிறகு மீதமுள்ள பணிகளில் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு, வேலை இருக்கும் வரையில் அநேகமாக அனைவருக்கும் வேலை அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் ஒவ்வொரு நாளும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட தற்காலிகத் தொழிலாளர்களின் விபரங்கள் பின்வருமாறு :-

1994	ஜனவரி	:	சுமார்	575 தொழிலாளர்கள்
1994	பிப்ரவரி	:	சுமார்	1,100 தொழிலாளர்கள்
1994	மார்ச்	:	சுமார்	1,300 தொழிலாளர்கள்

1994 ஏப்ரல் 29] [திரு. கு. லாரன்ஸ்]

இந்த மூன்று மாதங்களில் மட்டும் இவ்வாறு சுமார் 75,000 மனித நாட்கள் அளவிற்கு வால்பாறை பகுதியில் மட்டும் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்பட்டது. அவர்களுக்கு 3 மாதங்களில், கிடைத்த மொத்த ஊதியம் சுமார் ரூ. 20 இலட்சத்திற்கு மேற்பட்டதாகும்.

1991-92-இல் 65,000 மனித வேலை நாட்களும், 1992-93 இல் 2,32,750 மனித வேலை நாட்களும் தற்காலிக தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. ஜனவரி மாதத்தில் வேலை குறைவாக இருந்தமையால், தற்காலிக தொழிலாளர்கள் குறைந்த அளவில் அமர்த்தப்பட்டனர். அச்சூழ்நிலையில் தற்காலிக பணியாளர்களை வேறு பகுதிகளில் பணியாற்றக் கோரியபோது, தொழிலாளர்கள் ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்தனர். தற்போது சகஜ நிலை நிலவி வருகிறது. எல்லா தற்காலிக தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பளித்து, மேலும் சுற்று வட்டாரங்களிலிருந்தும் 500 தொழிலாளர்கள் வரை அதிக அளவில் வேலைக்கு தற்காலிக தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலே கூறியவாறு, இயன்றவரையில், சுழற்சி முறையில் வேலை கொடுக்கப்படுவதால் அனைத்து தற்காலிகத் தொழிலாளர்களுக்கும் போதிய பணியும், அதனால் ஊதியமும் கிடைத்து வருகிறது. இனியும் இயன்றவரையில் தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுவரும்.

கூடுதல் விபரங்கள் : முந்தைய அரசு சின்கோனாத்துறை, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் 1.4.1990 முதல் இணைக்கப்பட்டது. முந்தைய சின்கோனா வனத்துறை நிலங்களில் தேயிலைப் பயிர் சாகுபடி படிப்படியாக செய்யப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் முந்தைய சின்கோனாத்துறை நிலங்களில் 1,260.35 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இதில் வால்பாறை பகுதியில் மட்டும் 859 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வால்பாறை பகுதியில் (1994-95) மேலும் 227 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிட நடவடிக்கை மேற்கொண்டு வரப்படுகிறது.

டான்டீ வால்பாறைப் பகுதியில் 837 நிரந்தரத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு மலைத் தோட்டச் சட்டத்தின்கீழ் அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்படி இன்னும் சுமார் 4 வருடங்களில் வால்பாறை பகுதியில் இதுவரை நடப்பட்டதற்கு மேலாக சுமார் 1509.50 ஹெக்டேர்

அளவிலும், நீலகிரி நடுவட்டம் பகுதியில் சுமார் 228.15 ஹெக்டேர் அளவிலும் தேயிலை பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு 1.19 ஆட்கள் விகிதத்தில் தொழிலாளர்கள் தேவைப்படுவதாலும், தற்பொழுது இந்த விகிதத்திற்கு குறைந்த அளவிலேயே நிரந்தர தொழிலாளர்கள் இருப்பதாலும், அநேகமாக அனைத்து தற்காலிக தொழிலாளர்களுக்கும் நிரந்தரப் பணி கிடைக்க பின்னால் வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் என்பது வால்பாறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்த டான்டீ நிறுவனம் வால்பாறையினுடைய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இந்தத் தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு - கடுமையான நிதி நெருக்கடியிலும் கூட அரசு 8 கோடி, 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இதை முழுமையாகச் செய்யும் பட்சத்தில் இங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தை முற்றிலும் ஒழித்து வால்பாறையில் தன்னிறைவு அடைவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், அங்கே இருக்கக்கூடிய சிலர் அந்தத் தற்காலிகத் தொழிலாளர்களை வேலைக்கு எடுக்காமல், ஒரு குறிப்பிட்ட ஆட்களை ஒப்பந்தக்காரராக அமைத்துக்கொண்டு அந்த ஒப்பந்தக்காரர் தனக்கு வேண்டிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதால் அங்கே காலம் காலமாக உள்ள தற்காலிகத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகிறது. அதிலும் முக்கியமாக, தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு மூன்று உறுப்பினர்கள் இருக்கிறீர்கள். கேள்வி கேட்பதே எப்படி என்று தெரியாதா உங்களுக்கு ? கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: கர்ப்பிணிப் பெண்களுக்கும் அங்கே வேலையில்லாமல் இருக்கிற காரணத்தால் - அமைச்சருக்குத் தெரியாதது இல்லை, எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யதார்த்தமான சூழ்நிலையை, உண்மையான தன்மையோடு எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது இந்த விவர அறிக்கையில். விவர

1994 ஏப்ரல் 29] [திரு. கு. லாரன்ஸ்]

அறிக்கையில் ஏதாவது தவறுகள் இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை எழுத்து மூலமாகவே எடுத்து வைக்கலாம். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இன்றைக்கு அந்த சின்கோனா தொழிற்சாலை குறித்து உங்களுக்குத் தெரியும். சின்கோனாவில் உற்பத்தியாகிற மூலப் பொருள்களுக்கு இன்றைக்கு மார்கெட் இல்லாத காரணத்தால், தமிழக அரசு அதை தேயிலைத் தோட்டமாக மாற்றுகிறது. அரசாங்கத்தின் எண்ணமே இது ஒரு வாணிப கழகமாக மாற்றுவதற்காக அந்த தேயிலைத் தோட்டக் கழகத்தை நடத்தவில்லை. மாறாக அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கவும், அங்கே இருக்கிற நாட்டு மக்களுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக வைத்தே செய்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மெத்தப் பணிவோடு எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோன்று இந்த சின்கோனா தொழிற்சாலை தேயிலைத் தோட்டத்தோடு இணைக்கப்பட்ட நேரத்தில் 837 நிரந்தரத் தொழிலாளர்கள் இருந்தார்கள். அந்தத் தொழிலாளர்களை அப்படியே ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அதைத் தவிர்த்து 1000 தற்காலிக தொழிலாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு இன்றைக்கு வேலை வழங்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11.40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : சென்ற 1994 ஜனவரி மாதம் 575 தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டு இருக்கிறது. 1994 பிப்ரவரி மாதம் 1100 தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டு இருக்கிறது. 1994 மார்ச் மாதம் 1300 தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டு இருக்கிறது. 1000 தற்காலிக தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 1300 பேர்களுக்கு இன்றைக்கு வேலை வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே, இன்றைக்கு இருக்கிற அபிவிருத்தித் திட்டத்தின் பயனாக, அந்த பிளான்டேஷன் முழுமையாக இன்னும் ஒரு 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகளிலே முடிவுறும்; அப்படி முடிவுறுகிற நேரத்தில் இவர்களுக்கு மட்டுமல்ல, இதைத் தவிரவும் அங்கே இருக்கிற பல்வேறு தொழிலாளர்களுக்கும் வேலை நிரந்தரமாக வழங்குவதற்குரிய ஏற்பாட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சருடைய கோரிக்கையை ஏற்று, நான் எழுத்து மூலமாகத் தருகிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நேரடியாகத் தொடர்புகொண்டு இது குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு குழுவை அங்கே, டான்டீ-க்கு அனுப்பி, அங்குள்ள செயல்பாடுகளைக் கண்காணிக்க அரசு சிறப்பு ஆணை ஒன்றைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய அதிகாரிகள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு மேல், அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். எனவே, நாங்களே நேரடியாகத் தெரிந்து கொள்கிற எல்லாவிதமான ஏற்பாடுகளும் இருக்கிற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிந்து நாங்கள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இருந்த போதிலும் எதற்காக அதைக் குறிப்பிடுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. எனவே, அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தெரிந்து கொண்டு இதைச் செய்ய முடியும். எனவே, உண்மையிலே எந்த வகையிலேயும் அங்கே இருக்கிற தொழிலாளர்களோ, அங்கே இருக்கிற மக்களோ எந்தவிதமான ஏற்றத் தாழ்வு அற்ற முறையிலே, அவர்களுடைய கருத்துகளுக்கு எதிராகச் செயலாற்றுவது நம்முடைய நோக்கம் அல்ல. அங்கே இருக்கிற மக்களை வாழ வைப்பதே நம்முடைய கடமையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரியில் அடிப்படை வசதிகள் செய்யாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சருடைய கோரிக்கையை ஏற்று, நான் எழுத்து மூலமாகத் தருகிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நேரடியாகத் தொடர்புகொண்டு இது குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு குழுவை அங்கே, டான்டீ-க்கு அனுப்பி, அங்குள்ள செயல்பாடுகளைக் கண்காணிக்க அரசு சிறப்பு ஆணை ஒன்றைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய அதிகாரிகள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு மேல், அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். எனவே, நாங்களே நேரடியாகத் தெரிந்து கொள்கிற எல்லாவிதமான ஏற்பாடுகளும் இருக்கிற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிந்து நாங்கள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இருந்த போதிலும் எதற்காக அதைக் குறிப்பிடுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. எனவே, அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தெரிந்து கொண்டு இதைச் செய்ய முடியும். எனவே, உண்மையிலே எந்த வகையிலேயும் அங்கே இருக்கிற தொழிலாளர்களோ, அங்கே இருக்கிற மக்களோ எந்தவிதமான ஏற்றத் தாழ்வு அற்ற முறையிலே, அவர்களுடைய கருத்துகளுக்கு எதிராகச் செயலாற்றுவது நம்முடைய நோக்கம் அல்ல. அங்கே இருக்கிற மக்களை வாழ வைப்பதே நம்முடைய கடமையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரியில் அடிப்படை வசதிகள் செய்யாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

1994 ஏப்ரல் 29]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி அரசால் தற்காலிகமாக எடுத்து நடத்தப்பட்டும், குடிநீர் வசதி, பரிசோதனைச்சாலை வசதி, வகுப்பறை வசதி எதையும் செய்யாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

குடிநீர் வசதி, பரிசோதனைச்சாலை வசதி மற்றும் வகுப்பு அறை வசதிகள் கேட்டு இக்கல்லூரி வளாகத்தில் மாணவிகளிடையே நிலவும் பதட்டநிலை குறித்து எவ்வித தகவலும் இல்லை எனக் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கல்லூரி ஆசிரியைகளிடமிருந்தோ அல்லது மாணவிகளிடமிருந்தோ எந்த ஒரு புகாரும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றும், சமீபத்தில் இக்கல்லூரி மாணவிகளின் குடிநீர் வசதிக்காக கல்லூரியில் ஆழ்துளைக் கிணறு தோண்டப்பட்டுள்ளது என்றும், அக்கல்லூரியின் நிர்வாகிகளுக்கிடையே பரஸ்பரம் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், இக்கல்லூரி நிர்வாகத்தை அரசு தற்காலிகமாக ஏற்றுக்கொண்டுள்ளதால் , கூடுதல் அடிப்படை அமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க இயலாமல் உள்ளது என்றும், மேலும் கூடுதல் வசதிகள் தேவைப்படும் பட்சத்தில் அவை ஆராயப்பட்டு, தேவையாக இருந்தால் அரசின் தனி ஒப்புதல் பெற்று கவனிக்கப்படும் என்றும் கல்லூரி கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

முற்பகல் 11.45

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வேலூரில் இயங்கிவரும் தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி என்ற தனியார் கல்லூரி கடந்த 13 ஆண்டுகளாக தமிழக அரசால் எடுத்து நடத்தப்பட்டு வருகிறது. ஆனால், அது தற்காலிக நடவடிக்கை. அக்கல்லூரி தனியார் கல்லூரியாகவும் இல்லாமல், அரசு கல்லூரியாகவும் இல்லாமல், அலி போன்று கடந்த 13 ஆண்டுகளாக இருப்பதாலே, தனியாரும் அக்கல்லூரிக்கு எந்த வசதியும் செய்து கொடுக்க முன்வரவில்லை: அரசும் எந்த வசதிகளையும் செய்து தரவில்லை. அக்கல்லூரிக்கு குடிநீர் வசதி,

[திரு. சி. .ஞானசேகரன்] [1994 ஏப்ரல் 29

பரிசோதனைச்சாலை வசதி, வகுப்பறை வசதி இல்லாமல் மாணவிகள் இன்று பாவம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். டெபுட்டி டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எடுகேஷன் தான் அந்த கல்லூரிக்கு பொறுப்பாளராக இருக்கிறார். வசதி இல்லை என தகவல் இந்த விவர அறிக்கையில் கூறி இருக்கிறார்கள். ஆனால் ஏற்கெனவே அந்த இடத்திலே ஒரு ஆழ்துளைக் கிணறு போடப்பட்டு இருக்கிறது என்று நீங்கள் பதில் தந்து இருக்கிறீர்கள். அந்த மாணவிகள் எல்லாம் என்னிடமும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமும் ஏற்கெனவே கோரிக்கை வைத்த அடிப்படையில், நாங்கள் இன்று எந்த விதமான வசதியும் கல்லூரி நிரவாகமோ, கல்வித் துறையோ செய்யாத காரணத்தால், ஏற்கனவே அல்லாபுரம் பேரூராட்சிக்குச் சொல்லி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்து விட்டேன். அந்த ரோட்டிலே ஆழ்குழாய்க் கிணறு கல்லூரிக்கு வெளியே போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்பெஷல் மென்ஷன் ஏற்கனவே பண்ணினீர்கள். இதிலே கேள்விதான் கேட்க வேண்டும். அதுமாதிரி இதிலேயும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய் கிணறை அல்லாபுரம் பேரூராட்சி சார்பாக ரோட்டில் கல்லூரிக்கு வெளியே நாங்கள் போட்டிருக்கிறோம். அந்த கல்லூரிக்கு காம்பவுண்ட் சுவர் கிடையாது. ஆடிட்டோரியம் கிடையாது. வகுப்பறைகள் கிடையாது. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * எல்லாம் இங்கே வைத்திருக்கிற அறிக்கையில் இருக்கிறதா? ஏன் நீங்கள் * * என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காம்பவுண்ட் சுவர் கூட கிடையாது. ஆகவே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கையெடுத்து, இந்த மாணவிகளுக்காக வகுப்பறை வசதி, காம்பவுண்ட் வசதி, பரிசோதனை சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவற்றை முழுமையாகச் செய்து தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * (குறுக்கீடு) அதனால் அதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நான் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (சிரிப்பு) கல்லூரியைப் பற்றிப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வேலூரில் உள்ள தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி 1972-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. கல்லூரி நிர்வாகத்தின் ஆசிரியர், மாணவிகள், மற்றும் பொதுமக்கள் விரோத போக்கு காரணமாக நிர்வாகம் சீர்குலைந்து போய், அதனையடுத்து, வேலூரில் பொதுமக்கள் போராட்டம் நடத்தி, வேறு வழியில்லாமல், அரசு தற்காலிகமாக அதை ஏற்று நடத்துகிற ஒரு நிலை ஏற்பட்டது. இதை தற்காலிகமாக அரசு ஏற்றிருக்கிற காரணத்தால் அதிலே நிரந்தரமாக பணிகளைச் செய்ய நிதியொதுக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகிகளும் பல்வேறு வழக்குகளைத் தொடுத்திருக்கிறார்கள். நிர்வாகிகளுக்குள்ளேயே பரஸ்பரம் பல வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே, அரசு உடனடியாக அதிலே எதையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, 27.4.1994 அன்று கல்லூரி கல்வி இயக்குநர் இக்கல்லூரியின் குடிநீர், கழிப்பறை வசதி, கட்டிட மராமத்து ஆகியவற்றை உடனடியாக கவனிக்க வேண்டியதை குறித்து அந்தக் கல்லூரியில் முதல்வரை அழைத்து விவாதித்தார். விண்ணப்பப்படிவங்கள் மற்றும் இதர இனங்கள் மூலமாக பெறப்பட்ட தொகை ஏறத்தாழ 30,000 ரூபாய் இந்தக் கல்லூரியில் இருப்பதாக முதல்வர் தெரிவித்ததைத் தொடர்ந்து, இந்தத் தொகையைப் பயன்படுத்தி, அவசரமாக செய்யப்பட வேண்டிய தேவைகளுக்கான ஒப்புதலை வேண்டி கருத்துரு அனுப்புமாறு கல்லூரி கல்வி இயக்குநர் அவர்கள் கல்லூரி முதல்வருக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். நிரந்தர முன்னேற்றம் குறித்த பணிகளுக்கு திட்ட மதிப்பீடு செய்து, அதை தயார் செய்து அனுப்பி வைக்குமாறு கல்லூரி முதல்வர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் கல்லூரியில் உடனடியாகக் கவனிக்க வேண்டிய பணிகள் குறித்து நேரடியாக ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அனுப்பும்படி மண்டல கல்லூரி கல்வி இயக்குநரும் அறிவுறுத்துப்பட்டிருக்கிறார்.

தற்காலிகமாக இப்போது கல்லூரி அரசால் ஏற்கப்பட்டிருக்கிற காரணத்தால் முழுமையாக நிதியை இதிலே செலவிட முடியாது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1994 ஏப்ரல் 29

பின்னால் ஒருகாலத்தில் இந்தக் கல்லூரி தனியாருக்கு ஒப்படைக்கும்போது இந்தத் தொகையை வசூலிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதால் அரசு ஓரளவுக்கு தான் இதைச் செய்ய முடியும். பொதுவாக அரசு நிதியுதவி பெறுகிற கல்லூரிகளுக்கு முழுமையாக அரசு நிதியைத் தருவதில்லை. மானியமாகத் தான் தருகிற நடைமுறை இருக்கிறது. இருக்கிற வாய்ப்புகளை வைத்து அரசு அந்தக் கல்லூரிக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரே வழக்கறிஞராக இருப்பதால், அவர் பரஸ்பரம் வழக்கு தொடுத்திருக்கிற நிர்வாகிகளை அழைத்து பேசி, சமாதானம் செய்து, இந்த கல்லூரியில் அமைதி நிலவுவதற்கான ஏற்பாட்டை கடமையுணர்வோடு செய்வார் என்று இந்த அரசு நம்புகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கல்லூரியில் ஏற்கனவே இருக்கக்கூடிய 30,000 ரூபாயை உடனடியான தேவைக்காக பயன்படுத்துவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்ற நல்ல அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியை தொகுதி மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இப்போது வழக்கு இருக்கிற காரணத்தால் எதையும் செய்ய முடியாது என்று சொன்னார்கள். அந்த வழக்கு குறித்து கூட நானும் பலமுறை அந்த சகோதரர்களை அழைத்துப் பேசி பார்த்தேன். ஆனால் முடியவில்லை. இன்னும் பேசிக்கொண்டுதான் இருக்கிறேன். எப்படியாவது அதற்கான முயற்சிகளை செய்து தருகிறேன். இருந்தாலும் கூட இந்த வழக்கு எப்போது முடிவது, இந்த கல்லூரிக்கு இருக்கிற அடிப்படை தேவைகளை எப்போது தான் செய்து கொடுப்பது மாணவிகளுக்கு என்று மாபெரும் கேள்வி எழுந்திருக்கிற நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசாங்கத்திலிருந்து ஏதாவது ஒரு மானியத்தை, எதாவது, ஒரு சிறப்பு நிதியை வழங்குவீர்களானால் இந்த அடிப்படைதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வோம். ஒருவேளை அதற்கும் வழியில்லையென்று சொன்னால் நீங்கள் பணத்தை பின்னால் வசூல் செய்வது எப்படி, அதனால் செலவு செய்ய முடியாது என்று சொன்னீர்கள். நீங்கள் செலவிடுங்கள், எப்படியாவது நான் அவர்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கிறேன். இல்லையென்று சொன்னால் நான் எப்படியாவது நன்கொடையாவது வசூல் செய்து கொடுக்கிறேன். ஆகவே, ஒரு நிதியை உடனடியாக வழங்கி, அல்லல்படுகிற மாணவிகளுடைய துயரைப் போக்குகிற வகையில் வகுப்பறை வசதி, குடிநீர் வசதி, பரிசோதனைச் சாலை வசதி, காம்பவுண்ட் சுவர் வசதி ஆகிய வசதிகளை செய்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள்

1994 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

முன்வருவார்களா, சிறப்பு நிதியைத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.50

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'அலை எப்போது ஓய்வது தலை எப்போது மூழ்குவது' என்பதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே வழக்கு இருப்பதையும், சொல்லி, அதிலே அவர் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையையும் எடுத்துச்சொல்லி, அரசு அதிலே செலவிடவேண்டும், பிறகு வசூல் செய்வதற்கு நான் வழிவகை செய்கிறேன் என்று ஒரு வழக்கறிஞருடைய முறையிலே இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அரசு அப்படி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இப்போது கோடை விடுமுறை தொடங்கி இருக்கிறது. ஆகவே, இந்த கோடை விடுமுறை முடிவதற்கு முன்பாக, அந்தக் கல்லூரியிலே ஒருசில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்ற வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திரு.மா. சுந்தரதாஸ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பில் குழுவின் 126 முதல் 130 வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

1994 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

முன்வருவார்களா, சிறப்பு நிதியைத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.50

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'அலை எப்போது ஓய்வது தலை எப்போது மூழ்குவது' என்பதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே வழக்கு இருப்பதையும், சொல்லி, அதிலே அவர் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையையும் எடுத்துச்சொல்லி, அரசு அதிலே செலவிடவேண்டும், பிறகு வசூல் செய்வதற்கு நான் வழிவகை செய்கிறேன் என்று ஒரு வழக்கறிஞருடைய முறையிலே இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அரசு அப்படி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இப்போது கோடை விடுமுறை தொடங்கி இருக்கிறது. ஆகவே, இந்த கோடை விடுமுறை முடிவதற்கு முன்பாக, அந்தக் கல்லூரியிலே ஒருசில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்ற வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திரு.மா. சுந்தரதாஸ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பில் குழுவின் 126 முதல் 130 வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

1994 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

முன்வருவார்களா, சிறப்பு நிதியைத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.50

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'அலை எப்போது ஓய்வது தலை எப்போது மூழ்குவது' என்பதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே வழக்கு இருப்பதையும், சொல்லி, அதிலே அவர் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையையும் எடுத்துச்சொல்லி, அரசு அதிலே செலவிடவேண்டும், பிறகு வசூல் செய்வதற்கு நான் வழிவங்க செய்கிறேன் என்று ஒரு வழக்கறிஞருடைய முறையிலே இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அரசு அப்படி உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இப்போது கோடை விடுமுறை தொடங்கி இருக்கிறது. ஆகவே, இந்த கோடை விடுமுறை முடிவதற்கு முன்பாக, அந்தக் கல்லூரியிலே ஒருசில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்ற வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திரு.மா. சுந்தரதாஸ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பில் குழுவின் 126 முதல் 130 வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

[*1994 ஏப்ரல் 29*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட் முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்,"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்",

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட் முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்,"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்",

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7 மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 46 – செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக்கோரிக்கை எண் 46 - செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7 மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 46 – செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக்கோரிக்கை எண் 46 - செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7 மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 46 – செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக்கோரிக்கை எண் 46 - செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல தமிழ்ப் பேச்சாளர். புதிதாக அமைச்சர் பொறுப்பேற்று முதன் முதலாக தன்னுடைய செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையை அவைக்கு வைக்க இருக்கிறார். இந்த நேரத்தில் அவையின் உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும், அவருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

* **மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம்-எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.9,34,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்,"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2953, திரு. மா. சுந்தரதாஸ்.

THIRU M. SUNDARADOSS: Mr. Speaker, Sir,

`To discuss the need to convert the Film Institute into a Corporation Limited,' I move—

That a sum of Rs. 9,34,51,000/- allocated under Demand No. 46 Information and Film Technology be reduced by Rs.100/-."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2968, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பள்ளி மாணவ, மாணவியரின் இடையே கல்வித் திறன் குறைந்து வருவதால் தாலுக்கா தலைநகரங்களில் சினிமா தியேட்டர்களில் பகல் காட்சிகளைத் தடை செய்வது விடுமுறை நாட்களில் பகல் காட்சி நடைபெறச் செய்வதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,34,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

[1994 ஏப்ரல் 29]

(ஆ) கோரிக்கை எண் 50 – சுற்றுலா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50- சுற்றுலா. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.2,70,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.," எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2983, திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 11-55

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயம், சேண்பக்கம் செல்வ விநாயகர் ஆலயம், விரிஞ்சிபுரம் பார்கபந்தீஸ்வரர் ஆலயம், மகாதேவமலை சிவன் ஆலயம், வள்ளிமலை முருகன் ஆலயம், சோளிங்கர் லட்சுமி நரசிம்மசாமி ஆலயம், ரத்தினகிரி முருகன் ஆலயம், பள்ளிகொண்டா ரங்கநாதர் ஆலயம், திருவலம் சிவன் ஆலயம் ஆகியவற்றை சுற்றுலா மையங்களாக மாற்ற வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,70,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2985, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் பறவைகளும் அழகு நிறைந்த காடுகளும் நிறைந்த லக்கூனை சுற்றுலா மையமாக அமைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,70,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இருவரும் தங்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் ஒருவர் பின் ஒருவராக கூற அனுமதிக்கப் படுகிறார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவையின்முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கைக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி, அவைக் குறிப்பிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் என்னுடைய பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற கோரிக்கைகளுக்கு எனது பதிலையும், அரசு எடுக்க உள்ள முடிவுகளைப் பற்றியும் தெரிவிக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்க குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @@ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி, அவைக் குறிப்பிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென வேண்டுகிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டு, அவர்களுடைய கேள்விகளுக்கு இறுதியில் என்னுடைய பதிலையும், அரசு எடுத்திருக்கிற முடிவுகளையும் தெரிவிக்கிறேன் எனக் கூறி, அமைகிறேன்.

@ 723 முதல் 750 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 751 முதல் 769 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. விவாதத்தில் கலந்து கொள்கிற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இரு துறைகளின்மீதும் தெரிவிக்கலாம். விவாதத்தில் பங்கு பெறுகிற உறுப்பினர்கள் அனைவருடைய கருத்துக்களுக்குப் பின்னர் ஒவ்வொரு அமைச்சரும் அவருடைய பதிலுரையை இறுதியில் தெரிவிப்பார்கள். அதன் பின்னர் வாக்கெடுப்பு நடைபெறும். அந்த வகையில், பேசுகின்ற உறுப்பினர்கள் இரு துறைகளின்மீதும் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். முதலாவதாக, திரு. இரா. பழனிசாமி.

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு செய்தி-திரைப்படத் தொழில் மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தி-திரைப்படத் தொழில் மற்றும் சுற்றுலாத் துறை மக்களை வெகுவாகக் கவரக் கூடிய துறைகள். இதில் பல நல்ல அம்சங்கள் இருந்தாலும், ஒரு சில குறைகளை நிவர்த்தி செய்தால் பொதுமக்களுக்கும், அரசுக்கும், தொழில் புரிவோருக்கும் ஏதுவாக இருக்குமெனக் கருதி எனது உரையைத் துவங்குகின்றேன். தமிழ்நாட்டில் அரசுக்கும், ஊராட்சிகளுக்கும், நகராட்சி, மாநகராட்சிகளுக்கும் பெருத்த வருவாயை ஈட்டித் தரும் தொழில் திரைப்படத் தொழில். இத்தொழில் அழியாமல் பார்த்துக் கொள்வது அரசின் கடமையாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சினிமாத் தொழிலை நன்கு அறிந்தவர்கள். இந்த அரசு வீடியோ தியேட்டர்களுக்கு உரிமம் வழங்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் ஒரு வீடியோ தியேட்டருக்கு உரிமம் வழங்கி அரசு ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது. வீடியோ தியேட்டருக்கு உரிமம் வழங்கினால் திரைப்படத் தொழில் அழிந்துவிடும் என்பதற்கு ஒரு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் 2,485 திரை அரங்குகள் உள்ளன. அதில் திரைப்படத்தைத் திரையிடும்போது படத் தயாரிப்பாளர்களுக்கும், வினியோகஸ்தர்களுக்கும் சுமார் முக்கால் கோடி ரூபாய் தினசரி வருமானமாக ஈட்டித் தரப்படுகின்றது. அந்த வீடியோ தியேட்டர் மூலம் ஒரு நாளைக்கு ஒரு தியேட்டரின் மூலம் கேசட் போடும்போது ரூ.10 தான் கிடைக்கிறது. வீடியோ தியேட்டர் மூலம் அரசுக்கு கேளிக்கை வரி கிடைக்குமே தவிர, திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கோ, வினியோகஸ்தர்களுக்கோ

வருமானம் கிடைக்க வாய்ப்பில்லை. வீடியோ தியேட்டருக்கு உரிமம் கொடுப்பது நீடித்தால் சினிமாத் தொழில் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாகிவிடும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

திரைப்படத் தொழிலைக் கடுமையாகப் பாதிப்பது வீடியோ திருட்டு. இதைத் தடுப்பதற்கு அரசு பல திட்டங்களை, நெறிமுறைகளை வகுத்திருந்தாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. தயாரிக்கப்படுகின்ற 90% படங்களுடைய திருட்டு வீடியோ கேஸட் படம் திரையிடும் அன்றே வெளிவந்துவிடுகிறது. இன்றைக்கு அரசு வெறும் சட்டத்தைப் போட்டுவிட்டால் போதாது. இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டும். சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளருக்கும், மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தகுந்த கட்டளை பிறப்பித்திருப்பதாக, தாங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 1993-94 ஆம் ஆண்டில் வீடியோ திருட்டு மூலம் எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? வீடியோ திருட்டைக் கண்டுபிடித்து காவல் துறைக்கு தெரிவித்தாலும் எந்தப் பிரிவின்கீழ் வழக்குத் தொடர்வது என்று காவல் துறையினருக்குத் தெரியவில்லை. தாங்கள் அனுமதித்துள்ள ஒரு வீடியோ தியேட்டர் இயங்கிக் கொண்டிருக்கின்ற கரியாமங்கலத்தில் திருட்டு வீடியோ படம் திரையிடுவதாக பல புகார்கள் கூறப்பட்டு காவல் துறையினரும் அந்தக் கேஸட்டை பறிமுதல் செய்து எந்தப் பிரிவின்கீழ் வழக்குத் தொடர்வது என்று தெரியாமலேயே அந்த வழக்கைக் கை விட்டுவிட்டார்கள். இந்த நிலை நீடித்தால் வீடியோ திருட்டை அரசு எவ்வாறு தடுக்க முடியும் என்பதை வினாவாக எழுப்புகிறேன். மேலும் இன்றைய நிலையில் கேபிள் டி.வி., வீடியோ திருட்டு இவைகள் எல்லாம் தமிழ்நாட்டில் பெருகிவிட்ட காரணத்தால் சினிமா தியேட்டர்களுக்குப் போதிய வருமானம் இல்லாமல், சினிமா தியேட்டர் உரிமையாளர்கள் இலட்சக்கணக்கான ரூபாய் முதலீடு போட்டு மிகவும் குறைந்த அளவு வருமானத்தைத்தான் பெற முடிகிறது. மாநகராட்சி, நகராட்சிகளில் இயங்கும் தியேட்டர்களுக்கு சர்வீஸ் சார்ஜாக ஒரு டிக்கெட்டிற்கு 50 பைசா பெற்றுக் கொள்ளவும், ஊராட்சிகளில் உள்ள தியேட்டர்களுக்கு சர்வீஸ் சார்ஜாக 25 பைசா பெற்றுக் கொள்ளவும் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நிலையில் தொழில் நுட்பத் துறையில் நவீன முன்னேற்றம் காரணமாக கேபிள் டி.வி.

தோன்றியுள்ளது. இதற்கு அரசு உரிமம் வழங்க 40% வரி விதித்துள்ளது. வரி விதிப்பை அரசு எவ்வாறு செயல்படுத்தப் போகிறது என்பது அமைச்சர் அவர்களது பதிலுரையில் தெளிவாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். கேபிள் டி.வி. நடத்துபவர்கள் தவறு செய்யாமல் இருப்பதற்கு அரசு சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். அரசு, வழிமுறைகள் மற்றும் ஒழுங்குபடுத்தும் முறைகளைக் கையாளாவிட்டால் கேபிள் டி.வி. மூலம் வருகின்ற வருமானம் அரசுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளிக்கும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அரசின் செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் கொள்கை விளக்கக் குறிப்பில் மொத்தப் பக்கங்கள் 28 உள்ளன. அதில் பக்கம் 13-ல் தமிழ்நாட்டில் திரைப்பட அரங்குகள் 2,800 உள்ளன என்றும், அதே கொள்கை விளக்கக் குறிப்பின் பக்கம் 27-ல் தமிழ்நாட்டில் திரைப்பட அரங்குகள் 2,485 உள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எது உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தற்போது அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மட்டும் 50% ரயில்வே கட்டணச் சலுகை, தொலைபேசி கொடுப்பதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை பகுதிநேர நிருபர்களுக்கும் பெற்றுத்தர அரசு முன்வரவேண்டும். அதேபோல பகுதிநேர நிருபர்களுக்கும் அரசு ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை இருந்துவந்த அரசுகளால் பத்திரிகை விற்பனைக்கு தகுந்தபடி அரசு சார்பில் விளம்பரங்கள் தரப்பட்டு வந்தன. ஆனால் இந்த அரசில் அந்த விதிமுறைகளை மீறி, ஆளும் கட்சிக்குத் துணை போகும் பத்திரிகைகளுக்கு மட்டுமே முழுக்க முழுக்க அரசு விளம்பரம் தரப்படுகிறது. இது முற்றிலும் தவறான நடவடிக்கையாகும். எனவே அனைத்துப் பத்திரிகைகளுக்கும் முன்புபோல் பாரபட்சமின்றி விற்பனை அடிப்படையில் அரசு விளம்பரங்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் போஸ்டர்கள் ஒட்ட தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. தடைச் சட்டத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு இந்த மாமன்றத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உள்ளது. அரசுப் போக்குவரத்துக்களில் போஸ்டர்கள் ஒட்டக்கூடாது என்று சட்டம் இயற்றியிருக்கிறீர்கள். சட்டம் இயற்றிய நாளிலிருந்து பார்க்கிறேன்.** (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, ** என்று சொல்கிறீர்கள். நாங்களும்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த மாதிரி ** ஒன்றும் இல்லை. இருந்தாலும்கூட நீங்கள் அப்படி ஸ்பெஸிபிக்காக இந்த இடத்திலே * * என்று அந்த வண்டி நம்பர் எல்லாம் வேண்டுமானால் குறித்துக் கொடுங்கள். அதன்மேல் நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம். அதற்காக ஒட்டுமொத்தமாக ** என்று குறிப்பிடுவது தவறு. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 12-05

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்களில் நிறைய போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்களில் போஸ்டர்கள் ஒட்டியதற்காக எத்தனை தவறுகள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள், எத்தனை அச்சகங்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் முக்கிய சுற்றுலா மையமான பூம்புகாரில் கலைக் கூடங்கள், கண்ணகி சிலை கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. கடல் பெருகுகின்றதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 அடி முன்னேறிக் கொண்டே வருகிறது. அதனால் கடல் அரிப்பால் கண்ணகி சிலையின் அடித்தளம் பாதிக்கப்படுகிறது. இந்த நிலை நீடித்தால் பூம்புகாரிலுள்ள

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்ணகி சிலையைப் பொறுத்தவரையில் கடல் அரிப்பு ஏற்படுகிறபோது அந்தச் சிலை பாதிக்கப்படும் என்ற அளவில் இருக்கிறது என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசு இதுகுறித்து உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்தச் சிலையை சிறிது தூரத்திற்கு முன்னால் கொண்டு வந்து வைக்கவேண்டுமென்று அரசுக்கு அறிக்கை அளித்தார்கள். ஆனால் அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. பூராசாமி அவர்கள் அந்த சிலையை அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுகோளாக புராதனப்படி அந்த இடத்திலேயே

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வைத்துப் பாதுகாக்க வேண்டுமென்று கூறியதன் அடிப்படையில், அரசு மிக விரிவான ஒரு ஆய்வினை மேற்கொள்ளச் சொல்லி அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மீண்டும் ஒரு விரிவான ஆய்வு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று கேட்டுள்ளோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இந்த அரசு வேண்டிய பத்திரிகை, வேண்டாத பத்திரிகை என்று கருதி அந்த அடிப்படையில் விளம்பரங்களைக் கொடுத்து வருகிறது என்று இங்கே சுட்டிக் காட்டினார்கள். நான் ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது டிசம்பர் மாதம் 8-ஆம் தேதி புதுடெல்லியில் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகிறபோது அரசாங்க விளம்பரச் சாதனங்களை அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பயன்படுத்த முடியுமே தவிர, அரசாங்கத்தினுடைய கொள்கைகளைக் கடுமையாக விமர்சிப்பவர்களுக்கு அல்ல என்பதை அன்றைக்குத் தெரிவித்து இருக்கிறார்கள், அன்றைய பிரதமர். இன்னும் சொன்னார்-மக்கள் ஒரு அரசை, அவர்களுடைய கொள்கைகளை அமல் நடத்துவதற்காகத் தேர்ந்தெடுத்து இருக்கும்போது அந்த மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யக்கூடிய இந்த விளம்பரங்கள் அந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்ற முறையில் இருக்க வேண்டுமென்று அவர்கள் செல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே கொள்கையை, அவர் சொன்னதை இந்த அரசு பின்பற்றவில்லை. இழித்தும், பழித்தும் வேண்டும் என்றே செய்திகளை வெளியிடுகின்ற பத்திரிகைகளை ஒதுக்கிவிட்டு மற்ற பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தருகிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை. அந்த அடிப்படையையும் நாங்கள் பின்பற்றவில்லை. ஆகவே, பத்திக்கைகளின் எண்ணிக்கையை வைத்து விளம்பரம் கொடுக்கக்கூடாது. சிறிய பத்திரிகைகளை ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் அரசாங்கம் சார்பில் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி, நான் சொல்வது எல்லாம், கடந்த கால ஆட்சியிலே ஒரு பத்திரிகை வெளியிடப்படுகிறது என்றால் அந்தப் பத்திரிகை எவ்வளவு பிரதிகள் அச்சிடப்படுகின்றனவோ, அதற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்குக் கட்டணம் வழங்கப்பட்டது. ஆனால் இன்று ஃபிளாட் ரேட்டாக வழங்கப்படுகிறது என்பதைத் தான் சுட்டிக்காட்டுகிறேனே தவிர.... (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறிய பத்திரிகைகள் வைத்து இருப்பவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்; உற்சாகப்படுத்த வேண்டும் என்கின்ற நல்ல எண்ணம் எங்களுக்கு இருக்கிற காரணத்தால்தான் அந்த எண்ணத்தின் அடிப்பிடையில்தான் சிறிய பத்திரிகைகளுக்கு இந்த அரசு விளம்பரங்கள் கொடுக்கிறது.

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா சிறிய பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுத்து ஊக்கப்படுத்துவார்களா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கிறபோது விளம்பரக் கட்டணம் அதிகம். இன்றைக்கு "ஹிந்து" பத்திரிகையை எடுத்துக்கொண்டால் ஒரு பத்திக்கு 300 ரூபாய் வாங்குகிறார்கள். ஆனால் சிறிய பத்திரிகைகளில் அப்படி அல்ல. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன.

1994 ஏப்ரல் 29]

பிற்பகல் 12-10

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான விளக்கத்தைத் தரவில்லை. நான் கேட்பது, எல்லா சிறிய பத்திரிகைகளுக்கும் உங்களுடைய விளம்பரத்தை அளிப்பீர்களா என்றுதான் கேட்கிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறிய பத்திரிகைகளுடைய பெயர்கள், அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இருக்குமேயானால், அந்தத் தகுதி இருக்குமேயானால், அத்தனை பத்திரிகைகளுக்கும், அத்தனை சிறிய பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரிகைகளை அங்கீகரிப்பதற்கு என்ன வழிமுறைகள் வைத்திருக்கிறீர்கள்; என்ன சட்ட திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். பதிலுரையிலேகூட சொல்லட்டும். அதேபோல, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கண்ணகி சிலை வைப்பதைப் பற்றி இங்கே சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளை அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் சேர்ப்பதற்கு என்ன நிபந்தனைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஒரு விண்ணப்ப மனுவைக் கொடுத்தால், அதுகுறித்துப் பரிசீலிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, நீங்கள் பேசுகின்றபோது, ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொன்றாகப் பதில் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் கேட்கின்றபொழுது, இறுதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே விளக்கங்களைத் தெரிவிப்பார்களா என்று கேட்டால் நலமாக இருக்கும்.

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சாதாரணமாகத்தான் பேசிக்கொண்டு இருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர்கள் இடையில் குறுக்கிடும்பொழுது நானும் சொல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேனே தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, இறுதியாகச் சொல்வதற்கு எவ்வளவோ டைம் இருக்கிறது. அதில் அவர்கள், விளக்கமாக, நான் சொல்கின்ற விவரங்களுக்கு, நான் எழுப்புகின்ற வினாக்களுக்குப் பதில் அளிக்கலாம். அவர்கள் உடனுக்குடன் இங்கே எழுந்து, சாதாரணப் பிரச்சினைகளுக்குக் கூட மத்தியிலே இடைமறிப்பதால்தான் நானும் சொல்ல வேண்டிய் கட்டாயத்தில் இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தகைய கோரிக்கையை வைத்தாலும், எத்தகைய விளக்கங்களைக் கேட்டாலும், உடனுக்குடன் பதில் சொல்லுகின்ற ஆற்றல் படைத்தவர்கள் அமைச்சர்களாக இருக்கின்ற காரணத்தினாலேதான் நாங்கள் உடனுக்குடன் பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, நீங்கள் கேள்வி கேட்பதைப் பார்த்ததில், நீங்கள் கேள்வியைக் கேட்டுவிட்டு, திரும்பவும் நிறுத்தி விடுகிறீர்கள். நீங்கள் அமைச்சருடைய பதிலை எதிர்பார்த்து இருப்பதைப்போல் நின்று கொண்டு இருக்கின்ற காரணத்தினாலேதான் மாண்புமிகு அமைச்சர்கள் உடனடியாகப் பதில் சொல்லுகின்றார்கள். எனவே, நீங்கள் தொடர்ச்சியாகப் பேசினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இறுதியிலே தன்னுடைய பதிலுரையைத் தருவார்கள். திரு. பழனிசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இறுதியிலே அமைச்சர்கள் எல்லாம் பதில் அளித்தால் நல்லது என்று சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் இறுதியிலே இருப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே அவர்களுக்கெல்லாம் நாங்கள் உடனுக்குடனே பதில் தெரிவித்தால், இந்த அரசினுடைய செயல்பாடுகள் அவர்களுக்குப் புரியும் எனக் கருதுவதால் தான் உடனடியாக நாங்கள் பதில் தெரிவிக்கிறோம். (குறுக்கீடுகள்)

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மூன்று காங்கிரஸ் உறுப்பினர்களும் நின்றுகொண்டு பேசிக் கொண்டு இருப்பது நல்லதல்ல. (குறுக்கீடுகள்) எத்தனை அமைச்சர்கள் எழுந்து பதில் சொல்கிறார்கள் என்பதையெல்லாம் சொல்லக் கூடாது. அது அவர்களுடைய உரிமை. (குறுக்கீடுகள்) உங்களுடைய உரிமையைப் பற்றி அவர் ஒன்றும் குறை சொல்லவில்லை. ஆனால், நீங்கள் மூன்று பேரும் ஒரே சமயத்தில் எழுந்து நின்றுகொண்டு பேசுவது, உங்களுடைய உரிமை அல்ல. இது அவைத் தலைவர் கண்டிக்க வேண்டிய விஷயம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டேனியல் ராஜ், நீங்களும் மற்ற இருவரும் உட்கார வேண்டும். (குறுக்கீடு) சரி. திரு. டேனியல்ராஜ், நீங்கள் மட்டும் பேசுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் சபையிலே இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டினைச் சொன்னார்கள். அது எங்களுடைய உரிமையைப் பொறுத்தது. எங்களுடைய உரிமையிலே அனாவசியமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிடுவதாக நாங்கள் கருதுகின்றோம். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டேனியல்ராஜ், அப்படியில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து, நீங்கள் தினந்தோறும் வெளிநடப்பு என்ற பெயரிலே ஜனநாயகக் கடமைகளை மறந்து வெளியே சென்று விடுகிறீர்கள் என்பதைத் தான் சொன்னார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உரிமை, எப்படி வேண்டுமானாலும் அவர்கள் செய்யலாம். அதைத்தான் நாட்டு மக்கள் தெரிந்து கொண்டு இருக்கிறார்களே. அவர்கள், நாள்தோறும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது, உடனுக்குடன் பதில் அளிக்க வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுவதற்குக் காரணம்- நீங்கள் அப்பொழுதே தெரிந்து கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆசையின் காரணமாகத்தான் உங்களிடத்திலே சொன்னார்களே தவிர, நீங்கள் இருப்பதும், இருப்பதில்லை என்பதும், நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதும், இந்தத் தமிழ் நாட்டிற்கே நன்றாகத் தெரியும்; இந்தியாவிற்கே தெரியும்.

பிற்பகல் 12.15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் உரிமையைப் பற்றிப் பேசினார்கள். நாங்கள் கொஞ்சம் கடம்மயைப் பற்றிப் பேசுகிறோம். ஆகவே, அந்தக் கடமை உணர்வின் காரணமாக, எங்கள் பதிலைக் கேட்பதற்காக நீங்கள் இருக்க வேண்டுமே என்கிற ஆசையின் காரணமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்பதாக இதை நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள், தங்கள் உரிமையைப் பற்றி இங்கே பேசினார்கள். நாங்கள் அவர்களிடம் கேட்பதெல்லாம், இந்தச் சட்டமன்றத்திலே கேள்விகளை எழுப்பி விட்டு உறுப்பினர்கள் இறுதியிலே இல்லை என்று சொன்னால் எப்படி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் இந்த நாட்டு மக்களினுடைய பிரச்சினையிலே உறுப்பினர்கள் கேள்வியைக் கேட்டுவிட்டு வெளியே செல்கிறபொழுதுதான் அவர்கள் அந்தப் பதிலைப் பெற்றுச் சென்றால் அவர்கள் இடையிலேயே வெளியே கூற முடியும். அந்த நிலையிலே இல்லாமல் அவர்கள் இடையிலேயே வெளியே சென்று விடுகிறார்கள். ஆகவேதான் ஆற்றல் மிகுந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒவ்வொரு துறையிலும் எடுக்கிற நடவடிக்கைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வியெழுப்புகிறபோதே நாங்கள் உடனுக்குடன் பதில் சொல்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சரவர்கள் பேசுகின்றபோது, உங்களையும் எங்களையும் நாட்டு மக்களுக்குத் தெரியும்

என்று சொன்னார்கள். நிச்சயமாக உங்களையும், எங்களையும் நாட்டு மக்களுக்குத் தெரியும்.

இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சி பீடத்திலேயிருந்த நேரத்திலே நாங்கள் செய்த சாதனைகளைச் சொல்லாமலிருந்தோம். ஆனால், உங்களுடைய ஆட்சியிலே நீங்கள் சொல்லாததையெல்லாம் (குறுக்கீடு) செய்யாததையெல்லாம் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) செய்யாததையெல்லாம் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, நாட்டுமக்களே. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டேனியல்ராஜ், மிகுந்த குழப்பத்தில் இருக்கிறீர்கள்; வேறொன்றுமில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மக்கள் காலப்போக்கிலே தீர்ப்பினை வழங்குவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இருபதாண்டுக் காலம் நீங்கள் எப்படி ஆட்சி நடத்தினீர்கள் என்பதற்குப் பிறகு தொடர்ந்து நீங்கள் ஆட்சிக்கே வர முடியாது என்கின்ற மரண அடியைத் தமிழக மக்கள்தான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்களுக்கும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தருகிறேன். அடுத்துத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இரவு ஒரு 12 மணிக்காவது விடுவீர்களா அல்லது அதற்கு மேலே போகுமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றுமில்லாத ஒரு பிரச்சினையைச் சுற்றிச் சுற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே, இது மிகக் கஷ்டமாக இருக்கிறது. அதை விட்டுவிட்டு மாண்புமிகு பழனிசாமி அவர்கள் நேரடியாகப் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டு போனால் நல்லது; கேள்வியே

பதிலை எதிர்பார்ப்பதுபோலச் சொன்னால், எழுந்து பதில் சொல்ல வேண்டிய அவசியம் வருகிறது. இல்லை என்றால், அமைச்சர்கள் சொல்லவில்லை என்று வருகிறது. எனவே, பிரச்சினைகளைச் சொல்லி விட்டால் மொத்தமாகச் சொல்லுவார்கள். தினந்தோறும் பத்து மணிக்கு முடிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இதிலே வேறு பிரச்சினைகளுக்குப் போக வேண்டாம். இந்த மானியத்திலே மட்டும் பேசலாம்.

டாக்டர் அ. செல்லக்குமார்: கேள்வியை மட்டும் கேட்டு விடுகிறார்கள், பதில் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, டாக்டர் அ. செல்லக்குமார், சீக்கிரத்தில் கூறி முடியுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீங்கள் இருபதாண்டுக் காலம் எப்படியிருந்தீர்கள் என்பது தெரியும் என்று சொன்னார்கள். உண்மைதான். நாங்கள் இந்த நாட்டு மக்களுக்கு கக்கனைத் தந்திருக்கின்றோம்; இராமையாவைத் தந்திருக்கின்றோம், பரமேஸ்வரன் போன்று நீதியோடு, நேர்மையோடு கைசுத்தி உள்ள அமைச்சர்களைத் தமிழகத்திற்குத் தந்திருக்கின்றோம். தமிழக மக்கள் வெற்றியைத் தந்தார்களா, இல்லையா, எங்களுக்குத் தெரியாது. நேர்மையான ஆட்சியை தமிழகத்திற்குத் தந்திருக்கிறோம் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறபொழுது, அவர்கள் இருபதாண்டுக் காலம் எங்களுடைய ஆட்சியை எப்படிச் செய்தோம் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதை எப்படிச் செய்தார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். அதற்குப்பிறகு நேர்மையான ஆட்சியா, இல்லையா என்று குறிப்பிட்டார்கள். நேர்மையான ஆட்சி என்று சொன்னால் நீங்களே மீண்டும் இந்தப் பகுதிக்கு

வந்திருக்கலாம். நேர்மை உங்களிடத்தில் இல்லை என்பதைத்தான் நாட்டுமக்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு தேர்தல் வருகிறபொழுது எங்களோடு ஒட்டிக்கொண்டுதான் இங்கே சட்டமன்றத்திலே அமர்ந்து கொண்டிருக்கிறீர்களே தவிர, புரட்சித் தலைவி அவர்களுடைய தயவு இல்லை என்று சொன்னால், நீங்கள் 61 சட்டமன்ற உறுப்பினர்கள் என்றைக்குமே இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும், இறுதியாக. (குறுக்கீடு) இல்லை, இந்த விவாதம் இதோடு போதும். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு உங்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தேன். நீங்களும் அதிகநேரம் பேசியிருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப இதைப் பேசிக் கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை இது ஒன்றும் அரசியல் மேடை அல்ல. நீங்கள் சொல்வதற்கு அமைச்சர்கள் சொல்வது, அமைச்சர்களுக்கு நீங்கள் பதில் சொல்வது, இது விவாத மேடை அல்ல. திரு. பழனிசாமி. (குறுக்கீடுகள்) எல்லோரும் அமர வேண்டும். திரு. பழனிசாமி பேசலாம். திரு. பழனிசாமி, பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-20

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் எங்கேயோ போய்க் கொண்டுள்ளது. கடந்த காலத்தைத் திருப்பிப் பாருங்கள். காங்கிரஸ்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, சரியாக 12-21-க்கு பேசி முடித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் அனாவசியமாக வேறு விஷயங்களுக்குச் செல்ல வேண்டாம்.

திரு. இரா. பழனிசாமி: கடந்த காலத்தைத் திருப்பிப் பாருங்கள். (குறுக்கீடு) காங்கிரஸினுடைய துணை இல்லாமல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் பேசுவதற்கு வேறு எந்தக் கருத்தும் இல்லை என்று தெரிவித்து, வீண் விவாதத்திற்கு இடமளிக்காவகையில், அடுத்ததாக திரு. க. பழனிசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) வேண்டாம்; அதிலே விவாதம் வேண்டாம். திரு. க. பழனிசாமி.

***திரு. க. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு

இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுக்கும், பொதுமக்களுக்கும் பாலமாக விளங்குகிற துறை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இங்கே எனக்கு முன்னாலே பேசிய திரு. பழனிசாமி அவர்கள், வேண்டிய பத்திரிகை, வேண்டாத பத்திரிகை என்று பார்த்து விளம்பரம் கொடுப்பதாகச் சொன்னார். மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கிற தொலைக்காட்சி நிலையம்தான் இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களிலே, வேண்டிய மாநிலம், வேண்டாத மாநிலம் என்பதைப்போல, தமிழக மாநிலத்தினுடைய நலத் திட்டங்களையும், புரட்சித் தலைவியினுடைய நலப் பணிகளையும், இன்று புறக்கணித்துக் கொண்டிருக்கிற நிலையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல; புரட்சித் தலைவி அவர்கள் ஜீவ நதியான காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே உண்ணாவிரதம் இருந்தபோது, அதைத் தொலைக்காட்சியினர் சரியாகக் காட்டவில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, நம்முடைய தமிழகத்தினுடைய அரசின் நலத் திட்டங்களையும், பணிகளையும் தொலைக்காட்சி மூலமாகத் தெரிவிப்பதற்காக, தனி அலை வரிசை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அரசின் சாதனைகள், மக்கள் நலப் பணிகள், திட்டங்கள் மற்றும் வேளாண்மை பற்றிய நிகழ்ச்சிகள், குடும்ப நலன், காடு வளர்ப்பு, சிறு சேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, மதுவிலக்கு, சாலை விபத்துப் பாதுகாப்பு போன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் காண்பதற்காக, தொலைக்காட்சியின் மூலமாகத் தெளிவாக மக்களுக்குத் தெரிவிப்பதற்காக தனி அலை வரிசை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பாராளுமன்றக் கூட்டத்திலே கேள்வி நேரத்தின்போது நடைபெறும் நடவடிக்கைகளைக் காண்பதற்காக தொலைக்காட்சி மூலமாக நேரடியாக ஒளிபரப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள்; அதுபோல, மாநில அரசும், நேரடியாக மக்கள் தொடர்பு கொண்ட ஒரு அரசாக இருக்கிற காரணத்தினால், இங்கேயும், தமிழக சட்டப் பேரவையின் கேள்வி நேரத்தின்போது நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில்

காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, சுமார் ரூ.40 ஆயிரம் மானியமாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், திரைப்பட நகரம் ஒன்று 14.94 கோடி ரூபாய் செலவிலே இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு இந்த ஆண்டு முதல், ஒரு திரைப்படத்திற்கு ரூ. 3 இலட்சம் வீதம் சுமார் 75 திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்குவதாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது பல வாரப் பத்திரிகைகள், மஞ்சள் பத்திரிகைகள் எல்லாம் அரசியலில் உயர்ந்த பதவிகளில் உள்ளவர்களை எல்லாம் தரக்குறைவாக விமர்சிக்கிற அளவிலே, கேலியாக, இழிவாக சித்தரிக்கிற அளவிலே வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன; அவற்றையெல்லாம் கட்டுப்படுத்துகிற வகையிலே வழிவகைகளைச் செய்து, அந்தப் பத்திரிகைகளை வெளியிடாத வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தற்போது வரும் திரைப்படங்களையும் அதைப்போலத்தான் உயர்ந்த பதவிகளில், அரசியல் பதவிகளில் உள்ளவர்களை எல்லாம் இழிவாகவும், கொச்சைப்படுத்துகிற வகையிலும் எடுக்கிறார்கள்; அவற்றையும் கட்டுப்படுத்துகிற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல; இப்படிப்பட்ட படங்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறபோதும், தொலைக்காட்சி மூலமாக, பல்வேறு வெளிநாடுகளிலும்

அந்த நிகழ்ச்சிகள் காட்டப்படுகிற காரணத்தினாலும், அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் தடுக்கிற விதத்திலே அரசாங்கம் தணிக்கை செய்து அந்தப் படங்களை வெளியிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பொருட்காட்சி மூலமாக பல்வேறு சிறப்புமிக்க அம்சங்களை இன்று அரசு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமது ஆட்சியின் நலத் திட்டங்கள், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் போன்றவற்றையெல்லாம் கூறுகிற விதத்திலே, இன்று பொருட்காட்சியின் வாயிலாக அவை காட்டப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேலம் மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு 'ஃபேக்ஸ்' வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அறிவிக்கிற செய்திகளை உடனடியாகத் தெரிந்து கொள்வதற்காக 'ஃபேக்ஸ்'-ன் வாயிலாகத் தெரிந்து கொள்வதற்காக, சேலத்திற்கு 'ஃபேக்ஸ்' வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

இப்பொழுது 30, 40 இலட்சம் செலவிலே திரையரங்குகள் எல்லாம் உருவாக்கப்படுகின்றன. ஆனாலும் கூட, கேபிள் டி.வி. மூலமாக குறைந்த செலவிலே காண்பிக்கின்ற காரணத்தினாலே, அவர்களுக்குப் பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. அதுமட்டுமெல்லாமல், அரசுக்கும் கேளிக்கை வரி குறைந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேபிள் டி.வி. மூலமாகக் காண்பிக்கின்ற காட்சிகளை முறைப்படுத்த வேண்டும். மாலையிலே 2 முதல் 5 மணி வரையிலும், இரவில் 8 முதல் 11 மணி வரையிலும் காண்பிக்கின்ற அளவில் வரன்முறைப்படுத்த வேண்டும். ஏனென்றால், தமிழகத்திலே வாழ்கின்ற மாணவ மாணவியர்கள் எல்லாம் எந்த நேரத்திலும் கேபிள் டி.வி. மூலமாக படத்தைக் காண்பிக்கின்றபோது அவர்கள் படிப்பு வீணாகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலே இதை வரன்முறைப்படுத்த வேண்டும். அதேபோல் பல திரையரங்குகளிலே சுகாதார வசதி குன்றியிருக்கிறது. அதைச் சரிபடுத்த வேண்டும். அதிகமானத் திரையரங்குகளில் கழிவறைகள் சுத்தமாக வைக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட திரையரங்குகளைக் கண்டறிந்து அதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29] [திரு. க. பழனிசாமி]

அதேபோல், சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே ஆட்சி பீடத்திலே அமர்ந்த பிறகுதான், தமிழகத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் அமைதி இல்லாமல் இருக்கின்ற இந்த நேரத்தில் தமிழகம் மட்டும் அமைதிப் பூங்காவாக விளங்குவதற்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான் வெளிநாட்டுப் பயணிகள், உள்நாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு அதிகமான அளவில் வருகிறார்கள். குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1991-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 3.30 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகள் வந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல, 1992-ஆம் ஆண்டு 25.3 சதவீதம் அதிகமாக வந்துள்ளதாகவும், 1993-ஆம் ஆண்டு அதைவிட அதிகமாக 9.3 சதவீதம் வந்துள்ளதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்ததன் காரணமாகத் தான் இப்படி அதிகமான பயணிகள் தமிழகத்திற்கு வந்து அவர்களுடைய பொழுது போக்கிற்காக வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்லாமல், சுற்றுலாத் துறை மேலும் சிறப்பாக அமைகின்ற விதத்திலே–நாமக்கல் ஆஞ்சநேயர் திருக்கோவில் பிரசத்திபெற்ற திருக்கோவில். வட மாநிலங்களிலிருந்து அதிகமானவர்கள் இந்தத் திருக்கோவிலுக்கு வருகிறார்கள். ஆகவே, இதைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே ஒரு விடுதி கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மேட்டூர் டேம், தமிழகத்தினுடைய மிகப் பெரிய டேம்-ஆக இருந்து கொண்டிருக்கிறது. இங்கே பிருந்தாவனம் போன்று–அதாவது மைசூர் கிருஷ்ணராஜ சாகர் டேமிலுள்ள பிருந்தாவன் பூங்கா போன்று இங்கேயும் பூங்காக்கள், நீச்சல் குளங்கள் எல்லாம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஏற்காடு மலை. இது ஒரு எழில்மிகு மலையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை சுற்றுலாத் துறை ஏற்றுக்கொண்டு, அங்கே கோடை விழா நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மற்றப் பகுதிகளில்

எல்லாம் இப்பொழுது கோடை விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுற்றுலாத் துறை மூலமாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இந்த ஏற்காடு மலையிலும் கோடை விழாவை சுற்றுலாத் துறை எடுத்துக்கொண்டு, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். அதுபோல, ஏற்காடு ஏரியைப் புதுப்பிப்பதற்காக ரூ.3.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை அதிகப்படுத்தி, இந்த ஏரியை அழகு வாய்ந்த ஏரியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கொல்லிமலையிலே ஒரு அருவி-ஆகாய கங்கை தீர்த்த அருவி இருக்கிறது. இது 200 அடி உயரத்திலே இருந்து விழுகிறது. இதைச் சரியான முறையிலே பயன்படுத்துகின்ற வகையிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றியை உரித்தாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

8. விதி 110-ன்கீழ் முதல் அமைச்சரின் அறிக்கை.

தமிழ்நாட்டிற்குள் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க ஏற்கெனவே தமிழகக் கடலோரத்தில் இயங்கிவரும் 7 கடலோரக் கப்பல் படையினரைத் தொடர்ந்து பணியாற்றச் செய்து மேலும் புதிதாக 2 கப்பற் படைகளையும் அங்கு இயங்கச் செய்ய வேண்டுமென – மத்திய அரசுக்கு விடுக்கும் கோரிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-ன் கீழ், பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அறிவிப்பினை பேரவைக்கு வெளியிட அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இப்பொழுது பேரவைக்கு வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தேச விரோத சக்திகள் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளின் மூலமாக தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டிலும் ஊடுருவாமல் தடுப்பதற்கு தமிழ்நாடு அரசு எல்லாவிதமான தீவிர நடவடிக்கைகளையும் எடுத்து வெற்றி கண்டுள்ளதை நாடு நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 29] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் எல்லா இடங்களிலும், காவல் துறை, மைய அரசின் காவல் பாதுகாப்புப் படை ஆகியவை முழு நேரமும் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. இத்துடன் கடற்பகுதிகளில் இந்தியக் கப்பற்படையும், கடலோரக் காவல் படையும் தீவிரமாக ரோந்து செய்து, போராளிகள் நடவடிக்கைகளை கடற்பகுதிகளில் அறவே ஒழித்திட இவ்விரு நிறுவனங்களும் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் வலுப்படுத்தப்படவேண்டுமென்று மைய அரசை, மாநில அரசு கேட்டுக் கொண்டதன் விளைவாக, இந்திய கப்பற்படை மற்றும் கடலோரக் காவல் படையினர் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளைக் கண்காணித்து வருகிறார்கள்.

பிற்பகல் 12-30

மேலும் கடலோரப் பகுதிகளில் கடலில் சென்று தக்க நடவடிக்கை எடுப்பதற்காக நான் பாரதப் பிரதமரையும், அன்றைய மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களையும் வற்புறுத்திக் கேட்டதற்குப் பின்பு தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில்-கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை, நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், ஜகதாப்பட்டினம், இராமேஸ்வரம் மற்றும் தொண்டி போன்ற 7 இடங்களில் இந்தியக் கப்பற்படைப் பிரிவினர் அமர்த்தப்பட்டு அவர்கள் மீன்பிடி விசைப் படகுகளைப் பயன்படுத்தி கடற்பகுதிகளில் ரோந்து புரிந்து வருகின்றனர்.

மேலும் இந்தியக் கடற்படையின் 7 பிரிவுகளும் போதாது எனவும், குறிப்பாக பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளில் போதிய காவல் இல்லை என்றும் அங்கும் கடற்படைப்பிரிவு வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் இராமநாதபுரத்திற்கு தெற்கே வேம்பாரிலும், நாகப்பட்டினத்திற்கு வடக்கே பூம்புகாரிலும் மேலும் இரண்டு கப்பற்படைப் பிரிவுகள் வேண்டும் என்றும் நான் பாரதப் பிரதமர் அவர்களுக்கும், உள்நாட்டு ராஜாங்க மந்திரி அவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

1993 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டாம் தேதி மத்திய அரசின் உள்நாட்டுப் பகுதி ராஜாங்க மந்திரி திரு. ராஜேஷ்பைலட் அவர்களைச் சந்தித்த போது இக்கோரிக்கையை வலியுறுத்தினேன். மீண்டும் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி உள்நாட்டுப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது வற்புறுத்திக் கேட்டேன். மேலும்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 29

15-2-1994 அன்று டெல்லி சென்று பாரதப் பிரதமரும் தற்போதைய மத்திய பாதுகாப்பு அமைச்சருமான திரு. நரசிம்மராவ் அவர்களையும் சந்தித்தபோது இதை நினைவுபடுத்தி இந்திய கடற்படையின் 7 பிரிவுகளும் தமிழக கடற்பகுதிகளில் நிரந்தரமாக ஸ்திரமாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு கூடுதலாக இரண்டு பிரிவுகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். மத்திய அரசின் உள்துறைச் செயலாளர், மத்திய புலனாய்வுத்துறையின் இயக்குநர் மற்றும் 'ரா' அதிகாரிகள் டெல்லியில் பிரதமரின் ஆணைப்படி வந்து என்னைச் சந்தித்தபோது இந்த வேண்டுகோளை நான் மீண்டும் விடுத்தேன். நான் கேட்டுக்கொண்ட இரண்டு கூடுதல் கடற்படைப் பிரிவுகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் தற்போது இயங்கிவரும் 7 கடற்படைப் பிரிவுகள் நிலையாக ஸ்திரமாக அனுமதிக்கப்படாமல் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. அந்த அனுமதியும் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதிக்குப் பிறகு விலக்கிக்கொள்ளப்படும் என்றும் கேள்விப்படுகிறேன். அன்று முதல் அதாவது நாளை மறுநாள் முதல் இந்த கப்பற்படையின் 7 பிரிவுகள் மீன்பிடி விசைப் படகுகள் மூலமாக ரோந்து செய்யும் பணியும் நிறுத்தப்படும் என அறிகிறேன். இது மிகவும் கவலை தருவதான ஒரு செய்தியாகும். தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் மற்றும் தேச விரோத சக்திகள் கடல் வழியாக இந்திய நாட்டிற்குள் ஊடுருவாமல் தடுப்பதற்கு எடுக்கின்ற எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசுக்குத்தான் பொறுப்பு இருக்கிறது. இந்திய கடற்படை மற்றும் கடலோரக் காவல் படை மூலம் மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தாக வேண்டும்.

இந்த 7 கடற்படைப் பிரிவுகள், நேவல் டிடாச்மென்ட் செயல்பட வில்லை என்றால் இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதிகள் கண்காணிப்பின்றிப் போய்விடும். அவ்வாறு கண்காணிப்பு இல்லாமல் போய்விட்டால் விடுதலைப் புலிகள் எளிதில் தமிழ்நாட்டில் ஊடுருவுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும். இத்தகைய ஒரு அபாயகரமான சூழ்நிலையை தமிழ்நாடு எதிர்நோக்க வேண்டிய காரணத்தால் தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு வன்முறைக் கலாச்சாரத்தைத் தூண்டுவதற்கு வன்முறைக் கும்பல்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துவிடும் என்பதாலும் இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உலை வைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தாலும் இந்த

1994 ஏப்ரல் 29] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அபாயகரமான சூழ்நிலையை நாட்டுமக்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும் எடுத்துரைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

என் சார்பாக மட்டுமின்றி, தமிழக அரசு சார்பாக மட்டுமின்றி, ஒட்டுமொத்தமாக தமிழக மக்களின் சார்பாகவும், இந்திய மக்களின் சார்பாகவும் இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக்காக்கவேண்டும் என்கின்ற நல்லெண்ணத்தாலும் இந்த 7 கப்பற்படைப் பிரிவுகளும் தொடர்ந்து தன் பணிகளைச் செயலாற்றவேண்டும் எனவும், புதிதாகக் கோரப்பட்ட இரண்டு கப்பற்படைப் பிரிவுகளையும் உடனடியாக வழங்க ஆணையிட வேண்டும் எனவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12.35

பாரதப் பிரதமராக மட்டும் அன்றி மத்திய பாதுகாப்பு அமைச்சராகவும் விளங்கிவருகின்ற திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கருத்தில் கொண்டு நமது நியாயமான இந்தக் கோரிக்கையை ஏற்று ஆணைகளை விரைவில் வழங்க வேண்டுமென இந்தப் பேரவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இந்த விவரங்களை எல்லாம் விளக்கி இன்று ஒரு கடிதம் எழுதி அனுப்பவுள்ளேன் என்பதையும் இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு உங்கள் ஒட்டுமொத்த உணர்வுகளையும் தமிழக மக்களின் உணர்வுகளையும் எனது கடிதத்தின் வாயிலாக பாரதப் பிரதமர் அவர்களுக்கு தெரிவிக்க உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்கிற அளவுக்கு நம்பிக்கையோடு இந்தப் பேரவையின் சார்பில் அவர்கள் எடுக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை ஒட்டுமொத்த பேரவையின் உறுப்பினர்கள் சார்பிலும் என் சார்பிலும் முதலமைச்சர் அவர்களுடைய உணர்வுகளோடு இண்ணத்து மத்திய

அரசுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உணர்வினை மத்திய அரசு புரிந்துகொண்டு அதை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்று பேரவையின் சார்பில் என்னுடைய கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும், வாக்கெடுப்பும்–தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம்

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறை மற்றும் சுற்றுலா சார்ந்த விஷயங்கள் மீது கருத்துக் கூறுகின்ற நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் சுற்றுலாத் துறைக்கு இந்த அரசு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் நான் நீண்ட நெடுநேரம் எடுத்துச் சொன்னால், அதுவே ஒரு சுற்றுலா போல் ஆகிவிடும். அதோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட காலத்தின் அருமையை எல்லாம் நினைவு படுத்தி இருக்கிறார்கள். காலை, மாலை இரவு என்று இந்த காலத்தின், நேரத்தின் அருமை கருதி நேரடியாக விஷயத்திற்கு வந்துவிடுகிறேன். இளைய தலைமுறையினருடைய எழு ஞாயிறாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்கின்ற இந்த அரசு முதுபெரும் தியாகிகளை எல்லாம் மதிக்கின்ற, அந்தப்பெரும் தியாகிகளை எல்லாம் போற்றி மதிக்கின்ற வகையிலே விழாக்கள், சிலைகள், நினைவுச் சின்னங்களை எடுத்துவருகிறது. டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய நினைவிடம், சிலை, போக்குவரத்து துறைக்கு பெயர் என்றெல்லாம் பெருமைப்பதுத்தி உள்ளது. அதேநேரத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் சென்னையிலே சிலை அமைக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு 3 மாவட்டங்களில்தான் விழா கொண்டாடப்படுகின்ற நிலை இருந்ததை மாற்றி இன்றைக்கு மாநிலம் முழுவதும் விழாக் கொண்டாடும் நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அமரர் ஆகிப்போன புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது புதிய மாவட்டத்திற்கு பசும்பொன்

முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் எனப் பெயர் வைத்தார். அதற்குப்பின் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பெயரை மறைக்கக்கூடிய வகையிலே தேவர் திருமகனார் மாவட்டம் என்ற பெயர் வைத்தார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் பசும்பொன் முத்துராமலிங்கதேவர் மாவட்டம் என்று பெயர் வைத்தார்கள். இதை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் தியாகிகளைப் போற்றுவதில் மதிப்பதில் இந்த அரசு எப்போதும் தயங்கியது இல்லை. அந்த அளவுக்கு தியாகிகளைப் போற்றி மதிக்கின்ற இந்த அரசு ஒரு மாபெரும் தியாகியை நினைவுகூரக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க விஜயராம சேதுபதி அவர்களை நினைவுகூரத்தக்க வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் போற்றி மதிக்கின்ற தியாகம் மிக்க பெரும் தலைவர்களுக்கெல்லாம் மிகப்பெரிய முன்னோடித் தலைவராக விளங்குபவர் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள். மாமன்னராக இருந்த சேதுபதி அவர்கள் விடுதலைப் போராட்ட வீரராக வாழ்ந்தார். இன்றைக்கு காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கின்றார்களே, விடுதலைப் போராட்ட வரலாறு என்று. அந்த விடுதலை போராட்ட வரலாறு தோன்றுவதற்கு முன்னோடியாக சிப்பாய்க் கலகம், *1875*-லே நடந்தது. இந்த சிப்பாய்க் கலவரம் தோன்றுவதற்கு முன்பு *70* ஆண்டுகளுக்கு முன்னே வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர் ரிபெல் சேதுபதி அவர்கள். சுருக்கமாகச் சொல்லப்போனால், விடுதலை வேட்கையினுடைய, விடுதலை வேள்வியினுடைய ஆணிவேராகத் திகழ்ந்தவர் மாமன்னர் சேதுபதி அவர்கள். மன்னராக வாழ்ந்த அவர் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு மண்டியிட மறுத்ததால் சிறையில் அடைக்கப்பட்டார். ஓராண்டல்ல ஈராண்டல்ல, *24* ஆண்டுக்காலமாக சிறையிலே அடைக்கப்பட்டார். திருச்சி சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார். இதே சென்னைக் கோட்டையிலே பிறை வடிவமாக இருக்கின்ற, வட்டவடிவ சிறையிலே ஒரு சிறைக் கொட்டடியிலே மிகக் குறுகிய இடத்திற்குள்ளே அவர் அடைக்கப்பட்டு *24* ஆண்டுக்காலம் வெள்ளையனுக்கு அடிபணிய மாட்டேன் என்ற வீரமுழக்கம் இட்டு சிறையிலே அவர்கள் மாண்டு மடிந்து போனார்கள். *23-1-1809*-ல் அவர்கள் இந்த கோட்டையிலே மரணம் அடைந்து போனார்கள். விடுதலை வேட்கை வரலாற்றில் ரிபெல்

முத்துராமலிங்க சேதுபதி தான் ஆணிவேராக இருந்தவர்கள். ஆகவே இந்த அரசு அவரைப் போற்றி மதிக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். எதிலும் புதுமை, எதிலும் மாறுபட்ட சிந்தனை, எதிலும் புதிய நோக்கு, புதிய அணுகுமுறையைக் கைக்கொள்கின்ற இந்த அரசு ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே காரியங்களை ஆற்றவேண்டும். இராமநாதபுரம் பெரிய கண்மாய் தாராள்மாக நீர்வரத்துப் பெறவேண்டுமென்பதற்காக ரிபெல் சேதுபதி அவர்கள் தான் பெரியார் அணைக்கு அடித்தளம் இட்டவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அத்தகைய மாமன்னருக்கு அவர் 24 ஆண்டுக்காலம் சிறையிருந்த கோட்டையிலே அவர் மறைந்த இடத்தில் நினைவிடம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய வீரத்தையும் விடுதலை வேட்கையையும் போற்றி மதிக்கும் வகையில் அவர் வாழ்ந்த இராமநாதபுரத்தில் அவருக்குச் சிலை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இன்றைக்கு இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் அமைச்சர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அப்படியெல்லாம் இரண்டு அமைச்சர்களுக்கு இடம் கொடுத்து அந்த மாவட்டத்தை பெருமைபடுத்திய புரட்சித் தலைவி அவர்கள் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியைப் பெருமைப் படுத்தி, ஏற்கனவே அவர்கள் பெற்றிருக்கக்கூடிய பெருமையில் மேலும் பெருமை சேர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல சுற்றுலாத்துறையில் மதுரை வண்டியூர் கண்மாயில் படகு விட்டு மனமகிழ்ச்சியான காரியங்களை செய்யவேண்டுமென கேட்டு, அனைத்துக் காரியங்களுக்கும், அனைத்துக் கேள்விகளுக்கும், அனைத்து கோரிக்கைகளுக்கும் அவ்வப்போது சுடச்சுட பதில் சொல்கின்ற நம்முடைய ஆற்றல் மிக்க செய்தித்துறை அமைச்சர் வேட்கை பெருந்தலைவராக திகழ்கின்ற ரிபெல் சேதுபதி விஷயத்திலேயும் அவ்வப்போது பதில் சொல்கின்ற அவர்கள் இப்போதே பதில் சொன்னால்

நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இருப்பேன் என்பதைக் கூறி நல்வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிப்பாய்க் கலகம் பற்றி ஏதோ ஒரு வருடத்தைச் சொன்னீர்கள். அது 1875 அல்ல. அது 1857. 100 வருடங்களுக்குப் பிறகு எல்லாமே மறந்துபோகிறது அனைவருக்குமே. திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத்துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த எங்களுடைய இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியை பேரூர் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக் கொண்டு செய்தி மற்றும் சுற்றுலாத் துறையினுடைய மாணிக்கக் கோரிக்கைகளை ..(குறுக்கீடு) மானியக் கோரிக்கைகள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் இங்கே ஆரம்பித்தது எல்லா உறுப்பினர்களுக்கும் இது பரவிவிட்டதே, மானியக் கோரிக்கையை மாணிக்கக் கோரிக்கை என்பது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானிய கோரிக்கைகள் மாணிக்கக் கோரிக்கைகள்தான், தலைவர் அவர்களே. ஆகவே இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேசுவதில் நான் மிக்க பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். இன்று செய்தி சுற்றுலாத் துறை எப்படி புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே நடைபெறுகிறது என்பதை இந்த நாட்டு மக்கள் அத்தனைபேரும் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள், பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாராட்ட மனம் இல்லாதவர்கள் புழுதிவாரித் தூற்றிக் கொண்டிருக் கிறார்கள். இந்தியாவில், தமிழ்நாடு இப்பொழுது எவ்வளவு சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறது, சட்டம்-ஒழுங்கு எப்படி இருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் அத்தனைபேரும் அறிவார்கள். சுற்றுலாப் பயணிகள் ஊட்டிக்கு வருகிறார்கள், கொடைக்கானலுக்கு வருகிறார்கள்,

தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். ஆனால், காஷ்மீருக்கு போக முடியாது. சிம்லாவுக்கு போக முடியாது. டார்ஜிலிங்குக்கு போக முடியாது. ஆக, வட மாநிலங்களில் எல்லாம் செல்ல முடியாது. அங்கே எல்லாம் காங்கிரஸ் ஆளுகிறார்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கேட்கிறார்கள், கொஞ்சம் விடுங்கள், அவர்கள் பேசட்டுமே. ஒரு சான்ஸ் கொடுங்கள், விட மாட்டேன் என்கிறீர்களே. (சிரிப்பு) நீங்கள் இரண்டு மூன்று பேரே அவையை ஆக்கிரமிக்க வேண்டும் என்கிறீர்கள். இலதா பிரியகுமார்.

திருமதி இலதா பிரியகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹிமாச்சலப்பிரதேசத்திலே ரூல் பண்ணுகிற காங்கிரஸ் கட்சியால் அங்கே பாதிப்பு ஒன்றும் இல்லை. அங்கே எல்லோரும் போய் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே இருப்பதைப் பற்றி பேசுங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. ராஜு அவர்கள் சொன்னதைப்போல, மத்திய சுற்றுலாத் துறையினுடைய கான்பரன்ஸ் நடக்கிறபோது, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தமிழகம் இன்றைக்கு மிகப் பெரிய சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிற மாநிலமாக இருக்கிறது என்பதை அந்த கான்பரன்சிலே ஒத்துக் கொண்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு எவ்வளவு சிறப்பாக உள்ளது என்பதை உலக நாடுகள் அத்தனையும் ஒத்துக்கொண்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், இந்தியாவில் இருக்கிற அத்தனைப் பயணிகளும் நமது நாட்டைத் தேடி வந்துகொண்டு இருக்கிறார்கள். ஊட்டிக்கு வருகிறார்கள். கொடைக்கானலுக்கு வருகிறார்கள். இங்கு இருக்கிற சுற்றுலா ஸ்தலங்களுக்கு – எல்லா இடங்களுக்கும் வருகிறார்கள் என்று சொல்கிறேன். இதிலே என்ன உங்களுக்குக் கோபம்? ஆகவேதான் சொல்கிறேன், தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது, புரட்சித் தலைவி

ஆட்சியில். உலகத்தில் இருக்கிற அத்தனை மக்களும் தமிழகத்திற்கு வர வேண்டும், வர வேண்டும், வர வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். வட இந்தியாவில் இருக்கிற உங்கள் தலைவர்களே இங்கே வந்து தான் பாதுகாப்பாய் இருக்க முடியும் என்று கூட ஆசைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தான் இந்த நேரத்திலே நான் தெளிவாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவேதான் சொல்கிறேன், சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை, தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. சட்டம்-ஒழுங்கு இங்கே சிறப்பாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் திராவிடத்தினுடைய பரிணாம வளர்ச்சியில், திராவிடக் கட்சியினுடைய பரிணாம வளர்ச்சியில் முதுபெரும் தலைவராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய புத்தகங்கள் அத்தனையையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அதைச் செய்தித் துறை மூலமாகச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். செய்தித் துறை சிறப்பாக செயல்படுகிறது. அந்த அமைச்சரும் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம்- ஒரு பத்திரிகையிலே செய்தி வருகிறது. பழம்பெரும் சிரிப்பு நடிகை - நகைச்சுவை நடிகை அங்கமுத்து அவர்கள் ஆஸ்பத்திரியிலே படுத்து இருக்கிறார்கள், நோய்வாய்ப்பட்டு படுத்திருக்கின்றபொழுது பத்திரிகையிலே செய்தி வந்தவுடன் புரட்சித் தலைவி அமைச்சர்களை எல்லாம் அழைத்து அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக 50 ஆயிரம் ரூபாயை உடனே கொண்டுபோய்க் கொடுங்கள் என்று உத்தரவிட்ட புரட்சித் தலைவி அவர்கள், அவர்களை நான் குழந்தையிலே பார்த்தது, நான் இப்போது பார்க்க ஆசைப்படுகிறேன் என்று யாருமே ஆதரவு இல்லாமல் இருந்தவர்கள்கூட புரட்சித் தலைவியை பார்த்துப் பெருமைப்படுகின்ற அளவுக்கு இன்று அந்தச் செய்தியை, செய்தித் துறையின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ததை இந்த நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறையின் மூலமாக உதவி செய்ததாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இல்லை. செய்தி கேட்டவுடன் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனது சொந்தப் பணம் 50,000 ரூபாய் கொடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறையின் சார்பாக செய்தி கிடைத்தவுடன், புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்தார்கள் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்தியாவிலே யாருமே செய்ய முடியாத அளவுக்கு ஒரு அருமையான திட்டமாக திரைப்பட நகரை — பிலிம் சிட்டி -- சென்னையிலே உருவாக்கி, மேலை நாடுகளுக்கு இணையாக ஏற்பாடு செய்து கொடுத்த நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சுமார் 15 கோடி ரூபாய் செலவில் சினிமா நகரை உருவாக்கிய இந்த அரசுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதற்கு முன்பு இருந்த அரசு 16 எம்.எம். சினிமாவை நிறுத்தி வைத்திருந்தது. கிராமங்களில் அதைத்தான் அதிகமாக விரும்பிப் பார்ப்பார்கள். வேறு எந்தப் பொழுது போக்கும் கிராம மக்களுக்குக் கிடையாது. புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வந்தவுடன் 16 எம்.எம். சினிமாவை மீண்டும் கிராமங்களில் காட்டலாம், அதைத் தயாரிக்கலாம் என்று உத்தரவைப் போட்டு, கிராம மக்கள் அத்தனைபேரும் காலையிலிருந்து மாலைவரை உழைத்துவிட்டு, வீட்டுக்கு வந்தவுடன் மாலையிலே ஏதாவது ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டுமென்றால், அதற்கு உதவுகின்ற வகையிலே ஏற்பாடு செய்த இந்த அரசை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நாடகத் துறையிலே நலிந்தவர்கள் இப்போது நிறைய இருக்கிறார்கள். ஒருகாலத்தில் நாடகம்தான் கலைக்கு உயிரூட்டியாக இருந்தது. அந்த நாடகம் இன்றைக்கு நலிந்து கொண்டிருக்கிறது. அந்த நாடகத்தில் நடிக்கும் கலைஞர்களையும், நாடகத்தையும் ஊக்கப்படுத்தும் அளவுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதெல்லாம் சினிமா மோகத்தின் காரணமாக மேலை நாட்டு

இசை நிகழ்ச்சிகளைத்தான் மாணவ மாணவிகளும் மற்ற பொதுமக்களும் ரசிக்கிறார்கள். ஆனால் பண்டைக்கால கர்நாடக சங்கீதம், ஒயிலாட்டம், கரகாட்டம் மற்ற விளையாட்டுகள் இவைகளை எல்லாம் யாரும் ரசிப்பது கிடையாது. ஓரளவுக்கு ரசித்தாலும் அதில் மோகம் அதிகமாக இருப்பதில்லை. எனவே தமிழ்ச் சமுதாயத்தினுடைய கலைகளாக இருக்கிற நாதஸ்வரம், கரகாட்டம், ஒயிலாட்டம் போன்ற கலைகளை ஊக்கப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டுகூட நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திரைப்பட தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று துவங்க இருப்பதாகச் சொன்னார்கள். அதை இந்த ஆண்டே துவங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றுகூட இங்கே கேள்வி நேரத்தில் பேசுகிறபோது ஒன்றைக் கேட்டேன். இப்போது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் தொலைக்காட்சிக்கு இந்த அரசினுடைய சாதனைகளைச் சொல்வதற்கு மனம் இருப்பதில்லை. மக்களுடைய தேவைகளைச் சொல்வதற்கும் மனம் இருப்பதில்லை. அவர்கள் எங்கோ இருக்கிற ஒருசிலருடைய போட்டோவையும், படங்களையும் தொலைக்காட்சியின் வாயிலாகக் காட்டுவதிலேதான் குறியாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெலிவிஷன் மூலமாக எந்த அளவுக்கு மக்களுடைய திட்டங்களைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிய வேண்டும். அதோடு மாத்திரமல்லாமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தில் கலந்து கொள்கிற திரு. ஞானசேகரன் வேண்டுமானால் இது பற்றிப் பேசலாம். நீங்கள் குறுக்கிட்டு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், அவர் சொல்வதில் ஏதாவது ஆட்சேபணை இருந்தால் சொல்லலாம்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒருசிலரை விளம்பரப்படுத்துவதற்காக டெலிவிஷன் பயன்படுத்தப்படுகிறது என்ற செய்தியை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். தமிழக அரசின் மூலமாக நடத்தப்படுகிற நிகழ்ச்சிகளானாலும் சரி, மற்ற அரசு நிகழ்ச்சிகளானாலும் சரி, அத்தனை நிகழ்ச்சிகளும் டெலிவிஷன் மூலமாகக் காண்பிக்கப் படுகிறது என்பதை மனசாட்சி உள்ளவர்கள் நன்றாக அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனசாட்சியோடு சொல்கிறேன், இந்தப் பேரவை நிகழ்ச்சிகளைக்கூட ஒருதலைப் பட்சமாக நாட்டு மக்களுக்குச் சொல்கிற ஒன்றாம் நம்பர் செய்தி ஸ்தாபனம் (மேசையைத் தட்டும் ஒலி) டெலிவிஷன்தான். தூர்தர்ஷன் என்று மத்திய அரசு பெயர் வைத்திருக்கிறதே, அந்தத் தொலைக்காட்சிதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொன்னது வேண்டுமானால் உங்களுடைய கருத்தாக இருக்கலாம். மனசாட்சியோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை ஒருதலைப் பட்சமாக வெளியிலே சொல்வதை நீங்கள் சொல்கிற தொலைக்காட்சி தன்னுடைய தலையாய கடமையாகக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மனசாட்சியோடு நானும் சொல்லுவேன். (குறுக்கீடு) இல்லையில்லை (குறுக்கீடு) எப்படி என்று நானே சொல்கிறேன். இந்தப் பேரவையிலேயிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் வெளியே போய் ஒன்றைச் சொல்கிறார்கள். அதை அந்தத் தொலைக்காட்சி ரொம்ப பிரதானமாகச் சொல்கிறார்கள். ஆனால் இங்கே ஒரு பெண் உறுப்பினர், தனக்கு இழைக்கப்பட்ட, வெளியே சொல்லமுடியாத ஒரு கொடுமையை உரிமைப் பிரச்சினையாக இங்கே சொல்லி, அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பினேன். அது அன்றைக்கு அந்தத் தொலைக்காட்சிக்குப் பெரிய செய்தியாகத் தெரியவில்லை. இங்கேயிருந்து வெளியே போனவர்கள் வெளியே போய் அவர்கள் பேட்டி என்ற பெயரிலே கொடுத்ததை விரிவாகச் சொல்கிறார்கள். இதைவிட ஒருதலைப்பட்சமாக ஒரு நிறுவனம் எப்படி இருக்கமுடியும்? இதைச் சொல்வதற்கு இதைவிட மனச்சாட்சி எனக்கு வேறு என்ன வேண்டும் என்பதைத்தான் நீங்கள் பார்க்கவேண்டும். (குறுக்கீடு) அதனால் வேண்டாம். நீங்களாகவே இதிலே வக்காலத்து வாங்குவதிலிருந்தே தெரிகிறது. அவர் சொன்னது, ஒரு சிலருடைய படத்தை என்று சொன்ன உடனேயே அந்த ஒரு சிலர் நீங்கள்தான் என்று நீங்கள் வருவதில் இருந்தே தெரிகிறது. (குறுக்கீடு) திரு. கே. பி. ராஜு.

பிற்பகல் 12-55

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாகப் பார்த்து, ஒரு இயக்கத்தை ஆதரிக்க வேண்டுமேயொழிய, தொலைக்காட்சியை வைத்துக்கொண்டு மக்களை மிரட்டிக்கொண்டு எங்களுக்கு ஆதரவு கொடுங்கள் என்று கேட்கக்கூடாது. ஆகவே தொலைக்காட்சி உங்களிடம் இருக்கிறது என்கிற காரணத்தால், மக்கள்

அத்தனைபேரும் தொலைக்காட்சியைப் பார்க்கிறார்கள் என்பதற்காகவே, ** அந்தத் தொலைக் காட்சியைப் பயன்படுத்தி நீங்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொல்வது அவைக்குறிப்பிலே இருக்கவேண்டாம். அது வந்து நேரடியாக ஒருவரைப் பாதிக்கிற அளவுக்குச் சொல்ல வேண்டாம். நீங்கள் சொல்லிய எஞ்சிய கருத்துக்கள் இருக்கலாம். (குறுக்கீடு) அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று சொன்னேன் அல்லவா? (குறுக்கீடு) நீக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டேன். திரு. ராஜு.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்களுக்கு இவ்வளவு மனம் புண்படும் என்றால், சுமார் 164 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, மக்களுடைய சக்தியைப் பெற்று இன்றைக்கு தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களையும் அவர்களுடைய கொள்கையையும் நீங்கள் இருட்டடிப்பு செய்கின்றபோது, எங்களுடைய உணர்வுகள் எல்லாம் எப்படியிருக்கும் என்பதைக் கொஞ்சமாவது உணர்ந்து பார்த்தீர்களா என்பதைத்தான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாடு ஜனநாயக நாடு. சர்வாதிகார நாடல்ல. இந்திய சர்க்கார் ஜனநாயக சர்க்கார், சர்வாதிகார சர்க்கார் அல்ல.

ஆகவேதான் சொல்கிறேன். இந்த ஜனநாயக நாட்டிலே அந்த உரிமை எங்களுக்கும் இருக்கிறது. எங்களுடைய வரிப்பணத்திலேதான் மத்திய சர்க்கார் ஆட்சியை நடத்துகிறார்கள். அதன் மூலமாகத்தான் அங்கே தொலைக்காட்சி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 356-வது செக்சனை பாக்கெட்டிலே போட்டுக்கொண்டு வந்து, ஒவ்வொரு காங்கிரஸ்காரர்களும் இங்கே இருப்பதாக நினைத்துக்கொண்டு நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்து தொண்டர்களை ஏமாற்றவேண்டும், மிரட்ட வேண்டும் என்று தயவுசெய்து எண்ணிவிடாதீர்கள். இதைப்போல் ஆயிரம் தொலைக்காட்சிகள் இருந்தாலும் அதை நாங்கள் சந்திக்கத் தயாராகத்தான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: 356-வது செக்சனை நாங்கள் தவறாகப் பயன்படுத்தப்போவதில்லை. இது ஒன்று. இரண்டாவது, 356-வது செக்சனை இதற்கு முந்தைய அரசை அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி கலைப்பதற்கு யார் உடந்தையாக இருந்தார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: 356-வது செக்சனை பயன்படுத்தி ஜானகி அம்மாள் தலைமையிலிருந்த அரசைக் கலைப்பதற்கும் யார் காரணம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு திரு. சந்திரசேகருடைய ஆட்சி இருந்தது. வெளியிலே இருக்கிறவர்கள் அதற்கு உடந்தையாக இருந்தது காங்கிரஸ் கட்சியினர்தான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அன்றைக்கு நாடாளுமன்றத்திலே இருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு வெளியிலே இருக்கிறவர்கள் சிலர் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் சரி. (குறுக்கீடு) உட்காருங்கள். அமைச்சர். (குறுக்கீடு) நீங்கள் குறுக்கிடாமல் இருந்தால் அதுபாட்டுக்குப் போய்க்கொண்டு இருந்திருக்குமே. மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியைக் கலைப்பதற்கு உறுதுணையாக இருந்தது யார் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். காங்கிரஸ் கட்சிக்கு **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். ** என்பது எல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கவேண்டாம். அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

* திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் டேனியல்ராஜ் அவர்கள் பேசுகின்றபோது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பேச்சைக் கேட்டுத்தான் 356 சட்டத்தைப் பயன்படுத்தி 1991 ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியை கலைத்ததைப்போல இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சியைக் கலைத்தபோது இங்கே இருக்கிற அண்ணா தி.மு.க.வைக் கேட்டுக்கொண்டா கலைத்தார்கள் என்பதை அவர் விளக்குவாரா என அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 29]

பிற்பகல் 1-00

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் கேட்கின்ற கேள்வி வேறு ; முதலில் நான் சொன்ன பதில் வேறு. (குறுக்கீடுகள்) பதில் வேறு. இது, மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்களைப் பொறுத்தமட்டிலே, 356-வது சட்டத்தை மத்திய அரசு கையிலே எடுத்துக்கொண்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்னது, ஏதோ நீங்கள் பையிலே வைத்து இருப்பதைப் போல சிலர் பேசிக் கொண்டு எங்களை மிரட்டிக் கொண்டு இருக்கிறீர்கள்; அதை அந்தத் தொலைக் காட்சி விரிவாக செய்தி சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் சொன்னார். (குறுக்கீடு) மத்திய அரசு கையிலேதான் இருக்கிறது. அவர் சொன்னது, நீங்கள் பையிலே வைத்து இருப்பதைப் போல வெளியிலே சொல்வதும், (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ் : யார் சொன்னார்கள்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள்தான் சொல்கிறீர்கள். அதனால்தான் உங்களை அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் யாரையும் சொல்லவில்லை ; நீங்கள் என்று பொதுவாகச் சொன்னால், ஏதோ இருப்பதைப் போல, அன்றைக்கு கலைத்தோமே, யாரைக் கேட்டுக் கலைத்தோம், யாருடைய தூண்டுதலால் கலைத்தோம் என்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் அவர்கள் ராஜீவ் கொலை சம்பந்தப்பட்ட கமிஷனில் விட்னஸ் கொடுக்கும்போது, இதற்கு முன்னாடி இருந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்ததற்குக் காரணம் என்ன என்று கேட்டபோது, வேறு ஏதும் காரணம் இல்லை; ஆனால், அந்த அரசு எல்.டி.டி.ஈ. கூட இருந்த காரணத்தாலேதான் அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்தார்கள் என்று கூறி இருக்கிறார்கள். அதனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்ததற்குக் காரணமாக இல்லை. தி.மு.க. எந்தெந்த அளவுக்கு அராஜகங்களில் ஈடுபட்டார்களோ, அவர்கள் எல்.டி.டி.ஈ.கூட என்னன்ன செய்தார்களோ, அது ஒன்று தான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் முழுமையாக நம்புகிறேன், புரட்சித் தலைவியின் ஆட்சி என்றைக்குமே ஒரு ஆட்சியை கலைப்பதற்கு அந்த சட்டத்தை உபயோகப்படுத்தாது என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் மேற்கொண்டு, (குறுக்கீடுகள்) நான் அப்போதே சொன்னேன், சந்திரசேகர் கலைத்தார்; அன்றைக்கு சிலர், காங்கிரஸ்காரர்கள்தான் இதற்கு பக்க பலமாக இருந்து கலைக்கிறார்கள் என்று வெளியிலே புகார் சொன்னார்கள். அதற்கு நீங்கள் இடம் கொடுப்பது போல் பேசுகிறீர்கள் என்றுதான் நான் முதலிலே சொன்னேன். (குறுக்கீடுகள்) சஞ்சய் ராமசாமி சொன்னதுதான் சரியான கருத்து. (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ் : காங்கிரஸ் கட்சியை விமர்சனம் செய்கின்ற காங்கிரஸ் நபர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள்... (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சி உறுப்பினரே விரோதமாகப் பேசுகிறார்...(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ், நீங்கள் தான் காங்கிரஸ் கட்சி. அவர் எந்தக் கட்சியையும் விமர்சிக்கவில்லை. (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ்: காங்கிரஸ் கட்சியை விமர்சனம் செய்பவர்கள் இங்கே இருக்கிறார்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தான் இப்போது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவரை விமர்சிக்கிறீர்கள். அவர், கட்சியையோ, உங்களையோ விமர்சிக்கவில்லை. (குறுக்கீடுகள்) திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எங்கள் கட்சியைச் சேர்ந்த துணைத் தலைவர் திரு. டேனியல்ராஜ் பேசுகின்றபோது, இந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினரே வந்து காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பாகச் செயல்படுகிறார் என்று சொன்னார்கள். ஆனால், அன்றைக்கு எல்.டி.டி.ஈ.-ஐ தடை செய்கின்ற தீர்மானம் இங்கே இருக்கும்போது, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எங்கே இருந்தார்கள் என்று நான் அவரைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்லாமல், இன்றைக்கு என்னைப் போன்றவர்கள் இங்கே பேசக் கூடாது என்ற நிலைமை வந்து, காங்கிரஸ் கொறடா வந்து எங்களிடம் சொல்லி இருக்கிறார். இதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் தேர்தலில் எதற்காக ஜெயித்து இங்கே வந்து இருக்கிறோம்? மக்கள் பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொல்வதற்காகத்தான் வந்து இருக்கிறோம். ஆனால், இன்றைக்கு அதைப்பற்றி எங்களைப் பேச விடாமல் தவிர்த்து, நீங்களே எங்கள் கட்சி கொறடாவாக இருந்து இருக்கலாம்; அதுவே நியாயமாக இருந்து இருக்கும்; ஏனென்றால், நாங்கள் கையை நீட்டும்போது, நீங்கள் எங்களைப் பேச விடுகிறீர்கள்.

நாங்கள் ராஜீவ் காந்திக்கு என்றைக்குமே துரோகம் செய்யமாட்டோம். அதனால்தான் நாங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஆதரிக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ், (குறுக்கீடுகள்), அவர் கட்சியைப் பற்றி எதுவும் முதலிலே சொல்லவே இல்லை. (குறுக்கீடுகள்) 1990 ஆம் ஆண்டு இங்கு இருந்த ஆட்சியை சந்திரசேகர் ஆட்சியில் இருந்த போது எப்படிக் கலைத்தார்கள் என்பதை மட்டும்தான் சொன்னார்கள். நீங்கள் திடீர் என்று எழுந்து, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர், காங்கிரஸ் கட்சிக்கே விரோதமாக இங்கே பேசுகிறார் என்று ஆரம்பித்தீர்கள். (குறுக்கீடுகள்) இவர் பேசவில்லையே. நீங்களாகப் பேசினார் என்று சொல்கிறபோது, அவருக்கு நான் பதில் சொல்ல வாய்ப்புக் கொடுக்க வேண்டி இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் கேளுங்கள். நீங்கள் ஒரு உறுப்பினரைச் சொல்லுகிறீர்கள். ஒரு உறுப்பினர், அவர் பொதுவான ஒரு கருத்தை – சந்திரசேகர் ஏன் சென்ற ஆட்சியைக் கலைத்தேன் என்பதற்குரிய ஒரு விளக்கத்தை ஜெயின் கமிஷன் முன்னாலேயே போய் சொல்லி இருக்கிறார்கள், என்கிற கருத்தை மட்டும் தான் சொன்னார். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அதைச் சொல்லியதற்கு அந்த உறுப்பினரை, இவர் காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாகப் பேசுகிறார். இப்படிப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று, தனிப்பட்ட முறையில் ஒரு உறுப்பினரை, உங்கள் கட்சி உறுப்பினரையே, பேரவைக்குள்ளேயே வைத்து விமர்சனம் செய்கிறீர்கள். அப்போது அவர் பதில் சொல்ல வாய்ப்பு கேட்கிறார். நான் பதில் சொல்ல வாய்ப்புக் கொடுக்கிறேன்.

பிற்பகல் 1-05

திரு. எஸ். டேனியல்ராஜ் : காங்கிரஸ் கட்சி ஜனநாயகக் கட்சியாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட உறுப்பினர்கள் பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் பிரதமர் சந்திரசேகர் அவர்கள் சொல்கிறபோது— சொல்கிற நிலைமை எப்படி ஏற்பட்டது என்றால், அப்போது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீது ஒரு குற்றத்தைச் சாட்டினார்கள். ராஜீவ் காந்தி சொல்லித்தான் திராவிட

முன்னேற்றக் கழக அரசை சந்திரசேகர் கலைத்தார் என்ற ஒரு குற்றச்சாட்டை, ராஜீவ் காந்தி மீது சொன்னார்கள். அப்போது சந்திரசேகர்— ராஜீவ் காந்தி இதிலே தலையிடவில்லை என்று கிளியராகச் சொன்னார்கள். உண்மையைச் சொன்னார்கள். அப்போது என்ன சொன்னார்கள் என்றால் புரட்சித்தலைவி அவர்கள், ராஜீவ் காந்தியிடம் சொல்லி, ராஜீவ் காந்தி சந்திரசேகரிடம் சொல்லி கலைத்தார் என்று ஒரு வீண் வதந்தியை ** சிலபேர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் ** என்பது வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : உண்மைக்கு மாறான விஷயங்களை சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்போது தான் சந்திரசேகர், ராஜீவ் காந்திக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. இதுபற்றி அவர் பேசவே இல்லை என்று சொல்லிவிட்டு, 2, 3 விவரங்களில் நான் சொல்லி இருக்கிறேன். தமிழ்நாட்டினுடைய, ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர், இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் இந்த நாட்டைக் காப்பாற்றுகிறபோது, மாநில முதலமைச்சரிடத்தில் சில இரகசியங்களை சொல்கிற உரிமையும், அந்த இரகசியங்களை பத்திரமாக வைத்துக்கொள்கிற உரிமையும், மாநில அரசினுடைய முதலமைச்சருக்கும், மத்தியப் பேரரசினுடைய பிரதம மந்திரிக்கும் இருக்கிறது. பிரதம மந்திரி சொல்லும் இரகசியங்களை மாநில முதலமைச்சர் வெளியே சொல்லக்கூடாது. முதலமைச்சர் சொல்லும் இரகசியங்களை பிரதமர் வெளியே சொல்லக்கூடாது. ஆனால் நான் எந்தச் செய்தியை சொன்னேனோ, அந்தச் செய்தி கடல் கடந்து போய் விட்டது. நான் ஒருமுறை பார்த்தேன், இரண்டு முறை பார்த்தேன், மூன்று முறை பார்த்தேன். எப்படி அந்தச் செய்தி போனது என்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சரை, அன்றைய முதலமைச்சரை, கருணாநிதியைக் கேட்டேன். அவர் இல்லையென்று சொன்னார். ஆனால் இவர் மூலமாகத்தான் போனது என்று ஆதாரபூர்வமாக தெரிந்த பிறகு, நாட்டினுடைய நன்மையைக் கருதி, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுவதற்காக, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்காகத்தான் செய்தேனே ஒழிய, ராஜீவ் காந்திக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று மிகத் தெளிவாக, உங்களுடைய பிரதமரை, உங்களுடைய தலைவரைப் பாராட்டி, உள்ளதைச் சொல்லியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப்புலிகளுடைய தடையை நீடிக்க வேண்டுமென்று மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அவர்கள் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வருகிறபோது, அந்த மறைந்த ராஜீவ் காந்தி அவர்களுடைய ரத்தத்திலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறோம் என்று வாய் கிழியப் பேசுகிற காங்கிரஸ் நண்பர்கள் அன்றைக்கு அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு பதிலாக, பீட்டர் அல்போன்ஸ் வெளியே இருக்கிறார், சட்டமன்றத்திலே இல்லை என்பதற்காக, அவர் மீண்டும் வர வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள் என்று சொன்னால், யார் ராஜீவ் காந்தி அவர்களுடைய உண்மையான விசுவாசிகள் என்பதை நாட்டு மக்கள் இன்றைக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உண்ணாவிரதப் போராட்டம் அறிவித்ததை எதிர்பார்த்து நீங்கள் விடுதலைப்புலிகளுடைய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நீங்கள் உண்ணாவிரதம் இருந்தது என்றைக்கு? இதுசம்பந்தமாக தீர்மானம் வருகிறது என்று இங்கே அலுவல் ஆய்வுக் குழு கூடி, உங்களுடைய கொறடாவும் இருந்து, உங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரும் இருந்து, என்றைக்கு முடிவு செய்தோம் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இதை திசை திருப்ப வேண்டாம். இவ்வாறு தீர்மானம் வருகிறது என்று சொல்லி, நம்முடைய நிகழ்ச்சி நிரலை மாற்றியமைத்தது வரையில் உக்களுக்குத் தெரியும். எனவே தெரிந்துகொண்டு உண்ணாவிரதம் இருந்தோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்ட தேதி மாற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதை தெரிந்து கொண்டு, தேதியை மாற்றியதைத் தெரிந்து கொண்டு, உண்ணாவிரதம் என்று அறிவிக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, உண்ணாவிரதம் 7 பேர்கள்தான். மீதிப் பேர்கள் எங்கே போனார்கள்? உண்ணாவிரதம் இருந்தது 7 பேர்கள்தான். இங்கே இருக்கிற மற்ற

உறுப்பினர்கள் இருந்து பேசினார்களே அதைப்போல வந்திருந்து பேசியிருக்க வேண்டியதுதானே. (குறுக்கீடு) இல்லை, ராஜீவ் காந்தியினுடைய ஆன்மா உங்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. வேறு சில கட்டுப்பாடுகள் உங்களுக்கு இப்போது பெரிதாகத் தெரிகிறது. வேறுசில நிர்பந்தங்கள் உங்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது. ராஜீவ் காந்தி ஆன்மா பெரிதாகத் தெரியவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உண்ணாவிரதம் இருந்த நேரத்தைப் பார்த்து, அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, நாங்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். இதை வாதத்திற்காக நான் ஏற்றுக்கொள்கிறேன். வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும் கூட, ஒன்று சொல்வார்கள். ஒரு சிறிய ஆபத்து வருகிறது, அதைவிட பெரிய ஆபத்து வருகிறது. பெரிய ஆபத்து வந்தவுடன், சிறிய ஆபத்து மறைந்துவிடுகிறது. சின்னக் கோடு, பெரிய கோடு என்று சொல்வார்கள், சினிமாவிலே பார்த்திருப்பீர்கள். சிறிய ஆபத்து. யாராவது நமக்கு வேண்டியவர்கள் அடிபடுகிறார்கள், கால் முறிந்துவிடுகிறது. இது சிறிய ஆபத்து, ஓடுகிறோம், ஆஸ்பத்திரிக்கு. அதைவிடப் பெரிய ஆபத்து, ஒருவர் இறந்துவிடுகிறார். அப்போது அது சிறியதாக ஆகிவிடுகிறது. அப்படி நீங்கள் பார்க்கிறபோது, உண்ணாவிரதம் இருப்பது உண்மைதான். பீட்டர் அல்போன்ஸ் உங்களுக்கு வேண்டியவர்தான். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். உங்களைப் பொறுத்தவரையில் முக்கியம்தான். பீட்டர் அல்போன்சுக்காக நீங்கள் உண்ணாவிரதம் இருக்கிறீர்கள். உண்மைதான். பீட்டர் அல்போன்சா, ராஜீவ் காந்தியா என்கிற நிலைமை வருகிறபோது, பேரவைத் தலைவர் அவர்களே, பீட்டர் அல்போன்சா, ராஜீவ் காந்தியா என்ற நிலைமை வருகிறபோது, ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு யார் காரணமாக இருக்கிறார்களோ, அவர்களைத் தடை செய்வதற்காக தீர்மானம் வருகிறது, ஆகையினாலே, இன்றைக்கு நிலைமை, ராஜீவ் காந்தி பற்றியது. ராஜீவ் காந்தியைக் கொன்றதற்குக் காரணமாக இருந்தவர்கள், பற்றி தீர்மானம் வருகிறது, ஆகையினாலே, நமக்குள் இருக்கிற மற்றதை எல்லாம் மறந்துவிட்டு நீங்கள் அன்றைக்கு ஓடோடி வந்திருந்தால்தான், நீங்கள் ராஜீவ் காந்தியை உண்மையாக மதித்ததாக அர்த்தம். ராஜீவ் காந்தியையும், பீட்டர் அல்போன்சையும் ஒரே தட்டிலே வைத்துப் பார்த்தால், இதைவிட மோசமான, தாழ்வான உணர்வுகளை வேறு யாரும் பெறமாட்டார்கள்

என்பதை நான் மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உண்ணாவிரதப் போராட்டத்தைப் பொறுத்தவரையில், பீட்டர் அல்போன்ஸ் பிரச்சினை மட்டுமல்லாமல், இந்தச் சட்டமன்றத்திலே வந்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சுதந்திரமாக, ஜனநாயகக் கடமைகளை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பேரவையில் எல்லா ஜனநாயக உரிமையோடும் காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுகிறார்கள். தங்கள் இஷ்டத்திற்குச் சிலர் பேசுகிறார்கள். அதையும்கூட சகித்துக் கொண்டிருக்கிறோம். நேற்று கூட எவ்வளவு சகித்துக்கொண்டு திரும்ப நான் என்னுடைய முடிவைக்கூட மாற்றி அறிவித்தேன் என்பது தெரியும். உங்களுக்கு எல்லா உரிமைகளையும் கொடுத்துப் பேச அனுமதித்துக் கொண்டிருக்கிறோம், பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அதற்குள்ளே போவது சரியல்ல. திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விடுதலைப் புலிகளைத் தடை செய்கின்ற சட்டத்தை மத்திய அரசு ஆதரிப்பதற்கான முகாந்திரம் தெரிகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், மத்திய ராஜாங்க அமைச்சர் மாண்புமிகு ராஜேஷ் பைலட் அவர்கள் கூட, இதற்கு ஆதரவைத் தெரிவித்துத்தான் நேற்றையதினம் கூட செய்தி வெளியிட்டு உள்ளார்கள். ஆதலால், நீங்கள் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், மைய மாநில அரசுகள் இந்தப்பிரச்சினையில் சுமுகமாக முடிவு எடுக்கின்றபோது, நீங்கள் அச்சப்படத் தேவையில்லை என்று கூறி, தலைவர் ராஜீவ் காந்தியினுடைய ரத்தத்தால் ஜெயித்தவர்கள் என்பதை உறுதியாகக் கூறி, அந்தத் தலைவரை யார் கொச்சைப்படுத்தினாலும்– எங்கள் உடம்பில் ஓடுகின்ற ஒரு சொட்டு ரத்தம் இருக்கின்ற வரை அவருக்கு விசுவாசமாக இருப்போமேயொழிய, மற்றவர்களுக்கு என்றைக்கும் விசுவாசமாக இருக்கமாட்டோம். அந்தக் குடும்பம், நேரு குடும்பம் இந்தியாவைக் காத்த குடும்பம்– அந்தக் குடும்பத்தைப் புறக்கணிப்பவர்கள் எப்படிப்பட்ட நிலைக்குச் செல்வார்கள் என்பதை காலம் கட்டாயம் நிருபிக்கும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியைப் பற்றிப் பேசுகின்றபோது, உண்மையான நிலை வேதனைதான். 2 ஆண்டுக்காலமாக, 3 ஆண்டுக் காலமாக இதைப்பற்றிப் பேசவேண்டும், பேசவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது, புரட்சித் தலைவி அவர்கள் இல்லாதபோது, தைரியமாகப் பேசுகின்ற தெம்பு எங்களுக்கு வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3.30 மணிக்குப் பேசலாம். பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இப்போது முடிவுற்று, பேரவையின் முன் அனுமதியோடு, பேரவை மீண்டும் மாலை 3.30 மணிக்குக் கூடும் என்று அறிவிக்கப்படுகிறது. 3.30 மணிக்கு திரு. கே. பி. ராஜு தன்னுடைய உரையைத் தொடரலாம். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 3.30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆகியோரால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடர்கிறது. திரு. கே. பி. ராஜு தனது விவாதத்தைத் தொடரலாம். 2, 3 நிமிடங்களில் பேசி முடித்துக்கொள்ளலாம்.

திரு. கே. பி. ராஜு : நான் இன்னும் பேசவேயில்லையே. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே நடந்த விவாதத்தின் தொடர்ச்சியாக என்னைப் பேசப் பணித்தமைக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய திட்டங்களையும், புரட்சித் தலைவியினுடைய கொள்கைகளையும், தமிழக அரசினுடைய செய்திகளையும் நாட்டு மக்களுக்கு விளம்பரப்படுத்தி இந்தச் சமுதாயத்தினுடைய நலிவுற்ற மக்களுக்குச் செய்கின்ற நன்மைகள் எல்லாம் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று பாடுபட்டு, அதைச் செயல்படுத்துகின்ற துறைதான் செய்தித்துறை. அந்த செய்தித் துறையின் வாயிலாக இங்கு தமிழ்நாட்டிலுள்ள தொலைக்காட்சி நிலையத்தார் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை இன்று காலையிலே நடந்த விவாதத்திலே பேரவைத் தலைவரே அதற்குச் சான்றிதழ் வழங்கியதிலிருந்து

தொலைக்காட்சியினர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று கேட்டால் இந்த நாட்டினுடைய ஜீவாதாரப் பிரச்சினையான காவிரி நீர்ப் பிரச்சினைக்கு தமிழகத்தினுடைய காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அத்தனைபேரும் கண்ணீரும் கம்பலையுமாக, உண்ணாவிரதம் இருக்கிறார்களே, புரட்சித் தலைவிக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வதென்று அவர்கள் அத்தனைபேரும் ஆங்காங்கே கண்ணீரும் கம்பலையுமாக கதறித் துடித்துக்கொண்டிருக்கும்போது, இந்த மக்களுடைய வரிப்பணத்தினாலே நடத்தப்படுகின்ற அந்த தொலைக்காட்சி நிறுவனத்தார் அதை விடுத்துவிட்டு சாதாரண நிகழ்ச்சிகளைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டினுடைய வரிப்பணத்தாலே நடத்தப்படுகின்ற மத்திய சர்க்கார், இந்த நாட்டினுடைய வரிப்பணத்தைச் சேர்த்து நடத்தப்படுகின்ற மத்திய சர்க்கார் எப்படி ஓர வஞ்சனையாக நடந்து கொள்கிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்தியாவிலே இருக்கிற தொலைக்காட்சி அவர்களுக்குச் சொந்தமான தொலைக்காட்சி நிறுவனம்போல் நினைத்துக்கொண்டு தங்களுடைய கொள்கைகளைப் பரப்புவதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டு, கொள்கைகளைப் பரப்பிக் கொண்டிருக்கிற அந்த நிகழ்ச்சியைக் கண்டிக்க வேண்டுமென்பதற்காக இந்த நேரத்திலே இதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3-35

ஆகவே, தமிழக அரசின் சார்பாக ஏதாவது ஒரு சேனலை இந்த டி.வி.யில் தமிழக மக்களுக்கு என்று தனியாக ஒரு சேனலை ஏற்படுத்தி தமிழ்நாட்டு மக்களுக்காக புரட்சித் தலைவியினுடைய கொள்கைகளைச் சொல்லுகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் உங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இப்போது கூட இந்தியாவில் ஜெயின் டி.வி.என்றும், என்.டி.வி. என்றும், எஸ்.டி.வி. என்றும், ஸ்டார் டி.வி. என்றும் எத்தனையோ டி.வி.-க்கள் இருக்கின்றன. அந்த டி.வி.-க்கள் எல்லாம் தமிழிலே ஒளி பரப்புவதாகத் தெரியவில்லை. தமிழுக்கு முக்கியத்துவம் தருவதாகவும் தெரியவில்லை. ஆகவே, தமிழகத்தின் சார்பாக தனியாக ஒரு சேனலை நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் தொட்டில் குழந்தைகள் பற்றியும், காவல் நிலையங்கள்

பற்றியும் இந்த நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொள்வதற்கு அது ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக நாம் கிட்டதட்ட 24 பேர்களுக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம்; அறிஞர்கள் பெரிய பெரிய மகான்கள் போன்றவர்களுக்கெல்லாம் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு தன்னுடைய உயிரையே கொடுத்த தீரன் சின்னமலை அவர்களுக்குப் பிறந்த நாள் விழாவை தமிழக அரசின் சார்பாக ஆண்டுதோறும் மாவட்டத் தலைநகரங்களிலே கொண்டாட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக டிரைவ்-இன் தியேட்டர்-திறந்தவெளி கலை அரங்கம் இருக்கிறது. அது பம்பாயிலே இருக்கிறது. அடுத்ததாக சென்னையிலே இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக தொழில் நகரம் கோவை மாநகரம். அந்த கோவை மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில் திறந்த வெளி கலை அரங்கத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு அடுத்தபடியாக இப்போது சினிமா தியேட்டர்களிலே ஏ.சி.யோடு இணைந்தது என்று விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால் சில இடங்களிலே ஏ.சி.-யைப் போடுவது கிடையாது. ஆனால் கட்டணத்தை மட்டும் வசூல் செய்து விடுகிறார்கள். இதை அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து இதையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து கேபிள் டி.வி. இந்த கேபிள் டி.வி. இப்போது புற்றீசல்கள் போல எல்லா இடங்களிலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த கேபிள் டி.வி.யைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் பழனிசாமி அவர்கள் கூட சொன்னார்கள். இந்த கேபிள் டிவி.-யினால் குடும்பங்கள் எவ்வளவு சிரமப்படுகிறது, குழந்தைகள் எப்படி மனம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைத் தடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்து இப்போதெல்லாம் சினிமா எடுப்பது என்றால் அந்த சினிமாக்களிலே எம்.எல்.ஏ.-களை வில்லன்களாகச் சித்தரிக்கிறார்கள். அமைச்சர்களைக் கொடியவர்களாகச் சித்தரிக்கிறார்கள். இதைத்தான் இப்போது சினிமாவிலே லேட்டஸ்டாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே எல்லாம் ராஜா இருந்தால் மந்திரி வில்லனாக இருப்பான், அல்லது அமைச்சர் நல்லவனாக இருந்தால் தளபதி வில்லனாக இருப்பான். ஆனால் இந்தக் காலத்திலே அமைச்சர்களையும் சட்டமன்ற

உறுப்பினர்களையும்தான் சினிமாவிலே வில்லன்களாகக் காட்டுகிறார்கள். கொடியவர்களாகக் காட்டுகிறார்கள். அவர்களை மோசக்காரர்களாகக் காட்டுகிறார்கள். குடும்ப வாழ்க்கையை விட்டு எவ்வளவோ ஆபத்துக்களுக்கு மத்தியில் குழந்தை குட்டிகளையெல்லாம் விட்டு விட்டு பொது வாழ்க்கையில் இறங்கி சமுதாயத்திற்காகப் பணி செய்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை இப்படித் தகாத முறையில் காட்டுவது சரியா ? இதை யார் தடுப்பது? நம்மிடம் அதிகாரம் இருக்கிறதா ? அல்லது மத்திய சர்க்கார்தான் அதைச் செய்யவேண்டும் என்றால் மத்திய சர்க்காரிடம் சொல்லி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சமுதாயத்திற்காக பாடுபடுபவர்கள்; அவர்களைக் கொடியவர்களாகக் காட்டக் கூடாது என்று நீங்கள் தயவு செய்து முயற்சி எடுத்து மத்திய சர்க்காருக்குச் சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தாற்போல, கோவை மாவட்டத்தை எடுத்துக்கொள்வீர்களானால் அங்கு கோவை குற்றாலம் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கோவை குற்றாலத்திலே எப்போதும் தண்ணீர் வீழ்ந்து கொண்டிருக்கும். கோடை காலத்தில் கூட நீர் வீழ்ச்சி விழுந்துக் கொண்டிருக்கும். வன விலங்குகள் எல்லாம் அங்கே அதிகமாக இருக்கின்றன. உல்லாச பயணிகள் எல்லாம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோவை குற்றாலத்தை நீங்கள் ஒரு சுற்றுலா மையமாக ஆக்கி அந்தச் சுற்றுலா மையத்திற்கு சுற்றுலாப்பயணிகள் அத்தனை பேரும் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த கோவை குற்றாலத்தை சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும் என்று கேட்டு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

பிற்பகல் 3-40

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி மற்றும் சுற்றுலாத்துறை மானியத்தின்மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைச் சொல்லி, இந்த அவையிலே என்னை ஆளாக்கிப் பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கி தந்திருக்கின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் எங்களின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே

TRUTH ALONE TRIUMPHS

அவர்களுக்குத் தெரிவித்து, என்னுடைய உரையைத் துவக்குகின்றேன். இங்கே இந்தத் துறையின் மீது பல்வேறு கருத்துக்களை இங்கே சொன்னாலும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இந்த தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் செய்த அந்த நல்லெண்ணத்தை மட்டுமல்ல அவர்களுடைய வரலாற்றை - இன்றைக்கு அவர்களுடைய அடியொற்றி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பம் இன்றைக்கு நலிந்திருக்கின்ற நேரத்திலே அண்ணாவினுடைய துணைவியார் அண்ணியார் அவர்களை அழைத்து இந்த அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் சார்பிலே நாங்கள் இருக்கிறோம், உங்கள் குடும்பத்தைக் காப்பதற்குத் துணையாக இருப்போம் என்று சொல்லி தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அண்ணியார் அவர்களுக்குத் தேவையான உதவிகளை அன்றைக்கு அளித்ததற்கு அந்தக் குடும்பம் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறது. மக்களும் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் மீது நன்றி வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே திரைப்படத் துறையிலே அண்ணல் காந்தி அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக நம்முடைய செய்தித் துறையின் மூலமாக வெளியிட்ட வரலாறு உண்டு. அந்த வகையிலே பேரறிஞர் பெருந்தகை அண்ணாவினுடைய வாழ்க்கை வரலாற்றை-திரைப்படமாக வெளியிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னாலே பேசிய ராஜு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தொலைக்காட்சி இன்றைக்கு எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே சென்னை தொலைக்காட்சி வெறும் தொல்லைக் காட்சியாகத்தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறதே தவிர அது தொலைக்காட்சியாக இல்லை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்தச் செய்தியை வைக்கின்ற நேரத்திலும் சரி, அல்லது எந்தச் செய்தி வந்தாலும் சரி, தமிழை அழித்துவிட்டு இந்தியை எந்த நேரத்திலே உள்ளே கொண்டு வரலாம் என்று இன்றைக்கு மத்திய அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான் மத்தியிலே இருந்து வருகின்ற அமைச்சர் அவர்கள் கூட நாங்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு கடைசியாக அவர் சொல்லுகின்ற நேரத்திலே சொல்கிறார். காலம் வருகின்ற நேரத்திலே கட்டாயமாக அதைக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலைக்கு நாங்கள் ஆளாவோம் என்றுகூட மறைமுகமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்தத் தொலைக்காட்சியைப் பொறுத்தவரை செய்தி வாசிக்கின்ற நேரத்திலேகூட - இன்றைக்குத் தமிழகத்திலே ஒரு ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

1994 ஏப்ரல் 29] [திரு. காஞ்சி பன்னீர்செல்வம்]

மக்களுடைய தலைவர் இந்தத் தமிழகத்தை இன்றைக்கு ஆண்டுகொண்டிருக்கிறார்கள். அந்தத் தலைவருடைய நிகழ்ச்சியை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நிகழ்ச்சியை, எந்த நிகழ்ச்சியையும் தொலைக்காட்சியிலே காட்டுவதில்லை. டெல்லியிலிருந்து மந்திரிகள் வந்தால் அதை மட்டும் தொலைக்காட்சியிலே சொல்வார்கள். டெல்லியிலேயிருந்து ஒரு மந்திரி இங்கே வந்தால் அந்தச் செய்தியை, அந்தப் படத்தை மட்டும் திரையிடுகிறார்கள். தொலைக்காட்சி நிறுவனத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொலைக்காட்சி திரு. ராஜு குறிப்பிட்டதைப்போல, எல்லோருடைய வரிப் பணத்திலே உருவாகின்ற தொலைக்காட்சியே தவிர, ஏதோ மத்தியிலே அமைச்சராக இருக்கின்ற அவருடைய பணத்திலே வந்த தொலைக்காட்சி இல்லை என்பதை நான் இந்த அவையிலே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால், இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் தொலைக்காட்சியிலே காண்பிக்கிறார்கள். நான் ஒன்றை இங்கே சொல்வது சாலப்பொருத்தம் என்று நினைத்து சொல்லிக்கொள்கிறேன். ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கட்சிக்குள்ளே போகக்கூடாது. நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காண்பிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைக் காண்பிப்பது இல்லை என்று இந்த மானியத்திலே பேசுவது சரி. (குறுக்கீடு) நானே சொல்கிறேன். ** எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நான் இருக்கிறேன். என்னிடம் அதை விட்டுவிடுங்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் காண்பிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைக் காண்பிப்பது இல்லை, அல்லது வேறு நிகழ்ச்சிகளைக் காண்பிப்பது இல்லை என்று பேசுவது வரையிலும் சரி, அதற்குப் பிறகு ** என்றெல்லாம் பேசுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நான்தான் நீக்குகிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவருக்கு நான் அட்வைஸ் செய்கிறேனே. போதும், நீங்கள் பேசுங்கள்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : தலைவர் அவர்களே, நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் புரட்சித் தலைவியை எதிர்க்கின்றவர்கள் யாராக இருந்தாலும் உடனே அவர்களுடைய செய்தியை மட்டும் தொலைக்காட்சியிலே காட்டுவதும், அவர் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தினால்கூட ஏதோ ஒரு நிகழ்ச்சியாகத்தான் காட்டுகிறார்கள். அது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எந்த அடிப்படையிலே நியாயம் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அப்படி காட்டுகின்ற அந்தத் தொலைக்காட்சி ** அதையும் காட்டியிருக்க வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி)(குறுக்கீடுகள்)

பிற்பகல் 3-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சிப் பிரச்சினை இங்கே வேண்டாம்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் நாங்கள் கலந்துகொள்ள வேண்டுமா, வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசிக்கொண்டிருக்கிறார் என்றால் நான் அதைத்தான் நீக்கிக் கொண்டு இருக்கிறேனே.(குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் நடத்தப்படுகின்ற அரசு நிகழ்ச்சிகளில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எவ்வாறு மதிக்கப்படுகிறார்கள்? முதலமைச்சர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் தனியாகக் கேளுங்கள். ** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது (குறுக்கீடு) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நடத்துகின்ற அரசு விழாக்களில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே கேட்டார்கள். தமிழக அரசு நடத்துகின்ற அத்துணை அரசு விழாக்களிலும் விளம்பரப்படுத்தப்படுகின்ற அழைப்பிதழ்களில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவாக இருந்தாலும் சரி, அல்லது மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள் விழாவாக இருந்தாலும் சரி, ஏறத்தாழ மாவட்ட அளவில் 11 விழாக்களும், மாநில அளவில் 19 அரசு விழாக்களும், மொத்தம் 30 விழாக்களை நடத்துகிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்கள் .அதிலே அனைத்திலும் அச்சடிக்கப்படுகின்றன. ஆனால் எந்த விழாவிலும் காங்கிரஸ் கட்சியைச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவில் கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே நேதாஜியினுடைய பிறந்த நாள் விழாவை நடத்தினோம். அதில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எந்த சட்டமன்ற உறுப்பினரும் கலந்துகொள்ளவில்லை. மதுரையில் அண்மையில் அரசு பொருட்காட்சி நடத்தப்பட்டது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எந்த சட்டமன்ற உறுப்பினரும் கலந்துகொள்ளவில்லை. முதலமைச்சர் விழாவைப் பொறுத்தவரையில், அதில் எந்த சட்டமன்ற உறுப்பினர் பெயரும் அச்சடிக்கப்படுவது இல்லை. மாண்புமிகு அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றுதான் போடுகிறார்கள். அதிலேகூட பல காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா நடந்தது. இப்போது இருக்கிற 2 அமைச்சர்களும் அப்போது அமைச்சராக இல்லை. சென்ற ஆண்டு 2 பேரும் வரவில்லை. நான் மட்டுந்தான் சென்று கலெக்டரோடு இருந்து அந்த விழாவினைச் சிறப்பாக நடத்தினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தப் பக்கம் இருப்பவர்கள் யாரும் எங்களுடைய பெயரைப் போடவில்லை, என்றெல்லாம் குறை சொல்லவில்லை. நீங்கள் சொல்லுகிற காரணத்தால் அந்தப் பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் போடுகிறோம் ; உங்களை மதிக்கிறோம் என்று தெரிவிக்கவேண்டும் என்பதற்காகச் சொன்னார்கள். உங்கள் மீது குற்றச்சாட்டாக அல்ல. காரணம் அது உங்களுடைய உரிமை. நீங்கள் வரலாம், வராமல் இருக்கலாம், சட்டமன்றத்திற்கு வராமல் இருப்பதைப் போல, அல்லது செல்வதைப் போல. எப்போது வேண்டுமானாலும் வரலாம், போகலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே நாங்கள் தலையிட முடியாது. ஆனால்

நாங்கள் போடுகிறோம். நாங்கள் போடுகிறோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறோம். நாங்கள் தவறு செய்யவில்லை. நாங்கள் உங்கள் பெயரைப் போட்டு இருக்கிறோம், மதித்து இருக்கிறோம் என்று சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னார்கள். அவர்கள், எங்கள் பெயரைப் போட வில்லையே என்று குறைப்பட்டுக் கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதும் சரி, இப்போது அமைச்சராக இருக்கும்போதும் சரி, அரசு விழாக்களில் எங்களிடம் தேதி கேட்டு, எங்களுடைய பெயர் போடப்பட்டிருக்குமானால் நிச்சயமாக அந்த விழாக்களில் நாங்கள் கலந்துகொள்ளாமல் தவிர்ப்பது இல்லை. அவசியம் கலந்து கொண்டு சிறப்பு செய்வோம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குச் சிறப்பு செய்வதில் நாங்கள் பெருமைப்படக்கூடியவர்கள். அந்தவகையில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவை சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு நாங்கள் புறக்கணித்தோம் என்ற வகையில் அவர் சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட விழாவை அவர்கள் நாள் குறித்து நடத்துகின்றபோது, நாங்கள் வேறு பணியில் சென்னையில் இருந்த காரணத்தால் அந்த விழாவில் கலந்துகொள்ளமுடியாமல் இருந்து இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு விழாக்களுக்கு அச்சடிக்கப்படுகின்ற அழைப்பிதழ்களில் — நான் அந்த மாவட்டத்திலே 3 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு இருப்பவன்; அதேபோல், திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே மூத்த உறுப்பினர் — எங்களுடைய பெயர்களையெல்லாம் கீழே போட்டுவிட்டு, ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களையெல்லாம் மேலே போடுகிறார்கள். அதோடு மாத்திரம் அல்லாமல், மக்களால்

தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகளுடைய பெயரைக் கீழே போட்டுவிட்டு, பால் வளத்தினுடைய மாவட்ட ஒன்றியத் தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் அதிலே மேலே போட்டு அச்சடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதை இந்த அரசு செய்வது நியாயமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 3-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வ.உ.சி. மாவட்டத்தில் நடைபெறுகின்ற அரசு நிகழ்ச்சிகளில் எங்களுடைய பெயர்களைக் கீழே போடுகிறார்கள் ; அச்சடிக்காமல் விட்டு விடுகிறார்கள் என்றெல்லாம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டார். அண்மையிலே வ.உ.சி. மாவட்டத்திலே பல்துறை பணி விளக்க முகாம் என்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு அந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்கின்ற விழாவிற்கு நான் போய் இருந்தேன். ஏறத்தாழ 7 நாட்கள் வ.உ.சி. மாவட்டத்திலே 444 கிராமங்களுக்கும் அரசின் சாதனைகளையும், திட்டங்களையும், செயல்பாடுகளையும் எடுத்துச் சொல்கின்ற வகையிலே அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அந்தத் தொடக்க விழாவிற்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் வரவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, தொகுதி வளர்ச்சியிலே எந்த அளவிற்கு அக்கறை உள்ளவர்களாகச் செயல்படுகிறார்கள் என்பதையும் (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறேன். எங்களைப் போன்ற மூத்த உறுப்பினர்களைச் சரியான முறையில் மதிக்கவில்லை. அதனால்தான் நாங்கள் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ், உட்காருங்கள். அமைச்சர் சொல்லி முடிக்கட்டும். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் நடைபெற்ற விழாவில் தூத்துக்குடி தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பெயரைத்தான் மேலே போட முடியும். எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் என்பதற்காக, பெயரை மேலே போட முடியாது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்றுதான். மத்திய அரசு நடத்துகின்ற விழாக்களில் மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களையாவது நீங்கள் போடுகிறீர்களா அல்லது அழைக்கிறீர்களா?

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி விமான தளத்தினுடைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு முதலமைச்சரை நாங்கள் எந்த அளவுக்கு, மதித்துச் சிறப்பு சேர்த்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணரவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு இருந்த நிலையில் அப்படிச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு இருந்தோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியுமே தவிர, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் சொல்லவே இல்லை. இந்த விழா நடைபெற்றதே எனக்குத் தெரியாது. இங்கே, மெட்ராஸ் வந்தபிறகுதான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள்; நான் உங்களுடைய மாவட்டத்திற்கு வந்திருந்தேனே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களையும் அழைத்து இருந்தோமே, நீங்கள் யாரும் வரவில்லையே என்று கேட்டார். இதில் என்ன சூழ்ச்சி இருக்கிறது

என்று எனக்குத் தெரியாது. எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் எனக்குத் தெரிவிக்கவில்லை. இதற்காக, I will take the responsibility. எந்த விழாவிற்கும் எங்களுக்குச் சொல்வதில்லை. எந்த அமைச்சர் வந்தாலும், எந்த நிகழ்ச்சி நடந்தாலும் எங்களுக்குத் தெரிவது இல்லை. ஒருநாள் நான் மெட்ராஸுக்கு வந்திருந்தபோது, காலையிலே பேப்பரிலே பார்த்து தெரிந்து கொண்டேன். எங்களிடம், எந்த நிகழ்ச்சி நடந்தாலும் சொல்வதில்லை. அரசு அதிகாரிகள், சொல்லாமல் நாங்கள் எப்படி வர முடியும் ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் வந்திருந்தேனே, நீங்கள் ஏன் வரவில்லை என்று கேட்ட பிறகுதான் எனக்கே தெரியும். அந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். இதில், எல்லோரும் பேசவேண்டுமென்றால், முடியாது. திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா என்னுடைய தொகுதியில் மிகச் சிறப்பாக, வருடாவருடம் கொண்டாடப்படுகிறது. என்னுடைய கோரிக்கை என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் விருதுநகர் தொகுதிக்கு வந்து பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்பது. அவர்கள் வரும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கண்டிப்பாக, சிறப்பான வரவேற்புக்கு நாங்கள் என்றைக்கும் ஏற்பாடு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியின் கீழ் எந்த அமைச்சர் விருதுநகருக்கு வந்தாலும், நாங்கள் அவர்களைக் கண்டிப்பாக, சிறப்பாக வரவேற்போம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தயவுசெய்து இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சஞ்சய் ராமசாமி, உங்களுடைய தொகுதியிலே ஒரு முறை மாநில அளவில் நடந்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழாவில் நான்தான் கலந்து கொண்டேன்.

இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்களைப் போடுகிறபோது, விருதுநகரில் நடைபெற்ற காரணத்தால், திரு. சஞ்சய் ராமசாமி அவர்களின் பெயரைத்தான் முதலில் போட்டிருந்தார்கள். மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களையும், முன்னாள் அமைச்சராக இருந்த திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். பெயர் உட்பட, அவர்கள் பெயர்களையெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சஞ்சய் ராமசாமி பெயருக்குப் பின்னாலேதான் போட்டிருந்தார்கள். அந்த முறையைத்தான் பின்பற்றுகிறார்கள் என்பதை நானும் அறிவேன். எனவே, அதிலே இப்போது பிரச்சினை வேண்டாம். (குறுக்கீடுகள்) எந்த ஊரில் நடந்ததோ அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய பெயரைப் போடுகிறார்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சொன்னதற்கு நான் சொல்கிறேன். அந்த அடிப்படையிலே நடக்கவில்லை. நானும் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவில், விருதுநகரில் கலந்து கொண்டேன். அந்த விழாவில். சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைப் போடுகிறபோது.(குறுக்கீடு)

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். உங்களுக்கும் சேர்த்து நான் சொல்லி விடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைப் போடுகிறபோது அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய பெயரை மேலேதான் போட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு, திரு. டேனியல்ராஜ் அவர்கள் பேசுகிறபோது, எங்கள் பெயருக்கு மேலே பால் வளத் தலைவருடைய பெயரையெல்லாம் போடுகிறீர்களே என்று கேட்டார்கள். அதைத்தான் திரு. கும்பகோணம் இராமநாதன் சொல்ல வந்தார்கள்.

அவர்கள் மாவட்ட அளவிலே பொறுப்பிலே இருக்கிறார்கள் என்கிற காரணத்தாலே, அவர்கள் பெயரை மேலே போட்டிருக்கலாம். எனவே அதிலே ஒன்றும் தவறு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) காஞ்சி பன்னீர்செல்வம், நீங்கள் பேசிமுடியுங்கள். (குறுக்கீடு) பேசும்பொழுது சொல்லலாம்.

பிற்பகல் 3-55

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே மத்திய அரசின் சார்பிலே ஒரு விழா நடந்தது. நாங்களெல்லாம் ஊரிலே இருந்தோம் அன்றைக்கு. எங்களுடைய பெயரே போடப்படாமல் விழா நடந்தது. அப்பொழுது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். தஞ்சை மாவட்டத்திலே நடந்த மத்திய அரசினுடைய நிகழ்ச்சியில் (குறுக்கீடு) தஞ்சை மாவட்டத்திலே மட்டுமல்ல, எங்கே மத்திய அரசின் விழா நடந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளாகவே தெரிவது இல்லை. அந்தப் புகார்கள் என்னிடத்திலே இரண்டு, மூன்று வந்திருக்கின்றன. பல்வேறு இடங்களில் நடந்த எந்த மத்திய அரசு நிகழ்ச்சியிலேயும் எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை யாரும் மதித்துப் பெயர்கூடப் போடுவது இல்லை என்கிற புகாரைப் பல உறுப்பினர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நடக்கிற நிலவரமாகவும் இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ் : மத்திய அரசு நிகழ்ச்சிகளில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைத்தான் போடுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிகழ்ச்சிகளில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைத்தான் போட வேண்டுமென்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் (குறுக்கீடு) வழக்கம் என்று சொல்லுகிறார்கள். ஒரு பாராளுமன்றத் தொகுதி என்பது ஆறு சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்ததுதான். ஆகவே, அந்த ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாக உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?

திரு. எஸ். டேனியல்ராஜ் : முதலமைச்சர் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்களைப் போடுவது கிடையாது. அமைச்சர்களை மட்டும் போடுகிறார்களே; அந்த மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் ஏன் சட்டமன்ற உறுப்பினர்களாக அமைச்சருக்குத் தெரியவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கலந்து கொள்கிற நிகழ்ச்சியிலே போடுகிறபொழுது சில அமைச்சர்களை, அந்தத் துறைக்குச் சம்பந்தப்பட்ட அல்லது அந்த மாவட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களை மட்டும் போட்டுவிட்டு அதற்குப் பின்னாலே அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் என்று போடுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், ஒரு மாவட்டத்திலே முதலமைச்சரவர்கள் வந்தாலும்கூட, அருகிலே இருக்கிற, எல்லா மாவட்டங்களிலே இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுமே வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படியிருக்கிறபொழுது அவர்களுடைய பெயர் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகப் பொதுவாகப் போடப்படுகிறது. எனவே, எல்லோரும் அதிலே பங்கு பெற வேண்டுமே என்ற உணர்வில் பொதுவாகப் போடப்படுகிறது. ஆனால், அப்படிக்கூட உங்களுடைய மத்திய அரசின் அமைச்சர்கள் வருகிறபொழுது போடவில்லையே என்பதுதான் எங்களுக்கு இருக்கின்ற வேதனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி விமான நிலையத்தைப் பற்றி எதிர்க்கட்சித்

துணைத் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். சேலத்திற்கு மத்திய அமைச்சர்கள் வந்து ஒரு விமான நிலையத்தைத் திறந்தார்களே அப்போது முதலமைச்சர் அழைக்கப்பட்டாரா ? முதலமைச்சருடைய பெயர் அங்கே விளம்பரப்படுத்தப்பட்டதா ? மத்திய அமைச்சர்கள் வரும்பொழுது மாநில அரசுக்குத் தெரியாமல், எந்தத் தகவலும் தெரியாமல் அவர்களாக வந்து அவர்களாகவே செல்கிறார்கள் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றையதினம் முதலமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது - நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். எங்களுடைய பெயர்கள் எல்லாம் அழைப்பிதழிலே அடிக்கப்பட்டிருந்தது. இதற்குப் பின்னால் முந்தைய அரசு, கருணாநிதி முதலமைச்சராக இருந்த பொழுது அடிக்கல் நாட்டு விழாவிற்கு, மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலக அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தருகின்ற நேரத்திலே அந்த அழைப்பிதழிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்கள் அடிக்கப்பட்டிருந்தது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காஞ்சி பன்னீர்செல்வம். (குறுக்கீடு) பன்னீர்செல்வம் பேசி முடியுங்கள் இதை விவாதமாக ஆக்காதீர்கள், நேரம் ஆகிக்கொண்டே இருக்கிறது. (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு காஞ்சிபுரம் சென்றேன். திருத்தணியிலே ஒரு அரசு மாணவர் விடுதியினைத் திறப்பதற்காகச் சென்றபோது அங்கு காஞ்சி பன்னீர்செல்வம் போன்றவர்கள், என்னிடத்திலே சொன்னார்கள். அந்தப் பத்திரிகையிலே தவறுதலாக அந்தப் பகுதியின் காங்கிரஸ் கட்சியினுடைய எம்.பி.யினுடைய பெயர் விட்டுவிட்டது என்று சொன்னார்கள். உடனே நான் அதைக் கேன்சல் செய்துவிட்டு

சென்னைக்கு வந்துவிட்டேன். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், முதலமைச்சரவர்கள் எங்களுக்குச் சொன்னது, ஆணையிட்டது, எந்தக் கட்சி என்று பார்க்காதீர்கள், அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ., எம்.பி.யினுடைய பெயர் இருக்கிறதா என்று பார்க்கச் சொல்கிறார்கள். பார்த்தேன், பெயர் இல்லை. தவறுதலாக அரசு அதிகாரி செய்ததால், அந்த அரசு அதிகாரியை சஸ்பெண்ட் செய்திருக்கிறேன். நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் இந்த அரசு கவனமாக இருக்கிறது ; ஏதோ ஒருசில இடங்களிலே நடத்திருந்தால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

பிற்பகல் 4-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியைப் பற்றி நாங்கள் சொன்னது, வட நாட்டிலே இருக்கிற அந்த ஆதிக்கம், இங்கே நம்முடைய பண்பாட்டைக் குலைக்கின்ற வகையிலே திகழ்ந்து கொண்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே, மறைந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுடைய வரலாற்றை, இன்றைக்கு அவருடைய வாரிசு, தமிழகத்தை இன்று வழிநடத்துகிற இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், ஒலி ஒளி நாடாவாக அமைக்க வேண்டுமென்று ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக அதை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரு கருத்தினைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், அதை நிறைவேற்றுகிற வகையிலே, திட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கு, நன்றி தெரிவிக்கிற வகையிலே, தமிழக வரலாற்றிலே தமிழக மக்களுடைய இதயத்தில், 6 கோடி தமிழக மக்களுடைய இதயத்தில் இன்றைக்கு நீங்காத இடம் பெற்றிருக்கிற தமிழ்நாட்டின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டம் வரை, மிகச் சிறப்பான ஒரு நல்லாட்சியைத் தமிழகத்திலே நடத்தி, பல்வேறு நலத் திட்டங்கள் மூலமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிற புரட்சித்தலைவியின் பெயராலே, அவருடைய வாழ்க்கை வரலாற்றையும், ஒலி ஒளி நாடாவாக, செய்தித் துறையின் மூலமாக உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை, பேரவைத் தலைவர் மூலமாக, இந்த அவையில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல ; சரணாலயத்திற்கு ஒரு முக்கிய இடம், எங்களுடைய செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கல் பகுதி. அந்த வேடந்தாங்கலுக்கு இன்றைக்கு வெளிநாடுகளிலே இருந்து, பெரிய பெரிய வசதி படைத்தவர்கள் வந்து, பறவைகளின் சரணாலயத்தைக் கண்டுகளிக்கிற பெருமை உண்டு. அவர்கள் தங்குவதற்குரிய பாதுகாப்பான இடம் அங்கு இருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை. அங்கே கிராமங்களிலே இருக்கிற குடிசைகளில்தான், அவர்கள் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றுகிற வகையிலே, நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசிலே, இன்றைக்கு எல்லா பகுதிகளிலும் தங்குவதற்கு விடுதிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்; இன்னும் சொல்லப் போனால், அங்கே விடுதிகளைக் கட்டுவதற்குண்டான வழிவகைகள் எல்லாம் ஆராயப்பட்டு, அங்கு கட்டிடம் கட்டுவதற்கான கோப்பு இங்கே வந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, வேடந்தாங்கலுக்கு, வெளிநாட்டிலே இருந்து பறவைகளைப் பார்ப்பதற்கு வருகிற பயணிகள் அத்தனைப் பேரும், அங்கு தங்கி கண்டுகளிக்கிற வகையிலே, தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த அவையின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

நம்முடைய சென்னையிலே இருந்து மதுரை செல்லும் வழியிலே போகிறபோது, எல்லா பகுதிகளிலும் ஹைவே மோட்டல் இருக்கிறது. இங்கிருந்து பெங்களூர் போகிற வழியிலே இருக்கிறது, காஞ்சிபுரம் ஒரு முக்கியமான நகரம். அந்த நகரத்திற்கு முன்னாலே பொன்னேரிக்கரை இருக்கிறது. அந்த எல்லையின் முன்னே அங்கே ஒரு ஹைவே மோட்டல் கட்டினால், மிக நன்றாக இருக்குமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு கருத்தினை மட்டும் இங்கே சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பத்திரிகை நிருபர்களுக்கு இங்கே ஒரு சின்ன குறைபாடு. அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், அவர்கள் பஸ்ஸிலே போவதற்கு நாம் வசதி செய்திருக்கிறோம். ஆனால், அது மாவட்ட அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. மாநில அளவிலே அவர்கள் போவதற்கு வழிவகை செய்ய வேண்டும் அது இன்றைக்கு மற்ற மாநிலங்களிலே இருக்கிறது ; இங்கேயும் செய்ய வேண்டுமென்பதை அவர்களுடைய கோரிக்கையாக சொல்லியிருக்கிறார்கள். அதையும் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. காஞ்சி பன்னீர்செல்வம்] [1994 ஏப்ரல் 29

இன்னும் ஒரே ஒரு கருத்தினை மட்டும் சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் பல்வேறு தலைவர்களுக்கு நினைவாலயம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இங்கே பேசிக்கொள்கிறார்களே காங்கிரஸ்காரர்கள், அவர்கள் காலத்திலேகூட, இராஜாஜி மண்டபத்தைப் புதுப்பிக்க முடியவில்லை. ஆனால், புரட்சித்தலைவி அவர்கள் 19 ஆண்டுகளுக்குப் பின்னர், அந்த மண்டபத்தை, பழுதடைந்திருக்கின்ற மண்டபத்தை கட்டிக் கொடுப்பதற்குக்கூட, இன்றைக்குப் புரட்சித்தலைவி அவர்கள் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

அது மட்டுமல்ல ; பண்டைய கால அறிஞர்கள் எழுதிய மிக முக்கியமான புத்தகங்கள். அவற்றை எழுதியவர்களின் பெயர்கூட தெரியாமல் அழியும் நிலைமையைத் தடுத்து, அத்தகைய பண்டைய கால குறிப்புகளை, கருத்துக்களை, அதன் முக்கியத்துவம் கருதி, அவை அழியா வண்ணம் செய்தியாக வெளியிட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தலைப் புத்தகங்கள் கூட விற்பனைக்கு இல்லாத அன்றைய காலகட்டத்தில், திருவாளர் சாமிநாத சர்மா அவர்கள், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட அறிவியல் நூல்களை எழுதினார்கள். இன்று அவரைப் பற்றி விஞ்ஞானத்தைப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்குக்கூட தெரியாத நிலை, மற்ற சாத்தியக்கூறுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய மாமேதைகள் எழுதிய படைப்புகளையும், நல்ல அறிஞர்களுடைய படைப்புகளையும் சேகரித்து, அவர்கள் எழுதிய புத்தகங்களை அரசு நூலகங்கள், கன்னிமரா நூலகத்தில் வைக்க அரசு ஆவன செய்ய வேண்டும். தமிழக அரசின் சார்பிலே அதை பாட புத்தகமாகக்கூட சேர்த்தால் நன்றாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டு, தந்த வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, விடை பெற்றுக் கொள்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 4-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

* திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்ததற்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். பொதுவாக கிராமத்திலே ஒரு மரபு வழி பழமொழி சொல்வார்கள். ஒரு திட்டத்தையோ, ஒரு காரியத்தையோ தொடங்குகிறபோது, தொடங்கி வைப்பவருடைய கைராசி பற்றி சொல்லி

1994 ஏப்ரல் 29] [திரு. தேனி பன்னீர்செல்வம்]

இவர்கள் தொட்டால் துலங்கும். கைப்பட்டால் விளங்கும் என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலே கேட்பாரற்று, கவனிப்பாரற்று கிடந்த இந்தச் சுற்றுலாத் துறை இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய பார்வை பட்டதால், பட்டமரம் துளிர்க்கும், பாலையிலும் நீர் சுரக்கும் என்கிற வைர வரிகளை மெய்ப்பித்திருக்கிறார்கள். ஆதாரமாகச் சொல்வதாக இருந்தால் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு 1992—ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற பொங்கல் திருநாளில் மகாபலிபுரத்தில் முதல் முறையாக டேன்ஸ் புரோகிராம் என்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, வெளிநாட்டுப் பயணிகள் அத்தனைபேரும் அந்த நிகழ்ச்சியிலே பங்கேற்று கண்டுகளிக்க வேண்டுமென்கிற உணர்வோடு விழாவை ஏற்பாடு செய்து, தொடர்ந்து கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக மிகச் சிறப்பாக அந்த விழா நடைபெற்று வருகிறது. அதன் மூலம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை போன்ற மூன்று விடுமுறை நாட்களிலும் ஏறக்குறைய 10, 20 பேர் வந்து பார்த்துச் சென்ற நிலை மாறி இன்றைக்கு ஏறக்குறைய 500 முதல் 800 பேர் வரை ஒரே நேரத்தில், வெளிநாட்டுப் பயணிகள் வந்து அந்த நிகழ்ச்சிகளைக் கண்டு, பாராட்டி, தமிழ்நாட்டினுடைய கலை அம்சத்தை மிகவும் போற்றுகின்ற நிலைமை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படி வெளிநாட்டுப் பயணிகள் வருகை அதிகரித்து இருப்பதன் காரணமாக நம்முடைய நாட்டிற்கு இன்றைக்கு அன்னிய செலவாணி மிகவும் அதிகமாகக் கிடைக்கின்றது. அதுமட்டுமல்ல, வெளிநாட்டுப் பயணிகள், சுற்றுலாப் பயணிகள் வருகையின் காரணமாக தமிழ்நாட்டிலே பல இடங்களிலே நேரிடையாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, உள்நாட்டிலே உருவாகின்ற கைவினைப் பொருட்கள் அதிகமாக விற்பனை ஆவதற்கும் இந்தச் சுற்றுலாப் பயணிகளுடைய வருகை ஒரு வாய்ப்பாகப் பயன்படுகிறது. (குறுக்கீடு) சும்மா இருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறபோது, அவருடைய கவனத்தை திசை திருப்புகின்ற வகையில் பக்கத்தில் இருக்கின்ற உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடு) தலைமைக் கொறடா, இந்த நேரத்தில் உங்கள் கொறடா வேலையைச் செய்ய வேண்டியதில்லை. பிறகு உங்கள் வேலையைச் செய்யலாம். உங்கள் இருக்கைக்கு வரவும்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : அதேபோல, தேசிய ஒருமைப்பாடு, இந்தச் சுற்றுலாப் பயணிகள் நாடு முழுவதும் வருகின்ற காரணத்தினால்,

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் கிடைக்கின்றது. அந்தவகையிலே தமிழ்நாட்டிலே சுற்றுலா மையங்களுக்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்ற காரணத்தாலும், அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு விளங்குகின்ற காரணத்தாலும், இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களும் தமிழகத்தை சொர்கபுரி என்று சுட்டிக்காட்டுகின்ற காரணத்தாலும், இந்தச் சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை இன்னும் நிறைய செயல்பாடுகள், செயல் திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், இன்றைக்கு இந்தச் சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கக்கூடிய நிதியினுடைய அளவைப் பார்க்கின்றபோது, மிகவும் வருத்தமாக இருக்கின்றது. இந்த நிதி ஒதுக்கீடு, ஏறக்குறைய திட்டச் செலவிற்காக வெறும் 11 இலட்சம்தான். அதாவது சுற்றுலா மையங்களை நிலை உயர்த்துவது, (Upgrading) என்கிற வகையிலே 4.5 இலட்சம் ரூபாய் செலவில் கொடைக்கானல், திருநெல்வேலி, தருமபுரி போன்ற பகுதிகளில் ஒரு திட்டத்தை செயல்படுத்துவதற்கு வழி உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மையங்கள் உருவாக்கப்பட்டிருக்கிற அளவுக்கு பணியாளர்களுக்கான பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 4-10

அதேபோல், பூம்புகார் மற்றும் ஏற்காட்டிலே பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 3.5 இலட்சம் வீதம் இங்கே திட்டங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. விளம்பரச் செலவுகளுக்காக 1,15,00,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இவை எல்லாம் போதுமானதாக இருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இந்த நிதி ஒதுக்கீடு போதாது என்றுதான் நான் கருதுகிறேன். ஏறக்குறைய ரூ. 2,600 கோடிக்கு மேல் நம்முடைய தமிழ்நாட்டினுடைய பட்ஜெட் இருக்கிறது. இப்படி ரூ. 2,600 கோடிக்கு மேல் தமிழ்நாட்டின் பட்ஜெட் இருக்கும்போது சுற்றுலாவுக்கு என்று அரை சதவீதமாவது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கேரளாவில் 7 கோடி ரூபாய் சுற்றுலாவுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக பத்திரிகையில் நான் பார்த்தேன். வருகிற காலங்களில் இந்த நிதியை அதிகமாக ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று இந்தப் பேரவையின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இந்தச்

சுற்றுலாத் துறையிலே மிகப்பெரிய கவனம் செலுத்தினார்கள். அவ்வாறு மிகப்பெரிய கவனம் செலுத்தி அதிகாரிகளிடம் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து தாருங்கள் என்று கேட்டு அந்தத் திட்டங்கள் எல்லாம் தயாராகிக் கொண்டிருக்கிறபோது, ஆண்டுதோறும் அவைகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்குகிறபோது, கடந்த ஆண்டிலே எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதனை அளவுகோலாக வைத்து இப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருந்தால் நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வருடைய லட்சியங்களை நிச்சயமாக முழுமையாக நிறைவேற்ற இயலாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மிகப்பெரிய தொழிலாக, லாபகரமான தொழிலாக மாற்றுவதற்கான பல்வேறு வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்த நாட்டிலே என்ன வளம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அனைத்து வளங்களும் நிரம்பி இருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாணியிலே சொல்வதாக இருந்தால், 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்' என்று நம்முடைய தங்கத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடினார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாடலுக்கு ஏற்ப இங்கே தமிழ்நாட்டில் சுற்றுலாவுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் இருக்கின்றன. குறிப்பாக ஹில் ஸ்டேஷன்ஸ், அதாவது மலைப்பிரதேசங்கள் இருக்கின்றன. கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற கோடைவாசஸ்தலங்கள் இருக்கின்றன. அதேபோல், கடற்கரைப் பிரதேசங்கள் இருக்கின்றன. சென்னை, கன்னியாகுமரி, மகாபலிபுரம் போன்ற கடற்கரைப் பிரதேசங்கள் இருக்கின்றன. அதேபோல், கலைவளம் செழிப்பாக இருக்கக்கூடிய பல்வேறு தொன்மை வாய்ந்த கோபுரங்கள், கோயில்கள் கொண்ட பெரிய நகரங்கள் பல இருக்கின்றன. பழமை வாய்ந்த கோயில்கள் இருக்கின்றன.

அதேபோல், வனவிலங்கு சரணாலயங்கள் இருக்கின்றன. முதுமலை, முண்டந்துறை போன்ற இடங்கள் இருக்கின்றன. வேடந்தாங்கல், கோடியக்கரை, மூன்றடைப்பு போன்ற பல்வேறிடங்களில் பறவைகள் சரணாலயங்கள் இருக்கின்றன.

அதேபோல், அணைக்கட்டுகள் இருக்கின்றன. கண்ணைக் கவரும் அளவுக்கு பார்க் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய வகையில் மேட்டூர், சாத்தனூர் போன்ற அணைக்கட்டுகள் இருக்கின்றன. நீர்வீழ்ச்சிகள்

இருக்கின்றன. குற்றாலம், ஹொகேனக்கல் போன்ற நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன. ஊட்டி, கொடைக்கானல் போன்ற உல்லாசப் பயணிகள் வருகின்ற இடங்களில் இருப்பது போன்ற ஏரிகள், படகு விடுவதற்கான பெரிய ஏரிகள் இருக்கின்றன.

அதேபோல், ரோடு வசதி தமிழ்நாட்டில் நன்றாக இருக்கிறது. இந்தியாவிலேயே மிகச் சிறந்த சாலை வசதி தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது. இப்படி மிகச்சிறந்த சாலை வசதி மட்டுமல்ல ; மிகச்சிறந்த பஸ் போக்குவரத்தும் இருக்கிறது. மாநிலங்களுக்கு உள்ளேயும், மாநிலங்களுக்கு வெளியேயும் இயங்கக்கூடிய வகையில் பஸ் வசதி இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் திருப்பெயரால் அமைந்திருக்கக்கூடிய, சகல வசதிகளுடன் கூடிய போக்குவரத்து வசதி இருக்கிறது. இப்படி எல்லா வசதிகளும் இருக்கக்கூடிய இந்தத் தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது கோவா மாநிலம் ஒரு சிறிய மாநிலம். அந்தச் சிறிய மாநிலத்தில் சுற்றுலா எந்த அளவுக்கு அந்த மாநில மக்களுக்கு பயன்படுகிறது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில் மிகவும் குறைவு. ஆனால், இந்த வசதிகளை எல்லாம் பெருக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் 'Classification of Hotels' என்ற ஒரு நிலை இருக்கிறது.

பிற்பகல் 4-15

தற்போது இருக்கக்கூடிய ஹோட்டல்களில் எல்லாம், பல இடங்களில் தரம் குறைவாக இருக்கிறது. ஸ்டார் ஹோட்டல் என்று சொல்லப்படுகிறதே தவிர, அங்கே அதற்குரிய வசதி வாய்ப்புகள் போதுமான அளவுக்கு வைக்கப்படுவதில்லை. காரணம் இந்த ஸ்டார் ஹோட்டல்களென நிர்ணயம் செய்வது மத்திய அரசினுடைய பொறுப்பில் இருக்கிறது. ஆனால் டூரிசம் என்கின்ற பொருள் மாநில அரசினுடைய பட்டியலில் வருகிறது. இதனால் ஸ்டார் ஹோட்டல்களில் தர நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம் நம்முடைய மாநில அரசிடம் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு அரசாணையை வெளியிட்டார்கள். அரசாணை எண். 133, நாள் 6-5-1992 அந்த அரசாணையின் மூலம் சிறப்புச் சுற்றுலா பகுதிகள் Special Tourism Areas என்கின்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தின்படி முட்டுக்காட்டிலிருந்து பாண்டிச்சேரி, தரங்கம்பாடி

மற்றும் தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள 10 கிலோ மீட்டர் சுற்றளவுள்ள பகுதி, அதேபோன்று, காஞ்சிபுரம் நகராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகள், மகாபலிபுரம் போன்ற பல்வேறு பகுதிகளைச் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக அறிவிக்கவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். இதை மத்திய அரசும் மனமுவந்து ஏற்றுக் கொண்டது. ஆனால் மத்திய அரசு, ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, பல்வேறு தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் அங்கே சுற்றுலா மையத்திற்கான பல்வேறு விரிவாக்கப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று விரும்பியபோது அதையெல்லாம் செய்வதற்குப் பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டிருக்கிறது. குறிப்பாக கடற்கரையை ஒட்டியுள்ள 200 மீட்டர் அளவுக்கு எந்தவிதமான மாற்றமும் செய்யக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்திருக்கிறார்கள். அதேபோல் கட்டப்படுகின்ற கட்டிடங்கள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்கின்ற சட்ட திட்டத்தையும் மத்திய அரசு வைத்திருக்கிறது. ஆனால், இந்தச் சட்ட திட்டங்கள் கோவாவில் இல்லை. கேரளாவில் இருக்கின்ற கோவளம் கடற்கரைப் பகுதியில் நிச்சயமாக இல்லை. அங்கே கடற்கரைக்கு வெகு அருகிலேயே, கடற்கரையிலிருந்து அலைகள் வந்து மோதுகின்ற இடத்திலேயே, இதுபோன்ற கட்டிடங்களை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட சலுகைகளை நம்முடைய தமிழ்நாடு அரசுக்கும் தமிழ் மாநிலத்திற்கும் வழங்க வேண்டும். இதுபோன்ற இடங்களிலே இப்படிப்பட்ட சலுகைகளை வழங்குவதற்கு மத்திய அரசினுடைய சட்டத்தைத் தளர்த்த வேண்டும், விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய தொகுதி சம்பந்தமாக ஒரே ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற மிகப்பெரிய திட்டமாக சிம்லாவிலே வின்ச் என்று சொல்லப்படுகின்ற வசதியை செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவில் என்னுடைய போடிநாயக்கனூர் தொகுதியில், குரங்கனூர் என்ற ஒரு இடத்திலிருந்து டாப் ஸ்டேசன் என்று சொல்லக்கூடிய ஒரு இடம் வரை 7 கிலோ மீட்டர் தூரம் சென்றுவர ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்பு டாட்டா கம்பெனி தேயிலை ஏற்றுவதற்காகவும், தேயிலை, காப்பி போன்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவும் ஒரு வின்ச் அமைத்து பயன்படுத்தினார்கள். அந்த வின்ச் இப்போது செயல்படவில்லை. இருந்தாலும்கூட அந்த வின்ச் இருந்த இடத்தில் இருந்த தூண்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. அந்த இடத்தைப் பயன்படுத்தி நம்முடைய குழந்தைகளுக்குப் பொழுது போக்கு அம்சமாக அந்தப் பகுதியை ஒரு சுற்றுலா மையமாக உருவாக்க வேண்டும். அந்த டாப் ஸ்டேசனில் இருந்து வெகு அருகாமையிலே சுமார்

38 கிலோ மீட்டர் தூரத்திலே கொடைக்கானல் இருக்கிறது, 26 கிலோ மீட்டர் தூரத்திலே மூணாறு இருக்கிறது, 72 கிலோ மீட்டர் தூரத்திலே தேக்கடி இருக்கிறது, 38 கிலோ மீட்டர் தூரத்திலே மேகமலை இருக்கிறது, 46 கிலோ மீட்டர் தூரத்திலே வைகை அணை இருக்கிறது. இப்படி டாப் ஸ்டேசனைச் சுற்றி சுற்றுலா மையங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த வின்ச் வசதியை செய்து தருவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் உறுதுணையாக இருந்து செயல்பட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை அரசுக்கு இதை செய்வதற்கு நிதி ஆதாரம் இல்லையென்றால், தனியார் யாரேனும் முன்வந்தால் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பினை தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ். நீங்கள் சொன்னதுபோல் முடித்து விடுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மற்றும் செய்தி ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்குப் பேரவைத் தலைவருக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுலாத் துறை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் வருவாய் உள்ள ஒரு துறையாக மாறி இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 30 விழுக்காடுக்கும் மேல் தமிழ்நாட்டுக்குத்தான் வருகிறார்கள். பழமையான கோயில்கள், அழகிய கடற்கரைகள், இயற்கைச் சூழலுடன் கூடிய அமைதி தவழும் மலைப்பகுதிகள், வனச் செல்வங்கள், வன வளங்கள் நிறைந்த பகுதியாகத் தமிழகம் திகழ்ந்து வருகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கும், தனியாரை ஊக்குவிப்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்தும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விழாக்கள், விளம்பரங்கள் போன்று சுற்றுலாவுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் இன்றையதினம் செயல்பட்டு வருகிறார்கள். விழாக்கள் மூலமாகவும், சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதன் மூலமாகவும் அரசு பல்வேறு நல்ல திட்டங்களை இன்றையதினம் செய்து வருகிறது. எனது மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத்தில் ஓலைக் குடாவில் கடல் பூங்கா திட்டம் என்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு முன்பு ஆராய்ச்சி செய்தது. ஆனால், அந்தத் திட்டத்தில் அடிப்பாகம் கண்ணாடி பொருந்திய படகில்

எடுத்துச்சென்று சுற்றிக் காண்பித்து அறிவு சார்ந்த பயணமாக அமைப்பதற்கு முடிவு செய்திருக்கிறது. உண்மையிலேயே, இந்தியாவில் மட்டுமல்லாமல் அயல் நாடுகளிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பல்வேறு பயணிகள் வந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கவர்கின்ற வகையில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இராமேஸ்வரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்தத் தீவுகளை எல்லாம் வனத் துறையிலிருந்து சுற்றுலாத் துறைக்கு எடுத்து, இதை வைத்து, மக்களைக் கவர்கின்ற துறையாக ஆக்கவேண்டும். மக்கள் அழகை ரசிப்பதற்காகத்தான் இருக்கின்றார்கள். இந்த இயற்கை அழகை மக்கள் கண்டுகளிக்கவும் அதன்மூலம் பல்வேறு கல்விப் பயணத்தையும் மேற்கொள்வதற்கும் இந்தத் தீவுகளைப் பயன்படுத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-20

என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிப்பட்டணம் என்ற ஊரில் நவபாசாணம் என்ற 9 நவக்கிரக பூசைகள் செய்கின்ற இடம் முக்கியமாக விளங்கி வருகிறது. இராமேஸ்வரம் வருகின்றவர்கள் தேவிப்பட்டணத்திற்கும் அதே போன்று, ராமர் பாதம் பட்ட இடமான சேதுகரைக்கும் செல்கின்றார்கள். ஆகவே, இராமேஸ்வரம் வருகின்றவர்களை தேவிபட்டணத்திற்கும் சேதுகரைக்கும் அழைத்துச் செல்கின்ற அளவில் படகுப் போக்குவரத்து செய்து கொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய இராமநாதபுரம் வட்டத்தில் காஞ்சிரங்குளம், சித்தரங்குடி, ஆகிய கண்மாய்களில் வருடம் முழுவதும் பறவைகள் வந்து தங்கக்கூடிய வகையில் பலவிதமான சரணாலயங்கள் இருக்கின்றன. வரலாற்று சிறப்பு மிக்க அந்த காஞ்சிரங்குளம் சித்தரங்குடியில் வருடம் முழுவதும் பறவைகள் வந்து தங்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு வனத்துறையிலே இருந்து சுற்றுலாத்துறைக்கு அந்த இடங்களை எடுத்து அந்த மக்கள் எல்லாம் இராமேஸ்வரத்திற்கு வருகின்றபோது அவர்களைக் கவர்கின்ற வகையில் அவைகளை எல்லாம் சுற்றுலாத்துறை நல்ல முறையிலே எடுப்பதற்கு திட்டமிடவேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குக் கொடுத்தது ஐந்து நிமிடம் என்றாலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு செய்தி என்ற தலைப்பின் கீழ் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த

மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அரசின் கொள்கைகளை, அரசின் லட்சியங்களை, திட்டங்களை, சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்கின்ற சக்தி வாய்ந்த துறையாகச் செய்தித் துறை இன்றையதினம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொலை நோக்குப் பார்வையில் திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். இந்த திட்டங்களை எல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக இந்தத் தொலைநோக்குப் பார்வையான திட்டங்களை மக்களிடம் பதிய வைப்பதற்காக செய்தித்துறை பயன்படுகிறது. இன்றையதினம் அரசு விழாக்களில் நாதஸ்வர இசையை ஆரம்பித்து ஒவ்வொரு விழாவையும் ஆரம்பிப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அந்த நாதஸ்வரக் கலைஞர்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முடிவை வரவேற்றுப்பேசி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே சமயம் சென்ற ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கு 5-1/2 கோடி ரூபாய் ஒதுக்கி, முக்கியமான சென்னை மாநகரில் கட்ட இருக்கிறார்கள். நாளையதினம் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு சிலையைத் திறக்க இருக்கிறார்கள். அதை வரவேற்றுப் பேசுவதில் நான் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசு சென்ஸார் போர்டில் மாநில அரசுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று—அதனால் ஆபாசங்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவில் மாநில அரசுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் இதையெல்லாம் கட்டுப்படுத்தமுடியும். ஆகவே அதற்கு பிரதிநிதித்துவம் பெற மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று இன்றையதினம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட இயக்கத்தின் தலைவர்கள் சிலை காமராஜர் சாலையில் ஒன்றுகூட இல்லை என்பதை இந்த சமயத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய திராவிட இயக்கத் தலைவர்களுக்கு சென்னை மெரினா கடற்கரை சாலையில் சிலைகள் அமைத்திட வேண்டும் என்று இந்த சமயத்திலே மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நுண்கலை பல்கலைக் கழகம் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் அமைக்க இருப்பதாகக் கேள்விப்பட்டேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரை

அந்த நுண்கலை பல்கலைக் கழகத்திற்கு சூட்ட வேண்டுமென்று இந்த சமயத்தில் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 4-25

திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரியில் அமைப்பதற்கு மத்திய அரசு தடை விதித்திருப்பதாக பேப்பர் வாயிலாக நாங்கள் எல்லாம் பார்த்தோம். ஆகவே, மத்திய அரசு திருவள்ளுவர் சிலைக்கு தடை விதிப்பதைத் தவிர்த்து அங்கே திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்கு அவர்களும் உதவி செய்ய வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற திட்டங்கள் அனைத்திற்கும் கட்டாயம் மத்திய அரசு தடைக் கல்லாக இருக்காமல் உதவிகரமாக இருக்க வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாக மத்திய அரசுக்கு வேண்டுகோளாக விடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் செய்தித் துறை பல்வேறு பொருட்காட்சிகளை நடத்தி, இதுவரை 4 கோடியே 61 லட்சத்தை வருவாயாக ஈட்டி இருக்கிறது. ஆனால், இந்தப் பொருட்காட்சி முக்கியமாக தமிழ்நாட்டில் 5 இடங்களில்தான், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில்தான் நடத்தி வருகிறது. மாவட்ட தலைநகரின் எல்லா இடங்களிலும் இதன் மூலம் அரசுக்கு வருவாய் கிடைப்பதனால் மாவட்டத் தலைநகரங்கள் எல்லாவற்றிலும் பொருட்காட்சி நடத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களுக்கு கோரிக்கையாக விடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செய்தி மலர் தயாரித்து தியேட்டர்களில் காண்பிக்கும்போது, அநேகத் தியேட்டர்களில் காண்பிக்க மறுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அந்தந்தத் தொகுதியில் இருக்கின்ற தியேட்டர்களில் சட்டமன்ற உறுப்பினர்களும் கண்காணிக்கின்ற ஒரு பொறுப்பு வழங்க வேண்டுமென்று இந்த சமயத்தில் நான் கோரிக்கை விடக் கடமைப்பட்டிருக்கிறேன். வருங்காலத்தில் சிறந்த தமிழ்ப் படங்களை எல்லாம் உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி பல்வேறு பரிசுத் தொகையும் வழங்கி இருக்கிறார்கள். கலைத் துறை வித்தகர் என்ற விருதுகளையும் வழங்கிப் பாராட்டுகிறார்கள். ஆனால், இந்த சினிமாத் துறை எங்கோ போய்க்கொண்டிருக்கிறது என்று பல்வேறு நபர்களும், அரசியல்வாதிகளும் கூறுகின்றார்கள். ஆபாசத்தைக் கட்டுப்படுத்தி, எதிர்கால இந்தியாவில் நல்லவர்களை உருவாக்குவதற்கு இந்த சினிமாத் துறை கட்டாயம்

பாடுபட வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திரைப்பட நகரம் என்ற தலைப்பின்கீழ் 14 கோடியே 93 லட்சத்தில் தரமணியில் நிர்வாகப் பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் இந்தியாவிலே சிறப்பு வாய்ந்த திட்டமாக இருக்கிறது. ஆகவே, இவைகளுக்கு எல்லாம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயர் தமிழகம் உள்ளவரையில் என்றும் நீடித்து இருக்கின்ற அளவில் நெடுந்தூர நோக்கில் திட்டமிட்டு இருப்பதை நாங்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பல்வேறு மாவட்டங்களில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுந்தரராஜ். இந்த மானியக் கோரிக்கையை முடித்து இன்னொரு அமைச்சருடைய மானியக் கோரிக்கையையும் எடுக்க வேண்டும். நீங்கள் 5 நிமிடம் என்று கேட்டதனால்தான் விட்டேன். 5 நிமிடத்திற்குள் பேசி நிறுத்திவிடுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தில்தான் பல்கலை விளக்கப் பணி முகாம்கள் ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. கடந்த ஆண்டு மட்டும் வ.உ.சி.யிலும், இராமநாதபுரத்திலும் பல்கலை விளக்கப் பணி முகாம்கள் நடந்திருக்கிறது. ஆகவே, புரட்சித் தலைவி கொண்டுவருகிற ஒவ்வொரு திட்டமும் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுடைய, அடித்தளத்தில் பரவுவதற்கு இந்த பல்கலை விளக்கப் பணி முகாம்கள் பெரிதும் பாடுபடுகின்றன. ஆகவே, ஒவ்வொரு வருடமும் எல்லா மாவட்டங்களிலும் பல்கலை விளக்கப் பணி முகாம்கள் நடப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கல்ப் ஆஃப் மன்னாரில் இருக்கக்கூடிய தீவுகளைக் குறித்து சொன்னார்கள். வனத் துறையிடம் இருந்து மீனளத் துறைக்கு எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே அது மீனளத் துறையிடமிருந்தது. அது அங்கிருந்துதான் வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய காரணம் என்னவென்று

1994 ஏப்ரல் 29] [திரு. கு. லாரன்ஸ்]

சொன்னால், அங்கே இருக்கிற உயிரினங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான். அருகி வந்த ஒரு அபூர்வமான கடல்பசு என்று சொல்கிற ஒரு உயிரினம் கடலில் இருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்காகவும், மற்றும் அதுபோன்ற உயிரினங்களையும் பாதுகாப்பது. இன்றைக்கு அந்தத் தீவிலே எல்லாம் மரங்களை நட்டு அதைப் பேணிப் பாதுகாக்கிறோம். எனவே, அருகி வருகிற ஒரு அபூர்வமான உயிரினம் அந்தக் கடலிலே இருக்கிற காரணத்தால் அதைக் காப்பாற்றுவதற்காக நம்முடைய அரசு இன்றைக்கு கல்ப் ஆஃப் மன்னார் பையோஸ்பியர் ஸ்கீம் என்கிற ஒன்றைப் போட்டு இன்றைக்கு ஒரு சிறப்பான திட்டமாகத் தயாரித்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தபோதிலும், சுற்றுலாவுக்குச் செல்வதற்கு இடையூறு ஒன்றும் கிடையாது. சுற்றுலா செல்கிறவர்கள் அங்கே இருக்கிற உயிரினங்களைப் பாதுகாக்கிற அளவு சில நடவடிக்கைகள் எடுத்து வரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக என்னவென்று சொன்னால், கோரல் என்று சொல்கிறவைகளை எடுத்துச் செல்கிறவர்களைத் தடுக்கிற அளவு சில தடுப்பு நடவடிக்கைகளை, தவறுகளைக் கண்டிக்கிற அளவு இன்றைக்கு வனத் துறையின் மூலமாக தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-30

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சரவர்கள் கூறுவதற்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறோம். ஆனால் பல்வேறு பகுதிகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அங்கு பொழுதுபோக்குக்காக வருகிறார்கள். ராமேஸ்வரத்திற்கும் கீழக்கரைக்கும் இடையே 25 தீவுகள் இருக்கின்றன. அங்கே படகு சவாரிக்கு ஏற்பாடு செய்தால் வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அங்கே எல்லாம் செல்லுவதற்கு வசதியாக இருக்கும், அரசுக்கும் வருமானம் கிடைக்கும். மேலும் பயணிகளும் அதிகமாக வருவார்கள். ஆகவே அரசு இதைக் கருத்திற்கொண்டு கடல் பூங்கா அமைப்பதற்கும், படகுச் சவாரி விடுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உதவி செய்ய வேண்டுமென்று பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1994 ஏப்ரல் 29

9. ஒழுங்குப் பிரச்சினை -

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பளிக்காதது குறித்து—கொறடாவுக்குப் பேரவைத் தலைவரின் வேண்டுகோள்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் திரு. ஞானசேகரன் அவர்களே பேசிக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்களும் பேச வேண்டுமென்று உங்களிடம் கோரிக்கையாக வைத்திருக்கிறோம். ஆனால் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. எங்களுடைய உரிமை பாதிக்கின்றபோது, உங்களிடத்தில்தான் கோரிக்கை வைக்க முடியும். எங்களுக்குப் பேசுகின்ற ஜனநாயகத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். ஜனநாயகத்தை மதிக்கின்ற தலைவராக நீங்கள் இருக்கின்ற காரணத்தால் உங்களிடத்திலே இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகிறவர்களை முறைப்படுத்திக் கொடுக்கின்ற அந்தப் பணியில் எனக்கு உதவ வேண்டுமென்று நம்முடைய சட்டமன்றப் பேரவை மரபுப்படி அந்தந்தக் கட்சியினுடைய கொறடாக்களிடத்திலே அதை ஒப்படைத்திருக்கிறேன். அவர்கள் கொடுக்கிற பெயர்களைத்தான் நான் இங்கே சேர்க்க முடியும். உங்கள் பெயரைக் கொடுக்கவில்லை என்று சொன்னால் நீங்கள் உங்கள் கொறடாக்களைத்தான் வற்புறுத்த வேண்டி வரும். அல்லது உங்கள் கட்சி அளவில் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்ல வேண்டிவரும். அதற்குப் பிறகும் உங்களுடைய வாய்ப்பு மறுக்கப்படுகிறதென்று சொன்னால், அதிலே எந்த அளவுக்கு நான் தலையிட முடியுமோ அந்த அளவுக்குச் செய்யலாம். உங்களுடைய கொறடாக்களிடத்திலேதான் நானும் சொல்ல முடியும். ஆகவே கொறடாக்களும் தங்களுடைய கட்சி உறுப்பினர்களை முழுமையாகப் புறக்கணிப்பது என்ற முடிவு எடுப்பதைப் பேரவையிலே ஏற்றுக் கொள்ள முடியாது. நேரம் இல்லாத காரணத்தாலே எங்களாலே கொடுக்க முடியவில்லை என்று வேண்டுமானால் கொறடாக்கள் சொல்லலாம். உறுப்பினர்கள் முழுமையாகப புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை வருகிறபோது, பேரவைத் தலைவர்தான் உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டி இருக்கிறது. திருமதி பொன்னம்மாள்.

1994 ஏப்ரல் 29]

திரு. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் பேச வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் கொறடாவிடம் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் பேச வேண்டுமென்று எங்களுடைய கட்சிதான் முடிவெடுக்கும். கட்சியினுடைய ஒரு ஏஜண்டாகத்தான் நான் உங்கள் முன்னே நிற்கிறேன். கட்சி சொல்வதைத்தான் நான் கேட்க முடியுமே தவிர, நானாக தனிப்பட்டு இயங்க முடியாது. எங்களுடைய கட்சியிலே ஒரு தீர்மானம் செய்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் செய்கிறது. அந்தக் கட்சியினுடைய சி.எல்.பி. தீர்மானத்தைத்தான் நான் சொல்ல முடியுமே தவிர, தனிப்பட்ட முறையில் செய்ய முடியாது. 61 உறுப்பினர்களும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சி இங்கு இருக்கிற உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பறிக்கிறது என்று சொன்னாலும்கூட பேரவைத் தலைவர்தான் தலையிட வேண்டிவரும். சில உறுப்பினர் களுடைய உரிமைகளை ஒரு கட்சி பறிக்க முடியாது. ஏனென்றால் உறுப்பினர்களுக்கு உரிமை தர வேண்டியது பேரவைத் தலைவர் அவர்களுடைய பொறுப்பு. அப்படி அவர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது என்கிற நிலைமை வருமேயானால், நான் கொறடாக்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன், உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பறிக்கிற அளவுக்கு நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காதீர்கள். 5 உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கேட்கிறார்கள். நீங்கள் 2 உறுப்பினர்களுக்குத்தான் வாய்ப்பு கொடுக்கிறீர்கள். எனவே 2 உறுப்பினர்களின் பெயர்களைக் கொடுக்கிறேன் என்று சொல்லுகிற உரிமை உங்களுக்கு உண்டு. அப்படியில்லாமல் சில உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால், அந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படும் நிலைமை இருக்க வேண்டாமென்று நான் சொல்லுகிறேன். எங்களுடைய கட்சி முடிவு சில உறுப்பினர்களைப் புறக்கணிக்க வேண்டுமென்றுதான் இருக்கிறது என்று இங்கே வந்து அதை வற்புறுத்த முடியாது. திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சிக்கு மனு கொடுப்பார்கள். பேச வேண்டுமென்று கேட்பார்கள். அவர்கள் 4, 5 பேர்கள் நிறைய பேசியிருக்கிறார்கள்.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1994 ஏப்ரல் 29

பேசாமல் இல்லை. அந்த மாதிரி மனுக்கள் வந்த பிறகு. நாங்கள் ப்ரபெரன்ஸ் கொடுக்கிறோம். அவர்கள் அப்படிப்பட்ட மனுக்களை கொடுக்கவில்லை. ஏற்கெனவே அவர்கள் பேசி இருக்கிறார்கள். எனவே வேண்டுமென்று நாங்கள் ஒதுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கேட்கவில்லை, அதனால் நான் கொடுக்கவில்லை என்று நீங்கள் சொல்லலாம். திரு. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச வேண்டுமென்று தினசரி கொறடாவிடம் வற்புறுத்தி வருகிறோம். ஜனநாயக முறைப்படி தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் எங்களது குறைகளை சட்ட மன்றத்தில் பேசாமல், வெளியில் பேசுகின்ற அளவுக்கு நாங்கள் தரம் கெட்டவர்களாக இல்லை என்பதால், இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தில் எல்லா மானியங்களிலும் நாங்களும் பேச வேண்டும். அதற்கு நீங்கள் வாய்ப்புத்தர வேண்டும். இன்றிலிருந்து எல்லா மானியங்களிலும் நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பைத் தரவேண்டும் என்று மீண்டும் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நிச்சயம் நீங்கள் ஜனநாயக முறைப்படி எங்களது கட்சிக் கொறடாவை அழைத்துப் பேசி, எங்களுக்கு வாய்ப்பு வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள் செல்லவில்லை. பொதுவாக ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் சிலர் தொடர்ந்து பேச முடியாமல் புறக்கணிக்கப்பட்டால் அதற்கு என்ன பரிகாரம்? என்ன பாதுகாப்பு? இதற்கு ஏதாவது முன் உதாரணம் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர்தான் பாதுகாக்க வேண்டும். ஒரு உறுப்பினர் வந்து முழுமையாகப் புறக்கணிக்கப்படுகிறபோது பேரவைத் தலைவர்தான் பாதுகாக்க வேண்டும். ஆகவே நான் இப்போது பேரவையிலேதான் சொல்கிறேன். அந்த அளவுக்கு சில உறுப்பினர்கள் பேசுவதற்கே வாய்ப்பில்லாத நிலைமை இருப்பது போன்ற ஒரு நிலைமையை அருள்கூர்ந்து கொறடாக்கள் உருவாக்க வேண்டாம் என்ற அந்தக் கருத்தைத்தான் நான் சொல்கிறேன். பேச அனுமதிப்பது என்பதைப்

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

பொறுத்தமட்டில் அது பேரவைத் தலைவருடைய பொறுப்புதான், எல்லா உறுப்பினர்களுடைய உரிமையையும், அவர்கள் பேச அனுமதி கேட்கிறபோது அவர்களுக்கு எப்படியோ ஏதோ ஒருவகையில் அனுமதி அளிக்க வேண்டியது பேரவைத் தலைவருடைய பொறுப்பு. அந்த வகையிலேதான் நான் இப்போது கொறடாவிடத்திலேயே சொல்கிறேன். ஒரு உறுப்பினருடைய உரிமையை முழுமையாகப் பாதிக்கத்தக்க வகையிலே நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டு இருப்பது நல்லதல்ல. அந்த நிலைமை இல்லாத அளவுக்கு எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைக்கிற வாய்ப்பைப் பகிர்ந்து அளிக்கிற அளவுக்கு நீங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சியின் கொறடாக்களை—இந்தக் கொறடா மட்டும் அல்ல, இப்போது இங்கேயும் கூடச் சொன்னார்கள், டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் நான் இன்றைக்குத் தயாராக இருந்தேன். எங்கள் கொறடா இன்றைக்கு என்னைப் பேசுங்கள் என்று முன்னாலே சொல்லியிருந்தார். இன்றைக்கு என் பெயரை விட்டு விட்டார் என்று சொன்னார். எனவே நீங்கள் எனக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று வற்புறுத்தினார். அதற்குப் பிறகு, இன்னொரு உறுப்பினர் வரவில்லை என்கிறபோது, அவருக்கு அந்த வாய்ப்பை நானாகத்தான் கொடுத்தேன். அதேபோன்ற ஒரு நிலைமை உருவாகாத அளவுக்கு கட்சிகளின் கொறடாக்களும் நிலைமையை என் அளவுக்குக் கொண்டு வராமல் பார்த்துக் கொள்வதே நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் கொறடா எங்கள் கட்சியின் மேலிடத்தின் சொற்படி செயல்படுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புவது, கட்சியின் மேலிடம் என்பது யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் நீங்கள் அவையில் கேட்கக்கூடாது. உங்களுடைய கட்சி மேலிடம் யார் (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொன்னேன். கொறடாக்களுக்கு சொல்லிவிட்டேன். கட்சி மேலிடம் என்பது எல்லாம் இங்கே சொல்ல வேண்டாம். அதை அவர்களிடத்திலோ அல்லது உங்கள் கட்சிக்குள்ளேயோ சொல்லிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அது வேண்டாம். இப்போது உங்கள் உரிமையை வேண்டுமானால் நீங்கள் கேட்கலாம்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலிடத்திலேயிருந்து என்று இங்கே குறிப்பிட்டார்கள். மேலிடம் என்று சொன்னால் எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ்

கமிட்டியிலிருந்து அதுபோன்று எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்று அறிவிப்பு அவர்களுக்கு வந்திருக்கிறதா ? ஏனென்று சொன்னால், மேலிடம் என்று சொல்லி எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய ஜனநாயக முறையை ஆற்றுகின்ற எங்களை இவர்கள் அதையெல்லாம் ஆற்றவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் உங்கள் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன், மேலிடம் என்று குறிப்பிட்டார்கள். மேலிடம் என்று சொன்னால், எங்களைப் பொறுத்தவரையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர். அவர்கள் அதுபோன்று எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்று ஏதேனும் அவர்களுக்குத் தகவல் தந்திருக்கிறார்களா ? அதுபோன்று இருந்தால் மட்டும் பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பொறுத்த மட்டில் கட்சியினுடைய மேலிடம் என்ன கட்டளை இட்டிருக்கிறது, மேலிடம் யார் என்பதையெல்லாம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு இங்கே இருக்கிற கட்சித் தலைவர்களும் கட்சிக் கொறடாக்களும்தான் என் கண்ணுக்கு நேரே தெரியும். அவர்கள் சொல்லுகிறார்கள். எங்களுக்கு வாய்ப்பே கொடுப்பதில்லை என்று என்னிடத்தில் புகாராகக் கொடுப்பது உங்களுக்கு இருக்கிற உரிமை.

நான் அதைக் கேட்டு, கொடுக்க வேண்டிய கடமையும் எனக்கு இருக்கிறது. அந்த வகையிலேதான் சொல்கிறேன். சில உறுப்பினர்களை அப்படியே புறக்கணிப்பது என்கிற முடிவில் கட்சிக் கொறடாக்களும் செல்ல வேண்டாம் என்பதை நான் திரும்பவும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர், அதாவது சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரை, எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தகவல் பேரில்தான் நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். அவர்கள் மூலமாகத்தான் எங்களுடைய சட்டமன்ற நிர்வாகிகளை இங்கே அனுமதித்து இருக்கிறீர்கள். அந்த வகையிலே பார்க்கிறபோது எங்களுடைய கொறடா, மேலிடத்திலிருந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலிடத்தைப் பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை. அது உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம். அது இப்போது பிரச்சினை இல்லை. நீங்கள் இங்கே பேச வாய்ப்பு இல்லை என்று நீங்கள் தெரிவிக்கிற அந்தக் கருத்தை . . .

1994 ஏப்ரல் 29]

திரு. கே. கே. சின்னப்பன் : எனவே பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக முறையிலே நாங்கள் இங்கே பணியாற்றுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே அவையிலே பங்கேற்கக்கூடிய உறுப்பினர்கள் யார் யார் பேசவேண்டும் என்பது, அந்தந்தக் கட்சியில் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை உறுப்பினர்கள் பேசவேண்டும் என்பது எல்லாம் அந்தக் கட்சியின் கொறடாக்கள் பார்த்துத் தருகிறார்கள். அந்தப் பட்டியலைத்தான் தாங்கள் பார்த்து, அதிலே சில பேரை சேர்க்க வேண்டுமானாலும் சில பேரை குறைக்க வேண்டுமானாலும் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் இந்த எல்லா விதிகளையும் அறிந்த நம்முடைய தலைவர் அவர்களுக்கு இதுவும் தெரியும்.

ஆனாலும்கூட ஒரு கட்சியிலே சில உறுப்பினர்களை அந்தக் கட்சிக் கொறடா பேச அனுமதிக்கவில்லை அல்லது அவருடைய பெயரை பேரவைத் தலைவரிடம் கொடுக்கவில்லை என்றால் — விதி முறைகள், மரபுகள் எல்லாம் என்ன சொல்கிறது என்றால், கௌல் அண்டு சக்தர் என்கிற அந்தப் புத்தகத்திலேகூட, பேரவைத் தலைவர் அவர்களே ஒரு கட்சியினுடைய, எந்தக் கட்சி கொறடாவால் ஒதுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட உறுப்பினர்களை, அவர்கள் அவையிலே பேச வேண்டும் என்றால் அந்த உறுப்பினருக்கு நீங்கள் வாய்ப்பு அளிக்கலாம் என்கிற நியதி இருக்கிறது. மரபு இருக்கிறது. அதையும் அருள்கூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் சொல்லிவிட்டேன். நானே கொறடாக்களுக்கு இந்தப் பேரவையிலே ஒப்பனாக அந்த வேண்டுகோளை வைக்கிறேன். எந்த உறுப்பினரையும் புறக்கணிக்கிறீர்கள் என்ற புகார் எனக்கு வராமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் புகார் வருகிறபோது, நான் சில விதி முறைகளின்படி சில நேரங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றுதான் சொன்னேன். திரு. சஞ்சய் ராமசாமி.

[1994 ஏப்ரல் 29

திரு. சஞ்சய் ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நன்றாக அறிவீர்கள். இங்கே வந்து எங்களுக்கு என்று உரிமை இருக்கிறது; பேசுகின்ற உரிமை எங்களுக்கு இருக்கிறது. இதை, ஏன் ஒரு உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டுவரக்கூடாது என்று உங்களை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமை மீறல் பிரச்சினை என்கிற அளவுக்கு. . . (குறுக்கீடுகள்) நாம் ஒரு மரபு வைத்து இருக்கிறோம். கொறடா கொடுப்பதை வைத்துத்தான் நான் பேசுவோர் பட்டியல் தயார் செய்ய வேண்டி இருக்கிறது. எனவே, அந்தவகையில் நான் பட்டியல் தயார் செய்கிறேன். அந்த மரபு இருக்கிறது. திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் எங்கள் கட்சியின் கொறடாவிடம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்., இந்த மானியக் கோரிக்கையில் பேச வேண்டும் என்று. ஆனால் (குறுக்கீடுகள்) . தொகுதி குறித்து நான் சொல்ல வேண்டும். அதனால்தான் நான் கேட்கிறேன். இது வந்து என்னுடைய உரிமையைப் பாதிக்கிறது. அதாவது, நான் பேசுகின்ற உரிமை பாதிக்கப்படுகிறது. அதனால், இன்னொரு உறுப்பினர் வந்து என்னுடைய உரிமையைப் பறித்தாலும், அதற்கு நான் கண்டிப்பாக உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவர முடியுமா, இல்லையா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். அப்படி முடியும் என்றால், ஏன் நான் இவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொண்டு வந்தால் அதைப் பரிசீலிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வருகிறபோது அது எந்த அளவுக்கு. . . (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் தெரிவித்த அந்தப் பிரச்சினையிலிருந்து, நானே பட்டியல் சுயமாகத் தயாரித்து பேச அனுமதிக்கிறேன் என்கிற நிலைமை இருக்கிறவரையிலேயும், இன்னொரு உறுப்பினர் தலையிட முடியாதுதான். ஆனால், இந்தப் பேரவையிலே, எல்லாப் பேரவைகளிலும் இருப்பதுபோல ஒரு மரபைக் கடைப்பிடித்து வருகிறோம். கொறடாக்கள் கொடுக்கிற லிஸ்டிலே இருந்துதான் நான் பட்டியல் தயார் செய்கிறேன். ஒருவேளை 5 பேர் கொடுப்பார்களேயானால், அதிலே 2 பேரை நான் குறைத்து விடுகிறேன். சில உறுப்பினர்கள் அப்படி எந்தப் பட்டியலிலேயும் எங்கள் பெயர் வரமாட்டேன் என்கிறது; உங்களுக்கு எங்களுடைய பெயரே வரமாட்டேன் என்கிறது என்கிற புகார் வருகிறபோது, உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாக்கிற, பேரவையிலே இருக்கிற பேரவைத் தலைவர் என்கிற முறையிலே கட்சிக்

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

கொறடாக்கள் அந்த அளவுக்கு சில உறுப்பினர்களைப் புறக்கணிப்பது என்கிற நிலை இருக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலேயும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று 2 பேர் எதிர்க் கட்சியிலே இருந்து பேசுவதற்கு பட்டியல் கொடுத்து இருக்கிறார்கள். அந்த 2 பேருக்கு அனுமதி அளித்து இருக்கிறேன். ஒருசிலர் அதன்காரணமாக வாய்ப்பை இழக்கிறார்கள் என்கிற நிலைமை வந்திருக்கிற காரணத்தினாலே, இப்போது நான் பேரவையிலே வெளிப்படையாக கட்சிக் கொறடாக்களுக்கு வேண்டுகோள் விட்டு இருக்கிறேன். இந்த அளவுக்கு உறுப்பினர்கள் யாரும் அவர்கள் உரிமையைப் பாதிக்கிற அளவுக்கு நடக்க வேண்டாம் என்று. அதை மனதிலே வைத்து கொறாடாக்கள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) போதும். (குறுக்கீடுகள்) திரு. தாமரைக்கனி உட்காருங்கள். உங்களுக்கு ஒன்றும் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சி என்றால், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்தான், காங்கிரஸ் கட்சியினுடைய மேலிடம். சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், 60 சட்டமன்ற உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆகவே, எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டிலே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் எடுக்கின்ற முடிவுதான் இறுதியான முடிவு. சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர்தான் மேலிடம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி மேலிடம் ஆக இருக்கிற அந்த சட்டமன்றக் கட்சித் தலைவர், 2, 3 உறுப்பினர்கள் பேசக்கூடாது என்கிற முடிவு எடுப்பாரேயானால், அதைப் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கின்ற அந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய அலுவலகத்துக்கும் வருவது கிடையாது; சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நடவடிக்கை எடுங்கள்.(குறுக்கீடுகள்) திரு. செல்வராஜ் இந்தப் பேரவையினுடைய உறுப்பினர். நான் பேச அனுமதி பெற முடியாத அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள், நான் பேச வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்கிறேன், நீங்கள் எனக்கு

பேசுகிற வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும் என்று அவர் கேட்கிறார். அவர் கேட்கிற கோரிக்கைக்கு நான் நடவடிக்கை எடுப்பதற்கு, கடமை எனக்கு இருக்கிறது. ஆகவேதான் சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் மேலிடமா, இல்லையா என்பதைப்பற்றி நான் எதுவும் சொல்லவே இல்லை; நான் அதற்குள்ளே போகவே இல்லை என்று நான் அப்போது இருந்தே சொல்லிக்கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

பிற்பகல் 4--45

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருடைய கடமையிலிருந்து ஒருவர் தவறுகிறபோது அதை உணர்த்த வேண்டியது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கடமை என்பதை நீங்கள் இங்கே சுட்டிக்காட்டினீர்கள். கொறடாக்கள் தொடர்ந்து பாரபட்சமாக நடப்பார்களானால், அப்படி பாரபட்சமாக நடக்கிற கொறடாக்கள்மீது சபாநாயகர் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அந்த வகையில் கொறடாக்கள் பாரபட்சம் இல்லாத வகையில் அவர்களுடைய கடமையைச் செய்வதற்கு என்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் ஒரு வழிமுறையைக் கடைபிடித்துதான் அவர்களுடைய கட்சிக்குள் உறுப்பினர்களை பகிர்ந்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதற்கு என்ன வழிமுறை நாடாளுமன்ற நடைமுறையில் இருக்கிறது என்பதையும் தாங்கள் ஆய்வு செய்து, கொறடாக்களுக்கு முதலில் வழிகாட்டி, அந்த வழிகாட்டுதலை அவர்கள் பின்பற்றவில்லை என்றால், தாங்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்லிவிட்டேன். திரு. செல்வராஜ் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையில் அவர்கள் தாங்கள் பணிபுரிய முடியாத அளவுக்குப் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. தங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கிறபோது, நான் கொறடாக்களுக்கு இந்த நேரத்தில் பர்ஸ்ட் ஸ்டெப் வேண்டுகோள்தான் நான் வைக்கிறேன். சில உறுப்பினர்கள் உரிமை தொடர்ந்து பாதிக்கப்படுகிற அளவுக்கு நிலைமை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்ற பர்ஸ்ட் ஸ்டெப் வேண்டுகோளை வைக்கிறேன். அந்த வேண்டுகோளும் புறக்கணிக்கப்படுகிறபோது, அடுத்தடுத்து என்ன நடவடிக்கையெடுக்கலாம் என்பதை விதிகளுக்குட்பட்டு முடிவு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. செல்வராஜ்.

1994 ஏப்ரல் 29]

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் பேசுகிறபோது 60 பேர் தேர்ந்தெடுத்ததாகச் சொன்னார். அதை மறுக்கவில்லை. 61 எம்.எல்.ஏக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்தோம் என்றால், நாங்களும்தான் அவரை தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அதனால் எங்களுடைய உரிமை பாதிக்கிறது என்று கூறுகிறோமே ஒழிய, தலைவர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டாக நாங்கள் யாரும் கூறவில்லை. எனவே, அவர் கூறிய அந்தக் குற்றச்சாட்டை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதும் அவைக்குறிப்பில் இருக்கலாம். அவர் சொன்னதும் இருக்கலாம். நீங்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தேர்ந்தெடுத்ததாகத் தான் எனக்கு முதல் தகவலே வந்தது. எனவே நீங்கள் எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுத்த தலைவர்தான் அவர். ஆகவே, அந்தத் தலைவர் உங்கள் எல்லோருடைய உரிமையையும் பாதுகாக்கிற கடமை எனக்கும் இருக்கிறது. பேரவையைப் பொருத்த வரையில் எல்லா உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதுகாக்கிற கடமை எனக்கு இருக்கிறது. அந்த வகையிலேதான் நீங்கள் எழுப்பிய பிரச்சினையை இப்போது நான் என்னுடைய வேண்டுகோளாகவே கொறடாக்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன். அந்த வேண்டுகோளை வருகிற நாட்களில் ஏற்றுக்கொள்வார்கள் என்றே கருதுகிறேன். ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலைமை தொடர்கிறபோது சட்டவிதிகளின்படி என்ன செய்யலாம் என்பதை நான் பின்னர் முடிவு செய்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்

***மாண்புமிகு திரு. துரை ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் வாய்ப்பை கொடுக்க வேண்டிய காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா கொடுக்கத் தவறியிருக்கிறார். அவர் தவறுவதற்கு அந்தத் தலைவர்..

திரு. எஸ். டேனியல்ராஜ்: நான் ஆட்சேபிக்கிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய உள் விவகாரத்தில் அவர் தலையிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள் விவகாரத்தில் தலையிடவில்லை. கொறடாவைத்தான் சொல்கிறார். கொறடாவினுடைய பணி என்பது பேரவையினுடைய பணி (குறுக்கீடு) அவர் உள் விவகாரத்திற்குள் போகவில்லை.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: தலைவர் அவர்களே, உள் விவகாரத்தில் நான் போகவில்லை. நீங்கள் சொன்னதைத்தான் சொல்கிறேன். நீங்கள் சொன்னீர்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கு அந்த முடிவெடுக்கிற உரிமை இருக்கிறது. அவர் சொல்வது தான் நடக்கும் என்று நீங்கள் சொன்னீர்கள். அது தவறு என்பதற்குத் தான் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கும்.....

திரு. எஸ். டேனியல்ராஜ்: காங்கிரஸ் கட்சியினுடைய சட்ட விதிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியும். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கட்சியின் சட்ட விதிகளைப் பற்றி உங்களிடத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அவர் அந்த உறுப்பினருடைய உரிமையைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்குள் நான் போகவில்லை. *(குறுக்கீடு)* காங்கிரஸ் கட்சியை விட்டு ரொம்ப நாளைக்கு முன்னால் வெளியே வந்துவிட்டேன். இனி கூப்பிட்டாலும் போக மாட்டேன், அவசியமும் இல்லை. நீங்கள் உங்கள் கட்சியினுடைய தலைவர் சொல்கிறபடி கொறடா அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்ற கருத்தைத் தான் சொன்னீர்கள். ஆகவே, ஒரு உறுப்பினருடைய அந்த வாய்ப்பைப் பறிக்கிற அதிகாரம் அந்தக் கட்சியினுடைய தலைவருக்கு இல்லையென்பதை இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் சொல்கிறபோது கொறடாக்கள் என்று பன்மையில் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னீர்கள். தயவுசெய்து, அருள்கூர்ந்து, காங்கிரஸ் கொறடா என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மற்ற கட்சிக் கொறடாக்கள் யாரும் இந்தத் தவறை செய்யவில்லை என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

பிற்பகல் *4-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எழுந்த பிரச்சினை காங்கிரஸ் கட்சியின் கொறடாவைப் பற்றியதுதான் என்றாலும்கூட, எல்லாக் கொறடாக்களுக்கும் என்று சொல்வது எதிர்காலத்தில் மற்ற கொறடாக்களும் அப்படிச் செய்து விடாதீர்கள் என்பதற்காக, என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எல்லாக் கொறடாக்களுக்கும் என்று சொல்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே ஒரு அரை மணி நேரம் இப்படி நடந்தது. இப்போது ஒரு

1994 ஏப்ரல் 29] [திரு. சு. முத்துசாமி]

அரை மணி நேரம், ஏறத்தாழ 1 மணி நேரம் இன்றைக்கு இந்தப் பஞ்சாயத்திற்கு மட்டும் நேரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த டிமான்ட் என்பதே மறந்து போய்விட்டது. இந்தப் பிரச்சினைதான் முன்னால் நின்று கொண்டிருக்கிறது. எனவே, இந்த டிமான்ட் மேலே பேசி முடித்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லிவிடுகிறேன். கௌல் அண்ட ஷக்தரிலே கூட—அதாவது நம்முடைய விதிமுறைகளின்படி பேரவைத் தலைவர்தான் பேச அழைக்க வேண்டும் என்று தெளிவாக இருக்கிறது. இது நடைமுறையிலே எப்படி இருக்கிறது என்றால், கொறடாக்கள் லிஸ்ட் கொடுக்க வேண்டும். அந்த லிஸ்டிலிருந்து நான் எடுத்து பேச அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. "In all important debates each Party or Group forward a list of the members who would be their spokesmen in such debates..." இந்த மாதிரி ஒவ்வொரு கட்சியின் சார்பிலும், யார் யார் முக்கிய பில்லின் மீதோ அல்லது வந்திருக்கக்கூடிய பிரச்சினையின் மீதோ பேசுவார்கள் என்று லிஸ்ட் கொடுப்பார்கள். ..."The Speaker is not bound by the Whip or the order in which the names have been given, but gives due consideration to such lists while calling upon Members to speak." இப்படித்தான் நடக்கவேண்டும், அந்தப் பட்டியல் படிதான் நடக்கவேண்டும் என்று அல்ல. இருந்தாலும் அந்தப் பட்டியலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. எனவே, இதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் நான் சொன்னேன். அந்தப் பட்டியலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலேதான் நான் இப்போது கொறடாக்களுக்கு ஒரு வேண்டுகோளை வைத்தேன். எனக்கு அந்த முந்தைய பகுதியைப் பயன்படுத்தக்கூடிய அந்த நிலைமைக்கு ஆளாக்காமல், நீங்களே . . . (குறுக்கீடு)

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கொறடா என்று இல்லை. அரசு கொறடா என்று நான் இருக்கிறேன். எங்களது தலைவி, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் எல்லா உறுப்பினர்களையும் பேச அனுமதிக்கச் சொல்லித்தான் எனக்கு அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் கட்சியிலே எந்தவித குழப்பமும் இல்லை.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலிலே சொன்னேன். இரண்டொரு உறுப்பினர்கள் என்னைக் கொறடா விட்டுவிட்டார்கள் என்று என்னிடத்திலே அவ்வப்போது சொல்கிறார்கள் என்றுதான் சொன்னேன். இந்த நேரத்தில் கொஞ்சம் (குறுக்கீடு) நான் சொன்ன இந்தப் பிரச்சினையில் உங்களுக்கும் இடம் இருக்கிறது.

7. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று வீரமுழக்கமிட்ட பாவேந்தர் பாரதிதாசனுடைய 104-வது பிறந்த நாள் இன்று. இந்த நாளில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

எங்களுடைய வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தின் பாலாற்றின் படுகையின் பக்கத்திலிருக்கக்கூடிய காங்கேயநல்லூர் கிராமத்தில் பிறந்து தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் தன்னுடைய தமிழைப் பரப்பிய, முருகனுடைய சிறப்பைப் பரப்பிய கிருபானந்த வாரியார் அவர்களுக்கு சென்னையிலேயும் அவர் பிறந்த ஊரான காங்கேயநல்லூரிலும் தமிழக அரசு நினைவிடத்தை உருவாக்க வேண்டும். இந்த இரண்டு இடங்களிலும் அவர்களுக்கு சிலை வைக்க வேண்டும். வேலூரிலே ஒரு சிலையை வைக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருக்குறளின் பெருமையைப் பரப்பிச் சென்று இருக்கிற வணக்கத்திற்குரிய பெரியவர், திருக்குறள் முனுசாமி அவர்கள் மறைந்து விட்டார்கள். அவர்களுக்கும் ஒரு நினைவிடத்தை உருவாக்கி, அவர்களுக்கும் ஒரு சிலையை சென்னையில் நீங்கள் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள்பற்றி பல நண்பர்கள் இங்கே உரையாற்றினார்கள். பத்திரிகையாளர்களில் இன்று 136 பேர்களுக்குத்தான் வீடுகள் கொடுப்பதற்காக கொட்டிவாக்கத்திலே வீட்டு வசதி வாரியம் மூலமாக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. பத்திரிகையாளர்கள் தமிழ்நாடு எங்கும் பரவிக் கிடக்கிறார்கள். மாவட்ட அளவிலும் தாலுக்கா அளவிலும்,

இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்கு நீங்கள் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் என்கிறபோது, அவர்கள் பகுதிநேர பத்திரிகையாளர்களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1992—லே ஓய்வு ஊதியத்தை அதிகரித்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் அளவிற்காவது நீங்கள் ஓய்வு ஊதியத்தை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

'வெள்ளையனே வெளியேறு' என்கிற நினைவுத் தூணை நீங்கள் கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்திலே எழுப்பினீர்கள். இந்திய நாட்டினுடைய சுதந்திரத்திற்கு வித்திட்டதே எங்களுடைய வேலூர் மாநகரம், வேலூர் நகரிலே பிறந்த சிப்பாய்க் கலகம்தான் பின்னாலே விடுதலைப் போராக வெடித்து, வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கமாக மாறி, பின்னால், நமக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. ஆகவே, சிப்பாய்க் கலகத்தை நினைவுகூறும் முகத்தான் ஒரு நினைவுத் தூணை வேலூரிலே உருவாக்க வேண்டும் என்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தொலைக்காட்சியைப் பற்றி மிக அதிகமாக பல உறுப்பினர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதங்கத்தோடு அங்கலாய்த்துக் கொண்டார்கள். நாம் இப்படிச் செய்வது சரியாக இருக்குமோ என்று ஒரு கணம் சிந்திக்க, நான் உங்களுடைய சிந்தனைக்கே விடுகிறேன். ஏதோ எம்.எல்.ஏ.க்கள், அமைச்சர்கள் எல்லாம் விளம்பரப் பிரியர்கள். அவர்களுக்கு விளம்பரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. தொலைக் காட்சியிலே அவர்கள் எப்போதுமே தெரிந்து கொண்டிருக்க வேண்டுமென்ற அளவிலேதான் இருக்கும். எனவே 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்று சொல்வார்கள். நாம் ஒரு கையால் கொடுப்பது இன்னொரு கைக்கே தெரியக் கூடாது. நீங்கள் செய்யக் கூடிய செயல்கள் நல்லவைகளாக இருக்குமேயானால், நாட்டு மக்களுக்கு அது தானாகப் போய்ச் சென்றடையும். அதற்காக இங்கே தொலைக்காட்சியையும், மற்றவைகளையும் நீங்கள் நிந்தனை செய்து, அது ஏதோ அப்படித் தான் பின்னாலே தனக்கு. . . . (குறுக்கீடு)

பிற்பகல் 4-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியின் செயல்பாடுகள் குறித்து, அதிலே காட்டப்படுகின்ற நிகழ்ச்சிகள் குறித்து, அது எந்த அடிப்படையிலே காட்டப்படுகிறது என்பது குறித்து இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னது, ஏதோ சட்டமன்ற உறுப்பினர்களுடைய உருவத்தை அதிலே அதிகமாகக் காட்டவேண்டுமென்பதற்காக அல்ல. தமிழக அரசு தீட்டுகின்ற திட்டங்களை இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற முதலமைச்சராக இருக்கிற புரட்சித்தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலேயும் இல்லாத பல்வேறு திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறார்கள். ஆக அப்படிப் பட்ட திட்டங்களை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்தத் திட்டத்தின் பயனை மக்கள் அனுபவிக்க வேண்டும். எத்தகைய வர்களுக்காக அந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றனவோ, அத்தகையவர்கள் பயன்பெற வேண்டும், தெரிந்துகொள்ள வேண்டும், அதற்குத் தொலைக்காட்சி அந்தத் திட்டங்களை விளம்பரப் படுத்த வேண்டும் என்கிற ஆதங்கத்திலேதான் இங்கே குறிப்பிட்டார்களே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களைக் காட்ட வேண்டுமென்பதற்காக அல்ல என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ இங்கு பேசுவது எல்லாம் தொலைக்காட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ தொலைக்காட்சியிலே விளம்பரம் தேடுவதற்காக, தொலைக்காட்சியிலே இடம் பெறவேண்டும் என்பதற்காக அல்ல. அதற்கு அவருக்கு. ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு சென்னையிலே குடிநீர்ப் பஞ்சம் எந்த அளவுக்கு தாண்டவம் ஆடியது என்று இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். சென்னை மாநகர மக்களுக்கும் தெரியும். அந்த வேளையிலே புரட்சித் தலைவி அவர்கள் அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது, என்னென்ன திட்டங்களை, குறையைப் போக்குவதற்காக, பஞ்சத்தைப் போக்குவதற்காக எடுத்திருக்கிறது என்பதை

மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே நாங்கள் தொலைக்காட்சியை நாடினோம். சென்னை நகர குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து அமைச்சர் என்ற முறையில் நான் மக்களுக்கு பல்வேறு வேண்டுகோளை விடுக்க இருக்கிறேன். இன்றைக்கு இந்தப் பஞ்சத்தின் சம்பந்தமாக, குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக எங்கெங்கு எவ்வளவு குடிநீர் இருக்கிறது, அந்தத் தீமையைப் போக்குகின்ற அளவில் எந்தெந்த அளவில் எந்தெந்த முறைகளை நாங்கள் கையாண்டிருக்கிறோம். சில இடங்களில் தண்ணீர் வரவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அதையெல்லாம் எப்படிப் போக்கவேண்டும், எந்த தொலைபேசியிலே அவர்கள் தொடர்பு கொள்ளவேண்டும் என்ற விவரங்களை எல்லாம் தெளிவாக கிட்டத்தட்ட 60 லட்சம் மக்கள் பயன்படுகின்ற ஒரு செய்தியைச் சொல்வதற்காக, குறிப்பிடுவதற்காக, நாட்டுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக நாங்கள் அந்தக் கோரிக்கையை தொலைக்காட்சியிலே வைக்கிறோம் என்று கிட்டத்தட்ட நானே பலமுறை அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே பேசியும்கூட, அந்தச் செய்தியை என் மூலமாகத் தெரிவிப்பதற்கு மறுத்துவிட்டார்கள்.

தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் அது சம்பந்தமாக ஒரு கடிதத்தை எழுதி டி.வி. நிலையத்தினுடைய இயக்குநருக்கு எழுதியிருக்கிறார்கள். அதற்கும் மறுப்பு, பதில் இல்லை. இப்படியெல்லாம் தொலைக்காட்சி மக்களுக்கு பயன்படாத வகையிலே, மக்களுக்கு சொல்ல வேண்டியதை சொல்லக் கூடாது என்ற வகையிலே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்று சொன்னால், அதை எப்படிச் சொல்வது? அது யார் கட்டுப்பாட்டிலே இருக்கிறது? மத்திய அரசாங்கம் இதைக் கவனிக்கக் கூடாதா? இதை நாங்கள் இங்கே பேசுவதற்கு உரிமை இல்லையா ? இதையெல்லாம் சொல்கின்றபோது விளம்பரம் தேடுகிறோம் என்று சொன்னால், எந்த அர்த்தத்திலே இவர் உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு குந்தகம் விளைவிக்கின்ற வகையிலே பேசுகின்றார் என்பதை நான் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நீங்கள் செய்கின்ற செயல்கள் மக்களைச் சென்றடையும் என்று சொன்னார்கள். ஒரு சாதாரண இருதய அறுவை சிகிச்சைக்காக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களோ,

நாடாளுமன்ற உறுப்பினர்களோ பிரதமருக்கு பரிந்துரை செய்து ரூ.10,000- பிரதமர் இருதய அறுவை சிகிச்சைக்காக கொடுக்கிறபோது 9 தடவை அந்த உறுப்பினருடைய பெயரையும் பிரதமருடைய படத்தையும் காட்டுகிறார்களே, இது நியாயம்தானா? மத்திய அரசுக்கு ஒரு நீதியா? அதைப் போலவே தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதியிலேயிருந்து இருதய அறுவை சிகிச்சைக்காக ரூ.25,000, ரூ.50,000 என்று கொடுக்கிறார்களே, அதைக் காட்ட மறுக்கிறார்களே காங்கிரஸ் கட்சி ஆளும் மைய அரசின் தொலைக் காட்சியினர். இது எந்தவகையில் நியாயமாகும்? மத்திய அரசுக்கு ஒரு நீதி, மாநிலத்திற்கு ஒரு நீதியா? இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் விளக்குவாரா என்பதை இந்தப் பேரவைத் தலைவர் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதய ஆபரேஷனுக்காக மாண்புமிகு பிரதமரிடமிருந்து நான் ஒரு வாரத்திற்கு 7, 8 பேர்களுக்கு 20 ஆயிரம் 20 ஆயிரம் என்று வாங்கித் தருகிறேன். பெயர்கள் அவரிடம் போகிறது, வருகிறது. நீங்கள் ஏதாவது உதவி செய்யுங்கள் கொடுங்கள். நான் போடச் சொல்லுகிறேன். (சிரிப்பு)

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அப்படியே இருக்கட்டும். ஞானசேகரன் போன்றவர்கள் சொன்னால்தான் தொலைக்காட்சியினர் காட்டுகின்றார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: நான் அதற்குச் சொல்லவில்லை மாநில முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறுவை சிகிச்சை என்று சொன்னால் 25 ஆயிரம், 50 ஆயிரம், ஒரு லட்சம் என்று முழுத் தொகையையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறதே, அதை உறுப்பினர்கள் பரிந்துரை செய்கிறபோது அதைத் தொலைக்காட்சி நிலையத்தார் நாட்டு மக்கள் பார்க்க காட்டக்கூடாதா? உங்களுக்கு ஒரு நியதி, மாநிலத்திற்கு ஒரு நியதியா? அதைத் தான் நீங்கள் விளக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 29]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே தொலைக்காட்சியில் இருதய ஆபரேஷனை காட்ட மாட்டார்கள். நிதி நீங்கள் கொடுத்திருப்பீர்களேயானால், செய்தி அவர்களுக்கு கிடைக்குமேயானால் அதைத் தான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர இருதய ஆபரேஷனைக் காட்டுவது என்பது கிடையாது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் உறுப்பினரும் சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) பேசி முடித்து விடட்டும். வேண்டாம். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் அரசு விழாக்களிலே எத்தனையோ விழாக்களிலே பங்கெடுத்ததை டி.வி.யிலே நான் பார்த்திருக்கிறேன். அரசு விழாக்களிலே நம்முடைய தமிழக அமைச்சர்களுடைய படங்களை பலநேரத்திலே நான் பார்த்து வந்திருக்கிறேன். அதையெல்லாம் இல்லை என்று சொல்லிவிட்டு ஒரேயடியாக மண்ணைத் தூவுவது போலப் பேசுவது என்பது அவ்வளவு நன்றாக இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஏற்கெனவே இந்திரா காந்தி அவர்கள் 1984-லே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் தெளிவாகக் குறிப்பிட்டேன். தொலைக் காட்சி இந்த விஷயத்திலே பாரபட்சமாக நடக்கிறது. எந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதையே மறந்துவிட்டு, முக்கியத்துவம் கொடுக்கக் கூடாத விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய விஷயங்களை இருட்டடிப்பு செய்வதும் நான் இந்தச் சட்டமன்றத்திலே எழுப்புகின்ற குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பிரதமர் வந்து அறுவை சிகிச்சைக்கு உதவி செய்வதை தொலைக் காட்சியில் விளம்பரமாக சொல்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அது யாருடைய சிபாரிசின் பேரில் அந்த உதவித் தொகை

வழங்கப்படுகிறது என்பதை குறிப்பிட்டு காட்டுவது இப்படிபட்ட சிபாரிசு செய்தவர்களின் பெயர்களையெல்லாம் சொல்வதிலிருந்து சிபாரிசு செய்தால்தான் பிரதமருடைய நிதி அறுவை சிகிச்சைக்கு கிடைக்கும் என்ற நிலைமை இருப்பது போல் தோன்றுகிறது. பிறருடைய அரசியல்வாதிகளுடைய சிபாரிசின் பேரில் மட்டும்தான் நாட்டினுடைய பிரதமர் அறுவை சிகிச்சைக்கு நிதி உதவி செய்கிறார் என்று தொலைக்காட்சி விளம்பரம் செய்தால் இதைவிட வெட்கம் கெட்ட செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மக்களுடைய பிரதிநிதிகள் சொல்வது வெட்கம் கெட்டதனம் என்று இந்த மக்கள் பிரதிநிதி சொல்கிறாரா என்று அறியவிரும்புகிறேன். மக்களுடைய பிரதிநிதி சொல்வது வேறு யாரோ சொல்வது அல்ல. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதுதான் மாண்புமிகு பிரதமர் கேட்கிறார்களே ஒழிய அமைச்சர் அவர்கள் மக்கள் பிரதிநிதியாக இருப்பதையே வெட்கம்கெட்டதனம் என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்வது -இதை தொலைக் காட்சியினர் இன்னார் சொல்லித்தான் இது தந்திருக்கிறது என்று சொல்வதையேதான் அவர் வெட்கக் கேடான செயலாகச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிபாரிசு செய்வதையே தவறு என்று சொல்லவில்லை. சிபாரிசை ஏற்றுக் கொள்வதும் தவறு என்று சொல்லவில்லை. இதுவரையில் பிரதமர் தாமாகவே ஒரு ஏழைக்கு முன்வந்து உதவி செய்தார் என்று தொலைக்காட்சியில் சொல்லப்பட்டிருக்கிறதா? அப்படி என்று சொன்னால் ஒரு பாமரன் ஒரு அரசியல் வாதியை அணுக முடியாதவன் நேரிடையாக பிரதமருக்கு விண்ணப்பித்து அவனுடைய இருதய சிகிச்சைக்காக பிரதமர் நிதி உதவி அளிக்க முன்வருவார்களா அதை ஏன் சொல்லவில்லை. இந்த நாட்டினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய அரசியல் வாதிகள் சிபாரிசு செய்தால்தான் அறுவை சிகிச்சைக்கு பிரதமரிடமிருந்து நிதி உதவி கிடைக்க முடியும்.(மேசையைத் தட்டும் ஒலி) அந்த காரியத்தை காங்கிரஸ்காரர்கள் தான் செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது போன்ற பிரமையை தொலைக்காட்சி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி எத்தனையோ பேர்களுக்கு பல ஆயிரங்களை நிதியாக உதவி செய்திருக்கிறார்கள். அதை என்றாவது ஒரு

நாளாவது தொலைக்காட்சியினர் செய்தியாக சொன்னது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5.05

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள் சொல்கின்றபோது இந்த சினிமாவிலே மந்திரிகளையும், அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களையும் வில்லன்களாகவே காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். வருத்தமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் கூட இந்த சமுதாயத்திலே இருக்கக்கூடிய பிரச்சினை பொதுவாக சினிமா படம் என்பது ஏதோ முழுமையாக கற்பனையில் அமைந்து விடுவது அல்ல. சில நேரங்களிலே இருக்கக்கூடிய உண்மைகளை அவர்கள் சித்தரிக்கக்கூடும். நம்முடைய அழகான எம்.எல்.ஏக்கள் இருக்கிறார்கள். அமைச்சர்களும் இங்கே இருக்கிறார்கள். கதாநாயகனாகக்கூட நீங்களே கூட—ஏற்கனவே 70 இலட்சம் போட்டு நாம் மதுவிலக்கு பிரச்சாரத்திற்கு ஒரு படத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுப்பதற்கு உத்தரவிட்டார்கள். நம்முடைய அமைச்சர்களைக் கொண்டோ அல்லது எம்.எல்.ஏக்களைக் கொண்டோ அழகானவர்கள், நன்றாக நடிக்கத் தெரிந்தவர்கள் அவர்களை வைத்துக்கொண்டு நீங்கள் ஒரு படத்தை மிகக் குறைந்த செலவிலே கூட நீங்கள் எடுத்து நாட்டு மக்களுக்கு காட்டலாம் என்பதையும் இங்கே ஒரு ஆலோசனையாக வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆபாச சினிமாக்கள் இன்று ஏராளமாக இருந்துக்கொண்டிருக்கின்றன. ஆபாச சினிமா என்றால் அமைச்சர் அவர்கள் உடனே மத்திய அரசினுடைய கண்ட்ரோலில் இருக்கிறது என்று சொல்வார்கள். பொதுவாக ஆபாச சினிமாவை இடைச் செறுகலாக சினிமாத் தியேட்டரிலே. . .

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அமைச்சர்களும், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் நடிக்கத் தெரிந்தவர்கள், நடித்திருக்கலாம் படத்திலே என்று சொன்னார்கள். தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நடிப்பதற்கு மிக நன்றாகத் தெரிந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக அவர்களுடைய நடிப்பு சில நேரத்தில் அதிகமாக போய்விடுகின்ற நேரத்திலேதான் சட்டைகள் கிழிகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். டேனியல்ராஜ்: தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறையினுடைய அமைச்சர் அவர்கள் நன்றாக நடித்துத்தான் காங்கிரஸ் கட்சியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்து இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சராக இருக்கிறார்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு டேனியல்ராஜ் அவர்கள் இன்னும் பால் குடிக்க மறந்த குழந்தை என்று கருதுகிறேன். காங்கிரஸிலே என்னுடைய உழைப்பு எந்த அளவுக்கு இருந்தது, எத்தனை இலட்சம் ரூபாய் இந்த காங்கிரஸுக்காக என்னுடைய குடும்பப் பணம் செலவாகியிருக்கும், என்னுடைய வாழ்க்கையில் 35 வருஷ காலம் இந்த காங்கிரஸுக்காக நான் உழைத்துள்ளேன். அதுமட்டுமல்ல. 10 ஆண்டுக்காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொகுதியாக இருந்த வெள்ளகோவில் தொகுதியிலே நான் நின்றுதான் முதல் முறையாக காங்கிரஸ் தொகுதி ஆக்கினேன். நான் வெளியேறிய நாளிலிருந்து இன்று வரைக்கும் அந்தத் தொகுதியை காங்கிரஸால் கைப்பற்ற முடிந்ததா? கோவை மாவட்டத்திலே 21 தொகுதியிலே வெற்றி பெற்ற தொகுதி வெள்ளகோவில் தொகுதி ஒன்றுதான். ஆக இந்திரா காந்தி அவர்களுக்காக சிக்மகளூரிலே போய் 10,000 தொண்டர்களை வைத்து வேலை செய்தவன் நான். அதுமட்டுமல்ல. இந்திரா காந்தியை திஹார் ஜெயிலிலே போட்டபோது இந்திய துணைக் கண்டத்திலேயே அதிகமாக ஜெயிலுக்குச் சென்ற தொண்டர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் என்கின்ற அளவுக்கு 55,000 பேர்களை தனியாக என்னுடைய தலைமையிலே சிறைக்கு அனுப்பியவன். * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். மற்ற உங்களுடைய பிரச்சினை இருக்கட்டும்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: தலைவர் அவர்களே, மற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலே இருந்த பொறுப்பாளர்கள் எல்லோரும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நேரத்திலே நான் தனியாக எடுத்தேன். காங்கிரஸினுடைய பழக்கமே ஏறுகின்ற ஏணியை உதைப்பதும், முதுகிலே குத்துவதும், துரோகச் செயல் செய்வதும்தான். இவர்களும் ஒரு நாளைக்கு அனுபவிப்பார்கள். அதிலே எந்த சந்தேகமும் இல்லை. ஏனென்றால் இவர்கள் நம்பிக்கொண்டிருக்கின்ற தலைமை (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் துணைத் தலைவர், ஊரகத் தொழில்துறை அமைச்சரைப் பார்த்து நீங்கள் நன்றாக நடிக்கத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

தெரிந்தவர், காங்கிரஸ் கட்சியிலே நடித்துத்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆனீர்கள். இப்போதும் நடித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்ன காரணத்தினாலே, அவர் தன்னிலை விளக்கமாக நான் காங்கிரஸ் கட்சிக்கு என்னென்ன செய்தேன், என்னென்ன செய்து சட்டமன்ற உறுப்பினர் ஆனேன் என்று சொன்னார்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: தலைவர் அவர்களே, அவர் நல்ல காங்கிரஸ்காரரர் என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, முதுகிலே குத்துவது என்பது அவைக் குறிப்பிலே வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை நீங்கள் நடித்துத்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆனீர்கள் என்று சொன்னால் (குறுக்கீடு) இடையிலே வந்த மற்ற காங்கிரஸ் தலைவர்கள் பெயரைச் சொன்னதெல்லாம் நீக்கிவிட்டேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: அவர் என்னை பால் குடிக்க மறந்த குழந்தை என்றார். அது இருக்கட்டும் பரவாயில்லை. அவர் வயதில் மூத்தவர்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் அவர் சொன்னார். நீங்கள் நல்ல இளைஞர். இன்னும் இளைஞராகவே இருக்கிறீர்கள் என்றுதான் அவர் அப்படிச் சொன்னார்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, பால் குடிக்க மறந்த குழந்தை, முதுகிலே குத்துவது போன்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எடுப்பதாக இருந்தால் நீங்கள் நன்றாக நடித்துத்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆனீர்கள் என்று சொன்னதை எடுத்தால்தான் அவர் சொன்னதை எடுக்கிற பிரச்சினைவரும்.

பிற்பகல் 5.10

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அப்படியானால் இரண்டையும் நீக்கி விடுங்கள்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து இவைகள் எதையும் அவைக்குறிப்பிலிருந்து எடுக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் எதுவுமே 'அன் பார்லிமெண்டரி வேர்டு' இல்லை, அல்லது தனிப்பட்ட நபரைத் தாக்குகின்ற அளவுக்கும் நான் பேசவில்லை. பொதுவாகத் தான்

பேசியிருக்கிறேன். ஆக காங்கிரஸினுடைய நிலை என்ன என்பதை நாட்டுக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, போதும் உங்களுடைய பிரச்சினை. நான் அவைக் குறிப்பு முழுவதையும் பார்த்துவிட்டு எங்காவது இடிக்கிறதா என்று பார்க்கிறேன். திரு. ஞானசேகரன் பேசி முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நம்முடைய ஊரக தொழில் துறை அமைச்சர் அவர்கள் இவ்வளவு திறமையாக இருப்பவர் தனித்து அவர்கள் எவ்வளவோ செய்து இருக்கலாம்: பெரிய கட்சி கூட ஆரம்பித்து இருக்கலாம் போல் இருக்கிறது. அந்த அளவுக்கு செல்வாக்கு இருப்பவர்கள் இன்று மிகத் திறமையாக இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இந்த ஆபாச சினிமா பற்றி சொல்லுகின்ற போது குறுக்கிடப்பட்டது. பொதுவாக சினிமா காட்சிகளைக் காட்டுகிறபோது சினிமா தியேட்டர் ஓனர்கள் நடுவில் இந்த ஆபாச காட்சிகளை ஏதோ கிழவர்கள், மாணவர்களை எல்லாம் இன்றைக்கு ஈர்க்கின்ற வகையில் இவர்கள் எல்லாம் பணத்திற்காக இடைசெருகலாக படத்தை போட்டு பணத்தை இன்று சம்பாதித்து கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து அதுபோன்ற தியேட்டர்களின் லைசன்ஸ்களை ரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம்:* * என்று சொல்வது அது சரியல்ல. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன் (குறுக்கீடுகள்) அது போல் ** என்று ஞானசேகரன் சொன்னதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.**

பிற்பகல் 5-15

திரு சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, சுற்றுலாவுக்குச் செல்கிறேன். இந்தச் சுற்றுலாவிலே, தமிழகத்திலே பல புகழ்பெற்ற திருத்தலங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தத் திருத்தலங்களெல்லாம் பொதுவாக, பழனியை எடுத்துக் கொண்டாலும அங்கே போகிறபொழுது, சுற்றுலாத்துறையிலேயிருந்து வருபவர்கள், பயணிகளையெல்லாம், அதாவது மிரட்டுகிற அளவிலே என்றுகூட சொல்லலாம். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப் போகிறேன். அவர் பேசி இருக்கிற கருத்தினுடைய பொருளைப் பார்த்து, நான் நீக்கப் போகிறேன். அந்தப் பிரச்சினையிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) அதிலே விவாதமே வேண்டாம். அதை அவைக் குறிப்பைப் பார்த்து எப்படியும் நீக்கப்போகிறேன். எனவே அதிலே விவாதம் வேண்டாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல திருத்தலங்களையெல்லாம் இணைக்கக்கூடிய அளவிற்கு, பேருந்துகளையெல்லாம் இயக்கிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், திருத்தலங்களுக்கு வருகிற பயணிகளையோ, அதேபோல பக்தர்களையோ ஓரளவிற்குத் தயக்கமூட்டுவது போல, ஆங்காங்கே பிச்சைக்காரர்கள் அதிகமாக இருந்துகொண்டு இருக்கிறார்கள். பழனிக்குச் செல்கிறபோது, இந்த அர்ச்சகர்கள் என்ற பெயரிலே சிலபேர் கோயிலுக்கு ஆளை இழுத்துச் செல்லும்போது, அவர்கள் வந்தாலே பயமாக இருக்கிறது. அதையெல்லாம் ஓரளவிற்கு நீங்கள் களைவீர்களேயானல், திருத்தலங்களுக்கு அதிகமான ஆட்கள், சுலபமாக, சுதந்திரமாகப் போகக்கூடிய வாய்ப்பு இருக்கும். பள்ளி குழந்தைகளும் அதேபோல கல்லூரி மாணவர்களும் எக்ஸ்கர்ஷன் செல்கிறபோது.. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, திருத்தலங்களுக்குச் செல்கின்ற சுற்றுலாப் பயணிகளையெல்லாம் அங்கேயுள்ள அர்ச்சகர்கள் பயமுறுத்துகின்ற வகையிலே நடத்துகிறார்கள் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை தந்து கொண்டிருக்கிறார்கள். இவர் மூன்றாண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்களே, எப்போதாவது இதுபற்றி ஒரு ரிப்போர்ட்டாக மனு கொடுத்து இருக்கிறார்களா இந்த அரசிடம். அப்படி எங்கேயாவது இப்படி நடந்திருக்கிறது என்று இதுவரை சுட்டிக்காட்டி இருக்கிறாரா? மூன்று ஆண்டுக்காலம் இருந்துவிட்டு, இந்த மானியத்திலே இப்போது பேசுகிறபோது மட்டும், சுற்றுலாப் பயணிகளை, திருத்தலங்களிலே மிரட்டுகிற அளவிற்கு இருக்கிறது என்ற தவறான தகவலை இங்கே தந்து கொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழனி கோயிலுக்கு என்னோடு வருகை தருவார்களேயானால், நாம் பழனிக்குப்போய் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னாலேயே பலபேர் சில புட்டிகளைத் தூக்கிக்கொண்டு, பால் குடத்தை தூக்கிக்கொண்டு வந்து... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஞானசேகரன், பழனி கோயிலுக்கு வருபவர்கள், சுற்றுலாப் பயணிகள் கிடையாது; அவர்களெல்லாம் பக்தர்கள். அறநிலையத் துறை மானியத்திலே பேசியபோது, இதைப் பற்றிப் பேசியிருக்கலாம். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:* மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பழனியிலே அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலிலே ஆண்டவனுக்குப் பூஜை செய்யக் கூடிய அந்த அர்ச்சகர்கள் பற்றி பொதுவாகக் குறை கூறிக் கொண்டு இருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த அறங்காவலர் குழு அமைக்கப்பட்டிருந்து, அவர்கள் சரியான முறையிலே கடமைகளைச் செய்யாத காரணத்தினாலே, இதுபோன்ற குறைபாடுகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆண்டவன் அருள் பெற்று, ஆண்டவனுடைய நல்லாசியோடு, ஆண்டவனுடைய பரிபூரண அருளைப் பெற்று, தமிழகத்தில் நல்லாட்சி செய்து வரும் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் அதெல்லாம் களையெடுக்கப்பட்டிருக்கிறது. அருகிலே இருக்கக்கூடிய கேரள மாநிலத்திலேயிருந்து வரக்கூடிய பக்தர்கள்கூட, இன்று பழனிக் கோயில் இருப்பதைப் பார்த்து, அவர்கள் பாராட்டக் கூடிய அளவிலே, மிகச் சிறப்பான முறையிலே பழனி திருத்தலமானது இப்போது விளங்குகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இதை, கோயிலுக்குச் சென்று அவர் நேரடியாகப் பார்த்தால் தெரியும். அவர், வேலூரிலே இருந்துகொண்டு, அதிக தூரத்தில் இருக்கக் கூடிய, பழனியைப் பற்றியோ, திருச்செந்தூரைப் பற்றியோ குறை கூறுவது முறையாக இருக்காது.

பிற்பகல் 5.20

திரு. சி. ஞானசேகரன்: பழனி கோயிலுக்கு நான் அவரை விட அதிகமாகவே போய் இருப்பேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடித்து விடட்டும், உரையை முடித்து விடலாம்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, பள்ளிக் குழந்தைகளும், கல்லூரி மாணவர்களும் எக்ஸ்கர்ஷன் செல்கிறபொழுது அரசாங்கத்தினுடைய போக்குவரத்துக் கழகங்களிடத்திலே இருக்கக்கூடிய ஏதாவது பேருந்தை ஒரு கன்செஷன் ரேட்டிலே ஒரு ஹாஃப் சார்ஜைப் போட்டு நீங்கள் பஸ்ஸைக் கொடுப்பீர்களேயானால் அந்தப் பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் சுற்றுலாவை மேற்கொள்ளுவதற்கும், அதேபோல எக்ஸ்கர்ஷன் மேற்கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகவே, அரசு அதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பள்ளிக்கூட குழந்தைகளுக்குப் போக்குவரத்துறையிலேயிருந்து சுற்றுலாவுக்கு பஸ்களைக் கொடுக்கும் பொழுது கன்செஷன் ரேட்டிலேதான் கொடுக்கிறார்கள் என்பதைப் பேரவைத் தலைவரவர்கள் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அப்படி இல்லை. போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இருப்பார்களே யானால் அதற்கு நாம் இங்கே சரியான விளக்கத்தைப் பெற முடியும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அண்மையிலேகூட சர்ச் பார்க் கான்வென்டிலேயிருந்து குழந்தைகளுக்காக இந்த பஸ்களை அனுப்பி வைத்தபொழுது எங்களுடைய குழந்தைகளெல்லாம் சென்றபொழுது கன்செஷன் ரேட்டிலேதான் பஸ்ஸைக் கொடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதாரபூர்வமாகத் தெரிவிக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்ச் பார்க் கான்வென்டுக்கு வேண்டுமானால் கொடுத்திருக்கலாம். நாங்கள் பல பள்ளிகளுக்குக் கேட்டபொழுது இல்லை என்ற வார்த்தையை எம்.டி.க்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் நீங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுற்றுலா செல்கிற மாணவ மாணவிகள் என்பது,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அந்தப் பள்ளித் தலைமையாசிரியர் அவர்களிடமிருந்து அனுமதியைப் பெற்று ஒரு குழுவாக வருகிறபொழுது தமிழ்நாடு அரசு நடத்துகிற சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நடத்துகிற பேருந்துகளில் இதுபோன்ற மாணவ மாணவிகளுக்குக் குழுக்களாக வருகிறபொழுது சலுகைக் கட்டணம் அளிக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய வடார்க்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில், ஏழைகளுடைய ஊட்டி என்று சொல்லப்படுகின்ற ஏலகிரி மலை இருக்கிறது. அந்த ஏலகிரி மலையிலே சுற்றுலாப் பயணிகள் வந்து தங்குவதற்கான —ஊட்டியிலேகூட கோவாப்பரேட்டிங் கஸ்ட் ஹவுஸ் என்று இருக்கிறது. ஏற்கனவே ஊட்டியிலே நீங்கள் கட்டியிருப்பதுபோல தமிழ்நாடு டூரிஸம் பங்களாவை ஏலகிரி மலையில் கட்டினால் மிக நலமாக இருக்கும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமிர்தியையும் நீங்கள் சுற்றுலா மையமாக ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறீர்கள். அந்த அமிர்தியில் ஒரு சின்ன Zoo இருக்கிறது. அந்த இடத்திலே நீங்கள் கெஸ்ட் ஹவுஸைக் கட்டி அங்கு வரக்கூடிய மக்களுக்குப் பயன்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசியாவிலேயே பெரிய டெலஸ்கோப் எங்களுடைய வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ஆலங்காயம் பகுதியிலே இருக்கக் கூடியது காவலூர் மலை. அந்தக் காவலூர் மலை ஜவ்வாது மலையைச் சார்ந்தது. அங்கேயும் நீங்கள் டூரிஸ்ட் டெவலப்மெண்ட் ஒரு பங்களாவை அந்த இடத்திலே கட்ட வேண்டும்.

வேலூரில் ஒரு மோட்டலைக் கட்ட வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேலூரிலே அதற்கான நிலம்கூட இருக்கிறது. ஏற்கனவே அதனுடைய இயக்குநர் அவர்களுக்கும், ஏற்கனவே அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக இருந்திருக்கிறார்கள் -அவர்களுக்கு இடம் தெரியும். நீங்கள் அந்த இடத்திலே -வேலூரிலே ஒரு மோட்டலைக் கட்டினீர்களேயானால், சென்னையிலேயிருந்து மூன்று மணி நேரம் பயணத்தை மேற்கொண்டவர்கள் அந்த இடத்திலே தங்கிச் செல்வார்கள். கிருஷ்ணகிரியிலே இருப்பதைப் போல ஒரு மோட்டலை நீங்கள் -இராணிப்பேட்டையிலே மோட்டல் இருக்கிறது என்று சொல்லலாம். அது வேறு. அது சித்தூர் ரோட்டிலே இருக்கிறது. வேலூர் வழியாக இந்தப் பக்கம் செல்பவர்களுக்கு ஒரு மோட்டல் அவசியம் தேவை என்பதை

உணர்ந்து நீங்கள் அந்த இடத்திலே சுற்றுலாத் துறை (மணியடிக்கப்பட்டது) ஒரே நிமிஷம். மோட்டலைக் கட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த இடத்திலே சொல்லியாக வேண்டும். திருச்செங்கோடு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சௌந்தரம், எம்.பி., அவர்கள் சொல்லிக் கூட மாண்புமிகு பிரதமர் அவர்கள் இருதய நோயாளிக்குப் பணம் அளித்திருக்கிறார்கள். வேலூரைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இராஜ்யசபா உறுப்பினர் முகமது சகி அவர்கள் போய் ரெக்கமண்ட் செய்துகூட மாண்புமிகு பிரதமர் அவர்கள் பணத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அதையும் ஏற்றுக்கொண்டு பாரபட்சம் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றியை உரித்தாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போது திரு. ஞானசேகரன் பேசுகிறபொழுது ** அடிப்படையிலேயே அவர் இப்பொழுது இந்தப் பெயர் பற்றி பேசிய பிரச்சினையும் விவாதத்திற்கு உரியதாக இருக்கிற காரணத்தால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரை. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் பதிலுரை.

"ஜெய்ஹிந்த்" என்ற சொற்றொடரை உரையின் முடிவில் பயன்படுத்துதல் குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த "ஜெய்ஹிந்த்" என்பதைப் பொறுத்தவரையில் பார்லிமெண்டரி பிராக்டிசில் அவையெல்லாம் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது பல்வேறு இடங்களில் நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறது. அதைத்தான் அன்றைக்கு பேரவைத் துணைத் தலைவர்கூட, இங்கே சொல்லியிருக்கிறார். அந்த பார்லிமெண்டரி பிராக்டிசில், ஜெய்ஹிந்த், வந்தேமாதரம் என்பதெல்லாம் கோஷம் போடுகிற வார்த்தைகள்; எனவேதான் அவை வேண்டாம் என்று பார்லிமெண்டரி பிராக்டிசில் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால், அதையும் மீறி, அவர்களேகூட பல்வேறு இடங்களில் மீறித்தான் நடந்து வருகிறார்கள். மீறியே நடந்து வந்திருக்கிற அந்தப் பழக்கத்தில், ஞானசேகரனும் சொல்லி இருக்கிறார். எனவே, மிக 'ஸ்ட்ரிக்ட்'- ஆக

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நம்முடைய ரூல்படி நடக்க வேண்டும் என்று அப்படிச் சொன்னால், அதைச் சொல்லாமல் இருப்பது நல்லது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

பிற்பகல் 5-25

திரு. ச. காந்திராஜன் *(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)*: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்று அவையை நடத்தியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள், தன்னுடைய விவாதத்தின் முடிவுரையில் 'ஜெய்ஹிந்த்' என்று சொன்னார். அப்போது நம்முடைய ஆளுங்கட்சி மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சந்திரசேகர் அவர்கள், ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பி, அதிலே நான் என்னுடைய தீர்ப்புரையாக, 'ஜெய்ஹிந்த்' என்று சொல்வது தவறு என்று சொல்லவில்லை; ஆனால், பாராளுமன்ற நடைமுறை விதிகளிலே இப்படியெல்லாம் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் இருக்கின்றன என்று சொல்லி, 'கவுல் அண்டு ஷக்தர்' -லே இருக்கிற நடைமுறை விதிகளைப் பற்றி, நான் அந்தப் புத்தகத்தை எடுத்து, அதிலே இருக்கிற விதிகளையெல்லாம் வாசித்தேன். அதனை எச். எம். ராஜு அவர்கள்கூட பார்த்தார்கள். ஆனால், மறுபடியும் இன்றும்கூட தினமணிப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். துணை சபாநாயகர், இந்தமாதிரி எல்லாம் ஒரு தவறான தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள் என்று சொல்லி, நம்முடைய தீர்ப்பையே 'கிரிடிசைஸ்' செய்யும் வகையிலே 'லெட்டர் டு தி எடிட்டர்'-ல் எழுதியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது எல்லாம், அதைக் கண்டிப்பாகவே சொல்லக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கூடுமான வரையில் தவிர்க்க வேண்டுமென்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். எனவே, இது தவறான வார்த்தை என்று சொல்லவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்கிறேன். இன்றைக்குக்கூட என்னிடத்திலே வந்து சொன்னார்கள்; ஏதோ 'ஜெய்ஹிந்த்' -க்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் எதிர்ப்பு என்பதைப்போல அந்தச் செய்தி, பத்திரிகையின் வாயிலாக வெளியே சென்றிருக்கிறது என்று அறிகிறேன். 'கவுல் அண்டு ஷக்தர்' ல் மட்டுமல்ல; பண்டித நேரு பெருமகனார், பிரதமராக இருந்தபோதே, இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு நாடாளுமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவில்லை என்பதைக்கூட நான் இப்போது

29 ஏப்ரல் 1994] [பேரவைத் தலைவர்]

சொல்லியிருக்கிறேன். அந்தவகையில், தொடர்ந்து கடைப்பிடிக்காததை, இன்றைக்கு திரு. ஞானசேகரன் சொல்லியிருக்கிறாரே தவிர, சில முழக்கங்கள் பாராளுமன்றத்திலே இருத்தலாகாது என்று முடிவு அன்றைக்கே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கவுல் அண்டு ஷக்தர்' என்ற நூலில் உள்ள சரியான அந்த வார்த்தைகளை அப்படியே திரும்பச் சொல்ல வேண்டுமென்றால், `The Members are forbidden to use the following words:' ஆக, 'உறுப்பினர்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வதிலே இருந்து தடுக்கப்படுகிறார்கள்' என்கிற வார்த்தைகள்தான் அதிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்கிற பொருளிலேதான் 'They are forbidden' —என்ற வார்த்தைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1937—இலே, இதே அவையிலே, Mrs. Lakshmi Sankara Iyer என்று ஒருவர் இங்கே வந்து இதைப் பேசி இருக்கிறார். அப்போது ஜெய்ஹிந், வந்தேமாதரம் ஆகியவைகளை 'யூஸ்' செய்திருக்கிறார். 1937-இல் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் இந்த 'ஹவுஸ்'-இல் 'அலவ்' செய்திருக்கிறார்கள். 'கவுல் அண்டு ஷக்தர்'-ல் சொல்லியிருப்பது 'ரூல்' அல்ல; It is just a commentary by two persons.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'கமென்ட்ரி' அல்ல; அவர் நாடாளுமன்றத்தில் நடந்த புரசீடிங்கில் இருந்து எடுத்தே 'கோட்' செய்திருக்கிறார். அதையும் நான் உங்களிடத்திலே காண்பித்தேன். (குறுக்கீடு)

திரு. மா. சுந்தரதாஸ் : காண்பித்தீர்கள்; அது பாராளுமன்றத்திலா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்றத்தில் தான். அதைத்தான் அவர் எடுத்து, திரும்பப் புத்தகமாகப் போட்டிருக்கிறபோது, அவர் 'போர்பிடன்' என்று அவருடைய 'ஒபீனியன்'ஆகச் சொல்லவில்லை. பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட, நான் இப்போது தெரிவித்ததைப்போன்ற ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இன்ன தேதியில், பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தின்

அடிப்படையில் என்றுதான் சொல்லியிருக்கிறார். நான் இப்போதும் சொல்கிறேன்; அவர் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை, தவிர்க்க வேண்டுமென்ற ஒரு பாராளுமன்ற நடைமுறை இருக்கிறது. அது கடைப்பிடிக்கப்படாமலேயே வந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், இன்றைக்கு திரு. ஞானசேகரனும் அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் சொல்லியிருக்கிறார் என்பதோடு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொண்டேன். (குறுக்கீடுகள்) வேண்டாம்; இதோடு போதும்.

7. மானியக் கோரிக்கைகள், 1994—95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-30

* *மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வைப்பட்ட இடமெல்லாம் சாதனையாய் மலர, பாதம் பதித்த இடமெல்லாம் சரித்திரமாய் மிளிர, பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற பொற்கால முதல்வர் இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

தமிழருக்கு தொண்டும் செய்யும் தமிழனுக்கு தடை விதிக்கும்
நெடுங்குன்றம் தூளாய் போகும், சிறுத்தையே வெளியில் வா,
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலியென செயல் செய்யப்
புறப்படு,

என்று முழங்கிய பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் இன்று. கண்களுக்கு ஒளி போல, கவின்மலர் வாசம் போல, பெண்களும், ஆண்களும், பெரும் தமிழ்நாடு தன்னில் தண்கடல் நிகரித்த அன்பால் சரிநிகர் சமானத்தார் ஆனார், என்ற பண் வந்து காதில் பாய பருகும் நாள் எந்த நாளோ என்று அன்றைக்கு பாவேந்தன் கேட்டான், அந்த நாள், புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த நாள். அத்தகைய பெருமைக்குரிய பாவேந்தருடைய கனவை நனவாக்கிய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அமைச்சரவையில் அவருடைய நல்லாசியுடன், செய்தித் துறை அமைச்சராக பொறுப்பேற்று நான் முதல் முதலாகப் போட்டக் கையெழுத்து, பாரதிதாசன் பிறந்த நாள் விழா கோப்பிலேதான். இன்றைக்கு

அவருடைய பிறந்த நாளில் எனது துறைக்கான மானியக் கோரிக்கையினை நிறைவேற்றக் கோரும் வாய்ப்பினை தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அனுதினமும் போற்றும் நமது எம்.ஜி.ஆர். புகழ் பாடி, மக்கள் குரலை பிரதிபலித்து, அரசின் பல்வேறு துறைகளின் நலத் திட்டங்களையும், சாதனைகளையும் தினமும் தந்தி போல் மக்களுக்கு அளித்து, தமிழ்நாட்டு மக்களுக்கு அதிர்ஷ்டமாகக் கிடைத்துள்ள புரட்சித் தலைவி அரசின் மகத்தான செயல் திறனை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியை செய்தி மற்றும் விளம்பரத் துறை செம்மையாக செய்து வருகிறது.

கண்ணுக்கு ஒளி முக்கியம், விண்ணிற்கு மதி முக்கியம், முகத்திற்கு அழகு முக்கியம், அகத்திற்கு தூய்மை முக்கியம், இதயத்திற்கு துடிப்பு முக்கியம், வில்லுக்கு நாண் முக்கியம், சொல்லிற்கு பொருள் முக்கியம், செயல் திறன் முக்கியம், அதைப் போல செயல்படுகின்ற அரசுக்கு செய்தித் துறை முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு அரசாக, தமிழர் நலம் பேணும் அரசாக, அற்புதத் திட்டங்களை நிறைவேற்றும் அரசாக, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை வாழ வைக்கின்ற அரசாக, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அரசாக, இருட்டில் இருப்போரை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் அரசாக, அடித்தள மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக, அமுக்கப்பட்ட மக்களுக்காக, அழுத்தப்பட்ட, ஓரம் கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, நலிந்துபோன, மெலிந்துபோன மக்களுக்காக அற்புதத் திட்டங்களை தருகின்ற அரசாக, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை மக்கள் மனதிலே நிலைக்க வைக்கின்ற அரசாக, புரட்சித் தலைவி அரசு செயல்பட்டு வருகிறது. வீரர்களுக்கு விழா எடுப்பதும், வித்தகர்களுக்கு சிலை வடிப்பதும் நிலைத்த புகழ் பெற்றோருக்கு நினைவிடங்கள் அமைப்பதையும் வேள்வியாக செய்து வருபவர் நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மகத்தான தியாகங்களை மறவாது போற்ற வேண்டும் என்று நினைத்து, தியாகத்திற்கு திசையில்லை, தொண்டிற்கு பேதமில்லை, சான்றான்மைக்கு சாதியில்லை என்று சங்கநாதம் முழங்கி அரசியல் மாச்சரியத்திற்கு அப்பாற்பட்டு மாற்று முகாம்களிலே இருந்தாலும் வேற்று கருத்து கொண்டிருந்தாலும், அதைப் பற்றி கருதாது நாட்டுக்கும், மொழிக்கும், இனத்திற்கும் நற்பணி ஆற்றிய நல்லவர்களைப்

பெருமைப்படுத்தும் வகையிலும், புரட்சித் தலைவி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் நாட்டிற்கு உழைத்தவர்களை அந்த அளவிற்கு பெருமைபடுத்தியதில்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு செயலாற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-35

யார், யார் புகழுக்குரியவர்களோ, யார், யார் பெருமைக்குரியவர்களோ யார், யாருக்கெல்லாம் புகழ் பாடவேண்டுமோ, அவர்களை எல்லாம் பெருமைப்படுத்துகிற வகையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் 19 விழாக்களையும், மாவட்ட அளவில் 11 விழாக்களையும் புரட்சித் தலைவி அரசு ஆண்டுக்கு ஒரு தடவை என்று ஏறத்தாழ 30 விழாக்களை நடத்தி வருகிறது. ஆனால் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபோது சொன்னதைச் செய்யவில்லை; செய்வதைச் சொல்வதில்லை என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். வதந்திக்கு வாகனம் தேவையில்லை என்று சொல்வார்கள். அதைப்போல வதந்தியை லக்கேஜ் ஆக ஏற்றிக்கொண்டு பிராட்கேஜ்-லே வருகின்ற கூட்ஸ் வண்டிகளாக அவர்கள் இருக்கின்ற காரணத்தால்தான் எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதைச் செய்கிற முதலமைச்சர் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு புரட்சித் தலைவி அறிவித்த அத்துணை செயல்களையும், அத்துணை திட்டங்களையும் புரட்சித் தலைவியின் அரசு சாதித்து இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஒளி-ஒலிக் காட்சி நடத்தப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறபோது அறிவித்தார்கள். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் ஒளி--ஒலிக் காட்சி அமைப்பதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையிலே 21 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விரைவிலே ஒளி—ஒலி காட்சி அமைப்பதற்கான பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் ஒளி-ஒலிக் காட்சிகள் நடத்தப்படும். வண்ணத் தமிழ் மகளை வாழ வைக்க எண்ணச் சிறகடித்த எண்ணற்ற கவிதைகளை வண்ணமுறத் தந்த கவியரசர் கண்ணதாசன் பிறந்தநாள் மாநில அளவிலே கொண்டாடப் படும் என்று அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவர்களுடைய அறிவிப்புக்கு இணங்க காரைக்குடியில் மாநில அளவில்

அவருடைய விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுமாத்திரமல்ல, காரைக்குடியில் உள்ள கண்ணதாசன் மணிமண்டபத்தில் கண்ணதாசன் அவர்களின் வெண்கல மார்பளவுச் சிலை 23,500 ரூபாய் செலவில் செய்யப்பட்டு விரைவில் அமைக்கப்படுகிறது.

'பாரதத்தில் நாம் மக்கள்
பண்பினில் நாம் மக்கள்
வெற்றியில் நாம் மக்கள்
அறிவில் நாம் மக்கள்
நாம் மக்கள் என்று'
நம் மக்கள் புகழ்பாடும்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இடம் நினைவு இல்லமாக ஆக்கப்படும் என்று அன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். அந்த நடவடிக்கை இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்து, வெள்ளையனே, நீ ஆண்டதுபோதும், நமது உரிமை மாண்டது போதும் என்று அன்றைக்கு வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்ட அந்த எரிமலைத் தியாகிகளுக்கு நினைவாக ஒரு நினைவுத் தூண் எழுப்பப்படும் என்று புரட்சித் தலைவி அன்றைக்குச் சொன்னார்கள். சொன்னதை நடத்திக் காட்டி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பாக்கும் வகையிலே கிண்டியிலே, காந்தி மண்டபத்திலே ஒரு நினைவுத்தூண் 3 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 2.10.93 அன்று திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல சர்.சி.பி. தியாகராயர் வாழ்ந்த இடத்தை அரசு நினைவிடமாக மாற்றியமைக்க தக்க நடவடிக்கை இன்றைக்கு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல 'இரைபோடும் மனிதருக்கே, இரையாகும் வெள்ளாடே' என்று இலட்சிய கீதம் எழுப்பி, சமுதாயக் கேட்டைத் தகர்க்க பட்டுக்கோட்டை கட்டிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு பட்டுக்கோட்டையில் ஒரு நினைவகம் எழுப்பவேண்டும் என்று புரட்சித் தலைவி அன்றைக்கு அறிவித்தார்கள். அந்த நடவடிக்கை இப்போது மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதுபோல் திருவள்ளுவர் சிலை அமைப்பது முனைப்பாக கன்னியாகுமரியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை 2.315 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது.

அதைப்போல மருது சகோதரர்களுக்கும் நினைவகம் ரூ. 5.46 இலட்சம் செலவில் இன்றைக்கு அமைக்கப்பட இருக்கிறது. அதைப்போல

பெண்ணுரிமைக்கு பாடுபட்ட தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுக்கு சிலை இன்றைக்கு உருவாகி வருகிறது. தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டவேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சியிலே உண்ணாவிரதம் இருந்து தமிழுக்காகத் தன்னுயிரைப் பணயம் வைத்த தியாகி சங்கரலிங்கம் அவர்களை மதிக்கவேண்டும் என்பதற்காக சங்கரலிங்கம் சிலை ரூ. 1.2 இலட்சம் செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அதைப்போல தியாகி செண்பகராமன், மேயர் சிவராஜ், வ.வெ. சுப்பிரமணியம் ஆகியோர் நினைவகம் எல்லாம் இந்த ஆட்சியிலே அமைக்கப்படுகிறது.

பிற்பகல் 5-40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல பாரதத்திலே பா ரதத்திலே பாரதிர பாட்டுப் பாடிய பாரதியைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலே சென்னை, திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த இல்லம் இன்றைக்கு 10 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலே நினைவு இல்லமாக அமைக்கப்பட்டு புரட்சித் தலைவி அவர்களின் திருக் கரங்களாலே இந்த நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் சென்ற மானிய கோரிக்கையிலே புரட்சித் தலைவி அவர்கள் எத்தகைய செயல் திட்டங்களை அறிவித்தார்களோ அத்தகைய செயல் திட்டங்கள் இன்றைக்கு செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரையில் செய்தி விளம்பரத்துறை என்பது ஏதோ விளம்பரம் செய்கின்ற பணியை மட்டும் செய்யவில்லை. அரசியல் தலைவர்களுக்கு பிறந்தநாள் நடத்துவது, தியாகிகளுக்கு சிலை வைப்பது, நினைவகம் அமைப்பது அரசினுடைய திட்டங்களை வெளிப்படுத்துவது, நினைவகங்களையும் பராமரிப்பது, அதுபோல் 'தமிழரசு' பத்திரிகையின் மூலம் அரசாங்கத்தின் திட்டங்களை வெளிப்படுத்தி மக்களிடத்தில் கொண்டு செல்வது, அதுபோல் பொருட்காட்சி நடத்துவது, பல்கலை பணி விளக்க முகாம்கள் நடத்துவது, இப்படிப்பட்ட பல்வேறு சாதனைகளை செய்தித்துறை இந்திய துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டில்தான் செய்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல் 16 எம்.எம். பிரதிகள் தயாரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல தமிழ்நாடு திரைப்பட பிரிவு தயாரிக்கும் நிகழ்ச்சிகள் விளம்பரப்பட நிகழ்ச்சியாக தொலைக்காட்சியில் வெளியிட்டு இருக்கிறோம். அதன் மூலம் இந்த ஆண்டு அரசுக்கு ரூ.9,72,200 வருமானமாகக் கிடைத்திருக்கிறது. அதுபோல தமிழ்நாடு திரைப்படப் பிரிவை நவீனப்படுத்துவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு 56.27 லட்சம் இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல அரசினுடைய திட்டங்களும் சாதனைகளும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படுவதற்கு 10 வீடியோ வேன்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்றன. மேலும் 10 வீடியோ வேன்கள் இந்த ஆண்டு வாங்கப்படும்.

1994 ஏப்ரல் 29] [திரு. மு. தென்னவன்]

அதுபோல் பல்கலை பணி விளக்க மையங்கள் நடத்தப்படுகிறது. அதைப்போல் மேற்கொள் பிரிவுக்கு 16 லட்ச ரூபாய் செலவில் மைக்ரோ பிலிம் கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

அதைப்போல் தமிழரசு அச்சகத்திற்கு அச்சுக்கோர்ப்பு பணிகளைத் துரிதப்படுத்த 3.79 லட்ச ரூபாய் செலவிலே ஒரு டெஸ்க் டாப் பப்ளிஷிங் இயந்திரம் வாங்கப்பட்டிருக்கிறது. இப்படி சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலே எத்தகைய திட்டங்களைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்களோ அத்தகைய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை காங்கிரஸ்காரரர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே பொற்கால ஆட்சியில் புதுமைகள் அரங்கேறுகின்றன, எக்காலமும் நிலைக்கும் சாதனைகள் தொடர்கிறது என்ற அளவுக்கு இன்றைக்கு சாதனைகள் சரித்திரமாவதற்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோல் இந்த அரசு பொருட்காட்சி நடத்துகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே அரசாங்கமே பொருட்காட்சியை நடத்துகிறது என்று சொன்னால் அது தமிழ்நாடு அரசுதான். பொருட்காட்சிகளை நடத்துவதன் மூலம் வரும் ஆதாயத்திற்காகவும் இலாபத்திற்காகவும் மட்டும் பொருட்காட்சி நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட 5 பொருட்காட்சிகளில் இந்த ஆண்டில் மட்டும் 65 லட்ச ரூபாய் இலாபம் கிடைத்தாலும் பலபேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலே பல வியாபாரிகள் வியாபாரம் செய்கின்ற வகையிலே, பல நாடகக் கலைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கின்ற வகையிலே-தான் இந்தப் பொருட்காட்சிகள் எல்லாம் நடத்தப்படுகின்றன. ஆகவே ஆதாயத்திற்காக மட்டும் பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை. அதுமட்டுமன்றி அரசினுடைய திட்டங்களையும் சாதனைகளையும் வெளிப்படுத்துகின்ற வகையிலே இந்தப் பொருட்காட்சிகள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 24 நினைவகங்கள் இன்றைக்கு இந்த ஆட்சியால் பராமரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் திரைப்பட உலகின் மேம்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக செயல்பட்டுவரும் நம்முடைய இதயதெய்வம் அவர்கள் பெயரிலே ஒரு விருது சென்ற ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டது. திரைப்படத் துறையில் நீண்டகாலம் சிறந்த முறையில் தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு அவர்களது சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தலா 5 பவுனில் தங்கப் பதக்கமும் நினைவுப் பரிசும் வழங்கப்படுகிறது. கடந்த 18.1.94 அன்று நடைபெற்ற மாநில திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் 1992ஆம் ஆண்டுக்கான புரட்சித் தலைவியின் விருது கலை உலக விற்பன்னர்கள் 3 பேருக்கு வழங்கப்பட்டது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல பத்திரிக்கையாளர்களுக்கு வீட்டு வசதி உருவாக்கிக் கொடுக்கின்ற வகையில் 5.5 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு அதற்காக 20 லட்சம் ரூபாய் வரை அரசு மானியமாக வழங்கப்பட்டது. 21.2.94 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர்களின் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக ஒரு வீட்டின் ஒரு சதுர அடிக்கு ரூ.50 வீதம் குறைந்தபட்சம் ரூ.40 ஆயிரம் வரை மானியமாக அளித்திருக்கிறார்கள். இதனால் 136 பத்திரிகையாளர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் அரசுக்கு 50 லட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே இந்திய துணைக் கண்டத்திலே இந்த மாநிலத்தில்தான் பத்திரிகையாளர்களுக்கு இந்த வசதியை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-45

அதைப்போல திரைப்பட உலகிற்கு பல்வேறு பணிகளைப் புரட்சித் தலைவி அவர்கள் செய்து வருகிறார்கள். பல்வேறு சாதனைகளை உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே அது எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினாலே அவற்றை இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் தமிழ்த் திரைப்பட உலகத்தின் ஆணிவேர்களை, நாடி நரம்புகளை, ரத்த நாளங்களை, இதயத் துடிப்புகளை நன்கு அறிந்து வைத்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு திரைப்பட உலகத்தின் நல்வாழ்வின் ஏற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் என்றும் ஊக்கத்துடனும் ஆக்கத்துடனும் உறுதுணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இறுதியாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு புதிய சில அறிவிப்புகளை அறிவிக்கவேண்டும் என்று பணித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளை மட்டும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய சிந்தனைக்கும், கலை நுணுக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக திரை உலகில் மிக முக்கியத்துவமாக சென்னை தரமணியில் 86 ஏக்கர் பரப்பிலே ரூ.14.93 கோடி செலவிலே சர்வதேச தரம் வாய்ந்த திரைப்பட நகர் உருவாகிவருகிறது. அந்த திரைப்பட நகருக்கு திரை உலக வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவருமான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஜெயலலிதா திரைப்பட நகர் என பெயர் சூட்டப்படும்.

பேரறிஞர் அண்ணா நினைவு இடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப்போன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

நினைவிடத்தின் வளாகத்தில் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் அமைக்கப்படும். மேலும் எம்.ஜி.ஆர். அவர்கள் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நிரந்தர ஒளிஒலி காட்சியும் அங்கே அமைக்கப்படும்.

கேரள மாநிலத்தில் வைக்கத்திலே கோவிலுக்குள் நுழையக்கூடாது, தெருவில் நடமாடக்கூடாது, நடந்தால் தீட்டு, பட்டால் பாவம் என்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தார்கள். நாய் நடக்கலாம், கழுதை கனைக்கலாம், எருமை ஓடலாம், பன்றி பவனி வரலாம், ஆடு வரலாம், மாடு வரலாம், ஆனால் ஒரு பஞ்சமன் வரக்கூடாது என்று இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து தந்தை பெரியார் போராடினார். சத்தியாகிரகத்திலே ஈடுபட்டார். அதிலே வெற்றி கண்டார். அதை நினைவு கூறுகின்ற வகையிலே 15 லட்சம் ரூபாய் செலவிலே புரட்சித் தலைவி அரசின் சார்பிலே அங்கே ஒரு நினைவகம் எழுப்பப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே தமிழ்நாடு நீங்கலாக இன்றைக்கு அண்டை மாநிலத்திலே ஒரு நினைவகம் தமிழக அரசு சார்பிலே இருக்கிறது என்று சொன்னால் அது தந்தை பெரியாருடைய நினைவகம். அது யாருடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்டது என்று சொன்னால் அது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தை கண்டறிந்து தகர்த்து வீச மூண்டெழுந்த பேர் இடியாய், தமிழன் இந்த காலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு பாடுபட்ட பகுத்தறிவு பகலவன் 95 ஆண்டு காலம் வாழ்ந்தாலும், இன்னும் 95 ஆண்டு காலம் கழித்து பிறக்கின்றவனின் சிந்தனைக்கும் வேலை வைக்கின்ற சீர்திருத்த செம்மல் தந்தை பெரியார் அந்த போராட்டத்திலே வெற்றிபெற்றார். அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையிலே ஆண்டுதோறும் வைக்கத்திலே அரசு விழா நடத்தப்படும்.

'காலுக்கு செருப்புமில்லை, கால் வயிற்றுக்கு கூழுமில்லை, பாருக்கு உழைத்தோமடா, பசை யத்து போனோமடா, கோடிக்கால் பூதமடா, தொழிலாளி கோபத்தின் ரூபமடா' என்று வீரக்கனல் எழுப்பும் வகையில் அன்றைக்கு பாட்டு பாடினாரே ஜீவா, சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அமரர் ஜீவா பிறந்த பூதப்பாண்டியில் அவர் பிறந்த இல்லம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசின் சார்பில் நினைவிடமாக்கப்படும்.

ஆகவே பொது உடமைக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதிலே கட்சி பார்க்காமல், தியாகத்திற்குக் கட்சியில்லை என்று சொல்வார்களே, அதைக் கூட கருதாமல் பொது உடமைக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், மதிக்கப்படவேண்டியவரை மதிக்கவேண்டும்,

போற்றப்பட வேண்டியவரை போற்ற வேண்டும், நாட்டிற்காக உழைத்த அந்த மகத்தான மனிதர்களை எல்லாம் பாராட்ட வேண்டுமென்பதற்காக ஜீவாவினுடைய இல்லம் நினைவில்லம் ஆக்கப்படும் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதைக் கேட்பதற்குக்கூட பொது உடமைக் கட்சிக்காரர்கள் இங்கே இல்லை என்பதனை வேதனையுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே கோரிக்கை வைக்காமலே, யாரும் கேட்காமலேயே எந்த நேரத்தில் எதைச் செய்யவேண்டுமோ அதை நினைத்து அதை செய்கின்ற ஒரே முதலமைச்சர், அற்புத முதலமைச்சர் புரட்சித் தலைவி தான் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மண்ணருமை, பெண்ணருமை, பொன்னருமை வெறுத்துவிட்டு என்னருமைத் தாயகமே என்னுரிமை என்று சொன்ன முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் விழா மாநில அளவில் கொண்டாடப்படும்.

வெள்ளையனே வெளியேறு என்று நெல்லைச் சீமையிலே முதல் சுதந்திர முழக்கமிட்ட புலித்தேவனுக்கு அரசின் சார்பிலே நெல்லைச் சீமையில் விழா கொண்டாடப்படும்.

பிற்பகல் 5-50

அதைப்போல, கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அழகு முத்துக்கோன் அவர்களுக்கு நினைவாக நெல்லைச் சீமையிலே அரசு சார்பிலே விழா நடத்தப்படும்.

அதைப்போல, 18 ஆம் நூற்றாண்டிலே பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு, 24 ஆண்டுகள் வெஞ்சிறையிலே - இன்றைக்கு நெல்சன் மண்டலேயைப் போல - ரிபெல் முத்துராமலிங்க சேதுபதிக்கு நம்முடைய உறுப்பினர் எஸ். வி. சண்முகம் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள், அந்த சேதுபதியின் நினைவாக ஆண்டுதோறும் இராமநாதபுரத்திலே அரசு விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, 192 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கிரேக்க கட்டிடக் கலையினுடைய எடுத்துக்காட்டாக இருக்கிற இராஜாஜி மண்டபத்தை செப்பனிடுவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் 17.97 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய பிராட்மா முறையிலிருந்து நவீனப்படுத்த கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 லட்சம் செலவி லே தமிழரசு அச்சகத்தில் புதிய கணினி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதைப்போல, திரைப்படக் கல்லூரியினுடைய நூல் நிலையத்தை ரூ.3 லட்சம் செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதைப்போல

1994 ஏப்ரல் 29] [திரு. மு. தென்னவன்]

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அதைப்போல, பொருட்காட்சிப் பற்றி நான் இங்கு சுட்டிக் காட்டினேன். சென்ற ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் மானியக் கோரிக்கையின்போது இரண்டு நகரங்களில் பொருட்காட்சி நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். திருச்சியிலும், நெல்லையிலும் பொருட்காட்சி நடத்தப்படுமென்று அறிவித்தார்கள். இந்த ஆண்டு அந்தப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. அதைப்போல, 1994—95 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு இடங்களில் கூடுதலாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படும். வேலூரிலும், கடலூரிலும் அந்தப் பொருட்காட்சிகள் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சிறிய நகரங்களில் வாழும் மக்களும் பொருட்காட்சிகளை காணும் வகையில் தூத்துக்குடி, காரைக்குடி, கிருஷ்ணகிரி, திருப்பூர், இராமநாதபுரம் ஆகிய 5 நகரங்களில் சிறிய அளவிலான அரசுப் பொருட்காட்சிகள் 1994—95ல் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் ஏற்கெனவே அரசு வளர்ச்சிப் பணிகள், பயன்கள் குறித்து சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 1994—95—ல் திண்டுக்கல்-அண்ணா, திருவண்ணாமலை—சம்புவராயர், பசும்பொன் முத்துராமலிங்கதேவர், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.12 லட்சம் செலவில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, 18 ஆம் நூற்றாண்டில் சென்னிமலைக்கும், சின்ன மலைக்கும் இடையிலே ஒரு சின்னமலை வாங்கிக் கொள்ளலாம் சொல் என்று தண்டல்காரனிடம் உரைத்தானே தீரன் சின்னமலை அந்தப் போர் வீரனை நினைவுபடுத்துகின்ற வகையிலே விடுதலை வீரர்களையும், தியாகச் சீலர்களையும் பெருமைப்படுத்தி வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுக்கிணங்க அந்தத் தீரன் சின்ன மலையினுடைய பிறந்தநாள் பெரியார் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் அரசு சார்பிலே நடத்தப்படும் என்பதனை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காலையிலே பேசுகிறபோது, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வீடியோ தியேட்டருடைய கட்டணம் எவ்வளவு என்று கேட்டார்கள். முதல் வகுப்புக் கட்டணம் ரூ.3, இரண்டாம் வகுப்புக் கட்டணம் ரூ.1.50, முதல்

வகுப்புக்கு 98 இருக்கைகள். இரண்டாம் வகுப்புக்கு 77 இருக்கைகள். மொத்தம் இருக்கைகள் 175. அதுமட்டுமல்ல, வீடியோ தியேட்டரில் உரிமம் பெறாத கேசட்டுகளை வெளியிட்டால் வீடியோ சட்டம் பிரிவு 17—ன் கீழ் காவல் துறை நடவடிக்கை எடுக்கலாம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசு விளம்பரங்களை வெளியிடுவதற்கு எப்படி நாளிதழுக்கு அங்கீகாரம் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். அரசு அங்கீகாரப் பட்டியலில் இடம் பெற விரும்பும் நாளிதழ், பருவ இதழ் சில விவரங்களைக் குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி செய்து அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு பெறப்படும் விண்ணப்பம், கீழ்க்கண்டவற்றை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும். விற்பனை ஆகும் பிரதிகளின் எண்ணிக்கை. பத்திரிகையின் தொனி, தொடர்ச்சியாக வெளிவருவது, மொழி வளம், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பத்திரிகை தர்மத்தை பின்பற்றி வரும் விதம், ஆக இப்படிப்பட்டவைகள் பரிசீலிக்கப்பட்ட பின்புதான் அரசுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும். இன்றைய தேதியில் அங்கீகாரப் பட்டியலில் 61 நாளிதழ்கள் உள்ளன என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-55

அதைப்போல சிறிய பத்திரிகைகள், பெரிய பத்திரிகைகள், நடுத்தரப் பத்திரிகைகள் என்றால் என்ன என்று கேட்டார்கள். 50,000 பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகைகள் சிறிய பத்திரிகைகள், 50,000-க்கு மேலே, 2 இலட்சம்வரை விற்பனையாகும் பத்திரிகைகள் நடுத்தரப் பத்திரிகைகள், 2 இலட்சத்திற்கு மேலே விற்பனையாகும் பத்திரிகைகள் பெரிய பத்திரிகைகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடியோ திருட்டுகள் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று திரு. பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். 92 ஆம் ஆண்டு 872 வழக்குகள் போடப்பட்டுள்ளன. 93-ம் ஆண்டு 112 வழக்குகள் போடப்பட்டுள்ளன, அதைப்போல சென்னை நகரத்திலே வால்-போஸ்டர்கள் ஒட்டுகிறார்களே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டார். இதுவரைக்கும் அரசியல் கட்சிகள் சார்பிலே 26 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பிற நிறுவனங்கள்மேல் 633 வழக்குகள் போடப்பட்டுள்ளன. மொத்தம் 659 வழக்குகள் போடப்பட்டுள்ளன. அபராதம் மட்டும் விதிக்கப்பட்ட வழக்குகள் 577. அபராதம் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.48275/— ஆகவே மீதியுள்ள வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேறி

1994 ஏப்ரல் 29] [திரு. மு. தென்னவன்]

இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளை இந்தத் துறை கவனத்தில் எடுத்துக்கொண்டு, விடுபட்டவைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கங்கள் இடம் பெற்றிருப்பதால், எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலை உலகில் நிலையான, அழிக்க முடியாத மக்கள் மத்தியில் இன்றும் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு கவிதைகளைத் தந்திருக்கும் கவியரசு கண்ணதாசன் அவர்களுக்கு மணிமண்டபம் தந்ததோடு மட்டுமல்லாமல், வெண்கலச் சிலையும் அமைப்பதற்கு ஆவன செய்த . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ, அமைச்சர்களுடைய பதிலுரை முடிந்த பிறகு நீங்கள் கேள்விகள் கேட்கலாம்.

திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுகிறபோதே நான் உங்களுக்குச் சொல்லியிருந்தேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு ஜீ.ஓ. இருக்கிறது, அந்த ஜீ.ஓ. இருப்பது தெரியாமலேயே பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று. அமைச்சரைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். நான் குறுக்கிட்டு உங்களுக்குச் சொன்னேன், அந்த ஜீ.ஓ. அப்போதே விலக்கிக் கொள்ளப்பட்டது என்று. ஜீ.ஓ. எம்.எஸ். நம்பர் 1574, 25.9.87 ஆம் தேதியிட்டது. நீங்கள் பேசுகின்றபோதே நான் சொன்னேன். அதனால் அதிலே சம்பந்தப்பட்டது பூராவும் நீக்கி இருக்கிறேன். பேரவைத் தலைவர் இல்லாத ஒன்றைச் சொல்லிவிட்டார் என்று திருப்புவீர்கள். அதனால் இதைச் சொல்கிறேன். ஞானசேகரன், இதுமாதிரி நேரங்களில் நீங்கள் விவரங்களைச் சேகரித்துக்கொண்டு பேச வேண்டும். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 6-00

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்து, செந்தமிழ் நாட்டார் சிந்தை செயலில் என்றும் நினைக்கும் இணையில்லா

தலைவி, சுற்றுலாத்துறையைச் சேய் போல் காக்கும் ஜோதிமிக்கதோர் சுந்தரத் தலைவியாக விளங்கிவரும் நமது இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்கி என்னுரையைத் துவக்குகின்றேன்.

அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தையின் பெயர் சுதந்திரம், விடுதலை, உரிமை என்று குறிப்பிடலாம் என்றான் அறிவுலக மேதை இங்கர்சால். அதை மெய்ப்பிக்கும் வகையில் அறிவுத்தாய் பெற்றெடுத்த ஆற்றல் மிகுந்த தலைவியாகத் திகழ்பவர்தான் நமது அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாவர் என்றால் இதை மறுப்பார் இம்மண்ணில் எவருமில்லை. அத்தகைய பெரும் பெருமைக்குரிய, வணக்கத்திற்குரிய நமது அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன் அரவணைப்பிலே வைத்து சீராட்டி வளர்த்து அவர்களது சீரிய சிந்தனை, அறிவாற்றல் ஆகியவற்றால் புதிய சுற்றுலா தொழில் கொள்கையை உருவாக்கித் தந்து, அந்த சுற்றுலா தொழில் கொள்கையால் இன்று சுற்றுலாத்துறை புத்தொளி பெற்றுள்ளது. தமிழக மக்களுடைய காவல் தெய்வமாக விளங்கிவருகிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய சிந்தனையால் இந்த சுற்றுலாத் துறை இன்று இந்தியாவிலேயே இன்றைக்கு தனக்கென ஒரு தனி இடத்தைப் பெறக்கூடிய அளவுக்குத் தலைநிமிர்ந்து வருகிறது. தமிழகம் சுற்றுலாத் துறையில் புதுப்பொலிவு பெற்று புன்னகை தவழ பூரித்து நிற்கும் புதுப்பெண்ணாக நாட்டுமக்கள் அனைவரின் கண்களையும் கருத்தையும் கவரும் வண்ணம் வள மிக்க துறையாக மாறிவருகிறது.

"வெள்ளப் பெருக்கைப் போல கலைப்பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் எல்லாம் விழிபெற்றுக் கொள்வார்" என்ற விடுதலைக்கவி பாரதியின் தீர்க்க தரிசனத்தை உணர்ந்த மாபெரும் தலைவியாம் நமது அன்னை புரட்சித் தலைவி அவர்கள், இந்த மண்ணில் கலை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி செழித்து ஓங்கி வளரவேண்டுமென்றால், பழைய அந்தக் கலாச்சாரங்களைக் காக்கவேண்டுமென்று இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே, சுதந்திரம் பெற்று 47 ஆண்டுக்காலம் ஆகியும் எவரும் சிந்திக்காத அளவுக்கு நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்து, அந்தத் துறையை கண்ணுங்கருத்துமாகக் காத்து இந்தத் துறைக்கு அரியதொரு பொக்கிஷத்தைத் தந்துள்ளார்கள்.

இந்தியநாடு குறிப்பாக தமிழகம், இந்தியத் திருநாட்டுக்கே வழிநடத்தவேண்டுமென்று, வெளிநாட்டவரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம், ஒரு முன் உதாரணமாக சட்டம் ஒழுங்கைக் காத்து அமைதி தவழும் மாநிலமாகத் தமிழகம் விளங்கிவருகின்ற காரணத்தால், ஒருவர் தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் கிடைக்கச் செய்வதுதான் நாகரிகம் என்ற பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் கொள்கை

1994 ஏப்ரல் 29] [திரு. எஸ். நாகூர் மீரான்]

வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் விருப்பங்களை உணர்ந்து அவர்களின் அன்பு, அமைதி தவழுகிற மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உறுதுணையாக இந்த சுற்றுலாத் துறை விளங்க வேண்டும், சுற்றுலாத் தலங்கள் இருக்கவேண்டும் என்கின்ற அவர்களின் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, இன்றைக்குச் சுற்றுலாத் துறையை வளர்த்து வருகிறார்கள்.

"கலையே, வளர்தொழில் மேவிடு, கவிதை புனை தமிழா" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அந்தப் பெருங்கவிஞரின் ஆசைகள் நிறைவேறவேண்டுமானால், கலையும், பண்பாடும், இலக்கியமும், தொழில் வளமும் பெருகி, என்றைக்குத் தமிழகம் எழிற்சோலையாகத் திகழ வேண்டுமென நம் அன்னை எண்ணினாரோ அன்றுமுதல் இந்தத் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் பேணிக் காத்து, சுற்றுலாத் துறையைப் பேணிக் காக்கின்ற, பெருமை கொள்கின்ற தொழிற் கொள்கையைப் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களின் கனவை நனவாக்கி பலநூறு வெற்றிகளை இத்துறையின்மூலம் பெற்று, அன்னையின் காலடியில் நாம் வைப்போம் என்றும், நமது காவல் தெய்வத்தின் கடைக்கண் பார்வை விழியில், சுட்டுவிரலின் அசைவின் வழியில் நடத்தும் இந்தத் தமிழ்த் திருநாட்டை தழைக்க வைப்போம், சுற்றுலாத் துறையின் மூலம் செழிக்க வைப்போம் என்று உறுதி பூண்டுள்ளோம்.

இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே வெளிநாட்டவர் சுற்றுப்பயணம் வருகின்றார்கள் என்றால், ஒருகாலத்திலே அவர்கள் சிம்லாவையும் காஷ்மீரையும்தான் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கெல்லாம் வெளிநாட்டவர் சென்றால் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் கிடைக்காமல் உள்ள நிலை இந்தியத் திருநாட்டிலே உருவாகியிருக்கிறது என்று சொன்னால், தங்கத் தமிழ்நாட்டில், தலைசிறந்த தலைவியாக வீற்றிருக்கும் நமது அன்னை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் தமிழகத்திலே அமைதியை நிலைநாட்டி, அதன்மூலம் வெளிநாட்டவரின் உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் தருகின்ற பூமியாக இந்த பூமியை மாற்றி ஒரு ஆற்றல் மிக்க நிர்வாகத்தைத் தமிழகத்திலே நம் அன்னை தந்துகொண்டிருக்கிறார்கள். இந்த அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில் உழைத்து, களைத்துள்ள மனிதவர்க்கத்தின் உயரிய நெஞ்சத்திற்கு மன அமைதியைத் தேடித்தரும் சுற்றுலா பூமியாக, தமிழ்த்தாயின் ஆட்சியில் தமிழகம் தழைத்தோங்கியிருக்கிறது. இதன்மூலம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது.

பிற்பகல் 6-05

இயற்கை நமக்கு வழங்கியுள்ள தொன்மைச் சிறப்பும், அழகிய கடற்கரையும், நெஞ்சை அள்ளும் மலைவாழ் இடங்களும், வரலாற்றுச்

சிறப்பு மிக்க நினைவிடங்களும், திருக்கோயில்களும், நாகூர், அன்னை வேளாங்கண்ணி போன்ற ஜாதி பேதமற்ற சமுதாயத்தின் திருத்தலங்களாக இன்றைக்கு தமிழகம் உயர்ந்து நிற்கிறது. கண்ணைக் கவரும் கலைச் சிற்பங்களும், கண்ணுக்கு இனிமை தரும் பறவை சரணாலயங்களும், மனதைக் கொள்ளை கொள்ளும் மாபெரும் வன விலங்குகளும் கொண்ட பூமியாக தமிழகம் இன்றைக்கு சிறந்து விளங்குகிறது. இத்தகைய, இயற்கை அன்னை நமக்கு வழங்கிய நன்கொடையை, கண்டு களிக்க வந்த உள்நாட்டவரும், வெளிநாட்டவரும் இந்த பூமிக்கு ஆண்டுக்காண்டு அதிகரித்து, கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு செல்கிறார்கள். அவர்கள் இந்தப் பகுதிக்கு வருகிறபோது, சுற்றுலா அலுவலகங்களிலே இருக்கிற பார்வையாளர் புத்தகங்களிலே அவர்கள் எழுதுகிற வாசகங்களை பார்க்கிறபோது நமது நினைவுக்கு வருவதெல்லாம், ஒவ்வொரு மனிதனும் "பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம்" என்றில்லாமல் உழைக்கின்ற உழைப்பில், கிடைக்கின்ற ஊதியத்தை தன் குடும்ப வாழ்க்கைக்குப் போக, ஒரு பகுதியை சேமித்துவைத்து, சேமித்து வைத்த தொகையின் மூலம் ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா தலங்களுக்கு பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த வெளிநாட்டு மக்கள் எல்லாம் தன் உள்ளத்தில் ஆவலாகக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உழைக்கிற வர்க்கத்திலே இருந்து உயர்ந்த வர்க்கம் வரை வெளிநாட்டிலே வாழ்கிறவர்கள் எல்லாம் சுற்றுலாவை மேற்கொள்கிறார்கள். அந்த நிலைமை நம் நாட்டு மக்களுக்கும், தம் உழைக்கின்ற உழைப்பில், உழைத்த உடம்பு களைக்கின்றபோது ஒரு கண நேரமாவது தனது உயரிய வாழ்க்கையிலே ஒரு நிம்மதி அடைய வேண்டும், மகிழ்ச்சியைக் காண வேண்டும் என்ற நோக்கோடு, தன் உழைக்கின்ற ஊதியத்தில் ஒரு பகுதியை ஒதுக்கிவைத்து, தமிழகத்திலே இருக்கிற சுற்றுலா தலங்களையாவது நம் நாட்டு மக்கள் பார்க்க வேண்டும் என்று இந்த மாபெரும் பேரவையின் மூலமாக நாட்டு மக்களுக்கு பணிவான வேண்டுகோளை வைக்கிறேன்.

1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு 3.30 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்தார்கள். ஆனால், 1992 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மிகுந்த நிர்வாகத் திறமையின் காரணமாக சுற்றுலாப் பயணிகளுடைய வருகை 25.3 சதவீதம் அதிகரித்தது. அதே நிலை 1993 ஆம் ஆண்டு 4.41 லட்சம் உயர்ந்து, முந்தைய ஆண்டைவிட 9.3 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு 1992-ல் 131 லட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து, சுற்றுலாத் தலங்களைக் கண்டு களித்துச் சென்று இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு 1993 ஆம் ஆண்டிலே அந்த சதவீதம் 5.9 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில்

தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இந்த நேரத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது, இந்தத் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகவும், பாரதத் திருநாட்டுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது என்பதிலே ஐயமில்லை.

சுற்றுலாத் துறையின் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்பையும் மக்கள் பெறுகிற காரணத்தால் பொருளாதார உயர்வுக்கும் மேன்மைக்கும் வழி வகுப்பதால் சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய சிந்தனையாலும், தொலைதூர நோக்காலும் சுற்றுலாத் துறை மீது கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக 1992 ஆம் ஆண்டு புதிய சுற்றுலாத் தொழில் கொள்கை ஒன்றை உருவாக்கி இந்த நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள். அந்த தொழில் கொள்கையிலே சுற்றுலா மையங்களில் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது என்றும், சிறப்பு சுற்றுலா மையங்களைக் கண்டு ஆராய்ந்து அவற்றை மேம்படுத்த வேண்டும் என்றும், உதவித் தொகைகளையும், நிதி உதவிகளையும் அளிப்பதன் மூலம் சுற்றுலாத் திட்டங்களுக்கு முதலீடு செய்யும் தனியார்த் துறைகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும், ஒருங்கிணைந்த முறையில் சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக தொழில் வளர்ச்சி மைய அணுகு முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும், வீர விளையாட்டுக்கள், நீர் விளையாட்டுக்கள், தொங்கும் ஊர்தியில் பறத்தல், மலை ஏறுதல் போன்ற வீர விளையாட்டுக்களை எல்லாம் இந்தத் திட்டத்திலே கொண்டு வந்தார்கள். சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வருகை தரவும், நீண்ட நாள் இந்த நாட்டிலே தங்கி தமிழ் மண்ணிலே இருக்கிற ஐவகை நிலங்களையும் கண்டு களிக்கிற வண்ணம் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்றும், அந்தத் திட்டங்கள் வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் சென்றடைகிற வகையிலே வெளிநாட்டு சுற்றுலா குறித்து திட்டமிட்டு விளம்பரங்களையும் செய்ய வேண்டும் என்றும் புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கொள்கைகளை நமத்து வகுத்து அளித்தார்கள்.

பிற்பகல் 6-10

சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கவும், வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான கூடுதல் அம்சங்களைத் தோற்றுவிக்கவும் ரூ. 591.34 கோடி மதிப்பீட்டில் விரிவான ஒரு பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு

பொறுப்பை ஏற்ற பின்புதான் 45 ஆண்டு காலம் இல்லாத அளவுக்கு நமது சுற்றுலாத் தலங்களை சீர்செய்யவும், செம்மைப்படுத்துவதற்கும் ரூ. 591.34 கோடி அளவில் பெரிய மதிப்பீட்டில் திட்டம் ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். இதற்கு நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு தந்த ஊக்கமும் ஆக்கமும், அவர்கள் ஆற்றலும், சிந்தனைத் திறனும், நிர்வாகத் திறனும் தான் என்று இந்த நேரத்தில் மகிழ்ச்சிபொங்க நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994-95 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின்கீழ் மாநில அரசு ரூ. 191 இலட்சம் செலவில் விளம்பரம், புதிய அலுவலகங்களை ஏற்படுத்துதல், சுற்றுலாத் துறையை மேலும் ஊக்குவிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டும் மாபெரும் திட்டங்களை நம் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு வகுத்து தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றை தவிர ரூ. 14 இலட்சம் செலவில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரிக்கரையில் தற்போது ஓடிக்கொண்டிருக்கும் சிறுவர் இரயிலின் தூரத்தை மேலும் 200 மீட்டர் தூரம் அதிகப்படுத்தி அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பான பொழுதுபோக்கு அம்சமாக சிறுவர் ரெயிலை மாற்றியமைக்கவும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1993-94 ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டங்களுக்காக தமிழகத்திற்கு நிதியுதவி செய்வதற்காக, கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது ரூ. 259 இலட்சமாகும். ஆனால் இத்துறையின் சீரிய முயற்சியால், புரட்சித் தலைவி அவர்கள் நமக்கு தந்த ஊக்கத்தால் 1993-94 ஆம் ஆண்டுக்கு மட்டும் எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ரூ. 378.23 இலட்சம் நிதியுதவியை மத்திய அரசிடமிருந்து ஆற்றல் மிகுந்த நம் அன்னை புரட்சித் தலைவி அவர்கள், நம் உரிமையை மத்திய அரசுக்கு சொல்லி பெற்று இருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தான் மாநில அரசும் - புரட்சித் தலைவி அவர்கள் மாநில அரசினுடைய பங்குத் தொகையாக எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ. 60.40 இலட்சத்தை தனது முதல் தவணையாக புரட்சித் தலைவி அவர்கள் அரசு தந்துள்ளது என்பதையும் இங்கே பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994-95 ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழகத்திற்கு கொள்கை அளவில் பல்வேறு திட்டங்களை அனுமதிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது என்பதையும், இதற்குக் காரணம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆற்றல் தான் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வெளிநாட்டினரையும் சுற்றுலாத் துறையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற தொலைதூர நோக்கோடு வெளிநாட்டுப் பொருளாதார மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் ஜப்பான் அரசிடமிருந்து அதன் உதவியைப் பெறுவதற்கான திட்ட அறிக்கையைத் தமிழகம் தயாரிப்பதற்கு ரூ. 3 இலட்சம் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்ட அறிக்கை விரைவில் பெறப்பட்டு ஜப்பான் உதவியைப் பெற முயற்சிக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டும் எண்ணாமல் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடைய தேவைகளையும் கருத்திலேகொண்டு சாதாரண மக்கள், சாமானிய மக்கள், தாங்கள் வசிக்கின்ற இடங்களுக்கு அருகேயுள்ள சுற்றுலாப் பகுதிகளுக்குச் சென்று வர வேண்டும், மன நிம்மதியை அடைய வேண்டும், அந்த உழைத்த உடம்புக்கு ஒரு நாளாவது ஓய்வு கொடுக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் ஆற்றல் மிகுந்த நம் அன்னை அவர்கள் மாவட்ட உலா மையத் திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ. 67.50 இலட்சம் வழங்கி இருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-15

சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான முக்கியத்துவத்தை அளிக்கும் பொருட்டு, இவ்வரசு கூட்டுத்துறை/இணைத்துறை ஆகிய தொழில் முயற்சிகளை இன்றையதினம் மேற்கொண்டு இருக்கிறது. டிட்கோ முறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 26 சதவீத சமபங்குத் தொகையும், அல்லது 11 சதவீத சமபங்குத் தொகையும் முதலீடு செய்து, நிலங்களை குத்தகைக்குவிடுதல், கூடாரங்களைஅமைத்தல், ஓட்டல்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், நீர்விளையாட்டு வசதிகள் போன்ற சுற்றுலா வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலா விற்பனையைப் பெருக்கவும், சுற்றுலாத் தகவல்களை பலர் அறியச் செய்யவேண்டியதும் இன்றியமையாததாக இன்றைக்கு இருந்து வருகிற காரணத்தால், நம்மவர், நம் ஆட்சி, புரட்சித் தலைவி அரசு

செய்து வருகிற சேவைகளை, தொலைக்காட்சி தொலை நோக்கோடு இல்லாமல் குறுகிய நோக்கோடாவது காட்டத்தவறுகிறபோது, இந்தச் சுற்றுலாத்துறையை நம் நாட்டு மக்களும், பிறநாட்டு மக்களும் தெரிந்துகொள்கிற அளவில், அதற்கு விளம்பரங்கள் இன்றைக்கு தேவைப்படுகின்றன. அந்த அடிப்படையிலே விளம்பரச் சாதனங்களை சுற்றுலாத் துறைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் சிந்தனையின் மூலம், இந்த அரசு சுற்றுலாத் தலங்களைப் பற்றி வெளிநாட்டவரும், உள்நாட்டவரும் அறிந்துகொள்ளும் வகையில், சிற்றேடுகள், சிறு புத்தகங்கள், மடிப்பு ஏடுகள், துண்டுப் பிரசுரங்கள், பட அஞ்சல் அட்டைகள், சிறு தாள்கள், சுவரொட்டிகள் போன்ற விளம்பரங்களையும், வீடியோ படங்களையும் தயாரித்து, இந்தத் துறையின் மூலம் சுற்றுலா அலுவலகங்கள், மட்டுமல்லாமல், வெளிநாட்டு சுற்றுலாத் தகவல் மையங்கள் இந்திய சுற்றுலா மையங்கள், ஏர் இந்தியா அலுவலகங்கள் மூலம் விளம்பரப்படுத்துவதற்காக, புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு இத்துறைக்கு எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு ஒரு உயரிய தொகையை வழங்கி உள்ளார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அயல்நாடுகளில் வெளியாகும் முன்னணிச் செய்தித் தாள்கள், செய்தியாளர்கள் கூட்டம் நடத்துதல், சுற்றுலா வல்லுநர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்து இங்குள்ள சுற்றுலாத் தலங்களைக் கண்டு அவர்கள் நாட்டில் உள்ள செய்தித்தாள்கள், வார இதழ்களில் எழுதுதல், பசிபிக் பகுதி பயணச் சங்கம், இந்திய பயண முகவரமைப்புச் சங்கம், இந்திய பயணச் சுற்றுலா அமைப்பு ஆகியவைகளை ஏற்பாடு செய்து, வர்த்தகக் கூட்டங்களை நடத்தி, துறை அதிகாரிகளைப் பங்கேற்கச் செய்து, இவ்வரசு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நடைபெறும் பொருட்காட்சிகளிலும் பங்கு பெற்று சுற்றுலாவின் சிறப்புக்களை விளம்பரப்படுத்துதல், விழாக்கள் பல நடத்தி உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருதல். இதில் குறிப்பாகக் கூறவேண்டுமானால், மாமல்லபுரம் நாட்டிய விழா, சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா, குன்னூர் தேநீர் விழா போன்றவற்றைக் கூறலாம். அதேபோன்று இன்னும் சில மாவட்டங்களில் இதுபோன்ற பெரிய விழாக்களை நாம் நடத்தி வருகிறோம். பொங்கல் விழாவை தமிழகம் முழுவதும் நடத்தி வருகிறோம். இப்படிப்பட்ட விழாக்களை நடத்துவதன் மூலம், நமது கலை, கலாச்சாரத்தை வெளிநாட்டுப் பயணிகளைக் கவருகிற வகையில், நாம் இன்றைக்குச் சுற்றுலாத் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையில் அன்னியச் செலாவணி ஈட்டும் பொருட்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, தமிழ்நாட்டினுடைய சுற்றுலாத் துறை இன்றைக்கு வீறுநடை போடுகிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தலைவி அவர்கள், தமிழகத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றபின்பு, அறிஞர்அண்ணாவிற்குப் பின்னால், புரட்சித் தலைவருக்குப் பின்னால், இன்றைக்கு புரட்சித் தலைவி, தங்கத் தலைவி தமிழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றபின்புதான், தஞ்சையிலே வரும் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே பங்கு பெறுவதற்காக வருகிற அறிஞர்கள் பெருமக்களும், எழுத்தாளர்களும், தமிழ் அறிஞர்களும் தங்குவதற்கு வசதி வாய்ப்புகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த நமது ஆற்றல்மிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குறுகிய கால அவகாசத்தில் ஓட்டல்களை கட்டி முடிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதன் அடிப்படையில், அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், தனியார் நிறுவனங்களை ஊக்குவித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் ஓட்டல்களைக் கட்டி முடிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடை அரசு துரித நடவடிக்கையை எடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கு ஏற்ப செய்து வருகிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-20

இந்திய வரலாற்றிலே ராஜஸ்தான் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் சுற்றுலா ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, தமிழகத்திலே உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை இரயில் மூலம் சென்று பார்த்து வர வசதியாக இன்றைக்கு தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1 கோடி ரூபாய் செலவில் அனைத்து நவீன வசதிகள் கொண்ட சொகுசு ரயில் விட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது வரும் நவம்பருக்குள்ளாக தமிழகத்திலே இந்த சொகுசு சுற்றுலா ரயில் ஓடத் தொடங்கவேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ளவேண்டுமென்றும் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்த இரயில் மூலம் மாமல்லபுரம், சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார், நாகூர், வேளாங்கண்ணி, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மண்டபம், மற்றும் இராமேஸ்வரம் போன்ற சுற்றுலாத் தலங்களைச் சென்று பார்க்கமுடியும். தென்னிந்தியாவில்

தமிழகத்தில்தான் முதன் முதலில் இந்த சொகுசு சுற்றுலா இரயில் திட்டம் நிறைவேற்றப்பட (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் மேலும் சுற்றுலா இன்னும் மேம்பட்டு செயல்படுவதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1994-95 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கை எடுக்க ஆணையிட்டிருக்கிறார்கள்:

அது, விவேகானந்தர் நினைவுப் பாறையில் ஒளி வெள்ள விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல், உதகமண்டலத்திலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு இழுவை ரயில் பாதை அமைக்க ஆய்வு செய்தல், தஞ்சையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரகதீஸ்வரர் ஆலயத்தில் ஒலி-ஒளி கண்காட்சி அமைத்தல், முட்டுக்காடு மற்றும் பழவேற்காடு ஏரிகளில் நீர் விளையாட்டுக்களை நடத்துவதற்காக நீர் விளையாட்டுச் சாதனங்களை வாங்குதல், உதகமண்டலம், கொடைக்கானல், மாமல்லபுரம் போன்ற இடங்களில் வானூர்தியில் தொங்கிப் பறக்கக் கூடிய சாதனங்களை வாங்குதல், பல்கலைக் கழகங்களில் ஓட்டல் நிர்வாகம், உணவு தயாரிப்பு, தொழில்நுட்ப பட்டப் படிப்புகளைத் தொடங்குவதற்கு ஓட்டல் வளர்ச்சி மற்றும் ஓட்டல் நிர்வாகத்திற்கு ஊக்கம் அளித்தல். 94-95-ஆம் ஆண்டில் 10 சீர்வளி வசதி வாகனங்களுக்கு அனுமதி அளித்தல், முக்கிய சுற்றுலா மையங்களிலே கட்டண விருந்தினர் உறையுள் வசதிகள் ஏற்படுத்தி, இதற்குரிய குறிப்பேடு அச்சிட்டு வெளியிடுதல், சுற்றுலா நிர்வாகத்தில் அண்மைக்கால வளர்ச்சிப் போக்கு குறித்து இந்த சுற்றுலாத் துறையினுடைய அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல், கொடைக்கானல், பழனி, தஞ்சாவூர், திருச்செந்தூர், இராமேஸ்வரம் போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு அரசு பரிசீலிக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளுதல், 1994-95 ஆம் ஆண்டு கொடைக்கானல், திருநெல்வேலி மற்றும் தர்மபுரியில் புதிய சுற்றுலா அலுவலகங்களை ஏற்படுத்துதல் (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சிராப்பள்ளியிலே உள்ள துவாக்குடியில் உணவக சமையல் கலை பயிற்சி நிறுவனத்தை சுய நிதி நிறுவனத்தைப் போன்று 1994-95-ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டு பட்டயப் படிப்பு கொண்ட நிறுவனமாக நிலையை உயர்த்துவதற்கான கருத்துருவை பரிசீலனை செய்து முடிவு எடுத்தல் போன்ற சீரிய பணிகளைச் செய்ய இந்தத் துறை திட்டமிட்டுள்ளது.

இதுபோன்ற தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாத் துறைக்கு ஒரு அரிய பங்கினை ஆற்றி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 26 ஓட்டல்களையும், 8 இளைஞர் இல்லங்களையும், 9 படகு வீடுகளையும், 4 சிற்றுண்டிச் சாலைகளையும், 25 சுற்றுலாப்

பேருந்துகளையும் - இந்த 25 சுற்றுலா பேருந்துகளில் 4 சுற்றுலாப் பேருந்துகள் சீர்வளி வசதிகள் கொண்டவையாக இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுடைய மனதையும் கண்ணையும் கவரும் வகையிலே சிறப்பான பகுதியை சுற்றுலாத் துறையிலே பணியாக ஆற்றி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதனுடைய வசதிகளை மேம்படுத்தி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 9000 டாலர்கள்அன்னியச் செலாவணியை 1992-93 ஆம் ஆண்டில் அன்னியச் செலாவணியை ஈட்டி, 1993-94 ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனையால் 75,000 டாலர்களாக அன்னியச் செலாவணியை இந்த நாட்டுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 21 இலட்சம் செலவில் புதிய சீர்வளி வசதியுடன் கூடிய பேருந்து வாங்கி அயல்நாட்டுப் பயணிகளின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிற்பகல் 6-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்னும் உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : இப்போது முடிந்துவிடும். மாவட்டங்களில் திட்டமிட்ட சுற்றுலாக்களை தனியார் தொழில் முனைவோரின் ஒத்துழைப்போடு நடத்துவதற்காக மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நிதிச்சாதனையை பொறுத்த அளவிலே சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாபெரும் சாதனையை ஆற்றல் மிக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே இயங்கி வருகிற இந்த அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிதியிலேயும் ஒரு அரியபெரும் பங்கை இன்றைக்கு ஆற்றிக் கொண்டிருக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வசூல் தொகை 1500 இலட்சம் ரூபாய் ஆகும். இது 1992-93 ஆம் ஆண்டின் மொத்த வருவாய்த் தொகையான 1328.44 இலட்சம் ரூபாயைக் காட்டிலும் 13% அதிகமாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்ற ஆதாயம் 138.18 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1994-95 ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள இன்றைக்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தென்னக இரயில்வேயின் ஒத்துழைப்புடன் வாரக் கடைசியில் சுற்றுலாப் பயணங்களை நடத்துதல். இரயில் மூலம் வாரக்கடைசியில் சுற்றுலாப் பயணங்களை நடத்த தென்னக இரயில்வேயுடன் ஒருங்கிணைந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு சுற்றுலாச் செல்வதற்காக சுற்றுலாப் பயணிகளுக்கு இடவசதி அளித்தல், உள்ளூர்ப் பகுதிகளைச் சுற்றிக் காட்டுதல், ஆகியவற்றை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியுரிமை அடிப்படையில் தனியார் தொழில் முனைவோரின் மூலம் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ளவும் பயணிகள் பயன் பெறுகிற வகையிலும் அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களிலும் தொலைபேசி இணைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது.

கொடைக்கானல் மலைவாழ் இடத்திலுள்ள பேரிஜம் ஏரியைச் சுற்றி சிறிய இரயில் வண்டி ஒன்றை இயக்க இந்த வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது. அதேபோல கோயம்புத்தூர், உதகமண்டலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் பெரிய ஓட்டல்களில் டிஷ் ஆண்டனா நிறுவப்பட்டு, மேலும் தஞ்சாவூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களிலும் டிஷ் ஆண்டனாவை நிறுவ சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

சென்னை அண்ணா சாலையிலுள்ள விற்பனைப் பகுதியை சுற்றுலா பயணிகளினுடைய வசதியைக் கருத்திலே கொண்டு ரூ. 1.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியை செய்திருக்கிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடற்கரை வளாகத்திலே உள்ள 13 கூடுதல் குடில்களை ரூ. 3.50 இலட்சம் செலவில் புதுப்பித்து இருக்கிறது. அதைப்போல புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய கருணையை ஒவ்வொரு துறைக்கும் வழங்கி வருவதுபோல அவர்களுடைய ஆற்றலாலும் நிர்வாகத்தாலும், சிந்தனையாலும், இந்நாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல அதைவிட ஒரு படி மேலாக இந்த நாட்டிலே வாழுகின்ற பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் மீது தனிப் பிரியம் கொண்டிருக்கிற மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு இளைஞர் விடுதிகளில் 25 சதவீத சலுகைகளை வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல இங்கே பேசுகிறபோது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் மாவட்டந்தோறும் படகு குழாம்களை படகுப் போட்டிகளை

நடத்தவேண்டும் என்று கேட்டிருந்தார்கள். ஆனால் இந்த நாட்டு மக்களை நன்கு உணர்ந்திருக்கும் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மதுரை சித்திரைத் திருவிழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, கிருஷ்ணகிரியில் மாம்பழக் கண்காட்சி, குற்றாலத்திலே சாரல்விழா, குமரிமுனை திருவிழா போன்ற சீசன் நேரங்களில் இந்த தமிழகத்திலுள்ள முக்கியமான மாவட்டங்களில் ஒருமாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் என்ற அளவில், மாணவ மாணவிகளையும் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் பொருட்டும் அவர்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்களை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலே ஒரு நடமாடும் படகு குழாம் (மொபைல்) அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல தமிழகத்தினுடைய நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலேதான் சுற்றுலாத் துறை என்பது ஒரு மிகப் பெரிய துறையாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிற துறையாக ஆற்றல் மிக்க அன்னையின் ஆட்சியில் இன்றைக்கு அது ஒரு முக்கிய நோக்கத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-30

இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது சேலம் மாவட்டம் ஏற்காட்டிலே கோடை விழா ஒன்று நடத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது நமது பேரவைத் தலைவர் அவர்கள் சார்ந்திருக்கின்ற மதுரை மாவட்டம் வண்டியூர் கண்மாயிலே படகு விட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏற்கெனவே நமது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்தான், மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியையே சார்ந்தவர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நடமாடும் படகு குழாம் அமைக்க சுற்றுலா வளர்ச்சிக் குழுவிற்கு ஆணையிட்டதன் அடிப்படையிலே வருங்காலத்திலே இது தமிழகம் முழுவதும் இயங்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே. பி. ராஜு அவர்கள் பேசுகின்றபோது கோவை குற்றாலத்தை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதாவது உண்மையிலே கோவை குற்றாலம் மாவட்ட உலா தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு அரசு அதற்கு 3 இலட்சம் ரூபாயை ஒதுக்கி உணவு வசதி, மற்றும் உடை, பாத் ரூம் வசதி போன்றவற்றை செய்து கொடுப்பதற்கு சுற்றுலாத் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் காஞ்சி பன்னீர்செல்வம் அவர்கள் பேசுகின்றபோது வரலாற்றுச் சிறப்புமிக்க வேடந்தாங்கல் பறவைகளின் சரணாலயத்தைப் பார்க்க வருகின்ற பயணிகளுக்கு வசதியாக அங்கே ஒரு விடுதி கட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இன்றையதினம் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் அந்த வேடந்தாங்கல் பகுதியிலே பார்க்க வருகின்ற பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கின்ற நோக்கத்தோடு அங்கே ஒரு விடுதியை மத்திய அரசு உதவியோடு பாரம்பரிய ஓட்டலாக மாற்றுவதற்கு இந்த அரசினுடைய பாசீலனையில் இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் பேசுகின்றபோது கேபிள் கார் போடிநாயக்கனூர் டாஃப் ஸ்டேஷன் வரைக்கும் விடவேண்டும், மீண்டும் இயக்க வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் பகுதியை இந்தத் துறையினுடைய அதிகாரிகள் சென்று பார்த்து அந்தத் திட்டத்தை மறுபடியும் ஆய்வு செய்து வருங்காலத்திலே நிதிநிலைமைக்கு ஏற்ப அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது கண்ணகி சிலையைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டார்கள். எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பெருமளவில் எந்த இடத்திலும் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்களை அழிய விடாது (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கண்ணும் கருத்துமாக காத்துவரும். இந்த அரசு அக்கறை கொண்டிருப்பதன் அடிப்படையிலே கண்ணகி சிலையை பாதுகாப்பதற்காக 3 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கிச் செப்பனிட வேண்டும் என்று இந்த அரசு, இந்த சுற்றுலாத்துறை, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக்கொண்ட நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த சிலை சிறிது தூரத்திற்கு முன்னாலே அகற்றி வைத்தால்தான் பாதுகாக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர் என்னை நேரிலே சந்தித்து, புராதன

அடிப்படையிலே கண்ணகி சிலையை அந்த இடத்திலே வைத்துத்தான் இந்த அரசு பாதுகாக்க வேண்டும், அதை புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கண்டிப்பாக செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்று சொன்னார். அதன் அடிப்படையிலே இந்த சுற்றுலாத் துறை இன்றைக்கு பொதுப்பணித்துறைக்கு ஒரு கடிதத்தை எழுதி அதற்குரிய விரிவான திட்டம் ஒன்றைத் தருமாறு கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதுகுறித்து துரித நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-35

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் பேசுகிறபோது கடல் பூங்கா, முயல் தீவு ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்கிற வண்ணம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், இராமநாதபுரத்தில் பல்வேறு சுற்றுலா ஸ்தலங்களை சீர் செய்து தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அது மாவட்ட உலா ஸ்தலங்கள் மூலமும், சுற்றுலாத் துறையின் மூலமும் அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப சீர் செய்யப்படும். கடல் பூங்கா, முயல் தீவு இதைப் பொறுத்தவரையில் வனத் துறையோடு சுற்றுலாத் துறை கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்து இருக்கிற கோரிக்கைகளுக்கும், வெட்டுத் தீர்மானங்களுக்கும் என்னுடைய பதிலுரையில் பதில் கிடைத்து இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி நிறைவு பெறாத மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் இங்கே சட்டசபைக் குறிப்பேடுகளில் இருந்து எடுத்து அதன்மீது இந்தத் துறை வருங்காலத்திலே நடவடிக்கைகளை அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் முறையாக அருமையாகப் பதில் அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதன் முதல் பதில் அளித்தது செய்தி - விளம்பரத் துறை அமைச்சர் தான். இவர் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சரி, இப்போது நிறைய பேர் கொடைக்கானலுக்கு வெளியில் இருந்து வருகிறார்கள். அப்படி அவர்கள் வருகின்றபோது கொடை ரோடு என்ற ரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்குவார்கள். நான் ஏற்கெனவே இங்கே கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு மோட்டல் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் அங்கே வெளியில் இருந்த வரக்கூடியவர்கள் சிறிது நேரம் ஓய்வு எடுக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். அந்த ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி மேல் புறமாக ஒரு சிறிய கரடு போல் இடம் இருக்கிறது. அந்த இடத்திலே தங்கும் விடுதியோடு சேர்த்து ஒரு ஓட்டலும் கட்டுவதற்கு முயற்சித்தால் அதை ஏற்பாடு செய்வோமானால் வெளியில் இருந்து வருகிறவர்கள் ஒரு நாள் ஓய்வு எடுத்துவிட்டு மலைக்குச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்தத் திட்டத்தை அமல் படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடைக்கானல் மலைப்பகுதியைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். வருகிற சுற்றுலாப் பயணிகள் உள் நாட்டு பயணிகளாக இருந்தாலும் சரி; வெளிநாட்டுப் பயணிகளாக இருந்தாலும் சரி, அந்த அழகிய அற்புத மலை வாழ் இடங்களை எப்போது நாம் சென்று களிப்போம் என்று கொடை ரோட்டில் இறங்குகிறார்களே தவிர கீழே இறங்கி தங்கி களைப்பாற வேண்டும் என்றோ, ஓய்வு எடுக்க வேண்டும் என்றோ, சுற்றுலாப் பயணிகள் விரும்புவதாக இதுவரை எதுவும் அறிக்கைகள் அரசிடம் இல்லை. அப்படி ஏதாவது சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கோரிக்கைகள் வருமானால் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு அந்தத் திட்டத்தை நிதிநிலைமைக்கு ஏற்ப கனிவோடு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எம். துரை. கேட்ட உறுப்பினர்களே கையைத் தூக்கிக் கொண்டு இருக்கக்கூடாது.

திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டூரிங் திரையரங்குகள் 5 வருடத்திற்கு ஒரு முறை லைசன்ஸ் புதுப்பிக்கப்படுவதாக அரசு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை லைசன்ஸ் பெற்றுள்ள இந்த மாதிரி திரையரங்குகள்-தற்போது அரசால் வற்புறுத்தி மாற்றங்களைச்

செய்யவேண்டும் என்று அதாவது மண்தரையை மாற்றி பென்ச் போடுதல் கூரை மற்றும் ஸ்கிரீன் மாற்றம் போன்றவற்றை செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏற்கெனவே 5 ஆண்டுகளுக்கு லைசன்ஸ் பெற்றுள்ள இந்த மாதிரியான.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்?

திரு. எஸ். எம். துரை: இல்லை, ஒரு முக்கியமான . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, பேசக் கூப்பிட்டேன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

திரு. எஸ். எம். துரை: இல்லை, முடித்து விடுகிறேன். இந்த மாதிரியான திரையரங்குகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மாற்றங்கள் உடனடியாக செய்ய முடியவில்லை. கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே, 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை லைசன்ஸ் பெற்றுள்ள இந்த மாதிரியான திரையரங்குகளின் உரிமையாளர்கள் மாற்றங்களை அடுத்த லைசன்ஸ் ரென்வல் செய்வதற்கு முன்பு செய்து கொள்ள அரசு அனுமதி வழங்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6-40

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டூரிங் தியேட்டர்களில் ஏற்கெனவே தரை டிக்கெட் என்று ஒன்று இருந்தது. இப்போது தரை டிக்கெட் இருக்கக்கூடாது. பென்ச் போடப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை எதிர்த்து நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். இருப்பினும் 6 மாத காலம் அவர்களுக்குத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு பல்துறை விளக்க மையத்தையும், காரைக்குடிக்கு பொருட்காட்சியும் தந்து, கவிதை உலகில் அழியாத காவியங்களைப் படைத்த கவியரசு கண்ணதாசனுக்கு மணி மண்டபம் அமைத்ததோடுமட்டுமல்லாமல், 23,500 ரூபாய் செலவில் அருமையான வெங்கல திருவுருவச் சிலையை அமைத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவர் இயற்றிய அழியாத, கருத்து செறிந்த, சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க,

இனிமையான பாடல்களை, பார்வையாளர்கள் நேரங்களில் ஒலிபரப்ப அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவியரசர் கண்ணதாசனுடைய பாடல்கள் கேட்காத இடங்களே இல்லை என்ற நிலைதான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. எந்த டீக்கடைக்குச் சென்றாலும் அல்லது எந்தத் திரையரங்குக்குச் சென்றாலும் அல்லது எந்த வீட்டிற்குச் சென்றாலும், காலத்தால் அழிய முடியாத கருத்துக்களைத் தாங்கி வருகின்ற கீதங்களாகவே ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே, மணி மண்டபத்தில் அந்தப் பாடல்கள் ஒலிபரப்பப்பட வேண்டுமென்றால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே அதற்காக ஏற்பாடு செய்யலாம். இருப்பினும் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே, நாட்டு மக்களுக்காகத் தியாகம் செய்த பெரியவர்களுக்கு அவர்கள் சார்ந்திருந்த இயக்கத்தைப் பாராமல், அவர்களுடைய கருத்துக்களைப் பாராமல், பெருமையோடு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், அவர்கள் வாழ்ந்த இடங்களை, நினைவு இல்லங்களாகவும், சிலை வைத்தும் மற்றும் பல்வேறு விதங்களிலே பாராட்டினார்கள் என்ற புள்ளி விவரத்தோடு பல தலைவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதை நான் மறுபடியும் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று பெயர் வைக்க வருகின்றபோது, இவருடைய நினைவாலயத்திற்கு வந்து, மரியாதை செலுத்திவிட்டு, அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவேன் என்று அறிவித்தார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். தொடர்ந்து நாங்களும் கோரிக்கை வைத்து வருகிறோம். அதற்கான நிலம், அவர்களுடைய நிலமே 200 ஏக்கருக்கு மேலே இருக்கிறது. அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், நமது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும், அதைச் செய்து தருவார்களா என்பதோடு அவர் கடைசியாக வாழ்ந்த சிறுநகர் வீட்டை நினைவு இல்லமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப் பெருமைப்படுத்தவேண்டும் என்கிற உணர்விலே இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எத்தகைய எண்ணம் கொண்டு, தான் ஆட்சியிலே, அதிகாரத்திலே இருந்தபோது செயல்பட்டார்களோ அதே உணர்விலே, அந்த லட்சியம் பட்டுப்போகாத வகையிலே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்ட வேண்டும்; பல்வேறு வகைகளிலே பெருமைப்படுத்த வேண்டும் என்கிற உணர்விலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பிறந்த நாள் விழா மாவட்ட அளவிலேதான் நடத்தப்பட்டது. அது, இந்த ஆண்டு மாநில அளவிலேயே நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு பசும்பொன் கிராமத்திற்கு தானே வருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே உள்ள இடம் சுற்றுலாத் தலமாக ஆக்கப்படுமா, அந்த நினைவகத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்றெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அந்த நினைவகத்தை எடுத்துச் செயல்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அங்கே இருக்கிற பிரச்சினை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குமே தெரியும். அதைப் பேசித் தீர்த்து, அதைக் கொடுப்பதற்கு தயாராக இருந்தால், அரசு அதைச் செய்வதற்கும் தயாராக இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-45

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அங்கே ஒரு பிரச்சினை இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்களும் வந்திருந்தார்கள். இப்பொழுது அதைத் தீர்ப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அங்கே உள்ளவர்களை நீங்கள் நினைக்கின்ற அளவிற்கு வெளியேற்றிவிட்டு எந்தெந்த விதிமுறைகள் வேண்டுமோ அதைச் செய்து தரத் தயாராக இருக்கிறேன். அதைச் சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி - விளம்பரத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தீர்ப்பதற்குத் தயாராக இருந்தால் அந்தத் தீரரைப் பெருமைப்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, கையைத் தூக்கினீர்கள். பிறகு ஏன் தயக்கம்? நான் கூப்பிடுகிற நேரத்தில் பேசாமல் விட்டு விடுகிறீர்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ப. ஜீவானந்தம் அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நினைவு மண்டபம் ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று அவர் இந்த மாமன்றத்தினுடைய சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர். இலக்கியத் தென்றலாகவும் இருந்தவர். பொதுவாக, பொதுவுடைமை இயக்கத்தில் மட்டுமல்ல, ஒரு சுயமரியாதைவாதியாக இருந்து, தமிழகத்திற்குப் பணியாற்றிய அவர்களுக்கு அந்த நினைவு மண்டபத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவர்கள் தெரிவித்ததற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இணைந்து வேதாரண்யத்திலே இருக்கிற கோடியக்கரை என்ற இடத்தைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருந்தது. அதற்கான முயற்சிகள் அரசினுடைய ஆய்விலே இருக்கிறதா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்க இந்த அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கோடியக்கரை பகுதியை சதுப்பு நில சரணாலயமாக அறிவித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஒரு இன்டர்நேஷனல் டூரிஸம் சென்டராக இருக்கிறது.

அந்த இடத்திலே வருகிற மக்களுக்கு சன் ரைஸ், சன் செட் பார்ப்பதற்கு ஒரு வியூ பாயின்ட் இல்லாமலிருக்கிறது. சாயங்காலம் அங்கே பார்த்தால் மக்கள் ஓடுவதைப் பார்க்க முடிகிறது. அதை மாற்ற வேண்டுமென்று மத்திய அரசிடம் நான் மனுக் கொடுத்திருந்தேன். அப்பொழுது அவர்கள் மாநில அரசிடம் எஸ்டிமேட் கேட்டார்கள். ஐந்து இலட்சம் ரூபாய்தான் ஆகுமென்று சொன்னார்கள். எஸ்டிமேட் கொடுத்தார்கள். ஐந்து இலட்சம் ரூபாய் மாநில அரசே செய்து கொள்ளலாமே என்று அவர்கள் அந்த பைலை குளோஸ் செய்தார்கள். ஆகையினால் தயவு செய்து வியூ பாயிண்டை, கன்னியாகுமரியிலே சன் செட், சன் ரைஸ் பார்ப்பதற்காக ஒரு இடத்தை நிர்ணயம் செய்து அந்த இடத்திலே மக்கள் நின்று பார்ப்பதற்கான வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை இந்தச் சுற்றுலாத் துறை ஏற்கனவே பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், அதை வருங்காலத்திலே நிறைவேற்றுவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

* திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று பாடிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்கு நாமக்கல்லில் சிலை வைப்பதோடு, அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி பிறந்த நாள் கொண்டாடி வருகிறார்கள். இந்த ஆண்டும் அது கொண்டாடப்படுமா, சிலை வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி - விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கவிஞருக்குச் சிலை வைக்கப்படுமா என்று கேட்டார்கள். நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள், அவர் வாழ்ந்த இல்லத்தையே நினைவு இல்லமாக ஆக்க வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் - நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அவருடைய வாரிசுதாரர்கள் இன்னும் அவர் வாழ்ந்த இடத்தைக் கொடுப்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, அதைப் பெற்றுத் தருவதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினரவர்கள் முனைப்புடன் செயல்பட்டால் அதை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒரு மானியக் கோரிக்கை இருக்கிறது. பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையும் இருக்கின்றது. எல்லோரும் அதை மறந்து விட்டீர்கள்.விவாதம் முடிவுற்றது.

(அ) கோரிக்கை எண் 46 - செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 46, செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.9,34,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 6 -50

(ஆ) கோரிக்கை எண் 50– சுற்றுலா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 50- சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ். ரூ. 2,70,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை', என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(இ) கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21 - மீனளம்; மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 24,76,47,000-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 3029, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'to discuss the need to take steps to control all the fish freezing plants in the private sector and fix charges for their use', I move -``that the sum of Rs. 24,76,47,000 allocated under Demand No. 21 - Fisheries be reduced by Rs. 100."

(ஈ) கோரிக்கை எண் 31—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 44,97,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்க கூடுதல் நிதி வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகிற ரூ.44,97,63,00–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகத் தயாரிக்கப்பட்ட மீன் வறுவல் (Fried Fish) மீன் கட்லெட், மீன் பக்கோடா மற்றும் சுவையான தேநீர் வழங்கப்பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் அருந்தாதவர் இருந்தால், போய் அருந்தி வரலாம். *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : சாப்பிடாத உறுப்பினர்கள் யாரேனும் உள்ளே இருந்தால், தயவுசெய்து-அவர்களுக்காக சட்டமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதைச் சாப்பிட்டுவிட்டு, மீன் எப்படி சத்தான உணவாக, புரதம் மிக்க உணவாக மீனைச் சாப்பிட்டால் 'கேன்சர்' கூட வராது என்று சொல்கிறார்கள்; ஏனென்றால், அதிலே 'செலுமியம்' என்று சொல்லக்கூடிய ஒரு 'ரேர் மினரல்' அதிலே இருக்கிறது. அதுமட்டுமல்ல; கரோட்டின் என்று சொல்லக்கூடிய கண்ணுக்கு பாதுகாப்பு தரக்கூடிய அந்தச் சத்தும் இருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்களுக்கு இன்றைக்கு மீன் வழங்கப்பட்டிருக்கிறது. *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களுக்கு, நீங்கள் சொல்வதெல்லாம் அதுதான். அளவுக்கு அதிகம் போனால், அதனால் உறுப்பினர்களுக்கு ஏதாவது தொந்தரவு வந்துவிடப் போகிறது. எனவே, அமைச்சர் சொன்னதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, திரு. இராம. இராமநாதனையும் கேட்டுக் கொள்கிறேன். *(சிரிப்பு)* இதுபோல வேறெங்கும் கிடைக்காது உங்களுக்கு. *(சிரிப்பு) (குறுக்கீடுகள்)* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, எனவே, உறுப்பினர்கள்-எப்படி மீன் ஒரு சத்துள்ள உணவாக இருக்கிறதோ, அதைப்போல, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறையினுடைய கருத்துக்களை, அவர்கள் சத்தாக வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கொள்கைக் குறிப்புகளைப் பற்றிச் சொல்லுங்கள். மீன் சாப்பிட்ட மயக்கத்தில் உட்கார்ந்து விட்டீர்களோ? *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மீனைப்பற்றி சொல்லும்போது, நான் மறந்துவிட்டேன், தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான மீனளம் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோர் நலன் என்ற தலைப்புகளின் கீழ், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில், இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளைக் @ நான் இந்த அவையில் உரையாற்றியதாகக் கருதி, அதை இந்த அவைக்குறிப்பிலே பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கும், ஆலோசனைகளுக்கும் என்னுடைய பதிலுரையையும் நமது இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசில் எடுக்கக் கருதியுள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் எனக் கூறி அமைகிறேன்.

பிற்பகல் 6.55

(10) "ஜெய்ஹிந்த்" என்ற சொற்றொடரை உரையின் முடிவில் பயன்படுத்துதல் குறித்து -பேரவைத் தலைவரின் தீர்ப்பு — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்ற விவாதத்தின்போது 'ஜெய்ஹித்' பற்றிய பிரச்சினை வந்ததே, அப்பொழுதே நான் சொன்னேன், இது பாராளுமன்றத்திலே அறிவித்த அறிவிப்பு என்று. 15.3.1948 அன்று அன்றைய பேரவைத் தலைவர், லோக்சபா அதனுடைய தலைவர், திரு. ஜி.வி. மௌலங்கர், முதலாவது லோக்சபா தலைவர், அவர் அன்றைக்கு அறிவித்த அறிவிப்பு. இப்பொழுது நான் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதற்கு முன்னர் பேசிய திரு. எச்.வி. காமத் அவர்கள் 'Thank you `thank you' என்று சொல்லி முடித்திருக்கிறார். இரண்டு 'Thank you' சொன்னவுடனே, அதனைக் குறிப்பிட்டு அவர் சொன்னபோதுதான், இதைச் சொல்லியிருக்கிறார். No. No thanks, No Jai Hind, No Vandematharam, nothing of the kind' என்று அன்றைக்கு பண்டித நேருமகனார் இருந்தபோது-நாடாளுமன்றத்திலே அறிவித்த-அறிவிப்பைத்தான் இங்கே அன்றைய தினம் பேரவைத் துணைத் தலைவர் சொன்னார், இன்றைக்கு நானும் சொன்னேன். அதைப் பின்பற்றவில்லை.

@ 771 முதல் 829 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III மற்றும் இணைப்பு-IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.

நான் சொன்னது போல, இதையேகூட இரண்டு தடவை thank you, thank you, என்று சொன்னது, 'இது உங்களுடைய உரிமை இவ்வளவு நேரம் பேசியது. அதற்கு நீங்கள் எனக்கு 'thanks' சொல்ல வேண்டியதில்லை' என்று அவர் சொல்லியிருக்கிறார். 'பேசுகிற உரிமையே உங்களுக்கு இருக்கிறபோது, அந்த உரிமையை எடுத்துக்கொண்டு பேசியவர் அதற்காக எனக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை' என்று சொல்லிவிட்டு, இதையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடுகள்)*

திரு. சி. ஞானசேகரன்: நன்றியே சொல்லக் கூடாது என்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னது அதுகூட தேவையில்லை என்றிருக்கிறார். *(குறுக்கீடு)*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தை பொதுவாக..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இப்பொழுது எதையும் சொல்லவில்லை. நான் ஏதோ இன்றைக்கு நாங்கள் தேடிப்பிடித்துச் சொன்னதைப்போல் நினைத்துக்கொள்ள வேண்டாம். நேரு பெருமகனார் இருந்தபோது, பிரசித்திபெற்ற முதல் பாராளுமன்றத் தலைவர், அவர் சொன்னதை நான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. *(குறுக்கீடு)*

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெய்ஹிந்த் வார்த்தையைப் பயன்படுத்தலாமா, பயன்படுத்தக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடாது என்று அன்றைய பாராளுமன்றத் தலைவர் சொன்னது, நான் அதைச் சொல்லவில்லை. அவ்வாறு எல்லாம் சொல்லியிருக்கிறார், அதையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்று உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அன்றைய பாராளுமன்றத் தலைவர் வழங்கியிருக்கிற தீர்ப்பு பயன்படுத்தக் கூடாது என்பது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அன்றைய பாராளுமன்றத் தலைவர் சொன்னதை அப்படியே கடைப்பிடித்து வருகிறேன். *(குறுக்கீடுகள்)* மறைந்த நேருபெருமகனார் இருந்த காலத்தில் இருந்திருக்கின்ற நாடாளுமன்றத் தலைவர்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்த மவுலங்கர் சொன்னதுதான். அதைத்தான் நான் சொன்னேன். *(குறுக்கீடுகள்)* நான் அப்பொழுதே நீங்கள் பயன்படுத்தக் கூடாது என்றுகூட சொல்லவில்லை. *(குறுக்கீடு)* பேரவைத் துணைத்தலைவரும் அன்றைக்கு

அதைத்தான் சொன்னேன் என்றிருக்கிறார். எனவே அதனுடைய அடிப்படையிலே இனிமேல் நீங்கள் இதைத் தவிர்க்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றுதான் அவரே சொல்லியிருக்கிறார். எனவே , அதை உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஜெய்ஹிந்த் என்பதைப் பயன்படுத்தலாமா, பயன்படுத்தக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வாறு அன்றைய பாராளுமன்றத் தலைவர் சொல்லியிருக்கிறார்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: 'ஜெய்ஹிந்த்' என்பது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான், இவ்வாறு இருப்பதை எல்லாம் உறுப்பினர்கள் தவிர்க்கலாம், தவிர்க்க வேண்டுமென்று கௌஸ் அண்ட் ஷக்தரிலேயும் அதைப் பற்றிய கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையே நான் திரும்பச் சொல்கிறேன். அவ்வளவுதான்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: 'ஜெய்ஹிந்த்' என்பதற்கு இந்தியாவை வணங்குகிறோம் என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குள்ளேயே நான் போகவில்லை, வணங்குங்கள், வணங்காமல் இருங்கள் (குறுக்கீடு) அவருக்கு அன்றைக்குத் தெரியாதா? மௌலங்கருக்குத் தெரியாதா? ஜவஹர்லால் நேருவுக்குத் தெரியாதா? (குறுக்கீடு) நான் அவர்கள் சொன்னதை இப்பொழுது நினைவுபடுத்துகிறேன் உங்களுக்கு. அவ்வளவுதான் .

7. மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்கிறது. திரு.சோ. பாலகிருஷ்ணன். (குறுக்கீடு) கொறடா பேசுகிறீர்களா? (குறுக்கீடு) யார் பேசுகிறீர்கள்? நான் அப்போதே உங்களுடைய துணைத் தலைவரிடம் கேட்டேன். (குறுக்கீடு) திரு. மா. சுந்தரதாஸ்.

பிற்பகல் 7-00

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மீனளம், பிற்பட்டோர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். மீனளத்துறையைப் பொறுத்தவரையில் இதற்காக ஒதுக்கி இருக்கிற பணம் 'அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பெண்டிச்சர்-க்கு கூடதிகையுமா என்பதுதான்

இன்றைய கேள்வி, 24 கோடி ரூபாய் என்று சொன்னால் எவ்வளவோ அலுவலகங்கள் இருக்கின்றன. அஸிஸ்டன்ட் டைரக்டர்ஸ் இருக்கிறார்கள். இந்த ஒரு சிறிய பணத்தை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு இந்த நாட்டிலே கஷ்டப்படுகிற, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதுதான் என்னுடைய ஆதங்கமாகும். இவ்வளவு இருந்தும் கூட 14.3.93 தினமணி பத்திரிகையைப் பார்த்தேன். ஒருகோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்த பணம் சரண்டர் ஆகி இருக்கிறது என்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டு மத்திய அரசு கொடுத்த பணம் ஒரு கோடி ரூபாய் சரண்டர் ஆகி இருக்கிறது என்று சொன்னால் நம்முடைய அமைச்சர் அவர்களும், ஏராளமான அதிகாரிகளும் திறமையாகச் செயல்பட்டாலும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த டிமாண்டிலே 24 கோடி ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது என்று அந்தத் தொகையைப் பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். கடந்த காலங்களில் உள்ள தொகைகளை அவர்கள் கணக்குப்பார்க்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதுவரையில் ப்ளான், நான்-ப்ளான் என்ற வகையில் மொத்தமாகப் பார்க்கப் போனால் கூட 4 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியது கிடையாது. ஆனால் இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் 24.76 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் துறைக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். அந்த அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கி இருக்கிறார்கள். ஒரே திட்டம் என்று எடுத்துக்கொண்டால் கூட – அதாவது இதை எல்லாம் என்னுடைய பதிலுரையிலே நான் சொல்ல இருக்கிறேன். அதாவது சேமிப்பு நிவாரணத் திட்டம் என்ற ஒரு திட்டத்திற்கு மட்டும் 10 கோடி ரூபாயை அவர்கள் அளிக்க இருக்கிறார்கள். அதையெல்லாம் என்னுடைய பதிலுரையிலே சொல்ல இருக்கிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, ஆடிட்டர் ஜெனரல் கொடுத்த அறிக்கையைச் சுட்டிக்காட்டினார்கள். 1985-ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டுவரைதான் அந்த அறிக்கை இருக்கிறது. எனவே, இப்போது 94-ஆம் ஆண்டு அறிக்கையை அவர்கள் பார்க்கவேண்டும். பார்த்துவிட்டுப் பேசினால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் தினமணி பத்திரிகையில் பார்த்தேன். 14.3.93 அன்று (குறுக்கீடு) ஆடிட் ரிப்போர்ட்டிலே. . . .

மாண்புமிகு பேரவைத்தலைவர்: ஆடிட் ரிப்போர்ட்டிலே 1992 ஆம் ஆண்டு வரைதான். . .

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் சரண்டர் ஆகி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் டீசலுக்கு மானியம் 90-91 ஆம் ஆண்டு வரைதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 91-92, 92-93, 93-94 ஆம் ஆண்டுகளுக்கு நீங்கள் மானியம் கொடுக்கவில்லை. மத்திய அரசு 45 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கி இருக்கிறது. ஆனால் நீங்கள் டீசல் விலை ஏறிவிட்டது என்று சொல்லக் கூடும். இருந்தாலும் கூட மாநில அரசின் பொறுப்பில் இருக்கக்கூடிய அந்த இலாக்காவைப் பொறுத்தவரையில் நிச்சயமாக மானியம் கொடுத்திருக்கவேண்டும். அதேபோன்று 1993-94-ல் மாடர்ன் போட்ஸ் கட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் சப்சிடி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு நீங்கள் வைத்த அறிக்கையிலே அந்த சப்சிடி பற்றிச் சொல்லவே இல்லை. அந்த அளவுக்கு உள்ள குறையைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும் இந்த மீனவ மக்களைப் பொறுத்தவரையில் வேதாரண்யம் போன்ற பகுதியைப் பார்த்தால் எல்.டி.டி.இ மற்றும் சிலோன் மிலிட்டரி ஆகியவற்றினுடைய பயங்கரமான தீவிரவாதம் நடத்தப்படுகிறது மீனவர்களின் மீது. ஆந்திராவிலே சென்றும் மீனவர்கள் மீன் பிடிக்க முடியவில்லை. அங்கேயும் இவர்கள் மீது கொடூரமான செயல்கள் நடத்தப்படுகின்றன. என்னுடைய பகுதியை எடுத்துக்கொண்டால் கேரளாவுக்குச் சென்று மீன் பிடிக்கச் சென்றால் அங்கே இருப்பவர்கள் இவர்களை செகண்டரி சிட்டிசன் ஆகப் பார்த்து அதாவது தமிழர்களை மலையாளிகள் அடிக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான உணவாக அரிசிக்கு அடுத்தபடியாக மக்கள் விரும்பிச் சாப்பிடுவது மீன்தான். அமைச்சர் அவர்கள் கூட பலவிதமான மீன்கள் எல்லாம் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால் அந்த மீனவ மக்களுக்கு நாம் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அதற்கு மத்திய அரசு பொறுப்பு இருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. சிலோனுக்குப் பக்கத்தில் இருக்கின்ற வேதாரண்யம், மண்டபம் போன்ற பகுதிகளைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. அதேபோல் ஆந்திராவிலே சென்றும் மீன் பிடிக்க முடியவில்லை. அங்கே எங்கள் ஆட்சிதான். காங்கிரஸ் ஆட்சிதான் நடக்கிறது. நான் ஆட்சியைப் பற்றிச் சொல்லவில்லை. நம்முடைய மீனவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதைத்தான் சொல்கிறேன். கேரளாவிலும் எங்கள் காங்கிரஸ் கட்சி

ஆட்சிதான் நடக்கிறது. ஆனால் நான் சொல்லவருவது என்னவென்றால் மீனவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். எங்கள் பகுதி மீனவர்கள் மாதத்திற்கு இரண்டு தடவை கேரளாவுக்குச் சென்று மீன்பிடிக்கவில்லை என்றால் அவர்கள் பிழைக்க முடியாது.

பிற்பகல் 7-05

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, எங்களுடைய மீனவர்கள்தான் அதாவது உழைச்சல் என்று சொல்லப்படுகின்ற மீனவர்கள்தான். கன்னியாகுமரியிலிருந்து எங்களுடைய பகுதிவரை உள்ள மீனவர்கள்தான் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மீனவர்கள் என்று சொல்லுவார்கள். அவர்கள் போர்பந்தர் முதல் பாகிஸ்தான் வரை சென்று மீன் பிடிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. பாம்பே சென்றால் அவர்களைப் போட்டு எரிக்கிறார்கள். இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று நான் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தியாவில் இருக்கின்ற மீனவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, தமிழ்நாடாக இருந்தாலும் சரி, கேரளாவாக இருந்தாலும் சரி, ஆந்திராவாக இருந்தாலும் சரி மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள மீனவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற சூழ்நிலையை இன்றைக்கு அவர் சொல்லியிருக்கிறார். அந்த பாதுகாப்பை இந்தியாவிலுள்ள மீனவர்களுக்கு அளிக்கவேண்டியது யாருடைய பொறுப்பு, கடமை என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துதான் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. நான் எந்த அரசையும் குறை சொல்ல தயாராக இல்லை. ஏனென்றால் மீனவர்கள் மீன் பிடித்தால் அந்நியச் செலாவணி நமக்கு வருகிறது. தமிழ்நாட்டில் இங்கே இருக்கின்ற மக்கள் அதிகமாக மீன் உணவு சாப்பிடுபவர்கள். அந்த மீனவரகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேனே தவிர நான் எந்த அரசையும் குறை சொல்லவில்லை. ஆந்திராவிலே இருப்பவர்கள் இங்கே இருக்கின்ற மீனவர்களைப் பிடித்து வைத்து லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் பணம் கேட்கிறார்கள். கேரளாவிலே மீன்களுக்கு சரியான விலை நிர்ணயம் செய்ய மறுக்கிறார்கள். ஆக அதுவல்ல பிரச்சினை, மீனவர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டுமென்று

சொல்லுகிறேனே தவிர நான் எந்த அரசையும் குறை சொல்லத் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:* மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகளுக்கு பொறுப்பு இருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். மாநில அரசுக்கு தொடர்பு மட்டும்தான் இருக்கிறது. மத்திய அரசிடம் மட்டுந்தான் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் தான் அந்த அதிகாரத்தை சரியான வழியிலே மனிதாபிமானத்துடன் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசாங்கத்தை குறை சொல்லவில்லை. மீனள டிமாண்டில் பேசும்போது இதைப் பேச வேண்டியிருக்கிறது. பிரச்சினையை சொல்லத்தான் வேண்டும், அதற்கு முடிவு அரசாங்கம்தான் சொல்ல வேண்டும். மத்திய அரசை மாநில அரசு கலந்து முடிவெடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கற்றறிந்த மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகவே தெரியும். பொறுப்பு என்பது இரண்டு அரசாங்கத்திற்கும் உண்டு. ஆனால் ஒரு காரியத்தை சொல்கிறபோது அதை யார் நடைமுறைப்படுத்த வேண்டும். Who should ensure it? மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அந்த பாதுகாப்பை வழங்க வேண்டியது மத்திய அரசாங்கம். இதிலே அவர்கள் கவனம் செலுத்தி உரிய பாதுகாப்பை வழங்க வேண்டுமே தவிர இது மாநில சர்க்காருடைய பொறுப்பிலே மட்டும் இருப்பதுபோல் சொல்லக்கூடாது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பு இல்லை என்று சொல்லத்தான் நான் பேசவந்தேன். மீனவர்கள் பாதுகாப்பு குறித்து நீங்கள்தான் மத்திய அரசிடம் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு பல்வேறு சந்தர்ப்பங்களிலே, இராமேஸ்வரத்தில், கடலில் பாதிக்கப்படுகின்ற மீனவர்களைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கோரிக்கை

வைத்திருக்கிறார்கள். பாரதப்பிரதமருக்கு நேரடியாக எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசுடன் நேரடியாக தொடர்பு கொண்டார்கள். உடனுக்குடன் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தும் தொடர்ந்து நடைபெறுகிறது என்று சொன்னால் அதற்கு யார் காரணம், காங்கிரஸ் ஆளுகின்ற அந்த அரசு செய்ய வேண்டுமேதவிர மாநில அரசின் கையில் இல்லை.

மாண்புமிகு திரு. டி ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு போர்க் குரல் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதியதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.“ I wrote to you recently about the atrocities committed by the Sri Lankan navy on our innocent Tamil Nadu fishermen including shooting them down, even when they are engaged in their normal fishing activities.You were also kind enough to reply to me in your letter dated 30th September 1993 stating that you have taken up the matter with the Sri Lankan Government in all seriousness and that the Government of India has also lodged a strong protest with the Sri Lankan Government. You also assured me.. " (The gong was sounded)`` .. that the Indian naval presence in that area would also be enhanced suitably to protect the life and property of our Tamilian fishermen. I am sorry to inform you that notwithstanding the protest lodged by the Government of India, the Sri Lankan navy has continued to involve in wanton killing of our fishermen. I would like to bring to your notice that as many as four fishermen have been shot dead ruthlessly by the Sri Lankan navy on the 8th October 1993. So inhuman is their intention that the Sri Lankan Navy does not even allow the Indian fishing boats to bring back the dead bodies. Since these killings continue to take place in the manner, it is clear that the Sri Lankan Government is playing no heed to the voice of the Indian Government" மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். `` I am concerned that such a situation is extremely explosive not only to the fishermen community of Tamil Nadu, but also the entire people of Tamil Nadu may launch a massive agitation resulting in serious Law and order problem. They may also begin to think in the form of....."

பிற்பகல் 7-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே காட்டியுள்ள தேதியை மட்டும் குறிப்பிட்டு, அந்த விளக்கத்தை, அந்தத் தேதியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

ஸ்டேட்மெண்ட் ஆகக் கொடுத்திருக் கிறார்கள் என்று சொன்னால் போதும் முழுவதும் படிக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடிதத்தை அடையாளத்திற்கு நான் படித்துக் காட்டுகிறேன். இதுபோல பல கடிதங்கள் இருக்கின்றன. மத்திய அரசு சில சமயங்களில் நடவடிக்கை எடுக்காதபோது நேரடியாக சுட்டிக்காட்டி பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். பாரதப் பிரதமர் அவர்களை நேரடியாகப் பார்க்கும்போது எல்லாம், சந்தித்தபோதெல்லாம் இது குறித்து கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கத்தான் நான் இதைச்சொல்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் படித்திருக்கிறேன். எழுதிவிட்டார்கள். மத்திய அரசும் அதற்காக வேண்டிய ஏற்பாட்டை செய்ய இருக்கிறார்கள். ஆனாலும் நமக்கு பாதுகாப்பு கிடைக்கவில்லை என்று தான் சொல்கிறேனே தவிர, மத்திய அரசும் செய்யாமல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எல்லைக்குள் மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமேயானால் மாநில அரசு அதிலே தலையிடலாம். ஆனால் கடலிலே பிரச்சினை ஏற்படுகிறபோது, இரு நாடுகளுக்குள் பிரச்சினை இருக்கிறது. எனவே மத்திய அரசுதான் தலையிடவேண்டும். மத்திய அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? காஷ்மீரத்திலே தீவிரவாதிகள் யாராவது பாதிக்கப்பட்டால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது தேவையில்லை. வேண்டாம்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய கண்ட்ரோலில் இருக்கின்ற நாடல்ல சிலோன். அது செப்பரேட் கன்ட்ரி. ஆகவே அதிலே பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். நிச்சயமாக அந்த பேச்சு வார்த்தையிலேதான் முடிவெடுக்க முடியும். உடனடியாக செய்ய முடியுமா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் மத்திய அரசு செய்யவில்லை, மாநில அரசு செய்யவில்லை என்பதைப் பற்றி சொல்லவில்லை. அவர்கள் பாதிக்கப்படுவதைத்தான் சொல்கிறேன். நாம் நிச்சயமாக அதில் தீர்வு கண்டாகவேண்டும். அதெல்லாம் தவறு சொல்வதாக, நான் குறையாகச் சொல்வதாக நினைக்காதீர்கள்.

அடுத்தபடியாக நம்முடைய மீனவர்களைப் பொறுத்தவரையிலே இவர்களுக்கு எவ்வளவு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், மீனவர்களுக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கிறார்களே தவிர, மீன் சாப்பிடுகின்றவர்களுக்கு என்ன கொடுக்கப்படவில்லை என்பதல்ல. எத்தனை லட்சம் மக்கள், எத்தனை கோடி மக்கள் மீன் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டால் அதற்கான விவரங்கள் இல்லை. ஆனால் நீங்கள் கொடுத்திருக்கின்ற பட்ஜெட்டிலே எத்தனை மக்களுக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது குறித்த விவரங்களை எல்லாம் என்னுடைய பதிலுரையிலே சொல்கிறேன். கடந்த ஆண்டு எந்த அளவுக்கு உள்நாட்டில் மீன்வளம் இருந்தது, கடல் மீன் வளம் எவ்வளவு ஏற்படுத்தப்பட்டது என்றும், இந்த ஆண்டிலே எவ்வளவு பிடிக்கப்பட்டது என்றும் நான் தெளிவாகக் கூற இருக்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன் பிடிக்கப்போகும்போது கேரள மாநிலத்திலே ஒருவர் காணவில்லை என்று சொன்னாலும்கூட, ஹெலிகாப்டர் வைத்து அவர்களை தேடிப் பிடிக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டதைப் பொறுத்த வரையில் ஹெலிகாப்டர் இல்லை என்றாலும்கூட அதி வேகமாக போகும் ஒரு மாடர்ன் போட்டாவது வேண்டும் என்று நான் 10 ஆண்டுக்காலமாக இந்த சபையிலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். இத்துடன் பத்தாவது தடவை என்று நினைக்கிறேன். இந்த விஷயத்தைப்பற்றி ஏழு எட்டு தடவைகள் நான் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஒரு மீனவர் காணாமல் போய்விட்டால் தகவல் அரசுக்கு கிடைத்தவுடன் அரசு போர்க்கால நடவடிக்கையிலே என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதையெல்லாம் விரைந்து எடுக்கிறது. நம்முடைய அரசு உடனடியாக அந்தத் தகவலை இந்த நேவல் பேஸ்-க்கு சொல்லி அங்கேயுள்ள இந்த பாஸிங் ஷிப்புகளுக்கு, அந்த வழியாக செல்கின்ற கப்பல்கள் அனைத்திற்கும் உடனடியாக தகவல் சொல்லப்படுகிறது. சமீபத்திலேகூட சென்னையிலே அந்த நேவல் பேஸ் ஒன்று திறந்திருக்கின்ற செய்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்றே கருதுகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே அதிகமான 'ரஃப் சீ' அதாவது, வேகமாக அலை அடிக்கிற கடல் இருக்கிறது. அந்தப் பகுதியிலே தினமும்,

ஒரு வாரத்திற்கு 2,3, பேர்கள் காணாமல் போகிறார்கள். உடனடியாக எங்களை அவர்களைச் சேர்ந்தவர்கள் வந்து பார்ப்பார்கள். ஆனால் கேரளாவைப் பொறுத்தவரையில் உடனடியாக சொன்னால் ஹெலிகாப்டர் மூலமாகப் பறந்து பார்த்து அவர்களே அறிவிப்பு கொடுக்கிறார்கள். நான் சொல்வது நமக்கு என்று வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறேன். நேவல் பேஸ் என்று சொல்கிறீர்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. நான் கூட பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். நீங்கள் விரைந்து போர்க்கால நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நம்முடைய இலாகாவுக்காக ஒரு அதிவேக போட்-ஆவது கன்னியாகுமரி மாவட்டத்திலே, அது போன்ற பகுதியிலே, நிறுத்தியிருந்தால் நாங்கள் உடனே நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம். அப்போது அதிவேகத்திலே சென்று பிடிக்க முடியும். அதை நான் சொல்கிறேனே தவிர, நீங்கள் செய்யவில்லை என்று சொல்லவில்லை. ஆனால் கேரளாவிலே டிப்பார்ட்மெண்டிலே ஹெலிகாப்டர் ஓன்-ஆகவே வைத்திருக்கிறார்கள். நமக்கு ஹெலிகாப்டர் வாங்க பணவசதி இல்லை என்றாலும், ஒரு ஸ்பீட் போட்-ஆவது நம் டிப்பார்ட்மெண்ட்டிலே வைத்திருக்கலாம். அப்படி இருந்தால் நம் மீனவர்களைக் காப்பாற்ற முடியும் என்று சொல்கிறேன்.

பிற்பகல் 7-15

அதேபோல மீன் வளத்தைப் பொறுத்தவரையில், இதுநாள்வரை கேரளாவுக்குத் தான் கொண்டு செல்கிறார்கள். அங்கே மீன் பிடிப்பவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். மீன் ப்ராசசிங் யூனிட் -இப்பொழுது பாஸ்ட் புட் கூட ஒவ்வொரு கிராமத்திலும் வைக்கலாம். ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் அவ்வளவு மீனையும் கேரளாவுக்கு வாங்கிச் செல்கிறார்கள். அங்கே எக்ஸ்போர்ட் வியாபாரம் செய்கிறார்கள். ஏன் நாமே அப்படி செய்தால் என்ன? அதற்காக அரசாங்கம் முன் வர வேண்டும். நம்முடைய மீனவர்களுக்கு இன்னும் அதிக விலை கிடைக்க வேண்டும். இங்கே இருக்கிற மீனை- அதிகமாக மீன் வந்துவிட்டது என்று சொன்னால் அவர்கள் குறைந்த விலைக்கு எடுத்துச் சென்று கேரளாவிற்கு சென்று அதிக விலைக்கு விற்று லாபம் எடுக்கிறார்கள். நாம் இங்கு வேலைக்காரர்களாக இருக்கிறோம். கேரளாவிலே இருக்கின்றவர்கள் அதிகப் பணத்தை ஏய்க்கிறார்கள், அவர்களுக்கு அந்நியச் செலாவணியும் அதிகமாக கிடைக்கிறது. ஆகவே, தயவுசெய்து ஒவ்வொரு கிராமத்திலும் பாஸ்ட் புட் மாதிரி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதுபோல நல்ல முறையிலே எக்ஸ்போர்ட் குவாலிட்டியாக உருவாக்கி தமிழ்நாட்டிலேயே அதை நாம் செய்து வெளிநாட்டுக்கு நாமே அனுப்புவதற்குத் தேவையான யூனிட்டுகள் ஒவ்வொரு பகுதியிலும் உருவாக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், அந்தப்பகுதியிலே இருக்கிற பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் இதற்கு முன்பு இருந்த அரசாங்கத்தை விட அதிகமான மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் நம்முடைய இந்த இலாகா அமைச்சர் என்று நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் இந்த அமைச்சர் ஒருவர் தான் மீனவர்களுடைய பிரச்சினைகளை நேரடியாக அறிந்தவர். நான் எந்தப் பிரச்சினையைச் சொன்னாலும் கூட அந்தப்பிரச்சினையை குறித்து உடனடியாக முடிவு கட்டி வருகிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் பாராட்டுத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராட்டுக்களைச் சொன்னால் குறைகளையும் சொல்லித்தான் ஆக வேண்டும். இதற்கு முன்பு பல அமைச்சர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு மீனைப்பற்றி தெரியாது. சொன்னால் 'ஆ' என்று கேட்பார்கள். இவரைப் பொறுத்தவரையில் நான் எந்தப் பிரச்சினையைச் சொன்னாலும், கேட்டு, உடனடியாக தொலைபேசியிலே, உடனேயே 1/2 மணியில் , 1 மணியில் சொல்கிறார்கள். அது பற்றி மெசேஜ் வந்திருக்கிறது. பிரச்சினை குறித்து பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் அல்லது தீர்வு காணப்பட்டது என்று மெசேஜ் அவர்களால் சொல்லப்படுகிறது. இந்த அளவுக்கு வேகமான முறையிலே இந்த அமைச்சர் செய்து கொண்டிருப்பதை நான் தனிப்பட்ட முறையிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அதிகமான வீடுகளை இதுவரை எங்கள் பகுதியிலே -10 ஆண்டுக் காலம் நான் எம்.எல்.ஏ-ஆக இருக்கிறேன். அப்போது எல்லாம் 30,40 வீடுகள்தான் கட்டுவார்கள். ஆனால் இப்போது நூற்றுக்கணக்கான வீடுகளை மீனவர்களுக்கு கட்டிக் கொடுப்பது இந்த அரசாங்கத்தில் தான். இந்த அமைச்சர் கட்டிக் கொடுத்திருக்கிறார் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாகச் சொன்னால், இதனுடைய குவாலிட்டி குறைவாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், குவாலிட்டி குறைவு என்று கூறும்போது அமைச்சரை நான் சொல்லவில்லை. கான்ட்ராக்ட் கொடுக்கிறார்கள். அதனால் அந்த அளவுக்கு நீங்கள் அதனைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் இன்றைக்கு கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும் மீனவர்கள் பாதுகாப்பான ஒரு சூழ்நிலையிலே வர்ழ வேண்டும் என்பதற்காக நல்ல தரமான வீடுகள் அவர்களுக்குக் கட்டித் தர வேண்டும் என்பதற்காகவே, முன்பு எல்லாம் வீடுகள் என்றுசொன்னால் 17 ஆயிரம் ரூபாய்க்கு அந்த வீடுகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு அரசுக்கு கூடுதலாக வருடத்திற்கு

இரண்டுகோடி ரூபாய் ஏற்பட்டாலும், மீனவர்களுக்கு நல்ல வசதியான வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்கின்ற நம்முடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் தான் இன்றைக்கு பல இடங்களிலே நல்லவீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அதிலும், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அந்த வீடுகள் கடந்த காலத்திலே வேண்டுமானால் அந்த தரம் இல்லாத வீடுகளாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு அரசு ஊழியர்களுக்குக் கூட அட்வான்ஸ் என்று சொல்லப்படுகிற முன்பணம் கொடுப்பது கிடையாது. ஆனால் நம்முடைய மீனவர்கள் மீது எந்த அளவிற்கு நம்பிக்கையை நம் புரட்சித் தலைவி அவர்கள் வைத்திருந்தால் அட்வான்ஸ் ஆகவே 10 சதவிகிதம் நம்முடைய மீனவர்களுக்குக் கொடுத்து இருக்கின்றார்கள் என்பதை அதாவது 5 தவணைகளாக 26 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு கிராமத்திற்கு 100 வீடுகள் ஒதுக்கப்படுகிறது என்றால், அந்த 26 லட்சம் ரூபாயிலே முதல் தவணையிலே 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயை 10 சதவிகிதம் அவர்களிடத்திலே அட்வான்ஸ் ஆக கொடுத்துவிட்டு வீடுகள் கட்டுகின்ற ஒரு புது உத்தரவு, இன்றைக்கு இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் செயல்படுத்தாத ஒரு புதிய திட்டத்தை, உத்தரவை இன்றைக்கு தமிழகத்திலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்தான் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டும்போது அதனுடைய தரங்கள்- ஏனென்றால் கான்ட்ராக்ட் கொடுத்து கட்டுகிறார்கள் - அதனால் நான் சொல்கிறேன்- தரம் சரியாக இல்லை. அதை நீங்கள் நேரடியாக எங்கள் மாவட்டத்திற்கு வரும்போது பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில்..

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அவை எல்லாம் முன்பு கட்டப்பட்ட வீடுகள். அப்போது கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் 17 ஆயிரத்திற்கு ஒதுக்கப்பட்டு கட்ட முடியாது இருந்த சூழ்நிலை எல்லாம் அப்போது தான். இன்றைக்கு 3 மாதத்திற்கு ஒரு தடவை ரெவியூ செய்து, என்ன பிரச்சினை உங்களுக்கு, எவ்வளவு பணம் வேண்டும். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தரத் தயாராக இருக்கிறார்கள். நீங்கள் வேலையைத் தொடருங்கள் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு

TRUTH ALONE TRIUMPHS

அப்படி வேலைகள் எல்லாம் தொடங்கப்பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு பல்வேறு கிராமங்களில் வீடுகளைத் திறந்து மீனவர்கள் குடிபோகின்ற ஒரு காட்சியை நாம் தமிழகத்திலே காண முடிகின்றது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே ஒரு பிஷ்ஷிங் ஹார்பர் வேண்டுமென்று பல தடவை நான் அரசிடமும், அமைச்சரிடமும் கேட்டிருக்கிறேன். அந்த இரவின்துறை என்ற இடத்திலே, கேரளாவிலே இதுபோன்ற இன்னும் பல இடங்களிலே அவர்கள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு, அங்கே இருக்கிற அமைச்சர் நீங்கள் பேப்பரை அனுப்பி வையுங்கள், நான் செய்கிறேன் என்று சொல்கிறார். ஆனால், இங்கே,பெங்களூரிலே ஒரு மைய அரசின் நிறுவனம் இருக்கிறது. அவர்கள் வயபிளாக இல்லை என்று சொல்வதாக சொல்கிறார்கள். அங்கு என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. நான் கடந்த 10 ஆண்டுக்காலமாக இதனை கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-20

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கோரிய கோரிக்கை குறித்து என்னுடைய பதிலுரையிலே விவரம் வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர், மொத்தமாக ஒரே பதிலாகச் சொன்னால் சரியாக இருக்கும். திரு. சுந்தரதாஸ், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளப்பள்ளம் என்ற இடத்திலே லேன்டிங் பெசிலிட்டி இல்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் கேட்டிருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று எனது பகுதியைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கும், மற்ற துறைகளுக்கும் வித்தியாசம் உண்டு. இதில் பொதுப்பணித் துறை வருவதே இல்லை. குறிப்பாகச் சொன்னால் 1992-லே வெள்ளம் வந்தது. இரவிந்துறை என்ற பகுதியிலே 50 இலட்சம் ரூபாய்க்கு 1950–ல் கட்டப்பட்ட சுவர்கள் எல்லாம் இடிந்திருக்கிறது. அதற்கு பொதுப்பணித் துறை வரவில்லை. உங்கள் துறையிலிருந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1945-லே பாளவிளையில் கட்டிய பாலம் பழுதடைந்திருக்கிறது. அதைப் பற்றி

பொதுப்பணித் துறையிடம் கேட்டால் எங்களிடம் பணமில்லை என்று சொல்லுகிறார்கள். தயவு செய்து உங்களிடம் இருக்கும் பணத்தில் அந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இரவிந்துறை பிரிட்ஜ் சீ ஏரோஷனில் அதிகமான வீடுகள் ஒவ்வொரு சீசனிலும் அழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. எனவே சீ ஏரோஷனைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் என்னுடைய பகுதியிலே கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தூத்தூர் பகுதியிலே லைட் ஹவுஸ் வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பி.சி., எம்.பி.சி. டிமாண்டை பொறுத்தவரையில் பல்வேறு காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். கோச்சிங்குக்கு 7 சென்டர்ஸ் வைத்திருக்கிறீர்கள். எத்தனை பேர் பேக்வார்ட் கிளாசில் ஐ.ஏ.எஸ். பாஸ் ஆகியிருக்கிறார்கள் என்றால் இல்லை. இந்த கோச்சிங் சென்டர்ஸ் ஆரம்பிக்கப்பட்டது எந்த ஆண்டு என்று கொடுக்கப்படவில்லை. கடந்த 4 ஆண்டுகளில் யாரும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பாஸ் ஆனதாகத் தெரியவில்லை. இதற்கு என்ன காரணம் என்று கேட்கிறேன். Quality of the institution must be improved. பணத்தை மட்டும் செலவழித்தால் போதாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்று நம்முடைய மண்டல் கமிஷன் அறிக்கை வந்ததற்குப் பிறகு 25 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பிற்கு ஒதுக்கீடு இருக்கிறது. எனவே நன்கு படித்தவர்களை வைத்து கிளாஸ் நடத்தி, மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜூனியர் வக்கீல்களுக்கு 750 ரூபாயும், சீனியர் லாயர்களுக்கு 5000 ரூபாயும் கொடுப்பதாகப் போட்டிருக்கிறீர்கள். ஏன் 5000 ரூபாய் சீனியர் லாயருக்குக் கொடுக்க வேண்டும்? இங்கே இருக்கிற ஜி.பி., பி.பி., அட்வகேட்-ஜெனரல் ஆகியோரிடம் அவர்களை அனுப்ப வேண்டியதுதானே. அவர்களிடம் சென்று படிக்கட்டுமே. சீனியர் லாயர்களுக்குக் கொடுக்கிற 5 ரூபாய் பணத்தை இன்னும் அதிகமான இளம் வழக்கறிஞர்களுக்குக் கொடுத்து ஊக்குவிக்கலாமே. How to select a Senior Lawyer?

சர்வீஸ் கமிஷனுக்குத்தான் போக வேண்டும். இது தேவையில்லை. நம்முடைய திறமையான லாயர்கள்தான் பி.பி.யாக ஜி.பி.யாக, அட்வகேட் ஜெனரலாக இருக்கிறார்கள். அவர்களிடம் இவர்களை அனுப்பினால், 750 ரூபாய் வீதம் ஜூனியர் வக்கீல்களுக்கு கொடுத்து, அதிகமான வழக்குகளை கவனிக்கலாம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் வக்கீல் என்ற முறையில் சொல்லுகிறேன். இவர்களை அரசாங்க

வக்கீல்களிடம் ஒப்படையுங்கள். சீனியர் லாயர்கள் ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் வாங்குபவர்களுக்கு 5000 ரூபாய் வழங்க வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீனியர் அட்வகேட் – லாயர்களுக்கு என்று சட்டம் இருந்து, அவர்கள் உடைகளைப் பார்ப்பீர்களானால் நீதிபதிகளைப்போல் கவுன் இருக்கும். சாதாரண வழக்கறிஞர்களுக்கு ஒரு மாதிரியான கவுன் இருக்கும். சீனியர் வழக்கறிஞர்கள் ஒரு ஜூனியர் மூலமாகத்தான் வக்காலத்து போட முடியும். சீனியர் வழக்கறிஞர்கள் நேரடியாக ஒரு வழக்கிலே இவருக்காக வாதாடுகிறேன் என்று வக்காலத்தை தாக்கல் செய்து விட்டு, அவர் ஆர்க்யூ பண்ண முடியாது. ஆக ஜூனியர்கள் ஏற்கெனவே அவரிடத்திலே இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. சீனியர் வழக்கறிஞர்கள் என்பவர்கள் – இப்போது நான் வழக்கறிஞராக இருக்கிறேன் என்று சொன்னால், நான் எந்த நீதிமன்றத்தில் ஆஜர் ஆக வேண்டுமோ அங்கே வக்காலத்து போட்டுவிட்டு ஆஜர் ஆக வேண்டும். சீனியர் வழக்கறிஞர்கள் கன்னியாகுமரியிலிருந்து டில்லி வரையில் வக்காலத்து போடாமலேயே, நான் இவருக்காக இந்த ஜூனியர் வழக்கறிஞருக்காக வாதாடுகிறேன் என்று ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு ஆஜராகலாம். ஆக சீனியர் வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் இருக்கிறதே அதற்காக சீனியர் வழக்கறிஞர்கள் சட்டத்திலே ஷெட்யூல் ஆஃப் பீஸ் என்று இருக்கிறது. அதற்கு உட்பட்டுத்தான் நீதிமன்றங்களிலே வாதாடுவதற்கு அவர்கள் பீஸ் வாங்க முடியும். எனவே அவர்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தை ஜூனியர்களுக்கு கொடுங்கள் என்று சொல்லுவதற்கு சட்டத்திலே இடமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-25

திரு. மா. சுந்தரதாஸ்: துணைத்தலைவர் அவர்களே, அப்படி அல்ல நான் சொன்னது. நம்முடைய கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப் பட்டிருப்பதைத்தான் நான் பேசுகிறேன். நான் சீனியர் லாயர்களைப் பற்றி சொல்லவில்லை. நம்முடைய கொள்கைக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், சீனியர் வழக்கறிஞர்களுக்கு 5000 ரூபாய், ஜூனியர் லாயர்களுக்கு 750 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. சீனியர் வழக்கறிஞர்களை எப்படி செலக்ட் பண்ணுகிறோம் என்பதுதான் என் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது தவறு. அது அப்படியல்ல. வனத்துறை அமைச்சரின் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே ஒரு சிறிய திருத்தம். ஒரு காலத்திலே பெரிய வக்கீல்கள் என்றால், சீனியர் லாயர்கள் என்று சொன்னால், வயதை வைத்து ஒரு வரைமுறை வைத்து அதைக் கருதிக்கொண்டு இருந்தார்கள். சீனியர் வழக்கறிஞர்கள் சட்டம் என்று ஒரு சட்டமே வந்து, இப்போது சீனியர் வழக்கறிஞர்கள் என்று சொன்னால் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேல் அந்த பாரில் பிராக்டீஸ் செய்திருக்கவேண்டும். சீனியர் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக ஒரு மனுவை அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குப் போட்டு, அந்த உயர்நீதி மன்றத்திலே இருக்கிற அதிகப்படியான வழக்கறிஞர்கள், அவரை சீனியர் வழக்கறிஞராக ஏற்றுக்கொளள்ளலாம் என்று பரிந்துரை செய்தபிறகுதான், அவரை சீனியர் வழக்கறிஞராக ஏற்றுக்கொள்வார்கள். எனவே, a senior Advocate is not one who is designated as such on the basis of his experience or age. He is designated as a senior counsel only as per rule, regulation and law. After the High Court gives approval, his name being enlisted as a senior lawyer, he will be designated as senior lawyer.

Thiru. M. SUNDARADOSS: I will read out the relevant portion in the policy Note.

"Training for Law Graduates:- The Government has sanctioned a scheme to impart three year training to 20 Law graduates every year under a senior advocate. During the period of training, each trainee will be paid a monthly stipend of Rs. 750/-. The annual income limit for eligibility under this scheme is Rs. 12,000/-. The senior advocate imparting this training will be paid an honorarium of Rs. 5,001/- per annum for a period of three years.`` எனவே நான் சீனியர் லாயர் வேண்டாம் என்று சொல்லவில்லை. சீனியர் லாயர் என்பதற்கு அமைச்சர் சொன்ன விளக்கம் புரிந்தது. நான் சொல்வது, சீனியர் லாயரிடம்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

போகவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய ஜி.பி.இருக்கிறார்கள். அவர்கள் சீனியராக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். நம்முடைய அட்வகேட்-ஜெனரலே ஒரு சீனியர் லாயர்தான். அவருக்கு நேரம் இல்லை. நம்முடைய ஜி.பி.இருக்கிறார்கள். அவர்களிடம் கொடுத்தால், இந்த 5000 ரூபாயை லாபப்படுத்தலாம் என்றுதான் சொன்னேனே தவிர, வேறல்ல. ஆகவே இதை மாற்றி, நம்முடைய சட்ட, பட்டதாரிகளுக்கு சான்ஸ் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல, மீண்டும் மீண்டும் பின்தங்கியவர்களைப் பொறுத்தவரையில், பல்வேறு சமுதாயங்களை பி.சி.யில் சேர்க்கவில்லை. நான் சேர்ந்திருக்கிற சமுதாயமும்...

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீனியர் வழக்கறிஞர் என்பது வேறு. ஆனால், ஒரு சாதாரண வழக்கறிஞர், சட்டக் கல்லூரியிலிருந்து படித்துவிட்டு வருகிறார் என்றால்-1965-ஆம் ஆண்டுக்கு முன்னாலே அப்பரண்டிஸ் ஆக்ட் என்று ஒரு சட்டம் இருந்தது-அதாவது சட்டக் கல்லூரியிலிருந்து பயின்று வந்தவுடனேயே எத்தனையோ வழக்குகளைக் கொடுத்து அந்த வழக்கைத் தொடுத்தவர்கள் எல்லாம் நடுரோட்டுக்கு வந்துவிடக்கூடாது என்று அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும், வழக்கு தொடுக்கப்பட்டவுடனேயே அவர்கள் நீதிமன்றத்திலே வழக்காடுவதற்குப் பயிற்சி பெற்று, அந்த வழக்கை நீதிபதிக்கு முன்னால் எப்படி வைக்கவேண்டும், எப்படி வைத்தால் வெற்றி பெறும் என்பதையெல்லாம் சொல்வதற்காகச் சட்டத்தின் நுணுக்கங்களை, சொல்லித் தருவதற்காக அந்தக் காலத்திலே சீனியர் வழக்கறிஞர்கள் அப்பரண்டிஸ்களை வைத்து இருந்தார்கள். இப்போதிருக்கிற பிரச்சினை என்ன என்று சொன்னால், சட்டப்படிப்பில் தேர்வு பெற்று வருகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்து, வாதாடி, தாங்கள் எடுத்துக் கொண்ட வழக்குகளில் வெற்றிபெறவேண்டும், வெற்றிபெற வைக்கவேண்டும் என்பதிலே அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்று சொல்வதிலே, சீனியர் வழக்கறிஞர்களிடத்திலே அவர்கள் பயிற்சி பெறுகிறபோது, ஜூனியர் வழக்கறிஞர்களுக்கு இந்த 500 ரூபாயோ மற்ற தொகையோ கொடுக்கிறார்களே தவிர, சீனியர் அட்வகேட்டுகளுக்கு எந்தப் பணமும் தரப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேயிருந்து தெரிந்து கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரதாஸ், ஒரே நிமிடம். சரியாக 7-30க்கு பேசி முடித்துவிடுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ்: இதையெல்லாம் நல்லமுறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிற்பட்டவர்கள்,

மிகப்பிற்பட்ட மக்களுக்கு அதிகமான நிதி உதவி செய்யவேண்டும் என்றும், பல்வேறு சமுதாயங்கள் மிகப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை; சேர்க்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கமிஷனை இப்போது போட்டு இருக்கிறீர்கள். அதிலே நான் சார்ந்துள்ள சமுதாயத்தைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய நாடார் சமுதாயத்தையும் மிகப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், கன்னியாகுமரி, திருநெல்வேலியில் பிரச்சினை இல்லை. ஆனால், ஈரோடு, பனமரத்துப்பட்டியில் இருக்கிற நாடார்கள் இன்று மிக மிக தீண்டாமை- 'அன்டச்சபிளிட்டி' என்ற நிலையில் இருக்கிறார்கள். ஒரு சிலர் வசதியாக இருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், பனமரத்துப்பட்டி, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருக்கிற நாடார்கள் மிகவும் 'அன்டச்சபிளிட்டி' முறையில் இருப்பதால், அவர்களை மிகப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 7-30

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட சில கருத்துக்களைத் தெரிவித்து, மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே அவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை விடுத்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து அறிந்து, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக ஏறக்குறைய 2 கமிஷன்கள் இதற்கு முன்னாலும் போடப்பட்டு, நிரந்தர கமிஷன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தினை நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமைக்க ஏற்பாடு செய்து உள்ளார்கள். அந்தப் பிரச்சினைக்கு அவர்கள் மனுக் கொடுத்தால் அந்த ஆணையம் அளிக்கின்ற பரிந்துரையின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்துப் பேசுகின்ற உறுப்பினர்கள் சரியாக 5 நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால், நீங்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது, கில்லட்டின் நடைமுறையை நான் பயன்படுத்த வேண்டி இருக்கும். நான் ஒரு கம்பேரிசனுக்காக சொல்கின்றேன். உறுப்பினர்கள் 5 நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேன். திரு. குப்பன்.

1994 ஏப்ரல் 29]

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் போற்றும் தாயே, தமிழே, சாதனை படைக்கும் சரித்திரச் சுடரே, வீர வரலாற்றின் வெற்றி வடிவமே, உழைக்கும் மக்களின் உயிரே, உணர்வே, மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, சாதாரண குடும்பத்திலே பிறந்த என்னை சட்டப்பேரவை உறுப்பினராக உருவாக்கி இந்த மாமன்றத்தில் என்னுடைய குரல் ஒலிக்கச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களிலே என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி, இந்த மீனளத்துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

நான் இதே மீனளத்துறையின் மானியக் கோரிக்கையிலே 2, 3 தடவை மீனவர்களுடைய நீண்ட நாள் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு இந்த மாமன்றத்திலே உரையாற்றியபோது, மீனவர்களுடைய நீண்ட கால கடன்களை புரட்சித் தலைவி அவர்கள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை ஏற்று 7 கோடியே 37 லட்சம் ரூபாயை தமிழகத்திலுள்ள அனைத்து மீனவ சமுதாய மக்களுடைய நீண்டகால கடன்களைத் தள்ளுபடி செய்த எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகத்திலுள்ள அனைத்து மீனவ சமுதாய மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே போல, இங்கே ஆண்டு ஒன்றுக்கு 2 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே கடந்த 1993-94-ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பாக 5,700 குடும்பங்களுக்கு 16 கோடி ரூபாய் செலவிலே திட்டங்களை அறிவித்து வீடுகள் கட்டிக் கொடுக்கக் கூடிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததற்கு நான் மீனவ சமுதாய மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோல, புயல், வெள்ளம் ஏற்பட்ட காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த ஆண்டு குறிப்பாக 30 லட்ச ரூபாயை—இந்த ஏழை எளிய மக்கள், அவர்களுடைய உடைமைகளை இழந்து தவிக்கின்றார்கள்; அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 30 லட்ச ரூபாயை—வாரிக் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, நம்முடைய மீனவ கூட்டுறவு சங்கத்திலே அங்கத்தினராக இருக்கக்கூடிய மீனவர்கள், 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் குறிப்பாக ஓய்வூதியம் கிடைக்கக்கூடிய வகையிலே இதே மாமன்றத்திலே ஒரு கேள்வியை எழுப்பியபோது அந்தக் கேள்விக்கு பதிலாக, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு மீனவ கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்கள் 50 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கணக்கு எடுத்து, மாதம் 100 ரூபாய் ஓய்வூதியம் கொடுக்கும் ஒரு திட்டத்தை எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஓய்வூதியத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவிலே நிறைவேற்றித் தர வேண்டும் என்பதையும் நான் இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த அமுதா என்ற பெண்மணி விளையாட்டிலே ஆசியாவிலேயே முதல் பரிசைப் பெற்றார் என்ற காரணத்திற்காக, அந்த அமுதா என்ற பெண்மணியை புரட்சித் தலைவி அழைத்து அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கத் தொகையாகவும், அவருக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இல்லத்தையும் கொடுத்து, அவருடைய தகப்பனாருக்கு வேலையும் கொடுத்து, அந்தப் பெண்மணிக்கு 60 ஆயிரம் ரூபாய் செலவிலே ஒரு சைக்கிளையும் வழங்கி, அந்தப் பெண்மணி விளையாட்டுத் துறையிலே எத்தனைக் காலம் இருக்கின்றாரோ அத்தனை செலவுகளையும் அரசே ஏற்கும் என்ற ஒரு திட்டத்தை அறிவித்த எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

பிற்பகல் 7-35

இன்றையதினம் கச்சத் தீவு பிரச்சினையை நான் இங்கே பேசியாக வேண்டும். கச்சத் தீவு என்பது 1974–ஆம் ஆண்டிற்கு முன்னால் நம்முடைய தமிழக மீனவர்கள், இராமேசுவரம் பகுதியிலுள்ள மீனவர்கள் அங்கே சென்று மீன்பிடி வலைகளை உலர்த்துவதும், அங்கேயுள்ள ஒரு மாதா கோவிலுக்கு விழாக்கள் கொண்டாடினார்கள் என்பதற்கும் வரலாறு இருக்கிறது. ஆனால், 1974-ஆம் ஆண்டிற்குப் பிறகு அன்றைக்கு இருந்த மத்திய அரசை ஆண்ட காங்கிரஸ் கட்சியும், அன்றைக்குத் தமிழகத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசும், இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுகிறபோது கச்சத் தீவை இலங்கைக்குக் விட்டு கொடுத்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு அந்தப் பகுதியில் மீனவர்கள் கச்சத் தீவை எட்டமுடியவில்லை. மேலும், அவர்கள் தொழில் செய்யக் கூட முடியாத நிலை இருக்கிறது என்பதையும் கோடிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதனால் தமிழக முதல்வர், எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இங்கே பாரத

மண்ணை, கச்சத் தீவை இலங்கைக்குத் தரைவார்க்கும் துரோகம் நிகழ்ந்து இருக்கிறது. இதை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எப்படியும் மீட்டுத் தருவோம். மீட்டுத் தருவதற்கு முயற்சி செய்வோம் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல் முதன் முதலாக புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு சென்னையில் 1991-ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று பேசுகிறபோது, நம்முடைய பாரதத்தின் ஒரு பகுதியான கச்சத் தீவை இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டதைக் கண்டித்து, கச்சத் தீவை மீண்டும் பாரதத்தோடு சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் மட்டுமல்லாமல், முதன்முதலாக பேசுகிறபோதும்கூட சொன்னார்கள். விடுதலை நாள் விழாவில் கோட்டை கொத்தளத்தில் நாட்டுக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றும்போது கச்சத் தீவை மீட்போம் என்று சூளுரைத்தார்கள். கச்சத் தீவு பிரச்சினைதான் இராமேசுவரம் பகுதி மீனவர்களுடைய பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்று தெரிவித்தார்கள். அதுமட்டுமல்லாமல், கச்சத் தீவை மீட்க மத்திய அரசோடு வாதாடுவோம்; தேவையானால் போராடவும்கூடத் தயார் என்று புரட்சித்தலைவி அவர்கள் இதே இடத்தில் சென்னை கோட்டையில் கொடியேற்றுகிறபோது தெரிவித்தார்கள்.

அதேபோல, 1992-ஆம் ஆண்டு கோட்டையில் கொடியேற்றியபோது மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக மீனவர்களைக் காக்க வேண்டியதன் அவசியம் பற்றி தெரிவித்தார்கள். தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில் எல்லாம் மத்திய அரசுக்குக் குரல் கொடுத்தார்கள். புரட்சித்தலைவி அவர்கள் குரல் கொடுத்ததன் விளைவாக, அவருடைய குரல் டெல்லியில் உள்ளவர்களுக்கு எட்டியதன் விளைவாக மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறைச் செயலாளர் அவர்கள் இலங்கைக்குச் சென்று பேச்சுவார்த்தை மேற்கொண்டார் என்பதை கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பேச்சுவார்த்தை நடத்துகிறபோது நம்முடைய மீன் வளத்துறை செயலாளர் அவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். அப்படி நம்முடைய செயலாளர் கலந்து கொண்டது இதுதான் முதல் தடவை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். புரட்சித்தலைவி அவர்களுடைய குரல்தான், குரல் வலிமைதான் இதற்குக் காரணம் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். இங்கே சட்டமன்றத்தில்கூட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, கச்சத் தீவை, தமிழகத்திற்கு மீட்டுத் தர வேண்டுமென்று டெல்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. க. குப்பன்: துணைத் தலைவர் அவர்களே, நிறைய கோரிக்கைகளைத் தெரிவிக்க வேண்டும். முடித்து விடுகிறேன். கச்சத்

தீவை தாரைவார்த்து கொடுத்த காரணத்தால்தான் தமிழக மீனவர்கள் அங்கே தொழிலுக்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. இலங்கை கடற்படையினர் மீனவர்களை சுட்டு வீழ்த்துகிறார்கள். சுட்டு வீழ்த்துவதால் மீனவர்கள் கடலுக்குச் சென்றால் திரும்ப முடியாத நிலை ஒருபுறம் இருக்க, மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்குதலுக்கு ஆளாகி அங்கேயிருந்து திரும்ப முடியாத நிலைமை இருக்கிறது என்பதை புரட்சித்தலைவி அவர்கள் உணர்ந்த காரணத்தால் தான் மத்திய அரசுக்குக் கண்டனக் குரலை எழுப்பி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 7-40

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே கடல் அரிப்பு இருக்கிறது. கடல் அரிப்பு என்பது என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, ஆண்டு ஒன்றுக்கு 150 அடி, 200 அடி என்று விழுங்கிக் கொண்டே வருகின்றது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரை, பொதுப்பணித் துறை மூலமாக வீராணம் குழாய்களைப் பதித்து 6 கோடி ரூபாய்ச் செலவிலே கூடுமான வரை அதற்கு சுவர்களை எழுப்பி இருந்தாலும்கூட, அது இன்னும் நின்றபாடில்லை. ஆனால், ஆண்டு ஒன்றுக்கு 200 அடி, 300 அடி என்று அது பாட்டுக்கு வந்து கொண்டே இருக்கிறது. இந்த ஆண்டு, நம்முடைய பட்ஜெட் விளக்கத்திலேகூட, சொல்லியிருக்கிறார்கள். சுற்றுப்புறச் சூழலிலேயிருந்து 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்கிறபோது, நான் நம்முடைய மீனளத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இந்தக் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நிரந்தரமான நடவடிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுக்க வேண்டும் என்பதையும், அதைத் தடுத்து நிறுத்தாவிடில், கடல் அரிப்பிலே திருவொற்றியூர் பகுதியே மூழ்கிவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 5 நிமிடம் என்பது தற்போது 10 நிமிடமாகிவிட்டது. நீங்கள் இன்னும் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? தினசரி 10 மணிக்கு மேல் சட்டசபையை நடத்திக் கொண்டிருக்க முடியாது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. க. குப்பன்: ஆகவே, இந்தக் கடல் அரிப்பைத் தடுத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், நம்முடைய மீனவ மகளிருக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

மூலமாக, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், அவர்கள் வியாபாரம் செய்வதற்காக ஆயிரம் ரூபாய்க் கடனை இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகம் முழுவதும் உள்ள மீனவர் கிராமங்களில் மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, எல்லோருக்கும் இந்தக் கடன் கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மீன்வளத் துறையில் வேலை செய்யக்கூடிய உதவி ஆய்வாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றம் செய்து தரவேண்டும். அதே அளவில் இளநிலை உதவிப் பொறியாளர்கள், ஜே.இ. அளவிலே உள்ளவர்களுக்கு இரண்டு சம்பள விகிதத்திலே சம்பளம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த ஆய்வாளர்களுக்கு சம்பள விகிதத்தை உயர்த்திக் கொடுக்கவில்லை. இந்தத் துறையில் 120 பேர்கள்தான் மீன்வளத் துறை உதவி ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சம்பளம் உயர்த்தப்பட்டு, அடிப்படைச் சம்பளம் கிடைப்பதற்காக ஆவன செய்யப்படவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு சென்னையிலிருந்து ஆந்திராவிற்கு மீன்பிடிக்கச் செல்லக் கூடிய, மீன்பிடி விசைப் படகுகளை ஆந்திராவிலே உள்ளவர்கள் எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல், எந்தவிதமான காரணமும் இல்லாமல், மடக்கிப் பிடித்து அந்தப் படகுகளிலே வரக்கூடிய மீன்களையும், இறால்களையும் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால், அந்தத் தொழிலைச் செய்ய முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இங்கேயிருந்து போகின்றபோது குறைந்தது 30 ஆயிரம் ரூபாய் செலவிலே எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். அப்படிப் போய் மீன்பிடித்து வருகின்ற மீன்களை அவர்கள் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட செயல்களை இன்றைக்கு ஆந்திராவிலே உள்ள மீனவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனைத் தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள மீனவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நம்முடைய மீனளத் துறையினுடைய ஆலோசனைக் குழு உறுப்பினர்களை மாண்புமிகு அமைச்சர் நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

11. அறிவிப்பு

டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பை ஒட்டி 30-4-1994 அன்று பேரவை அலுவல் நேரம் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை காலை சமூக நீதிக்கான ஓர் அரசியல் சட்டத்தையே நமக்கு வழங்கிய சட்ட மாமேதை, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை திறப்பு விழா நடைபெற இருக்கிறது.

அந்தச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிற காரணத்தால், உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவுள்ள அந்தச் சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ள வசதியாக நாளை பேரவை காலை 10 மணிக்குக் கூடுவதற்குப் பதிலாக 11-30-க்கு கூடலாம் என முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. பேரவையின் ஒப்புதலோடு நாளை காலை 11-30 மணிக்குப் பேரவை கூடும் என்பது அறிவிக்கப்படுகிறது.

12. அரசினர் தீர்மானம். விதி-32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய பேரவை விதியின்படி, பேரவையின் முதல் ஒரு மணி நேரக் கூட்டம் கேள்வி பதிலுக்காக ஒதுக்கப்படுகிறது என்கிற விதியை நாளையதினம் தளர்த்துவதற்குரிய தீர்மானத்தை முன்மொழியக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையின் முதல் 1 மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 30-4-1994 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.
பிற்பகல் 7-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது..

நாளை காலை 11-30 மணிக்குப் பேரவை கூடுகிறபோது கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதனைத் தொடர்ந்து பேரவையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். கோடிமாரி 5 நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளவும்.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என் உரையைத் துவங்குகின்றேன்.

நான் வணங்கும் என் தெய்வமாகிய, நமது தமிழக முதல்வர், புரட்சித் தலைவி இதய தெய்வம், தன்மானச் செம்மல் தந்தை பெரியாரின் தாய் மனம் தவழ்ந்த தமிழணங்கு, நன்மனச் செம்மல் நம் அண்ணா வழியிலே நயமாக நடக்கும் நல்மணி, பொன் மனச் செம்மல் கண்ட புரட்சிப் பெண்தகை, இன்று கண்போன்று தமிழகத்தை காத்துவரும் காவல் தெய்வம், ஏழை எளிய சமுதாயத்தை ஈடேற்ற வந்த ஏந்தல், எல்லாம் வல்ல இறைவனாகிய என் தெய்வமாகிய புரட்சித் தலைவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புத் தெய்வமே, உங்களால்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன் என்பதற்கும், நான் சார்ந்திருக்கக் கூடிய ஒட்டுமொத்த மீனவர்கள் சார்பிலும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீனவச் சமுதாயத்தைப் பெயரளவில் மதித்தார்கள். முடிந்தபோதெல்லாம் மீனவர்களுக்கு நன்மைகளைச் செய்தார்கள். அவர்கள் மறைவிற்குப் பின்னால் அவர்களைப் போலவே மீனவச் சமுதாயத்தைக் கைதூக்கி விடுவதற்குத் தாங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சிக்கும் ஒவ்வொரு மீனவரும் நன்றி பாராட்டுகிறார்கள்.

கச்சத் தீவை மீட்போம். கச்சத் தீவை மீட்போம் என்று நீங்கள் கொடுத்த குரல், தாயுள்ளம் கொண்டு மீனவர்களைக் காக்க நீங்கள் கொடுத்த குரல், ஒவ்வொரு மீனவனையும் நன்றி உணர்ச்சியோடு நினைக்க வைக்கிறது. நாடி நரம்புகளில் பாச உணர்வை ஊட்டுகிறது.

இலங்கை இராணுவத்தின் அட்டூழியம்: கச்சத்தீவு மட்டும் மீட்கப்படுமானால் அது மீனவச் சமுதாயத்திற்குச் செய்கின்ற மிகப் பெரிய சேவையாக இருக்கும். அந்தத் தீவைத் தமிழக மீனவர்களுக்கு மீட்டுத் தரும் முயற்சியைத் தாங்கள் தொடர்ந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். உங்களால் முடியாது என்கிறபோது யாராலும் முடியாது என்பதை இந்த மன்றத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை 100-க்கு மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 4,

5 மாதங்களுக்கு முன்பு 7 மீனவர்கள் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தாங்கள் அறிவீர்கள்.

ஆகவே, தவித்து அழுது புலம்பிக் கொண்டிருக்கின்ற ஏழு குடும்பங்களின் அழுத கண்ணீரைத் துடைக்க வேண்டி மீனவர்களின் காவல் தெய்வமாக விளங்கும் என் தெய்வமாகிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த ஏழு மீனவர்களுக்கும் முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மீன்பிடி லைசென்ஸ் இரத்தாக வேண்டும். தென் மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் விசைப்படகில் சென்றபோது மீன்பிடிக்க லைசென்ஸ் கேட்கப்படுகிறார்கள். இந்தியக் கடல் பாதுகாப்புப் படையினரால் மிகவும் அலைக்கழிக்கப்படுகிறார்கள். தேவையில்லாத மீன்பிடி லைசென்ஸைக் கேட்டுத் தொல்லைப்படுத்துகிறார்கள். அவர்கள் பேசுகின்ற மொழி இந்தி. புரட்சித் தலைவி வழிவந்த மீனவர்களுக்கு இந்தி தெரிந்திருக்க முடியுமா? மீனவர்கள் ஒன்றைச் சொல்ல கடல் பாதுகாப்புப் படையினர் வேறொன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். டீசல் சிறிது கூடுதலாக வைத்திருந்தால் அதற்காகவும் மீனவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். நாகப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் போன்ற பகுதிகளிலே பாதுகாப்புப் படையினரின் அளவுக்கு மீறிய அராஜகச் செயலால் அந்தப் பகுதிகளில் மீன்பிடிக்க முடியாமல் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைச் சீர்குலையச் செய்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கச்சத்தீவு மட்டும் மீட்கப்பட்டுவிட்டால் இத்தகைய இடையூறுக்கு வழியே இருக்காது என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். டீசல் கடத்துபவர்கள் தூக்கிலிடப்படுவது நியாயம். லைசென்ஸ் என்ற பெயரில் மீனவர்கள் அலைக்கழிக்கப்படக் கூடாது என்பது எனது வேண்டுகோள்.

பிற்பகல் 7-50

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலவருக்குச் சிலை வேண்டும். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் வாழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் தந்தைப் பெரியாருக்கு வழிகாட்டி, திரு.வி.க.வின் ஆசிரியர். பேரறிஞர் அண்ணா மதித்த மிகப் பெருந்தலைவர். இன்றுள்ள லேடி வெலிங்டன் கல்லூரி அவர் வாழ்ந்த வீடாகும்.

1892-இல் பிரிட்டிஷ் பேரரசால் அவர் வீடு பறிமுதல் செய்யப்பட்டு அந்த இடத்தில்தான் வெலிங்டன் கல்லூரி கட்டப்பட்டது. இந்த மேதை தான் இந்தியாவில் முதன்முதல் மே தினத்தைக் கொண்டாடியவர். காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சுயராஜ்ய கட்சி, சமதர்ம கட்சி, சுயமரியாதை சமதர்ம கட்சி ஆகிய கட்சிகளுக்கெல்லாம் தொண்டு

TRUTH ALONE TRIUMPHS

செய்த அந்த மேதையை அதுவரை யாரும் நினைத்துப் பார்த்து எந்த மரியாதையும் செய்ததில்லை. மீனவர்களுடைய அன்னையாகிய நீங்கள் தான் எந்த இடத்தில் பிரிட்டிஷ் அரசால் சிங்காரவேலரின் வீடு பறிமுதல் செய்யப்பட்டதோ அந்த வெலிங்டன் வளாகத்திலேயே சிங்காரவேலருக்கு சிலை எடுத்து சிறப்பு செய்ய வேண்டும். அரசு சார்பிலே அதைச் செய்ய வேண்டும். இதுவரை யாரும் செய்யாத சாதனையை நீங்கள் செய்ய வேண்டும். இதை நீங்கள்தான் செய்ய வேண்டும். உங்களால்தான் செய்ய முடியும். இந்த ஒரு சிலை மட்டும் அரசு சார்பில் எடுக்கப்படுமானால் தமிழகத்திலுள்ள ஒட்டு மொத்த மீனவர்களும் கட்சி மாச்சரியம் கடந்து, அரசியல் கடந்து உங்களை அன்னையாகத் தங்கள் நெஞ்சங்களிலே வைத்து வணங்குவார்கள் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் தங்கள் திருக்கரத்தால் திறந்து வைக்கவேண்டுமென்பது எனது வேண்டுகோளாகும்.

மீனவர்களைத் தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும். நகரத்தில் வாழ்கின்ற ஒரு சில மீனவர்களை வைத்துக் கொண்டு மீனவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து விட்டது என்று பலரும் நினைக்கிறார்கள். மீனவர்களில் 95 விழுக்காடு வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள், 99 விழுக்காடு மீனவர்கள் படிக்காதவர்கள். இந்தச் சமுதாயத்தைப் பிற்பட்ட சமுதாயத்தில் வைத்து நினைத்துப் பார்ப்பது என்பது மிகமிகத் தவறானது. இந்தியாவிலேயே முதல் முதல் வந்த கல்லூரி சென்னை மாநிலக் கல்லூரி. அந்தக் கல்லூரியைச் சுற்றிலும் வாழ்கின்ற மீனவர்களிலே ஒரு படித்த பெண் பட்டதாரி கூட இல்லை என்பது நெஞ்சைச் சுடக் கூடிய உண்மை. தமிழகத்தில் இன்ஜினியரிங், மருத்துவம் போன்ற படிப்புகளில் சேருகின்ற பிளஸ் 2 மாணவரின் கடைசி மதிப்பெண் 930. தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக உள்ள மீனவ மாணவர்களின் உயர்ந்த மதிப்பெண்ணே 900 தான். படிப்பு வாசனை இல்லாத மீனவப் பெண்கள் முன்னேற வேண்டுமானால் குறைந்த பட்சம் மீனவர்களைப் பழங்குடி மக்கள் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலோ சேர்க்க வேண்டும். மீனவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசால் பரிவோடு கவனிக்கப்பட்டு முன்பிருந்த தி.மு.க. ஆட்சியினால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. காருண்யமிக்க என் தெய்வத்தின் ஆட்சி பரிந்துரை செய்து மீனவர்களைத் தாழ்த்தப்பட்ட பட்டியிலில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட கன்னியாகுமரி பகுதியில் இப்போதும் தாழ்த்தப்பட்ட பட்டியலில்தான் இருக்கிறார்கள்.

மீனவர்களுக்கு தனித் தொகுதிகள் பிரிக்கப்படவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதிகளைப் பிரித்துக் கொடுத்து டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரும் சேவையை

செய்தார். தமிழக கடற்கரை ஓரமாகக் கிழிந்த நாராக ஒதுக்கப்பட்டு கிடக்கும் மீனவர்களுக்குத் தாழ்த்தப்பட்டவர்களுடைய தனித் தொகுதியைப் போல மீனவர்களுக்கும் தனித் தொகுதி மிக மிக அவசியமாகும். காருண்யமிக்க அன்னை முதலமைச்சர் அவர்களுடைய ஆசியினால் தமிழகத்திலே 3 பேர் சட்டமன்ற உறுப்பினர் ஆகிவிட்டோம். அதில் ஒருவர் அமைச்சராகவும் ஆகியிருக்கிறார் இவைகளெல்லாம் என் தெய்வமாகிய புரட்சித் தலைவியின் அருளால்தான். என் தொகுதியிலும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு மீனவர்களுடைய தனித் தொகுதிகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். கோடிமாரி: மண்ணின் மைந்தர்களுக்குப் பாதுகாப்பு கடற்கரைப் பகுதியில் சுற்றுலா வாரியங்கள், தொழிற்சாலைகள், இராக்கெட் தளங்கள் போன்றவை அமைக்கப்படுகின்றன. இவை வருவதனால் உண்மையிலேயே பாதிக்கப்படுபவர்கள் இந்தியாவிலும் தமிழகத்திலும் மண்ணின் மைந்தர்களான மீனவர்களாகத்தான் இருக்கிறார்கள். வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தை அடித்துக்கொண்டு போவதைப்போல வருகின்ற தொழிற்சாலைகளும், சுற்றுலா வாரியங்களும் மீனவர்களை அப்புறப்படுத்தி விடுகின்றன. ஸ்ரீ ஹரிகோட்டாவில் அமைக்கப்பட்ட இராக்கெட் தளத்தினால் மீனவர்கள் அப்புறப்படுத்தப்பட்டு, தேவையில்லாத நெருக்கடிக்கு உட்படுத்தப்பட்டு, பழவேற்காட்டில் இரத்த ஆறு ஓடிய நிகழ்ச்சியை நாம் மறக்க முடியுமா? ஆலைகள் வந்தாலும், தொழிற்சாலைகள் வந்தாலும் அங்குள்ள மீனவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தந்து மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு தனிக்கவனம் செலுத்தவேண்டும். மண்ணின் மைந்தர்கள் காக்கப்படல் வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

பிற்பகல் 7-55

ஆழ்கடல் மீன்பிடிப்பு, அண்மைக் காலத்தில் மத்திய அரசு ஒப்புதலோடு கீழ்த்தஞ்சை மாவட்டம் பழையாறு துறைமுகத்தில் அமெரிக்க அரசின் உதவியோடு ஆழ்கடல் மீன்பிடிப்பு திட்டத்தைத் தொடங்கப்போகிறார்கள். தனிப்பட்டவருக்கு உரிமையான அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை மீனவர்கள் பெற, அரசு கண்ணும் கருத்துமாக இருந்து செயல்படவேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கான மீன்பிடிக் கார்ப்பரேஷன் அமைக்க வேண்டும்.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. தவசி.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளம், பிற்பட்டோர் நலம், மிகவும் பிற்பட்டோர் நலம், சீர் மரபினர் ஆகிய மானிய கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தங்களுக்கு உரித்தாக்குகிறேன். இந்த நல்ல வேளையில் புரட்சித் தலைவியின் திசைநோக்கி வணங்கி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் 69% இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்திய எங்களுடைய இதய தெய்வம், எங்களுடைய கழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சமீபத்திலே உச்ச நீதிமன்றம் 50% இடத்திற்கு மேல் வழங்கக்கூடாது என்று தீர்ப்பு கூறியுள்ளது மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில். ஆனால் தமிழகத்திலே 69% ஒதுக்கீட்டை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை இங்கே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்துள்ளார்கள். தமிழக அமைச்சரவைக் கூட்டத்திலும் தமிழக சட்டப் பேரவை கூட்டத்திலும் 69% இட ஒதுக்கீடு தொடரத் தேவையான திருத்தங்களை அரசியல் சட்டத்தில் கொண்டுவர வேண்டுமென்று, தீர்மானங்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக புரட்சித் தலைவி அவர்களின் வேண்டுகோளின் படி தமிழகத்திலே ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தினை 6 1/2 கோடி மக்களின் நெஞ்சில் நிறைந்த தலைவி அவர்கள் நடத்திக் காட்டினார்கள். மேலும் அனைத்துக் கட்சிகள் மற்றும் அனைத்து சமுதாய அமைப்புக்களையும், சட்டமன்றத்திலே இடம்பெறாத கட்சிகளைக்கூட கூப்பிட்டு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய பிரதமர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். தமிழக சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி 69% ஒதுக்கீட்டிற்கு தேவையான சட்டத்தை நிறைவேற்றி இந்தியக் குடியரசு தலைவரின் ஒப்புதல் வேண்டி அனுப்பியுள்ளார்கள். மண்டல் கமிஷன் அறிவித்துள்ள சலுகையில், தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள 41 இனங்களில் 11 இனங்கள் விடப்பட்டுள்ளன. இதை மண்டல் கமிஷன் நடைமுறைப்படுத்தும்போது தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள 41 இனங்களும் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன். சீர்மரபினர்

பொறுத்தமட்டிலே மதுரை மாவட்டத்திலும், அண்ணா மாவட்டத்திலும் சேர்ந்து சீர்மரபினருக்கென தனியான சீரமைப்புத் துறை ஒன்று இயங்கி வருகிறது. அது ஒரு தனித்துணை ஆட்சியரின் கீழ் இயங்கி வருகிறது. அங்கே கிட்டத்தட்ட ஆரம்பப் பள்ளிகள் 240 இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள் 20 இருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகள் 5 இருக்கின்றன மொத்தம் 265 பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வேளையில் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு சுமார் 8 உயர்நிலைப் பள்ளிகளையும் 2 மேல்நிலைப் பள்ளிகளையும் கடந்த ஆண்டு கொடுத்தமைக்காக நான் நன்றி சொல்ல கடமைப்பட்டவனாக உள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே வேளையில் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் இதைச் சீர்தூக்கிப் பார்க்கின்ற வேளையில் அவ்வாறு கொடுக்கப்பட்ட பள்ளிகளில் இன்னும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன். 8 தலைமை ஆசிரியர்கள் தவிர, மற்ற ஆசிரியர்கள் எல்லாம் நியமிக்கப்பட வேண்டிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆனால் அதற்கு முக்கிய காரணம் அங்கே 1968-லிருந்து அந்தச் சீர்மரபினருக்கு என்று ஒதுக்கப்படக்கூடிய இடங்கள் 100-க்கு 100 சீர்மரபினரைச் சேர்ந்த மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதை மாற்றி திடீரென ஒரு உத்தரவு வந்திருக்கிறது. அனைத்து சமுதாய பிரிவினரும் அதில் இடம் பெற வேண்டும் என்ற குறிப்பு ஆணை அரசு அளித்திருப்பதை மாற்றி, 1968-ஆம் ஆண்டு இருந்ததைப் போலவே இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துக் கூறுகிறேன். கடந்த 6 மாத காலமாக தனி துணை ஆட்சியர் அவர்கள் பணி ஓய்வு பெற்று இன்னும் நிரப்பப்படாமல் கல்வி அதிகாரியும் நியமிக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவர்களையும் கூடிய விரைவில் நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அடுத்தபடியாக, இங்கே கடந்த ஆண்டில் 8 உயர்நிலைப் பள்ளிகளைக் கொடுத்த புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஏத்தகோவில், கதிர்நரசிங்கபுரம், கோவிலாம்குளம், தாடையம்பட்டி, பொம்மையேசுப்பட்டி போன்ற ஊர்களில் உயர்நிலைப்பள்ளியை உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

பிற்பகல் 8.00

பாப்பாபட்டி, விளாம்பட்டி, செக்கானூரணி போன்ற இடங்களில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடக்குப்பட்டியிலும் சுளிவைச்சாம்பட்டியிலும் உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் பெண்களுக்கு ராஜதானி, சாத்தான்குடி, நாட்டார்மங்கலம் போன்றவைகளுக்கு விடுதி வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சீர்மரபினர் என்று சொல்லக்கூடிய இந்த வகுப்பினர், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 1968-ஆம் ஆண்டு முதல் கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட சலுகைகள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்பதை இந்த மா மன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் என்னுடைய தொகுதியில் பிரமலைக்கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் (மணியடிக்கப்பெற்றது) தான் எம்.பி.சி. என்ற சலுகையைப் பெறுகிறார்கள். அதே நேரத்தில் மதுரை, பிரிக்கப்படாத இராமநாதபுரத்தில் இருக்கின்ற அங்கே இருந்து வருகின்ற அந்த மறவர்களுக்கு அந்த எம்.பி.சி. சலுகைக் கிடைக்கவில்லை. எனவே, அந்தச் சலுகையை மதுரை மாவட்டத்தில் உள்ள மறவர்களுக்கும் அளிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன் என்று எடுத்துக்கூறி எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த போற்றுதலுக்கும், நல்ல பாராட்டுதலுக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவருடைய ஆவி என் மேலே. ஏனெனில் என்னை அவர் அபிஷேகம் செய்துள்ளார். எளியோருக்கு நற்செய்தி சொல்லவும்; ஒடுக்கப்பட்டோர் உரிமை வாழ்வு பெறவும்; சிறைப்பட்டோர் விடுதலை அடையவும்; ஆண்டவருடைய அருள் பெறும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார் என்று பைபிள் வாசகங்களுக்கு ஏற்ப ஒடுக்கப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மிகவும் பிறப்படுத்தப்பட்டோர், மக்களுக்காக உழைக்க என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையை வரவேற்று பேசுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கிருத்துவ தாழ்த்தப்பட்டோரை தாழ்த்தப்பட்டோர்

பட்டியலில் சேர்ப்பதற்கு இன்றைக்கு மத்திய அரசு மறுக்கிறது. ஆனால் தமிழ்நாடு அரசு தாழ்த்தப்பட்ட கிருத்துவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வைத்துள்ளது. அதனை மாற்றி தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தாழ்த்தப்பட்ட கிருத்துவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இன்றைக்கு வன்னிய கிருத்துவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான சலுகை வழங்கப்பட அரசு ஆணை பிறப்பித்தது. உயர்நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக அந்த ஆணை செயல் இழந்துவிட்டது. வன்னிய கிருத்துவர்களுக்கு சலுகைகள் வழங்கிட அரசுக்கு உரிமையுண்டு என்றும், முறையான பரிசீலனைக்குப் பின்னர் சலுகைகள் வழங்கிடுவதில் தங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை எனவும் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு கூறியுள்ளது. தமிழக அரசு முறையான பரிசீலனைக்கு இந்தப் பிரச்சினையை உட்படுத்தி அடுத்த கல்வி ஆண்டு துவங்குவதற்கு முன்னால் மீண்டும் இந்தச் சலுகையை வன்னிய கிருத்துவர்களுக்கு வழங்கிட தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிருத்துவ மறவர்கள், கிருத்துவ கள்ளர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் அளிக்க வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். தேர்வுக்கு தயாரிக்கக்கூடிய முன் பயிற்சி மையங்களில் ஒன்றாக திருச்சிராப்பள்ளியை தேர்வு செய்து புதிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., பயிற்சி நிலையம் திருச்சியில் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 8-05

அடுத்தபடியாக, எங்களுடைய திருச்சி நகரம், இன்று மாநகரமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஆக்கப்பட்டுள்ளது. திருச்சி நகரின் அருகிலுள்ள பி.எச்.இ.எல்., கைலாசபுரம் டவுன்ஷிப்பை, திருச்சி மாநகரத்தோடு இணைத்து பி.எச்.இ.எல். ஊழியர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். திருச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரிலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். அதற்கென உரிய முன் தொகையினை திருச்சி மாவட்ட வளர்ச்சிக் குழு தருவதற்குத் தயாராக இருக்கிறது. அருள்கூர்ந்து

இந்தக் கல்வி ஆண்டிலேயே மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரிலே திருச்சியிலே தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருச்சி நகரிலுள்ள, நகராட்சி குடிநீர்க் குழாய்கள், பிரிட்டிஷ் காலத்தில் போடப்பட்ட அந்தக் குழாய்கள், 50 வருடங்களுக்கு மேல் ஆகிறது. அந்தக் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்து உள்ளன. அதனால், துரைசாமிபுரம், மல்லிகைபுரம், காஜாபேட்டை, பெல்ஸ்கிரௌண்ட், முதலியார்சத்திரம் போன்ற இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு. காவேரி ஓடினாலும், திருச்சியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனை உடனடியாகச் சரி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

லண்டன் நகரில் தேம்ஸ் நதி ஓடுவதைப்போல, திருச்சி நகரின் மத்தியிலே உய்யக்கொண்டான் என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றில் கோரைகள் முளைத்து நீரோட்டம் தடையாக உள்ளது. அதனை சரிபடுத்த வேண்டுகிறேன். திருச்சி, காந்தி மார்க்கெட் தமிழ்நாட்டின் மிகப் பெரிய மார்க்கெட்டுகளில் ஒன்றாகும். தினசரி தேங்கிக் கிடக்கும் குப்பைகள் மிகுந்த அசுத்தத்தை ஏற்படுத்துகிறது. மார்க்கெட்டை தினசரி சுத்தம் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி நகரில் பல வருடங்களுக்கு முன்பு வாய்க்கால்கள் நிறைந்து இருந்தன. இப்போது அவைகள் தூர்க்கப்பட்டு சாக்கடைகளாக மாற்றப்பட்டுள்ளன. காராநல்லூர், சூரஞ்சேரி, வரகனேரி, துரைசாமிபுரம், நர்சர்ஸா பள்ளிவாசல் போன்ற இடங்களில் இந்த வாய்க்கால்கள், சாக்கடைகளாக மாற்றப்பட்டு சுத்தப்படுத்தப்படாமல் உள்ளன. ஆகவே, நமது அரசு அந்த அசுத்தத்தை சுத்தப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருச்சிராப்பள்ளி நகரம் இன்றைக்கு மாநகரமாக மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய கருணையால் மாற்றப்பட்டுள்ளது. அதற்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியின் சிறப்புமிக்க ஆட்சியில் இந்நகரம் எழில்மிகு நகராக விளங்க எல்லா வழிகளையும் செய்ய அன்போடு வேண்டுகிறேன். இந்த மானியத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, ஆண்டவருடைய ஆவி என் மேலே இருக்கிறது. ஏனெனில், என்னை அவர் அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், ஒடுக்கப்பட்டோர் உரிமை வாழ்வு பெறவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும், ஆண்டவருடைய அருள்தரும் மாண்பினை அறிவிக்கவும் என்னை அனுப்பினார் என்ற பைபிள் வாசகத்தைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளம், பிற்பட்டோர் நலம், மிகவும் பிற்பட்டோர் நலம், சீர்மரபினர் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன்வளம் சம்பந்தமாக நான் பல சந்தர்ப்பங்களிலே பேசி இருக்கிறேன். 1983-க்குப் பின்னால் இலங்கையிலே நடந்த எல்.டி.டி.இ. சம்பந்தப்பட்ட சம்பவங்களுக்குப் பிறகு, இராமேஸ்வரம் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இன்னல்கள், அதிலிருந்து அந்த மக்களை தமிழக அரசு பாதுகாக்க முடியாத நிலையில், மத்திய அரசும் நமக்கு உறுதுணையாக இல்லாத நிலையில் அந்த மீனவர்கள் எந்த அளவிற்குச் சிரமப்பட்டார்கள் என்பதைப் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களிலே பேசி இருக்கிறேன். ராஜீவ்காந்தி அவர்கள் இறந்த உடனேயே எல்.டி.டி.ஈ.-னரைத் தடுப்பதற்காக, அவர்கள் இந்தியாவிற்குள் வரக் கூடாது, இந்தியாவிலே இருப்பவர்கள் வெளியே செல்லக் கூடாது என்கிற நோக்கத்தோடு தமிழக அரசு ஒரு உத்தரவு இட்டது. 5 நாட்டிக்கல் மைல்ஸ் வரைதான் மீனவர்கள் செல்லவேண்டும் என்று போட்டார்கள். அன்றைக்கே நான் பேசினேன், 5 நாட்டிக்கல் மைல்ஸ் என்பது, 5 கடல் மைல் தூரம்; அங்கே மீனவர்கள் சென்றால், மீன் கிடைக்காது என்று. அவர்களால் மீன் பிடிக்க முடியாத நிலையில், போராட்டம் நடத்தினார்கள். அன்றைக்கே நான் சொன்னேன். ஸ்ரீமாவோ பண்டார நாயகா-சாஸ்திரி ஒப்பந்தத்திலே 22 கிலோ மீட்டர் தூரம், இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கலாம் என்ற ஷரத்து இருக்கிறது. 22 கிலோ மீட்டர் தூரம் சென்றால் கச்சத்தீவை அடைந்து விடலாம். ஆகவே, இந்தத் தமிழக அரசு இந்த மன்றத்திலேயே ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசு மறுபடியும் கச்சத்தீவைப் பெற்று, நமது மீனவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு ஒரு தீர்மானம் போட வேண்டுமென்றுகூடப் பேசினேன்.

பிற்பகல் 8-10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கட்டுமரங்கள், நாட்டுப்புறப் படகுகள், வல்லங்கள் போன்றவைகள்தான் மூன்று நாட்டிக்கல் மைலுக்கு அப்பால் செல்லக்கூடாது என்கிற ஒரு விதியை, Tamil Nadu Marine Fishing Regulation Act, 1983 என்ற சட்டத்தின் கீழே கொண்டு வந்தார்கள், 1983-ஆம் ஆண்டில். விசைப் படகுகள் அதற்குமேல் செல்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கச்சத் தீவுக்கு ஏற்கனவே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நமது தமிழ்

நிலத்தினுடைய ஒரு பகுதி, அந்தத் தமிழ் நிலத்தினுடைய ஒரு பகுதி கடந்த 1974-ஆம் ஆண்டுதான் அந்தத் தமிழ் நிலத்தினுடைய இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது என்பது நாமறிந்த ஒன்று. அப்பொழுது 1974-ஆம் ஆண்டு யார் ஆட்சியிலே இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அப்பொழுது அந்தப் பிரச்சினை குறித்து ஆட்சேபம் தெரிவித்திருந்தால் நிச்சயமாக இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் விசுவரூபம் எடுப்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இன்றைக்கு அந்தக் கச்சத்தீவை மீட்டே தீருவோம் என்று சுதந்திர நன்னாளிலே சபதம் ஏற்றதோடு அல்லாமல், இந்த மாமன்றத்திலேயே வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை, கச்சத்தீவை மீட்பது நம்முடைய உரிமை என்பதை நிறுத்தி, அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தவர் நம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் கச்சத்தீவைப் பெற்றே தீருவேன் என்ற சபதம் எடுத்து, தீர்மானத்தை இந்தச் சபையிலே நிறைவேற்றி அனுப்பினார்கள் என்பது தெரியும். இருந்தாலும் அது மத்திய அரசு தீர்மானிக்க வேண்டியது. மத்திய அரசு தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்க்கிறது.

அன்றாடம் மீனவர்கள், இராமேஸ்வரத்திலிருந்து செல்லுகின்றவர்கள் நமது கடல் பகுதியிலே மீன் பிடித்தால்கூட, நமது இந்தியக் கடற்படையினர் படகினையும் எடுத்துக் கொண்டு, அவர்கள் பிடித்த மீன்களையும் எடுத்துக் கொண்டு இலங்கைக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். நமது கடற்படை நமக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லுகின்றவர்கள் நமது எல்லையிலே இலங்கை மீனவர்கள் வந்தால்கூட இதுவரை ஒருவரையும் பிடித்துக்கொண்டு வந்ததாகவோ அல்லது அவர்கள்மீது நடவடிக்கை எடுத்ததாகவோ தெரியவில்லை.

மீனவர்கள் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று சொன்னார்கள். சுட்டுக் கொல்லப்பட்ட குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நிதியுதவி செய்தார்கள். இன்னும் மூன்று குடும்பங்களுக்கு நிதியுதவி கிடைக்கவில்லை என்று நானே முதல்வரவர்களுக்கு மனு அனுப்பியிருக்கிறேன். இன்னும் 3 குடும்பங்களுக்கு அந்த நிதியுதவி கிடைக்கவில்லை.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருந்தால் மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் நிவாரண உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: அதுமட்டுமல்லாமல், இராமேஸ்வரத்திலே பிடிக்கின்ற மீனவர்களுடைய மீன்கள் நமது மாநிலத்திலேயே சுத்திகரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டால் அந்த இலாபம் நமக்குக் கிடைக்கும். மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். கேரளாவைச் சேர்ந்தவர் அங்கே அந்த மீன்களை வாங்கி பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி நமது மீனவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இலாபத்தை, அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தமிழக அரசு ஒரு மாற்று வழி செய்து அரசே அந்த சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் தொடர்ந்து மீனவர்களுக்கு இலங்கை அரசின் கடற்படை தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவர்களை அந்தத் தொல்லையிலிருந்து மீட்பதற்காக மத்திய கடல் பாதுகாப்புப் படை இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர, நமது மீனவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்ததாக இதுவரையில் நான் பத்திரிகையிலே பார்த்தது இல்லை; நடைமுறையிலும் பார்த்தது இல்லை.

இதையெல்லாம் கருத்திற்கொண்டு அந்த மீனவர்களைக் காப்பாற்றுவதற்குத் தமிழக அரசு ஒரு நல்ல திட்டத்தை வகுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலத்தின் கட்டாயம் கருதி, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் சம்பந்தமாக நான் பேசலாம் என்று நினைக்கிறேன்.

பிற்பகல் 8-15

சீர்மரபினர் என்று சொல்லுகின்றவர்களுக்குத் தனியாக தனித் துணை ஆட்சியரை அமைத்து, கள்ளர் சீரமைப்புத் துறை என்ற ஒன்று இயங்குகிறது. தமிழகத்திலே சீரமைப்புத் துறையும் இருக்கிறது என்று சொன்னால் அது மதுரையிலே இருக்கின்ற பிறமலைக் கள்ளர்களுக்காக ஏற்பட்ட துறை.

அது எப்படி வந்தது என்ற சரித்திரத்தைப் பார்க்கிறபோது, 1920-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களை எதிர்த்து அவர்கள் போராடினார்கள். அதற்காக ஆங்கிலேயர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி பெருங்காமநல்லூர் என்ற கிராமத்தில், 15 பேர் உயிரிழந்தார்கள். அதற்குப் பிறகு, இந்த வீரமிக்க சமுதாயத்தையும் மறவர்களையும் அடக்க வேண்டுமென்ற முறையில், வேகச் சட்டம், குற்றப் பரம்பரைச் சட்டம் என்று கொண்டு வந்து அவர்களை அடக்கினார்கள். அதற்குப் பின்னால், அந்த வீரமிக்க பரம்பரையினை எப்படி திருத்துவது என்று நினைத்து, முதலிலே கல்வி ஸ்தாபனம் ஆரம்பிக்க வேண்டுமென்று கள்ளர் சீரமைப்புத் துறையின் கீழ், கல்வித் துறையிலே, பள்ளிகளை ஆரம்பித்தார்கள். இப்போது கள்ளர்

1994 ஏப்ரல் 29] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

சீரமைப்புத் துறையின் கீழ் 255 பள்ளிகள் இருக்கின்றன. மாணவர் விடுதிகள் ஏறத்தாழ 60 இருக்கின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் 800-க்கு மேற்பட்ட மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அதில், 119 மாணவர் விடுதிகள்தான் அரசுக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன என்று கொள்கைக் குறிப்பேட்டிலே இருக்கிறது. பாக்கியெல்லாம் வாடகைக் கட்டிடத்திலே இருக்கின்றன. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மாணவர்கள்கூட வாடகைக் கட்டிடத்திலே இருக்கலாம். பெண்களை வாடகைக் கட்டிடத்திலே வைத்திருப்பார்களேயானால், அவர்களுக்குக் குளிக்கிற மற்றும் இதர வசதிகள் செய்து தரப்பட முடியவில்லை மேலும் 16 பெண்கள் விடுதிகள் இன்னும் அடுத்த ஆண்டு ஆரம்பிப்பதாக இருக்கிறீர்கள். மாணவர்களுக்கு ஆரம்பிக்கிற விடுதிகள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே மாணவியர்கள் கஷ்டப்படக் கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், எதிர்காலத்திலே திறக்கப்பட இருக்கிற விடுதிகள் எல்லாம், மாணவியர் விடுதிகளாக இருக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவை அளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கடந்த ஆண்டு மாணவியர் விடுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட மாணவியர் விடுதிகள்தான் திறக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல; தனியார் விடுதிகளில் இயங்குகிற அந்த விடுதிகளெல்லாம் அடிப்படை வசதிகளைக் கட்டாயம் பெற்றே இருக்க வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவினை இட்டதன் காரணமாக இன்றைக்கு அந்த விடுதிகளிலே அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. சில விடுதிகளிலே அந்த விடுதி உரிமையாளர்கள், எங்களுக்குப் பணம் இல்லை என்று கேட்டால்கூட 'டாப்செட்கோ' மூலமாக. அதாவது தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக அவர்களுக்குப் போதிய பணத்தையும் கொடுத்து, வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து, அவ்வாறு கொடுக்கிற அந்தப் பணத்தையும் வாடகையில் நாங்கள் கழித்து விடுகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. நான் சொல்வதெல்லாம், இனிமேல் பெண்கள் பள்ளி ஆரம்பிப்பது என்று சொன்னால், விடுதியையும் சேர்த்துக் கட்ட வேண்டும் என்பது

ஏனென்று சொன்னால், நான் அனுபவத்திலே பார்த்திருக்கிறேன். திருமங்கலத்திலே ஒரு மாணவியர் விடுதி இருந்தது. வாடகைக் கட்டிடத்திலே இயங்கியது. அவர்களுக்குக் குளிப்பதற்கு வசதி இல்லை. திருமங்கலத்திலே வெளியே இருக்கிற ஒரு ஆற்றிலே குளிக்கச் செல்வார்கள். அத்தனை மாணவியரையும் அங்கே இருக்கிற காப்பாளர் அழைத்துச் செல்வார். 10 மாணவியர் குளிக்க வேண்டுமென்று சொன்னால், 4 மாணவியர் சேலையை அந்தக் கரையிலே நின்று மறைத்துக் கொண்டு, அங்கே குளிப்பார்கள். அப்படி 10 ஆண்டுகளாக அவ்வாறு இயங்குவதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவேதான் சொல்கிறேன் மாணவர் விடுதிகள் வாடகைக் கட்டிடத்தில் இயங்கினால்கூட, பெண்கள் விடுதிகள் கட்டாயமாக அரசு விடுதியாக இருக்க வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகிறேன்.

அதேபோன்று (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து விடலாம்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: இன்னும் 2 நிமிடங்களில் முடிக்கிறேன்.கள்ளர் சீரமைப்புத் துறையின் கீழ் 255 பள்ளிகள் இயங்குகின்றன என்று சொன்னேன். அதிலே 5 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப் பட்டிருந்தாலும் அந்த 5 பள்ளிகளிலும் 13 போஸ்ட் கிராஜுவேட் டீச்சர்கள், 3 ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. பி.டி. ஆசிரியர்கள்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். 20 ஹையர்செகண்டரி ஸ்கூல்கள் இருக்கின்றன. 1992-இல் 8 மிடில் ஸ்கூல்களை, ஹைஸ்கூல்களாக உயர்த்தி இருக்கிறார்கள். அந்த 8 பள்ளிகளிலும் தலைமையாசிரியர் மட்டும்தான் பி.டி. ஆசிரியர். மற்றவர்கள் எல்லாம் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள். எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புக்கு சையன்ஸ், மேதமேடிக்ஸ் போன்ற வகுப்புகளை அவர்கள் நடத்துகிறார்கள். அதிலே நல்ல ரிசல்டை எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பதவிகள் மட்டும் 80-க்கு மேல் காலியாக இருக்கின்றன. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இந்த ஆண்டு அந்தப் பணியிடங்களை நிரப்பப் போகிறேன் என்று சொன்னார்கள். அந்தப் பணியிடங்களை நிரப்புவதாக இருந்தாலும், 1968-க்கு முன்னாள் இந்தச் சீரமைப்புத் துறை அமைத்ததன் காரணமே இந்த வகுப்பினருக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுடைய கல்வித் திறனை உயர்த்த வேண்டும் என்பதற்காக 70 சதவீதம் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத்தான் எடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது சுழல் முறையைக் கையாளுகிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், புதியதாக ஆசிரியர்கள், கள்ளர் சீரமைப்புத்

1994 ஏப்ரல் 29] [திரு. எஸ். ஆண்டித் தேவர்]

துறையின் கீழ் உள்ள பள்ளிகளுக்கு தேர்ந்தெடுக்கும்போது, கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு, குறைந்தபட்சம் 60 விழுக்காடு, அந்த இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு. . . .

பிற்பகல் 8-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 1969-ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலே, அவர்கள் சரியாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், இப்பொழுது அந்த ரிசர்வேஷனை ஏற்படுத்தவில்லையென்று சொன்னார்கள். அது தவறு. 1978-ஆம் ஆண்டே, ஜி.ஓ.எம்.எஸ். எண் 264, சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட், நாள் 26.4.1978 என்று, 1978-ஆம் ஆண்டே ஆணைகள் வெளியிடப்பட்டதால், பள்ளிகளிலே ஆசிரியர்கள் நியமனங்கள் போன்றவை அந்த விதிகளின்படியே செயல்படுத்தப்படுகின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, முன்னுரிமை அளிப்பதற்கு பதிலாக இட ஒதுக்கீடு முறை.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: அதைத்தான் நான் தங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்பினேன். முன்னுரிமை என்பது, கள்ளர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தான் அந்த ஜி.ஓ. இருக்கிறதே தவிர, அதற்கு முன்பு இருந்தது போன்று 60 சதவீதம் அவர்களும் 40 சதவீதம் மற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், இந்தியாவிலேயே இந்த வகுப்பு உயர வேண்டும் என்பதற்காகத்தான் கள்ளர் சீரமைப்புத் துறை என்று அமைத்து, 1924-ஆம் ஆண்டு அரசுப் பள்ளியாக துவங்கினார்கள். இப்பொழுது இருக்கின்ற அரசுப் பள்ளிகள் எல்லாம் தாலுகா போர்ட், டிஸ்டிரிக்ட் போர்டிலிருந்து அதற்குப் பின்னால்தான் அரசுப் பள்ளிகளானது. ஆனால், கள்ளர் சீரமைப்புத் துறையின் கீழே இருக்கின்ற பள்ளிகள் 1924-லிருந்தே அரசுப் பள்ளிகளாக இருக்கின்ற காலத்திலேயே, இந்தச் சமூகம் குற்றப் பரம்பரைச் சட்டத்தின் கீழ் 40 ஆண்டுகளாக அழுத்தப்பட்டு வைத்திருந்ததன் காரணமாக, சலுகை வழங்கப்பட்டது. அதை மறுபடியும் வழங்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.ஜி. பழனிசாமி, 5 நிமிடம்தான் கேட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு எப்படியும் 5 நிமிடத்தில் முடித்துவிடுகிறீர்களா என்று பார்ப்போம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பிற்பட்டோர் நலத் துறை, மீன் வளம் ஆகிய துறைகளின் மீது சுருக்கமானக் கருத்துகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அநேகமாக, இந்தியாவிலேயே தமிழகம்தான் ஆயிரம் கிலோ மீட்டர் தாண்டுகிற ஒரு கடற்கரையாக இருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருகிறது. பொதுவாக, அந்நிய நாட்டின் மூலதனங்களை ஈட்டுகின்ற வகையில் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நிதிநிலைகளை, ஆதாரங்களை உருவாக்கக்கூடிய நம்முடைய கடலோரப் பகுதி, பல்வேறு மாநிலங்களிலிருந்து மீன் வகைகளை இன்றையதினத்திலே கொள்முதல் செய்து வியாபாரம் செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது. குறிப்பாக, கட்டுமரத்தையே நம்பியிராமல் விசைப் படகு மூலமாக பல்வேறு இன மீன்களை ஆழ்கடலுக்கே சென்று மீன் பிடித்து நல்ல வர்த்தகத்தை உருவாக்குகிற நிலைமை இன்றையதினத்தில் தமிழகத்திலே இருக்கிறது. குறிப்பாக, இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் அந்த மீனவ மக்களுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்த போதிலும்கூட, இன்னும் அதிகமாக அந்த விசைப் படகுகளை நவீனப்படுத்துகின்ற விதத்திலே, மீனவர்களை உற்சாகப்படுத்துகின்ற விதத்திலே செய்ய வேண்டும். காரணம் இந்தியாவிலே மிகப்பெரிய - மனித உணவிலே ஒருவிதமான உணவை- இன்றைக்குப் பூர்த்திச் செய்யக்கூடிய உணவாக மீன் உணவு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைய தினத்திலே பல்வேறு வளர்ப்பு மீன்களைப் என்னுடைய நாகை மாவட்டத்திலே இரால் மீன் பொறுத்தமட்டிலே வளர்ப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. சீர்காழி முதல் நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி பகுதிகளின் கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை, கேரளாவைச் சார்ந்திருக்கிறவர்கள் மீன் வளர்ப்புக்காகக் கையகப்படுத்தி, அந்த இடங்களிலே மீன் வளர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். இரால் மீன் வளர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த இரால் மீன் வளர்ப்பதிலே அரசாங்கம் ஒரு ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாய விளை நிலங்களில் அதிக லாபம் கிடைக்கின்றன என்பதற்காக இன்றையதினம் இதுபோன்ற இடங்களிலே பெரிய திடல்களை, குளம் போன்று அமைத்து, கடல் தண்ணீரை இறைத்து, அதன்மூலமாக அந்த மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இதன்மூலமாக அருகிலே இருக்கூடிய நிலங்களில் உப்புத் தன்மையின் கசிவு ஏற்படுவதன் காரணமாக விளையும் தன்மை குறைந்து அந்தப்

1994 ஏப்ரல் 29] [திரு. ஜி. பழனிசாமி]

பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் மத்தியில் ஒரு பதட்டம் ஏற்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 8-25

அதோடு மட்டுமல்ல; அதிகமாக இலாபம் வருகிறது என்ற காரணத்தால் மேலும், மேலும் பல கிலோமீட்டர் தூரம் வரையில் வந்து, அதாவது உள்ளூர் பகுதியில் கூட வந்து இந்த மீன் வளர்க்கப்படுகிறது. இப்படி இறால் மீன் வளர்க்கின்ற தன்மையின் காரணத்தால் இன்றைக்குக் குடிதண்ணீர் கூட உப்பாக மாறக்கூடிய நிலைமை வந்துகொண்டிருக்கிறது. ஏற்கனவே, நாகை மாவட்டம் கடலோரப் பகுதியாக இருப்பதால் எல்லாமே சால்ட் வாட்டராகத்தான் இருந்துகொண்டு இருக்கிறது. அங்கே மழை நீரின் காரணமாக மேல் ஊற்றாக இருக்கக்கூடிய தண்ணீர் கூட இன்றையதினம் இதன் காரணமாக உப்புத் தண்ணீராக மாறக்கூடிய தன்மை இருக்கிறது. அந்த மாவட்டத்திலே மிகப்பெரிய கிளர்ச்சி உருவாகிக்கொண்டு இருக்கிறது. அது தங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன். எனவே, அது எந்த எல்லையோடு இருக்கவேண்டும் என்று ஒரு வரையறை கொண்டு வரவேண்டும். இல்லை என்றால், ஊர் மக்களே தடுக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும். அதிலே மிக முக்கியமான பகுதி சீர்காழிப் பகுதி. அதன் சட்டமன்ற உறுப்பினர் இங்கே வந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறைஅமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்புத் தொழில் மிகவும் இலாபகரமான ஒரு தொழில் என்பதால் அதனை ஊக்குவிப்பது அரசினுடைய கடமையாக இருந்தாலும், அதில் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டியது அரசினுடைய தலையாயக் கடமையாகும். எனவேதான், அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர - அதாவது இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் அப்படிப்பட்ட சட்டம் கிடையாது - ஒரு சட்டம் கொண்டுவருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அநேகமாக நம்முடைய மாநில அரசில் மீனளத் துறைக்குத் தெரியாமல் கூட, சில திட்டம் நடைபெறுவதாக நான் கருதுகிறேன். அதிலே நீங்கள் உடனடியாகத் தலையிட வேண்டும். மத்திய அரசினுடைய

ஆலோசனையின்பேரில், அப்படிப்பட்ட திட்டங்கள் நடைபெறுவதாக நான் கருதுகிறேன். அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்கூட சமீபத்திலே 35 கோடி ரூபாய் அளவுக்கு அன்னிய முதலீடு கிடைத்திருப்பதாகச்சொல்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அப்படிக் கிடைக்கின்ற அந்த நிதியின் மூலமாக அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு என்ன செய்யப்போகிறோம் என்பதைத் திட்டமிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அந்த மீனவ மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாக இருப்பது என்னவென்றால் நாகூரிலே துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்பது. அதற்கான ஆய்வு கடந்த 2 மாதத்திற்கு முன்பாகச் செய்யப்பட்டது. அது அந்த மீனவ மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். காரணம் என்ன என்றால், கட்டுமரங்களைக்கூட கரையிலே ஏற்றிவிடுகிறார்கள். ஆனால், விசைப்படகுகளை கடலில்தான் நிறுத்துகிறார்கள். அப்படி நங்கூரம் போட்டு நிறுத்தியிருக்கிறபோது புயல் மற்றும் அதிகமான காற்று அடிக்கிறபோது ஒன்றோடொன்று மோதி பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள படகுகள் நாசம் அடையக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. அவ்வாறு பாதிப்பு ஏற்படுகிறபோதுகூட, சங்கத்திலே அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு மட்டும்தான், அதாவது பதிவு செய்திருப்பவர்களுக்கு மட்டும்தான் அரசாங்கம் நிதியுதவி வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்களிலே பதிவு செய்திருப்பவர்களுக்கு மட்டும்தான் லோன் கொடுக்கக்கூடிய வகையில் அந்தஸ்தைப் பெறுகிறார்கள். அப்படி இல்லாமல், சுய தொழிலாகச் செய்யக்கூடியவர்கள் அந்த விசைப்படகிலே போனால் அரசாங்கம் எந்த நிதியும் வழங்குவதில்லை. அதை நம்பியே வாழக்கூடிய அந்த மீனவர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக மாறிவிடுகிறது. சென்ற ஆண்டு ஏற்பட்ட புயலிலே அதனை நம்மாலே காண முடிந்தது. எனவே அவர்களுக்கு மீன்பிடித் துறைமுகம் அமைத்தால்தான் பாதுகாப்புக் கொடுக்க முடியும். பாதுகாப்பாக அவர்களால் படகுகளை நிறுத்த முடியும். அப்போதுதான் காற்று, புயல் வருகிறபோது பாதுகாப்பதற்கான வழி ஏற்படும். அதை உடனடியாகச் செய்கின்ற வகையில் நாகூர் பகுதியிலே . . .

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திலே மீன்பிடித் துறைமுகம் ஒன்று இருப்பதன் காரணமாக, நாகூரிலே இருக்கின்ற மீனவர்கள் அந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நாகூருக்கும், நாகப்பட்டினத்திற்கும் பார்த்தால் மொத்தம் ஒரு 5 கிலோ மீட்டர்

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

அளவிலேதான் வரும். பெரிய துறைமுகமாக நாகப்பட்டினம் துறைமுகம் இருப்பதன் காரணமாக, அருகிலேயே ஒரு துறைமுகம் அமைக்கக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகள் இல்லை. நாகூர் மீனவர்கள் நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. நாகப்பட்டினம் துறைமுகம் என்பது ஒரு நெருக்கடியான துறைமுகமாக இருக்கின்ற காரணத்தால், அதிகமான படகுகள் அங்கே இருக்கின்ற காரணத்தால், இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலிலேகூட இந்தப் பிரச்சினை வைக்கப்பட்டு, கேள்விகள் பல சட்டமன்ற உறுப்பினர்களால் கேட்கப்பட்டு, அது விரைவில் செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உறுதி அளித்திருக்கிறார்கள். எனவே நீங்களும் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று புயல் பாதுகாப்பு இல்லங்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், திருத்துறைப் பூண்டியிலே தொண்டியக்காடு பகுதியிலே மீனவர்கள் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். எனவே அங்கே புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதாக ஏற்கெனவே அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 8-30

அதேபோல மீனவ மக்கள் வாழக்கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் விரைவாக, வேகமாக, உங்களுடைய முயற்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த வீடுகள் கடற்கரை ஓரமாகக் கட்டப்பட்டுள்ளதால், அங்கே உப்புக் காற்று வீசுவதால், அந்த வீடுகளின் காரைகளில் உப்பரிக்கப்பட்டு, தரைபாகத்திலும் உப்பரிக்கப்பட்டு அபாய நிலையில் இருக்கின்றன. ஆகவே உப்பு அரிக்கமுடியாத சிமெண்ட் கொண்டு, ஒரு தரமான அஸ்திவாரம் எழுப்பி அந்த மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். தற்போது உப்பரிக்க முடியாத சிமெண்ட் கிடைக்கிறது. அப்படி கட்டிக்கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் இயற்கையின் சீற்றத்தால் வீடுகள் பாதிக்கப்படும். எனவே கடலோரத்தில் உப்பரிக்காத சிமெண்ட்

பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, குடிதண்ணீர், நல்ல சாலை வசதி, பள்ளிக்கூட வசதி ஆகியவைகளை அவர்களுக்கு அருகாமையிலேயே செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்ததாக, இன்றைக்கு மீனவர்கள் இலங்கை எல்லையில் சென்று மீன்பிடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய கடலோர மாவட்டங்களான ராமேஸ்வரம், தொண்டி ஆகிய பகுதிகளிலிருந்து மீனவர்கள் இலங்கை எல்லை கச்சத்தீவு அருகே இரால் மீன் அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தால், அங்கே மீன் பிடிக்கச் செல்கிறார்கள். கொள்கைக் குறிப்பிலே இதைக் குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படிச் சென்ற 25 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது, ஓராண்டில் நடந்திருக்கிறது. இதுசம்பந்தமாக மத்திய அரசுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களது துறையின் மூலம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்தியப் பேரரசு இலங்கைக்குத் தகவல் அனுப்புகிறது. அவர்கள் பரிதாபத்தோடு கவனிப்போம்; இனிமேல் நடக்காது என்று உத்தரவாதம் அனுப்புகிறார்கள். ஆனால், தொடர்ந்து சம்பவம் நடைபெறுகிறது. இன்று ஒரு அதிர்ச்சிகரமான செய்தியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். நாளை முதல்கொண்டு அநேகமாக இந்த வாரத்தோடு நம்முடைய இந்தியக் கடற்படை திரும்பப் பெறப்படும் என்று சொல்லக்கூடிய அதிர்ச்சியான செய்தியைச் சொன்னார்கள். அதற்குப்பின்னால் மீனவர்கள் கடலிலே மீன் பிடிக்க போகமுடியுமா என்ற மிகப்பெரிய அச்சம் நிலவிக் கொண்டிருக்கிறது. இதற்கு என்ன மாற்றுவகை செய்யப்போகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, கச்சத் தீவு பிரச்சினை; இந்தக் கச்சத் தீவு பிரச்சினையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஏற்கெனவே ஒரு தனித் தீர்மானம் நிறைவேற்றி, அதை மத்திய அரசின் நடவடிக்கைக்காக அனுப்பி, அதுவும் ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக இருந்தது. தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றி விட்டால் போதாது. அதற்கு அடுத்ததாக என்ன செய்ய வேண்டும்; சட்ட ரீதியாக என்ன செய்ய வேண்டுமோ, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 1974 ஆம் ஆண்டு இதுசம்பந்தமாக முன்னாள் பாரதப் பிரதமர் மதிப்பிற்குரிய இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தினார்கள். இது ஒரு சர்வதேச எல்லைக்குட்பட்ட காரணத்தால், நாம் தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்வதோடு அதை முடித்துவிடப் போகிறோமா

அல்லது அந்தத் தீர்மானத்திற்கு ஏதாவது உயிரோட்டம் உருவாவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 69 சதவீத இட ஒதுக்கீடு. இந்த அவையிலே பிற்பட்டோர் நலத் துறையிலே சொல்லி இருக்கிறீர்கள். அதற்காக இந்த அவையிலே ,அவசர அவசரமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் சீர்மரபினர்களுக்காக (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவு பற்றி ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதில் நம்முடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்கூட, ஒரு தனித் தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். மத்திய அரசு அதிலே நடவடிக்கை எடுத்துதான் முடிக்கவேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், பாரதப் பிரதமராக இருந்தால் 24 மணி நேரத்தில் கச்சத் தீவு நம்மிடம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைவேற்றிய தீர்மானத்திற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று பேசவேண்டுமே தவிர, அவர் இருந்தால் அப்படி நடந்திருக்கும், இவர் இருந்தால் இப்படி நடந்திருக்கும் என்று யூகத்திலே பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது யூகத்தில் சொல்லவில்லை. அவர் தெளிவாக சூசகமாகத் தெரிவித்தார்கள். இது நம்முடைய கையில் இல்லை. நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைத் தெளிவாக எடுத்திருக்கிறோம். மாநில சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்திருக்கிறது. ஆகவே மத்தியில் இருப்பவர்கள், இதிலே கவனம் செலுத்தி உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், உண்மையிலேயே தமிழ் மக்களின் மேல் ஒரு நல்ல எண்ணம் இருக்குமானால், அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்

என்ற எண்ணம் இருக்குமானால், அதைச் செய்வார்கள். தற்போது இருப்பவர்கள் அதைச் செய்யவில்லை, நாங்கள் இருந்திருந்தால் அதைச் செய்திருப்போம் என்றுதான் அவர்கள் சொன்னார்கள். அதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

பிற்பகல் 8-35

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண விஷயத்தில் ஒரு இன்டர்நேஷனல் அஃம்பையர்ஸ் சம்பந்தப்பட்டதில் எப்படி ஒரு மாநில அரசு தலையிட முடியும் என்பதை அவர் விளக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி கச்சத் தீவு பற்றிய பிரச்சினையைப் பற்றி வந்து, ஏற்கெனவே நிறைய விவாதிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் அமைச்சர் அவர்களால் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. திரும்ப இது வேண்டாம். கச்சத் தீவுப் பிரச்சினையை விட்டுவிட்டு நீங்கள் வேறு பிரச்சினைக்குச் செல்லவேண்டும். கச்சத் தீவு பிரச்சினை பற்றி காலையிலே இருந்து சாயங்காலம் வரைக்கும் நிறைய மெம்பர்கள் பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே அமைச்சர்களும் பதில் சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் திரும்பவும் இதையே பேசிக்கொண்டு இருக்கவேண்டாம். (குறுக்கீடுகள்) வேண்டாம். விடுங்கள். திரு. ஜி. பழனிசாமி, ஒரே ஒரு நிமிடம், 8.36 வரை பேசி, சரியாக முடித்துவிடுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர், சீர்மரபினருக்கான இட ஒதுக்கீடு. இதிலேயும் கூட நாம் இந்த இட ஒதுக்கீட்டிற்காக 30.12.1993 அன்று வரலாற்றுச் சிறப்புக் கூட்டமாகக் கருதி ஒரு தனித் தீர்மானம் நிறைவேற்றி, மத்தியப் பேரரசினுக்கு அனுப்பியிருக்கிறோம். அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டங்களையும் நடத்தியிருக்கிறோம். நம் தமிழகத்திலே நடைமுறையிலே 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பதை, இன்றையதினத்திலே நாம் அந்தச் சட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதற்கு, மாறாக 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக்கு மேல் இருக்கக்கூடாது என்று உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இப்போது முடியப் போகிறது. வரக்கூடிய கல்வி ஆண்டில் இந்த இட ஒதுக்கீடு என்பதில் 69 சதவிகிதத்தைப் பின்பற்ற போகிறோமா; இல்லை, 50 சதவிகிதத்தைப் பின்பற்றப் போகிறோமா என்பதைத் தாங்கள் தெளிவுபடுத்தவேண்டும். ஏனென்று சொன்னால், இது ஏதோ மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டோம்,

1994 ஏப்ரல் 29] [திரு. ஜி பழனிசாமி].

மத்திய அரசுக்கு அனுப்பி விட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்றி விட்டு, நாம் இருந்துவிட முடியாது. மத்திய அரசு இருக்கிறதே, நம்முடைய இந்தியாவினுடைய மத்திய அரசு, அது செவிடன் காதில் ஊதுகிற சங்கு மாதிரி. . .(மேசையைத் தட்டும் ஒலி) எதைக் கேட்டாலும் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்வதே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாவட்ட மக்களுடைய . . .(குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஏற்கெனவே பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறார்கள். அதே வார்த்தையை. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, எல்லாவற்றுக்கும் மத்திய அரசு மத்திய அரசு என்று சொன்னால் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசு மதிப்பதாகத் தெரியவில்லை. இது ஒன்று இரண்டு அல்ல. காவிரி நதிநீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம்; இன்னும் கச்சத் தீவுப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம்; இட ஒதுக்கீடுப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம்; இன்னும் சொன்னால் மத்திய அரசினுடைய நில உச்சவரம்பு சட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். இவை அத்தனையும் நம்முடைய பாரத நாட்டு பாரதக் குடியரசு, இந்தத் தமிழ்நாட்டு மக்களுடைய, இந்த மாநில மக்களுடைய உணர்வுகளை மதிக்கிற தன்மையிலே இந்த நேரத்திலே இல்லை. புறக்கணிக்கப்படுகிறது. மாற்றாந்தாய் போக்கோடு இருக்கிறது. ஆக, இதையெல்லாம் பார்த்து இதிலேயுள்ள சட்டப்பிரச்சினையை எல்லாம் உணர்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி இரா. பாண்டியம்மாள்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர், சீர்மரபினர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் ஆகியவர்களுக்கு புரட்சித் தலைவியின் ஆட்சியில் கல்வியிலும், பொருளாதாரத்திலும் கடந்த திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சியைக் காட்டிலும் அதிக நிதியை ஒதுக்கி, அவர்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் செய்கின்ற புரட்சித் தலைவியின் ஆட்சியில், எந்த அளவுக்கு பிற்பட்டோர் சமுதாய மக்களிடம் புரட்சித் தலைவி அவர்கள் கவனத்தோடு இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், தற்போது 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு சம்பந்தமாக புரட்சித் தலைவியின் அரசு பாதுகாப்பாக எல்லாவிதமான நடவடிக்கையும் எடுத்து வருகிறது. அதன் அடிப்படையிலே, கடந்த ஆண்டு 9.11.1993 அன்று சிறப்புச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டி, அதில் மத்திய அரசுக்கு ஒரு நல்ல தீர்மானத்தைப் போட்டு அனுப்பியிருப்பது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அத்தோடு அன்றையதினமே புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் 16-11-1993 அன்று பொது வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தி, தமிழக மக்களின் நல்ல ஆதரவைப் பெற்று அமைதியான முறையில் நடத்திக் கொடுத்தார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்படிப்பட்டச் சூழ்நிலையில் இன்றையதினம் தமிழக மக்களுக்காக பிற்பட்டோர் நல ஆணையம் ஒன்றையும் ஏற்படுத்தி பிற்பட்டோர் சமுதாய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் மனதார பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட நல்ல காரியங்களை எல்லாம் பாராட்ட மனம் இல்லாமல் இன்றையதினம் இந்த பட்ஜெட்டில் ஒன்றுமில்லை, மானியக் கோரிக்கையில் ஒன்றும் இல்லை, கவர்னர் உரையில் ஒன்றும் இல்லை என்று எல்லாம் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், நாங்கள் காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம், எப்படியாவது ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி அவர்கள் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு நான் இந்த மாமன்றத்திலே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவராக வருபவர்கள் எல்லாம் முதலமைச்சராக ஆக முடியாது. போராட்டம் நடத்தியவர்கள் எல்லாம் முதலமைச்சராக ஆக முடியாது. புரட்சித் தலைவியை ஒருமையாகப் பேசினாலும், கையை நீட்டிப் பேசினாலும் அவர்கள் முதலமைச்சராக வர முடியாது என்பது நாடு அறிந்த உண்மை என்பதை அவர்களுக்கு நான் தெள்ளத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் (குறுக்கீடுகள்) கள்ளர் சீரமைப்புத் துறை (குறுக்கீடுகள்)

1994 ஏப்ரல் 29]

பிற்பகல் 8-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் அமர வேண்டும். திருமதி. பாண்டியம்மாள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறை என்பது மதுரை, அண்ணா மாவட்டங்களில் உள்ள பிரமலைக்கள்ளர் இன மக்களுக்காக பிரிட்டிஷார் காலத்தில் எங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு துறை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறை மதுரை, அண்ணா மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அதாவது பிரிட்டிஷார் ஆட்சியில் இருக்கும்போது பிரமலைகள்ளர் மக்களை மிகவும் கொடுமைக்கு உள்ளாக்கி, அடக்கி ஒடுக்கி குற்றப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதி வந்தார்கள். அப்படிப்பட்ட பாரம்பரியத்தில், அப்படிப்பட்ட சமுதாயத்தில் பிறந்த என்னை, பெண் குழந்தைகளைக் கொலை செய்கின்ற ஊரிலுள்ள ஒரு பெண்ணை சட்டமன்ற உறுப்பினராக கொண்டு வருவேன் என்று தீர்க்கதரிசனமாகப் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்னை சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இதிலிருந்து எந்த அளவுக்கு தீர்க்கதரிசியாக புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு அடுத்தாற்போல், இன்றையதினம் மதுரை, அண்ணா மாவட்டங்களில் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகள் எங்கள் இன மக்களுக்கு கள்ளர் சீரமைப்புத் துறை மூலமாக இயங்கி வருகின்றன. அந்தப் பள்ளிகளில் சரியாகக் கட்டிடங்கள் இல்லை. பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதுபோல, அங்கு குடி தண்ணீர் வசதியும் வேண்டும். பழுதடைந்த அந்தக் கட்டிடங்களைப் பராமரித்தும் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்தாற்போல், இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவிற்கு செயல்படுகிறார்கள் என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் மீண்டும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு சில உதாரணங்களை நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த ஓராண்டுக்கு முன்பாக, எங்களுடைய உசிலம்பட்டியிலே தேவர் பேருந்து நிலையம் வைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் இன மக்கள் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். புரட்சித் தலைவி அவர்கள் எங்களை எல்லாம், அமைச்சர்களை எல்லாம் அழைத்து, அந்த இன மக்களின் உணர்வுகளைப் புரிந்து, 'நான் தேவர் பேருந்து நிலையம் என்று

அதற்குப் பெயர் வைப்பேன், அதோடு மட்டுமல்லாமல் தேவர் திருமகனுக்கு சென்னையிலே ஒரு சிலை வைப்பேன், என்று சொன்னார்கள். அப்பொழுது அங்கு எனக்கு ஒரு அன்புத் தொல்லையாக, என்னுடைய கார் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 4,5 மாவட்டங்களில் தேவர் திருமகனாருக்கு அரசு விழாவை எடுக்கிறார்கள். இனிமேல் தமிழகம் முழுவதும் தேவர் திருமகனுக்கு அரசு விழா எடுக்க முடிவு செய்யப்பட்டது என்று அறிவித்தார்கள். இதிலிருந்து, ஒவ்வொரு சமுதாய மக்களின் உணர்வுகளைப் புரிந்து, எந்த அளவிற்கு புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், அம்பேத்காருக்கு சிலை, அம்பேத்காருக்கு மணிமண்டபம், அம்பேத்கார் அவர்களுக்கு தமிழகம் முழுவதும் அரசு விழா எடுக்கும் என்றெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு, அவர்களிடம் எந்த அளவுக்கு அவர்கள் பரிவும், பற்றும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பது இந்த நாட்டு மக்கள் அறிந்த உண்மை (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றை எல்லாம் பாராட்டாமல், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்கிறார்கள்? நாங்கள் பிரதான எதிர்க் கட்சி, நாங்கள்தான் இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தோம் என்று எல்லாம் சொல்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். எதிர்க் கட்சி என்றால் என்ன? எதிர்க்கட்சி என்றால் சட்டசபைக்கு வருவது, எங்காவது ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தாலும் உடனே சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது, விடுதலைப் புலிகள் நடமாடுகிறார்கள் என்று எல்லாம் சொல்கிறார்களே, விடுதலைப் புலிகள் எங்கே இருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு எங்கே கெட்டுவிட்டது. புரட்சித் தலைவி அவர்கள் காவல் துறையை நவீனப்படுத்த 80 கோடி ரூபாய் கேட்டார்களே, கொடுத்தீர்களா? 10 கோடி ரூபாய்தான் கொடுத்தீர்கள். மீண்டும் 30 கோடி ரூபாய் தருகிறேன் என்று சொன்னீர்களே, அது என்ன ஆயிற்று? அதைக் காட்டிலும் உள்துறை அமைச்சர் அவர்கள் வந்தார்களே, என்ன சொன்னார்கள்? தமிழ்நாடு பணக்கார நாடு என்று சொல்லிவிட்டுச் சென்றாரே, தமிழ்நாட்டை எந்த அளவுக்கு கேலியும், கிண்டலுமாக சொல்லிச் சென்றிருக்கிறார்கள் என்பதை இந்த மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் இதற்குமேலாக, எதிர்க்கட்சி என்று சொல்லுகின்றவர்களை நான் கேட்கிறேன். எதிர்க் கட்சி இல்லை என்று சொன்னால் ஜனநாயகமே இல்லை என்பது எங்களுடைய அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தெரியும். ஆனால், எதிர்க் கட்சி என்று சொன்னால், எப்படியும் நாங்கள்

1994 ஏப்ரல் 29] [திருமதி இரா. பாண்டியம்மாள்]

அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்போம் என்று பாதயாத்திரை செல்லுகிறீர்களே (குறுக்கீடுகள்)

பிற்பகல் 8-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: பாத யாத்திரை போவோமென்று சொன்னீர்களே, உங்களுடைய 356ஆவது சட்டம் எல்லாம் இங்கே பலிக்காது. அந்தச் சட்டத்தைக் கண்டு நாங்கள் பயப்பட மாட்டோம் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களை விட்டுப் பிரிந்து சென்ற திருநாவுக்கரசை வைத்துக்கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையைத் திறப்போம் என்று சொல்லுகிறீர்களே, அப்படி நாகூசாமல் சொல்லும் உங்களைக் கேட்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், உங்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதைக் கேட்டுக்கொண்டு, திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்த அவையிலே இருக்கும்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-க்கு நான்தான் சொந்தம் என்று இனிமேல் அவர் சொல்லக்கூடாது என்பதை, அவர் அவையில் இல்லாவிட்டாலும், நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி பாண்டியம்மாள், சீக்கிரம் சப்ஜெக்டில் பேசி முடியுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை விதி 90-ஐப் படிக்கிறேன் "Every speech must be strictly relevant to the matter before the Assembly". Is it relevant ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராஜேந்திரன், நான் அதைத்தான் பாண்டியம்மாளிடம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்களை சப்ஜெக்டில் பேச வேண்டுமென்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: Will you allow us to speak?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், இப்போது மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது, ஆளுங்கட்சியில் அதிகமாக உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தால் ஒரு முறைதான்

அவர்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே, அவர்கள் பல்வேறு விஷயங்களைப் பற்றி சுற்றி வளைத்துப் பேச வேண்டியிருக்கிற காரணத்தால், அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒரு குறிப்பிட்ட மானியத்திலேதான் பேச வேண்டுமென்று சொன்னால் அந்த உறுப்பினருக்குத் தொகுதியைப் பற்றியும், வேறு விஷயங்களைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவேதான், இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் நிறைய பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லுகின்றபோது, இடையிலே இப்படிப்பட்ட பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டும் சூழ்நிலைக்கு வந்து விடுகிறார்கள். வேறு ஒன்றும் அல்ல. (குறுக்கீடு) அதைத்தான் நான் ரெஸ்டிரிக்ட் பண்ணிக் கொண்டிருக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்றபோது 'must be relevant to the subject before the House' என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய பேச்சுக்களை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துப் பாருங்கள். இந்த அவையிலே பேசி, இதற்கு சம்பந்தப்பட்ட விவாதங்கள் எல்லாம் நடந்ததை வைத்துதான் இன்றைக்கு பல கேள்விகளை அவர்கள் எழுப்பிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, there is nothing irrelevant in this *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், நான் அதைத்தான் சொன்னேன். ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு ஆளும் கட்சிக்காரர்களுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்படியும் சில பிரச்சினைகளை சுற்றி வளைத்து அவர்கள் பேச வேண்டியிருக்கிறது. திருமதி பாண்டியம்மாள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லுகிறார்களே, நான் அவர்களைக் கேட்கிறேன், இவர்கள் வீட்டை விட்டு வெளியேற முடியாமல் இருக்கிறார்களா?. . .

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: திருமதி பாண்டியம்மாள், நான் இவர்களைக் கேட்கிறேன், அவர்களைக் கேட்கிறேன் என்று சொல்லி, இப்படி எல்லாம் சட்டமன்றத்திலே நீங்கள் சேலஞ் செய்துகொண்டு இருக்கக்கூடாது. சப்ஜெக்டில் பேசி முடியுங்கள்.

1994 ஏப்ரல் 29]

திருமதி இரா. பாண்டியம்மாள்: வெளியேறாமல் இவர்கள் இருக்கிறார்களா? சட்டமன்றத்திற்கு வர முடியவில்லையா? எதற்கு எடுத்தாலும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லும் அவர்களுக்குச் சொல்கிறேன், எங்கேயாவது ஒரு வெடிகுண்டு வெடித்தால் போதும் உடனே சொல்லுவார்கள், இங்கு சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, உடனே ஆட்சியைக் கலைத்துவிடுங்கள் என்று.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பாண்டியம்மாள், பிற்பட்டோர் நலம் பற்றிப் பேசுவதாக இருந்தால் இங்கே பேசலாம். வேறு மானியங்களில் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை, என்னுடைய தொகுதியில் இருக்கும் பிரச்சினைகளைச் சொல்ல வேண்டுமென்று சொன்னதால், அதற்கு அனுமதி தந்திருக்கிறேன். அதுதவிர பொதுவான அரசியல் விவகாரங்களைப் பேச வேண்டுமென்று பாண்டியம்மாளுக்கு மிகுந்த ஆர்வம் இருக்குமானால், அதுபற்றிய விவாதத்திற்கு வேறு நேரம் இருக்கிறது. அந்த நேரத்தில் நீங்கள் பேசலாம்.

பிற்பகல் 8-50

திருமதி இரா. பாண்டியம்மாள்: மதுரை, அண்ணா மாவட்டங்களில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் நிறைய காலியாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்தக் காலியிடங்களில் பிரமலைக்கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு முதலிடத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேலாக எங்களுடைய உசிலம்பட்டியில் கள்ளர் கல்விக் கழகத்திலிருந்து இடம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். எனவே அங்கே ஒரு என்ஜினியரிங் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்தாற்போல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருகிறீர்கள். அதுபோல பிரமலைக்கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் வீடுகள் கட்டித்தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். என்னுடைய தொகுதியில் 58 கிராம கால்வாய்த் திட்டம் குறித்து ஏற்கெனவே பட்ஜெட்டில் பேசியிருக்கிறேன். அமைச்சர் அவர்களும் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். 40 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே ஒருகட்சிக்கே வாக்களித்த மக்கள் எங்களுடைய அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவியின்

அன்பினாலும் பாசத்தினாலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அந்த மக்கள் அடிக்கடி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற போராட்டம் நடத்துகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை என்றாலும், 58 கிராம கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற அவர்கள் உதவி புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அஸ்வமாநதி என்ற ஒரு திட்டம் இங்கே சாங்க்ஷன் ஆகியிருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய தொகுதி பின்தங்கிய தொகுதி. பிரமலைக்கள்ளர் சமுதாய மக்கள் வாழ்கிற தொகுதியாக இருப்பதால் வேலைவாய்ப்பு இல்லாமல் மக்கள் இருக்கிறார்கள் என்பதற்காக ஒரு தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நகராட்சியாக கடந்த ஆண்டு அறிவித்தீர்கள். ஆனால், இன்னமும் அந்த வேலை நடைபெறவில்லை. அதையும் செய்து, அதை நகராட்சியாக மாற்ற நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்பி, அதைக் கோரிக்கையாக வைத்து, இன்றையதினம் புரட்சித்தலைவி அவர்களை மட்டமாகவும், மோசமாகவும் பேசுகின்றவர்களுக்கு, நான் சொல்கிறேன், புரட்சித்தலைவிதான் அனைத்திந்திய அண்ணா தி.மு.க., புரட்சித் தலைவிதான் மக்கள் என்பதை நான் அவர்களுக்கு உணர்த்தி, இனியாவது அவர்கள் நல்லபடியாக பேசுவார்கள் என்று நம்பித்தான் இதைச் சொன்னேன் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையில் (குறுக்கீடு) எனக்குப் பேச வாய்ப்பளித்த அனைவருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. This is in no way connected with you. எல்லாவற்றுக்கும் நீங்கள் எழுந்துகொண்டேயிருக்கக் கூடாது. அப்படி என்றால், நீங்கள் பேசியதில் பெரும்பகுதி அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் பேசிய பல விஷயங்கள் அவைக்குறிப்பிலே இருக்காது. வேறு சில irrelevant ஆக அவர்கள் பேசினால் (குறுக்கீடு) அவர்கள் முடிக்கும்போது ஒரு கருத்தைச் சொல்லி முடிக்கிறார்கள், என்று சொன்னால், அதில் ஒன்றும் irrelevant கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை. எல்லாத் துறை மானியக் கோரிக்கையிலும் பேசுகின்றபோது வேறு ஏதாவது வைத்துப் பேசுகிறீர்கள். அவர்களுக்கெல்லாம் ஓர் எச்சரிக்கையாக அவர் சொல்லி முடிக்கிறார். அதனால் ஒன்றும் இல்லை. திருமதி கற்பகம் இளங்கோ. 5 நிமிடம்.

1994 ஏப்ரல் 29]

* திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பெரியார் உயிருடன் இருந்திருந்தால் பேருவகை கொண்டிருப்பார், புரட்சித்தலைவியின் சீரான சேவையை எண்ணி. தந்தை பெரியாரின் சிந்தனைகளை, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் ஆசைகளை இன்று செயல்வடிவமாக மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற புரட்சித்தலைவி அவர்களுக்கு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் சமீபத்தில் சமூகநீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தை, பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒருமித்த குரலாக வழங்கினார் என்பதை நாம் அறிவோம். தான் முற்பட்ட இனத்தில் பிறந்தாலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம் காப்பதில் முன்னணி வகித்து முழுமுச்சுடன் செயல்படும் புரட்சித் தலைவியை, கண்மணியாய், நெல்மணியாய், கருத்தோவியமாய், காலந்தோறும் போற்றும் கற்பக விருட்சமாய், மக்கள் நெஞ்சங்களில் வாழும் தெய்வமாய், இல்லங்களில் ஏற்றும் குத்துவிளக்காய் விளங்கும் மக்கள் உள்ளங்களில் வைத்துப் போற்றுகின்ற உன்னதத் தலைவியை வணங்கி, அவர்களுடைய பொற்பாதம் தொட்டு எனது உரையைத் துவக்குகிறேன்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு மிகவும் பின்தங்கிய வகுப்பில் பிறந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்ற பெயரைச் சூட்டியதோடு மட்டுமல்லாமல், மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கும் அந்த மாவட்டத்தை முன்னேற்றவேண்டும்; அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையில், "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்" என்று சொல்வதற்கிணங்க, இன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தை மாநிலத்திலேயே முதன்மை பெற்ற மாவட்டமாக மாற்றிய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பெற்றுள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மண்டல் கமிஷன் வழக்கில் உச்சநீதிமன்றம் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர்களுக்கு 50 சதவீதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு இருக்கக் கூடாது என்று கூறியபோதிலும், பிற்படுத்தப்பட்டோர் நலனில் தீவிர அக்கறை கொண்ட நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது

அளிக்கப்பட்டுவரும் இட ஒதுக்கீடான 69 சதவீதத்தைப் பாதுகாப்பதற்காக புதியதொரு சட்டம் கொண்டு வந்து சட்டமன்றத்தில் வழி கோலி இருப்பதை அனைவரும் மனதாரப் பாராட்டுகிறோம். தமிழகத்தில் இட ஒதுக்கீடு கொள்கை, 1921-ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்றி விட்டதாக மார்தட்டி இருக்கும் மத்திய அரசு, அதை முழுமையாக அமல்படுத்தாமல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு மட்டுமே அளித்து, பிற்படுத்தப்பட்ட மக்களின் முக்கியத் தேவையான வயது வரம்பு சலுகை மற்றும் எத்தனை முறை வேண்டுமானாலும் அக்குறியீட்டு வயதிற்குள் தேர்வு எழுதும் சலுகை ஆகியவை மத்திய அரசினால் அளிக்கப்படவில்லை. ஆனால், மண்டல் கமிஷன் தனது பரிந்துரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டதைப் போல வேலை வாய்ப்புத் தேர்வில் உச்ச வயது வரம்பு சலுகை அளிக்கப்பட வேண்டும் என்பதைக் காலம் கடத்தாமல் நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு நமது கோரிக்கையாக விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 8-55

1994-95-ஆம் ஆண்டில் ரூ. 1.72 கோடி செலவில் கட்டப்பட இருக்கும் 12 மாணவர்கள் இல்லக் கட்டிடங்கள் வருவதை மனதாரப் பாராட்டுகிறேன். பின்தங்கிய மாவட்டமாக எனது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, காரைக்குடி தொகுதியும் அந்த மாவட்டத்தில் இருப்பதால், ஒரு மாணவர் இல்லம் காரைக்குடித் தொகுதிக்கும் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது மாவட்டத்தில் 3 லட்சம் முத்தரையர் என அழைக்கப்படும் செட்டிநாட்டு வளையர் அதிகமாக வசித்து வருகிறார்கள். அவர்களும் ஆதிதிராவிடர் இனத்தைப் போன்றே தினக் கூலிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும், கட்டிடத் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். ஆதிதிராவிடர்களுக்குக் குழும வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்களே, அதனைப் போன்று, ஏழை எளிய விவசாயிகளாக இருக்கும் அந்தச் செட்டி நாட்டு வளையர் எனப்படும் முத்தரையர் சமூகத்தினருக்கும் கட்டித் தரவேண்டும் என்று எனது வேண்டுகோளாக இந்த நேரத்தில் விடுத்து வேண்டிக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 29] [திருமதி கற்பகம் இளங்கோ]

யாருக்கு எந்த நேரத்தில் எது தேவை என்பதை உணர்ந்து, குறிப்பறிந்து நமது புரட்சித் தலைவி அவர்கள், காரைக்குடியில் பல்வேறு நகரங்களின் முக்கியப் பகுதியாகவும், பல்வேறு கிராமங்களின் முக்கிய சந்திப்பாகவும் இருப்பதை உணர்ந்து, புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்பதை உணர்ந்து, கடந்த மானியக் கோரிக்கையில் சுமார் ரூ. 44.31 லட்சத்தை அள்ளிக் கொடுத்து, புதிய பேருந்து நிலையம் அமைக்க ஆவன செய்த புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காரைக்குடி பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இருப்பினும், அங்கு இதுவரை உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கை விடுத்தும் இதுவரை அது அமைக்கப்படவில்லை. இந்த மானியக் கோரிக்கையில் வரும் என்று எதிர்பார்த்தோம். அதுவும் நடக்கவில்லை. எனவே, வரும் ஆண்டில் அதனை கருணைகூர்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அங்கு ஏற்கெனவே இருக்கும் ஜுடிஷியல் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுக்கு நிலையான கட்டிடம் இல்லை; அதனையும் நீங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சிறப்பான வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வி. இராஜேந்திரன்

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 2 சிறந்த மானியக் கோரிக்கைகளை இம்மன்றத்தின் முன் வைத்த நமது இளம் அமைச்சர் அவர்கள் அமர்ந்து இருக்கின்றார். முதலில் என்னென்ன இனத்திற்காக 1994-95-ஆம் ஆண்டு இந்தத் தொகையைச் செலவிடப் போகின்றோம் என்று தனது கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்து இருக்கின்றார். அதிலே மிகவும் பாராட்டத் தக்கவற்றை முதலிலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

குறிப்பாக, மீனவ சமுதாயத்திலே பிறந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற அதுவும் தமிழ் நாட்டிலே இருக்கின்ற பெண்கள், கடலுக்குப் போன கணவன் என்ன ஆனானோ என்று அஞ்சி அஞ்சி காலம் தள்ளுகின்ற காலத்தில் இந்த shore to sea communication system-த்தை introduce செய்து இருக்கிறார்கள். அதை நான் உளப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போல, மைய அரசாங்கம் ரூ. 1.8 கோடி தந்து, 1983-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட மிக புரட்சிகரமான ஒரு சட்டம், Tamil Nadu Mearine Fisheries Regulation அஷஞ். அந்தச் சட்டத்தில் தற்போது டில்லியில் இருந்து கொடுத்து இருக்கின்ற கிட்டத்தட்ட 1.8 கோடி ரூபாயை இணைத்து, கோஸ்டல் பேட்ரோலுக்கு 5 படகுகள் வாங்குவதற்கு, கிட்டத்தட்ட கோஸ்ட் கார்டு பணியை இது செய்யும் என்று நினைக்கிறேன்; இந்தப் படகுகளை வாங்குவதற்குப் பண உதவியை அரசாங்கம் பெற்று இருக்கிறது; அதற்கான முயற்சியை மேற்கொண்ட அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்தப் படகுகளில் என்னென்ன சாதனங்களைப் பொருத்த வேண்டும் என்பதற்கு ஒரு டெக்னிகல் கமிட்டியை டில்லி நியமித்து இருப்பதாகத் தெரிவித்து இருக்கின்றார்கள். அதிலே நிச்சயமாக தமிழகத்திற்கு என்று பிரத்தியேகமான பிரச்சினை இருக்கிறது. இன்றைக்கு இலங்கைக் கடற்படையினரால் நமது மீனவர்களுக்கு இருக்கின்ற அச்சுறுத்தல்; அதனால், அதிலே நிச்சயமாக லைட் மெஷின் கன்-ஆவது இருக்க வேண்டும்; அதை நீங்கள் அறிவுறுத்தி, இந்த 5 படகுகளில்-சென்னையை மட்டும் வேண்டுமானால் விட்டுவிட்டு, மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம், தொண்டி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலே இருக்கின்ற படகுகளுக்கு நவீன படகுகளிலே லைட் மெஷின் கன் நிச்சயமாக இருக்க வேண்டும்.

பிற்பகல் 9-00

அதைப்போல, இரவில் ரோந்து செல்வதற்கு 'பவர்புல் சர்ச்லைட்ஸ்' கடலில் காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு எக்யூப்மென்ட்ஸ் அதிலே சேர்க்க வேண்டும். அதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நான் கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக அமைச்சர் அவர்களை மன்றாடி கேட்டுக் கொண்டிருப்பது, Marine Fisheries Regulation Act—எம்.ஜி.ஆர். அவர்கள் போட்ட அந்த ஆக்ட், அப்படியே இருக்கிறதே, அதிலே ஏன் கை வைக்கவில்லை என்றுதான். அதிலே சில அமென்ட்மென்ட்ஸ் கொண்டு வரக் கூடாதா என்பதுதான். காலத்திற்கேற்ற வகையில் இவைகளைத் திணிக்கக் கூடாதா என்றுதான், நான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். கேரளாவில் இன்றைக்கு அக்டோபர், நவம்பர் மாதங்களில் இறால் குஞ்சுகள் மிகச் சிறியதாக இருக்கும், அந்த குஞ்சுகளை பிடிக்கக்கூடாது என்பதற்கு ஆக்ட் இருக்கிறது. யாருமே

கடலுக்குச் சென்று சிறிய குஞ்சுகளைப் பிடித்துக்கொண்டு வர முடியாது. அது வளர்ந்தால்தான் மீனவர்களுக்கு நிறைய பணம். இந்தியாவிற்கு மிகப்பெரிய அன்னியச் செலாவணி. அதை குஞ்சிலேயே பிடித்து ஒரு கிலோ 4 ரூபாய் என்று விற்பதைவிட, அதை 4 மாதங்கள் வளர விட்டு 350 ரூபாய் ஒரு கிலோ என்று விற்பதற்கு இருக்கிற இந்த வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும். இந்த ஆக்ட்டிலே அதைக் கொண்டு வாருங்கள். தமிழ் நாட்டில் எந்த இடத்திலும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பிடிக்கக்கூடாது. இந்தக் கோரிக்கையை மீனவர்களே வைத்திருக்கிறார்கள். கடந்த முறை நான் பேசியபோது கூட இராமேசுவரம். . .

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் சுருக்கமாகப் பேசி முடித்து விடுகிறேன் என்று சொல்லி இருக்கிறார். அவர் பேசி முடித்த பிறகு உங்கள் பதிலுரையில் விளக்கம் சொல்லலாம். வேறு ஏதாவது குற்றச்சாட்டோ அல்லது மிஸ்லீடிங் பாக்டோ இருந்தால் குறுக்கிடலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொல்லிமடை என்ற வலையை அவர்கள் தடை செய்ய வேண்டுமென்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று கொல்லிமடை கடலில் போடக் கூடாது என்று தடை விதித்தோம். ஆனால் சிலபேர் நீதிமன்றத்திற்கு சென்று தடை வாங்கி விட்டதால் அதை அமல்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு கோரிக்கைகளை வைத்தேன். ஒன்று 'பாட்டம் ட்ரால்' கடலுக்கு ஆழத்திலே இரண்டு படகுகள் சேர்ந்து இடையில் இழுப்பது. அந்த 'பாட்டம் ட்ரால்' இருக்கக் கூடாது. அது ஒட்டுமொத்தமாக கடல் வளத்தையே இழுத்துக்கொண்டு போகிறது. அது பெரிய மீனிலிருந்து சிறிய குஞ்சு வரையில் அழித்துக்கொண்டு போகிறது. இதனால் கட்டுமரத்தில் போகிறவர்களுக்கு மற்றவர்களுக்கு தொழிலே கிடைக்காது. வசதி படைத்த பெரிய மீனவர்களால் மட்டும் அந்த Broad opening Bottom Trawl-B.O.B.T. என்ற மெதடை அடாப்ட் செய்ய முடியும். அது ஒட்டுமொத்தமாக அழித்து விடும். பல நூறு டன்களை அழித்துக் கொண்டு போய்விடுவார்கள். பல இலட்ச ரூபாய் இலாபம் அவர்கள்

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1994 ஏப்ரல் 29

ஈட்டி விடுவார்கள். மற்றவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. நாளாவட்டத்தில் ஒருசில இனங்கள் அழிந்து போகும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் 20 ஆண்டுகளுக்கு முன்பு நமது கடற்கரையில் கிடைத்த ஒருசில இன மீன்கள் இன்றைக்குக் கிடையாது. அவை அறவே அற்றுப் போய் விட்டன. அதனால் ஒருசில இனங்கள் அழிந்து போய்விடும். அதிலேயிருந்து நீங்கள் காப்பாற்ற வேண்டும். நான் கடந்த முறை வேண்டியது கூட, இந்த இரால் குஞ்சுகளை அக்டோபர், நவம்பர், பிரீடிங் சீசனில் பிடிக்கவே கூடாது என்பது. ஆக்ட்டிலே கொண்டு வாருங்கள். இன்றைக்கும் மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுடைய கோரிக்கைதான். அதைப்போல, இன்றைக்கு 'கல்ப் ஆப் மன்னாரில்' 'டகான்' என்ற கடல் பசு வகை பிடிக்கப்படுகிறது. அது Wildlife Act-ல் வருகிறது. ஏன் Fisheries Act-ல் அதைக் கொண்டு வரக் கூடாது? அதை இம்ப்ளிமென்ட் பண்ணுவதற்கு பாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர்ஸ், மற்றவர்கள் எல்லாம் கடற்கரையில் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் டகான் மீன்கள் இன்றைக்கு வேட்டையாடுவது குறைந்து இருக்கிறது. Forest Department action-ஆல் குறைந்திருக்கிறது. பிஷரிஸ்-ல் சேர்த்து கொண்டு வாருங்கள். அதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல coastal aqua culture இதிலே இன்றைக்கு எஸ்டேட்களை உருவாக்க வேண்டும். இன்டிவிஜுவலாக கொடுப்பதைவிட எஸ்டேட் உருவாக்கினால்தான் பாங்க் உடனே பைனான்ஸ் பண்ணுகிறேன் என்று சொல்கிறார்கள். இல்லையென்றால், நீங்கள் அனுப்பிய பல அப்ளிகேஷன்கள் Brackish water Fish Development Agency அனுப்பிய அப்ளிகேஷன்கள் எல்லா இடங்களிலும் நேஷனல் பாங்கில் பெண்டிங்காக கிடக்கிறது. அங்கே தர முடியாது என்கிறார்கள். எஸ்டேட் கொண்டு வரச் சொல்லுங்கள், எஸ்டேட்டிற்கு தருகிறோம் என்று சொல்கிறார்கள் அல்லது என்.சி.டி.சி. உள்ளே வருகிறேன் என்று சொல்கிறது. இதனால் எஸ்டேட்களை உருவாக்க வேண்டும். அதைப்போல, நம்முடைய அரசு இந்த 3 ஆண்டு காலத்தில் 2 முறை அப்ளிகேஷன் வாங்கி இருக்கிறது. உங்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு ஹை-லெவல் கமிட்டி இருக்கிறது. அதிலே ரெவின்யூ செகரட்டரி இருக்கிறார். டைரக்டர் ஆப் பிஷரிஸ், மெம்பர் செகரட்டரியாக இருக்கிறார். பல துறைகளின் செயலாளர்கள் இருக்கிறார்கள். இரண்டு முறை இந்த 3 ஆண்டு காலத்தில் அப்ளிகேஷன்களை வைத்திருக்கிறீர்கள். அது மிகுந்த தாமதம் என்று நினைக்கிறேன். எனவே மிக விரைவாக தாங்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

பிற்பகல் 9-05

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்பிலே ஒரு புதிய கொள்கையினை நம்முடைய முதலமைச்சர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் வடித்துத் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உயர்மட்டக் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே 5 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உறுப்பினர்களாக இருந்து செயல்படுகிறார்கள். அதிலே நோட்டிபிகேஷன் செய்து, விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்ட போது, ஏறக்குறைய 4 ஆயிரம் அப்ளிகேஷன்கள் எங்களுக்கு நிலம் வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால் நோட்டிபைட் லேண்ட் என்று பார்க்கும்போது, 4 ஆயிரம் ஹெக்டேர். இந்த 4 ஆயிரம் ஹெக்டேரைக் கொண்டு, 4 ஆயிரம் பேர்களுக்குத் தரவேண்டும் என்றால், இதிலே பிரையாரிட்டி செக்டார் இருக்கிறார்கள், small-scale entrepreneurs இருக்கிறார்கள், medium scale entrepreneurs என்று சொல்லக்கூடிய, நடுத்தர தொழில் முனைவோர்கள், large scale entrepreneurs என்று சொல்லக்கூடிய பெரிய தொழில் முனைவோர்கள் அனைவரும் இருக்கின்றார்கள். பெரிய தொழில் முனைவோர்களுக்கு நிலங்களைக் கொடுத்துவிட்டால், சிறிய தொழில் முனைவோர்களும், பிரையாரிட்டி செக்டாரும் பாதிப்பு அடைவார்கள் என்பதற்காக, பிரத்யேகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும், Industrial Aqua-culture Estate இதை எல்லாம் என்னுடைய பதில் உரையிலே நான் விரிவாகச் சொல்ல இருக்கிறேன் அந்த அடிப்படையிலே industrial estate கீழே இருப்பவர்களை கைதூக்கிவிட வேண்டும் என்ற லட்சிய நோக்கத்தோடுதான் industrial estate அமைப்பதற்காக அரசு பரிசீலனை செய்து, அந்த அடிப்படையிலே small scale entrepreneurs சிறுதொழில் முனைவோர்கள் மற்றும் பிரையாரிட்டி செக்டார் என்று சொல்லக்கூடிய முன்னுரிமை விண்ணப்பதாரர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. நீங்கள் கூட்டுறவு முறையிலே வருகிறீர்களா, அப்படி என்றால், உங்களால் எவ்வளவு முதலீடு செய்ய முடியும் என்பது போன்ற அனைத்து விவரங்களும் கேட்கப்பட்டு இருக்கின்றன. விவரங்கள் கிடைக்கப்பெற்றவுடன், இதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலம் நம்மைத் தாண்டி எங்கேயோ சென்று கொண்டு இருக்கிறது.

பத்திரிகையை டெய்லி புரட்டினால் மிக அதிகமான விளம்பரங்கள், கார்ப்பரேட் கம்பெனிகள் டெய்லி குதித்துக் கொண்டே இருக்கின்றன. எல்லாம் பப்ளிக் இஸ்யூஸ். அவ்வளவு வேகமாக அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்திய அரசே கூட 3 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமானமுள்ள வருமானம் இறாலிலிருந்து அன்னியச் செலாவணியால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர்களுடைய எக்கனாமிக் சர்வே சொல்கிறது. இருந்தாலும் 10 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டிப் போகும் என்று நினைக்கிறேன். மிகப் பெரிய அளவில் ரூபாய் கிடைக்கும். இதிலே தமிழகம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுமோ என்கிற அச்சம் இருக்கிறது. இந்த 1994-95-லே பணம் வரவேண்டும் என்று சொன்னால், மிக வேகமாக, தங்கள் தலைமையிலே இருக்கிற அந்தக் குழு கூடி, விரைவிலே முடிவு செய்து, அவர்களுக்கு நிலத்தை ஒதுக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே B.F.D.A. அமைக்கப்பட்டு - மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே இந்த ஆ.ஊ.ஈ.அ.-க்கு லோன் தரவில்லை என்று. அப்படி இருக்கின்றபோது, நிலம் ஒதுக்கிவிட்டால், எப்படி அவர்கள் லோன் வாங்கமுடியும்?

திரு. பி. வி. இராஜேந்திரன் : நான் சொல்வது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, 100 ஏக்கருக்கு மேலே இருப்பது ஒரு கேட்டகரி. 50 ஏக்கருக்கு மேலே இருப்பது வேறுவேறு கேட்டகரி. அவர்களால் முடியும். 2 ஹெக்டேர், 5 ஹெக்டேருக்குக் கீழே இருக்கிற அவர்களால்தான் பணம் போட முடியாது. அவர்களுக்குத்தான் தாங்கள் உதவவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு prawn hatchery — Tamil Nadu Fisheries Development Corporation-லே இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்ற 'ஹேச்சரி' நீலாங்கரையிலே இருக்கிறது. அதனுடைய செயல்பாட்டைப் பார்த்தால், 16 மில்லியன், 1.6 கோடி குஞ்சுகளை ஒரு ஆண்டுக்கு உற்பத்தி செய்ய முடியும். இன்றைக்கு 1½ கோடி இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய அந்த நிறுவனம் 10 லட்சம் குஞ்சுகளைத்தான் உற்பத்தி செய்திருக்கிறது. அங்கே இருக்கிற தாய் இறாலை நீங்கள் தூண்டிவிட்டு, அதிகமாகக் குட்டி போட வைக்கவேண்டும். அதிலேயிருந்து 1¼ லட்சம் ரூபாய்தான் ரெவின்யூ வந்திருக்கிறது. இன்றைக்குத் தனியார் பிரான் ஹேச்சரியிலே, போட்ட பணத்தைப் போல் 4 பங்கு அளவிற்கு எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 4 பங்கு,

நான் சொல்வது வேடிக்கையல்ல. 50 லட்சம் ரூபாய் 'ஹேச்சரியிலே' இன்வெஸ்ட் செய்தவர்கள், 6 மாதத்திலேகூட அதை எடுத்துவிடுகிறார்கள். இந்த 50 லட்சம் ரூபாய் கிடைத்துவிடுகிறது. காரணம் இன்றைக்கு 1 லட்சம் 'பி மோனாடாம்' கருப்பு இறால் குஞ்சு 500 ரூபாயைத் தாண்டிச் சென்று கொண்டு இருக்கிறது. நானே எனக்கு இறால் குஞ்சு வேண்டும் என்று பலமுறை நம்முடைய கார்ப்பரேசனுக்கு போன் செய்தேன். எனக்கு அடிக்கடி போனிலே வந்து கொண்டிருக்கிறது இல்லை சார், அவர் இல்லை சார், இவர் இல்லை சார் என்று. நான் பின்பு, வெளியிலே போய் வாங்கினேன் கடைசியாக. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கவேண்டும். இன்றைக்கு பிரான் ஹேச்சரி வைத்திருக்கின்றவர்களுடைய ரெஸ்கியூவிற்கு வரவேண்டும். அங்கேயிருக்கின்ற தாய் இறால் அதிகமான குஞ்சுகளைப் போட வைக்கவேண்டும். அதற்கு ஊக்கசக்தியை நீங்கள் ஒரு ஒரு கேடலிஸ்டாக இருந்து செய்யவேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பேக்வார்ட் கிளாசஸ் கமிஷன். இன்றைக்கு தமிழக அரசு மிகப் பெரிய சாதனையாகச் செய்திருக்கிறது. ரொம்ப நாட்களாக அதைப் போடவில்லை. எர்லியராக இருந்த, அம்பாசங்கர் கமிஷனினுடைய ரெக்கமன்டேசன்கள் எல்லாம் ஏற்கனவே புரட்சித் தலைவி அவர்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்று. அதனால், பிற்படுத்தப்பட்ட சமுதாயம் நீண்டகாலமாகத் தவம் இருந்து பெற்ற கமிஷனாக அது வந்து இருக்கிறது. இது மிகப் பெரிய பிரச்சினைகளை, social problem-களை எல்லாம் solve செய்தாக வேண்டும். ஆனால் இன்றைக்கு மண்டல் கமிஷனுடைய ரிப்போர்ட் வந்து இனிமேல்தான் சால்வ் செய்யப் போகிறது என்று நினைக்கிறேன். இதுவரைக்கும் அது மிகப் பெரிய அழிவை நோக்கித்தான் அழைத்துச் சென்றது. இதனால் கிளாஷ், எங்கு பார்த்தாலும் அப்பர் கிளாசுக்கும் மிட்டில் கிளாசுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே ஒரு கிளாஷ். எங்கு பார்த்தாலும் self-immolation இதெல்லாம் தமிழ்நாட்டிலே நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். காரணம் நான் எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், அரசு தந்திருக்கிற terms of reference அதிலே item no. 3 removal of creamy layer from the benefit of reservations of other backward classes O.B.C.-லே யிருந்து remove பண்ணுகிற creamy layer-ஐ எடுக்கச் சொல்லியிருக்கிறீர்கள். ஜஸ்டிஸ் ரத்னவேல் பாண்டியன் அவர்களுடைய மிகப் பெரிய பேமஸ் ஜட்ஜ்மெண்ட் அது. அதன் அடிப்படையில் இப்போது இது வந்துவிட்டது என்கிறீர்கள். அரசாங்கத்திற்கு வந்துவிட்டது அது, active consideration of the Government என்று சொல்லியிருக்கிறீர்கள். இதனால் தமிழகத்தில்

விளைவுகள் மோசமாகப் போய்விடக் கூடாது, என்னைச் சேருங்கள், உன்னைச் சேருங்கள், ஏன் எடுத்தீர்கள் என்று போராட்டம்., ஆர்ப்பாட்டம் இதெல்லாம் நடக்கக் கூடாது. அதனால் நிச்சயமாக இது கவர்ன்மென்டினுடைய கன்சிடரேஷன் மட்டுமல்ல. ஹவுசிலே வைத்து டிபேட் செய்யவேண்டும். அப்படி இல்லையென்றால் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அரசு நிச்சயமாக இதை விவாதிக்கவேண்டும். இது மிகப் பெரிய மோசமான விளைவுகளை வடக்கிலே உண்டுபண்ணியது மண்டல் கமிஷன் தன்னுடைய பரிந்துரைகளை உடனடியாக அவசர அவசரமாகச் சொன்னது அன்றைக்கு இருந்த பிரதமர் மாண்புமிகு வி.பி.சிங், டெபுடி பிரைம் மினிஸ்டர் தேவிலால் அவர்களுக்கு இடையே இருந்ததாகக் கூறப்படுகின்ற அரசியல் பிரச்சினைகள், காரணமாக அவசர அவசரமாக மண்டல் கமிஷன் பரிந்துரை இம்பிளிமென்டேஷனுக்கு கொண்டு வரப்பட்டது. அதனால் முதலிலே தீக்குளித்து இறந்துபோன மாணவர்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகத்தில் வரக் கூடாது. அதைப் போலவே இரண்டாவது Reservation in promotion is under consideration. அதையும் சேர்த்திருக்கிறேன். Reservation in promotion அதிலேயும் பிரச்சினைகள் வரும். இப்போது அந்தக் கமிஷன் ஏற்கெனவே அந்த ரிப்போர்ட்டை சப்மிட் பண்ணிவிட்டது என்கிறீர்கள். அதனால் நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இதைக் கையாள வேண்டுமென்று இந்த நேரத்திலே மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 9.10

இதைப்போல கச்சத்தீவைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கத்தை குறை சொல்லத் தயாராக இல்லை. தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் யதார்மான ஒன்றைப் பார்க்கவேண்டும். International agreement - Whatever our Indira Gandhiji did is a history. It is a past history. அதிலேயும் நீங்கள் எங்களைப் பார்த்து காங்கிரஸ்காரர்களே, நீங்கள்தான் காரணம், நீங்கள் தான் காரணம் என்று சொல்வதனால் அதைத் தீர்த்து விடமுடியாது. நான் மன்றாடிக் கேட்கிறேன். இதிலே அரசியல் வேண்டாம். இன்றைக்கு மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே இருக்கின்ற South Asian Study அவர்கள் நிறைய ஸ்டடி பண்ணி யாரோ ஒருவர் தீசிஸ் பண்ணியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதிலே ஒரு ரிப்போர்ட்டைப் பார்த்தேன். இது ஒரு சர்வதேச ஒப்பந்தமாகி விட்டுக்கொடுக்கப் பட்டிருக்கின்றது. இதிலேபோய் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொல்வதைப்போல அது செவிடன் காதிலே ஊதியசங்கு என்றெல்லாம்

1994 ஏப்ரல் 29] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

சொல்லி, பிரயோசனம் கிடையாது. ஏனென்றால் கண் தெரியாதவனால் கிளியைப் பார்த்து எல்லாம் பாராட்டமுடியாது. அதை நான் குறைசொல்லவில்லை. இருக்கின்ற யதார்த்தத்தை இன்றைக்கு. . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிக்க விடுங்கள், பேசி முடித்த பிறகு கேளுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு அமைச்சரவர்கள், இதிலே அரசியலே வேண்டாம். நான் எதிர்க்கவில்லை. ஒரே நிமிடம். (குறுக்கீடு) கிடையாது. நான் எதிர்க்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். அவர் என்ன சொன்னார் என்றால், நாம் தீர்மானம் இயற்றி அனுப்பியிருக்கிறோம். ஜனாதிபதியிடம் அது போயிருக்கிறது என்று சொன்னார். தீர்மானம் எல்லாம் ஜனாதிபதிக்குப் போகாது. ஏனென்றால் நாம் பில் பாஸ் பண்ணவில்லை. உங்களுடைய நோக்கம் நல்லது. ஆளுங்கட்சியினுடைய நோக்கம் நல்ல நோக்கம். நான் ஏற்கெனவே இந்த அவையிலே பாராட்டியிருக்கிறேன். மீனவர்களைக் காக்கின்ற இந்த நோக்கம் நல்ல நோக்கம். முதலமைச்சரவர்கள் சுதந்திர தினவிழா கொடியேற்றத்தின் போது கூட இதைப் பேசியிருக்கின்றார்கள். அந்த ஸ்பிரிட் இருக்க வேண்டுமென்று தான் சொன்னேன். அப்படிச் சொன்னதைப் போல்தான் ஏதோ நடக்கும். We are neither federal nor unitary. நாம் ஏதோ ஸ்டேட் என்று இருக்கிறோம். நமக்கு பெடரல் என்று எல்லா அதிகாரமும் கிடையாது. அதேசமயம் நாம் யூனிட்டரி என்று தனி நாடாகவும் இல்லை. நமக்கு இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, நீங்கள் மைய அரசுக்கு ஓரளவிற்கு ப்ரஷர் கொடுக்கமுடியும். இப்படி தீர்மானங்களை இயற்றுவதை நான் தாராளமாக வரவேற்கிறேன். ஆனால் நிதர்சனம் என்னவென்று சொன்னால் இன்றைக்கு சிந்தனையாளர்கள் - இன்டலக்சுவல்ஸ் எல்லோரும் சேர்ந்து சொல்வதெல்லாம்கூட இன்றைக்கு கச்சத்தீவை இந்திய அரசாங்கம் லீசுக்குப் பெறவேண்டுமென்று சொல்கிறார்கள். அதுதான் இன்றைக்கு சாத்தியம். நமக்கு மேற்குக் கரையிலே உரிமை இருக்கிறது என்று சொன்னாலும், அடுத்தடுத்து பேசிக்கொண்டிருப்போம். நான் உங்களோடு சேர்ந்து பேசுகிறேன். அதிலே அரசியலைத்தான் நான் பேசமுடியும். ஒரு நிதர்சனம், கலெக்டிவ்-ஆக அவர் கடைசியில் சொல்லியிருப்பது, கச்சத் தீவை மீண்டும் லாங் டர்ம் லீசாக இந்தியா பெறவேண்டும். ஏனென்றால் இன்றைக்கு பிரதமர் ஒட்டுமொத்தமாக உங்களுடைய கோரிக்கையை நிராகரிக்கிறேன் என்று சொல்லவில்லை.

முதல்வருடைய தபாலுக்குக் கூட ஒரு சர்வதேச ஒப்பந்தம் விட்டுக் கொடுத்தது, கொடுத்ததுதான். இன்றைக்கு சைனா சொல்வது மாதிரி இல்லை. ஹாங்காங்கை நாங்கள் இங்கிலாந்திடம் லீசுக்குக் கொடுத்திருக்கிறோம், என்று சைனா க்ளீனாகச் சொல்கிறது. அதுவரைக்கும் அவர்கள் உள்ளே நுழையவில்லை. லீஸ் கொடுத்தது கம்யூனிஸ்ட் கவர்ன்மெண்ட்தான். ஆனால் அவர்கள் உள்ளே நுழையமுடியவில்லை. ஆனால் எப்போது அந்த லீஸ் டர்ம் முடிகிறதோ, லீஸ் முடிந்த அன்றைக்கு அடுத்த நாள் அது வந்து பீப்பிள் சைனாவோடு சேர்ந்துவிடும். செங்கொடி அங்கே பறக்கும். யூனியன் ஜேக் பிளேக் எல்லாம் கீழே இறங்கிவிடும். ஒத்துக்கொள்கிறேன். அதைப்போல ஒப்படைக்கப்பட்ட இடமாக இருப்பதால் அதிலே நிதர்சனம். நாங்கள் இருந்துதான் தீர்மானத்தைப் பாஸ் பண்ணினோம். அதற்காக விரோதமாகப் பேசவில்லை. தீர்மானம் உங்களுடைய ஸ்பிரிட். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலேயும் இண்டலக்சுவல்ஸ் எல்லாம் என்ன சொல்கிறார்கள்? அதையும் கொஞ்சம் காது கொடுத்து கேட்போம். அதற்காக அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கச்சத் தீவை மீட்போம் என்ற உங்களுடைய குறிக்கோள் இருக்கட்டும். ஏனென்றால் நீங்கள் ஆரம்பத்திலேயே 3 படி இலட்சியம், ஒரு படி நிச்சயம் என்று சொன்னதனால், அதைக் கொஞ்சம் வேண்டுமென்றால் குறைத்துக்கொள்ளுங்கள். பெறுவோம் என்பது இருக்கட்டும். லீசுக்கு முதலில் பெறுங்கள். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) சொன்னவர்களைத்தான் சொல்கிறேன். அதனால் பெறுவது என்பது உங்களுடைய லட்சியமாக இருக்கட்டும். முதலில் லீசுக்கு பெறுவதை நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மைய அரசிற்கு நாம் அதற்கான ப்ரபோசல்ஸ் அனுப்பவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) முடித்துக்கொள்கிறேன்.

கோஸ்டல் அக்வா கல்சர் நன்றாக வளரவேண்டும். இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து வைத்துக்கொண்டு, அவர்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பைத் தந்து கொண்டிருக்கின்ற இயக்கமாக இங்கே கம்யூனிஸ்ட் இயக்கம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய வேலைவாய்ப்பு அதிகமாகப் போய் விடுகிறது என்பதுதான் அவர்களுடைய அச்சம். ஏனென்றால் அதிகம் பார்த்தீர்கள் என்றால், மேன்பவர் டேஸ் அக்ரிகல்சரில்தான் அதிகம் வரும். இதிலே அதிகம் வராது. இது ஆரம்பத்திலே சிவில் ஒர்க்ஸ். அதற்குப் பிறகு இறாலுக்கு விட்டுவிடுகிறோம். கோடிக்கணக்கான ரூபாய்க்கு இறால் வர ஆரம்பித்து விடும். அவர்களுக்கு வேலை கிடைக்காது. இன்றைக்கு கிழக்கு தஞ்சாவூர்

1994 ஏப்ரல் 29]

மாவட்டத்திலே 8 லட்சம் பார்ம் ஒர்கர்ஸ் இருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு வேலை குறைவாக இருக்கிறது அதனால் அச்சப்படுகிறார்கள். அவர்களுடைய அச்சத்தை போக்குகின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து பிரான் கல்சர் வளரவேண்டும். ஏதாவது புதுமையாக வந்தால் கம்யூனிஸ்டுகள் அதனை பிளாக் பண்ணத்தான் பார்ப்பார்கள்.

பிற்பகல் 9.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடலாம்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : ஒரே ஒரு நிமிடம். நேவல் டிட்டாட்ச்மென்ட் என்னுடைய தொகுதியிலே 2 இடத்திலே இருக்கிறது. அவர்கள் மீன்பிடிப்படகுகளைத் தான் வாடகைக்கு எடுத்துக் கொண்டு கடலிலே செல்லுகிறார்கள். கோவிந்தசாமி என்பவருடைய படகை அவர்கள் 2 ஆண்டுகளுக்கு முன்பே வாடகைக்கு எடுத்துச் சென்று அது கடலிலே மூழ்கிப் போய் விட்டது. நேவி இதுவரைக்கும் அவருக்கு காம்பன்சேஷன் தரவில்லை. நானும் எழுதிப் பார்த்தேன், பேசிப் பார்த்தேன். டி.டி.சி.யிலே கூட கலெக்டரிடம் சொல்லி பார்த்தேன். வாங்கித் தருகிறேன், வாங்கித் தருகிறேன் என்று சொல்லுகிறார்களே ஒழிய இன்னும் வாங்கித் தரவில்லை. அவர்களுக்கு அந்தப் பணம் இதுவரையில் கிடைக்கவில்லை. வாடகைக்கு எடுத்துக்கொண்டு போய் கடலிலே மூழ்கினால் நேவிதான் தரவேண்டும். நீங்கள் அதற்கு ஆவன செய்யவேண்டும். அடிக்கடி நேவியினுடைய ஆபிசர்களோடு ஜாயின்ட் சிட்டிங் உட்காருகிறீர்கள். ஆகவே நீங்கள் ஆவன செய்து அந்தப் பணத்தை பெற்றுத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இத்தோடு முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பி.வி.ராஜேந்திரன் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஒரு கருத்தைப்பற்றி ஒரு சம்பவத்தைப் பற்றி தவறாக இந்த அவையிலே அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஒன்று 1974 ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த பாரதப்பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இலங்கை அரசோடு ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். அந்த இலங்கையிலே உள்ள கச்சத் தீவை இந்தியாவிலே இருக்கக் கூடிய மீனவர்களும் இலங்கையிலே இருக்கக் கூடிய மீனவர்களும் ஒய்வு எடுப்பதற்கும் வலைகளை உலர்த்துவதற்கும் தங்குவதற்குமாக இரண்டு அரசுகளும் ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த கச்சத் தீவை மீண்டும் நாம் லீசுக்கு

இலங்கை அரசிடத்திலேயிருந்து எடுக்க வேண்டும் என்று சொன்னால், நம்முடைய உரிமையை விட்டுக் கொடுத்ததாக ஆகிவிடும். அதைச் சரியாக அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அன்றைக்கு இருந்த பாரதப்பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை அவருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அத்தோடு என்னுடைய மாவட்டத்திலே கம்யூனிஸ்டுகள் அதிகமாக இருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் நிரம்ப இருக்கிறார்கள். வேலை வாய்ப்பை பெறுவதைப் பற்றிய அந்த நோக்கத்தில் நான் சொல்லவில்லை. பொதுவாக இந்த இறால் மீன் வளர்ப்பதன் மூலமாக யதார்த்தமாக எல்லா பகுதி மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். குடிநீர், விவசாயம் போன்றவை அதிகமாக பாதிக்கப்படுவதன் காரணத்தால் தான் குறிப்பிட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. விவசாயிகளுக்கும் மாற்று வேலை வேண்டும் என்பது யதார்த்தம். அதற்கு அரசாங்கம் வேறு திட்டங்களை கொண்டு வரவேண்டும். அது எந்த நிலமாக இருந்தாலும் அங்கே இருக்கக் கூடிய குடிதண்ணீர் உப்புத் தண்ணீராக மாறக்கூடிய அபாயம் தொடர்ந்து இருக்கிறது என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர், அவர்களின் பதிலுரை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இப்போது நேரம் 9-17.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : 70 சதவீத மக்களுடைய பிரச்சினை (சிரிப்பு) அதனால் 2 நாட்களாக உட்கார்ந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வப்போது நீங்கள் குறுக்கிட்டுப் பதிலும் சொல்லியிருக்கிறீர்கள். அதையும் மனதிலே கொண்டு கொஞ்சம் சுருக்கமாக முடித்தால் காலையில் உறுப்பினர்கள் மற்ற மற்ற பணிகளுக்குச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடித்துவிட முயற்சி செய்கிறேன். தெய்வத்துக்கு அன்பு ஒன்றுதான் தெரியும். தெய்வத்துக்கு பகைமை என்பதே கிடையாது. ஆம், மாண்புமிகு இதய தெய்வத்திற்கு அன்பு வழி ஒன்றுதான் தெரியும். அவர்களிடம் உள்ள அபரிமிதமான அன்பு தான் இன்று தமிழகத்தை ஆண்டு வருகிறது. தமிழக மக்களை நல் வழியில் நடத்திச் செல்கிறது. சமூகக் காவலர் ஆகவும், நீதி தேவதையாகவும், சமூக நீதி படைத்த

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயக்குமார்]

வீராங்கனையாகவும் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்களின் நிலையான சீர்மிகு ஆட்சி அமைந்துள்ளது தமிழகத்தின் மண் செய்த புண்ணியம் என்றே கூறலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதய தெய்வம் அன்பும் அவரது எல்லைகளற்ற சாதனைகளும் வரலாற்றில் நிலைத்து நிற்பதாக இருக்கிறது, அனைத்திந்திய அளவில் திடமான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டு தன்னிகரற்ற தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆக்கபூர்வமான சிந்தனையை அவரது சிந்தனையின் சக்தியை அவரது கருத்துக்களின் ஆழத்தை இவ்வுலகமே அறியும். பாலூட்டும் அன்பிலே அன்னையாகவும், பழகும் உறவிலே பிள்ளையாகவும், கருணை மனத்திலே கங்கையாகவும், கல்லார்க்கும் கற்றவர்களுக்கும் தெய்வமாகவும் இருந்து வருகிற நம் புரட்சித் தலைவி அவர்கள் பசித்தவனுக்கு உணவு தருவது, வறுமையில் வாடுபவருக்கு ஆதரவு தருவது, நிம்மதியற்றவர்களுக்கு ஆறுதல் தருவது, ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆக்கம் தருவது, ஏழைகளுக்கு ஏற்றங்களைச் செய்விப்பது, நலத் திட்டங்கள் மூலம் அல்லல்படும் மக்களுக்கு நன்மைகள் செய்வது இதனையே தன்னுடைய வாழ்க்கையின் நெறியாகக் கொண்டவர்கள். அன்பு ஆக்கத்தை தரும், அன்பு ஊக்கத்தை தரும், அன்பு வளர்ச்சியை தரும், அன்பு வளத்தை தரும், அன்பு இனிமையை வளர்க்கும், அன்பு உண்மையை நிலைத்திடச் செய்யும், அன்பு ஆதரவைப் பெருக்கும், அன்பு ஆறுதலைத் தரும். அன்பு பெருமையை வளர்க்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படி அனைத்தும் அன்புக்குள் அடங்கும்.

பிற்பகல் 9.20

இப்படி அன்பின் பரிணாமங்கள் அனைத்தையும் தன்னுள் கொண்டுள்ள நமது இணையற்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வாழ்க்கையின் சாரமே மற்றவர்களுக்கு நன்மை செய் என்பதுதான். இந்த நேரத்தில் கவிஞன் பிரெஸ்லியின் கூற்று நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் குறிக்கோளுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் கூற விரும்புகிறேன். நன்மை செய், நன்மை செய் உன்னால் இயலும் வகையில் எல்லாம், உன்னால் இயலும் நெறியில் எல்லாம், உன்னால் இயலும் அளவில் எல்லாம், உன்னால் இயலும் இடத்தில் எல்லாம், உன்னால் இயலும் நேரம் எல்லாம், உன்னால் இயலும் மனிதர்களுக்கெல்லாம் நன்மை செய், நன்மை செய். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தக் கவிதைக் கூற்றுக்கு ஏற்ப நன்மை செய்வதைத் தவிர வேறு ஒன்றையும் செய்தறியாத நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருவடி

ஒற்றி என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு அவர் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி எனது அன்புத் தாயின் ஆசியோடு இந்த மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்கள் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்புவியின் உச்சியில் பூரணமகிழ்ச்சியில் அனைத்து உயிரினங்களும் மகிழ்ச்சியுடன் இருக்க ஆதாரமாக அமைவது உணவு என்பதை நாம் அனைவரும் அறிவோம். உணவில் முக்கிய உணவாக கருதப்படுவது கடல் உணவு. எனவேதான் கடல் உணவு பெருக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மீன்வளத்துறை மூலம் நீலப்புரட்சி ஏற்படுத்த அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் செய்யப்பட்டு வருகிறது. புதிய சிந்தனைகளும், பொங்கிவரும் கற்பனை வளமும் கொண்ட நமது இதயத் தாயின் மனதில் அன்பும், அருளும், உறுதியும், செயலில் திறமையும் இருப்பதால்தான் மக்களுக்காகக் கடமை செய்வதை எப்போதும் கருத்திற்கொண்டு தினம் தினம் பணிகளைச் செய்து வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆறுகோடி தமிழர்களின் இதயங்களில் இதய நாளமாகவும், நாடி நரம்புகளில் எழுச்சி கொள்ளச் செய்யும் சக்தி தேவதை யாகவும் திகழ்ந்து வருகிறார்கள். இத்துணை ஆற்றல் கொண்ட நமது தலைவியின் பொற்கால ஆட்சியில் மீனவர்களின் நலன் நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிறது. மீன்வளமும் மீனவர்களின் நலனும் ஒருங்கே பாதுகாக்கப்பட்டு வருவதால்தான் 1993-94 ஆம் ஆண்டில் மீன்பிடிப்பு 4.22 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டது. இவ்வருடம் 4.51 இலட்சம் டன்னாக மீன்பிடிப்பை அதிகரிக்க மீனவர் குலதெய்வமாய் விளங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு ரூ.413.49 கோடி அன்னியச் செலவாணி மீன்பிடிப்பால் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.76.04 கோடி அதிகமாகும். திக்கெல்லாம் புகழ்மணம் பரப்பும் திராவிடர் தலைவியாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அயராத உழைப்பினால்தான் இந்த அளவுக்கு அன்னியச் செலவாணி கிடைத்ததென்று ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நலன் பயக்கும் நல்ல நல்ல திட்டங்களின் ஊற்று நம் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையில்தான் என்பதை இந்த நாடே அறியும். அவரது நீலப்புரட்சி கொள்கையால்தான்

1994 ஏப்ரல் 29] [திரு. டி.. ஜெயகுமார்]

மீன்வளம் பெருகி மீனவர் நலன் பாதுகாக்கப்பட்டு வரப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் இது குறித்த அனைத்துத் திட்டங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இது மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எச்.எம். ராஜு, எம். சுந்தரதாஸ், எஸ். ராசாராமன், உ. பலராமன், ஜி. காளன், ஜி. பழனிசாமி, ஆர். அப்பு நடேசன், ஏ. தெய்வநாயகம் ஆகியோர் கொள்கை குறித்து விவாதிக்க என்று கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்திற்குப் பதிலாக அமையும் என்று கருதுகிறேன்.

பொழுதுபோக்கிற்கும், விளையாட்டிற்கும் உரிய ட்ரவுட் இன மீன்கள் இந்தியாவிலேயே உதகையிலும், காஷ்மீரிலும் உள்ள இந்த அபூர்வ இன மீன்கள் அழிந்துவிடாமல் இருக்கவும், செயற்கை முறையில் குஞ்சுகள் உற்பத்தி செய்யவும் முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வகை மீன்கள் எண்ணெய் எடுப்பதற்கு ஏற்றவைகளாக இல்லாததால் தொழிற்சாலை அமைக்க அவசியம் இல்லை. பிடிக்கப்படும் மீன்கள் உடனுக்குடன் விற்பனை செய்யப்பட்டு விடுவதால் விற்பனை மையங்கள் அமைக்க அவசியம் எழவில்லை. இந்த விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் எச்.எம். ராஜு அவர்கள் கேட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களுக்குப் பதிலாக அமையும்.

நன்னீர் இறால் வளர்ப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு ஹெக்டேர் நிலம் தேவைப்படுவதாலும், வேலூர் சதுப்பேரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிக்கு அருகே அரசுக்குச் சொந்தமான இடம் இல்லை என்பதாலும், சதுப்பேரியில் வருடந்தோறும் நீர் இல்லாமல் இருப்பதாலும் நன்னீர் இறால் வளர்ப்பு மையம் தொடங்க இயலாது. இருப்பினும் தனியார் நன்னீர் இறால் வளர்க்க முன்வந்தால் தொழில்நுட்பம் மற்றும் தேவைப்படும் உதவிகள் அளிக்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தயாராக உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடல் மீனவர்களுக்கு மட்டும் இலவசமாக வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக தற்போது உள்நாட்டு மீனவர்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த இயலவில்லை.

மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உள்நாட்டு மீன்விற்பனைத் திட்டத்தை மேம்படுத்த மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ.48.24 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கி உள்ளார்கள்

என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டத்தின் கீழ் மீன் இருப்பு செய்யும் கொட்டில் 10-ம், சீதோஷ்ணத்தை காக்கும் 3 டன் ஊர்திகள் நான்கும், சில்லரை விற்பனை நிலையங்கள் 12-ம், ஐஸ் பெட்டிகள் பொருத்தப்பட்ட சைக்கிள்கள் 200-ம், தவிர சாதாரண சைக்கிள்கள் 65-ம் வழங்கப்படும். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உடுமலைப்பேட்டை, திருவண்ணாமலை, திருப்பூர், மற்றும் கோவை நகரங்களில் நான்கு மீன் விற்பனை அங்காடிகள் அமைக்கப்படும். இந்த அங்காடிகளில் குளிர்பதன முறையில் பாதுகாக்கப்பட்ட தரமான மீன்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும். தவிர கிருஷ்ணகிரி, பழனி, அருப்புக்கோட்டை ஆகிய மூன்று வட்டங்களில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மீன்களைப் பதப்படுத்திய நிலையில் எடுத்துச்செல்ல தலா ஒரு ஊர்தியும், மாவட்ட அளவில் கன்னியாகுமரி மாவட்ட மீனவர் இணையத்திற்கு ஒரு ஊர்தியும் வழங்கப்படும். உள்நாட்டு மீனவர்களுக்கு அனைத்து காலத்திலும் பதப்படுத்தப்பட்ட தரமான மீன்கள் நியாய விலையில் கிடைக்க வழி செய்வதோடு உள்நாட்டு மீன்களின் விற்பனை பெருகவும் வாய்ப்பை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

பிற்பகல் 9.25

தருமபுரியில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு மீனவர்களுக்கு வலைகள் வாங்குவதற்காக ரூ.388 லட்சம் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கூறிய தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன், திரு. கே.ஏ. மனோகரன் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்களுக்கு பதிலுரையாக அமையும் எனக் கருதுகிறேன்.

அலைகடலில் அல்லல்படுகின்ற மீனவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு இதுவரை அரசினால் 20319 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இன்னமும் 8985 வீடுகளின் கட்டுமானப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இவ்வீடுகளும் விரைவில் கட்டி முடிக்கப்படும். இந்த ஆண்டு 2000 வீடுகள் ரூ.5.20 கோடி செலவில் கட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வீடுகள் ஒவ்வொன்றும் ரூ.26,000/- மதிப்பீட்டில் மீனவர்கள் தாங்களாகவே கட்டிக்கொள்ளும் வகையில் புதிய உத்தரவையும் வழங்கியுள்ளார்கள். இந்த நேரத்தில் கடல் மீனவர்களின் வாழ்க்கை நிலையைச் சித்தரிக்கும் கவிஞன் ஒருவனின் கருத்தை நினைவுகூர நான் விரும்புகிறேன். கடல் மீனவன் ஒருவன் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது பயங்கர சூறாவளியும், மழையும் ஏற்பட்டதினால் கலக்கம் அடைந்த அவனது மனைவி கடலில் தத்தளிக்கும் அவளது கணவனைப் பற்றிய சோகத்தில் இருக்கும் சமயத்தில் ஓலை வீட்டின் கூறையிலிருந்து ஒழுகும் மழைநீர் தனது குழந்தை மீது விழுவதைக்கண்டு மழைத்துளிகள் மழலையின் மீது விழாதிருக்க குழந்தையை மார்போடு அணைத்துக் கொள்கிறாள். அப்படி இருந்தும் அவளது குழந்தை நனைகிறது. மழைநீரால் அல்ல - அந்த அன்புத் தாயினுடைய கண்ணீரால், இத்துயர நிலையை நிரந்தரமாக களையத்தான் மீனவர்களின் காவல் தெய்வமாகத் திகழும் நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒழுகாத வீடுகளைக் கட்டித்தந்து (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் மீனவர்களின் பழுதடைந்த வீடுகளைப் பழுதுபார்க்க அதிகபட்சமாக ரூ.5000/- வரையில் 'ஹட்கோ' நிதி உதவியுடன் குறைந்த வட்டியிலே கடன் வழங்க பரிசீலித்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தவிர புயல் பாதுகாப்பு இல்லங்களை கட்டித்தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி.சுவாமிநாதன், திரு. ஆர்.சிங்காரம் மற்றும் திரு. பழனிசாமி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்களுக்குப் பதிலாக அமையும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேங்காப்பட்டிணத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம், குளச்சலில் ஒரு மீன்பிடி துறைமுகம் அமைப்பது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்து ரூ.26.00 கோடிக்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வேண்டியும், தொழில்நுட்ப ஆய்வுக்கு முதல் கட்டமாக ரூ.10.00 லட்சம் ஒதுக்கீடு செய்யக் கோரியும் மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்று நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் பகுதி, தோப்புத் துறையில் மீன்வளம் தலைமைப் பொறியாளரால் தள

[திரு. டி. ஜெயகுமார்] [1994 ஏப்ரல் 29

ஆய்வு செய்யப்பட்டு ரூ.150.00 லட்சத்துக்கு உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டதில்; பெங்களூர் மத்திய கடலோர மீனளப் பொறியியல் இயக்குநரின் கருத்து கேட்கப்பட்டதில் தொழில் நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது சாத்தியமில்லை என்பதால் மாற்று யோசனையாக வேதாரண்யம் கால்வாயினால் ஏற்பட்டுள்ள இயற்கையான வசதிகளை பயன்படுத்தி படகுகள் தங்க வசதி ஏற்படுத்தலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, ஆர்.அப்பு நடேசன் ஆகியோருக்கு பதிலாக அமையும்.

பிற்பகல் 9.30

உரிமைக்குப் போர்க்குரல் எழுப்பும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நமது மீனவர்களை இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலில் இருந்து காப்பாற்ற தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். தாக்குதல் நடந்த ஒவ்வொரு நிகழ்வின்போதும் உடனுக்குடன் தமிழக அரசின் வன்மையான கண்டிப்பைத் தெரிவித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நமது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். மேலும் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவருடன் மைய அரசு மூலமாக தொடர்பு கொண்டு பிடிபட்ட மீனவர்களையும் அவர்களது படகுகளையும் தாயகம் கொண்டுவர உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நமது மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லாமல் இருக்க இந்தியக் கடலோர காவல்படையினர் கடலில் ரோந்து செல்கின்றனர். இதைத் தவிர ரோந்து படைகளை ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சம்பவங்களில் இறந்துபோன மீனவர்கள், காயம் அடைந்த மீனவர்கள், சேதம் அடைந்த படகுகள் ஆகியவைகளுக்கு நஷ்ட ஈடாக ரூ. ஒரு கோடியே 32 லட்சத்து 67 ஆயிரத்தை இலங்கை அரசிடம் பெற்றுத் தர வேண்டிமென மைய அரசுக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தாக்குதல்கள் மேற்கொண்டு நடக்காமல் இருக்கவும், நமது மீனவர்கள் தெரியாமல் இந்திய எல்லையை தாண்டிச் செல்லாமல் இருக்கவும் ஒருசில அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவைகள்:

(1) இலங்கை கடற்படையின் படகுகளைக் கண்டவுடன், மீனவர்கள் படகின்மேல்தளத்திற்கு வந்து தாங்கள் உண்மையான மீனவர்கள் என தெரிவிக்கவேண்டும்.

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

(2) இந்திய மீனவர்கள் இரவு நேரங்களில் தங்கள் விசைப் படகுகளில் கட்டாயமாகப் பிரகாசமான விளக்குகளை வைத்திருக்க வேண்டும்.

(3) இரவில் மீன்பிடிக்கும்போது கட்டாயமாக ஒரு மீனவர் தூங்காமல் சுற்றுப்புறத்தைக் கண்காணிக்க வேண்டும்.

(4) நமது மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பார்க்கப்பட்டவுடன் இயந்திரத்தை நிறுத்திவிட வேண்டும்.

(5) எக்காரணத்தைக் கொண்டும் நெடுந்தீவு பகுதிக்குள் செல்லக் கூடாது.

மேலும் தமிழ்நாடு கடல்மீன் பிடிப்பு ஒழுங்குப்படுத்தும் சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தவும், மீன்வளங்களைப் பாதுகாக்கவும், சட்ட மீறல்களைக் கண்டுபிடிக்கவும், கடற்பகுதிகளைக் கண்காணிப்பது மிகவும் அவசியம். வள்ளம் மற்றும் கட்டுமரங்களில் தொழில் செய்ய 3 கடல் மைல் பரப்பளவு ஒதுக்கப்பட்டுள்ளது. விசைப் படகுகளில் 3 கடல் மைல் எல்லையைத் தாண்டி தொழில் புரியலாம். இருப்பினும் அவ்வப்போது சில பிரச்சினைகள் எழுகின்றன. எனவே, மைய அரசு நிதி உதவியுடன் ஐந்து ரோந்துப் படகுகளை வாங்க மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனை தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆலோசனையின் அடிப்படையில் மைய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டு மைய அரசும் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனடிப்படையில், ரூ. ஒரு கோடியே 80 லட்சம் செலவில் முதற்கட்டமாக இரண்டு ரோந்துப் படகுகள் வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தவிர ஏற்கெனவே மீன்துறையிடம் உள்ள ஐந்து பழைய ரோந்துப் படகுகளை பழுதுபார்த்து சீர்செய்யவும் இவைகளை ரோந்துப் பணிக்கு உட்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.4 இலட்சத்து 5 ஆயிரத்தை வழங்கி உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதும் நமது மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்கள் மேற்கொள்வது தடுக்கப்படும் என்றும், அப்படிப்பட்ட சம்பவங்கள் வெகுவாகக் குறையும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் ஜி.பழனிசாமி, ராஜாராமன், ஆர்.சிங்காரம் ஆகியோருக்குப் பதிலாக அமையும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. டி. ஜெயகுமார்] [1994 ஏப்ரல் 29

அரசின் உவர் நீர் நிலங்களை ஒதுக்கீடு செய்யக்கோரி வந்துள்ள விண்ணப்பங்களில் சிறிய தொழில் முனைவோர் மற்றும் முன்னுரிமைதாரர்களையும் ஒன்றுபடுத்தி இறால் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமாக உருவாக்கி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமாக நிதி உதவி பெற்று உவர் நீர் நிலங்களை அனைத்து வசதிகளுடன் மேம்பாடு செய்து மேம்படுத்தப்பட்ட இறால் வளர்ப்பு குளங்களாக ஒதுக்கீடு செய்யலாமென அரசு கருதியுள்ளது. முதல் கட்ட பேச்சு வார்த்தையின்போது தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் தந்துள்ளது. எனவே, விண்ணப்பதாரர்களின் ஒப்புதல் எழுத்து மூலமாகக் கோரப்பட்டுள்ளது. இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும். மேலும் கடலோரப் பகுதியிலே உவர் நீர்ப் பகுதிகளில் இறால் பண்ணை அமைத்து இறால் வளர்ப்போருக்கு அரசு ஒரு எக்டேருக்கு ரூ.30,000 வீதம் அதிக பட்சமாக ஐந்து எக்டேருக்கு ரூ. 1.50 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இறால் வளர்ப்பினை ஊக்கப்படுத்துவதற்காகவும், உவர்நீர் நிலங்களை இறால் வளர்ப்பின்கீழ் கொண்டு வரவும் தஞ்சாவூர், தென்னாற்காடு வள்ளலார், வ.உ.சிதம்பரனார், செங்கை. எம்.ஜி.ஆர். மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த மேம்பாட்டு முகமைகளில் உறுப்பினராகச் சேர்ந்து உவர்நீர் நிலங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றவர்களும், சொந்தமாக நிலங்களை வைத்திருப்போரும் முகமையிலிருந்து தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற்று இறால் வளர்ப்பினை மேற்கொள்ளலாம். இத்திட்டத்தில் அரசு மானியம் மட்டும் இன்றி அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வசதியும் பெறலாம். இத்திட்டத்தின் மூலம் கடலோர மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு, அவர்களது வாழ்க்கைத்தரம் உயர வாய்ப்புகளும் பெருகும். உற்பத்தி பெருகும் நிலையில் அந்நியச் செலவாணியும் அதிகம் கிடைக்கும். இந்தத் தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆர்.அப்புநடேசன், திரு.சி.சுவாமிநாதன் ஆகியோருக்கு பதிலாக அமையும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

பிற்பகல் 9.35

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.அப்புநடேசன் அவரது வெட்டுத் தீர்மானத்திலே வினவியுள்ளார்கள். மீன்துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில் மீனவர்

பயிற்சி நிலையங்கள் உள்ளன. இப்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது. மேலும் துறையில் பணிபுரியும் பண்ணியாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கவும் சென்னையில் மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. இதைத்தவிர தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மீன்வளக் கல்லூரியில் தனியார் பயிற்சியாளர்களுக்கு மீன்துறை அறிவியல் மற்றும் வியாபார ரீதியில் ஆன கடல்வள பொருட்களின் உற்பத்தி தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகின்றது. சென்னை மத்திய பல்கலைக் கழக மையம் "டி.எப்.டி.என்." என்ற மீன்துறை சம்பந்தப்பட்ட பாடங்களில் பட்டயம் வழங்கி வருகின்றது. தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி தமிழ்நாடு முழுமையிலும் உள்ள பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. இக்கல்லூரி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மிக அருகில் உள்ளது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தனியாக மீன்வளக் கல்லூரி அமைக்கும் அவசியம் எழாது.

இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதா மாதம் உதவித் தொகையும், தினமும் உணவுப்படியும் அளிக்கப்பட்டு வருகின்றது. நவீன மீன்பிடிப்புத் திட்டம் மற்றும் இளநிலை கம்மியர் பயிற்சி ஆகிய பயிற்சித் திட்டங்களை நடத்த வேண்டுமென ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மீனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 10-ம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புகளில் அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மீனவ மாணவ, மாணவியருக்கு மீனவர்களின் குலவிளக்காகத் திகழும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரிலே மீனவ மாணவர்/மாணவியர் கல்வி சிறப்பு பரிசுத் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டு மீனவ மாணவன்/மாணவி ஒவ்வொருவருக்கும் பத்தாம் வகுப்புத் தேர்விலே அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்கு ரூபாய் 3,000 ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) 12-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவன் மற்றும் மாணவி ஒவ்வொருவருக்கும் ரூபாய் 5,000-மும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் கடல் மீனவர்கள் கடலில் தொழில் செய்யும்போது இறந்தால் அந்த மீனவர் குடும்பத்துக்கு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிவாரணம் மூன்று மாத காலத்துக்குள் கிடைக்க வேண்டுமென அவரது

வெட்டுத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். இறந்த மீனவரின் குடும்பத்தினர் அன்னாருக்குச் செய்த ஈமச் சடங்குகள் சான்றிதழையும் வாரிசு சான்றிதழையும் மீனவர் சங்க உறுப்பினர் சான்றிதழையும் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்து நிவாரணத் தொகை வழங்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். இந்த விண்ணப்பம் டெல்லியில் உள்ள மீனவர் கூட்டுறவு சம்மேளனத்துக்கு அனுப்பப்பட்டு நிவாரணத்தொகை கோரப்படும். அதனடிப்படையில் நிவாரணம் காசோலை அடிப்படையில் பெறப்படும். பொதுவாக மேற்கூறிய அனைத்து நடவடிக்கைகளும் தகவல்கள் சரியாக இருப்பின் இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்குள் நிவாரணம் கிடைத்து விடும். சரியான தகவல்கள் தரப்படாமல் இருந்தால்தான் அதுபோன்ற ஒருசில நிகழ்வுகளில் தாமதம் ஏற்படும். இதுபோன்ற தாமதங்களைத் தவிர்க்க வேண்டும் எனவும், சரியான தகவல்கள் உடனுக்குடன் இறந்த மீனவர் குடும்பத்திலிருந்து பெற வேண்டும் எனவும் மீன் துறை உதவி இயக்குநர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 9-40

நல்லதையே செய்து வரும் நமது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டிலிருந்து மீனவர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கி வரும் நிவாரணத் தொகையை ரூபாய் 25,000-லிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி உள்ளார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் மீனவர் குடும்பங்களுக்குப் பெருமளவில் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கியுள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டில், ரூ.15,000/-ஆக இருந்த நிவாரணத் தொகையை ரூ. 21,000/-ஆக உயர்த்தித் தந்தார்கள். கடந்த ஆண்டில், இத்தொகையை ரூ. 25,000/-ஆக உயர்த்தித் தந்தார்கள். இந்த ஆண்டிலிருந்து, தாராள மனப்பான்மையோடு, கருணை உள்ளத்தோடு ரூ.50,000/-ஆக் உயர்த்தியுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீனவர்கள் மீது எந்த அளவுக்கு அன்பு கொண்டுள்ளார்கள் என்பதற்கும், எந்த அளவுக்குப் பரிவு கொண்டுள்ளார்கள் என்பதற்கும், இதைத் தவிர அடையாளமாக வேறு எதையும் சொல்ல முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பகுதி ஊனமுறும் மீனவர்களுக்கு ரூ.25,000/-

ஆக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான பிரீமியம் தொகையை, மீனவர்களின் சார்பில் புரட்சித் தலைவியின் அரசே செலுத்திவிடும். இதற்காக, ஆண்டொன்றுக்கு 28 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாயை நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 2½ இலட்சம் கடலோர மற்றும் உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறுவார்கள். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இந்தியாவிலேயே முன்னோடியாக உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் உள்ள மொத்த மீனவர்களின் தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 விழுக்காடு மீனவர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைகிறார்கள் என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன். மேற்கூறிய தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர்.சிங்காரம் அவர்களுக்கும், திரு. சி.சுவாமிநாதன் அவர்களுக்கும் பதிலுரையாக அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைய சேமிப்பு, நாளைய புன்சிரிப்பு என்பதை கடல் மீனவர்கள் உணர்ந்து, சேமிப்புப் பழக்கத்தை கடைபிடிக்க வேண்டுமெனவும் புயல் மற்றும் மோசமான தட்பவெப்ப நிலை காரணமாக, மீன்பிடிப்பு இல்லாத அந்த நான்கு மாத காலங்களில் மீனவர்கள் மகிழ்வுடனும் புன்னகையுடனும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கடல் மீனவர்களின் நலனுக்காகவே, மத்திய அரசுடன் இணைந்து நமது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் கடல் மீனவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ.45 வீதம் எட்டு மாதங்களுக்குச் செலுத்தினால், அதற்கு இணையான தொகை ரூ. 360/-ஐ மாநில அரசும், மைய அரசும் தனித்தனியாக வழங்க மொத்தம் ரூ. 1080/-ஆக சேமிப்பு நிதி வைக்கப்படும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டோர் நலன் என்பது பற்றியும் ஒன்று இருக்கிறது; இன்னும் மீனவர் நலத்திலேயே நிற்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : இந்தத் தொகை மீனவர்களுக்கு மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களில் மாதம் ரூ.270 வீதம் நிவாரணமாக

[திரு. டி ஜெயகுமார்] [1994 ஏப்ரல் 29

வழங்கப்படும். 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,22,471 கடல் மீனவர்கள் பயன்பெறும் வகையில், மத்திய மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ரூ.8 கோடியே 82 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இன்னமும் கூடுதல் மீனவர்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்துக்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழ்நாட்டை, முதல் மாநிலமாக மாற்றிக் காட்ட வேண்டுமென்ற இலட்சியப் பாதையில் தொடர்ந்து நடைபோடும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்தில் இந்தியாவிலேயே நம் மாநிலத்தை முன்னிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். ஆம்! இத்திட்டத்தில் பயன்பெறும் மொத்த இந்திய மீனவர்களில், தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் 64 சதவிகிதம் என்பதையும் நம்முடைய மாநிலம்தான் முதல் மாநிலம் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கடல் மீனவர்களிடம் சேமிப்புப் பழக்கம் மிகுந்துள்ளது என்பதையும், மேலும் கூடுதல் மீனவர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்ந்து பயன்பெறுவார்கள் என்றும் இவை அனைத்தும் தங்கத் தலைவி மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மகத்தான சாதனை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசு மீன்வளக் குழு இத்திட்டத்தின் சாதனையையும், மற்ற கடல் மீனவர் நலத் திட்டங்களையும் நமது தமிழகத்தில் வெகு சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகப் பாராட்டி உள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

கடல் அலைகளுக்கு ஓய்வு தேவை என்று சொன்னால், கடல் அலைகள் ஓய்வு எடுத்துக் கொள்ளவா போகின்றன? ஓய்வில்லாமல் உழைக்கின்ற, இலட்சிய இலக்கை நோக்கி நடைபோடுகின்ற, நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேகத்தோடும், விவேகத்தோடும் செயல்படுவதால்தான், இத்தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்ந்துள்ளது. தமிழ் மண்ணின் பேரொளியாகவும், தமிழக மக்களின் குல விளக்காகவும் திகழும் நமது தங்கத் தலைவியின் ஆட்சியில், பத்தாயிரம் மீனவ மகளிர்க்கு அலுமினிய மீன்கூடை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கூடையின்மூலம் சுகாதார முறையில் துர்நாற்றம் இன்றி மீன்களை வியாபாரத்திற்குக் கொண்டு செல்லலாம். இந்த அலுமினியக் கூடையின் அடக்க விலை ரூ. 200 ஆகும். இதில் ஐம்பது விழுக்காடு மானியமாக வழங்கப்படும். இதற்காக 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் மானியத் தொகையாக

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

ஒதுக்கித்தந்து, ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புக்கு இணையவும் தெரியும்; இணைக்கவும் தெரியும்; ஆனால், பிரிக்கத் தெரியாது. அன்புதான், மக்களை ஒன்றாக இணைத்து கூட்டுறவை உருவாக்குவது. கூட்டுறவே நாட்டுயர்வு. இந்த அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 5 கடலோர மாவட்டங்களில் 34 மீனவ கூட்டுறவுச் சங்கங்களை தேர்ந்தெடுத்து 5 ஆண்டுகளில் 6050 மீனவர்கள் பயனடையும் வகையில் தேசிய வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் ரூ.15 கோடியே 17 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த கடல் மீன்வள திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள். 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 3 கோடியே, 62 இலட்சத்து 42 ஆயிரம் செலவில் கட்டுமரங்கள், வள்ளங்கள், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள், உள்பொருத்தும் இயந்திரங்கள், மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை மீனவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்றுள்ளார்கள். இவ்வாண்டில் ரூ.3 கோடியே ஒரு லட்சத்து 89 ஆயிரம் செலவில் கட்டுமரங்கள், வள்ளங்கள், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள், உட்பொருத்தும் இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் மீனவர்களுக்கு வழங்குவதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து 1994-95-ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்திட்டம் இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 9-45

மனித சமுதாயத்தின் இதயவானில் நம்பிக்கை நட்சத்திரமாக தோன்றுவது கற்பனை என்று கூறலாம். இந்தக் கற்பனைகள் ஒரு சிலரைத் தவிர அனைவருக்கும் நிஜமாவதில்லை. எனவே, இளமைவேகம் இருப்பதாக என்னதான் கற்பனையில் மூழ்கினாலும் முதுமையின் தோற்றம் உடலின் அனைத்து உறுப்புகளிலும் நாடி நரம்புகளிலும் வெளிவந்திடும். (சிரிப்பு) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதுமைக்கு நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியது இல்லை. உங்களைப் பார்த்தாலே தெரிகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வயது 35 அல்லது 36-தான் இருக்கும் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நீங்களும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், இளமையிலே இருந்தாலும்கூட முதுமை வந்துவிடுகிறது என்கிறீர்கள் அல்லவா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : இப்படி முதுமை வந்தபின் வயது முதிர்ந்த நிலையில் 55 வயதுக்குப் பின்னர் அலைகடலின் நடுவில் சென்று மீன்பிடித் தொழில் செய்வது என்பது முடியாத காரியமாகும். வயதான காலத்தில் வாழத் தேவையான சேமிப்பும் இவர்களிடம் இருக்காது. எனவே, வயது முதிர்ந்த கடல் மீனவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டே அறிவுரை வழங்கினார்கள். இதுகுறித்து இப்பேரவையிலும் கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஓய்வூதியத் திட்டம் தீட்டப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின்படி கடல் மீனவர்களும் மாநில அரசும், மைய அரசும் 2:1:1 அதாவது 2 பங்கு, 1 பங்கு, 1 பங்கு என்ற விகிதத்தில் பங்குத் தொகை செலுத்த வேண்டும். கடல் மீனவர்கள் மாதம் ரூபாய் 12 வீதம் எட்டு மாதங்களுக்குச் செலுத்துகின்ற தொகைக்கு ஈடாக மத்திய அரசும், மாநில அரசும் ஒரு பங்கு அளிக்கும். (குறுக்கீடுகள்) (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் சுந்தரவேல், நீங்கள் ரொம்பவும் அவருடைய பதில் உரையில் ஆழ்ந்து இருந்ததை, ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறீர்கள் என்பதைப்போல எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : இதற்கு மைய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் இத்திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 57 நியாய விலைக் கடைகள் மீனவ கிராமங்களில் நடைபெற்று வருகின்றன. மேற்கொண்டும் மீனவ கிராமங்களிலே நியாய விலைக் கடைகள் வேண்டும் என்கிற கோரிக்கை வந்தால் நியாய விலைக் கடைகள் மீனவர் வசிக்கும் கிராமங்களிலே அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலம் 1,000 கிலோ மீட்டர் நீளம் உள்ள கடற்கரைப் பகுதியைக் கொண்டது. இக்கடற்கரைப் பகுதிகளில் சுமார் 500-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர்

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இக்கடலோரப் பகுதிகளைக் குறுகிய காலகட்டத்திற்குள் அபிவிருத்தி செய்ய, ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தை வகுத்துத் தந்துள்ளார்கள். இத்திட்டம் இரண்டு கட்டமாக நிறைவேற்றப்படும். முதற்கட்டமாக புறவியல் சுற்றுலா, உடல்நலச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு அல்லது நீர்விளையாட்டுச் சுற்றுலா மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள சுற்றுச் சூழல் மாசுபட்டுள்ள பிச்சாவரம் போன்ற இடங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்துடன் கடலோரமுள்ள 98 கிராமங்களை ஒருங்கிணைத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தத் திட்டத்தை வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தும் வகையில் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இரண்டாம் கட்டமாக கடலோரப் பகுதியில் அமைந்துள்ள 46 ஊராட்சி ஒன்றியங்களை வெளிநாட்டு நிதி உதவியுடன் ஒருங்கிணைந்து மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மூலம் கடலோரப் பகுதியில் உள்ள அனைத்துச் சமூகத்தினருக்கும் குறிப்பிடத்தக்க முறையில் பயன்தரும் பொருட்டு அபிவிருத்தி செய்யப்படும். இப்பகுதி மக்கள் இத்திட்டத்தை உருவாக்கவும், செயல்படுத்தவும் உரிய பங்கு பெறுவார்கள்.

எஸ். ஆர். எல். 15 வகை நடுத்தர கடல்பரப்பு மீன்பிடி படகுகளை கன்னியாகுமரி மற்றும் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 15 குழுக்களுக்கு வழங்கி அவர்கள் மூலம் மீன்பிடிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மானியமாக ரூ.2 இலட்சம் வீதம் வழங்கப்படும். ஆழ்கடலில் மீன்பிடிக்கும் இயந்திரப் படகு மீனவர்களுக்கும் ரூ. 30 லட்சம் மானியமாக வழங்க முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இருபது மீட்டருக்குக் குறைவான நீளமுள்ள மீன்பிடி விசைப் படகுகளைப் பயன்படுத்தும் மீனவர்களின் சுமையைக் குறைக்க ஒரு லிட்டர் டீசலுக்கு 35 காசு வீதம் மானியமாக மொத்தம் ரூபாய் 52 இலட்சத்து 50 ஆயிரத்தை மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. டி. ஜெயகுமார்] [1994 ஏப்ரல் 29

பிற்பகல் 9-50

தடந்தோள் கொண்டு சீறிவரும் அலைகளில் துடுப்பைப் போட்டு மீன்பிடிக்கும் மீனவர்கள் சுலபமாக ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க கட்டுமரங்களில் இயந்திரங்களைப் பொருத்தி நவீனமாக்க மீனவர்கள் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிட வங்கிக்கடன் பெறுவதில் மிகுந்த சிரமம் அடைகின்றனர். இதனால் மத்திய மாநில அரசின் பங்கான 50 விழுக்காடு மானியத் தொகையினைப் பெறுவதிலும் சிரமப்படுகிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மீனவர்படும் இந்த வேதனையைக் களைய வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். இந்த அறிவுரையின் அடிப்படையில் 50 விழுக்காடு கடன் தொகையை வங்கி அல்லது வேறு வகைகளில் செலுத்த முன்வரும் மீனவர்களுக்கும் 50 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் செயற்குறிப்பினைச் செயல்படுத்த மைய அரசின் கருத்து கோருவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதனால் நமது மீனவர்கள் உட்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரங்களைச் சிரமமின்றிச் சுலபமாகப் பெறமுடியும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது வரையில் வங்கிக் கடன் மூலமாகக் கடன்பெற்று அரசின் மானியத் தொகையையும் பெற்று கட்டுமரங்களுக்கு உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிய மீனவர் எண்ணிக்கை 3,875 ஆகும். 1993-94 ஆம் ஆண்டில் ,2000 இயந்திரங்கள் மானிய விலையில் வழங்க ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 3,000 பாரம்பரிய கட்டுமரங்களை இயந்திரமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டில் இருந்து மானியத் தொகையை ரூ. 12,000/- ஆக உயர்த்த மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில் செலவாகும் மானியத்தொகை 3,60,00,000 ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை மீன்பிடித் துறைமுகத்தை நவீனப்படுத்தும் பணிக்காக முதல் கட்டத்தில் மைய அரசு நிதியுதவியுடன் ரூ. 12.97 கோடி செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் மேம்பாட்டு பணியில் இரண்டாவது கட்டமாக ரூ.8.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்படும் நிலையில் உள்ளன. இம்மேம்பாட்டுப் பணியில் கூடுதல் படகுத் துறைகள் மற்றும் ஏலக்கூடங்கள், வலைகள், செப்பனிடும் கொட்டில்கள் போன்றவை

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

அடங்கும். தற்போது சுமார் 600 விசைப்படகுகளும், 50 ஆழ்கடல் மீன்பிடி கலங்களும், ஏராளமான கட்டுமரங்களும் இத்துறைமுகத்தை உபயோகப்படுத்தி வருகின்றன.

கடல் மீனவர்களுக்கு புயல் நிவாரணம் கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயல் மற்றும் பலத்த மழையின் காரணமாக கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் தங்களின் படகு மற்றும் கட்டுமரங்களின் சேதத்தைக் கருத்தில் கொண்டு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு துயர் துடைப்பு நிதியாக ரூ. 46.30 லட்சம் நிதியைத் தாராள மனப்பான்மையுடன் ஒதுக்கீடு செய்து இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் அடிப்படையில் 3,481 கட்டுமர மீனவர்களுக்கும் 645 படகு உரிமையாளர்களுக்கும் அவர்களின் கலன்களைப் பழுதுபார்க்க வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக மீனவர் குடும்பங்களில், பிடித்து வரும் மீன்களை மீனவ மகளிர் விற்பனை செய்து வரும் வருவாயைக் கொண்டுதான் அன்றாட வாழ்க்கை நடைபெற்று வருகிறது. இந்த மீன் விற்பனைக்கு வேண்டி மகளிர் இடைத்தரகர்களின் மூலம் கொள்முதல் செய்வதன் காரணமாக கணிசமான வருவாயை இழக்க வேண்டிய நிலை உள்ளது. இந்நிலையை மாற்ற வேண்டி மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் தலா ரூ. 1,000 வீதம் வழங்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் இதுவரையில் 10,000 மீனவ மகளிருக்கு சுயமாக மீன் வியாபாரம் செய்திட மிகக்குறைந்த 6 விழுக்காடு வட்டி வீதத்தில் மொத்தம் ஒரு கோடி ரூபாய் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ மகளிருக்கிடையில் இத்திட்டத்திற்கு பெருத்த வரவேற்பு உள்ளது. கடன் பெற்ற மீனவ மகளிர் தங்களது கடன் தொகையை வட்டியுடன் தவணை முறையில் திருப்பிச் செலுத்தவும் தொடங்கியுள்ளனர். படிப்படியாக இதனை எல்லா மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விரிவுபடுத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு ஆலோசித்து வருகிறது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் தங்களின் மீன்பிடிப்பு பற்றிய தகவல்களையும், அபாயநிலையில் உதவி பெறுவதற்கும் வழிகாணும் பொருட்டு மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு கடந்த 27-3-94 அன்று முதல் கட்டமாக 50 விசைப்படகுகளுக்கு கம்பி இல்லா தொலைத்தொடர்பு

[திரு. டி. ஜெயகுமார்] [1994 ஏப்ரல் 29

சாதனங்களை (வாக்கி-டாக்கி) வழங்கியுள்ளது. இச்சாதனத்தின் உதவியால் கடலில் உள்ள மீனவர்கள், மற்ற படகுகளுடனும், கரையில் உள்ள தொடர்பு நிலையங்களுடனும் தொடர்பு கொள்ள வழி காணப்பட்டுள்ளது.

பிற்பகல் 9-55

மேலும் ஆபத்துக் காலங்களில் உதவி பெறுவதற்கும் மற்றும் தங்களின் மீன்பிடிப்பைத் தெரிவிப்பதற்கும் மிகுந்த பலனளிக்கும். இதற்காக ஆழ்கடல் மேம்பாட்டுத்துறை மூலமாக ரூ.31.75 லட்சம் நிதியுதவி பெறப்பட்டது. இந்த ஆண்டில் சென்னை மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் ரேடியோ தொலைத் தொடர்பு மையங்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளன. இதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ரூ. 2.26 லட்சம் ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். 'எல்காட்' துறையிடமிருந்து தொடர்பு மையத்துக்காக ரேடியோ சாதனங்கள் விரைவில் பெறப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சென்னைக்கும் மீனவர்களின் பாதுகாப்புக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்க வேண்டிய பகுதியான ராமேஸ்வரத்துக்கும் உடனுக்குடன் சங்கேத முறையில் தொடர்பு கொண்டு செய்திகள் பரிமாறிக்கொள்ளும் பொருட்டு 'மோடம்' என்கின்ற நவீன கணிப்பொறியை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வசதியினால் அனைத்துச் செய்திகளும் உடனுக்குடன் பரிமாறிக்கொள்ள தமிழ்நாட்டிலேயே முதல் முதலாக நிறுவப்படவுள்ளது. இதன்மூலம் இராமேஸ்வரம் மீனவர்கள் மீதும், அவர்களின் அல்லல் துடைக்கப்பட வேண்டும் என்றும் எந்த அளவுக்கு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்டுள்ளார் என்பதை நன்கு அறிய முடியும். மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மாட்சிமை பொருந்திய அரசில் மீன்வளத்துக்கும், மீனவர் நலனுக்கும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறதோ அந்த அளவுக்கு மீன்வளத்துறை பணியாளர்களின் நலனையும், அவர்கள் செயல்பட ஏதுவாக வசதிகளையும் செய்து தருவதில் மிகவும் அக்கறை கொண்டு உள்ளது. அதனடிப்படையில் இந்த ஆண்டு இராமேஸ்வரம், மண்டபம், கோட்டைப்பட்டினம், ஜெகதாபட்டினம் போன்ற இடங்களில் பணிபுரியும் இரண்டு உதவி இயக்குநர்கள், 3 ஆய்வாளர்கள், 3 சார் ஆய்வாளர்கள், இரண்டு மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு வீடுகள் கட்டித்தரப்படவுள்ளன. தவிர இவர்கள் கடற்கரையிலிருந்து தினமும் கடலுக்குச் செல்லும் படகுகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்குவதற்கு ஏதுவாக இப்பகுதி கடற்கரை ஓரங்களில் 5 கொட்டில்கள் மொத்தம்

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

ரூ. 1.50 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 25000 கட்டுமரங்களும், 12000 வள்ளங்களும் இயற்கையின் சீற்றத்தாலோ அல்லது மற்ற இடர்பாடுகளாலோ சேதம் அடையும் வாய்ப்புள்ளது. எனவே இத்தகைய சேதங்களிலிருந்து பாதுகாக்க மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, கட்டுமரங்களையும் வள்ளங்களையும் காப்பீடு செய்ய திட்டம் வகுக்கலாமென ஆய்வு செய்து வருகிறது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரங்களையும் தங்களின் மேலான கவனத்திற்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் மீன்வலை புனை ஆலைக்கு ரூ.20.00 லட்சம் செலவில் மேலும் இரண்டு புதிய, நவீன இயந்திரங்கள் வாங்க கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களுக்குத் தரமான வலைகள் நியாயமான விலையில் கிடைக்கும். மண்டபம் பகுதியில் கொடுவா என்ற வகை மீன்களை கேஜ் கல்ச்சர் முறை மூலம் வளர்க்க கழகம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது. இதற்கு சுமார் ரூ.25.00 இலட்சம் செலவாகும். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் இம்முறையை மேற்கொள்வதால் பொதுமக்களுக்கு மீன்வளர்ப்பதில் ஒரு முன்மாதிரியாக அமைவதுடன் பொதுமக்களுக்கும் அதிக அளவில் மீன்வளர்க்க வழிவகை செய்ய இயலும். ஆழியார், அமராவதி, திருமூர்த்தி, பவானிசாகர் போன்ற நீர்த்தேக்கப் பகுதிகளில் நல்ல தண்ணீர் கிடைப்பதால், இப்பகுதிகளில் ரூ.25.00 லட்சம் செலவில் கழகமே இறால்வளர்க்கத் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்டு 'ட்ரை பிஷ்களை' பாக்கெட் மூலம் கடைகளுக்கு விநியோகம் செய்ய கழகம் திட்டமிட்டுள்ளது. (அதாவது கருவாடு) அத்துடன் இறால் ஊறுகாய், மீன் ஊறுகாய் ஆகியவைகளையும் மேற்கண்ட சங்க உறுப்பினர்களின் உதவியுடன் கடைகளுக்கு விநியோகம் செய்யத் திட்டமிட்டுள்ளது. இதனால் 250 மகளிருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 6 டீசல் விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டு மொத்தம் 12 இடங்களில் நடைபெற்று வருகின்றன.. இதனால் மீனவர்களுக்கு மானிய விலையில் தரமான டீசல் கிடைக்கின்றது. மேலும் 15 டீசல் விற்பனை நிலையங்கள் துவக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. காரக்காடு மாதிரி இறால் பண்ணையில் இறால் வளர்ப்பை அறிந்து கொள்ள பயிற்சி நிலையம் அமைக்க தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்

கழகம் ஏற்பாடுகள் செய்து வருகிறது. இந்தப் பயிற்சி மையத்தில் இரண்டு மாத காலத்துக்கு பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்கு மாதம் ரூ.750 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். இதனால் இறால் வளர்ப்பு குறித்து நேரடிப்பயிற்சி மூலம் தெரிந்து கொள்ளலாம். வற்றிய வயிற்றில் பால்வார்க்கும் தாய்போல் திக்கற்ற மீனவர்க்கு எண்ணிலா நலத் திட்டங்கள் தந்து பூமியும் வானமும் உள்ளளவும் அழியாத புகழ் கண்ட நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எக்காலமான போதும் ஏழை மீனவர்கள் நெஞ்சில் எந்நாளும் வாழ்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பிற்பட்டோர் நலம். இந்தியத் திருநாட்டிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில்தான் பிற்பட்ட மக்களுக்காகவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும், சீர்மரபினர்களுக்காகவும் அரசு கல்வி நிலையங்களில் கல்வி பயிலவும், அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பு பெறவும் 50 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

பிற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது மணி 10 ஆகிறது. இப்போதுதான் ஆரம்பிக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 10 நிமிடம் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பத்து நிமிடங்களில் முடித்துவிடலாமா? இல்லை என்றால், நாளைக்குத்தான் நீங்கள் தொடர வேண்டியிருக்கும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பத்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 நிமிடங்கள் என்றால் சரி. பொது அறிவிப்புகள், உறுப்பினர் பேசி, ஏதாவது அந்தப் பேச்சுக்கு பதில், அது மட்டும் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தவிர்த்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், பழங்குடியினருக்காகவும் 19 விழுக்காடு இட ஒதுக்கீடு தனியாக

செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள 31 விழுக்காடு பொதுப் போட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது. மண்டல் குழு தொடர்பான வழக்குகளை உச்சநீதிமன்றம் விசாரித்து மொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காடுக்குமேல் மிஞ்சக் கூடாது என ஆணை பிறப்பித்து உள்ளது. இந்த ஆணை தமிழ்நாட்டில் உள்ள பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட-சீர்மரபினர் இன மக்களைப் பெரிதும் பாதிக்கும். கண் இல்லாத ஊமை நடுக்கடலில் மூழ்கிவிட்டால், எந்த திசையில் செல்வது என்னவென்று கூச்சலிடுவது என்று தெரியாது அல்லது முடியாது தவிப்பானோ அந்த அளவுக்கு பிற்பட்ட மக்கள் என்ன செய்வது? எப்படிச் செய்வது என்று தவிப்பார்கள். எனவேதான் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் தனி அனுமதி ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு உச்சநீதிமன்றத்தில் இன்னமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லாட்சியை நல்கிவரும் நமது மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல்வேறு நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு தற்போது உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைத் தொடர அனைத்து நடவடிக்கைகளையும் விரைவாக எடுத்து வருகிறார்கள். இதற்காக அரசியல் அமைப்பு சட்டத்திற்குத் தேவையான திருத்தத்தினை கொண்டுவர வேண்டுமெனவும் 9-11-93 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றினார்கள். அத்தீர்மானத்தின் நகலை மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு மறுதினமே அனுப்பி வைத்தார்கள். இதன் மீது மத்திய அரசின் மேல் நடவடிக்கை எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனைப் படி தற்போது நடைமுறையில் உள்ள ஒதுக்கீட்டினை உறுதி செய்வதற்காக 16-11-1993 அன்று தமிழக மக்களின் ஒன்றுபட்ட உணர்வினையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்த அமைதியான முறையில் பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதைத் தவிர 26-11-1993 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு அக்கூட்டத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு திருத்தம்கொண்டுவர வேண்டுமென்றும் அல்லது மாநில அரசு தனிச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. இலட்சோப இலட்சம் ஏழை மக்களின் இல்லங்களில் ஒளியேற்றிக் கொண்டு இருக்கும் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த நடவடிக்கைகளால் நமது அரசின் தற்போதைய இட ஒதுக்கீட்டு குறியீட்டை

நிலைநிறுத்திட அயராது பாடுபட்டு வருகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீட்டில் இந்தியாவிலேயே முன்னோடியாகத் திகழும் தமிழக அரசு தற்போதுள்ள 69 விழுக்காடு ஒதுக்கீட்டினை நிலைநிறுத்தும் பொருட்டு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் 30-12-1993 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்ட தனி சட்ட முன்வடிவு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சாதனை ஆகும். இச்சட்ட முன்வடிவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்கூறிய நடவடிக்கைகளில் இருந்து தமிழக மக்களின் இதயங்களில் ஜீவநாடியாகத் திகழும் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு சமூக பொருளாதார நீதி கிடைக்கச் செய்வதே தர்மமாகும் என்ற ஆக்கப்பூர்வமான சிந்தனையின் அடிப்படையில் எடுத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கை என்பதனை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, சீர்மரபினர் மக்களுக்குச் சிறப்பான கல்வி, பொருளாதார, சமுதாய மேம்பாடுகள் கிடைக்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் கொள்கை விளக்கக் குறிப்பில் விவரமாக குறிப்பிடப்பட்டு உள்ளது. இத்தகவல்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எச். எம். ராஜு, ஜி. காளன், உ. பலராமன், எஸ். பன்னீர்செல்வம், எ. தெய்வநாயம் ஆகியோரின் வெட்டுத் தீர்மானத்திற்கு பதிலாக அமையும்.

மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் எந்த ஒரு தரப்பினருக்கும் நிச்சயமற்ற நிலையே இல்லை என்பதுதான் நிச்சயமான உண்மையாகும். ``No uncertainities to any one in the golden rule of Hon'ble Chief Minister Dr. Puratchi Thalaivi" எனவேதான் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மக்கள் மற்றும் சீர்மரபினர் என்று அழைக்கப்படும் ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்கள் மாண்புமிகு சமூகநீதி காவலரை நம்பிக்கை நட்சத்திரமாக ஏற்றுக்கொண்டு உள்ளனர். இந்த மக்கள் சிறந்த கல்விபெற வேண்டும் என்பதற்காக இலவசக் கல்வித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். எந்த ஒரு நாடும் முன்னேற வேண்டுமென்றால் அந்த நாட்டு மக்கள் சிறந்த கல்வியினைப் பெற வேண்டும். அந்த் அடிப்படையில்தான் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்வி வசதி பெறுவதற்கான இந்நிலையை உருவாக்கித் தந்துள்ளதோடு, மாணவ

மாணவியர் தங்கி படிப்பதற்காக 804 மாணவ மாணவியர் இல்லங்கள் இயங்கிட ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்த விடுதிகளைப் பராமரிக்க ரூபாய் 16 கோடியே, 16 லட்சத்து 82 ஆயிரம் ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டில் மேலும் புதிய 16 மாணவியர் விடுதிகளைத் துவக்குவதற்கு ரூபாய் 29 லட்சத்து 84 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் 12 மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 68 லட்சத்து 64 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். நடப்பு நிதியாண்டில் மூன்று நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்திட ரூபாய் 7 லட்சத்து 92 ஆயிரம் செலவில் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை, திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் மாணவ மாணவியர் பொது அறிவு பெற நூலகம் அமைத்திட நமது மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 3 லட்சத்து 61 ஆயிரம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 10-05

மதுரை மாவட்டத்தில் மேலக்கால் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதலாக பத்து வகுப்பு அறைகள் கட்டுவதற்காக 12.22 லட்சத்தைத் தாராளமாக ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பள்ளிகளைப் பராமரிப்பதற்காக இந்த நிதியாண்டுக்கு ஒட்டுமொத்தமாக ரூபாய் 8 கோடியே, 71 லட்சத்து 68 ஆயிரம் ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மாணவ மாணவியருக்கு இலவச புத்தகங்கள், எழுது பலகைகள் வழங்குவதற்காக இந்த நிதியாண்டில் ரூபாய் 28 லட்சத்து 53 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும், துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கும் இலவசச் சீருடைகள் வழங்க ரூபாய் 62 லட்சத்து 33 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.12,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ள பெற்றோர்களின் குழந்தைகள் கல்வி உதவித்

தொகை பெறுவதற்காக மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1 கோடியே 22 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இலவசக் கல்வித் திட்டத்திற்காக ரூபாய் 5 கோடியே 41 லட்சத்து 45 ஆயிரத்தை ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்து கொண்டுள்ள மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு செயல்பாட்டினையும் மக்கள் நலனுக்காகவே செய்து வருகிறார்கள். மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் தெள்ளத்தெளிவாக அடையாளம் கண்டுகொண்டு, அதற்கேற்ற திட்டங்களை வகுப்பதில் வல்லவர். எனவேதான், மாணவ மாணவியருக்கு அவர்கள் தங்கி உள்ள விடுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று ஆணையிட்டார்கள். இந்த ஆணையின் அடிப்படையில் அடிப்படை வசதிகள் இல்லாத 409 விடுதிகளைக் கண்டறிந்து அந்த விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் சி. ஞானசேகரன் மற்றும் திரு. சுவாமிநாதன் ஆகியோர் விடுதி மாணவ மாணவியர்களுக்கு தரமான உணவு வழங்க வேண்டுமென அவர்களின் வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ளனர். கடந்த ஆண்டு விலைவாசி ஏற்றத்தை கருத்தில் கொண்டும், அரசின் நிதிநிலை நெருக்கடியை கருத்தில் கொண்டும், சென்னையிலுள்ள கல்லூரி மாணவர்களுக்கு மாதம் தலா ரூ.180 என்றும், புறநகர் கல்லூரி மாணவர்களுக்கு மாதம் தலா ரூ. 175, என்றும் பள்ளி மாணவ மாணவியருக்கு மாதம் தலா ரூ.120 எனவும் உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து விடுதிகளிலும் நிர்ணயித்த அட்டவணையின்படி - மெனு - அளவின்படியும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்கள் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் படிப்பு உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென அவரது வெட்டுத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதியை கல்விக்கு முதலிடம் கொடுத்து செலவழித்து வருகின்றார்கள். இதில் கல்வி மற்றும் விடுதிக்காக...

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்களுக்கு எல்லாம் நீங்கள் ஒவ்வொன்றாக பதில் அளிப்பதை விட, அந்த வெட்டுத் தீர்மானங்களின் பதில்களுக்கு எல்லாம் துறை நடவடிக்கை எடுத்து, அதற்குப் பரிகாரம் கண்டாலே உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அந்தப் பதில் இருந்தாலேகூட போதும் என்று நினைக்கிறேன்.

பிற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையில் கல்வி பயிலுவதால் ஏற்படக்கூடிய அதிகமான செலவுத் தொகையைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அரசின் நிதி நெருக்கடியால் கூடுதல் செலவினத்தை ஏற்கக்கூடிய நிலையில் இல்லாததால் உடனடியாக படிப்பு உதவித் தொகையை உயர்த்தி வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே அரசின் நிதிநிலை முன்னேறும் தருவாயில் இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் வழக்குரைஞர் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியத்தினை வெட்டுத் தீர்மானத்தில் மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கிறார். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் எந்த அரசிலும் இல்லாத அளவிற்கு தன்னிகரில்லா தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* 1993-94 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.119.60 இலட்சம் செலவில் 268 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டம் ஆரம்பித்தது முதல் இதுவரையில் 119,72 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. இத்திட்டத்திற்கென மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடப்பு நிதியாண்டுக்கு மிகவும் தாராள மனப்பான்மையுடன் ரூபாய் ஒரு கோடி வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும் நிலப் பட்டாக்களைப் பெறுவதில் தாமதம் இருக்கக்கூடாது என்பதற்காக கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது பேச்சு வார்த்தைகள் மூலம் நிலத்தைக் கையகப்படுத்தி, நிலத்தை வாங்கி, பட்டாக்கள் கொடுக்கலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே அதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு, சில இடங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பட்டா கொடுக்க

[திரு. டி. ஜெயகுமார்] [1994 ஏப்ரல் 29

நிலம் தேவை என்றால், பேச்சு வார்த்தைகளின் மூலம் நிலங்கள் பெறப்பட்டு, அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டடோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆண்டுக்கு ரூ.12,000-க்கும் குறைவாக வருமானமுள்ள பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் சீர்மரபினர் மக்களுக்கு ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு இலட்சம் கடனாக வழங்குகிறது. ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேலும் ரூ.22,000-க்குக் கீழும் உள்ளவர்களுக்கு 7.5 விழுக்காடு வட்டியில் கடன் வழங்குகிறது. இக்கடன் தொகை தேசிய பிற்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இக்கடனை ஆட்டோ, டாக்ஸி மற்றும் வேன் போன்ற வாகனங்கள் வாங்கவும், டீசல், ஆயில் பம்புசெட் வாங்கவும், பால்பண்ணை, கோழிப்பண்ணை வைக்கவும், டயர் மாட்டு வண்டி வாங்கவும், ரெடிமேட் துணிக்கடைகள் வைக்கவும், மீன்பிடி சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கவும், ஜெராக்ஸ் மற்றும் கம்ப்யூட்டர் வாங்கவும், டிராக்டர், விவசாயக் கருவிகள் வாங்கவும், மளிகைக்கடை, வாடகை சைக்கிள் கடை போன்ற வியாபார ரீதியான தொழில்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். இக்கழகத்தில் 10,000-க்கும் மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கடன்கோரி வந்துள்ளன. இந்த விண்ணப்பப் படிவங்கள் அனைத்தையும் ஆய்வு செய்து கடன் வழங்குவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடப்பு நிதியாண்டில் 10,000 பயனாளிகளுக்கு ரூ.13 கோடி கடனாக வழங்க இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 10.15

சலவையாளர்கள், முடிதிருத்துவோர் மற்றும் கல் உடைப்போர் ஆகியோர் பொருளாதார மேம்பாடு பெறவேண்டும் என அவர்களுக்கு சலவைப்பெட்டி, முடிதிருத்தும் கருவிகள் மற்றும் கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பயன் பெறுவோரின் ஆண்டு வருமானத்தை இந்த இலவச தொழிற்கருவிகள் பெறுவதற்காக ரூ.6,400-லிருந்து ரூ.12,000 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 4000 சலவைப் பெட்டிகள், 500 முடிதிருத்தும் கருவிகள், 500 கல்லுடைக்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டும் இக்கருவிகளை இலவசமாக வழங்குவதற்காக மாண்புமிகு

1994 ஏப்ரல் 29] [திரு. டி. ஜெயகுமார்]

முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 48,53,000 நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலைத் திறம்பட செய்வதற்காகவும், பொருளாதார மேம்பாடு அடையும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மக்களுக்கு பணிசார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பணிசார்ந்த பயிற்சிகளில் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணிப்பொறி, கன ரக வாகனம் ஓட்டுதல் போன்ற பயிற்சிகள் அடங்கும். கடந்த ஆண்டு ஆயிரம் பேருக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சியும், 125 பேருக்கு கணிப்பொறி பயிற்சியும், 250 பேருக்கு கன ரக வாகன ஓட்டுநர் பயிற்சியும் ரூ.32.52 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது. இந்த ஆண்டும் இப்பணி சார்ந்த பயிற்சிகள் அளிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ரூ.32.06 இலட்சம் ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பயிற்சிகளைத் தவிர, தேசிய பிற்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் ரூ.4 கோடி செலவில் சிறுதொழில் சம்பந்தமான பயிற்சித் திட்டம் அளிக்கவும் ஆராயப்பட்டுவருகிறது. இதற்கு நமது அரசின் பங்காக ரூ.32.06 மூலதன நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இயற்கை மற்றும் செயற்கை வைரம் வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல், எளிய இரசாயன செய்முறைகள், ஸ்கிரீன் பிரிண்டிங், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், காளான் வளர்ப்பு மற்றும் பதப்படுத்துதல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் பழுதுபார்த்தல், குளிர்சாதனப் பெட்டி பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல், மின் இணைப்பு போன்ற பல்வேறு வேலைவாய்ப்பு தொழில்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதில் 90 விழுக்காடு செலவினத்திற்கு தேசிய பிற்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட சீர்மரபினர்கள் வகுப்பைச் சார்ந்த 15,975 பேர் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகவலையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்பின் வழியது உயர்நிலை, அறிவின் வழியது உயர்நிலை, ஆற்றலின் வழியது உயர்நிலை. ஆம். இவ்வழிகளில் தமிழகமும், குறிப்பாக ஏழை எளிய மக்களும் உயர்நிலை பெற அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில்,

மீனவரும், பிற்பட்ட மக்களும் ஏற்றம் பெற்றுள்ளனர். இன்னமும் ஏற்றம் பெறுவர் என கூறிக் கொள்கின்றேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களே, நலமும் நீங்களே, பலமும் நீங்களே, நதியும் நீங்களே, கடலும் நீங்களே, அருளும் நீங்களே, பொருளும் நீங்களே, ஒளியும் நீங்களே, உயிரும் நீங்களே, உலகம் யாவும் கருணையோடு பெருகி வாழ அருள் புரிபவரும் நீங்களே.

இதுவரையில் நான் கூறிய தகவல்கள் அனைத்தும், உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த ஆலோசனைகளுக்கும் வெட்டுத் தீர்மானங்களுக்கும் பதிலுரையாக அமைந்திருக்கும் என்று கருதுகின்றேன். அவர்கள் தெரிவித்த ஒருசில கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் வெட்டுத் தீர்மானங்களுக்கும் பதில் கிடைக்காமல் விடுபட்டிருந்தால், இந்த மாமன்றத்தின் அவைக்குறிப்பிலிருந்து தெரிந்தெடுத்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத்தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கை எண். 21. மீனளம் மற்றும் மானியக் கோரிக்கை எண். 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் ஆகிய மானியக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக பணிவன்புடன் கேட்டு அமர்கின்றேன், வணக்கம்.

(இ) கோரிக்கை எண்–21 - மீனளம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 21. மீனளம். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

பிற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

'மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.24,76,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண் 31— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 31, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.44,97,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய பேரவை நாள்தோறும் இந்தளவு வரையிலேயும் நடந்தால்கூட நல்லதுதான் என்றே நினைக்கிறேன். பல்வேறு விவரங்களை அமைச்சர் அவர்கள் விரிவாகக் கூறுவதற்கு நேரம் கிடைக்கும். மற்ற சில மாநிலங்களிலேயும், பாராளுமன்றத்திலேயும் இது நடைமுறையிலே இருப்பதுதான். நாம் காலையிலே மட்டும் பேரவை நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்த காரணத்தாலே, சில உறுப்பினர்கள் என்ன 10

மணி வரையிலுமா என்று கேட்டுக்கொண்டு இருக்கலாம். பாராளுமன்றத்திலே எல்லாம் சில நேரத்தில் 2 மணி, 3 மணி வரையிலேயும் கூட நடக்கும். இயற்கையாகவே 10 மணி வரை நடப்பது என்பது, அங்கே நடக்கும். எனவே, (குறுக்கீடுகள்) இப்போதும்கூட உறுப்பினர்களுக்கு எல்லாம் மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் சூப் முதற்கொண்டு கொடுத்து இருக்கிறாரே ! எனவே, இதுபோன்று நடப்பதால், அதிகமான நேரம் பேரவையில் விவாதிப்பதற்குக் கிடைக்கிறது என்பதற்காகச் சொன்னேன். அதற்காக நாள்தோறும் 10 மணி வரை இருக்குமா என்று, நாளைக்கு 8 மணிக்கே புறப்பட்டு விடக் கூடாது. இப்படி இது ஒரு நாளில் நடக்கிறது; மற்ற நாட்களில் சாதாரணமாக அந்த குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கப் பார்க்கலாம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவு வரையிலேயும் இருந்த உறுப்பினர்களுக்கும், விரிவாகப் பதில் சொன்ன அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இவ்வளவு நேரம் வரையிலேயும் அவை நடவடிக்கைகளை சிறப்பாக இருந்து குறிப்பு எடுத்து, நாளையதினம் இந்தச் செய்திகள் அப்படியே வருவதற்குரிய ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிற பத்திரிகை நண்பர்களுக்கும் என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-1994) காலை 11.30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 10.23 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

109. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 1991-92-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

110. திருவாளர்கள் ஏசியாட்டிக் ஆக்ஸிஜன் லிமிடெட் அவர்களால் 1993-94 முதல் 1995-96 வரையிலான 3 ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியைத் தள்ளி வைப்பது குறித்து 9-2-1992 ஆம் நாளிட்ட 40-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

எல்லாம் இப்பொழுது கோடை விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுற்றுலாத் துறை மூலமாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இந்த ஏற்காடு மலையிலும் கோடை விழாவை சுற்றுலாத் துறை எடுத்துக்கொண்டு, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். அதுபோல, ஏற்காடு ஏரியைப் புதுப்பிப்பதற்காக ரூ.3.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை அதிகப்படுத்தி, இந்த ஏரியை அழகு வாய்ந்த ஏரியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கொல்லிமலையிலே ஒரு அருவி-ஆகாய கங்கை தீர்த்த அருவி இருக்கிறது. இது 200 அடி உயரத்திலே இருந்து விழுகிறது. இதைச் சரியான முறையிலே பயன்படுத்துகின்ற வகையிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றியை உரித்தாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

8. விதி 110-ன்கீழ் முதல் அமைச்சரின் அறிக்கை.

தமிழ்நாட்டிற்குள் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க ஏற்கெனவே தமிழகக் கடலோரத்தில் இயங்கிவரும் 7 கடலோரக் கப்பல் படையினரைத் தொடர்ந்து பணியாற்றச் செய்து மேலும் புதிதாக 2 கப்பற் படைகளையும் அங்கு இயங்கச் செய்ய வேண்டுமென – மத்திய அரசுக்கு விடுக்கும் கோரிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-ன் கீழ், பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அறிவிப்பினை பேரவைக்கு வெளியிட அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இப்பொழுது பேரவைக்கு வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தேச விரோத சக்திகள் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளின் மூலமாக தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டிலும் ஊடுருவாமல் தடுப்பதற்கு தமிழ்நாடு அரசு எல்லாவிதமான தீவிர நடவடிக்கைகளையும் எடுத்து வெற்றி கண்டுள்ளதை நாடு நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 29] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் எல்லா இடங்களிலும், காவல் துறை, மைய அரசின் காவல் பாதுகாப்புப் படை ஆகியவை முழு நேரமும் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. இத்துடன் கடற்பகுதிகளில் இந்தியக் கப்பற்படையும், கடலோரக் காவல் படையும் தீவிரமாக ரோந்து செய்து, போராளிகள் நடவடிக்கைகளை கடற்பகுதிகளில் அறவே ஒழித்திட இவ்விரு நிறுவனங்களும் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் வலுப்படுத்தப்படவேண்டுமென்று மைய அரசை, மாநில அரசு கேட்டுக் கொண்டதன் விளைவாக, இந்திய கப்பற்படை மற்றும் கடலோரக் காவல் படையினர் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளைக் கண்காணித்து வருகிறார்கள்.

பிற்பகல் 12-30

மேலும் கடலோரப் பகுதிகளில் கடலில் சென்று தக்க நடவடிக்கை எடுப்பதற்காக நான் பாரதப் பிரதமரையும், அன்றைய மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களையும் வற்புறுத்திக் கேட்டதற்குப் பின்பு தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில்-கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை, நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், ஜகதாப்பட்டினம், இராமேஸ்வரம் மற்றும் தொண்டி போன்ற 7 இடங்களில் இந்தியக் கப்பற்படைப் பிரிவினர் அமர்த்தப்பட்டு அவர்கள் மீன்பிடி விசைப் படகுகளைப் பயன்படுத்தி கடற்பகுதிகளில் ரோந்து புரிந்து வருகின்றனர்.

மேலும் இந்தியக் கடற்படையின் 7 பிரிவுகளும் போதாது எனவும், குறிப்பாக பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளில் போதிய காவல் இல்லை என்றும் அங்கும் கடற்படைப்பிரிவு வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் இராமநாதபுரத்திற்கு தெற்கே வேம்பாரிலும், நாகப்பட்டினத்திற்கு வடக்கே பூம்புகாரிலும் மேலும் இரண்டு கப்பற்படைப் பிரிவுகள் வேண்டும் என்றும் நான் பாரதப் பிரதமர் அவர்களுக்கும், உள்நாட்டு ராஜாங்க மந்திரி அவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

1993 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டாம் தேதி மத்திய அரசின் உள்நாட்டுப் பகுதி ராஜாங்க மந்திரி திரு. ராஜேஷ்பைலட் அவர்களைச் சந்தித்த போது இக்கோரிக்கையை வலியுறுத்தினேன். மீண்டும் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி உள்நாட்டுப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது வற்புறுத்திக் கேட்டேன். மேலும்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 ஏப்ரல் 29

15-2-1994 அன்று டெல்லி சென்று பாரதப் பிரதமரும் தற்போதைய மத்திய பாதுகாப்பு அமைச்சருமான திரு. நரசிம்மராவ் அவர்களையும் சந்தித்தபோது இதை நினைவுபடுத்தி இந்திய கடற்படையின் 7 பிரிவுகளும் தமிழக கடற்பகுதிகளில் நிரந்தரமாக ஸ்திரமாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு கூடுதலாக இரண்டு பிரிவுகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். மத்திய அரசின் உள்துறைச் செயலாளர், மத்திய புலனாய்வுத்துறையின் இயக்குநர் மற்றும் 'ரா' அதிகாரிகள் டெல்லியில் பிரதமரின் ஆணைப்படி வந்து என்னைச் சந்தித்தபோது இந்த வேண்டுகோளை நான் மீண்டும் விடுத்தேன். நான் கேட்டுக்கொண்ட இரண்டு கூடுதல் கடற்படைப் பிரிவுகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் தற்போது இயங்கிவரும் 7 கடற்படைப் பிரிவுகள் நிலையாக ஸ்திரமாக அனுமதிக்கப்படாமல் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. அந்த அனுமதியும் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதிக்குப் பிறகு விலக்கிக்கொள்ளப்படும் என்றும் கேள்விப்படுகிறேன். அன்று முதல் அதாவது நாளை மறுநாள் முதல் இந்த கப்பற்படையின் 7 பிரிவுகள் மீன்பிடி விசைப் படகுகள் மூலமாக ரோந்து செய்யும் பணியும் நிறுத்தப்படும் என அறிகிறேன். இது மிகவும் கவலை தருவதான ஒரு செய்தியாகும். தமிழ்ழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தேச விரோத சக்திகள் கடல் வழியாக இந்திய நாட்டிற்குள் ஊடுருவாமல் தடுப்பதற்கு எடுக்கின்ற எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசுக்குத்தான் பொறுப்பு இருக்கிறது. இந்திய கடற்படை மற்றும் கடலோரக் காவல் படை மூலம் மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தாக வேண்டும்.

இந்த 7 கடற்படைப் பிரிவுகள், நேவல் டிடாச்மென்ட் செயல்பட வில்லை என்றால் இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதிகள் கண்காணிப்பின்றிப் போய்விடும். அவ்வாறு கண்காணிப்பு இல்லாமல் போய்விட்டால் விடுதலைப் புலிகள் எளிதில் தமிழ்நாட்டில் ஊடுருவுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும். இத்தகைய ஒரு அபாயகரமான சூழ்நிலையை தமிழ்நாடு எதிர்நோக்க வேண்டிய காரணத்தால் தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு வன்முறைக் கலாச்சாரத்தைத் தூண்டுவதற்கு வன்முறைக் கும்பல்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துவிடும் என்பதாலும் இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உலை வைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தாலும் இந்த

TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அபாயகரமான சூழ்நிலையை நாட்டுமக்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும் எடுத்துரைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

என் சார்பாக மட்டுமின்றி, தமிழக அரசு சார்பாக மட்டுமின்றி, ஒட்டுமொத்தமாக தமிழக மக்களின் சார்பாகவும், இந்திய மக்களின் சார்பாகவும் இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக்காக்கவேண்டும் என்கின்ற நல்லெண்ணத்தாலும் இந்த 7 கப்பற்படைப் பிரிவுகளும் தொடர்ந்து தன் பணிகளைச் செயலாற்றவேண்டும் எனவும், புதிதாகக் கோரப்பட்ட இரண்டு கப்பற்படைப் பிரிவுகளையும் உடனடியாக வழங்க ஆணையிட வேண்டும் எனவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12.35

பாரதப் பிரதமராக மட்டும் அன்றி மத்திய பாதுகாப்பு அமைச்சராகவும் விளங்கிவருகின்ற திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கருத்தில் கொண்டு நமது நியாயமான இந்தக் கோரிக்கையை ஏற்று ஆணைகளை விரைவில் வழங்க வேண்டுமென இந்தப் பேரவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இந்த விவரங்களை எல்லாம் விளக்கி இன்று ஒரு கடிதம் எழுதி அனுப்பவுள்ளேன் என்பதையும் இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு உங்கள் ஒட்டுமொத்த உணர்வுகளையும் தமிழக மக்களின் உணர்வுகளையும் எனது கடிதத்தின் வாயிலாக பாரதப் பிரதமர் அவர்களுக்கு தெரிவிக்க உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்கிற அளவுக்கு நம்பிக்கையோடு இந்தப் பேரவையின் சார்பில் அவர்கள் எடுக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை ஒட்டுமொத்த பேரவையின் உறுப்பினர்கள் சார்பிலும் என் சார்பிலும் முதலமைச்சர் அவர்களுடைய உணர்வுகளோடு இண்ணத்து மத்திய

அரசுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உணர்வினை மத்திய அரசு புரிந்துகொண்டு அதை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்று பேரவையின் சார்பில் என்னுடைய கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும், வாக்கெடுப்பும்–தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம்

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறை மற்றும் சுற்றுலா சார்ந்த விஷயங்கள் மீது கருத்துக் கூறுகின்ற நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் சுற்றுலாத் துறைக்கு இந்த அரசு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் நான் நீண்ட நெடுநேரம் எடுத்துச் சொன்னால், அதுவே ஒரு சுற்றுலா போல் ஆகிவிடும். அதோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்கூட காலத்தின் அருமையை எல்லாம் நினைவு படுத்தி இருக்கிறார்கள். காலை, மாலை இரவு என்று இந்த காலத்தின், நேரத்தின் அருமை கருதி நேரடியாக விஷயத்திற்கு வந்துவிடுகிறேன். இளைய தலைமுறையினருடைய எழு ஞாயிறாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்கின்ற இந்த அரசு முதுபெரும் தியாகிகளை எல்லாம் மதிக்கின்ற, அந்தப்பெரும் தியாகிகளை எல்லாம் போற்றி மதிக்கின்ற வகையிலே விழாக்கள், சிலைகள், நினைவுச் சின்னங்களை எடுத்துவருகிறது. டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய நினைவிடம், சிலை, போக்குவரத்து துறைக்கு பெயர் என்றெல்லாம் பெருமைப்பதுத்தி உள்ளது. அதேநேரத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் சென்னையிலே சிலை அமைக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு 3 மாவட்டங்களில்தான் விழா கொண்டாடப்படுகின்ற நிலை இருந்ததை மாற்றி இன்றைக்கு மாநிலம் முழுவதும் விழாக் கொண்டாடும் நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அமரர் ஆகிப்போன புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது புதிய மாவட்டத்திற்கு பசும்பொன்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

9. ஒழுங்குப் பிரச்சினை -

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பளிக்காதது குறித்து—கொறடாவுக்குப் பேரவைத் தலைவரின் வேண்டுகோள்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் திரு. ஞானசேகரன் அவர்களே பேசிக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்களும் பேச வேண்டுமென்று உங்களிடம் கோரிக்கையாக வைத்திருக்கிறோம். ஆனால் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. எங்களுடைய உரிமை பாதிக்கின்றபோது, உங்களிடத்தில்தான் கோரிக்கை வைக்க முடியும். எங்களுக்குப் பேசுகின்ற ஜனநாயகத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். ஜனநாயகத்தை மதிக்கின்ற தலைவராக நீங்கள் இருக்கின்ற காரணத்தால் உங்களிடத்திலே இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகிறவர்களை முறைப்படுத்திக் கொடுக்கின்ற அந்தப் பணியில் எனக்கு உதவ வேண்டுமென்று நம்முடைய சட்டமன்றப் பேரவை மரபுப்படி அந்தந்தக் கட்சியினுடைய கொறடாக்களிடத்திலே அதை ஒப்படைத்திருக்கிறேன். அவர்கள் கொடுக்கிற பெயர்களைத்தான் நான் இங்கே சேர்க்க முடியும். உங்கள் பெயரைக் கொடுக்கவில்லை என்று சொன்னால் நீங்கள் உங்கள் கொறடாக்களைத்தான் வற்புறுத்த வேண்டி வரும். அல்லது உங்கள் கட்சி அளவில் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்ல வேண்டிவரும். அதற்குப் பிறகும் உங்களுடைய வாய்ப்பு மறுக்கப்படுகிறதென்று சொன்னால், அதிலே எந்த அளவுக்கு நான் தலையிட முடியுமோ அந்த அளவுக்குச் செய்யலாம். உங்களுடைய கொறடாக்களிடத்திலேதான் நானும் சொல்ல முடியும். ஆகவே கொறடாக்களும் தங்களுடைய கட்சி உறுப்பினர்களை முழுமையாகப் புறக்கணிப்பது என்ற முடிவு எடுப்பதைப் பேரவையிலே ஏற்றுக் கொள்ள முடியாது. நேரம் இல்லாத காரணத்தாலே எங்களாலே கொடுக்க முடியவில்லை என்று வேண்டுமானால் கொறடாக்கள் சொல்லலாம். உறுப்பினர்கள் முழுமையாகப புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை வருகிறபோது, பேரவைத் தலைவர்தான் உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டி இருக்கிறது. திருமதி பொன்னம்மாள்.

1994 ஏப்ரல் 29]

திரு. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் பேச வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் கொறடாவிடம் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் பேச வேண்டுமென்று எங்களுடைய கட்சிதான் முடிவெடுக்கும். கட்சியினுடைய ஒரு ஏஜண்டாகத்தான் நான் உங்கள் முன்னே நிற்கிறேன். கட்சி சொல்வதைத்தான் நான் கேட்க முடியுமே தவிர, நானாக தனிப்பட்டு இயங்க முடியாது. எங்களுடைய கட்சியிலே ஒரு தீர்மானம் செய்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் செய்கிறது. அந்தக் கட்சியினுடைய சி.எல்.பி. தீர்மானத்தைத்தான் நான் சொல்ல முடியுமே தவிர, தனிப்பட்ட முறையில் செய்ய முடியாது. 61 உறுப்பினர்களும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சி இங்கு இருக்கிற உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பறிக்கிறது என்று சொன்னாலும்கூட பேரவைத் தலைவர்தான் தலையிட வேண்டிவரும். சில உறுப்பினர் களுடைய உரிமைகளை ஒரு கட்சி பறிக்க முடியாது. ஏனென்றால் உறுப்பினர்களுக்கு உரிமை தர வேண்டியது பேரவைத் தலைவர் அவர்களுடைய பொறுப்பு. அப்படி அவர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது என்கிற நிலைமை வருமேயானால், நான் கொறடாக்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன், உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பறிக்கிற அளவுக்கு நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காதீர்கள். 5 உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கேட்கிறார்கள். நீங்கள் 2 உறுப்பினர்களுக்குத்தான் வாய்ப்பு கொடுக்கிறீர்கள். எனவே 2 உறுப்பினர்களின் பெயர்களைக் கொடுக்கிறேன் என்று சொல்லுகிற உரிமை உங்களுக்கு உண்டு. அப்படியில்லாமல் சில உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால், அந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படும் நிலைமை இருக்க வேண்டாமென்று நான் சொல்லுகிறேன். எங்களுடைய கட்சி முடிவு சில உறுப்பினர்களைப் புறக்கணிக்க வேண்டுமென்றுதான் இருக்கிறது என்று இங்கே வந்து அதை வற்புறுத்த முடியாது. திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சிக்கு மனு கொடுப்பார்கள். பேச வேண்டுமென்று கேட்பார்கள். அவர்கள் 4, 5 பேர்கள் நிறைய பேசியிருக்கிறார்கள்.

பேசாமல் இல்லை. அந்த மாதிரி மனுக்கள் வந்த பிறகு, நாங்கள் ப்ரபெரன்ஸ் கொடுக்கிறோம். அவர்கள் அப்படிப்பட்ட மனுக்களை கொடுக்கவில்லை. ஏற்கெனவே அவர்கள் பேசி இருக்கிறார்கள். எனவே வேண்டுமென்று நாங்கள் ஒதுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கேட்கவில்லை, அதனால் நான் கொடுக்கவில்லை என்று நீங்கள் சொல்லலாம். திரு. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச வேண்டுமென்று தினசரி கொறடாவிடம் வற்புறுத்தி வருகிறோம். ஜனநாயக முறைப்படி தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் எங்களது குறைகளை சட்ட மன்றத்தில் பேசாமல், வெளியில் பேசுகின்ற அளவுக்கு நாங்கள் தரம் கெட்டவர்களாக இல்லை என்பதால், இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தில் எல்லா மானியங்களிலும் நாங்களும் பேச வேண்டும். அதற்கு நீங்கள் வாய்ப்புத்தர வேண்டும். இன்றிலிருந்து எல்லா மானியங்களிலும் நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பைத் தரவேண்டும் என்று மீண்டும் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நிச்சயம் நீங்கள் ஜனநாயக முறைப்படி எங்களது கட்சிக் கொறடாவை அழைத்துப் பேசி, எங்களுக்கு வாய்ப்பு வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *4.35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள் செல்லவில்லை. பொதுவாக ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் சிலர் தொடர்ந்து பேச முடியாமல் புறக்கணிக்கப்பட்டால் அதற்கு என்ன பரிகாரம்? என்ன பாதுகாப்பு? இதற்கு ஏதாவது முன் உதாரணம் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர்தான் பாதுகாக்க வேண்டும். ஒரு உறுப்பினர் வந்து முழுமையாகப் புறக்கணிக்கப்படுகிறபோது பேரவைத் தலைவர்தான் பாதுகாக்க வேண்டும். ஆகவே நான் இப்போது பேரவையிலேதான் சொல்கிறேன். அந்த அளவுக்கு சில உறுப்பினர்கள் பேசுவதற்கே வாய்ப்பில்லாத நிலைமை இருப்பது போன்ற ஒரு நிலைமையை அருள்கூர்ந்து கொறடாக்கள் உருவாக்க வேண்டாம் என்ற அந்தக் கருத்தைத்தான் நான் சொல்கிறேன். பேச அனுமதிப்பது என்பதைப்

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

பொறுத்தமட்டில் அது பேரவைத் தலைவருடைய பொறுப்புதான், எல்லா உறுப்பினர்களுடைய உரிமையையும், அவர்கள் பேச அனுமதி கேட்கிறபோது அவர்களுக்கு எப்படியோ ஏதோ ஒருவகையில் அனுமதி அளிக்க வேண்டியது பேரவைத் தலைவருடைய பொறுப்பு. அந்த வகையிலேதான் நான் இப்போது கொறடாவிடத்திலேயே சொல்கிறேன். ஒரு உறுப்பினருடைய உரிமையை முழுமையாகப் பாதிக்கத்தக்க வகையிலே நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டு இருப்பது நல்லதல்ல. அந்த நிலைமை இல்லாத அளவுக்கு எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைக்கிற வாய்ப்பைப் பகிர்ந்து அளிக்கிற அளவுக்கு நீங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சியின் கொறடாக்களை—இந்தக் கொறடா மட்டும் அல்ல, இப்போது இங்கேயும் கூடச் சொன்னார்கள், டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் நான் இன்றைக்குத் தயாராக இருந்தேன். எங்கள் கொறடா இன்றைக்கு என்னைப் பேசுங்கள் என்று முன்னாலே சொல்லியிருந்தார். இன்றைக்கு என் பெயரை விட்டு விட்டார் என்று சொன்னார். எனவே நீங்கள் எனக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று வற்புறுத்தினார். அதற்குப் பிறகு, இன்னொரு உறுப்பினர் வரவில்லை என்கிறபோது, அவருக்கு அந்த வாய்ப்பை நானாகத்தான் கொடுத்தேன். அதேபோன்ற ஒரு நிலைமை உருவாகாத அளவுக்கு கட்சிகளின் கொறடாக்களும் நிலைமையை என் அளவுக்குக் கொண்டு வராமல் பார்த்துக் கொள்வதே நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் கொறடா எங்கள் கட்சியின் மேலிடத்தின் சொற்படி செயல்படுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புவது, கட்சியின் மேலிடம் என்பது யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் நீங்கள் அவையில் கேட்கக்கூடாது. உங்களுடைய கட்சி மேலிடம் யார் (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொன்னேன். கொறடாக்களுக்கு சொல்லிவிட்டேன். கட்சி மேலிடம் என்பது எல்லாம் இங்கே சொல்ல வேண்டாம். அதை அவர்களிடத்திலோ அல்லது உங்கள் கட்சிக்குள்ளேயோ சொல்லிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அது வேண்டாம். இப்போது உங்கள் உரிமையை வேண்டுமானால் நீங்கள் கேட்கலாம்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலிடத்திலேயிருந்து என்று இங்கே குறிப்பிட்டார்கள். மேலிடம் என்று சொன்னால் எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ்

கமிட்டியிலிருந்து அதுபோன்று எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்று அறிவிப்பு அவர்களுக்கு வந்திருக்கிறதா ? ஏனென்று சொன்னால், மேலிடம் என்று சொல்லி எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய ஜனநாயக முறையை ஆற்றுகின்ற எங்களை இவர்கள் அதையெல்லாம் ஆற்றவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் உங்கள் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன், மேலிடம் என்று குறிப்பிட்டார்கள். மேலிடம் என்று சொன்னால், எங்களைப் பொறுத்தவரையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர். அவர்கள் அதுபோன்று எங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்று ஏதேனும் அவர்களுக்குத் தகவல் தந்திருக்கிறார்களா ? அதுபோன்று இருந்தால் மட்டும் பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பொறுத்த மட்டில் கட்சியினுடைய மேலிடம் என்ன கட்டளை இட்டிருக்கிறது, மேலிடம் யார் என்பதையெல்லாம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு இங்கே இருக்கிற கட்சித் தலைவர்களும் கட்சிக் கொறடாக்களும்தான் என் கண்ணுக்கு நேரே தெரியும். அவர்கள் சொல்லுகிறார்கள். எங்களுக்கு வாய்ப்பே கொடுப்பதில்லை என்று என்னிடத்தில் புகாராகக் கொடுப்பது உங்களுக்கு இருக்கிற உரிமை.

நான் அதைக் கேட்டு, கொடுக்க வேண்டிய கடமையும் எனக்கு இருக்கிறது. அந்த வகையிலேதான் சொல்கிறேன். சில உறுப்பினர்களை அப்படியே புறக்கணிப்பது என்கிற முடிவில் கட்சிக் கொறடாக்களும் செல்ல வேண்டாம் என்பதை நான் திரும்பவும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர், அதாவது சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரை, எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தகவல் பேரில்தான் நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். அவர்கள் மூலமாகத்தான் எங்களுடைய சட்டமன்ற நிர்வாகிகளை இங்கே அனுமதித்து இருக்கிறீர்கள். அந்த வகையிலே பார்க்கிறபோது எங்களுடைய கொறடா, மேலிடத்திலிருந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலிடத்தைப் பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லை. அது உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம். அது இப்போது பிரச்சினை இல்லை. நீங்கள் இங்கே பேச வாய்ப்பு இல்லை என்று நீங்கள் தெரிவிக்கிற அந்தக் கருத்தை . . .

1994 ஏப்ரல் 29]

திரு. கே. கே. சின்னப்பன் : எனவே பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக முறையிலே நாங்கள் இங்கே பணியாற்றுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும். நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே அவையிலே பங்கேற்கக்கூடிய உறுப்பினர்கள் யார் யார் பேசவேண்டும் என்பது, அந்தந்தக் கட்சியில் இருப்பவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை உறுப்பினர்கள் பேசவேண்டும் என்பது எல்லாம் அந்தக் கட்சியின் கொறடாக்கள் பார்த்துத் தருகிறார்கள். அந்தப் பட்டியலைத்தான் தாங்கள் பார்த்து, அதிலே சில பேரை சேர்க்க வேண்டுமானாலும் சில பேரை குறைக்க வேண்டுமானாலும் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் இந்த எல்லா விதிகளையும் அறிந்த நம்முடைய தலைவர் அவர்களுக்கு இதுவும் தெரியும்.

ஆனாலும்கூட ஒரு கட்சியிலே சில உறுப்பினர்களை அந்தக் கட்சிக் கொறடா பேச அனுமதிக்கவில்லை அல்லது அவருடைய பெயரை பேரவைத் தலைவரிடம் கொடுக்கவில்லை என்றால் — விதி முறைகள், மரபுகள் எல்லாம் என்ன சொல்கிறது என்றால், கௌல் அண்டு சக்தர் என்கிற அந்தப் புத்தகத்திலேகூட, பேரவைத் தலைவர் அவர்களே ஒரு கட்சியினுடைய, எந்தக் கட்சி கொறடாவால் ஒதுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட உறுப்பினர்களை, அவர்கள் அவையிலே பேச வேண்டும் என்றால் அந்த உறுப்பினருக்கு நீங்கள் வாய்ப்பு அளிக்கலாம் என்கிற நியதி இருக்கிறது. மரபு இருக்கிறது. அதையும் அருள்கூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் சொல்லிவிட்டேன். நானே கொறடாக்களுக்கு இந்தப் பேரவையிலே ஒப்பனாக அந்த வேண்டுகோளை வைக்கிறேன். எந்த உறுப்பினரையும் புறக்கணிக்கிறீர்கள் என்ற புகார் எனக்கு வராமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் புகார் வருகிறபோது, நான் சில விதி முறைகளின்படி சில நேரங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றுதான் சொன்னேன். திரு. சஞ்சய் ராமசாமி.

[1994 ஏப்ரல் 29

திரு. சஞ்சய் ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நன்றாக அறிவீர்கள். இங்கே வந்து எங்களுக்கு என்று உரிமை இருக்கிறது; பேசுகின்ற உரிமை எங்களுக்கு இருக்கிறது. இதை, ஏன் ஒரு உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டுவரக்கூடாது என்று உங்களை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உரிமை மீறல் பிரச்சினை என்கிற அளவுக்கு. . . (குறுக்கீடுகள்) நாம் ஒரு மரபு வைத்து இருக்கிறோம். கொறடா கொடுப்பதை வைத்துத்தான் நான் பேசுவோர் பட்டியல் தயார் செய்ய வேண்டி இருக்கிறது. எனவே, அந்தவகையில் நான் பட்டியல் தயார் செய்கிறேன். அந்த மரபு இருக்கிறது. திரு. சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் எங்கள் கட்சியின் கொறடாவிடம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்., இந்த மானியக் கோரிக்கையில் பேச வேண்டும் என்று. ஆனால் (குறுக்கீடுகள்) .. தொகுதி குறித்து நான் சொல்ல வேண்டும். அதனால்தான் நான் கேட்கிறேன். இது வந்து என்னுடைய உரிமையைப் பாதிக்கிறது. அதாவது, நான் பேசுகின்ற உரிமை பாதிக்கப்படுகிறது. அதனால், இன்னொரு உறுப்பினர் வந்து என்னுடைய உரிமையைப் பறித்தாலும், அதற்கு நான் கண்டிப்பாக உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவர முடியுமா, இல்லையா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். அப்படி முடியும் என்றால், ஏன் நான் இவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொண்டு வந்தால் அதைப் பரிசீலிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வருகிறபோது அது எந்த அளவுக்கு. . . (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் தெரிவித்த அந்தப் பிரச்சினையிலிருந்து, நானே பட்டியல் சுயமாகத் தயாரித்து பேச அனுமதிக்கிறேன் என்கிற நிலைமை இருக்கிறவரையிலேயும், இன்னொரு உறுப்பினர் தலையிட முடியாதுதான். ஆனால், இந்தப் பேரவையிலே, எல்லாப் பேரவைகளிலும் இருப்பதுபோல ஒரு மரபைக் கடைப்பிடித்து வருகிறோம். கொறடாக்கள் கொடுக்கிற லிஸ்டிலே இருந்துதான் நான் பட்டியல் தயார் செய்கிறேன். ஒருவேளை 5 பேர் கொடுப்பார்களேயானால், அதிலே 2 பேரை நான் குறைத்து விடுகிறேன். சில உறுப்பினர்கள் அப்படி எந்தப் பட்டியலிலேயும் எங்கள் பெயர் வரமாட்டேன் என்கிறது; உங்களுக்கு எங்களுடைய பெயரே வரமாட்டேன் என்கிறது என்கிற புகார் வருகிறபோது, உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாக்கிற, பேரவையிலே இருக்கிற பேரவைத் தலைவர் என்கிற முறையிலே கட்சிக்

1994 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

கொறடாக்கள் அந்த அளவுக்கு சில உறுப்பினர்களைப் புறக்கணிப்பது என்கிற நிலை இருக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலேயும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று 2 பேர் எதிர்க் கட்சியிலே இருந்து பேசுவதற்கு பட்டியல் கொடுத்து இருக்கிறார்கள். அந்த 2 பேருக்கு அனுமதி அளித்து இருக்கிறேன். ஒருசிலர் அதன்காரணமாக வாய்ப்பை இழக்கிறார்கள் என்கிற நிலைமை வந்திருக்கிற காரணத்தினாலே, இப்போது நான் பேரவையிலே வெளிப்படையாக கட்சிக் கொறடாக்களுக்கு வேண்டுகோள் விட்டு இருக்கிறேன். இந்த அளவுக்கு உறுப்பினர்கள் யாரும் அவர்கள் உரிமையைப் பாதிக்கிற அளவுக்கு நடக்க வேண்டாம் என்று. அதை மனதிலே வைத்து கொறடாக்கள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) போதும். (குறுக்கீடுகள்) திரு. தாமரைக்கனி உட்காருங்கள். உங்களுக்கு ஒன்றும் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சி என்றால், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்தான், காங்கிரஸ் கட்சியினுடைய மேலிடம். சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், 60 சட்டமன்ற உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆகவே, எங்கள் கட்சியைப் பொறுத்தமட்டிலே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் எடுக்கின்ற முடிவுதான் இறுதியான முடிவு. சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர்தான் மேலிடம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி மேலிடம் ஆக இருக்கிற அந்த சட்டமன்றக் கட்சித் தலைவர், 2, 3 உறுப்பினர்கள் பேசக்கூடாது என்கிற முடிவு எடுப்பாரேயானால், அதைப் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கின்ற அந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய அலுவலகத்துக்கும் வருவது கிடையாது; சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நடவடிக்கை எடுங்கள்.(குறுக்கீடுகள்) திரு. செல்வராஜ் இந்தப் பேரவையினுடைய உறுப்பினர். நான் பேச அனுமதி பெற முடியாத அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள், நான் பேச வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்கிறேன், நீங்கள் எனக்கு

பேசுகிற வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும் என்று அவர் கேட்கிறார். அவர் கேட்கிற கோரிக்கைக்கு நான் நடவடிக்கை எடுப்பதற்கு, கடமை எனக்கு இருக்கிறது. ஆகவேதான் சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் மேலிடமா, இல்லையா என்பதைப்பற்றி நான் எதுவும் சொல்லவே இல்லை; நான் அதற்குள்ளே போகவே இல்லை என்று நான் அப்போது இருந்தே சொல்லிக்கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

பிற்பகல் 4--45

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருடைய கடமையிலிருந்து ஒருவர் தவறுகிறபோது அதை உணர்த்த வேண்டியது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கடமை என்பதை நீங்கள் இங்கே சுட்டிக்காட்டினீர்கள். கொறடாக்கள் தொடர்ந்து பாரபட்சமாக நடப்பார்களானால், அப்படி பாரபட்சமாக நடக்கிற கொறடாக்கள்மீது சபாநாயகர் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அந்த வகையில் கொறடாக்கள் பாரபட்சம் இல்லாத வகையில் அவர்களுடைய கடமையைச் செய்வதற்கு என்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் ஒரு வழிமுறையைக் கடைபிடித்துதான் அவர்களுடைய கட்சிக்குள் உறுப்பினர்களை பகிர்ந்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதற்கு என்ன வழிமுறை நாடாளுமன்ற நடைமுறையில் இருக்கிறது என்பதையும் தாங்கள் ஆய்வு செய்து, கொறடாக்களுக்கு முதலில் வழிகாட்டி, அந்த வழிகாட்டுதலை அவர்கள் பின்பற்றவில்லை என்றால், தாங்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்லிவிட்டேன். திரு. செல்வராஜ் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையில் அவர்கள் தாங்கள் பணிபுரிய முடியாத அளவுக்குப் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. தங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கிறபோது, நான் கொறடாக்களுக்கு இந்த நேரத்தில் பர்ஸ்ட் ஸ்டெப் வேண்டுகோள்தான் நான் வைக்கிறேன். சில உறுப்பினர்கள் உரிமை தொடர்ந்து பாதிக்கப்படுகிற அளவுக்கு நிலைமை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்ற பர்ஸ்ட் ஸ்டெப் வேண்டுகோளை வைக்கிறேன். அந்த வேண்டுகோளும் புறக்கணிக்கப்படுகிறபோது, அடுத்தடுத்து என்ன நடவடிக்கையெடுக்கலாம் என்பதை விதிகளுக்குட்பட்டு முடிவு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. செல்வராஜ்.

1994 ஏப்ரல் 29]

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் பேசுகிறபோது 60 பேர் தேர்ந்தெடுத்ததாகச் சொன்னார். அதை மறுக்கவில்லை. 61 எம்.எல்.ஏக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்தோம் என்றால், நாங்களும்தான் அவரை தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அதனால் எங்களுடைய உரிமை பாதிக்கிறது என்று கூறுகிறோமே ஒழிய, தலைவர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டாக நாங்கள் யாரும் கூறவில்லை. எனவே, அவர் கூறிய அந்தக் குற்றச்சாட்டை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதும் அவைக்குறிப்பில் இருக்கலாம். அவர் சொன்னதும் இருக்கலாம். நீங்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தேர்ந்தெடுத்ததாகத் தான் எனக்கு முதல் தகவலே வந்தது. எனவே நீங்கள் எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுத்த தலைவர்தான் அவர். ஆகவே, அந்தத் தலைவர் உங்கள் எல்லோருடைய உரிமையையும் பாதுகாக்கிற கடமை எனக்கும் இருக்கிறது. பேரவையைப் பொருத்த வரையில் எல்லா உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதுகாக்கிற கடமை எனக்கு இருக்கிறது. அந்த வகையிலேதான் நீங்கள் எழுப்பிய பிரச்சினையை இப்போது நான் என்னுடைய வேண்டுகோளாகவே கொறடாக்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன். அந்த வேண்டுகோளை வருகிற நாட்களில் ஏற்றுக்கொள்வார்கள் என்றே கருதுகிறேன். ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலைமை தொடர்கிறபோது சட்டவிதிகளின்படி என்ன செய்யலாம் என்பதை நான் பின்னர் முடிவு செய்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் வாய்ப்பை கொடுக்க வேண்டிய காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா கொடுக்கத் தவறியிருக்கிறார். அவர் தவறுவதற்கு அந்தத் தலைவர்..

திரு. எஸ். டேனியல்ராஜ்: நான் ஆட்சேபிக்கிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய உள் விவகாரத்தில் அவர் தலையிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள் விவகாரத்தில் தலையிடவில்லை. கொறடாவைத்தான் சொல்கிறார். கொறடாவினுடைய பணி என்பது பேரவையினுடைய பணி (குறுக்கீடு) அவர் உள் விவகாரத்திற்குள் போகவில்லை.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: தலைவர் அவர்களே, உள் விவகாரத்தில் நான் போகவில்லை. நீங்கள் சொன்னதைத்தான் சொல்கிறேன். நீங்கள் சொன்னீர்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கு அந்த முடிவெடுக்கிற உரிமை இருக்கிறது. அவர் சொல்வது தான் நடக்கும் என்று நீங்கள் சொன்னீர்கள். அது தவறு என்பதற்குத் தான் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கும்.....

திரு. எஸ். டேனியல்ராஜ்: காங்கிரஸ் கட்சியினுடைய சட்ட விதிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கட்சியின் சட்ட விதிகளைப் பற்றி உங்களிடத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அவர் அந்த உறுப்பினருடைய உரிமையைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்குள் நான் போகவில்லை. (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியை விட்டு ரொம்ப நாளைக்கு முன்னால் வெளியே வந்துவிட்டேன். இனி கூப்பிட்டாலும் போக மாட்டேன், அவசியமும் இல்லை. நீங்கள் உங்கள் கட்சியினுடைய தலைவர் சொல்கிறபடி கொறடா அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்ற கருத்தைத் தான் சொன்னீர்கள். ஆகவே, ஒரு உறுப்பினருடைய அந்த வாய்ப்பைப் பறிக்கிற அதிகாரம் அந்தக் கட்சியினுடைய தலைவருக்கு இல்லையென்பதை இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் சொல்கிறபோது கொறடாக்கள் என்று பன்மையில் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னீர்கள். தயவுசெய்து, அருள்கூர்ந்து, காங்கிரஸ் கொறடா என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மற்ற கட்சிக் கொறடாக்கள் யாரும் இந்தத் தவறை செய்யவில்லை என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 4-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எழுந்த பிரச்சினை காங்கிரஸ் கட்சியின் கொறடாவைப் பற்றியதுதான் என்றாலும்கூட, எல்லாக் கொறடாக்களுக்கும் என்று சொல்வது எதிர்காலத்தில் மற்ற கொறடாக்களும் அப்படிச் செய்து விடாதீர்கள் என்பதற்காக, என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எல்லாக் கொறடாக்களுக்கும் என்று சொல்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே ஒரு அரை மணி நேரம் இப்படி நடந்தது. இப்போது ஒரு

1994 ஏப்ரல் 29] [திரு. சு. முத்துசாமி]

அரை மணி நேரம், ஏறத்தாழ 1 மணி நேரம் இன்றைக்கு இந்தப் பஞ்சாயத்திற்கு மட்டும் நேரம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த டிமான்ட் என்பதே மறந்து போய்விட்டது. இந்தப் பிரச்சினைதான் முன்னால் நின்று கொண்டிருக்கிறது. எனவே, இந்த டிமான்ட் மேலே பேசி முடித்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லிவிடுகிறேன். கௌல் அண்ட ஷத்தரிலே கூட—அதாவது நம்முடைய விதிமுறைகளின்படி பேரவைத் தலைவர்தான் பேச அழைக்க வேண்டும் என்று தெளிவாக இருக்கிறது. இது நடைமுறையிலே எப்படி இருக்கிறது என்றால், கொறடாக்கள் லிஸ்ட் கொடுக்க வேண்டும். அந்த லிஸ்டிலிருந்து நான் எடுத்து பேச அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. "In all important debates each Party or Group forward a list of the members who would be their spokesmen in such debates..." இந்த மாதிரி ஒவ்வொரு கட்சியின் சார்பிலும், யார் யார் முக்கிய பில்லின் மீதோ அல்லது வந்திருக்கக்கூடிய பிரச்சினையின் மீதோ பேசுவார்கள் என்று லிஸ்ட் கொடுப்பார்கள். ..."The Speaker is not bound by the Whip or the order in which the names have been given, but gives due consideration to such lists while calling upon Members to speak." இப்படித்தான் நடக்கவேண்டும், அந்தப் பட்டியல் படிதான் நடக்கவேண்டும் என்று அல்ல. இருந்தாலும் அந்தப் பட்டியலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. எனவே, இதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் நான் சொன்னேன். அந்தப் பட்டியலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலேதான் நான் இப்போது கொறடாக்களுக்கு ஒரு வேண்டுகோளை வைத்தேன். எனக்கு அந்த முந்தைய பகுதியைப் பயன்படுத்தக்கூடிய அந்த நிலைமைக்கு ஆளாக்காமல், நீங்களே . . . (குறுக்கீடு)

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கொறடா என்று இல்லை. அரசு கொறடா என்று நான் இருக்கிறேன். எங்களது தலைவி, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் எல்லா உறுப்பினர்களையும் பேச அனுமதிக்கச் சொல்லித்தான் எனக்கு அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் கட்சியிலே எந்தவித குழப்பமும் இல்லை.

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலிலே சொன்னேன். இரண்டொரு உறுப்பினர்கள் என்னைக் கொறடா விட்டுவிட்டார்கள் என்று என்னிடத்திலே அவ்வப்போது சொல்கிறார்கள் என்றுதான் சொன்னேன். இந்த நேரத்தில் கொஞ்சம் (குறுக்கீடு) நான் சொன்ன இந்தப் பிரச்சினையில் உங்களுக்கும் இடம் இருக்கிறது.

7. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று வீரமுழக்கமிட்ட பாவேந்தர் பாரதிதாசனுடைய 104-வது பிறந்த நாள் இன்று. இந்த நாளில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

எங்களுடைய வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தின் பாலாற்றின் படுகையின் பக்கத்திலிருக்கக்கூடிய காங்கேயநல்லூர் கிராமத்தில் பிறந்து தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் தன்னுடைய தமிழைப் பரப்பிய, முருகனுடைய சிறப்பைப் பரப்பிய கிருபானந்த வாரியார் அவர்களுக்கு சென்னையிலேயும் அவர் பிறந்த ஊரான காங்கேயநல்லூரிலும் தமிழக அரசு நினைவிடத்தை உருவாக்க வேண்டும். இந்த இரண்டு இடங்களிலும் அவர்களுக்கு சிலை வைக்க வேண்டும். வேலூரிலே ஒரு சிலையை வைக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருக்குறளின் பெருமையைப் பரப்பிச் சென்று இருக்கிற வணக்கத்திற்குரிய பெரியவர், திருக்குறள் முனுசாமி அவர்கள் மறைந்து விட்டார்கள். அவர்களுக்கும் ஒரு நினைவிடத்தை உருவாக்கி, அவர்களுக்கும் ஒரு சிலையை சென்னையில் நீங்கள் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள்பற்றி பல நண்பர்கள் இங்கே உரையாற்றினார்கள். பத்திரிகையாளர்களில் இன்று 136 பேர்களுக்குத்தான் வீடுகள் கொடுப்பதற்காக கொட்டிவாக்கத்திலே வீட்டு வசதி வாரியம் மூலமாக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. பத்திரிகையாளர்கள் தமிழ்நாடு எங்கும் பரவிக் கிடக்கிறார்கள். மாவட்ட அளவிலும் தாலுக்கா அளவிலும்,

உணர்ந்து நீங்கள் அந்த இடத்திலே சுற்றுலாத் துறை (மணியடிக்கப்பட்டது) ஒரே நிமிஷம். மோட்டலைக் கட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த இடத்திலே சொல்லியாக வேண்டும். திருச்செங்கோடு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சௌந்தரம், எம்.பி., அவர்கள் சொல்லிக் கூட மாண்புமிகு பிரதமர் அவர்கள் இருதய நோயாளிக்குப் பணம் அளித்திருக்கிறார்கள். வேலூரைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இராஜ்யசபா உறுப்பினர் முகமது சகி அவர்கள் போய் ரெக்கமண்ட் செய்துகூட மாண்புமிகு பிரதமர் அவர்கள் பணத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அதையும் ஏற்றுக்கொண்டு பாரபட்சம் (குறுக்கிடு) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றியை உரித்தாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போது திரு. ஞானசேகரன் பேசுகிறபொழுது ** அடிப்படையிலேயே அவர் இப்பொழுது இந்தப் பெயர் பற்றி பேசிய பிரச்சினையும் விவாதத்திற்கு உரியதாக இருக்கிற காரணத்தால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரை. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் பதிலுரை.

"ஜெய்ஹிந்த்" என்ற சொற்றொடரை உரையின் முடிவில் பயன்படுத்துதல் குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த "ஜெய்ஹிந்த்" என்பதைப் பொறுத்தவரையில் பார்லிமெண்டரி பிராக்டிசில் அவையெல்லாம் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது பல்வேறு இடங்களில் நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறது. அதைத்தான் அன்றைக்கு பேரவைத் துணைத் தலைவர்கூட, இங்கே சொல்லியிருக்கிறார். அந்த பார்லிமெண்டரி பிராக்டிசில், ஜெய்ஹிந்த், வந்தேமாதரம் என்பதெல்லாம் கோஷம் போடுகிற வார்த்தைகள்; எனவேதான் அவை வேண்டாம் என்று பார்லிமெண்டரி பிராக்டிசில் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால், அதையும் மீறி, அவர்களேகூட பல்வேறு இடங்களில் மீறித்தான் நடந்து வருகிறார்கள். மீறியே நடந்து வந்திருக்கிற அந்தப் பழக்கத்தில், ஞானசேகரனும் சொல்லி இருக்கிறார். எனவே, மிக 'ஸ்ட்ரிக்ட்'- ஆக

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நம்முடைய ரூல்படி நடக்க வேண்டும் என்று அப்படிச் சொன்னால், அதைச் சொல்லாமல் இருப்பது நல்லது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

பிற்பகல் 5-25

திரு. ச. காந்திராஜன் *(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்று அவையை நடத்தியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள், தன்னுடைய விவாதத்தின் முடிவுரையில் 'ஜெய்ஹிந்த்' என்று சொன்னார். அப்போது நம்முடைய ஆளுங்கட்சி மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சந்திரசேகர் அவர்கள், ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பி, அதிலே நான் என்னுடைய தீர்ப்புரையாக, 'ஜெய்ஹிந்த்' என்று சொல்வது தவறு என்று சொல்லவில்லை; ஆனால், பாராளுமன்ற நடைமுறை விதிகளிலே இப்படியெல்லாம் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் இருக்கின்றன என்று சொல்லி, 'கவுல் அண்டு ஷக்தர்' -லே இருக்கிற நடைமுறை விதிகளைப் பற்றி, நான் அந்தப் புத்தகத்தை எடுத்து, அதிலே இருக்கிற விதிகளையெல்லாம் வாசித்தேன். அதனை எச். எம். ராஜு அவர்கள்கூட பார்த்தார்கள். ஆனால், மறுபடியும் இன்றும்கூட தினமணிப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். துணை சபாநாயகர், இந்தமாதிரி எல்லாம் ஒரு தவறான தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள் என்று சொல்லி, நம்முடைய தீர்ப்பையே 'கிரிடிசைஸ்' செய்யும் வகையிலே 'லெட்டர் டு தி எடிட்டர்'-ல் எழுதியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது எல்லாம், அதைக் கண்டிப்பாகவே சொல்லக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கூடுமான வரையில் தவிர்க்க வேண்டுமென்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். எனவே, இது தவறான வார்த்தை என்று சொல்லவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்கிறேன். இன்றைக்குக்கூட என்னிடத்திலே வந்து சொன்னார்கள்; ஏதோ 'ஜெய்ஹிந்த்' -க்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் எதிர்ப்பு என்பதைப்போல அந்தச் செய்தி, பத்திரிகையின் வாயிலாக வெளியே சென்றிருக்கிறது என்று அறிகிறேன். 'கவுல் அண்டு ஷக்தர்' ல் மட்டுமல்ல; பண்டித நேரு பெருமகனார், பிரதமராக இருந்தபோதே, இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு நாடாளுமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவில்லை என்பதைக்கூட நான் இப்போது

29 ஏப்ரல் 1994] [பேரவைத் தலைவர்]

சொல்லியிருக்கிறேன். அந்தவகையில், தொடர்ந்து கடைப்பிடிக்காததை, இன்றைக்கு திரு. ஞானசேகரன் சொல்லியிருக்கிறாரே தவிர, சில முழக்கங்கள் பாராளுமன்றத்திலே இருத்தலாகாது என்று முடிவு அன்றைக்கே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கவுல் அண்டு ஷக்தர்' என்ற நூலில் உள்ள சரியான அந்த வார்த்தைகளை அப்படியே திரும்பச் சொல்ல வேண்டுமென்றால், 'The Members are forbidden to use the following words:' ஆக, 'உறுப்பினர்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வதிலே இருந்து தடுக்கப்படுகிறார்கள்' என்கிற வார்த்தைகள்தான் அதிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, அவர்கள் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்கிற பொருளிலேதான் 'They are forbidden' —என்ற வார்த்தைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1937—-இலே, இதே அவையிலே, Mrs. Lakshmi Sankara Iyer என்று ஒருவர் இங்கே வந்து இதைப் பேசி இருக்கிறார். அப்போது ஜெய்ஹிந், வந்தேமாதரம் ஆகியவைகளை 'யூஸ்' செய்திருக்கிறார். 1937-இல் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் இந்த 'ஹவுஸ்'-இல் 'அலவ்' செய்திருக்கிறார்கள். 'கவுல் அண்டு ஷக்தர்'-ல் சொல்லியிருப்பது 'ரூல்' அல்ல; It is just a commentary by two persons.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'கமெண்ட்ரி' அல்ல; அவர் நாடாளுமன்றத்தில் நடந்த புரசீடிங்கில் இருந்து எடுத்தே 'கோட்' செய்திருக்கிறார். அதையும் நான் உங்களிடத்திலே காண்பித்தேன். (குறுக்கீடு)

திரு. மா. சுந்தரதாஸ் : காண்பித்தீர்கள்; அது பாராளுமன்றத்திலா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்றத்தில் தான். அதைத்தான் அவர் எடுத்து, திரும்பப் புத்தகமாகப் போட்டிருக்கிறபோது, அவர் 'போர்பிடன்' என்று அவருடைய 'ஒபீனியன்'ஆகச் சொல்லவில்லை. பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட, நான் இப்போது தெரிவித்ததைப்போன்ற ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இன்ன தேதியில், பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தின்

[பேரவைத் தலைவர்] [29 ஏப்ரல் 1994

அடிப்படையில் என்றுதான் சொல்லியிருக்கிறார். நான் இப்போதும் சொல்கிறேன்; அவர் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை, தவிர்க்க வேண்டுமென்ற ஒரு பாராளுமன்ற நடைமுறை இருக்கிறது. அது கடைப்பிடிக்கப்படாமலேயே வந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், இன்றைக்கு திரு. ஞானசேகரனும் அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் சொல்லியிருக்கிறார் என்பதோடு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொண்டேன். (குறுக்கீடுகள்) வேண்டாம்; இதோடு போதும்.

7. மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *5-30*

* *மாண்புமிகு திரு. மு. தென்னவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வைப்பட்ட இடமெல்லாம் சாதனையாய் மலர, பாதம் பதித்த இடமெல்லாம் சரித்திரமாய் மிளிர, பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற பொற்கால முதல்வர் இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

தமிழருக்கு தொண்டும் செய்யும் தமிழனுக்கு தடை விதிக்கும்
நெடுங்குன்றம் தூளாய் போகும், சிறுத்தையே வெளியில் வா,
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலியென செயல் செய்யப்
புறப்படு,

என்று முழங்கிய பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் இன்று. கண்களுக்கு ஒளி போல, கவின்மலர் வாசம் போல, பெண்களும், ஆண்களும், பெரும் தமிழ்நாடு தன்னில் தண்கடல் நிகரித்த அன்பால் சரிநிகர் சமானத்தார் ஆனார், என்ற பண் வந்து காதில் பாய பருகும் நாள் எந்த நாளோ என்று அன்றைக்கு பாவேந்தன் கேட்டான், அந்த நாள், புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த நாள். அத்தகைய பெருமைக்குரிய பாவேந்தருடைய கனவை நனவாக்கிய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அமைச்சரவையில் அவருடைய நல்லாசியுடன், செய்தித் துறை அமைச்சராக பொறுப்பேற்று நான் முதல் முதலாகப் போட்டக் கையெழுத்து, பாரதிதாசன் பிறந்த நாள் விழா கோப்பிலேதான். இன்றைக்கு

அவருடைய பிறந்த நாளில் எனது துறைக்கான மானியக் கோரிக்கையினை நிறைவேற்றக் கோரும் வாய்ப்பினை தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அனுதினமும் போற்றும் நமது எம்.ஜி.ஆர். புகழ் பாடி, மக்கள் குரலை பிரதிபலித்து, அரசின் பல்வேறு துறைகளின் நலத் திட்டங்களையும், சாதனைகளையும் தினமும் தந்தி போல் மக்களுக்கு அளித்து, தமிழ்நாட்டு மக்களுக்கு அதிர்ஷ்டமாகக் கிடைத்துள்ள புரட்சித் தலைவி அரசின் மகத்தான செயல் திறனை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியை செய்தி மற்றும் விளம்பரத் துறை செம்மையாக செய்து வருகிறது.

கண்ணுக்கு ஒளி முக்கியம், விண்ணிற்கு மதி முக்கியம், முகத்திற்கு அழகு முக்கியம், அகத்திற்கு தூய்மை முக்கியம், இதயத்திற்கு துடிப்பு முக்கியம், வில்லுக்கு நாண் முக்கியம், சொல்லிற்கு பொருள் முக்கியம், செயல் திறன் முக்கியம், அதைப் போல செயல்படுகின்ற அரசுக்கு செய்தித் துறை முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு அரசாக, தமிழர் நலம் பேணும் அரசாக, அற்புதத் திட்டங்களை நிறைவேற்றும் அரசாக, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை வாழ வைக்கின்ற அரசாக, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அரசாக, இருட்டில் இருப்போரை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் அரசாக, அடித்தள மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக, அமுக்கப்பட்ட மக்களுக்காக, அழுத்தப்பட்ட, ஓரம் கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, நலிந்துபோன, மெலிந்துபோன மக்களுக்காக அற்புதத் திட்டங்களை தருகின்ற அரசாக, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை மக்கள் மனதிலே நிலைக்க வைக்கின்ற அரசாக, புரட்சித் தலைவி அரசு செயல்பட்டு வருகிறது. வீரர்களுக்கு விழா எடுப்பதும், வித்தகர்களுக்கு சிலை வடிப்பதும் நிலைத்த புகழ் பெற்றோருக்கு நினைவிடங்கள் அமைப்பதையும் வேள்வியாக செய்து வருபவர் நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.(மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மகத்தான தியாகங்களை மறவாது போற்ற வேண்டும் என்று நினைத்து, தியாகத்திற்கு திசையில்லை, தொண்டிற்கு பேதமில்லை, சான்றாண்மைக்கு சாதியில்லை என்று சங்கநாதம் முழங்கி அரசியல் மாச்சரியத்திற்கு அப்பாற்பட்டு மாற்று முகாம்களிலே இருந்தாலும் வேற்று கருத்து கொண்டிருந்தாலும், அதைப் பற்றி கருதாது நாட்டுக்கும், மொழிக்கும், இனத்திற்கும் நற்பணி ஆற்றிய நல்லவர்களைப்

பெருமைப்படுத்தும் வகையிலும், புரட்சித் தலைவி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் நாட்டிற்கு உழைத்தவர்களை அந்த அளவிற்கு பெருமைபடுத்தியதில்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு செயலாற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-35

யார், யார் புகழுக்குரியவர்களோ, யார், யார் பெருமைக்குரியவர்களோ யார், யாருக்கெல்லாம் புகழ் பாடவேண்டுமோ, அவர்களை எல்லாம் பெருமைப்படுத்துகிற வகையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் 19 விழாக்களையும், மாவட்ட அளவில் 11 விழாக்களையும் புரட்சித் தலைவி அரசு ஆண்டுக்கு ஒரு தடவை என்று ஏறத்தாழ 30 விழாக்களை நடத்தி வருகிறது. ஆனால் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபோது சொன்னதைச் செய்யவில்லை; செய்வதைச் சொல்வதில்லை என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். வதந்திக்கு வாகனம் தேவையில்லை என்று சொல்வார்கள். அதைப்போல வதந்தியை லக்கேஜ் ஆக ஏற்றிக்கொண்டு பிராட்கேஜ்-லே வருகின்ற கூட்ஸ் வண்டிகளாக அவர்கள் இருக்கின்ற காரணத்தால்தான் எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதைச் செய்கிற முதலமைச்சர் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு புரட்சித் தலைவி அறிவித்த அத்துணை செயல்களையும், அத்துணை திட்டங்களையும் புரட்சித் தலைவியின் அரசு சாதித்து இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஒளி-ஒலிக் காட்சி நடத்தப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறபோது அறிவித்தார்கள். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் ஒளி--ஒலிக் காட்சி அமைப்பதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையிலே 21 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விரைவிலே ஒளி–ஒலி காட்சி அமைப்பதற்கான பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் ஒளி-ஒலிக் காட்சிகள் நடத்தப்படும். வண்ணத் தமிழ் மகளை வாழ வைக்க எண்ணச் சிறகடித்த எண்ணற்ற கவிதைகளை வண்ணமுறத் தந்த கவியரசர் கண்ணதாசன் பிறந்தநாள் மாநில அளவிலே கொண்டாடப் படும் என்று அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவர்களுடைய அறிவிப்புக்கு இணங்க காரைக்குடியில் மாநில அளவில்

அவருடைய விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுமாத்திரமல்ல, காரைக்குடியில் உள்ள கண்ணதாசன் மணிமண்டபத்தில் கண்ணதாசன் அவர்களின் வெண்கல மார்பளவுச் சிலை 23,500 ரூபாய் செலவில் செய்யப்பட்டு விரைவில் அமைக்கப்படுகிறது.

'பாரதத்தில் நாம் மக்கள்
பண்பினில் நாம் மக்கள்
வெற்றியில் நாம் மக்கள்
அறிவில் நாம் மக்கள்
நாம் மக்கள் என்று'
நம் மக்கள் புகழ்பாடும்

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இடம் நினைவு இல்லமாக ஆக்கப்படும் என்று அன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். அந்த நடவடிக்கை இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்து, வெள்ளையனே, நீ ஆண்டதுபோதும், நமது உரிமை மாண்டது போதும் என்று அன்றைக்கு வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்ட அந்த எரிமலைத் தியாகிகளுக்கு நினைவாக ஒரு நினைவுத் தூண் எழுப்பப்படும் என்று புரட்சித் தலைவி அன்றைக்குச் சொன்னார்கள். சொன்னதை நடத்திக் காட்டி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பாக்கும் வகையிலே கிண்டியிலே, காந்தி மண்டபத்திலே ஒரு நினைவுத்தூண் 3 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 2.10.93 அன்று திறந்து வைக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல சர்.சி.பி. தியாகராயர் வாழ்ந்த இடத்தை அரசு நினைவிடமாக மாற்றியமைக்க தக்க நடவடிக்கை இன்றைக்கு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல 'இரைபோடும் மனிதருக்கே, இரையாகும் வெள்ளாடே' என்று இலட்சிய கீதம் எழுப்பி, சமுதாயக் கேட்டைத் தகர்க்க பட்டுக்கோட்டை கட்டிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு பட்டுக்கோட்டையில் ஒரு நினைவகம் எழுப்பவேண்டும் என்று புரட்சித் தலைவி அன்றைக்கு அறிவித்தார்கள். அந்த நடவடிக்கை இப்போது மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதுபோல் திருவள்ளுவர் சிலை அமைப்பது முனைப்பாக கன்னியாகுமரியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை 2.315 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது.

அதைப்போல மருது சகோதரர்களுக்கும் நினைவகம் ரூ. 5.46 இலட்சம் செலவில் இன்றைக்கு அமைக்கப்பட இருக்கிறது. அதைப்போல

பெண்ணுரிமைக்கு பாடுபட்ட தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுக்கு சிலை இன்றைக்கு உருவாகி வருகிறது. தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டவேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சியிலே உண்ணாவிரதம் இருந்து தமிழுக்காகத் தன்னுயிரைப் பணயம் வைத்த தியாகி சங்கரலிங்கம் அவர்களை மதிக்கவேண்டும் என்பதற்காக சங்கரலிங்கம் சிலை ரூ. 1.2 இலட்சம் செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அதைப்போல தியாகி செண்பகராமன், மேயர் சிவராஜ், வ.வெ. சுப்பிரமணியம் ஆகியோர் நினைவகம் எல்லாம் இந்த ஆட்சியிலே அமைக்கப்படுகிறது.

பிற்பகல் 5-40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல பாரதத்திலே பா ரதத்திலே பாரதிர பாட்டுப் பாடிய பாரதியைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலே சென்னை, திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த இல்லம் இன்றைக்கு 10 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலே நினைவு இல்லமாக அமைக்கப்பட்டு புரட்சித் தலைவி அவர்களின் திருக் கரங்களாலே இந்த நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் சென்ற மானிய கோரிக்கையிலே புரட்சித் தலைவி அவர்கள் எத்தகைய செயல் திட்டங்களை அறிவித்தார்களோ அத்தகைய செயல் திட்டங்கள் இன்றைக்கு செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரையில் செய்தி விளம்பரத்துறை என்பது ஏதோ விளம்பரம் செய்கின்ற பணியை மட்டும் செய்யவில்லை. அரசியல் தலைவர்களுக்கு பிறந்தநாள் நடத்துவது, தியாகிகளுக்கு சிலை வைப்பது, நினைவகம் அமைப்பது அரசினுடைய திட்டங்களை வெளிப்படுத்துவது, நினைவகங்களையும் பராமரிப்பது, அதுபோல் 'தமிழரசு' பத்திரிகையின் மூலம் அரசாங்கத்தின் திட்டங்களை வெளிப்படுத்தி மக்களிடத்தில் கொண்டு செல்வது, அதுபோல் பொருட்காட்சி நடத்துவது, பல்கலை பணி விளக்க முகாம்கள் நடத்துவது, இப்படிப்பட்ட பல்வேறு சாதனைகளை செய்தித்துறை இந்திய துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டில்தான் செய்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல் 16 எம்.எம். பிரதிகள் தயாரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்போது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல தமிழ்நாடு திரைப்பட பிரிவு தயாரிக்கும் நிகழ்ச்சிகள் விளம்பரப்பட நிகழ்ச்சியாக தொலைக்காட்சியில் வெளியிட்டு இருக்கிறோம். அதன் மூலம் இந்த ஆண்டு அரசுக்கு ரூ.9,72,200 வருமானமாகக் கிடைத்திருக்கிறது. அதுபோல தமிழ்நாடு திரைப்படப் பிரிவை நவீனப்படுத்துவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு 56.27 லட்சம் இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல அரசினுடைய திட்டங்களும் சாதனைகளும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படுவதற்கு 10 வீடியோ வேன்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்றன. மேலும் 10 வீடியோ வேன்கள் இந்த ஆண்டு வாங்கப்படும்.

1994 ஏப்ரல் 29] [திரு. மு. தென்னவன்]

அதுபோல் பல்கலை பணி விளக்க மையங்கள் நடத்தப்படுகிறது. அதைப்போல் மேற்கொள் பிரிவுக்கு 16 லட்ச ரூபாய் செலவில் மைக்ரோ பிலிம் கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

அதைப்போல் தமிழரசு அச்சகத்திற்கு அச்சுக்கோர்ப்பு பணிகளைத் துரிதப்படுத்த 3.79 லட்ச ரூபாய் செலவிலே ஒரு டெஸ்க் டாப் பப்ளிஷிங் இயந்திரம் வாங்கப்பட்டிருக்கிறது. இப்படி சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலே எத்தகைய திட்டங்களைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்களோ அத்தகைய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை காங்கிரஸ்காரரர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே பொற்கால ஆட்சியில் புதுமைகள் அரங்கேறுகின்றன, எக்காலமும் நிலைக்கும் சாதனைகள் தொடர்கிறது என்ற அளவுக்கு இன்றைக்கு சாதனைகள் சரித்திரமாவதற்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோல் இந்த அரசு பொருட்காட்சி நடத்துகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே அரசாங்கமே பொருட்காட்சியை நடத்துகிறது என்று சொன்னால் அது தமிழ்நாடு அரசுதான். பொருட்காட்சிகளை நடத்துவதன் மூலம் வரும் ஆதாயத்திற்காகவும் இலாபத்திற்காகவும் மட்டும் பொருட்காட்சி நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட 5 பொருட்காட்சிகளில் இந்த ஆண்டில் மட்டும் 65 லட்ச ரூபாய் இலாபம் கிடைத்தாலும் பலபேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலே பல வியாபாரிகள் வியாபாரம் செய்கின்ற வகையிலே, பல நாடகக் கலைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கின்ற வகையிலே-தான் இந்தப் பொருட்காட்சிகள் எல்லாம் நடத்தப்படுகின்றன. ஆகவே ஆதாயத்திற்காக மட்டும் பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை. அதுமட்டுமன்றி அரசினுடைய திட்டங்களையும் சாதனைகளையும் வெளிப்படுத்துகின்ற வகையிலே இந்தப் பொருட்காட்சிகள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 24 நினைவகங்கள் இன்றைக்கு இந்த ஆட்சியால் பராமரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் திரைப்பட உலகின் மேம்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக செயல்பட்டுவரும் நம்முடைய இதயதெய்வம் அவர்கள் பெயரிலே ஒரு விருது சென்ற ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டது. திரைப்படத் துறையில் நீண்டகாலம் சிறந்த முறையில் தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு அவர்களது சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தலா 5 பவுனில் தங்கப் பதக்கமும் நினைவுப் பரிசும் வழங்கப்படுகிறது. கடந்த 18.1.94 அன்று நடைபெற்ற மாநில திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் 1992ஆம் ஆண்டுக்கான புரட்சித் தலைவியின் விருது கலை உலக விற்பன்னர்கள் 3 பேருக்கு வழங்கப்பட்டது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல பத்திரிக்கையாளர்களுக்கு வீட்டு வசதி உருவாக்கிக் கொடுக்கின்ற வகையில் 5.5 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு அதற்காக 20 லட்சம் ரூபாய் வரை அரசு மானியமாக வழங்கப்பட்டது. 21.2.94 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர்களின் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக ஒரு வீட்டின் ஒரு சதுர அடிக்கு ரூ.50 வீதம் குறைந்தபட்சம் ரூ.40 ஆயிரம் வரை மானியமாக அளித்திருக்கிறார்கள். இதனால் 136 பத்திரிகையாளர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் அரசுக்கு 50 லட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே இந்திய துணைக் கண்டத்திலே இந்த மாநிலத்தில்தான் பத்திரிகையாளர்களுக்கு இந்த வசதியை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-45

அதைப்போல திரைப்பட உலகிற்கு பல்வேறு பணிகளைப் புரட்சித் தலைவி அவர்கள் செய்து வருகிறார்கள். பல்வேறு சாதனைகளை உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே அது எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினாலே அவற்றை இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் தமிழ்த் திரைப்பட உலகத்தின் ஆணிவேர்களை, நாடி நரம்புகளை, ரத்த நாளங்களை, இதயத் துடிப்புகளை நன்கு அறிந்து வைத்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு திரைப்பட உலகத்தின் நல்வாழ்வின் ஏற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் என்றும் ஊக்கத்துடனும் ஆக்கத்துடனும் உறுதுணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இறுதியாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு புதிய சில அறிவிப்புகளை அறிவிக்கவேண்டும் என்று பணித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளை மட்டும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய சிந்தனைக்கும், கலை நுணுக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக திரை உலகில் மிக முக்கியத்துவமாக சென்னை தரமணியில் 86 ஏக்கர் பரப்பிலே ரூ.14.93 கோடி செலவிலே சர்வதேச தரம் வாய்ந்த திரைப்பட நகர் உருவாகிவருகிறது. அந்த திரைப்பட நகருக்கு திரை உலக வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவருமான இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஜெயலலிதா திரைப்பட நகர் என பெயர் சூட்டப்படும்.

பேரறிஞர் அண்ணா நினைவு இடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப்போன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

நினைவிடத்தின் வளாகத்தில் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் அமைக்கப்படும். மேலும் எம்.ஜி.ஆர். அவர்கள் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நிரந்தர ஒளிஒலி காட்சியும் அங்கே அமைக்கப்படும்.

கேரள மாநிலத்தில் வைக்கத்திலே கோவிலுக்குள் நுழையக்கூடாது, தெருவில் நடமாடக்கூடாது, நடந்தால் தீட்டு, பட்டால் பாவம் என்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தார்கள். நாய் நடக்கலாம், கழுதை கனைக்கலாம், எருமை ஓடலாம், பன்றி பவனி வரலாம், ஆடு வரலாம், மாடு வரலாம், ஆனால் ஒரு பஞ்சமன் வரக்கூடாது என்று இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து தந்தை பெரியார் போராடினார். சத்தியாகிரகத்திலே ஈடுபட்டார், அதிலே வெற்றி கண்டார். அதை நினைவு கூறுகின்ற வகையிலே 15 லட்சம் ரூபாய் செலவிலே புரட்சித் தலைவி அரசின் சார்பிலே அங்கே ஒரு நினைவகம் எழுப்பப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே தமிழ்நாடு நீங்கலாக இன்றைக்கு அண்டை மாநிலத்திலே ஒரு நினைவகம் தமிழக அரசு சார்பிலே இருக்கிறது என்று சொன்னால் அது தந்தை பெரியாருடைய நினைவகம். அது யாருடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்டது என்று சொன்னால் அது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தை கண்டறிந்து தகர்த்து வீச மூண்டெழுந்த பேர் இடியாய், தமிழன் இந்த காலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு பாடுபட்ட பகுத்தறிவு பகலவன் 95 ஆண்டு காலம் வாழ்ந்தாலும், இன்னும் 95 ஆண்டு காலம் கழித்து பிறக்கின்றவனின் சிந்தனைக்கும் வேலை வைக்கின்ற சீர்திருத்த செம்மல் தந்தை பெரியார் அந்த போராட்டத்திலே வெற்றிபெற்றார். அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையிலே ஆண்டுதோறும் வைக்கத்திலே அரசு விழா நடத்தப்படும்.

'காலுக்கு செருப்புமில்லை, கால் வயிற்றுக்கு கூழுமில்லை, பாருக்கு உழைத்தோமடா, பசை யத்து போனோமடா, கோடிக்கால் பூதமடா, தொழிலாளி கோபத்தின் ரூபமடா' என்று வீரக்கனல் எழுப்பும் வகையில் அன்றைக்கு பாட்டு பாடினாரே ஜீவா, சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அமரர் ஜீவா பிறந்த பூதப்பாண்டியில் அவர் பிறந்த இல்லம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசின் சார்பில் நினைவிடமாக்கப்படும்.

ஆகவே பொது உடமைக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதிலே கட்சி பார்க்காமல், தியாகத்திற்குக் கட்சியில்லை என்று சொல்வார்களே, அதைக் கூட கருதாமல் பொது உடமைக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், மதிக்கப்படவேண்டியவரை மதிக்கவேண்டும்,

போற்றப்பட வேண்டியவரை போற்ற வேண்டும், நாட்டிற்காக உழைத்த அந்த மகத்தான மனிதர்களை எல்லாம் பாராட்ட வேண்டுமென்பதற்காக ஜீவாவினுடைய இல்லம் நினைவில்லம் ஆக்கப்படும் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதைக் கேட்பதற்குக்கூட பொது உடமைக் கட்சிக்காரர்கள் இங்கே இல்லை என்பதனை வேதனையுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே கோரிக்கை வைக்காமலே, யாரும் கேட்காமலேயே எந்த நேரத்தில் எதைச் செய்யவேண்டுமோ அதை நினைத்து அதை செய்கின்ற ஒரே முதலமைச்சர், அற்புத முதலமைச்சர் புரட்சித் தலைவி தான் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மண்ணருமை, பெண்ணருமை, பொன்னருமை வெறுத்துவிட்டு என்னருமைத் தாயகமே என்னுரிமை என்று சொன்ன முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் விழா மாநில அளவில் கொண்டாடப்படும்.

வெள்ளையனே வெளியேறு என்று நெல்லைச் சீமையிலே முதல் சுதந்திர முழக்கமிட்ட புலித்தேவனுக்கு அரசின் சார்பிலே நெல்லைச் சீமையில் விழா கொண்டாடப்படும்.

பிற்பகல் 5-50

அதைப்போல, கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அழகு முத்துக்கோன் அவர்களுக்கு நினைவாக நெல்லைச் சீமையிலே அரசு சார்பிலே விழா நடத்தப்படும்.

அதைப்போல, 18 ஆம் நூற்றாண்டிலே பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு, 24 ஆண்டுகள் வெஞ்சிறையிலே - இன்றைக்கு நெல்சன் மண்டலேயைப் போல - ரிபெல் முத்துராமலிங்க சேதுபதிக்கு நம்முடைய உறுப்பினர் எஸ். வி. சண்முகம் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள், அந்த சேதுபதியின் நினைவாக ஆண்டுதோறும் இராமநாதபுரத்திலே அரசு விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, 192 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கிரேக்க கட்டிடக் கலையினுடைய எடுத்துக்காட்டாக இருக்கிற இராஜாஜி மண்டபத்தை செப்பனிடுவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் 17.97 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய பிராட்மா முறையிலிருந்து நவீனப்படுத்த கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 லட்சம் செலவிலே தமிழரசு அச்சகத்தில் புதிய கணினி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதைப்போல, திரைப்படக் கல்லூரியினுடைய நூல் நிலையத்தை ரூ.3 லட்சம் செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதைப்போல

1994 ஏப்ரல் 29] [திரு. மு. தென்னவன்]

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அதைப்போல, பொருட்காட்சிப் பற்றி நான் இங்கு சுட்டிக் காட்டினேன். சென்ற ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் மானியக் கோரிக்கையின்போது இரண்டு நகரங்களில் பொருட்காட்சி நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். திருச்சியிலும், நெல்லையிலும் பொருட்காட்சி நடத்தப்படுமென்று அறிவித்தார்கள். இந்த ஆண்டு அந்தப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. அதைப்போல, 1994—95 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு இடங்களில் கூடுதலாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படும். வேலூரிலும், கடலூரிலும் அந்தப் பொருட்காட்சிகள் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சிறிய நகரங்களில் வாழும் மக்களும் பொருட்காட்சிகளை காணும் வகையில் தூத்துக்குடி, காரைக்குடி, கிருஷ்ணகிரி, திருப்பூர், இராமநாதபுரம் ஆகிய 5 நகரங்களில் சிறிய அளவிலான அரசுப் பொருட்காட்சிகள் 1994—95ல் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் ஏற்கெனவே அரசு வளர்ச்சிப் பணிகள், பயன்கள் குறித்து சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 1994—95—ல் திண்டுக்கல்-அண்ணா, திருவண்ணாமலை—சம்புவராயர், பசும்பொன் முத்துராமலிங்கதேவர், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.12 லட்சம் செலவில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, 18 ஆம் நூற்றாண்டில் சென்னிமலைக்கும், சின்ன மலைக்கும் இடையிலே ஒரு சின்னமலை வாங்கிக் கொள்ளலாம் சொல் என்று தண்டல்காரனிடம் உரைத்தானே தீரன் சின்னமலை அந்தப் போர் வீரனை நினைவுபடுத்துகின்ற வகையிலே விடுதலை வீரர்களையும், தியாகச் சீலர்களையும் பெருமைப்படுத்தி வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுக்கிணங்க அந்தத் தீரன் சின்ன மலையினுடைய பிறந்தநாள் பெரியார் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் அரசு சார்பிலே நடத்தப்படும் என்பதனை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காலையிலே பேசுகிறபோது, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வீடியோ தியேட்டருடைய கட்டணம் எவ்வளவு என்று கேட்டார்கள். முதல் வகுப்புக் கட்டணம் ரூ.3, இரண்டாம் வகுப்புக் கட்டணம் ரூ.1.50, முதல்

வகுப்புக்கு 98 இருக்கைகள். இரண்டாம் வகுப்புக்கு 77 இருக்கைகள். மொத்தம் இருக்கைகள் 175. அதுமட்டுமல்ல, வீடியோ தியேட்டரில் உரிமம் பெறாத கேசட்டுகளை வெளியிட்டால் வீடியோ சட்டம் பிரிவு 17—ன் கீழ் காவல் துறை நடவடிக்கை எடுக்கலாம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசு விளம்பரங்களை வெளியிடுவதற்கு எப்படி நாளிதழுக்கு அங்கீகாரம் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். அரசு அங்கீகாரப் பட்டியலில் இடம் பெற விரும்பும் நாளிதழ், பருவ இதழ் சில விவரங்களைக் குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி செய்து அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு பெறப்படும் விண்ணப்பம், கீழ்க்கண்டவற்றை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும். விற்பனை ஆகும் பிரதிகளின் எண்ணிக்கை. பத்திரிகையின் தொனி, தொடர்ச்சியாக வெளிவருவது, மொழி வளம், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பத்திரிகை தர்மத்தை பின்பற்றி வரும் விதம், ஆக இப்படிப்பட்டவைகள் பரிசீலிக்கப்பட்ட பின்புதான் அரசுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும். இன்றைய தேதியில் அங்கீகாரப் பட்டியலில் 61 நாளிதழ்கள் உள்ளன என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-55

அதைப்போல சிறிய பத்திரிகைகள், பெரிய பத்திரிகைகள், நடுத்தரப் பத்திரிகைகள் என்றால் என்ன என்று கேட்டார்கள். 50,000 பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகைகள் சிறிய பத்திரிகைகள், 50,000-க்கு மேலே, 2 இலட்சம்வரை விற்பனையாகும் பத்திரிகைகள் நடுத்தரப் பத்திரிகைகள், 2 இலட்சத்திற்கு மேலே விற்பனையாகும் பத்திரிகைகள் பெரிய பத்திரிகைகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடியோ திருட்டுகள் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று திரு. பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். 92 ஆம் ஆண்டு 872 வழக்குகள் போடப்பட்டுள்ளன. 93-ம் ஆண்டு 112 வழக்குகள் போடப்பட்டுள்ளன, அதைப்போல சென்னை நகரத்திலே வால்-போஸ்டர்கள் ஒட்டுகிறார்களே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டார். இதுவரைக்கும் அரசியல் கட்சிகள் சார்பிலே 26 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பிற நிறுவனங்கள்மேல் 633 வழக்குகள் போடப்பட்டுள்ளன. மொத்தம் 659 வழக்குகள் போடப்பட்டுள்ளன. அபராதம் மட்டும் விதிக்கப்பட்ட வழக்குகள் 577. அபராதம் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.48275/— ஆகவே மீதியுள்ள வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேறி

1994 ஏப்ரல் 29] [திரு. மு. தென்னவன்]

இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளை இந்தத் துறை கவனத்தில் எடுத்துக்கொண்டு, விடுபட்டவைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கங்கள் இடம் பெற்றிருப்பதால், எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலை உலகில் நிலையான, அழிக்க முடியாத மக்கள் மத்தியில் இன்றும் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு கவிதைகளைத் தந்திருக்கும் கவியரசு கண்ணதாசன் அவர்களுக்கு மணிமண்டபம் தந்ததோடு மட்டுமல்லாமல், வெண்கலச் சிலையும் அமைப்பதற்கு ஆவன செய்த . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ, அமைச்சர்களுடைய பதிலுரை முடிந்த பிறகு நீங்கள் கேள்விகள் கேட்கலாம்.

திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுகிறபோதே நான் உங்களுக்குச் சொல்லியிருந்தேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு ஜீ.ஓ. இருக்கிறது, அந்த ஜீ.ஓ. இருப்பது தெரியாமலேயே பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அமைச்சரைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். நான் குறுக்கிட்டு உங்களுக்குச் சொன்னேன், அந்த ஜீ.ஓ. அப்போதே விலக்கிக் கொள்ளப்பட்டது என்று. ஜீ.ஓ. எம்.எஸ். நம்பர் 1574, 25.9.87 ஆம் தேதியிட்டது. நீங்கள் பேசுகின்றபோதே நான் சொன்னேன். அதனால் அதிலே சம்பந்தப்பட்டது பூராவும் நீக்கி இருக்கிறேன். பேரவைத் தலைவர் இல்லாத ஒன்றைச் சொல்லிவிட்டார் என்று திருப்புவீர்கள். அதனால் இதைச் சொல்கிறேன். ஞானசேகரன், இதுமாதிரி நேரங்களில் நீங்கள் விவரங்களைச் சேகரித்துக்கொண்டு பேச வேண்டும். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 6-00

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்து, செந்தமிழ் நாட்டார் சிந்தை செயலில் என்றும் நினைக்கும் இணையில்லா

தலைவி, சுற்றுலாத்துறையைச் சேய் போல் காக்கும் ஜோதிமிக்கதோர் சுந்தரத் தலைவியாக விளங்கிவரும் நமது இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்கி என்னுரையைத் துவக்குகின்றேன்.

அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தையின் பெயர் சுதந்திரம், விடுதலை, உரிமை என்று குறிப்பிடலாம் என்றான் அறிவுலக மேதை இங்கர்சால். அதை மெய்ப்பிக்கும் வகையில் அறிவுத்தாய் பெற்றெடுத்த ஆற்றல் மிகுந்த தலைவியாகத் திகழ்பவர்தான் நமது அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாவர் என்றால் இதை மறுப்பார் இம்மண்ணில் எவருமில்லை. அத்தகைய பெரும் பெருமைக்குரிய, வணக்கத்திற்குரிய நமது அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன் அரவணைப்பிலே வைத்து சீராட்டி வளர்த்து அவர்களது சீரிய சிந்தனை, அறிவாற்றல் ஆகியவற்றால் புதிய சுற்றுலா தொழில் கொள்கையை உருவாக்கித் தந்து, அந்த சுற்றுலா தொழில் கொள்கையால் இன்று சுற்றுலாத்துறை புத்தொளி பெற்றுள்ளது. தமிழக மக்களுடைய காவல் தெய்வமாக விளங்கிவருகிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய சிந்தனையால் இந்த சுற்றுலாத் துறை இன்று இந்தியாவிலேயே இன்றைக்கு தனக்கென ஒரு தனி இடத்தைப் பெறக்கூடிய அளவுக்குத் தலைநிமிர்ந்து வருகிறது. தமிழகம் சுற்றுலாத் துறையில் புதுப்பொலிவு பெற்று புன்னகை தவழ பூரித்து நிற்கும் புதுப்பெண்ணாக நாட்டுமக்கள் அனைவரின் கண்களையும் கருத்தையும் கவரும் வண்ணம் வள மிக்க துறையாக மாறிவருகிறது.

"வெள்ளப் பெருக்கைப் போல கலைப்பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் எல்லாம் விழிபெற்றுக் கொள்வார்" என்ற விடுதலைக்கவி பாரதியின் தீர்க்க தரிசனத்தை உணர்ந்த மாபெரும் தலைவியாம் நமது அன்னை புரட்சித் தலைவி அவர்கள், இந்த மண்ணில் கலை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி செழித்து ஓங்கி வளரவேண்டுமென்றால், பழைய அந்தக் கலாச்சாரங்களைக் காக்கவேண்டுமென்று இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே, சுதந்திரம் பெற்று 47 ஆண்டுக்காலம் ஆகியும் எவரும் சிந்திக்காத அளவுக்கு நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்து, அந்தத் துறையை கண்ணுங்கருத்துமாகக் காத்து இந்தத் துறைக்கு அரியதொரு பொக்கிஷத்தைத் தந்துள்ளார்கள்.

இந்தியநாடு குறிப்பாக தமிழகம், இந்தியத் திருநாட்டுக்கே வழிநடத்தவேண்டுமென்று, வெளிநாட்டவரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம், ஒரு முன் உதாரணமாக சட்டம் ஒழுங்கைக் காத்து அமைதி தவழும் மாநிலமாகத் தமிழகம் விளங்கிவருகின்ற காரணத்தால், ஒருவர் தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் கிடைக்கச் செய்வதுதான் நாகரிகம் என்ற பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் கொள்கை

1994 ஏப்ரல் 29] [திரு. எஸ். நாகூர் மீரான்]

வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் விருப்பங்களை உணர்ந்து அவர்களின் அன்பு, அமைதி தவழுகிற மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உறுதுணையாக இந்த சுற்றுலாத் துறை விளங்க வேண்டும், சுற்றுலாத் தலங்கள் இருக்கவேண்டும் என்கின்ற அவர்களின் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, இன்றைக்குச் சுற்றுலாத் துறையை வளர்த்து வருகிறார்கள்.

"கலையே, வளர்தொழில் மேவிடு, கவிதை புனை தமிழா" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அந்தப் பெருங்கவிஞரின் ஆசைகள் நிறைவேறவேண்டுமானால், கலையும், பண்பாடும், இலக்கியமும், தொழில் வளமும் பெருகி, என்றைக்குத் தமிழகம் எழிற்சோலையாகத் திகழ வேண்டுமென நம் அன்னை எண்ணினாரோ அன்றுமுதல் இந்தத் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் பேணிக் காத்து, சுற்றுலாத் துறையைப் பேணிக் காக்கின்ற, பெருமை கொள்கின்ற தொழிற் கொள்கையைப் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களின் கனவை நனவாக்கி பலநூறு வெற்றிகளை இத்துறையின்மூலம் பெற்று, அன்னையின் காலடியில் நாம் வைப்போம் என்றும், நமது காவல் தெய்வத்தின் கடைக்கண் பார்வை விழியில், சுட்டுவிரலின் அசைவின் வழியில் நடத்தும் இந்தத் தமிழ்த் திருநாட்டை தழைக்க வைப்போம், சுற்றுலாத் துறையின் மூலம் செழிக்க வைப்போம் என்று உறுதி பூண்டுள்ளோம்.

இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலே வெளிநாட்டவர் சுற்றுப்பயணம் வருகின்றார்கள் என்றால், ஒருகாலத்திலே அவர்கள் சிம்லாவையும் காஷ்மீரையும்தான் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கெல்லாம் வெளிநாட்டவர் சென்றால் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் கிடைக்காமல் உள்ள நிலை இந்தியத் திருநாட்டிலே உருவாகியிருக்கிறது என்று சொன்னால், தங்கத் தமிழ்நாட்டில், தலைசிறந்த தலைவியாக வீற்றிருக்கும் நமது அன்னை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் தமிழகத்திலே அமைதியை நிலைநாட்டி, அதன்மூலம் வெளிநாட்டவரின் உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் தருகின்ற பூமியாக இந்த பூமியை மாற்றி ஒரு ஆற்றல் மிக்க நிர்வாகத்தைத் தமிழகத்திலே நம் அன்னை தந்துகொண்டிருக்கிறார்கள். இந்த அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில் உழைத்து, களைத்துள்ள மனிதவர்க்கத்தின் உயரிய நெஞ்சத்திற்கு மன அமைதியைத் தேடித்தரும் சுற்றுலா பூமியாக, தமிழ்த்தாயின் ஆட்சியில் தமிழகம் தழைத்தோங்கியிருக்கிறது. இதன்மூலம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது.

பிற்பகல் 6-05

இயற்கை நமக்கு வழங்கியுள்ள தொன்மைச் சிறப்பும், அழகிய கடற்கரையும், நெஞ்சை அள்ளும் மலைவாழ் இடங்களும், வரலாற்றுச்

சிறப்பு மிக்க நினைவிடங்களும், திருக்கோயில்களும், நாகூர், அன்னை வேளாங்கண்ணி போன்ற ஜாதி பேதமற்ற சமுதாயத்தின் திருத்தலங்களாக இன்றைக்கு தமிழகம் உயர்ந்து நிற்கிறது. கண்ணைக் கவரும் கலைச் சிற்பங்களும், கண்ணுக்கு இனிமை தரும் பறவை சரணாலயங்களும், மனதைக் கொள்ளை கொள்ளும் மாபெரும் வன விலங்குகளும் கொண்ட பூமியாக தமிழகம் இன்றைக்கு சிறந்து விளங்குகிறது. இத்தகைய, இயற்கை அன்னை நமக்கு வழங்கிய நன்கொடையை, கண்டு களிக்க வந்த உள்நாட்டவரும், வெளிநாட்டவரும் இந்த பூமிக்கு ஆண்டுக்காண்டு அதிகரித்து, கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு செல்கிறார்கள். அவர்கள் இந்தப் பகுதிக்கு வருகிறபோது, சுற்றுலா அலுவலகங்களிலே இருக்கிற பார்வையாளர் புத்தகங்களிலே அவர்கள் எழுதுகிற வாசகங்களை பார்க்கிறபோது நமது நினைவுக்கு வருவதெல்லாம், ஒவ்வொரு மனிதனும் “பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம்” என்றில்லாமல் உழைக்கின்ற உழைப்பில், கிடைக்கின்ற ஊதியத்தை தன் குடும்ப வாழ்க்கைக்குப் போக, ஒரு பகுதியை சேமித்துவைத்து, சேமித்து வைத்த தொகையின் மூலம் ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா தலங்களுக்கு பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த வெளிநாட்டு மக்கள் எல்லாம் தன் உள்ளத்தில் ஆவலாகக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உழைக்கிற வர்க்கத்திலே இருந்து உயர்ந்த வர்க்கம் வரை வெளிநாட்டிலே வாழ்கிறவர்கள் எல்லாம் சுற்றுலாவை மேற்கொள்கிறார்கள். அந்த நிலைமை நம் நாட்டு மக்களுக்கும், தம் உழைக்கின்ற உழைப்பில், உழைத்த உடம்பு களைக்கின்றபோது ஒரு கண நேரமாவது தனது உயரிய வாழ்க்கையிலே ஒரு நிம்மதி அடைய வேண்டும், மகிழ்ச்சியைக் காண வேண்டும் என்ற நோக்கோடு, தன் உழைக்கின்ற ஊதியத்தில் ஒரு பகுதியை ஒதுக்கிவைத்து, தமிழகத்திலே இருக்கிற சுற்றுலா தலங்களையாவது நம் நாட்டு மக்கள் பார்க்க வேண்டும் என்று இந்த மாபெரும் பேரவையின் மூலமாக நாட்டு மக்களுக்கு பணிவான வேண்டுகோளை வைக்கிறேன்.

1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு 3.30 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்தார்கள். ஆனால், 1992 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மிகுந்த நிர்வாகத் திறமையின் காரணமாக சுற்றுலாப் பயணிகளுடைய வருகை 25.3 சதவீதம் அதிகரித்தது. அதே நிலை 1993 ஆம் ஆண்டு 4.41 லட்சம் உயர்ந்து, முந்தைய ஆண்டைவிட 9.3 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு 1992-ல் 131 லட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து, சுற்றுலாத் தலங்களைக் கண்டு களித்துச் சென்று இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு 1993 ஆம் ஆண்டிலே அந்த சதவீதம் 5.9 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில்

தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இந்த நேரத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது, இந்தத் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகவும், பாரதத் திருநாட்டுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது என்பதிலே ஐயமில்லை.

சுற்றுலாத் துறையின் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்பையும் மக்கள் பெறுகிற காரணத்தால் பொருளாதார உயர்வுக்கும் மேன்மைக்கும் வழி வகுப்பதால் சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய சிந்தனையாலும், தொலைதூர நோக்காலும் சுற்றுலாத் துறை மீது கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக 1992 ஆம் ஆண்டு புதிய சுற்றுலாத் தொழில் கொள்கை ஒன்றை உருவாக்கி இந்த நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள். அந்த தொழில் கொள்கையிலே சுற்றுலா மையங்களில் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது என்றும், சிறப்பு சுற்றுலா மையங்களைக் கண்டு ஆராய்ந்து அவற்றை மேம்படுத்த வேண்டும் என்றும், உதவித் தொகைகளையும், நிதி உதவிகளையும் அளிப்பதன் மூலம் சுற்றுலாத் திட்டங்களுக்கு முதலீடு செய்யும் தனியார்த் துறைகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும், ஒருங்கிணைந்த முறையில் சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக தொழில் வளர்ச்சி மைய அணுகு முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும், வீர விளையாட்டுக்கள், நீர் விளையாட்டுக்கள், தொங்கும் ஊர்தியில் பறத்தல், மலை ஏறுதல் போன்ற வீர விளையாட்டுக்களை எல்லாம் இந்தத் திட்டத்திலே கொண்டு வந்தார்கள். சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வருகை தரவும், நீண்ட நாள் இந்த நாட்டிலே தங்கி தமிழ் மண்ணிலே இருக்கிற ஐவகை நிலங்களையும் கண்டு களிக்கிற வண்ணம் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்றும், அந்தத் திட்டங்கள் வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் சென்றடைகிற வகையிலே வெளிநாட்டு சுற்றுலா குறித்து திட்டமிட்டு விளம்பரங்களையும் செய்ய வேண்டும் என்றும் புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கொள்கைகளை நமத்து வகுத்து அளித்தார்கள்.

பிற்பகல் 6-10

சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கவும், வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான கூடுதல் அம்சங்களைத் தோற்றுவிக்கவும் ரூ. 591.34 கோடி மதிப்பீட்டில் விரிவான ஒரு பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு

பொறுப்பை ஏற்ற பின்புதான் 45 ஆண்டு காலம் இல்லாத அளவுக்கு நமது சுற்றுலாத் தலங்களை சீர்செய்யவும், செம்மைப்படுத்துவதற்கும் ரூ. 591.34 கோடி அளவில் பெரிய மதிப்பீட்டில் திட்டம் ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். இதற்கு நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு தந்த ஊக்கமும் ஆக்கமும், அவர்கள் ஆற்றலும், சிந்தனைத் திறனும், நிர்வாகத் திறனும் தான் என்று இந்த நேரத்தில் மகிழ்ச்சிபொங்க நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994-95 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின்கீழ் மாநில அரசு ரூ. 191 இலட்சம் செலவில் விளம்பரம், புதிய அலுவலகங்களை ஏற்படுத்துதல், சுற்றுலாத் துறையை மேலும் ஊக்குவிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டும் மாபெரும் திட்டங்களை நம் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு வகுத்து தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றை தவிர ரூ. 14 இலட்சம் செலவில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரிக்கரையில் தற்போது ஓடிக்கொண்டிருக்கும் சிறுவர் இரயிலின் தூரத்தை மேலும் 200 மீட்டர் தூரம் அதிகப்படுத்தி அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பான பொழுதுபோக்கு அம்சமாக சிறுவர் ரெயிலை மாற்றியமைக்கவும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1993-94 ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டங்களுக்காக தமிழகத்திற்கு நிதியுதவி செய்வதற்காக, கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது ரூ. 259 இலட்சமாகும். ஆனால் இத்துறையின் சீரிய முயற்சியால், புரட்சித் தலைவி அவர்கள் நமக்கு தந்த ஊக்கத்தால் 1993-94 ஆம் ஆண்டுக்கு மட்டும் எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ரூ. 378.23 இலட்சம் நிதியுதவியை மத்திய அரசிடமிருந்து ஆற்றல் மிகுந்த நம் அன்னை புரட்சித் தலைவி அவர்கள், நம் உரிமையை மத்திய அரசுக்கு சொல்லி பெற்று இருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தான் மாநில அரசும் - புரட்சித் தலைவி அவர்கள் மாநில அரசினுடைய பங்குத் தொகையாக எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ. 60.40 இலட்சத்தை தனது முதல் தவணையாக புரட்சித் தலைவி அவர்கள் அரசு தந்துள்ளது என்பதையும் இங்கே பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994-95 ஆம் ஆண்டில் மத்திய அரசு தமிழகத்திற்கு கொள்கை அளவில் பல்வேறு திட்டங்களை அனுமதிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது என்பதையும், இதற்குக் காரணம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆற்றல் தான் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வெளிநாட்டினரையும் சுற்றுலாத் துறையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற தொலைதூர நோக்கோடு வெளிநாட்டுப் பொருளாதார மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் ஜப்பான் அரசிடமிருந்து அதன் உதவியைப் பெறுவதற்கான திட்ட அறிக்கையைத் தமிழகம் தயாரிப்பதற்கு ரூ. 3 இலட்சம் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்ட அறிக்கை விரைவில் பெறப்பட்டு ஜப்பான் உதவியைப் பெற முயற்சிக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டும் எண்ணாமல் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுடைய தேவைகளையும் கருத்திலேகொண்டு சாதாரண மக்கள், சாமானிய மக்கள், தாங்கள் வசிக்கின்ற இடங்களுக்கு அருகேயுள்ள சுற்றுலாப் பகுதிகளுக்குச் சென்று வர வேண்டும், மன நிம்மதியை அடைய வேண்டும், அந்த உழைத்த உடம்புக்கு ஒரு நாளாவது ஓய்வு கொடுக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் ஆற்றல் மிகுந்த நம் அன்னை அவர்கள் மாவட்ட உலா மையத் திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ. 67.50 இலட்சம் வழங்கி இருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-15

சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான முக்கியத்துவத்தை அளிக்கும் பொருட்டு, இவ்வரசு கூட்டுத்துறை/இணைத்துறை ஆகிய தொழில் முயற்சிகளை இன்றையதினம் மேற்கொண்டு இருக்கிறது. டிட்கோ முறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 26 சதவீத சமபங்குத் தொகையும், அல்லது 11 சதவீத சமபங்குத் தொகையும் முதலீடு செய்து, நிலங்களை குத்தகைக்குவிடுதல், கூடாரங்களைஅமைத்தல், ஓட்டல்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், நீர்விளையாட்டு வசதிகள் போன்ற சுற்றுலா வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலா விற்பனையைப் பெருக்கவும், சுற்றுலாத் தகவல்களை பலர் அறியச் செய்யவேண்டியதும் இன்றியமையாததாக இன்றைக்கு இருந்து வருகிற காரணத்தால், நம்மவர், நம் ஆட்சி, புரட்சித் தலைவி அரசு

செய்து வருகிற சேவைகளை, தொலைக்காட்சி தொலை நோக்கோடு இல்லாமல் குறுகிய நோக்கோடாவது காட்டத்தவறுகிறபோது, இந்தச் சுற்றுலாத்துறையை நம் நாட்டு மக்களும், பிறநாட்டு மக்களும் தெரிந்துகொள்கிற அளவில், அதற்கு விளம்பரங்கள் இன்றைக்கு தேவைப்படுகின்றன. அந்த அடிப்படையிலே விளம்பரச் சாதனங்களை சுற்றுலாத் துறைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் சிந்தனையின் மூலம், இந்த அரசு சுற்றுலாத் தலங்களைப் பற்றி வெளிநாட்டவரும், உள்நாட்டவரும் அறிந்துகொள்ளும் வகையில், சிற்றேடுகள், சிறு புத்தகங்கள், மடிப்பு ஏடுகள், துண்டுப் பிரசுரங்கள், பட அஞ்சல் அட்டைகள், சிறு தாள்கள், சுவரொட்டிகள் போன்ற விளம்பரங்களையும், வீடியோ படங்களையும் தயாரித்து, இந்தத் துறையின் மூலம் சுற்றுலா அலுவலகங்கள், மட்டுமல்லாமல், வெளிநாட்டு சுற்றுலாத் தகவல் மையங்கள் இந்திய சுற்றுலா மையங்கள், ஏர் இந்தியா அலுவலகங்கள் மூலம் விளம்பரப்படுத்துவதற்காக, புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு இத்துறைக்கு எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு ஒரு உயரிய தொகையை வழங்கி உள்ளார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அயல்நாடுகளில் வெளியாகும் முன்னணிச் செய்தித் தாள்கள், செய்தியாளர்கள் கூட்டம் நடத்துதல், சுற்றுலா வல்லுநர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்து இங்குள்ள சுற்றுலாத் தலங்களைக் கண்டு அவர்கள் நாட்டில் உள்ள செய்தித்தாள்கள், வார இதழ்களில் எழுதுதல், பசிபிக் பகுதி பயணச் சங்கம், இந்திய பயண முகவரமைப்புச் சங்கம், இந்திய பயணச் சுற்றுலா அமைப்பு ஆகியவைகளை ஏற்பாடு செய்து, வர்த்தகக் கூட்டங்களை நடத்தி, துறை அதிகாரிகளைப் பங்கேற்கச் செய்து, இவ்வரசு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நடைபெறும் பொருட்காட்சிகளிலும் பங்கு பெற்று சுற்றுலாவின் சிறப்புக்களை விளம்பரப்படுத்துதல், விழாக்கள் பல நடத்தி உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருதல். இதில் குறிப்பாகக் கூறவேண்டுமானால், மாமல்லபுரம் நாட்டிய விழா, சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா, குன்னூர் தேநீர் விழா போன்றவற்றைக் கூறலாம். அதேபோன்று இன்னும் சில மாவட்டங்களில் இதுபோன்ற பெரிய விழாக்களை நாம் நடத்தி வருகிறோம். பொங்கல் விழாவை தமிழகம் முழுவதும் நடத்தி வருகிறோம். இப்படிப்பட்ட விழாக்களை நடத்துவதன் மூலம், நமது கலை, கலாச்சாரத்தை வெளிநாட்டுப் பயணிகளைக் கவருகிற வகையில், நாம் இன்றைக்குச் சுற்றுலாத் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையில் அன்னியச் செலாவணி ஈட்டும் பொருட்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, தமிழ்நாட்டினுடைய சுற்றுலாத் துறை இன்றைக்கு வீறுநடை போடுகிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தலைவி அவர்கள், தமிழகத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றபின்பு, அறிஞர்அண்ணாவிற்குப் பின்னால், புரட்சித் தலைவருக்குப் பின்னால், இன்றைக்கு புரட்சித் தலைவி, தங்கத் தலைவி தமிழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றபின்புதான், தஞ்சையிலே வரும் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே பங்கு பெறுவதற்காக வருகிற அறிஞர்கள் பெருமக்களும், எழுத்தாளர்களும், தமிழ் அறிஞர்களும் தங்குவதற்கு வசதி வாய்ப்புகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த நமது ஆற்றல்மிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குறுகிய கால அவகாசத்தில் ஓட்டல்களை கட்டி முடிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதன் அடிப்படையில், அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், தனியார் நிறுவனங்களை ஊக்குவித்து, குறிப்பிட்ட காலத்திற்குள் ஓட்டல்களைக் கட்டி முடிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடை அரசு துரித நடவடிக்கையை எடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கு ஏற்ப செய்து வருகிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-20

இந்திய வரலாற்றிலே ராஜஸ்தான் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் சுற்றுலா ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, தமிழகத்திலே உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை இரயில் மூலம் சென்று பார்த்து வர வசதியாக இன்றைக்கு தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1 கோடி ரூபாய் செலவில் அனைத்து நவீன வசதிகள் கொண்ட சொகுசு ரயில் விட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது வரும் நவம்பருக்குள்ளாக தமிழகத்திலே இந்த சொகுசு சுற்றுலா ரயில் ஓடத் தொடங்கவேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ளவேண்டுமென்றும் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்த இரயில் மூலம் மாமல்லபுரம், சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார், நாகூர், வேளாங்கண்ணி, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மண்டபம், மற்றும் இராமேஸ்வரம் போன்ற சுற்றுலாத் தலங்களைச் சென்று பார்க்கமுடியும். தென்னிந்தியாவில்

தமிழகத்தில்தான் முதன் முதலில் இந்த சொகுசு சுற்றுலா இரயில் திட்டம் நிறைவேற்றப்பட (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் மேலும் சுற்றுலா இன்னும் மேம்பட்டு செயல்படுவதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1994-95 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கை எடுக்க ஆணையிட்டிருக்கிறார்கள்:

அது, விவேகானந்தர் நினைவுப் பாறையில் ஒளி வெள்ள விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல், உதகமண்டலத்திலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு இழுவை ரயில் பாதை அமைக்க ஆய்வு செய்தல், தஞ்சையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரகதீஸ்வரர் ஆலயத்தில் ஒலி-ஒளி கண்காட்சி அமைத்தல், முட்டுக்காடு மற்றும் பழவேற்காடு ஏரிகளில் நீர் விளையாட்டுக்களை நடத்துவதற்காக நீர் விளையாட்டுச் சாதனங்களை வாங்குதல், உதகமண்டலம், கொடைக்கானல், மாமல்லபுரம் போன்ற இடங்களில் வானூர்தியில் தொங்கிப் பறக்கக் கூடிய சாதனங்களை வாங்குதல், பல்கலைக் கழகங்களில் ஓட்டல் நிர்வாகம், உணவு தயாரிப்பு, தொழில்நுட்ப பட்டப் படிப்புகளைத் தொடங்குவதற்கு ஓட்டல் வளர்ச்சி மற்றும் ஓட்டல் நிர்வாகத்திற்கு ஊக்கம் அளித்தல். 94-95-ஆம் ஆண்டில் 10 சீர்வளி வசதி வாகனங்களுக்கு அனுமதி அளித்தல், முக்கிய சுற்றுலா மையங்களிலே கட்டண விருந்தினர் உறையுள் வசதிகள் ஏற்படுத்தி, இதற்குரிய குறிப்பேடு அச்சிட்டு வெளியிடுதல், சுற்றுலா நிர்வாகத்தில் அண்மைக்கால வளர்ச்சிப் போக்கு குறித்து இந்த சுற்றுலாத் துறையினுடைய அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல், கொடைக்கானல், பழனி, தஞ்சாவூர், திருச்செந்தூர், இராமேஸ்வரம் போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு அரசு பரிசீலிக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளுதல், 1994-95ஆம் ஆண்டு கொடைக்கானல், திருநெல்வேலி மற்றும் தர்மபுரியில் புதிய சுற்றுலா அலுவலகங்களை ஏற்படுத்துதல் (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சிராப்பள்ளியிலே உள்ள துவாக்குடியில் உணவக சமையல் கலை பயிற்சி நிறுவனத்தை சுய நிதி நிறுவனத்தைப் போன்று 1994-95-ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டு பட்டயப் படிப்பு கொண்ட நிறுவனமாக நிலையை உயர்த்துவதற்கான கருத்துருவை பரிசீலனை செய்து முடிவு எடுத்தல் போன்ற சீரிய பணிகளைச் செய்ய இந்தத் துறை திட்டமிட்டுள்ளது.

இதுபோன்ற தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாத் துறைக்கு ஒரு அரிய பங்கினை ஆற்றி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 26 ஓட்டல்களையும், 8 இளைஞர் இல்லங்களையும், 9 படகு வீடுகளையும், 4 சிற்றுண்டிச் சாலைகளையும், 25 சுற்றுலாப்

பேருந்துகளையும் - இந்த 25 சுற்றுலா பேருந்துகளில் 4 சுற்றுலாப் பேருந்துகள் சீர்வளி வசதிகள் கொண்டவையாக இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுடைய மனதையும் கண்ணையும் கவரும் வகையிலே சிறப்பான பகுதியை சுற்றுலாத் துறையிலே பணியாக ஆற்றி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதனுடைய வசதிகளை மேம்படுத்தி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 9000 டாலர்கள்அன்னியச் செலாவணியை 1992-93 ஆம் ஆண்டில் அன்னியச் செலாவணியை ஈட்டி, 1993-94 ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனையால் 75,000 டாலர்களாக அன்னியச் செலாவணியை இந்த நாட்டுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 21 இலட்சம் செலவில் புதிய சீர்வளி வசதியுடன் கூடிய பேருந்து வாங்கி அயல்நாட்டுப் பயணிகளின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிற்பகல் 6-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்னும் உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : இப்போது முடிந்துவிடும். மாவட்டங்களில் திட்டமிட்ட சுற்றுலாக்களை தனியார் தொழில் முனைவோரின் ஒத்துழைப்போடு நடத்துவதற்காக மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நிதிச்சாதனையை பொறுத்த அளவிலே சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாபெரும் சாதனையை ஆற்றல் மிக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே இயங்கி வருகிற இந்த அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிதியிலேயும் ஒரு அரியபெரும் பங்கை இன்றைக்கு ஆற்றிக் கொண்டிருக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வசூல் தொகை 1500 இலட்சம் ரூபாய் ஆகும். இது 1992-93 ஆம் ஆண்டின் மொத்த வருவாய்த் தொகையான 1328.44 இலட்சம் ரூபாயைக் காட்டிலும் 13% அதிகமாக இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்ற ஆதாயம் 138.18 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1994-95 ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள இன்றைக்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தென்னக இரயில்வேயின் ஒத்துழைப்புடன் வாரக் கடைசியில் சுற்றுலாப் பயணங்களை நடத்துதல். இரயில் மூலம் வாரக்கடைசியில் சுற்றுலாப் பயணங்களை நடத்த தென்னக இரயில்வேயுடன் ஒருங்கிணைந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு சுற்றுலாச் செல்வதற்காக சுற்றுலாப் பயணிகளுக்கு இடவசதி அளித்தல், உள்ளூர்ப் பகுதிகளைச் சுற்றிக் காட்டுதல், ஆகியவற்றை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியுரிமை அடிப்படையில் தனியார் தொழில் முனைவோரின் மூலம் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ளவும் பயணிகள் பயன் பெறுகிற வகையிலும் அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களிலும் தொலைபேசி இணைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது.

கொடைக்கானல் மலைவாழ் இடத்திலுள்ள பேரிஜம் ஏரியைச் சுற்றி சிறிய இரயில் வண்டி ஒன்றை இயக்க இந்த வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது. அதேபோல கோயம்புத்தூர், உதகமண்டலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் பெரிய ஓட்டல்களில் டிஷ் ஆண்டனா நிறுவப்பட்டு, மேலும் தஞ்சாவூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களிலும் டிஷ் ஆண்டனாவை நிறுவ சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

சென்னை அண்ணா சாலையிலுள்ள விற்பனைப் பகுதியை சுற்றுலா பயணிகளினுடைய வசதியைக் கருத்திலே கொண்டு ரூ. 1.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியை செய்திருக்கிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடற்கரை வளாகத்திலே உள்ள 13 கூடுதல் குடில்களை ரூ. 3.50 இலட்சம் செலவில் புதுப்பித்து இருக்கிறது. அதைப்போல புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய கருணையை ஒவ்வொரு துறைக்கும் வழங்கி வருவதுபோல அவர்களுடைய ஆற்றலாலும் நிர்வாகத்தாலும், சிந்தனையாலும், இந்நாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல அதைவிட ஒரு படி மேலாக இந்த நாட்டிலே வாழுகின்ற பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் மீது தனிப் பிரியம் கொண்டிருக்கிற மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு இளைஞர் விடுதிகளில் 25 சதவீத சலுகைகளை வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல இங்கே பேசுகிறபோது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் மாவட்டந்தோறும் படகு குழாம்களை படகுப் போட்டிகளை

TRUTH ALONE TRIUMPHS

நடத்தவேண்டும் என்று கேட்டிருந்தார்கள். ஆனால் இந்த நாட்டு மக்களை நன்கு உணர்ந்திருக்கும் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மதுரை சித்திரைத் திருவிழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, கிருஷ்ணகிரியில் மாம்பழக் கண்காட்சி, குற்றாலத்திலே சாரல்விழா, குமரிமுனை திருவிழா போன்ற சீசன் நேரங்களில் இந்த தமிழகத்திலுள்ள முக்கியமான மாவட்டங்களில் ஒருமாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் என்ற அளவில், மாணவ மாணவிகளையும் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் பொருட்டும் அவர்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்களை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலே ஒரு நடமாடும் படகு குழாம் (மொபைல்) அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல தமிழகத்தினுடைய நம் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலேதான் சுற்றுலாத் துறை என்பது ஒரு மிகப் பெரிய துறையாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிற துறையாக ஆற்றல் மிக்க அன்னையின் ஆட்சியில் இன்றைக்கு அது ஒரு முக்கிய நோக்கத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-30

இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது சேலம் மாவட்டம் ஏற்காட்டிலே கோடை விழா ஒன்று நடத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது நமது பேரவைத் தலைவர் அவர்கள் சார்ந்திருக்கின்ற மதுரை மாவட்டம் வண்டியூர் கண்மாயிலே படகு விட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏற்கெனவே நமது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்தான், மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியையே சார்ந்தவர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நடமாடும் படகு குழாம் அமைக்க சுற்றுலா வளர்ச்சிக் குழுவிற்கு ஆணையிட்டதன் அடிப்படையிலே வருங்காலத்திலே இது தமிழகம் முழுவதும் இயங்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே. பி. ராஜு அவர்கள் பேசுகின்றபோது கோவை குற்றாலத்தை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதாவது உண்மையிலே கோவை குற்றாலம் மாவட்ட உலா தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு அரசு அதற்கு 3 இலட்சம் ரூபாயை ஒதுக்கி உணவு வசதி, மற்றும் உடை, பாத் ரூம் வசதி போன்றவற்றை செய்து கொடுப்பதற்கு சுற்றுலாத் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் காஞ்சி பன்னீர்செல்வம் அவர்கள் பேசுகின்றபோது வரலாற்றுச் சிறப்புமிக்க வேடந்தாங்கல் பறவைகளின் சரணாலயத்தைப் பார்க்க வருகின்ற பயணிகளுக்கு வசதியாக அங்கே ஒரு விடுதி கட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இன்றையதினம் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் அந்த வேடந்தாங்கல் பகுதியிலே பார்க்க வருகின்ற பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கின்ற நோக்கத்தோடு அங்கே ஒரு விடுதியை மத்திய அரசு உதவியோடு பாரம்பரிய ஓட்டலாக மாற்றுவதற்கு இந்த அரசினுடைய பாசீலனையில் இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் பேசுகின்றபோது கேபிள் கார் போடிநாயக்கனூர் டாஃப் ஸ்டேஷன் வரைக்கும் விடவேண்டும், மீண்டும் இயக்க வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் பகுதியை இந்தத் துறையினுடைய அதிகாரிகள் சென்று பார்த்து அந்தத் திட்டத்தை மறுபடியும் ஆய்வு செய்து வருங்காலத்திலே நிதிநிலைமைக்கு ஏற்ப அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு கனிவோடு பரிசிலிக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது கண்ணகி சிலையைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டார்கள். எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பெருமளவில் எந்த இடத்திலும் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்களை அழிய விடாது (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கண்ணும் கருத்துமாக காத்துவரும். இந்த அரசு அக்கறை கொண்டிருப்பதன் அடிப்படையிலே கண்ணகி சிலையை பாதுகாப்பதற்காக 3 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கிச் செப்பனிட வேண்டும் என்று இந்த அரசு, இந்த சுற்றுலாத்துறை, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக்கொண்ட நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த சிலை சிறிது தூரத்திற்கு முன்னாலே அகற்றி வைத்தால்தான் பாதுகாக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர் என்னை நேரிலே சந்தித்து, புராதன

அடிப்படையிலே கண்ணகி சிலையை அந்த இடத்திலே வைத்துத்தான் இந்த அரசு பாதுகாக்க வேண்டும், அதை புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கண்டிப்பாக செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்று சொன்னார். அதன் அடிப்படையிலே இந்த சுற்றுலாத் துறை இன்றைக்கு பொதுப்பணித்துறைக்கு ஒரு கடிதத்தை எழுதி அதற்குரிய விரிவான திட்டம் ஒன்றைத் தருமாறு கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதுகுறித்து துரித நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-35

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் பேசுகிறபோது கடல் பூங்கா, முயல் தீவு ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்கிற வண்ணம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், இராமநாதபுரத்தில் பல்வேறு சுற்றுலா ஸ்தலங்களை சீர் செய்து தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அது மாவட்ட உலா ஸ்தலங்கள் மூலமும், சுற்றுலாத் துறையின் மூலமும் அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப சீர் செய்யப்படும். கடல் பூங்கா, முயல் தீவு இதைப் பொறுத்தவரையில் வனத் துறையோடு சுற்றுலாத் துறை கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்து இருக்கிற கோரிக்கைகளுக்கும், வெட்டுத் தீர்மானங்களுக்கும் என்னுடைய பதிலுரையில் பதில் கிடைத்து இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி நிறைவு பெறாத மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் இங்கே சட்டசபைக் குறிப்பேடுகளில் இருந்து எடுத்து அதன்மீது இந்தத் துறை வருங்காலத்திலே நடவடிக்கைகளை அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் முறையாக அருமையாகப் பதில் அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதன் முதல் பதில் அளித்தது செய்தி - விளம்பரத் துறை அமைச்சர் தான். இவர் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சரி, இப்போது நிறைய பேர் கொடைக்கானலுக்கு வெளியில் இருந்து வருகிறார்கள். அப்படி அவர்கள் வருகின்றபோது கொடை ரோடு என்ற ரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்குவார்கள். நான் ஏற்கெனவே இங்கே கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு மோட்டல் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் அங்கே வெளியில் இருந்த வரக்கூடியவர்கள் சிறிது நேரம் ஓய்வு எடுக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். அந்த ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி மேல் புறமாக ஒரு சிறிய கரடு போல் இடம் இருக்கிறது. அந்த இடத்திலே தங்கும் விடுதியோடு சேர்த்து ஒரு ஓட்டலும் கட்டுவதற்கு முயற்சித்தால் அதை ஏற்பாடு செய்வோமானால் வெளியில் இருந்து வருகிறவர்கள் ஒரு நாள் ஓய்வு எடுத்துவிட்டு மலைக்குச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்தத் திட்டத்தை அமல் படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடைக்கானல் மலைப்பகுதியைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். வருகிற சுற்றுலாப் பயணிகள் உள் நாட்டு பயணிகளாக இருந்தாலும் சரி; வெளிநாட்டுப் பயணிகளாக இருந்தாலும் சரி, அந்த அழகிய அற்புத மலை வாழ் இடங்களை எப்போது நாம் சென்று களிப்போம் என்று கொடை ரோட்டில் இறங்குகிறார்களே தவிர கீழே இறங்கி தங்கி களைப்பாற வேண்டும் என்றோ, ஓய்வு எடுக்க வேண்டும் என்றோ, சுற்றுலாப் பயணிகள் விரும்புவதாக இதுவரை எதுவும் அறிக்கைகள் அரசிடம் இல்லை. அப்படி ஏதாவது சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கோரிக்கைகள் வருமானால் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு அந்தத் திட்டத்தை நிதிநிலைமைக்கு ஏற்ப கனிவோடு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எம். துரை. கேட்ட உறுப்பினர்களே கையைத் தூக்கிக் கொண்டு இருக்கக்கூடாது.

திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டூரிங் திரையரங்குகள் 5 வருடத்திற்கு ஒரு முறை லைசன்ஸ் புதுப்பிக்கப்படுவதாக அரசு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை லைசன்ஸ் பெற்றுள்ள இந்த மாதிரி திரையரங்குகள்-தற்போது அரசால் வற்புறுத்தி மாற்றங்களைச்

செய்யவேண்டும் என்று அதாவது மண்தரையை மாற்றி பென்ச் போடுதல் கூரை மற்றும் ஸ்கிரீன் மாற்றம் போன்றவற்றை செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏற்கெனவே 5 ஆண்டுகளுக்கு லைசன்ஸ் பெற்றுள்ள இந்த மாதிரியான.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்?

திரு. எஸ். எம். துரை: இல்லை, ஒரு முக்கியமான . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, பேசக் கூப்பிட்டேன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

திரு. எஸ். எம். துரை: இல்லை, முடித்து விடுகிறேன். இந்த மாதிரியான திரையரங்குகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மாற்றங்கள் உடனடியாக செய்ய முடியவில்லை. கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே, 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை லைசன்ஸ் பெற்றுள்ள இந்த மாதிரியான திரையரங்குகளின் உரிமையாளர்கள் மாற்றங்களை அடுத்த லைசன்ஸ் ரென்வல் செய்வதற்கு முன்பு செய்து கொள்ள அரசு அனுமதி வழங்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6-40

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டூரிங் தியேட்டர்களில் ஏற்கெனவே தரை டிக்கெட் என்று ஒன்று இருந்தது. இப்போது தரை டிக்கெட் இருக்கக்கூடாது. பென்ச் போடப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை எதிர்த்து நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள். இருப்பினும் 6 மாத காலம் அவர்களுக்குத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு பல்துறை விளக்க மையத்தையும், காரைக்குடிக்கு பொருட்காட்சியும் தந்து, கவிதை உலகில் அழியாத காவியங்களைப் படைத்த கவியரசு கண்ணதாசனுக்கு மணி மண்டபம் அமைத்ததோடுமட்டுமல்லாமல், 23,500 ரூபாய் செலவில் அருமையான வெங்கல திருவுருவச் சிலையை அமைத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவர் இயற்றிய அழியாத, கருத்து செறிந்த, சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க,

இனிமையான பாடல்களை, பார்வையாளர்கள் நேரங்களில் ஒலிபரப்ப அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவியரசர் கண்ணதாசனுடைய பாடல்கள் கேட்காத இடங்களே இல்லை என்ற நிலைதான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. எந்த டீக்கடைக்குச் சென்றாலும் அல்லது எந்தத் திரையரங்குக்குச் சென்றாலும் அல்லது எந்த வீட்டிற்குச் சென்றாலும், காலத்தால் அழிய முடியாத கருத்துக்களைத் தாங்கி வருகின்ற கீதங்களாகவே ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே, மணி மண்டபத்தில் அந்தப் பாடல்கள் ஒலிபரப்பப்பட வேண்டுமென்றால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே அதற்காக ஏற்பாடு செய்யலாம். இருப்பினும் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே, நாட்டு மக்களுக்காகத் தியாகம் செய்த பெரியவர்களுக்கு அவர்கள் சார்ந்திருந்த இயக்கத்தைப் பாராமல், அவர்களுடைய கருத்துக்களைப் பாராமல், பெருமையோடு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், அவர்கள் வாழ்ந்த இடங்களை, நினைவு இல்லங்களாகவும், சிலை வைத்தும் மற்றும் பல்வேறு விதங்களிலே பாராட்டினார்கள் என்ற புள்ளி விவரத்தோடு பல தலைவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதை நான் மறுபடியும் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று பெயர் வைக்க வருகின்றபோது, இவருடைய நினைவாலயத்திற்கு வந்து, மரியாதை செலுத்திவிட்டு, அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவேன் என்று அறிவித்தார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். தொடர்ந்து நாங்களும் கோரிக்கை வைத்து வருகிறோம். அதற்கான நிலம், அவர்களுடைய நிலமே 200 ஏக்கருக்கு மேலே இருக்கிறது. அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், நமது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும், அதைச் செய்து தருவார்களா என்பதோடு அவர் கடைசியாக வாழ்ந்த சிறுநகர் வீட்டை நினைவு இல்லமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப் பெருமைப்படுத்தவேண்டும் என்கிற உணர்விலே இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எத்தகைய எண்ணம் கொண்டு, தான் ஆட்சியிலே, அதிகாரத்திலே இருந்தபோது செயல்பட்டார்களோ அதே உணர்விலே, அந்த லட்சியம் பட்டுப்போகாத வகையிலே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்ட வேண்டும்; பல்வேறு வகைகளிலே பெருமைப்படுத்த வேண்டும் என்கிற உணர்விலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பிறந்த நாள் விழா மாவட்ட அளவிலேதான் நடத்தப்பட்டது. அது, இந்த ஆண்டு மாநில அளவிலேயே நடத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு பசும்பொன் கிராமத்திற்கு தானே வருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே உள்ள இடம் சுற்றுலாத் தலமாக ஆக்கப்படுமா, அந்த நினைவகத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்றெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அந்த நினைவகத்தை எடுத்துச் செயல்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அங்கே இருக்கிற பிரச்சினை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குமே தெரியும். அதைப் பேசித் தீர்த்து, அதைக் கொடுப்பதற்கு தயாராக இருந்தால், அரசு அதைச் செய்வதற்கும் தயாராக இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-45

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அங்கே ஒரு பிரச்சினை இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்களும் வந்திருந்தார்கள். இப்பொழுது அதைத் தீர்ப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அங்கே உள்ளவர்களை நீங்கள் நினைக்கின்ற அளவிற்கு வெளியேற்றிவிட்டு எந்தெந்த விதிமுறைகள் வேண்டுமோ அதைச் செய்து தரத் தயாராக இருக்கிறேன். அதைச் சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி - விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தீர்ப்பதற்குத் தயாராக இருந்தால் அந்தத் தீரரைப் பெருமைப்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, கையைத் தூக்கினீர்கள். பிறகு ஏன் தயக்கம்? நான் கூப்பிடுகிற நேரத்தில் பேசாமல் விட்டு விடுகிறீர்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ப. ஜீவானந்தம் அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நினைவு மண்டபம் ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று அவர் இந்த மாமன்றத்தினுடைய சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர். இலக்கியத் தென்றலாகவும் இருந்தவர். பொதுவாக, பொதுவுடைமை இயக்கத்தில் மட்டுமல்ல, ஒரு சுயமரியாதைவாதியாக இருந்து, தமிழகத்திற்குப் பணியாற்றிய அவர்களுக்கு அந்த நினைவு மண்டபத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவர்கள் தெரிவித்ததற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இணைந்து வேதாரண்யத்திலே இருக்கிற கோடியக்கரை என்ற இடத்தைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருந்தது. அதற்கான முயற்சிகள் அரசினுடைய ஆய்விலே இருக்கிறதா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்க இந்த அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கோடியக்கரை பகுதியை சதுப்பு நில சரணாலயமாக அறிவித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஒரு இன்டர்நேஷனல் டூரிஸம் சென்டராக இருக்கிறது.

அந்த இடத்திலே வருகிற மக்களுக்கு சன் ரைஸ், சன் செட் பார்ப்பதற்கு ஒரு வியூ பாயின்ட் இல்லாமலிருக்கிறது. சாயங்காலம் அங்கே பார்த்தால் மக்கள் ஓடுவதைப் பார்க்க முடிகிறது. அதை மாற்ற வேண்டுமென்று மத்திய அரசிடம் நான் மனுக் கொடுத்திருந்தேன். அப்பொழுது அவர்கள் மாநில அரசிடம் எஸ்டிமேட் கேட்டார்கள். ஐந்து இலட்சம் ரூபாய்தான் ஆகுமென்று சொன்னார்கள். எஸ்டிமேட் கொடுத்தார்கள். ஐந்து இலட்சம் ரூபாய் மாநில அரசே செய்து கொள்ளலாமே என்று அவர்கள் அந்த பைலை குளோஸ் செய்தார்கள். ஆகையினால் தயவு செய்து வியூ பாயிண்டை, கன்னியாகுமரியிலே சன் செட், சன் ரைஸ் பார்ப்பதற்காக ஒரு இடத்தை நிர்ணயம் செய்து அந்த இடத்திலே மக்கள் நின்று பார்ப்பதற்கான வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை இந்தச் சுற்றுலாத் துறை ஏற்கனவே பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், அதை வருங்காலத்திலே நிறைவேற்றுவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

* திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று பாடிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்கு நாமக்கல்லில் சிலை வைப்பதோடு, அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி பிறந்த நாள் கொண்டாடி வருகிறார்கள். இந்த ஆண்டும் அது கொண்டாடப்படுமா, சிலை வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தி - விளம்பரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கவிஞருக்குச் சிலை வைக்கப்படுமா என்று கேட்டார்கள். நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்கள், அவர் வாழ்ந்த இல்லத்தையே நினைவு இல்லமாக ஆக்க வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் - நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அவருடைய வாரிசுதாரர்கள் இன்னும் அவர் வாழ்ந்த இடத்தைக் கொடுப்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, அதைப் பெற்றுத் தருவதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினரவர்கள் முனைப்புடன் செயல்பட்டால் அதை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒரு மானியக் கோரிக்கை இருக்கிறது. பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையும் இருக்கின்றது. எல்லோரும் அதை மறந்து விட்டீர்கள்.விவாதம் முடிவுற்றது.

(அ) கோரிக்கை எண் 46 - செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 46, செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தர்தாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.9,34,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 6 -50

(ஆ) கோரிக்கை எண் 50– சுற்றுலா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 50- சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ். ரூ. 2,70,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை', என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 21–மீனளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21 - மீனளம்; மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 24,76,47,000-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 3029, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'to discuss the need to take steps to control all the fish freezing plants in the private sector and fix charges for their use', I move -``that the sum of Rs. 24,76,47,000 allocated under Demand No. 21 - Fisheries be reduced by Rs. 100."

(ஈ) கோரிக்கை எண் 31—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 44,97,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்க கூடுதல் நிதி வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகிற ரூ.44,97,63,00-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

1994 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகத் தயாரிக்கப்பட்ட மீன் வறுவல் (Fried Fish) மீன் கட்லெட், மீன் பக்கோடா மற்றும் சுவையான தேநீர் வழங்கப்பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் அருந்தாதவர் இருந்தால், போய் அருந்தி வரலாம். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: சாப்பிடாத உறுப்பினர்கள் யாரேனும் உள்ளே இருந்தால், தயவுசெய்து-அவர்களுக்காக சட்டமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதைச் சாப்பிட்டுவிட்டு, மீன் எப்படி சத்தான உணவாக, புரதம் மிக்க உணவாக மீனைச் சாப்பிட்டால் 'கேன்சர்' கூட வராது என்று சொல்கிறார்கள்; ஏனென்றால், அதிலே 'செலுமியம்' என்று சொல்லக்கூடிய ஒரு 'ரேர் மினரல்' அதிலே இருக்கிறது. அதுமட்டுமல்ல; கரோட்டின் என்று சொல்லக்கூடிய கண்ணுக்கு பாதுகாப்பு தரக்கூடிய அந்தச் சத்தும் இருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்களுக்கு இன்றைக்கு மீன் வழங்கப்பட்டிருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களுக்கு, நீங்கள் சொல்வதெல்லாம் அதுதான். அளவுக்கு அதிகம் போனால், அதனால் உறுப்பினர்களுக்கு ஏதாவது தொந்தரவு வந்துவிடப் போகிறது. எனவே, அமைச்சர் சொன்னதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, திரு. இராம. இராமநாதனையும் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு) இதுபோல வேறெங்கும் கிடைக்காது உங்களுக்கு. (சிரிப்பு) (குறுக்கீடுகள்) மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, எனவே, உறுப்பினர்கள்-எப்படி மீன் ஒரு சத்துள்ள உணவாக இருக்கிறதோ, அதைப்போல, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறையினுடைய கருத்துக்களை, அவர்கள் சத்தாக வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கொள்கைக் குறிப்புகளைப் பற்றிச் சொல்லுங்கள். மீன் சாப்பிட்ட மயக்கத்தில் உட்கார்ந்து விட்டீர்களோ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மீனைப்பற்றி சொல்லும்போது, நான் மறந்துவிட்டேன், தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளான மீனளம் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோர் நலன் என்ற தலைப்புகளின் கீழ், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில், இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளைக் @ நான் இந்த அவையில் உரையாற்றியதாகக் கருதி, அதை இந்த அவைக்குறிப்பிலே பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கும், ஆலோசனைகளுக்கும் என்னுடைய பதிலுரையையும் நமது இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசில் எடுக்கக் கருதியுள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் எனக் கூறி அமைகிறேன்.

பிற்பகல் 6.55

(10) "ஜெய்ஹிந்த்" என்ற சொற்றொடரை உரையின் முடிவில் பயன்படுத்துதல் குறித்து -பேரவைத் தலைவரின் தீர்ப்பு — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்ற விவாதத்தின்போது 'ஜெய்ஹித்' பற்றிய பிரச்சினை வந்ததே, அப்பொழுதே நான் சொன்னேன், இது பாராளுமன்றத்திலே அறிவித்த அறிவிப்பு என்று. 15.3.1948 அன்று அன்றைய பேரவைத் தலைவர், லோக்சபா அதனுடைய தலைவர், திரு. ஜி.வி. மௌலங்கர், முதலாவது லோக்சபா தலைவர், அவர் அன்றைக்கு அறிவித்த அறிவிப்பு. இப்பொழுது நான் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதற்கு முன்னர் பேசிய திரு. எச்.வி. காமத் அவர்கள் 'Thank you `thank you' என்று சொல்லி முடித்திருக்கிறார். இரண்டு 'Thank you' சொன்னவுடனே, அதனைக் குறிப்பிட்டு அவர் சொன்னபோதுதான், இதைச் சொல்லியிருக்கிறார். No. No thanks, No Jai Hind, No Vandematharam, nothing of the kind' என்று அன்றைக்கு பண்டித நேருமகனார் இருந்தபோது-நாடாளுமன்றத்திலே அறிவித்த-அறிவிப்பைத்தான் இங்கே அன்றைய தினம் பேரவைத் துணைத் தலைவர் சொன்னார், இன்றைக்கு நானும் சொன்னேன். அதைப் பின்பற்றவில்லை.

@ 771 முதல் 829 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III மற்றும் இணைப்பு-IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.

நான் சொன்னது போல, இதையேகூட இரண்டு தடவை thank you, thank you, என்று சொன்னது, 'இது உங்களுடைய உரிமை இவ்வளவு நேரம் பேசியது. அதற்கு நீங்கள் எனக்கு 'thanks' சொல்ல வேண்டியதில்லை' என்று அவர் சொல்லியிருக்கிறார். 'பேசுகிற உரிமையே உங்களுக்கு இருக்கிறபோது, அந்த உரிமையை எடுத்துக்கொண்டு பேசியவர் அதற்காக எனக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை' என்று சொல்லிவிட்டு, இதையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: நன்றியே சொல்லக் கூடாது என்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னது அதுகூட தேவையில்லை என்றிருக்கிறார். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தை பொதுவாக..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இப்பொழுது எதையும் சொல்லவில்லை. நான் ஏதோ இன்றைக்கு நாங்கள் தேடிப்பிடித்துச் சொன்னதைப்போல் நினைத்துக்கொள்ள வேண்டாம். நேரு பெருமகனார் இருந்தபோது, பிரசித்திபெற்ற முதல் பாராளுமன்றத் தலைவர், அவர் சொன்னதை நான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெய்ஹிந்த் வார்த்தையைப் பயன்படுத்தலாமா, பயன்படுத்தக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடாது என்று அன்றைய பாராளுமன்றத் தலைவர் சொன்னது, நான் அதைச் சொல்லவில்லை. அவ்வாறு எல்லாம் சொல்லியிருக்கிறார், அதையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்று உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அன்றைய பாராளுமன்றத் தலைவர் வழங்கியிருக்கிற தீர்ப்பு பயன்படுத்தக் கூடாது என்பது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அன்றைய பாராளுமன்றத் தலைவர் சொன்னதை அப்படியே கடைப்பிடித்து வருகிறேன். (குறுக்கீடுகள்) மறைந்த நேருபெருமகனார் இருந்த காலத்தில் இருந்திருக்கின்ற நாடாளுமன்றத் தலைவர்களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்த மவுலங்கர் சொன்னதுதான். அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நான் அப்பொழுதே நீங்கள் பயன்படுத்தக் கூடாது என்றுகூட சொல்லவில்லை. (குறுக்கீடு) பேரவைத் துணைத்தலைவரும் அன்றைக்கு

அதைத்தான் சொன்னேன் என்றிருக்கிறார். எனவே அதனுடைய அடிப்படையிலே இனிமேல் நீங்கள் இதைத் தவிர்க்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றுதான் அவரே சொல்லியிருக்கிறார். எனவே , அதை உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஜெய்ஹிந்த் என்பதைப் பயன்படுத்தலாமா, பயன்படுத்தக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வாறு அன்றைய பாராளுமன்றத் தலைவர் சொல்லியிருக்கிறார்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: 'ஜெய்ஹிந்த்' என்பது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான், இவ்வாறு இருப்பதை எல்லாம் உறுப்பினர்கள் தவிர்க்கலாம், தவிர்க்க வேண்டுமென்று கௌல் அண்ட் ஷக்தரிலேயும் அதைப் பற்றிய கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையே நான் திரும்பச் சொல்கிறேன். அவ்வளவுதான்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: 'ஜெய்ஹிந்த்' என்பதற்கு இந்தியாவை வணங்குகிறோம் என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குள்ளேயே நான் போகவில்லை, வணங்குங்கள், வணங்காமல் இருங்கள் (குறுக்கீடு) அவருக்கு அன்றைக்குத் தெரியாதா? மௌலங்கருக்குத் தெரியாதா? ஜவஹர்லால் நேருவுக்குத் தெரியாதா? (குறுக்கீடு) நான் அவர்கள் சொன்னதை இப்பொழுது நினைவுபடுத்துகிறேன் உங்களுக்கு. அவ்வளவுதான் .

7. மானியக் கோரிக்கைகள், 1994–95, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்கிறது. திரு.சோ. பாலகிருஷ்ணன். (குறுக்கீடு) கொறடா பேசுகிறீர்களா? (குறுக்கீடு) யார் பேசுகிறீர்கள்? நான் அப்போதே உங்களுடைய துணைத் தலைவரிடம் கேட்டேன். (குறுக்கீடு) திரு. மா. சுந்தரதாஸ்.

பிற்பகல் 7-00

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மீனளம், பிற்பட்டோர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். மீனளத்துறையைப் பொறுத்தவரையில் இதற்காக ஒதுக்கி இருக்கிற பணம் 'அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பெண்டிச்சர்-க்கு கூடதிகையுமா என்பதுதான்

11. அறிவிப்பு

டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பை ஒட்டி 30-4-1994 அன்று பேரவை அலுவல் நேரம் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை காலை சமூக நீதிக்கான ஓர் அரசியல் சட்டத்தையே நமக்கு வழங்கிய சட்ட மாமேதை, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை திறப்பு விழா நடைபெற இருக்கிறது.

அந்தச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிற காரணத்தால், உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவுள்ள அந்தச் சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ள வசதியாக நாளை பேரவை காலை 10 மணிக்குக் கூடுவதற்குப் பதிலாக 11-30-க்கு கூடலாம் என முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. பேரவையின் ஒப்புதலோடு நாளை காலை 11-30 மணிக்குப் பேரவை கூடும் என்பது அறிவிக்கப்படுகிறது.

12. அரசினர் தீர்மானம். விதி-32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய பேரவை விதியின்படி, பேரவையின் முதல் ஒரு மணி நேரக் கூட்டம் கேள்வி பதிலுக்காக ஒதுக்கப்படுகிறது என்கிற விதியை நாளையதினம் தளர்த்துவதற்குரிய தீர்மானத்தை முன்மொழியக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையின் முதல் 1 மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 30-4-1994 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 7-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது..

நாளை காலை 11-30 மணிக்குப் பேரவை கூடுகிறபோது கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதனைத் தொடர்ந்து பேரவையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. அறிவிப்பு

டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பை ஒட்டி 30-4-1994 அன்று பேரவை அலுவல் நேரம் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை காலை சமூக நீதிக்கான ஓர் அரசியல் சட்டத்தையே நமக்கு வழங்கிய சட்ட மாமேதை, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை திறப்பு விழா நடைபெற இருக்கிறது.

அந்தச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிற காரணத்தால், உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவுள்ள அந்தச் சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ள வசதியாக நாளை பேரவை காலை 10 மணிக்குக் கூடுவதற்குப் பதிலாக 11-30-க்கு கூடலாம் என முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. பேரவையின் ஒப்புதலோடு நாளை காலை 11-30 மணிக்குப் பேரவை கூடும் என்பது அறிவிக்கப்படுகிறது.

12. அரசினர் தீர்மானம். விதி-32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய பேரவை விதியின்படி, பேரவையின் முதல் ஒரு மணி நேரக் கூட்டம் கேள்வி பதிலுக்காக ஒதுக்கப்படுகிறது என்கிற விதியை நாளையதினம் தளர்த்துவதற்குரிய தீர்மானத்தை முன்மொழியக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையின் முதல் 1 மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 30-4-1994 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 7-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது..

நாளை காலை 11-30 மணிக்குப் பேரவை கூடுகிறபோது கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதனைத் தொடர்ந்து பேரவையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மணி வரையிலுமா என்று கேட்டுக்கொண்டு இருக்கலாம். பாராளுமன்றத்திலே எல்லாம் சில நேரத்தில் 2 மணி, 3 மணி வரையிலேயும் கூட நடக்கும். இயற்கையாகவே 10 மணி வரை நடப்பது என்பது, அங்கே நடக்கும். எனவே, (குறுக்கீடுகள்) இப்போதும்கூட உறுப்பினர்களுக்கு எல்லாம் மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் சூப் முதற்கொண்டு கொடுத்து இருக்கிறாரே ! எனவே, இதுபோன்று நடப்பதால், அதிகமான நேரம் பேரவையில் விவாதிப்பதற்குக் கிடைக்கிறது என்பதற்காகச் சொன்னேன். அதற்காக நாள்தோறும் 10 மணி வரை இருக்குமா என்று, நாளைக்கு 8 மணிக்கே புறப்பட்டு விடக் கூடாது. இப்படி இது ஒரு நாளில் நடக்கிறது; மற்ற நாட்களில் சாதாரணமாக அந்த குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கப் பார்க்கலாம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவு வரையிலேயும் இருந்த உறுப்பினர்களுக்கும், விரிவாகப் பதில் சொன்ன அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இவ்வளவு நேரம் வரையிலேயும் அவை நடவடிக்கைகளை சிறப்பாக இருந்து குறிப்பு எடுத்து, நாளையதினம் இந்தச் செய்திகள் அப்படியே வருவதற்குரிய ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிற பத்திரிகை நண்பர்களுக்கும் என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-1994) காலை 11.30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 10.23 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

109. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் 1991-92-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

110. திருவாளர்கள் ஏசியாட்டிக் ஆக்ஸிஜன் லிமிடெட் அவர்களால் 1993-94 முதல் 1995-96 வரையிலான 3 ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியைத் தள்ளி வைப்பது குறித்து 9-2-1992 ஆம் நாளிட்ட 40-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

1994 ஏப்ரல் 29]

(1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது).

111. சென்னை, திருவாளர்கள் கெமக் லேபாரட்டரீஸ் லிமிடெட், அவர்களால் 1992-93 முதல் 3 ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியைத் தள்ளிவைப்பது குறித்து 23-12-1993-ஆம் நாளிட்ட 415-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

146. மானியக் கோரிக்கை எண் 46-செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

147. மானியக் கோரிக்கை எண். 50 - சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண். 21 மீனளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

149. மீனளத்துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

150. மானியக் கோரிக்கை எண். 31 - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

151. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் நலம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் துறை பற்றிய செயல்முறைத் திட்டம். (ஆங்கிலம்)

152. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தாறாவது அறிக்கை, 1993-94.

153. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தேழாவது அறிக்கை, 1993-94.

154. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தெட்டாவது அறிக்கை, 1993-94.

155. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்தொன்பதாவது அறிக்கை, 1993-94.

156. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை, 1993-94.

இணைப்பு I

[486 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மானியக் கோரிக்கை எண்: 46

செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் கொள்கை விளக்கக் குறிப்பு 1994-95

மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களாட்சியின் அடிப்படை நோக்கமும் தத்துவமும் வெற்றிபெற அரசின் செயல்பாடுகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்ச்சியும், ஈடுபாடும் ஏற்படச் செய்வது இன்றியமையாததாகும். அரசின் கொள்கைகள், செயல்பாடுகள், ஆற்றிவரும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துக்கூறவேண்டியது அரசின் தலையாய கடமையாகும். இந்த வகையில் அரசுக்கும் பொது மக்களுக்கும் பாலமாக அமைந்து நல்லெண்ணத் தொடர்புகளை யும் நட்புணர்வுகளையும் வளர்ப்பதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரிய பணியைச் செய்துவருகிறது.

தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், ஏழை, எளிய வர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் என அனைத்துப் பிரிவினரது நலன்களையும் மேலோங்கச் செய்வது என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் நடைபெற்று வரும் ஆற்றல் மிக்க நல்லாட்சியில், பல்வேறு துறைகள் மூலமாகத் தொலைநோக்குடன் ஆற்றப்படும் செயல் திட்டங்களையும் நலத்திட்டங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி, பயன்பெறச்செய்வதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரும்பணி ஆற்றி வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் இத் துறை ஒரு புதிய பரிணாம வளர்ச்சியுடன் பீடுநடை போடுகிறது.

பொருட்காட்சி

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவு தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 1978-ஆம் ஆண்டு முதல் பொருட்காட்சிகளை நடத்தி வருகின்றது. தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், நலத் திட்டங்களையும், பல்வேறு துறைகளில் புரிந்துள்ள சாதனை களையும் மக்களுக்கு விளக்குகின்ற வகையில் அரசுத் துறைகளும், அரசுத் துறை நிறுவனங்களும் அரங்கங்களை இப்பொருட்காட்சி களில் அமைத்துப் பங்கேற்கின்றன.

இத்துறை இதுவரை 70 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. 21.2.94 முதல் திருச்சியில் 71-வது பொருட்காட்சி தொடங்கப் பெற்று 10.4.94 அன்று நிறைவு பெற்றுள்ளது. 72-வது பொருட்காட்சியாக மதுரை சித்திரைப் பொருட்காட்சி 16.4.94 முதல் மதுரையில் நடைபெற்று வருகிறது. 73-வது பொருட்காட்சி 1.5.94 முதல் கோவையில் தொடங்க உள்ளது. இப்பொருட்காட்சிகள் பொதுமக்களின் நல்ல வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதுடன், இதுவரை ரூ.4.61 கோடி வருவாயையும் அரசுக்கு ஈட்டித் தந்துள்ளது.

மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. 1993-94-ஆம் நிதியாண்டில் கூடுதலாக திருநெல்வேலி, திருச்சி ஆகிய இரண்டு இடங்களில் பொருட்காட்சி நடத்தப்படுமென சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார். அதன்படி திருநெல்வேலி, திருச்சி ஆகிய இரு இடங்களிலும் பொருட்காட்சிகள் நடத்தப் பட்டன. பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமல்லாது, செய்திகளைத் தெரிவிக்கும் சாதனமாகவும் திகழ்வதால் இந்த ஆண்டு மேற்படி 5 இடங்களுடன் கூடுதலாக இரு இடங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படும்.

பொருட்காட்சிகளின் இத்தகு பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, பெருநகரங்களில் வாழுவோர் மட்டுமின்றி, பிற மக்களும் பயன்பெறும் வண்ணம் இந்நிதியாண்டில் 5 நகரங் களில் சிறு அளவிலான பொருட்காட்சிகள் நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்கிறது. புதுடெல்லியில் நடத்தப்படும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொள்ளும் பொருட்காட்சியினை ஆண்டுதோறும் செய்தி மக்கள் தொடர்புத்துறை நடத்துகிறது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவிலும் (PHOOL WALON-KI-SAIR) இத்துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. கடந்த 1993-இல் புதுடெல்லியில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக் கத்தைப் பேணி வள்ளர்க்கும் பொருட்டு நடைபெற்ற மலர்ப் பேரணி விழாவில் (PHOOL WALON-KI-SAIR) மலர் அலங்காரத்திற்காக

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

ஒன்றும், சிறந்த கலை நிகழ்ச்சிக்காக ஒன்றும் ஆக இரு முதன்மை விருதுகள் இத்துறைக்கு வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள், கிராமிய நடனங்கள், விழா நிகழ்ச்சி களுக்கான நேர்முக வர்ணனை ஏற்பாடு போன்ற முக்கியப் பணிகளையும் இத்துறை நிறைவேற்றி வருகிறது.

புதுடெல்லியில் ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் மாநிலங்கள் சார்பாக அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெறும். இந்த ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்ள வேண்டிய மாநிலங்களைத் தேர்வுக்குழு ஒன்று தேர்வு செய்யும்.

கடந்த 5 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின், 1994-ஆம் ஆண்டு குடியரசு தின விழா அணிவகுப்புக்கு, தமிழ்நாடு மாநில ஊர்தி இத்தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழ்நாட்டின் சார்பிலான ஊர்தி, பொங்கல் விழா, கிராமிய நடனம் மற்றும் ஜல்லிக்கட்டு ஆகியவற்றைச் சித்திரிக்கும் வகையில் அமைந்திருந்தது.

எம்.ஜி.ஆர். ஒலி-ஒளிக்காட்சி

கடந்த ஆண்டு சட்டப் பேரவையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ''தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை மற்றும் அறிவுரைகளை விளக்கும் விதமாக நடத்தப்பட்ட ஒலி-ஒளிக் காட்சி நிகழ்ச்சிகளைப் போன்று, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் ஒலி-ஒளிக்காட்சி நடத்தப்படும்'' என்று அறிவித்தார்கள். அதற்கேற்பப் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவரது சீரிய கருத்துக்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் ஒலி-ஒளிக்காட்சிகள் நடத்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் 21 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு வழங்கும் பரிந்துரைக்கேற்ப பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். ஒலி-ஒளிக்காட்சி நடத்தப்படும்.

விழாக்கள்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பற்றியும் மாபெரும் தலைவர்களின் மகத்தான தியாகங்கள் பற்றியும், நாட்டு மக்களுக்கு, குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லவும், தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நூற்றாண்டு விழாக்கள் ஆகியவை இத்துறையால் கொண்டாடப்படுகின்றன. கீழ்க்கண்ட விழாக்கள் மாநில அளவில் ஒவ்வொரு ஆண்டும் அரசின் சார்பாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

1) டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா
2) சர் பிட்டி தியாகராயர் பிறந்த நாள் விழா
3) பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா
4) காயிதேமில்லத் பிறந்த நாள் விழா
5) பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா
6) விடுதலை நாள் விழா
7) கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா
8) பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா
9) தந்தை பெரியார் பிறந்த நாள் விழா
10) அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா
11) தேசிய மறு சமர்ப்பண நாள்
12) தேசிய ஒருமைப்பாடு வார விழா
13) மனித உரிமை நாள் விழா
14) மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா
15) மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா
16) பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா
17) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா
18) கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா
19) பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்த நாள் விழா

சென்ற மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில் ''புரட்சித்தலைவர் அவர்களது ஆட்சிக் காலத்தில், அரசவைக் கவிஞராகச் சிறப்பிக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் அவர்களுக்கு, மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் அவர்களது பிறந்த நாள் விழா, அரசு விழாவாக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும். அவரது பிறந்த நாளான ஜூன் திங்கள் 24-ஆம் நாளன்று அரசு அவரது ஆண்டு விழாவினைக் காரைக்குடியில் நடத்த முடிவு செய்து உள்ளது'' என அறிவித்தார்கள். அதன்படி கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா 27.6.1993 அன்று காரைக்குடியில் கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் முதலான நிகழ்ச்சிகளுடன் மாநில அளவில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா, இராமநாதபுரம், மதுரை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அளவில் மட்டும் இதுகாறும் நடத்தப்பட்டு வந்தது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா, இனி மாநில அளவில் நடைபெறுதல் வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, மேற்கண்ட மூன்று மாவட்ட அளவில் மட்டுமல்லாது, இனி ஒவ்வொரு ஆண்டும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்த நாள் விழா மாநில விழாவாகவும் கொண்டாடப் பெறும்.

[1994 ஏப்ரல் 29]

மாநில அளவிலான விழாக்கள் தவிர, கீழ்க்கண்ட மாவட்ட அளவிலான விழாக்களும் மாவட்டங்களில் கொண்டாடப்படுகின்றன.

1. சித்திரை முழு நிலவு விழா .. நாகப்பட்டினம் காயிதேமில்லத்
2. வீரபாண்டிய கட்டபொம்மன் விழா .. சிதம்பரனார்
3. புலவர் அதங்கோட்டாசான் விழா .. கன்னியாகுமரி
4. செய்குத்தம்பிப் பாவலர் பிறந்த நாள் விழா .. கன்னியாகுமரி
5. வல்வில் ஓரி விழா .. சேலம்
6. கவிமணி தேசிக விநாயகம் பிறந்த நாள் விழா .. கன்னியாகுமரி
7. வேதநாயகம் பிறந்த நாள் விழா .. நாகப்பட்டினம் காயிதேமில்லத்
8. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிறந்த நாள் விழா .. சேலம்
9. மருதுபாண்டியர் நினைவு நாள் .. இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.
10. பசும்பொன் முத்துராமலிங்கம் பிறந்த நாள் விழா .. இராமநாதபுரம், மதுரை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.
11. திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா .. மதுரை.

தொன்மை வாய்ந்ததும், ஆன்மீக இசையுமான நாதஸ்வர இசையை வளர்க்கவும், நாதஸ்வர வித்வான்களை ஊக்குவிக்கவும் அனைத்து அரசு விழாக்களும் நாதஸ்வர இசையுடன் தான் துவங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி மாநிலத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களும் நாதஸ்வர இசையுடன் தொடங்கப்படுகின்றன.

நினைவகங்கள்

செய்தி மக்கள் தொடர்புத்துறை பின்வரும் 24 நினைவகங்களைப் பராமரித்து வருகிறது:

1. வள்ளுவர் கோட்டம், சென்னை
2. அண்ணா சதுக்கம், சென்னை
3. காமராசர் இல்லம், சென்னை
4. இராஜாஜி நினைவகம், சென்னை
5. காமரர்சர் நினைவகம், சென்னை
6. காந்தி மண்டபம், சென்னை
7. பாரதி மணிமண்டபம் மற்றும் பாரதி இல்லம், எட்டயபுரம்
8. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்
9. காந்தி மண்டபம், கன்னியாகுமரி
10. காமராசர் இல்லம், விருதுநகர்

11. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு
12. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி
13. வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி
14. அண்ணா நினைவகம், காஞ்சிபுரம்
15. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம், சென்னை
16. செய்குத்தம்பிப் பாவலர் நினைவகம், நாகர்கோவில்
17. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்
18. இலங்கையின் கடைசி மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூர்
19. அண்ணா அருங்காட்சியகம், அண்ணா சதுக்கம், சென்னை
20. கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி
21. மருது சகோதரர்கள் நினைவகம், திருப்பத்தூர்
22. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி, சென்னை
23. பெரியார் நினைவகம், வைக்கம், கேரளா
24. வ.வே. சுப்பிரமணியம் நினைவு இல்லம், திருச்சிராப்பள்ளி

தந்தை பெரியார் நினைவகம்

தந்தை பெரியார் அவர்கள் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நினைவாக, கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவகம் எழுப்ப அரசு முடிவு செய்தது. இதற்குக் கேரள அரசு வைக்கத்தில் 74 சென்ட் அளவுள்ள நிலத்தை இலவசமாக வழங்கியது. தமிழ்நாடு அரசு ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, நினைவாலயம் எழுப்பும் பணி முடிக்கப்பட்டு 31.1.1994 அன்று திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. மேலும், இந்நினைவகத்தில் நூலகம், பெரியார் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி, பெரியாரின் திருவுருவச் சிலை மற்றும் திறந்தவெளிக் கலை அரங்கம் ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன.

திருவல்லிக்கேணி மகாகவி பாரதியார் இல்லம்

சென்னை திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தை ரூ.5.70 இலட்சம் செலவில் அரசு கையகப் படுத்தி ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2.10.1993 அன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்வில்லத்தில் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் காட்சியும் அமைக்கப் பட்டுள்ளது. பாரதியாரின் நினைவில்லத்தில் மேலும் அவரது மார்பளவு வெண்கலச் சிலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இங்கு நூலகம் ஒன்றினை அமைக்கக் கல்வித்துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் திரளான மக்கள் இவ்வில்லத் தைப் பார்வையிட்டுச் செல்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மருது சகோதரர்களுக்கு நினைவகம்

உரிமைப்போரில் முன்னின்று தமிழினத்தின் மானங்காத்த மருது சகோதரர்கள் புதைக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில் மருது சகோதரர் களுக்கு நினைவு வளாகம் ஒன்றை எழுப்ப அரசு முடிவு செய்தது. நினைவு வளாகம் கட்டுவதற்கும் மற்றும் சிலை நிறுவிடவும் ரூ.5.46 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு 21.10.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் வளாகம் திறந்து வைக்கப்பட்டது. சிலை செய்யும் பணி விரைவில் முடிக்கப்பட இருக்கிறது.

டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம்

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் ரூ.2.265 கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு 24.12.92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை

தமிழகம் வள்ளுவரைப் பெற்று வான்புகழ் கொண்டது. அந்தப் பொதுமறை தந்த புலவர் பெருந்தகைக்குக் கன்னியாகுமரி யில் விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறிய பாறை மீது 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலை நிறுவ முடிவு செய்யப் பட்டது. இப்பணிக்காக இதுவரை ரூ.2.315 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளுவர் சிலை அமையும் அடிப்பீடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 266 குறட்பாக்கள் பொறிக்கப்பட உள்ளன.

கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி

நாம் வாழுங்காலத்தில் வாழ்ந்து மறைந்தவர் கவியரசு கண்ணதாசன். அவருக்கு ரூ.55 இலட்சம் செலவில் ஒரு மணிமண்டபம் அமைக்க அரசு எடுத்த முடிவின்படி நினைவு மண்டபம் கட்டும் பணி முடிவு பெற்று 21.10.1992 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அம் மணிமண்டபத்தில் கவியரசு கண்ணதாசன் அவர்களின் வெண்கலத்திலான மார்பளவுச் சிலை அமைக்க ரூ.23,500 அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத் திருவுருவச் சிலை செய்யும் பணி முடிவு பெற்றுள்ளது. விரைவில் மண்டபத்தில் திருவுருவச் சிலை நிறுவப்பட உள்ளது.

தியாகி சங்கரலிங்கனார் சிலை

'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டவேண்டுமென்று போராடி உண்ணாநோன்பிருந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் சிலையைச் சென்னையில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.1.25 இலட்சம் அனுமதி அளிக்கப் பட்டு சிலை செய்யும் பணி முடிவு பெறும் நிலையில் உள்ளது. விரைவில் சிலை நிறுவப்படும்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. சிலை

பெண்ணுரிமைக்குப் பாடுபட்டு, தமிழுக்குத் தகும் உயர் வளித்தவர் திரு.வி. கலியாணசுந்தரனார். சென்னையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் நினைவாகச் சிலை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி சிலை செய்யும் பணி முடிவு பெறும் நிலையில் உள்ளது. விரைவில் சிலை நிறுவப்படும்.

விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் சிலை, சென்னை

விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமனுக்குச் சென்னையில் சிலை ஒன்று நிறுவ அரசு முடிவு செய்து, சிலை செய்வதற்கும் சிலையின் பீடம் அமைப்பதற்கும் ரூ.2.20 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சிலை அமைக்கும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

சென்னையில் முன்னாள் மேயர் சிவராஜ் சிலை

தாழ்த்தப்பட்ட இனத்து மக்களின் மேம்பாட்டுக்குப் பாடுபட்டவரும் சென்னையின் முன்னாள் மேயருமான சிவராஜுக்குச் சிலை ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டது. சிலை செய்வதற்கும், பீடம் கட்டுவதற்கும் ரூ.2.45 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சிலை செய்யும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை நினைவகம்

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என சுதந்திர கீதம் முழங்கிய நாமக்கல் கவிஞர் திரு வெ.இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், நாமக்கல் நகரில் அவர் வாழ்ந்த இல்லத்தினை அரசுடைமை யாக்கி நினைவகம் ஆக்க அரசு முடிவு செய்து, நாமக்கல்லில் உள்ள கவிஞர் இராமலிங்கம்பிள்ளை வாழ்ந்த வீட்டை வாங்கி நினைவில்லமாக்கிட, நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவகம்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவாக, அவருடைய ஊரான பட்டுக்கோட்டையில் நினைவகம் ஒன்று நிறுவப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1993-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் அன்று அறிவித்தார்கள். அதன்படி பட்டுக்கோட்டையில் நினைவகம் அமைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளியிலுள்ள வ.வே. சுப்பிரமணியம் அவர்களின் நினைவு இல்லத்தைப் பழுது பார்க்கவும், மின்சாதனங்கள் பொருத்தவும் அரசு ரூ.1,25,000 அனுமதி அளித்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சர் பிட்டி தியாகராயர் நினைவிடம், வண்ணாரப்பேட்டை

"திராவிட இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரும், நீதிக் கட்சியில் முக்கிய அங்கம் வகித்தவருமான சர் பிட்டி தியாகராயர் அவர்களின் நினைவு இடம் சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைந்துள்ளது. அந்த நினைவு இடத்தை அரசு ஏற்றுக்கொண்டு அதைப் புதுப்பித்து, அரசு நினைவு இடமாக ஆக்க முடிவு செய்துள்ளது" என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற மானியக் கோரிக்கையின் மீது அறிவித்தார்கள். அதற்கிணங்க, சென்னை வண்ணாரப் பேட்டையில் உள்ள சர் பிட்டி தியாகராயர் அவர்களின் சமாதி அமைந்துள்ள இடத்தைக் கையகப்படுத்தி அரசு நினைவிடமாக ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு நினைவுத் தூண் நிறுவுதல்

"வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், கிண்டி காந்தி மண்டபத்தில் ஒரு நினைவுத்தூண் ரூ.3 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் 2.10.1993 அன்று திறந்து வைக்கப்பட்டது.

வள்ளுவர் கோட்டம், சென்னை

வள்ளுவர் கோட்டம் செப்பனிடும் பணிகளுக்கு ரூ.26.61 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வொதுக்கீட்டுத் தொகையில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில்

செயற்கை நீரூற்று மற்றும் புல்வெளி அமைக்கத் திட்ட மிடப்பட்டது. இதற்குப் பதிலாக ரூ.6.12 இலட்சத்தில் வெள்ளையடித்தல், வண்ணம் பூசுதல், புதுத் தொம்பைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நினைவகங்களைப் பராமரித்தல்

தற்பொழுது நினைவகங்களில் பழுதடைந்த விளக்குகளை மாற்றுதல், வெள்ளையடித்தல் போன்ற சில பழுதுபார்ப்புகள் பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுப்பணித்துறை பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டு இருப்பதால் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, மேற் சொன்ன பராமரிப்பு மற்றும் செப்பனிடும் பணிகளுக்காக ஒவ்வொரு நினைவகத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,000 ஒதுக்கப்படும். இத்தொகை செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களின் மேற்பார்வையின் கீழ், மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

மாவட்டங்களில் 15 நினைவகங்கள் உள்ளன. இந்த நினைவகங்களைப் பழுதுபார்க்கும் அவசியம் கருதி உடனடி பராமரிப்புத் தேவைப்படுகிறது. பல நினைவகங்களுக்காக ரூ.5 இலட்சம், செய்தி மற்றும் சுற்றுலாத்துறையிடம் அளிக்கப் படவுள்ளது. நினைவகங்களைப் பொலிவுடன் வைத்திருக்கும் வகையில் இன்றியமையாப் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ள ஆண்டுதோறும் மேற்படி ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்படும். 1994-95-க்கான நிதி ஆண்டில் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

இராஜாஜி மண்டபம் புதுப்பித்தல்

சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள இராஜாஜி மண்டபம் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1802) நிறுவப்பெற்றது. 192 ஆண்டுகளாகியும், இம்மண்டபம் தொன்மை வாய்ந்த இந்திய மற்றும் கிரேக்கக் கட்டடக் கலையின் உன்னதத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. புதிய அமைச்சரவைப் பதவியேற்பு விழா இங்கு நடப்பது தொடர்ந்து மரபாக இருந்து வருவதுடன், முக்கிய அரசு விழாக்களும் இம்மண்டபத்தில் நடைபெறாத நிலையில் மூடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொன்மையானதும், பிரம்மாண்டமானதுமான இராஜாஜி மண்டபத்தைப் பழுது நீக்கிப் பாதுகாக்க முடிவெடுக் கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

'தமிழரசு'

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படும், 'தமிழரசு' ஏடு அரசின் செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பதுடன், அரசின் கொள்கைகள், வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள், பல்வேறு துறைகளில் அரசின் சாதனைகள் ஆகியவற்றைப் பற்றி மக்களுக்கு விளக்கமளித்துத் தெளிவுபடுத்துகிறது. 'தமிழரசு' தமிழில் மாதம் இரு முறையும், ஆங்கிலத்தில் மாதம் ஒரு முறையும் வெளியிடப்படுகிறது. 'தமிழரசு' இதழில் வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி போன்ற பல்வேறு வளர்ச்சித் துறைகள் பற்றிய கட்டுரைகளும் மற்றும் புகழ்பெற்ற எழுத்தாளர்களும், அறிஞர்களும் எழுதும் பல்துறைக் கட்டுரை களும் வெளியிடப்படுகின்றன. மேலும் இரண்டு மாதங்களுக்கு ஒரு மாவட்டம் என்ற அடிப்படையில், மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, மாவட்டச் சிறப்பு மலர்கள் வெளியிடப்படு கின்றன.

'தமிழரசு' சிறப்பு வெளியீட்டுப் பிரிவின் கீழ், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பல்வேறு உரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, தமிழில் ''புரட்சித்தலைவியின் முழக்கம்'' என்றும், ஆங்கிலத்தில் ''Jayalalitha Speaks'' என்றும் ஒவ்வொன் றிலும் முறையே இரு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் தொகுதி-1 தமிழ் 13,500 பிரதிகளும், இதேபோன்று தொகுதி-2 தமிழ் 17,500 பிரதிகளும், ஆங்கிலம் தலா 3,000 பிரதிகளும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இப்பிரிவின் கீழ், தமிழ்நாடு அரசின் சாதனைகள் பற்றிய சிறப்பு வெளியீடுகளும் மற்றும் தலைவர்கள் பற்றிய கையேடுகளும் தொகுக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

தமிழரசு அலுவலகத்திற்குப் புதிய கணினிப் பொறி இயந்திரத்துடன் கூடிய அச்சுப்பொறி வாங்குதல்

'தமிழரசு' முகவர்கள் மற்றும் சந்தாதாரர்கள் முகவரிகளை நவீன முறையில் அச்சடிக்க கணினிப் பொறி ஒன்று வாங்கப்பட உள்ளது.

தமிழரசு அச்சகம்

'தமிழரசு' அச்சகத்தில் கீழ்க்காணும் இதழ்கள் அச்சிடப் படுகின்றன:

1. தமிழரசு (தமிழ்) .. மாதமிருமுறை
2. தமிழரசு (ஆங்கிலம்) .. மாதம் ஒருமுறை
3. திருக்கோயில் (தமிழ்) .. மாத இதழ்
 (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை)

மேலும், அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் விளக்கி, கையேடு, மடிப்பேடு, சுவரொட்டிகள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் அச்சிடப்படுகின்றன.

சென்ற மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கேற்ப ஒளி அச்சுக் கோர்வைப் பணியினைத் துரிதப்படுத்த ஒரு 'டெஸ்க் டாப் பப்ளிஷிங் சிஸ்டம்' இயந்திரம் ரூ.3.79 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு 'தமிழரசு' அச்சகத்தில் நிறுவப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம் 1947-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இந்தியாவிலேயே மாநில அரசால் நடத்தப்படும் ஒரே நிறுவனமாக விளங்குகிறது. இங்கே பயின்ற மாணவர்கள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் வேலையில் அமர்த்தப்பட்டு மிகுந்த புகழோடு விளங்குகிறார்கள். இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் இப்பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்காக வரும் விண்ணப்பங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. இங்கு மூன்றாண்டு டிப்ளமோ பயிற்சி 5 துறைகளிலும், ஓராண்டு நடிப்புப் பயிற்சியும் கற்றுத்தரப் படுகிறது. இவை வேலை வாய்ப்புத்தரும் பயிற்சிகளாகும்.

விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டு வரும் இக்காலத்தில், பாடத் திட்டங்களும் மாற வேண்டிய கட்டாயத்தால் இப்பயிற்சி நிலையப் பாடங்களும் மாற்றப்பட்டு, அதற்கான நவீனக் கருவிகளை வாங்கும் முயற்சிகள் ஆண்டுதோறும் தொடரப்பட்டு வருகின்றன.

நூல் நிலையத்தை நவீனப்படுத்துதல்

திரைப்படக் கல்லூரியிலுள்ள நூலகத்தில், அனைத்துப் பிரிவுகளைப் பற்றிய பழைய நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. வளர்ந்துவரும் விஞ்ஞான உலகில், நாள்தோறும் புதிய தொழில் நுட்ப வளர்ச்சியும், அதோடு புதிய புத்தகங்களும் வந்த வண்ணம் உள்ளன. எனவே, மாணவர் பயனுக்கு மேற்கூறிய புத்தகங்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது.

பகுதிநேர வகுப்புகள் துவக்கம்

வீடியோ தொழிலில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ளவர்கள், பகுதிநேரப் படிப்பாக, வீடியோ தொழில் நுட்ப வகுப்புகள் துவக்கக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதற்கேற்ப, நடப்பாண்டில், சுயநிதி அடிப்படையில் பகுதி நேர வகுப்புகள் துவக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

செய்தி மலர் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, மாநிலம் முழுவதிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், சிறப்பாக, தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களையும் படமாக்கி வருகிறது. அவ்வாறு எடுக்கப்பட்ட படத்தினைத் தொகுத்து மாதம் ஒருமுறை, பத்து நிமிடம் ஓடக்கூடிய செய்தி மலர் வெளியிடுகிறது. 1986-ஆம் ஆண்டு முதல் செய்தி மலர்கள் வண்ணத்தில் எடுக்கப்பட்டு, அதன் 149 பிரதிகள் மத்திய அரசு திரைப்படப்பிரிவு மூலம், மாநிலம் முழுவதிலும் உள்ள சுமார் 2800 திரையரங்குகளில் திரையிடப்படுகின்றன. இப் பிரதிகள் அனைத்துத் திரையரங்கு களையும் சுற்றி வருவதற்குச் சுமார் 4 முதல் 6 மாதம் வரை ஆகிறது.

16 மி.மீ. பிரதிகள்

முன்னதாக ஒவ்வொரு செய்தி மலரிலும் 16 மி.மீ. பிரதிகள் எடுத்து, மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது. 16 மி.மீ. பிரதிகள் வழங்குவது அக்டோபர் 90 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டசபை யில் 16 மி.மீ. படங்கள் மீண்டும் தயாரித்து வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டத் திற்கும் ஒவ்வொரு செய்தி மலரிலும் இரண்டு 16 மி.மீ. பிரதிகள் அனுப்பும்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.7.73 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு 16 எம்.எம். செய்தி மலர் தமிழ்நாடு திரைப்படப்பிரிவால் தயாரிக் கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் திரையிடப்பட்டு வருகிறது. இதன் விளைவாக, கள விளம்பரம் மேலும் சிறப்பாக நடைபெறும். வழக்கம்போல் செய்தி மலர்களின் வி.எச்.எஸ். பிரதிகளும் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும்.

விளக்கப்படத் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மக்கள் பயனடையக்கூடிய வகையில், குடும்ப நலம், சமூகக் காடுகள், வேளாண்மை, சுகாதாரம், வனப்பாதுகாப்பு, கூட்டுறவு குறித்து, விளக்கப் படங்களும் தயாரித்து வருகிறது. விளக்கப்படங்களிலும் சம்பந்தப்பட்ட துறை அளிக்கும் நிதிக்கு ஏற்றாற்போல் 35 மி.மீ. மற்றும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்படுகின்றன. செய்தி

மலர்கள் போலவே விளக்கப் படங்களும் மத்திய அரசு திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடப்படுகின்றன. விளக்கப் படம் தயாரிப்புக்காக, அரசு, தொழில்நுட்ப வல்லுநர்கள்/ கலைஞர்கள்/தனியார் தயாரிப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்றை அங்கீகரித்துள்ளது. தமிழ்நாடு திரைப்படப்பிரிவு இதுவரை 115 விளக்கப் படங்கள் தயாரித்து வெளியிட்டுள்ளது.

ஒளிநாடாச் செய்தி மலர்கள்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் ஒளிநாடாப் பிரிவு, ஒளிநாடாச் செய்தி மலர்களை 1989-ஆம் ஆண்டு முதல் தயாரிக்கத் தொடங்கியது. 60 முதல் 90 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த மலர்களில், அரசின் நல்வாழ்வுத் திட்டங்களைப் பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சிறுகதைகள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைக் காட்சிகள் மூலமாக மிகவும் சுவையாகத் தயாரித்து வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஒளி நாடாச் செய்தி மலரிலும் 250 வி.எச்.எஸ். பிரதிகள் எடுக்கப் பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கள விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது. மேலும், இந்த மலர்கள் மாவட்டங்களில் 10 ஒளிநாடா ஊர்திகளின் மூலமாகவும் திரையிடப்படுகிறது. தமிழ்நாடு திரைப்படப்பிரிவு இதுவரை 11/11ஏ வரை மலர்கள் தயாரித்துள்ளது.

ஒளிநாடா விளக்கப் படங்கள்

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு குடும்பநலம், உடல் நலம், காடு வளர்ப்பு, சிறு சேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்துத் தடுப்பு போன்ற தலைப்புகளில் 150 ஒளிநாடா விளக்கப்படங்கள் தயாரித்துள்ளது.

சம்பந்தப்பட்ட துறையின் ஒத்துழைப்போடு அத்துறையின் தேவைக்கேற்பப் படமாக்கித் தரப்படுகிறது. சில சமயங்களில் பிரபல திரைப்பட நடிக நடிகையரும் படத்தில் தோன்றி, சில செய்திகளை விளக்குகிறார்கள். தற்சமயம் சுமார் 25 ஒளிநாடா விளக்கப்படங்கள் தயாரிப்பில் உள்ளன.

அரசுத் துறைகள்/நிறுவனங்கள் இரண்டு நோக்கத்துடன் விளக்கப் படங்கள் தயாரிக்க முற்படுகின்றன. முதலாவதாக, அத்துறையின் கள விளம்பரப் பணிக்காக விளக்கப்படங்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். இரண்டாவதாக, தொலைக்காட்சியில் ஒளிபரப்பவும், தயாரிக்க விரும்பு கிறார்கள். பல விளக்கப்படங்கள் சென்னைத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு வி.எச்.எஸ். ஒளிநாடாவில் பிரதிகளும் எடுத்து விநியோகம் செய்கிறது. பிரதிகள் எடுக்கும் வேலையை மத்திய அரசின் நிறுவனமான என்.எப்.டி.சி. மேற்கொள்கிறது.

1994 ஏப்ரல் 29]

ஒளிநாடாச் செய்தி மலர்கள் படப்பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை ஒலி நாடாவில் படமாக்குகிறது. இவை ஒளிநாடாச் செய்தி மலர் தயாரிப்புக்குப் பயன்படுவது போக, சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தினருக்குத் தருவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதுவரை சுமார் 1500 நிகழ்ச்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. அரசின் சாதனைகள், மக்கள் நலப்பணிகள், திட்டங்கள், முக்கிய அரசு நிகழ்ச்சிகள் ஆகியவற்றைச் செய்தி மலர்களாகவும், வீடியோ கருத்து விளக்கப்படங்களாகவும், வீடியோ செய்தி மலர்களாகவும் மற்றும் செய்திப் படங்களாகவும் தயாரித்து வெளியிட்டு வரும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு அதனுடைய பணியை இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதற்காக, ரூ.50 இலட்சம் செலவில் நவீன வீடியோ கருவிகள் வாங்கி வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு அறிவித் தார்கள். அதன்படி திரைப்படப் பிரிவிற்கு நவீன வீடியோ கருவிகள் வாங்குவதற்காக ரூ.56.27 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி நவீன வீடியோ கருவிகள் மிக விரைவில் வாங்கப்படவுள்ளன. இக்கருவிகள் வாங்குவதன் மூலம் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, அதிகப் படங்களைச் சிறந்த முறையில் தயாரிக்க இயலும். இக்கருவிகள் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்குத் தருவதன் மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

சிறப்புத் தயாரிப்புகள்

கடந்த ஆண்டு முதல், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு அரசுக்கு வருமானம் கிடைக்கும் வகையில் வணிக நோக்கத்துடன் சில தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்யப் பட்டது. அதன்படி 1993-94-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட திரைப்பட விருதுகள் விழா நிகழ்ச்சியினை விளம்பரதாரர் மூலம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பியதில் அரசுக்கு ரூ.3 இலட்சம் வருமானம் கிடைத்தது. 1993-94-ஆம் ஆண்டில் இதுபோன்ற பல தயாரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாகப் பல ஒளிநாடா விளக்கப்படங்கள், சர்வதேசத் தடகளப் போட்டிகளின் சிறப்பு ஒளிப்பதிவு, சி.சி.டி.வி. (Closed Circuit Television) அமைத்தல், மழைச்சேதம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர், பாரதப் பிரதமரிடம் வழங்குவதற் காக ஒரே நாளில் தயாரிக்கப்பட்ட ஒளிநாடா நிகழ்ச்சி, இதன் மூலம் 1993-94-ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ.5,71,200 வருமானமாகக் கிடைத்தது. 1993-94-ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூ.9,71,200 ஆகும்.

பிப்ரவரி 94-இல் நடைபெற்ற சர்வதேசத் தடகளப் போட்டிகளையும், அதன் துவக்க விழாவினையும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மிகச் சிறந்த முறையில் 15 கேமராக்களைப் பயன்படுத்தி 64 மணிநேரம் ஓடக்கூடிய அளவுக்குப் பதிவு செய்தது. இப்போட்டிகளை விளம்பரப்படுத்தும் வகையில் சிறந்த முறையில் சிறிய ஒளிநாடா விளம்பரங்களை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்தது. இந்த விளம்பரங்கள் சென்னைத் தொலைக்காட்சி மற்றும் செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பப்பட்டன. செயற்கைக்கோள் மூலம் ஒலிபரப்பியதன் விளைவாகச் சுமார் 34 நாடுகளில் உள்ள மக்கள் இந்த விளம்பரத்தைக் காண இயன்றது. தொடக்க விழா நிகழ்ச்சிகளையும், தடகளப் போட்டிகளையும் 15 கேமராக்கள் மூலம் 64 மணி நேரம் ஓடக்கூடிய அளவுக்குப் பதிவு செய்யப்பட்டதை மிகவும் சிறந்த முறையில் தொகுத்து சிறப்புக் காட்சிகளுடன் (Special Effects) 4 நிகழ்ச்சிகளாக (இரண்டு 30 நிமிடம் மற்றும் இரண்டு 60 நிமிடம் நிகழ்ச்சிகள்) தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகள், ஏற்கெனவே ஜீ-டி.வி. (Zee T.V.) என்ற நிறுவனத்தாரால் செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பப்பட்டது. வருகின்ற நாட்களிலும் இதுபோன்று சிறப்புத் தயாரிப்புகள், தமிழ்நாடு திரைப்படப் பிரிவால் மேற்கொள்ளப்படுவதன் மூலம், தமிழ் நாட்டின் இதுபோன்ற முக்கியச் செய்திகள் உலகின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறந்த தமிழ்த்திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம்

சிறந்த தமிழ்த்திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை 1968-ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. விருதுக்குரிய சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களைத் தெரிவு செய்வதற்கென ஒரு குழுவை ஒவ்வொரு ஆண்டும் அரசு ஏற்படுத்துகிறது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி நல்ல திரைப்படங்கள் மூன்றிற்குப் பரிசுகளும், சிறப்புப் பரிசு ஒன்றும் ஆக நான்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1992-ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுத் தொகையை அரசு பின்வருமாறு வழங்கியுள்ளது:

சிறந்த தமிழ்த் திரைப்படம்

1. முதல் பரிசு .. ரூ.1,25,000 மற்றும் கேடயம்
2. இரண்டாவது பரிசு .. ரூ.75,000 மற்றும் கேடயம்
3. மூன்றாவது பரிசு .. ரூ.50,000 மற்றும் கேடயம்
4. சிறப்புப் பரிசு .. ரூ.50,000 மற்றும் கேடயம்

1992-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்குவதற்காக 4 சிறந்த தமிழ்த்திரைப்படங்களும் 17 நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களும் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசும் வழங்கப் படுகிறது.

கலைத்துறை வித்தர்களுக்கான விருதுகள்

அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர் ஆகியோரின் பெயரால் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இவ்வித்தகர் விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 1992-ஆம் ஆண்டுக்கு 13 கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

ஜெயலலிதா விருது

திரைப்படத்துறைக்கு ஊக்கமளித்து வருபவரும் கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் திரைப்படத்துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருபவருமான மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரால் ''ஜெயலலிதா விருது'' எனும் சிறப்பு விருது சென்ற ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. திரைப்படத்துறையில் நீண்டகாலம் சிறந்த முறையில் தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு அவர்களின் சேவையைப் பாராட்டி இவ்விருது வழங்கப்படுகிறது. 1992-ஆம் ஆண்டுக்கான ''ஜெயலலிதா விருது'' மூவருக்கு வழங்கப்பட்டது.

1992-ஆம் ஆண்டிற்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

1992-ஆம் ஆண்டிற்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 18.1.1994 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறந்த 4 தமிழ்த் திரைப்படங்களுக்கும், 17 நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் மற்றும் 13 கலை வித்தகர்களுக்கும் திரைப்பட விருதுகளை வழங்கினார்.

இவ்விழா நிகழ்ச்சிகள் 6.3.1994 மற்றும் 13.3.1994 ஆகிய இரு நாட்களிலும் காலை 8.30 மணிக்கு சென்னைத் தொலைக்காட்சியில் முதல் அலைவரிசையில் விளம்பரதாரர் வழங்கும் நிகழ்ச்சிகளுக்காக ஒளிபரப்பப்பட்டன. இதன் மூலம் அரசுக்கு ரூ.2.01 இலட்சம் லாபம் கிடைத்துள்ளது.

தமிழ்த் திரைப்படங்களுக்கு உதவித் தொகை (Subsidy) வழங்கும் திட்டம்

குறைந்த செலவில் சமுதாய நோக்குடன் கூடிய நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்கு விக்கும் நோக்குடன் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆதரவு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசால் அமைக்கப் படும் தேர்வுக்குழு, தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்து உதவித் தொகை வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி இந்த ஆண்டு முதல், ஒரு திரைப்படத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் 75 திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரைப்படப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தை

தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில் ஆயிரக் கணக்கானவர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. திரைப்பட விநியோகஸ் தர்கள், திரையீட்டாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகி யோர்களுக்கிடையே 1993-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சினை, திரைப்படத் தொழில் முழுவதையுமே ஸ்தம்பிக்கச் செய்ததுடன், தொழிலாளர்களின் பிழைப்புக்கும் பேரிடர் ஏற்படுத்தியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப் பிரச்சினையில் நேரிடையாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் 1993-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ஆம் நாளன்று ஆறு மணி நேரத்திற்குத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, 14 அம்சத் திட்டங்களை அறிவித்து, சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைத்துத் திரைப்படத் தொழிலை மீண்டும் 'தொடங்குவதற்கு உறுதுணையாகத் திகழ்ந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தை யின் பயனாக, கீழ்க்காணும் சலுகைகள் திரைப்படத் துறைக்கு வழங்கப்பட்டன.

திரைப்படத் துறையினருக்கான சலுகைகள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பின் அடிப்படை யில் தரமான திரைப்படங்களுக்கான உதவித் தொகை (Subsidy)

வழங்கும் திட்டத்தில் சீரிய மாறுதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு 12 முதல் 30 பிரதிகள் எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப்படங்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் முன்பு உதவி பெறத் தகுதியுடையன வாக இருந்தன. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, இந்த நிபந்தனையை இந்த அரசு தளர்த்தி 6 முதல் 30 வரை பிரதிகள் எடுக்கப்பட்டு வெளியிடப் படும் திரைப்படங்கள் தகுதியுடையவை என ஆணையிடப்பட்டு உள்ளது. உதவித்தொகையை 1992-ஆம் ஆண்டு முதல் ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக 50 படங்களுக்கு உயர்த்தி வழங்க முடிவு செய்து, இதற்கென ரூ.1.50 கோடியை இந்த அரசு ஒதுக்கியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உதவித்தொகை பெறும் திரைப்படங்களின் எண்ணிக்கை 50-லிருந்து 75-ஆக மேலும் உயர்த்தப்பட்டு இதற்கென ரூ.2.25 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.

திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் குழந்தைகளுக்குச் சலுகைகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திரைப்படத்துறையைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்காக, தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு பட்டயப் பயிற்சிப் பிரிவிலும்(Diploma Course) தனியாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நடிப்புப் பயிற்சிப் பிரிவிலும் மாணவர்களுக்கு ஒரு இடமும், மாணவியர்க்கு ஒரு இடமும் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் இவர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System)

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த முன்பு படத் தயாரிப்பாளர்கள் அரசின் பல்வேறு துறைகளுக்குச் சென்று தடையில்லாச் சான்றிதழ் பெற்று அனுமதி பெற வேண்டி இருந்தது. இது படத் தயாரிப்பாளர்களுக்குப் பெரும் சிரமமாய் இருந்தது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தடையில்லாச் சான்றிதழ் இன்றி, அரசுக்குச் சொந்தமான அனைத்து இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்க ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டம் திரைப்பட உலகினரால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

மாநில மேல்முறையீட்டு உயர்மட்டக்குழு
(State Appellate Committee)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21.6.1993 அன்று திரைப்படப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையின்போது திரைப்படத் தொழில் தொடர்பான தகராறுகளை அவ்வப்போது தீர்த்துவைக்க, மாவட்டக் குழுக்கள் மற்றும் மாநில மேல் முறையீட்டு உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையீட்டாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய குழு அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்டக் குழுக்களால் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குச் செய்தி சுற்றுலாத்துறையின் செயலர் தலைமையில் படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையீட்டாளர்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாநில அளவிலான மாநில மேல்முறையீட்டு உயர் மட்டக் குழு (State Appellate Committee) ஒன்று அமைக்க முடிவு செய்து அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டக் குழுக்கள் உயர்மட்டக் குழுவிற்கு மேல்முறையீடு செய்யும்போது மாநில மேல் முறையீட்டு உயர்மட்டக்குழு பிரச்சினையைத் தீர்த்து வைக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, வீடியோ திருட்டைத் தடுக்க, காவல்துறையில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

திரைப்பட நகரம்

தமிழ்நாடு அரசு ரூ.14.93 கோடி செலவில் தரமணியில் திரைப்படப் படப்பிடிப்பிற்குத் தேவையான உட்புற மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பு அமைப்புகளைக் கொண்ட ஒரு திரைப்பட நகரை உருவாக்குகிறது. இத்திரைப்பட நகரில் உட்புறப் படப்பிடிப்பு அமைப்புகளாகக் குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு நிலையம், நீதி மன்றம், காவல் நிலையம் முதலியனவும், வெளிப்புறப் படப்பிடிப்பு அமைப்புகளாகக் கிராமியச்சூழல், நகர்ப்புறம், கோவில் மற்றும் மொகலாயத் தோட்டம், இத்தாலியத் தோட்டம், ஜப்பானியத் தோட்டம், இங்கிலாந்து புல்வெளிகள் போன்றவைகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவை தவிர, குழந்தைகளின் பொழுது போக்குக்காகக் கணினி மூலம் இயங்கும் படம், ராட்டினம், டோரா-டோரா, குதிக்கும் பலூன் ஆகியவை கூடுதல் அம்சமாக அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு குளிர்சாதனத்துடன் கூடிய ஒரு முன்னோட்டக் காட்சித் திரையரங்கும் மற்றும் ஒரு திறந்தவெளித் திரையரங்கும் மேற் கூறிய திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இது தவிர, திரைப்படத் துறையினரின் பொழுதுபோக்கிற்காக, குளிர்சாதன வசதியுடன் கூடிய குடியிருப்புகள், நீருக்கடியில் படப்பிடிப்பு செய்வதற்குரிய நீச்சல் குளம், உணவு விடுதி மற்றும் வெளிப்புற விளையாட்டு வசதிகளுடன் கூடிய ஒரு பொழுதுபோக்குச் சங்கமும் ஏற்படுத் தப்பட்டிருக்கின்றன.

திரைப்பட மற்றும் வீடியோ சம்பந்தப்பட்ட மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் திரைப்பட ஆவணக் காப்பகம், வீடியோ நூலகம் மற்றும் நூல் நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அரசு இத்திட்டத்திற்கு ரூ.14.93 கோடியில் ஒப்புதல் வழங் கியதுடன் முதற்கட்டப் பணிகளுக்காக ரூ.3.93 கோடியையும் வழங்கியது. மேலும், இத்திட்டத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டப் பணிகளுக்காக, தேவையான நிதியுதவியைப் பெற்று முடிக்கும் பணியை முன்பு தமிழ்நாடு திரையரங்குக் கழகமாக இருந்து, இப்பொழுது தமிழ்நாடு திரைப்பட மேம் பாட்டுக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட நிறுவனத் திடம் அரசு ஒப்படைத்துள்ளது.

85 சதவீதத்திற்கு மேல் கட்டுமானப் பணிகள் மற்றும் தொடர்புடைய பணிகள் முடிவடைந்து விரைவில் திறப்பு விழா நடைபெறும் நிலையில் இருக்கிறது. இந்தியாவிலேயே முன் னோடித் திட்டமான இத்தகைய திரைப்பட நகரம் விரைவில் ஆரம்பிக்கப்படுவதை இந்தியாவில் மட்டுமல்லாமல், அகில உலகச் சினிமா மற்றும் வீடியோத் துறையைச் சேர்ந்தவர்கள் ஆவலாக எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

மேற்கோள் பிரிவை நவீனப்படுத்த 'மைக்ரோ பிலிம் பிரிவு'

உடனடி மேற்கோளுக்காகச் செய்தித் தாள்களைத் தொகுத்து அட்டையிட்டுக் காக்கின்ற முறை இக்காலத்திற்கு ஒவ்வாத தாகவும், கால விரயத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்ததால், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இப்பிரிவை நவீனப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக 16 இலட்சம் ரூபாய் செலவில் கேமரா, பிராசசர் மற்றும் ரீடர் பிரிண்டர் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமை யான மைக்ரோ பிலிம் சாதனம் வாங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1993-94-ஆம் ஆண்டிற்கான செய்தி சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையின் மீது ஆற்றிய உரையில்

அறிவித்தார்கள். அதற்கிணங்க, மேற்கோள் பிரிவிற்காக ரூ.16 இலட்சம் செலவில் மைக்ரோ பிலிம் கருவிகள் நிறுவப்பட்டு, பல்வேறு செய்தித்தாள் சுவடிகள், பருவ இதழ்கள் மற்றும் பிற முக்கியச் செய்திக் குறிப்புகளை நுண்படம் எடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

செய்தி வெளியீட்டுப் பிரிவு

அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் ஆகியவற்றை விளக்கும் செய்தி வெளியீடுகள் இத்துறையால் வெளியிடப் படுகின்றன. மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் அறிக்கைகளையும் அவ்வப்போது வெளியிட்டு மக்களுக்கு அறியச் செய்வதில் இத்துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு பெரும் பங்கு வகிக்கின்றது. சென்னை (தலைமைச் செயலகம்), மதுரை, திருச்சி, மற்றும் கோயம்புத்தூர் மக்கள் தொடர்பு அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள 'பேக்ஸ்' கருவிகள் மூலம் செய்திகள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. மாவட்டங் களிலிருந்தும் முக்கியச் செய்திகள் 'பேக்ஸ்' மூலம் பெறப்பட்டு நாளிதழ்களுக்கு அனுப்பப்படுகின்றன.

பத்திரிகையாளர் சுற்றுப்பயணத்தையும், பத்திரிகையாளர் சந்திப்பினையும் இப்பிரிவு அவ்வப்பொழுது ஏற்பாடு செய்து வருகிறது. அரசு அங்கீகார அட்டை சுமார் 250 பத்திரிகை யாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு இலவச பஸ் பாஸ், 50 சதவிகித இரயில்வே கட்டணச் சலுகை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்புகள் மற்றும் மாதாந்தரத் தவணைத் திட்டத்தில் வீடுகள் வாங்குதல் ஆகிய வற்றில் முன்னுரிமை, வீட்டிற்குத் தொலைபேசி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டுவசதி

சென்னைப் பத்திரிகையாளர்கள் சொந்த வீடு கட்டிக் கொள்ள ஏதுவாக, கொட்டிவாக்கத்தில் வீட்டுவசதி வாரியத் திற்குச் சொந்தமான 5.5 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. அதற்காக ரூ.20 இலட்சம் அரசு மானியமாக வும் வழங்கப்பட்டது.

21.2.1994 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் குடியிருப் பிற்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்கள் வீடு கட்டிக் கொள்வ தற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு சதுர அடிக்கு ரூ.50 வீதம் அதிகபட்சமாக ரூ.40,000 வரை மானியமாக அறிவித்தார்கள்.

1994 ஏப்ரல் 29]

இதனால் 136 பத்திரிகையாளர்கள் பயனடைவார்கள். அரசுக்குச் சுமார் ரூ.50 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புகைப்படங்கள் வெளியிடுதல்

இத்துறையின் புகைப்படப் பிரிவானது விலையுயர்ந்த நவீன புகைப்படக் கருவிகள் மூலம் தமிழ்நாடு அரசின் சாதனைகள், நலத் திட்டங்கள் மற்றும் அரசின் பல்வேறு முக்கிய நிகழ்ச்சி களையும் படமெடுத்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகிறது. மாவட்டங்களிலுள்ள மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக வும், புகைப்படங்கள், மாவட்டங்களிலுள்ள பத்திரிகைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

புகைப்படக் கருவிகள் வழங்கப்படாத மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ஒன்பது புதிய 35 மி.மீ. காமிராக்கள் வாங்க உத்தேசித்து 1994-95-ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் ஓய்வூதியம்

1967-ஆம் ஆண்டு முதல் இத்துறை, பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. பத்திரிகைத் துறையில் இருந்து ஓய்வுபெற்று, மிகவும் ஏழ்மையான நிலை யிலுள்ள நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் பட்டு வருகிறது. பத்திரிகையாளர் ஓய்வூதியம் இவ்வரசால் 1992 ஏப்ரல் மாதம் ரூ.400-லிருந்து ரூ.500-ஆக உயர்த்தப்பட்டது. தற்பொழுது 37 ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

புது டில்லியில் செய்தி நிலையம்

தற்போது சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் செய்தி நிலையங்கள் செயல் பட்டு வருகின்றன. அரசின் நலத்திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து, பொதுமக்களுக்குச் செய்தி நிலையங்கள் எடுத்துரைக் கின்றன. செய்தி நிலையங்களிலுள்ள நூலகங்களை ஆய்வாளர் களும், மாணவர்களும் பொதுமக்களும் பயன்படுத்தி வரு கின்றனர்.

விரைவில் புது டில்லியில் துவக்கப்படவுள்ள செய்தி நிலையம், டெல்லியில் உள்ள செய்தித் தாள்கள் வாயிலாகவும்; மற்ற மக்கள் தொடர்புச் சாதனங்களின் மூலமாகவும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப் படுத்த மிகவும் உதவியாக இருக்கும். மேலும், இச்செய்தி நிலைய மானது தமிழ்நாட்டில் உள்ள கலை, பண்பாடு மற்றும் சுற்றுலா மையங்கள் விடுமுறைக் கால ஓய்விடங்கள் ஆகியவைகளைப்

பற்றிய தகவல்களை முழுமையாக வழங்குவதன் மூலமாகவும், டெல்லியில் தமிழ் மாநிலத்தைப் பற்றிச் செவ்வனே அறிந்து கொண்டு நல்லதொரு கணிப்பை ஏற்படுத்த ஏதுவாக இருக்கும். தவிரவும், தமிழ்நாடு பற்றிய முக்கியச் செய்திகளை டெல்லி யிலுள்ள செய்தியாளர்கள் வேறு வழிகளில் பெற ஏற்படுகின்ற கால தாமதத்தைத் தவிர்க்கின்ற வகையில், இச் செய்தி நிலையம் உடனுக்குடன் செய்திகளை நேரடியாக வழங்குகின்ற மைய மாகவும் விளங்கும்.

மாநிலச் செய்தி நிலையப் பணிகளை மேம்படுத்துதல்

சென்னையில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தின் முக்கியப் பணி மக்களுக்குத் தேவையான விவரங்களைத் தெரி விப்பதாகும்.

இந்நிலையம் மக்களுக்கான செய்தித் தொடர்பு மையமாக மட்டுமின்றி, பத்திரிகையாளர், உரை எழுதும் ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோர்க்கும் உரிய விவரங்களைத் தந்து உதவுகிறது.

இம்மையத்தில் அமைந்துள்ள நூலகத்தில் 15,000 நூல்கள் உள்ளன. இதில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, சரித்திரம் மற்றும் கலை இலக்கியம் தொடர்பான நூல்கள் அடங்கும். இங்கு பல்வேறு பருவ வெளியீடுகளும், நாளிதழ்களும் மக்களின் பயனுக்காக வைக்கப்பட்டுள்ளன.

இம் மையத்தில் படச்சுருள் நூலகமும் உள்ளது. இங்கு கல்வி மற்றும் தகவல் தொடர்பான 500-க்கும் மேற்பட்ட 16 மி.மீ. படச்சுருள்கள் உள்ளன. நாள்தோறும் இங்கு அமைந்துள்ள அரங்கத்தில் குழந்தைகளுக்கான படக்காட்சிகள் நடத்தப் படுகின்றன. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் கோரும்போதும், இந்நிலையத்தின் மூலம் படக்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

மாநிலச் செய்தி நிலையத்தின் பழுதுகளைச் சரிசெய்யவும், புதிய 16 எம்.எம். திரைப்படங்களையும், புதிய படக்கருவி களையும் மற்றும் புதிய புத்தகங்களையும் வாங்க தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது.

விளம்பரங்கள்

மாநில அரசின் அனைத்துத் துறைகள், அரசின் பொறுப் பிலுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாக, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயங்கி வருகின்றது. அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின் கீழ் சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கும் விளம்பரங்களை அளிப்பதன் மூலம் அவை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அரசின் நலத்திட்டங்களைப் பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக விளக்கும் பல்துறைப் பணி விளக்க முகாம்கள்:

அரசின் வளர்ச்சிப் பணிகள், அவற்றால மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் ஆகியவற்றையும், அரசின் சாதனை களையும் மக்கள் அறியவும், அதன் பயனைத் துய்க்கவும் பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் திட்ட மிட்டுச் செயலாக்குவதுதான் பல்துறைப்பணி விளக்க முகாம் களின் நோக்கமாகும். இப்பணியில் மத்திய, மாநில அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறைகள் (மக்கள் தொடர்புச் சாதனங்கள்) சிறப்பாகப் பங்கேற்கின்றன.

அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகள், சாதனைகளைக் கிராம மக்களும் அறிந்து பயனடையும் வகையில் இந்தப் பல் துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்களின் பல்வேறு விளம்பர முறைகள், மரபு வழி பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் வாயிலா கவும் அரசின் நலத்திட்டங்கள் விளக்கப்படுவதோடு மட்டுமின்றி, மக்கள் வசிக்கும் இடங்களிலேயே ஒரே நேரத்தில் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் உதவிகளும் வழங்கப்படுகின்றன. மேலும், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்பநலத்திட்டம், சிறு சேமிப்பு, சட்டம் ஒழுங்கு, வரதட்சணை ஒழிப்பு, பெண் கல்வி, வயது வந்தோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல், போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தல் பற்றிய கலந்துரையாடல்கள், கவி யரங்கங்கள், கலை நிகழ்ச்சிகள் முதலியனவும் இந்த முகாம்களில் நடத்தப்படுகின்றன.

இத்தகைய பல்துறைப் பணி விளக்க முகாம்கள், இராமநாத புரம் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் நடத்தப்பட வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றுகையில் தெரிவித் தார்கள். அதன்படி 3.3.1994 முதல் 9.3.1994 வரை சிதம்பரனார் மாவட்டத்திலும், 12.3.1994 முதல் 18.3.1994 வரை இராமநாதபுரம் மாவட்டத்திலும், பல்துறைப் பணி விளக்க முகாம்கள் சிறப்பாக நடைபெற்றன. சிதம்பரனார் மாவட்டத்தில் நடைபெற்ற பல்துறைப் பணி விளக்க முகாமில், மாவட்டத் திலுள்ள 401 ஊராட்சிகளிலும், 20 பேரூராட்சிப் பகுதி களிலும், இரண்டு நகராட்சிப் பகுதிகளிலும் பல்வேறு துறை களின் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்டம் முழுவதுமான அனைத்துப் பகுதி மக்களும் அரசின் திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கான வாய்ப் பினை இம்முகாம் ஏற்படுத்தியது.

இதே போன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 444 ஊராட்சிக் கிராமங்களிலும், 8 பேரூராட்சிப் பகுதிகளிலும், இரண்டு நகராட்சிப் பகுதிகளிலும் பல்வேறு துறைகளின் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்டம் முழுவது மான அனைத்துப் பகுதி மக்களும் அரசின் திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கான வாய்ப் பினை இம்முகாம் ஏற்படுத்தியது.

சிதம்பரனார் மாவட்டத்தில் 300 கிராமங்களில் அரசு சாதனைகளை விளக்கும் வீடியோ மற்றும் திரைப்படக் காட்சி களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 250 கிராமங்களிலும் நடத்தப்பட்டன.

பல்சுவைக் கலைநிகழ்ச்சிகளின் மூலம் அரசின் திட்டப் பிரச்சாரப் பணிகள் சிதம்பரனார் மாவட்டத்தில் 125 கிராமங் களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 105 கிராமங்களிலும் நடத்தப்பட்டன.

இம்முகாம்களின்போது குழந்தைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார் களுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குதல், கால்நடைகளுக்கு மருத்துவம், இலவசக் கண் பரிசோதனை, மகளிர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல், மரக்கன்றுகள் வழங்குதல், குடும்ப நலம், சிறுசேமிப்பு பற்றி தக்க ஆலோசனைகள் வழங் குதல் போன்ற பல்வேறு நலத்திட்டப் பணிகள் கிராமப் பகுதி களில் மேற்கொள்ளப்பட்டன.

தூத்துக்குடியில் பல்துறைப்பணி விளக்கப் பொருட்காட்சி ஒன்றும் இராமநாதபுரத்தில் ஒன்றும் அமைக்கப்பட்டு 7 நாட் களிலும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், துறை விளக்கக் கூட் டங்கள் நடத்தப்பட்டன. தூத்துக்குடிப் பொருட்காட்சியில் 37 அரங்குகளும், இராமநாதபுரம் பொருட்காட்சியில் 28 அரங்குகளும் இடம் பெற்றிருந்தன; பெருவாரியான மக்கள் இப் பொருட்காட்சியினைப் பார்வையிட்டுப் பயன் பெற்றுள்ளனர்.

இப்பல்துறைப் பணிவிளக்க முகாம்கள், பெருவாரியான மக்கள் பயன்பெறும் வகையில் திகழ்வதால், இந்த ஆண்டு நான்கு மாவட்டங்களில் நடத்தப்படும்.

1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) விதிகள்

திரைப்படம் தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு, குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கும் மற்றும் நடுத்தர மக்களுக்கும்

பொழுதுபோக்குச் சாதனமாக விளங்குவதோடு மட்டு மல்லாமல், ஊராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும், அரசுக்கும் வருவாய் அளிக்கும் சாதனமாகவும் விளங்குகிறது. திரையரங்கு களுக்குச் செல்லும் மக்களுக்குத் தேவையான வசதிகளையும், பாதுகாப்பையும் அளிப்பதில் அரசு மிகக் கவனமாகவும், கண்டிப் பாகவும் இருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 2,485 திரை அரங்குகள் உள்ளன. இவற்றில் 1,454 நிரந்தரத் திரையரங்குகளும், 221 அரை நிரந்தரத் திரையரங்குகளும், 797 நடமாடும் திரையரங் குகள் மற்றும் 13 திறந்த வெளித் திரையரங்குகளும் ஆகும்.

கேபிள் டி.வி. அமைப்பு (கம்பிவழித் தொலைக்காட்சி அமைப்பு)

தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றத் தின் காரணமாக 'கேபிள் டி.வி.' தோன்றியுள்ளது. 'கேபிள் டி.வி. இயக்குபவர்கள், தங்களுடைய வாடிக்கையாளர்களுக்குக் கேபிள் வழியாக அவரவர் வீடுகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளை இணைத்து, திரைப்படங்களைக் கண்டு களிக்கும் வகையில் திரைப்படங்களைக் காட்டுகின்றனர். முதலில் இந்த இணைப்பு முறை, தொலைத்தொடர்புத் துறையிலிருந்து பெற்ற ஓர் உரிமத்தின் பேரில் டிஷ் ஆண்டனா மூலமாக இயங்கி வந்தது. தற்போது அதே போன்ற இணைப்பு முறை இல்லா மலும் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெச் கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைச் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் கேபிள் டி.வி அமைப்பு முறையை நெறிப்படுத்த எவ்வித விதிகளும் இல்லை. எனவே, கேபிள் டி.வி. மூலமாகத் திரைப்படம் காட்டுவதை, உரிமம் வழங்கி முறைப்படுத்த தமிழ்நாடு 1991-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித்திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டம் ஒன்றினை, தமிழ்நாடு அரசு இயற்றியது. இச்சட்டம், 11.11.1991 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு வீடியோ கேசட்டு ரெக்கார்டர்கள் மூலம் தொலைக் காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்தல்) விதிகள் 1984-க்கும் தேவையான திருத்தங்களும் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம் கேபிள் டி.வி. அமைப்பு, உரிமம் வழங்கும் முறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரும், சென்னை நகரத்தில் காவல் துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரம் உடையவர்கள் ஆவார்கள்.

கேபிள் டி.வி. அமைப்பு முறை டிஷ் ஆண்டனா உதவியுடன் இயக்கப்படுவதற்குத் தொலைத் தொடர்புத்துறையின் அனுமதியும் பெறப்பட வேண்டும். இம்மாநிலத்தில் உரிமம் வழங்கப்பட்டுள்ள கேபிள் டி.வி.யின் எண்ணிக்கை 729 ஆகும்.

வீடியோ திருட்டு

வீடியோ திருட்டைத் திறம்படத் தடுக்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு "வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப் படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை" இயற்றி யுள்ளது. திருட்டு வீடியோ சினிமாத் தொழிலுக்கு நிலையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. வீடியோ திருட்டு ஆபத்தைத் தடுப்பதற்குப் போதுமான விதிமுறைகள் வீடியோ சட்டத்தில் இயற்றப்பட்டுள்ளன. வீடியோ சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் வீடியோ தியேட்டர், வீடியோ கடை மற்றும் கேபிள் வழித் தொலைக்காட்சி நடத்துவதற்காக இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற வேண்டும். மேற்சொன்ன சட்டத்தையும் விதிகளையும் மீறுபவர்களுக்குத் தண்டனை வழங்க இச்சட்டத்தில் போதுமான வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தையும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளையும் கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டுமென்று சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் ஆகியோருக்குத் தகுந்த கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

வீடியோ சட்டமும் விதிகளும்

தமிழ்நாடு மாநிலத்தில் வீடியோ கேசட் மூலம் தொலைக் காட்சியில் திரைப்படங்களைத் தனியார் காட்டுவதையும் அவை தொடர்பானவற்றை முறைப்படுத்துவதற்கும் வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு "வீடியோ கேசட்டுகள்" மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. தனி நபர்கள் வீடியோக் கேசட் கடைகளை நடத்தவும், வீடியோ கேசட் மூலம் தொலைக்காட்சி யில் திரைப்படங்களைக் காட்டவும் உரிமங்கள் வழங்க இச் சட்டம் வகை செய்கிறது. சென்னை மாநகரில் காவல் துறை ஆணையாளரும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். எனினும் இச்சட்டத்தின் விதிமுறைகளின்படி குடும்பத்தில் உள்ளவர்களுக்காக மட்டும் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் வீட்டில் தொலைக் காட்சியில் திரைப்படங்கள் காட்டுவதற்கு எவ்வித உரிமமும் பெறத் தேவையில்லை.

தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட்டுகள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்தல்) சட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் உரிமம் வழங்கப் பட்டுள்ள வீடியோ தியேட்டர் மற்றும் வீடியோ கேசட் கடை களின் எண்ணிக்கை முறையே 1 மற்றும் 3,463 ஆகும்.

இணைப்பு-II

[486 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

சுற்றுலா

கொள்கை விளக்கக் குறிப்பு

1994-95

சுற்றுலா விரைந்து வளர்ந்து வரும் தொழிலாகும். இது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு சுற்றுலாப் பயணியர் அதிக எண்ணிக்கையில் வருகை தருகிற ஒரு முக்கிய மாநிலமாகும். இந்தியாவிற்கு வருகின்ற வெளிநாட்டு, சுற்றுலாப் பயணிகளில் சராசரியாக 30 சதவீதம் பேர் தமிழ்நாட்டிற்கு வந்து செல்கின்றனர். தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக்கூடியவை, உயர்வும், சிறப்பும் ஒருங்கே கொண்ட பழமை வாய்ந்த கோயில்கள், அழகிய கடற்கரைகள், அமைதி தவழும் மலை வாழிடங்கள், மக்கள் நெருக்கத்தால் இன்னும் மாசுபட்டிராத வளமிக்க வனச் செல்வங்கள், வன விலங்குகள் ஆகியவையாகும்.

சுற்றுலாப் போக்குவரத்து

1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 3.30 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்தனர். 1992 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை முந்தைய ஆண்டைவிடவும் 25.3 சதவீதம் அதிகமாகும்: அதாவது 4.03 இலட்சம் பேர் ஆகும். 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4.41 இலட்சம் ஆகும்; இந்த எண்ணிக்கை முந்தைய ஆண்டைவிட 9.3 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு 1992 ஆம் ஆண்டில் 131 இலட்சம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். 1993 ஆம் ஆண்டில் எண்ணிக்கை 138 இலட்சம் ஆக உயர்ந்தது. தமிழ்நாட்டிற்கு வந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இவ்வாறாக, 1993 ஆம் ஆண்டில் 5.9 சதவீதம் அதிகமாக வந்துள்ளனர்.

[1994 ஏப்ரல் 29

தமிழகத்தில், ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டும், பெரிதும் வேறுபட்டும் காணப்படுகின்ற, கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவர்கின்ற வகையில் அமைந்துள்ள பல்வேறு சுற்றுலா மையங்கள் உள்ளன. இவற்றிற்கு வருகை தரும் வாய்ப்பை அளிக்கின்ற அனுகூலமான நிலையில் தமிழகம் உள்ளது. இதுவே இங்கு வருகை தந்த வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இவ்வாறு படிப்படியாக அதிகரித்ததற்கு முக்கிய காரணமாகும். இவ்வாறு வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் சிறந்து விளங்கும் சுற்றுலா மையங்கள் இங்கு அமைந்திருப்பதுடன், கவனமாகத் திட்டமிட்டு, மேம்படுத்தப்பட்ட சுற்றுலா மையங்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக எண்ணிக்கையில் ஈர்ப்பது, அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டுவதற்குச் சிறந்த உறுதியான வழியாகும். முறையாகவும் கவனமாகவும், சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதன் மூலம், சுற்றுலாப் பயணிகள் அங்கு நீண்ட நாட்கள் தங்கவும், அவர்கள் மீண்டும், மீண்டும் அங்கு வருகை தரவும் ஊக்கமளிப்பதாக இருக்கும். இதுவே மாநில அரசின் நோக்கமாகும்.

திட்ட அணுகுமுறை :

மேற்சொன்ன தெளிவான நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, 1992 ஆம் ஆண்டில் புதிய சுற்றுலாக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டது. அதற்கிணங்க கீழ்க்குறிப்பிடப்பட்டவற்றிற்கு முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன :

(1) சுற்றுலா மையங்களில் உயிரின வாழ்க்கைச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாமல் இன்றியமையா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் அவசியம்.

(2) சிறப்பு சுற்றுலாப் பகுதிகளை கண்டறிதலும் அவற்றை மேம்படுத்துதலும்.

(3) உதவித் தொகைகள் மற்றும் ஏனைய நிதி உதவிகளை அளிப்பதன் மூலம் சுற்றுலாத் திட்டங்களுக்கு முதலீடு செய்யுமாறு தனியார் துறையை ஊக்குவித்தல்.

(4) ஒருங்கிணைந்த முறையில், சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்கான வளர்ச்சி மைய அணுகுமுறை.

(5) வீர விளையாட்டுக்கள், நீர் விளையாட்டுக்கள், தொங்கும் ஊர்தியில் பறத்தல் (Hang gliding), மலையேறுதல் முதலிய விளையாட்டுக்களை மேம்படுத்துதல்.

1994 ஏப்ரல் 29]

(6) சுற்றுலாப பயணிகள் அடிக்கடி வருகை தரவும், நீண்ட நாள் தங்குவதற்கும் சுற்றுலா மையங்களில் விழாக்கள் நடத்துதல்.

(7) நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் சுற்றுலா குறித்து திட்டமிட்ட வகையில் விளம்பரம் செய்தல்.

பெருந்திட்டம் :

மத்திய அரசு, சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக முன்னுரிமை அளிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டை அங்கீகரித்து, இது குறித்து விரிவான பெருந்திட்டம் ஒன்றைக் கோரியுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கவும், வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான கூடுதல் அம்சங்களைத் தோற்றுவிக்கவும் ரூ. 591.34 கோடி மதிப்பீட்டில் விரிவான பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, மத்திய திட்டக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

திட்ட ஒதுக்கீடு :

மாநிலத் திட்டத்தின் கீழ் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் (1992-97) முழுவதற்கும், சுற்றுலா மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 525.00 இலட்சம் ஆகும். 1994-95 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது :—

1. விளம்பரம்	: ரூ. 115.00 இலட்சம்
2. பூம்புகார் கடற்கரைப் பகுதியில் போதிய விளக்கு வசதிகள் அளித்தல்	: ரூ. 3.50 இலட்சம்
3. ஏற்காடு ஏரியில் அடிப்படை வசதிகளை செய்து தருதல்	: ரூ. 3.50 இலட்சம்
4. திருநெல்வேலி, கொடைக் கானல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகம் தொடங்குதல்	: ரூ.4.50 இலட்சம்

மேற்கூறிய திட்டப்பணிகள் தவிர, மாநில அரசு, 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 14.00 இலட்சம் செலவில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகையில் சிறுவர் இரயில் பாதையை மேலும் 200 மீட்டர் நீளத்திற்கு விரிவுபடுத்த கருதியுள்ளது.

[1994 ஏப்ரல் 29

1993-94-ல் மத்திய அரசு நிதியுதவித் திட்டங்கள் :

1993-94ஆம் ஆண்டில் மத்திய அரசு கீழ்க்கண்ட சுற்றுலா திட்டங்களுக்கு நிதி உதவி அளித்துள்ளது. இத்திட்டங்கள் 1994-95ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

வரிசை எண்.	திட்டங்கள்.	அனுமதிக்கப் பட்டுள்ள தொகை. (ரூபாய் இலட்சத்தில்
1.	பெரம்பலூரில் சுற்றுலா விடுதி	23.97
2.	நாமக்கல்லில் சுற்றுலா விடுதி	23.25
3.	விருதுநகரில் சுற்றுலா விடுதி	28.78
4.	கிருஷ்ணகிரியில் சுற்றுலா வளாகம்	33.54
5.	குற்றாலத்தில் சுற்றுலா விடுதி	30.00
6.	சமயபுரத்தில் யாத்ரீகர் விடுதி	39.92
7.	சேலத்தில் சுற்றுலா வளாகம்	33.21
8.	கும்பகோணத்தில் சுற்றுலா வளாகம்	39.97
9.	பழனியில் சுற்றுலா விடுதி	22.73
10.	திருநெல்வேலியில் சுற்றுலா வளாகம்	39.93
11.	தமிழகத்தில் சிறப்பு இரயிலுக்கான பெட்டிகளை நவீனப்படுத்த	48.00
12.	முட்டுக்காடு மற்றும் பழவேற்காடு ஏரிக்கு உரிய படகுகள் வாங்குதல்	14.93
	மொத்தம் ..	**378.23**

இத்திட்டங்களை நிறைவேற்ற மாநில அரசு முதல் தவணையாக ரூ. 60.40 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

1994 ஏப்ரல் 29]

1994 - 95 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டங்கள்.

1994-95 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

1.	பழவேற்காடு மற்றும் முட்டுக்காடு ஏரிக்கு படகு வாங்குதல்	15.00
2.	விழுப்புரத்தில் வழித்தட வசதி	15.00
3.	திருவண்ணாமலையில் யாத்ரீகர் விடுதி	45.00
4.	செஞ்சியில் வழித்தட வசதி	15.00
5.	தரங்கம்பாடியில் சுற்றுலா வளாகம்	30.00
6.	தஞ்சாவூரில் சுற்றுலா வரவேற்பு மையம்	30.00
7.	விளம்பரம்	20.00
8.	புதுக்கோட்டையில் வழித்தட வசதி	15.00
	மொத்தம் ..	185.00

திட்ட அறிக்கை தயாரித்தல் :

முக்கிய சுற்றுலா மையங்கள், சிறப்பு சுற்றுலாப் பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக, மத்திய அரசு மூலம் பன்னாட்டு முகவரைமைப்புகளிடமிருந்து வெளிநாட்டு உதவியையும், வெளிநாட்டுப் பொருளாதார கூட்டுறவு நிதித் திட்டத்தின் கீழ் ஜப்பான் அரசிடமிருந்து அதன் உதவியும் பெறுவதற்கான, திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு ரூ. 3.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட உலாத் தலங்கள் :

பொதுமக்களிடையே சுற்றுலா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உள்ளூர் மக்களிடையே பயணம் செல்லும் ஆர்வத்தை ஊட்டவும், இந்த அரசு மாவட்ட உலாத் தலத் திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், மாவட்ட உலாத் தலங்களாக மேம்படுத்தப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதிகளில் குடிநீர், கழிவறை வசதிகள், உடைகள் மாற்றும் அறைகள், பேருந்து

[1994 ஏப்ரல் 29

நிறுத்துவதற்கான இடவசதி ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதற்கென தற்போது அனைத்து மாவட்டங்களிலுமாக 42 மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டு முதல் 1993-94 வரை 18 சுற்றுலா மையங்கள் மேம்படுத்துவதற்காக ரூ. 67.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டு / இணைத்தொழில் முயற்சியை ஊக்குவித்தல்:

இம்மாநிலத்தில், சுற்றுலா வளர்ச்சிக்கு தேவையான முக்கியத்துவத்தை அளிக்கும் பொருட்டு, அரசு கீழ்க்காணும் அடிப்படையில் கூட்டு / இணைத்தொழில் முயற்சியை ஊக்குவிக்கும்.

1. 'டிட்கோ' முறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கூட்டுத்துறையில் 26 சதவீத சமபங்குத் தொகை அல்லது இணைத்துறையில் 11 சதவீத சமபங்குத் தொகையை முதலீடு செய்தல் மற்றும் தனியார் தொழில் முனைவோர்களின் மேம்பாட்டுக்கு அனைத்து உதவிகளையும் அளித்தல்.

2. சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலங்களை குத்தகைக்கு விடுதல்.

3. கூட்டுத்துறை, இணைத்துறை அடிப்படையில், ஓட்டல்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், நீர் விளையாட்டு வசதிகள், சிற்றுண்டியகங்கள், ஏனைய சுற்றுலா வசதிகளை அமைத்தல்.

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், கூட்டுத்துறை / இணைத்துறையும் குறைந்த செலவிலான பயணிகள் தங்கும் கூடாரங்கள் அமைப்பதை ஊக்குவித்தல், அதற்கேற்ற இடங்களை ஒதுக்கீடு செய்தல்.

சுற்றுலா மையங்களை மேம்படுத்துதல் மற்றும் விளம்பரப்படுத்துதல் :

சுற்றுலா விற்பனையைப் பெருக்கவும், சுற்றுலாத் தகவல்களைப் பலர் அறியச் செய்ய வேண்டியது இன்றியமையாததாகிறது. சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு அதுகுறித்த செய்திகளை அறியச் செய்யவும், பொதுவாக பொதுமக்களுக்கு சுற்றுலாக்கள் மீது ஆர்வம் ஏற்படச் செய்யவும், அனைத்துவகை செய்தி மற்றும் விளம்பரச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

சிற்றேடு, சிறு புத்தகங்கள், மடிப்பு ஏடுகள் துண்டுப் பிரசுரங்கள், பட அஞ்சல் அட்டைகள், சுவரொட்டிகள், ஒட்டு விளம்பர வில்லைகள்,

1994 ஏப்ரல் 29]

முக்கியமான சுற்றுலா மையங்கள் குறித்த வீடியோப் படங்கள் போன்றவை தயாரிக்கப்பட்டு இத்துறையின் சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலாத் தகவல் மையங்கள் இந்தியச் சுற்றுலா மையங்கள், ஏர் இந்தியா அலுவலகங்கள், சுற்றுலா முகவர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை முகவர்கள் மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் வெளியாகும் முன்னணி நாளிதழ்கள் மற்றும் பருவஇதழ்கள் சுற்றுலா வணிகஇதழ்கள் ஆகியவற்றில் இவை குறித்த விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. வெளியீடுகள், செய்தியாளர் கூட்டம், வல்லுநர் விருந்தோம்பல் திட்டத்தின் கீழ் வெளிநாட்டுச் சுற்றுலா வல்லுநர்களை வரவேற்று அவர்களுக்கு மாநிலம் முழுவதும் சுற்றிக்காட்டும் திட்டம் (Fam Tours), மேலும் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் முக்கியமான சுற்றுலா இடங்களில் சுற்றுலாவை மேம்படுத்தும் விளம்பர இயக்கம் போன்றவற்றிற்கும் ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. நாட்டியங்கள், கிராமிய நடனங்கள், பொருட்காட்சிகள், விழாக்கள் ஆகியவை நமது பாரம்பரிய கலைச்சுவையுடன் இணைந்து சுற்றுலாவை மேம்படுத்தும் இனிய விளம்பரச் சாதனங்கள் ஆகும். அவை இத்துறையின் நடவடிக்கைகளை விளம்பரம் செய்யப் பயன்படுகின்றன. கூட்டங்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. பசிபிக் பகுதி பயணச் சங்கம், இந்தியப் பயண முகவரமைப்புச் சங்கம், இந்தியப் பயணச் சுற்றுலா அமைப்பு ஆகியவை ஏற்பாடு செய்யும் வர்த்தகக் கூட்டங்களில் துறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

பொருட்காட்சியும், விழாக்களும்

விழாக்கள் :

வெளிநாட்டுச் சுற்றுலா முகவர்கள், திட்டமிட்ட தொகுப்புச் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த முறையில் முன்னதாகவே ஏற்பாடு செய்ய இயலும் வகையில் தமிழ்நாட்டில் பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த, பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

1. குன்னூரில் தேநீர் மற்றும் சுற்றுலா விழா .. ஜனவரி
2. இந்தியாவில் உள்ள முக்கியமான சுற்றுலா மையங்களில் பொங்கல் விழா .. ஜனவரி

3.	மாமல்லபுரத்தில் நாட்டிய விழா	..	ஜனவரி-பிப்ரவரி
4.	சிரம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா	..	பிப்ரவரி-மார்ச்
5	.மதுரையில் சித்திரைத் திருவிழா	..	ஏப்ரல்-மே
6.	உதகமண்டலத்திலும், ஏனைய மலை வாழிடங்களிலும் கோடை விழா.	..	மே
7.	கிருட்டிணகிரியில் மாம்பழக் கண்காட்சி	..	ஜூன்
8.	குற்றாலத்தில் சாரல் விழா	..	ஜூலை-ஆகஸ்ட்

இவை தவிர, இவ்வாண்டு முதற்கொண்டு கோடை காலத்தில் முதுமலையில் யானைகள் திருவிழாவும் 'கன்னியாகுமரியில் 'குமரிமுனைத்' திருவிழாவும் நடத்தக் கருதப்பட்டுள்ளது. இது தவிர இவ்வாண்டு முதல், 'யானைகள் திருவிழா' நிரந்தரமாக முதுமலையில் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சிகள் :

தமிழகத்தின் சுற்றுலா மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஆண்டு தோறும் சென்னையில் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இத்துறை அனுமதி வழங்குகிறது. பிற மாநிலங்களும், மத்திய அரசுத் துறைகளும், நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் பங்கேற்கின்றன. மாவட்டங்களில், செய்தித்துறை நடத்தும் பொருட்காட்சிகளிலும் இத்துறை பங்கேற்கிறது. வெளிமாநிலங்களில் பயண முகவர்கள் நடத்தும் கண்காட்சியிலும் இத்துறை பங்கேற்கிறது.

பூம்புகார் சுற்றுலா வளாகம்:

பூம்புகார் சுற்றுலா வளாகம் ரூ. 75 இலட்சம் செலவில் 1973 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இது நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. பண்டைத் தமிழர்களின் புகழையும், பெருமையையும் இவ்வளாகம் நினைவு கூர்கிறது. இச்சுற்றுலா வளாகம் இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய சுற்றுலா மையங்களில் ஒன்றாகும். பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் உள்ள ஒய்வில்லத்தைப் புதுப்பிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிவடையும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

1994-95 ஆம் ஆண்டில், பூம்புகார் சுற்றுலா வளாகத்தின் நுழைவாயிற் பகுதியிலிருந்து கடற்கரை வரையில் மின்விளக்கு வசதிகள் செய்து கொடுக்கக் கருதப்பட்டுள்ளது.

திருக்கோயில்களுக்கு இரயில் உலா :

தமிழகத்தில் 'அரண்மனை இரயில்' என்னும் சொகுசு இரயில் விடும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான மாநில அரசின் ஒதுக்கீடு ரூ. 76 இலட்சம் ஆகும். மத்திய அரசு ரூ. 48 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இந்த சொகுசு இரயில் சென்னைக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையே முக்கிய சுற்றுலா மையங்களான சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார், வேளாங்கண்ணி, நாகூர், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, மண்டபம் மற்றும் இராமேஸ்வரம் ஆகியவற்றை உள்ளடக்கிச் செல்லும். இந்த இரயிலில் பயணம் செய்யும் பயணிகள் காட்சிக்கினிய சுற்றுலா இடங்களைப் பார்வையிட வசதியாக நான்கு சீர்வளி வசதி கொண்ட பேருந்துகளைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாங்க உள்ளது. இந்த இரயில் வர்த்தக ரீதியாக இவ்வாண்டு இறுதியில் ஓடத்துவங்கும். இவ்சொகுசு ரயில் கூட்டுதுறையின் கீழ் இயக்கப்படும்.

விவேகானந்தர் நினைவுப் பாறையில் ஒளி வெள்ள விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல்:

இவ்வாண்டில் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு ஒளி வெள்ள விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்கு மத்திய அரசு அனுமதித்துள்ள தொகை மட்டுமின்றி, விவேகானந்தர் நினைவுப் பாறைக்குக் கடற்கரையிலிருந்து மின்வசதி வழங்குவதற்கான கடலுக்கடியில் புதியதாக மின் கம்பி வடம் அமைக்கும் பணிக்காக, தமிழக அரசு ரூ. 7.50 இலட்சம் அனுமதித்துள்ளது.

உதகமண்டலத்தில் இழுவை இரயில் பாதை:

உதக்மண்டலத்திலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு இழுவை இரயில் பாதை ஒன்றை அமைப்பதற்கனெ செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது. திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கான ஆலோசனை வழங்கும் நிறுவனமாகத் திருவாளர் உஷா பிரக்கோ லிமிடெட் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கூறுகளை ஆய்வு செய்த பின்னர் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

[1994 ஏப்ரல் 29

பிரகதீஸ்வரர் கோவிலில் ஒலி-ஒளிக் காட்சி:

தஞ்சாவூரிலுள்ள் பிரகதீஸ்வரர் ஆலயம், பெரிய கோவில் என்றும், இராஜ ராஜேஸ்வரம் என்றும் அழைக்கப்படுகிறது. இது சோழப் பேரரசன் முதலாம் இராசராசச் சோழனால் 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இது தற்போது யுனஸ்கோ நிறுவனத்தால் உலக வரலாற்றுப் பழம் பெருமையை நினைவு கூறும் நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பேரரசர் இராசராசச்சோழரின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற முக்கியமான சம்பவங்களைச் சித்தரிக்கும் ஒலி-ஒளிக் காட்சி நிகழ்ச்சியை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒளிபரப்பிற்கான கதை வசனத்தைத் தயாரிக்க உயர்நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சி குறைந்தது 20 நிமிடங்கள் ஓடும். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இக்காட்சி தயாரிக்கப்படும்.

நீர் விளையாட்டுக்கள் :

தமிழ்நாட்டில் பழவேற்காட்டிலிருந்து கன்னியாகுமரி வரை 900 கி.மீ. தொலைவிற்கு கடற்கரையுடன் கூடிய நீர்நிலை மையங்களை மேம்படுத்த சுற்றுலா வள வாய்ப்பு பரந்துபட்டு கிடக்கிறது. தமிழ்நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை/மாநில நெடுஞ்சாலை ஆகியவற்றிற்கு அருகில் 2 கி.மீ. தொலைவிற்கு நீர் பரவி நிற்கும் காயல்களும், உப்பங்கழிகளும், ஏரிகளும், அணைகளும், நீர்த்தேக்கங்களும் பல உள்ளன.

எனவே உல்லாசப் படகுச் சவாரிகளுக்கு வகை செய்யவும், வீர விளையாட்டுக்கள் நடத்தவும் இதுபோன்ற சுற்றுலா மையங்களைக் கண்டறிந்து, மேம்படுத்த இத்துறை கருதியுள்ளது. இது தொடர்பாக விரிவான செயற்குறிப்புகளை அனுப்புமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் முட்டுக்காடு உப்பங்கழி, பழவேற்காடு ஏரி ஆகியவற்றிற்கான நீர் விளையாட்டு சாதனங்கள்:

பழவேற்காடு, முட்டுகாடு பகுதிகள், விண்ட் சர்ஃபிங் (Wind Surfing), வாட்டர் ஸ்கியிங் (Water Skying), ஜெட் ஸ்கியிங் (Jet Skying) கநோயிங் (Canoeing), கயாக் (Kayak) போன்ற நீர் விளையாட்டுகளுக்குச் சிறந்த இடங்களாகும். முட்டுக்காட்டில் ஏற்கெனவே படகு சவாரி வசதி உள்ளது. ஆனால் வரும் ஆண்டில், பழவேற்காட்டில் நீர் விளையாட்டுத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முட்டுக்காடு ஏரியில் தூர்வாரும்

1994 ஏப்ரல் 29]

பணி, சுற்றுலாத்துறை மற்றும் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் (இவர்களின் சாதனங்களை வாடகைக்குப் பயன்படுத்தி) ஆகியவை இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனியார் ஒத்துழைப்பின் பேரில் நீர் சாகச விளையாட்டுகள் தொடங்கப்படும். சர்வதேச தரத்தில், நீர் விளையாட்டுத் தொகுதியை ஏற்படுத்தவும், அங்கு போட்டி நீர் விளையாட்டுகள் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது. மத்திய அரசு உதவியுடன் பழவேற்காடு ஏரியில் பயன்படுத்துவதற்காக இந்த ஆண்டு ரூ. 14.93 இலட்சம் செலவில் நீர்விளையாட்டுச் சாதனங்கள் வாங்கப்படும்.

இந்த ஏரிகளில் பயன்படுத்துவதற்காக, ஒவ்வொன்றும் ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள இரண்டு நிலைதவழ் படகுகள் (Hover crafts) வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொறியற்ற வானூர்தியில் தொங்கிப் பறத்தல் :

சுற்றுலா வீர விளையாட்டின் ஒரு பகுதியாக உதகமண்டலம், கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் முறையாக, பொறியற்ற வானூர்தியில் தொங்கிப் பறந்து வானூசல் ஆடலுக்கு ஏற்பாடு செய்ய இத்துறை உத்தேசித்துள்ளது. இதன் தொடக்கமாக, பொறியற்ற வானூர்தியில் தொங்கிப் பறப்பதற்கான முகாம்கள் கோடைக்காலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 4.12 இலட்சம் செலவில் பொறியற்ற வானூர்தியில் தொங்கிப் பறப்பதற்கான சாதனங்கள் வாங்கப்படும்.

தங்குமிட வசதிக்கு வகை செய்தல் :

சுற்றுலா வளர்ச்சிக்குப் போதுமான இடவசதியை ஏற்படுத்தித் தருவது மிக அவசியமான ஒன்றாகும். நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதற்குத் தகுதியுள்ள இனங்களைப் பரிந்துரை செய்வதன் மூலம் தனியார் துறையினர் ஓட்டல்களை அமைப்பதற்கு அரசு ஊக்குவிக்கும்.

தனியார் துறை மூலம் ஓட்டல் கட்டுதல்:

தஞ்சாவூரில், எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்த தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. தஞ்சாவூரில் தற்போதுள்ள தங்குமிடவசதிகள் போதுமானவையாக இல்லை. ஆகையால், தஞ்சாவூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் ஓட்டல்கள் கட்ட தனியார் துறையை ஊக்குவிக்க இத்துறை உத்தேசித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஓட்டல்கள் கட்டுவதற்குக் கடன்கள் வழங்குவதில் தனியார் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க, ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளும் வழங்கப்படும். ஓட்டல்கள் கட்டுவதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிலம் மற்றும் கட்டிடங்கள், அரசு நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஓட்டல்கள் கட்டுவதற்காக, தனியார் தொழில் முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்ததையடுத்து இத்துறைக்கு ஏராளமான விண்ணப்பங்கள் வந்துள்ளன.

இதேபோல, தனியார் நிலங்களிலும், அரசு நிலங்களிலும் புதிய ஓட்டல் திட்டங்களை ஏற்படுத்த தனியார் தொழில் முனைவோரை ஊக்குவித்து விளம்பரம் செய்து, பழனி, திருச்செந்தூர், பொள்ளாச்சி, செஞ்சி, திருவண்ணாமலை, ஈரோடு, வால்பாறை, ஏற்காடு, ஏலகிரி, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் மற்றும் சிவகாசி போன்ற ஏனைய சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நியாயமான குத்தகை வாடகை வீதங்களில் நிலம் வழங்கப்படவும், ஒரே இடத்தில் இசைவு வழங்கப்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும், பெரும் முயற்சியாக இது அமையும். செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் 22-9-93ஆம் நாளிட்ட 264ஆம் எண் அரசாணையில், சுற்றுலாத் திட்டங்களுக்காக அறிவிக்கப்பட்ட புதிய நிலக்கொள்கைக்கேற்ப இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மனிதவள மேம்பாடு:

பல்வேறு பல்கலைக் கழகங்களில் ஓட்டல் நிர்வாகம், உணவு தயாரிப்பு தொழில் நுட்ப பட்டப் படிப்புகளைத் தொடங்குவதன் மூலம், உணவு தயாரிப்பு மற்றும் ஓட்டல் நிர்வாகத்திற்கு ஊக்கம் அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு, சான்றிதழ் படிப்புகளை தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்துடன் சேர்க்கையில், இவற்றிற்கு திட்டக்குழு கருத்துத் தெரிவித்தபடி மாநில அரசின் ஏற்பளிப்பு வழங்கப்படும்.

1994 ஏப்ரல் 29]

சீர்வளி வசதி வாகனங்கள்:

தென்னிந்தியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், 1994-95ஆம் ஆண்டில் முக்கியமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்காக, அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா வண்டி இயக்குபவர்கள், 10 சீர்வளி வசதி வாகனங்கள் வாங்க அனுமதி வழங்கப்படும்.

சொகுசு வாடகைக்கார்கள்:

சுற்றுலா அடிப்படை வசதி மேம்பாட்டை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், அரசு, ஆடம்பர வரியை 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைப்பது பற்றி ஆய்வு செய்து வருகிறது.

கட்டண விருந்தினர் உறையுள் வசதி :

முக்கியமான சுற்றுலா மையங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகளை அதிகரிப்பதற்கென கட்டண விருந்தினர் உறையுள் வசதித் திட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ளது. ஒவ்வொரு சுற்றுலாமையத்திலும், இதுவரையில் கண்டறிந்துள்ள கட்டண உறையுள் வசதி குறித்த பெயர் விவரங்கள் கொண்ட குறிப்பேடு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

பணியிடைப் பயிற்சி:

நீர்விளையாட்டுப் போட்டிகள், சுற்றுலா நிர்வாகம் குறித்து இத்துறையின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா இயக்கக அலுவலர்களும் பணியாளர்களும் அயல் நாட்டு மொழிகளை அறிந்துகொள்ளவும், சுற்றுலாத் தலங்களை பற்றி அறிந்து கொள்ளவும், வசதி அளிக்கப்படுவதுடன் சுற்றுலா நிர்வாகத்தின் மிக அண்மைக் கால வளர்ச்சிப் போக்கு குறித்து அவர்கள் நன்கு அறிந்து கொள்ளவும் அவர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா வழிகாட்டி பயிற்சித் திட்டம் :

கொடைக்கானல், பழனி, தஞ்சாவூர், திருச்செந்தூர், இராமேஸ்வரம் போன்ற முக்கியமான சுற்றுலாத்தலங்களில் நன்கு தகுதிபெற்ற வழிகாட்டிகளைப் பணியிலமர்த்த சுற்றுலா வழிகாட்டிகளுக்குச் சுற்றுலா

[1994 ஏப்ரல் 29

வழிகாட்டி பயிற்சி வகுப்பு நடத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையிலுள்ளது.

புதிய சுற்றுலா அலுவலகங்கள் ஏற்படுத்துதல்:

இம்மாநிலத்தில் மொத்தம் 11 சுற்றுலா அலுவலகங்களும், வெளிமாநிலங்களில் புதுடில்லி, கல்கத்தா, பம்பாய், கோவா ஆகிய இடங்களில் 4 சுற்றுலா அலுவலகங்களும் உள்ளன. முக்கியமான இரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் ஆகிய இடங்களில் 11 சுற்றுலாத் தகவல் மையங்கள் உள்ளன. இவை, சம்பந்தப்பட்ட சுற்றுலா அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன.

1994-95 ஆம் ஆண்டில் கொடைக்கானல், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா தகவல்மையங்களை முழு அளவிலான சுற்றுலா அலுவலகங்களாக மாற்றவும், தருமபுரி மாவட்டத்திற்கு பெருமளவிற்கு சுற்றுலாப் பயணிகள் வருவதைக் கருத்தில் கொண்டு தருமபுரியில் புதிய சுற்றுலா அலுவலகம் ஒன்றைத் திறக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உணவக சமையல் கலைப் பயிற்சி நிறுவனம்:

திருச்சிராப்பள்ளி, துவாக்குடியிலுள்ள உணவக சமையல் கலைப் பயிற்சி நிறுவனம் மத்திய அரசும், மாநில அரசும் கூட்டாகத் தொடங்கி நடத்தும் பயிற்சி நிறுவனமாகும். இந்நிறுவனத்திற்கு ஏற்படும் தொடர் இனச் செலவுகளையும், தொடரா இனச் செலவுகளையும் 1-10-1986-லிருந்து தமிழ்நாடு அரசு ஏற்கிறது. இந்நிறுவனம் பின்வரும் பயிற்சித் திட்டங்களில் ஓராண்டு முழுநேரப் பயிற்சி சான்றிதழ்களை வழங்குகிறது.

1. ஓட்டல் வரவேற்பும், கணக்கு வைப்பு முறையும்
2. சிற்றுண்டிச்சாலைகளும், சிற்றுண்டி விற்பனைப் பணியும்
3. ரொட்டி தயாரித்தல், தின்பண்டங்கள் தயாரித்தல்.
4. சமையல் கலை.
5. உணவக விடுதி பராமரிப்பு.

இந்நிறுவனம், இல்லத்தரசிகளுக்கு ரொட்டி தயாரித்தல் சமையல்கலை, விடுதி இல்லப் பராமரிப்பு ஆகிய துறைகளில் 2 மாத பகுதி நேரப் பயிற்சி வகுப்புகளையும் நடத்துகிறது. தென்னக ரயில்வே

1994 ஏப்ரல் 29]

பணியாளர்களுக்கும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பணியாளர் முதலியோருக்கும் உணவுத் தயாரிப்பு, பரிமாறுதல் கலையில் குறுகிய காலப் பயிற்சியையும் அளிக்கிறது.

இந்நிறுவனத்தை, சுயநிதி நிறுவனத்தைப் போன்று 1994-95 முதல் மூன்றாண்டு பட்டயப்படிப்பு கொண்ட நிறுவனமாக நிலை உயர்த்தும் கருத்துருவும், அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:

தமிழக அரசு வழங்கிய ஐந்து சுற்றுலா மாளிகைகள் மற்றும் இரு பேருந்துகளுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று பல இடங்களில் ஓட்டல்களை அமைத்து "ஓட்டல் தமிழ்நாடு" என்ற பெயரில் 26 ஓட்டல்களைத் தொடங்கி பெருமைப்படும் அளவிற்கு வளர்ந்து, உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெருமளவில் ஈர்க்கின்ற வகையில் மிகவும் பிரபலமாகியுள்ளது. இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 4 பேருந்துகள் சீர்வளி வசதி செய்யப்பட்டவையாகும்.

தற்போது சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் சுற்றுலா வசதிகளை அளித்து வருகிறது.

1. ஓட்டல்கள்	..	26
2. இளைஞர் இல்லங்கள்	..	8
3. படகு வீடுகள்	..	9
4. சிற்றுண்டிச் சாலைகள் (புது டில்லியில் ஒன்று)	..	5
5. தொலை நோக்காடி இல்லங்கள்	..	4

1993–94-ல் குன்னூரில் இளைஞர் இல்லம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு தமிழ்நாடு ஓட்டலில் இடவசதியளிக்கப்படுவதால் இச்சுற்றுலாக்கள் சுற்றுலாப் பயணிகளிடையே மிகப் பிரமலமாகியுள்ளன.

இக்கழகம், தற்போது கீழ்க்காணும் திட்டமிட்ட சுற்றுலாக்களை நடத்திவருகிறது.

1. சென்னை மாநகர் தினசரி சுற்றுலா.
2. சென்னை - காஞ்சிபுரம் - மாமல்லபுரம் தினசரி சுற்றுலா.

3. சென்னை - திருப்பதி தினசரி சுற்றுலா.
4. ஆறு நாள் தென்னிந்தியச் சுற்றுலா.
5. ஆறு நாள் மூகாம்பிகை சுற்றுலா.
6. ஏழு நாள் கோவா - மந்திராலயம் சுற்றுலா.
7. எட்டு நாள்-தமிழ்நாடு சுற்றுலா.
8. மாணவர்களுக்கான திட்டமிட்ட சுற்றுலா.
9. பதினான்கு நாள் தென்னிந்தியச் சுற்றுலா.
10. மாநில அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச் சலுகை சுற்றுலாக்கள், இவை தவிர சுற்றுலாப் பயணிகள் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், திட்டமிட்ட சிறப்பு சுற்றுலாக்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சுற்றுலாக் காலங்களின் போது, மலை சார்ந்த இடங்களைச் சுற்றிப்பார்க்க, கோடைக்கால சுற்றுலாப் பயணங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வசதிகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

1. தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வருகைதருவதற்காக, தென் ஆப்ரிக்காவிலுள்ள சுற்றுலா முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தமிழ்நாடு, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துள்ளது. 1992-93 ஆம் ஆண்டில், இந்த வகையில் ஈட்டிய அந்நியச் செலாவணி 9,000 அமெரிக்க டாலர்களாக இருந்தது. 1993-94ஆம் ஆண்டில் இது 75,000 அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது.

2. சிறு சேமிப்புத்துறை, "6 நாட்கள் தென்னிந்தியச் சுற்றுலாவை" அதனுடைய பரிசுத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்க சிறுசேமிப்புத் துறையுடன் ஒருங்கிணைந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது, போக்குவரத்துப் பிரிவின் வருவாயைக் கணிசமாக அதிகரிக்கும்.

3. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வரவு அதிகரித்து வரும் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, 1993-94ஆம் ஆண்டில் 21 இலட்சம் ரூபாய் செலவில் சீர்வளி வசதி செய்யப்பட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய சொகுசுப் பேருந்து ஒன்று வாங்கப்பட்டது. சீர்வளி வசதி செய்யப்பட்ட சொகுசுப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பின் மூலம் அடுத்த ஆண்டில் அந்நியச் செலாவணி வருவாய் கணிசமாக அதிகரிக்கும்.

1994 ஏப்ரல் 29]

தற்போதுள்ள ஓட்டல்களை நவீனமயமாக்குதல்:

1. கோயம்புத்தூர், உதகமண்டலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களை பெரிய ஓட்டல்களில் குடை ஆண்டனா நிறுவப்பட்டுள்ளது. தஞ்சாவூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், போன்ற இடங்களிலுள்ள ஏனைய பெரிய ஓட்டல்களிலும் குடை ஆண்டனாவை நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது.

2. பெரிய ஓட்டல்களில் ஃபேக்ஸ் சாதனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

3. பெரிய ஓட்டல்களில் சீர்வளி வசதி செய்யப்படாத அறைகள் சீர்வளிவசதி செய்யப்பட்ட அறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

4. பெரிய ஓட்டல்களிலுள்ள கூடங்களில் நவீன இருக்கைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

5. கடந்த ஆண்டில், உதகமண்டலத்திலுள்ள ஓட்டல் அறைகள், ரூ. 20 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

6. நீலகிரியிலுள்ள தொட்டப்பெட்டாவில் சிற்றுண்டிச் சாலை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது வருகின்ற சுற்றுலாப் பருவ காலத்தில் திறக்கப்படும்.

7. பைக்காராவிலும், உதகமண்டலத்திலும் படகுவீடும், சிற்றுண்டிச் சாலையும் கட்டப்பட்டுள்ளன. இவை வருகின்ற கோடைக்காலத்தில் தொடங்கி வைக்கப்படும்.

8. பெரிய ஓட்டல்களுக்காக 75 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பட்ட குறிப்பேடு.

''தமிழ்நாடு-இந்தியாவின் பெருமை'' என்னும் புத்தகம், தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத்தலங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கியதாகும். இப்புத்தகம், இந்தியாவிலும், வெளிநாட்டிலும் முதன்மையான சுற்றுலா முகவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் திட்டமிட்ட சுற்றுலாக்கள்:

தனியுரிமை அடிப்படையில், தனியார் தொழில் முனைவோரின் உடனுழைப்புடன், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலிருந்து சுற்றுலாப்பயணங்கள் நடத்தப்படும். அதனால்,

போட்டிக் கட்டண வகையில் அமைந்த நன்கு திட்டமிட்ட சுற்றுலாப் பயண வசதிகள் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கும்படி செய்யப்படுகின்றன.

நிதிச் சாதனை:

1993-94ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வசூல் தொகை 1500 இலட்சம் ரூபாய் ஆகும். இது, 1992-93ஆம் ஆண்டின் மொத்த வருவாய்த்தொகையான 1328.44 இலட்சம் ரூபாயைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகமாகும். 1993-94ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப் படுகின்ற மொத்த ஆதாயம் 138.18 இலட்சம் ரூபாய் ஆகும்.

1994-95ஆம் ஆண்டில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

1. தென்னக இரயில்வேயின் ஒத்துழைப்புடன் வாரக் கடைசியில் சுற்றுலாப் பயணம் நடத்துதல்:

இரயில் மூலம் வாரக்கடைசியில் சுற்றுலாப் பயணங்களை நடத்த, தென்னக இரயில்வேயுடன் ஒருங்கிணைந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய சுற்றுலாக்களில் இடவசதியளித்தல், உள்ளூர்ப் பகுதிகளைச் சுற்றிக்காட்டுதல், ஆகியவற்றுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்யும்.

2. தனியுரிமை அடிப்படையில் தனியார் தொழில் முனைவோரின் மூலம் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பயன் பெறுவதற்காக, அனைத்து ஓட்டல்களிலும் தொலைபேசி இணைப்பு வசதிகளை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

3. கொடைக்கானல், மலைவாழ் இடத்திலுள்ள பேரிஜம் ஏரியைச் சுற்றி சிறிய இரயில்வண்டி ஒன்றை இயக்கக் கருதப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணியாளர்களுக்கான பயிற்சி நிலையம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலுள்ள அனைத்து நிலை பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்த, உரிய மையத்தில் தனிப்பயிற்சி நிறுவனம் ஒன்றைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்படுத்தும் இது பணியின் தரத்தைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்தும்.

1994 ஏப்ரல் 29]

மத்திய அரசின் நிதியுதவியுடன் ஓட்டல்களை நவீனமயமாக்குதல்.

கோயம்புத்தூர், உதகமண்டலம், கொடைக்கானல், மாமல்லபுரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களை நவீனமயமாக்கி, விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் மத்திய அரசின் நிதியுதவியுடன் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

இணைப்பு-III

[622 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மீன்வளத்துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

1994-95

1. முன்னுரை:

1.1. மீன்துறையானது கிராமப்புற வேலைவாய்ப்பு, புரோட்டின் சத்துள்ள உணவு மற்றும் அந்நிய செலாவணி ஈட்டும் விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கினறது. தமிழ்நாட்டில் மீன்பிடிப்பில் கடல் மீன்பிடிப்பே பிரதானமாக உள்ளது. நாம் சுமார் 1000கி.மீ.க்கு சற்று அதிகமாக கடற்கரையை பெற்றுள்ளோம். அதனை கீழ்க்கண்டவாறு நான்கு பகுதிகளாக கூறலாம்.

(அ) வடக்கே கூனன்குப்பம் முதல் தெற்கே கோடியக்கரை வரையிலான கோரமண்டல கடற்கரை சுமார் 350 கி.மீ.

(ஆ) கோடி முனையிலிருந்து தொடங்கி தனுஷ்கோடி வரையிலான பாக்ஜலசந்தி சுமார் 270 கி.மீ.

(இ) தனுஷ்கோடியிலிருந்து தொடங்கி கன்னியாகுமரி வரையிலான மன்னார் வளைகுடா சுமார் 320 கி.மீ.

(ஈ) மேற்கே அரபிக்கடலில் 60 கி.மீ. நீளமான சிறிய கடற்பகுதி.

தமிழ்நாட்டில் சுமார் 442 கடற்கரை மீன்பிடி கிராமங்கள் உள்ளன. சுமார் 5.15 இலட்சம் மீனவர் மக்கட்தொகை உள்ளது. அவர்களில் 1.81 இலட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். நம் மாநில கடற்கரை முழுவதும் சுமார் 41,412 ச.கி. கடற்படுகை பகுதியை கொண்டுள்ளது. இப்பகுதியில் மீன்வளம் மிகுதியாக உள்ளது.

[1994 ஏப்ரல் 29

1.2. தமிழ்நாட்டில் 56 நீர்த்தேக்கங்கள், எண்ணற்ற குளம், குட்டைகளுமாக சுமார் 3.71 இலட்சம் ஹெக்டேர் அளவு கொண்ட உள்நாட்டு மீன்வளம் உள்ளது. தவிர பாசன குளங்கள், கிராமத்திலுள்ள குட்டைகள் மற்றும் தமிழக நீர்நிலைகளிலும் மீன்பிடிக்கலாம். சுமார் 41,400 உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

1.3. மாநில அரசும் மற்றும் மத்திய அரசின் நிதியேற்பு திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்களை கொண்டு தொடர்ந்துவந்த திட்டக் காலங்களில், உள்நாட்டு மற்றும் கடல்மீன் உற்பத்தியை பெருக்கிடவும், மீனவர்கள் சமூக பொருளாதார முன்னேற்றம், மற்றும் கிராமங்களில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் செயல்படுத்தப்பட்டு வந்தன.

மேற்கண்ட நோக்கங்களை அடைந்திட கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.

(அ) மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் வாயிலாக தீவிர மீன்வளர்ப்பு, மிக தீவிர முறையில் உவர்நீரில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் வாயிலாக இறால் வளர்ப்பு;

(ஆ) புதிய வசதிகளை படைத்தும் இருக்கும் வசதிகளை மேம்படுத்தியும், தரமான மீன் மற்றும் இறால் குஞ்சுகள் அதிகமாக கிடைக்க வழிவகை செய்தல்.

(இ) போதுமான மீன் வந்தடையும் துறைகள், படகு துறைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், பண்டை மீன்பிடி கலன்கள் மற்றும் கரையேறும் படகுகளை இயந்திர மயமாக்குதல்;

(ஈ) கடல் மீனவர்களுக்கு "மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்", "சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்" மற்றும்ா மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம் ஆகிய நலவாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துதல்

மற்றும்

(உ) கூட்டுறவு சங்கங்களை பலப்படுத்தல், மானியவிலையில் மீன்பிடி சாதனங்கள் மற்றும் இயந்திரம் ஆகியவற்றை மீனவர்களுக்கு வழங்கிட கடன் வழங்குதல்;

1994 ஏப்ரல் 29]

1.4. நிறுவன அமைப்பு:

(அ) மீன்வளத்துறை

தலைமை அலுவலகத்திலுள்ள மூன்று மீன்துறை இணை இயக்குநர்கள் மற்றும் ஆறு மீன்துறை துணை இயக்குநர்களின் உதவியுடன் மீன்வளத்துறை ஆணையர் முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்துகிறார். சென்னை மற்றும் தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு இரு மீன்துறை இணை இயக்குநர்களும், மதுரை, நாகப்பட்டினம் மற்றும் கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மூன்று மீன்துறை துணை இயக்குநர்களும், களப்பணித் திட்டங்களை மண்டல செயலாக்க மீன்துறை உதவி இயக்குநர்களின் துணையுடன் நிறைவேற்றுகின்றனர். தலைமைப் பொறியாளரின் கீழ் உள்ள பொறியியல் பிரிவுத் துறையின் கட்டுமானப் பணிகளை செய்து முடிக்கின்றது. இவருக்கு உதவியாக நாகர்கோவில் மற்றும் தஞ்சாவூரில் இரு செயற் பொறியாளர்கள் செயல்படுகிறார்கள். 12 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செம்மைப்படுத்தப்பட்ட மீன்வளர்ப்புத் தொழில் நுணுக்கங்களை குளம், குட்டைகளில் செயல்படுத்தி, உள்நாட்டு மீன் உற்பத்தியை கூட்டு இன மீன்வளர்ப்பு மூலம் பெருக்கிட செயல்பட்டு வருகின்றன. உவர்நீர்ப்பரப்பில் இறால் வளர்ப்பை அதிகரிக்க 5 உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) மீன்துறை ஆணையரின் தலைமையில் தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வள கூட்டுறவு இணையமானது செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், நாகை காயிதே மில்லத், இராமநாதபுரம், வ.உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களை சேர்ந்த 34 மீனவர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல் மூலம் மீனவர் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்திட செயல்படுகின்றது. இந்த முதன்மை இணையமானது ஒரு நிர்வாகக் குழுவை கொண்டுள்ளது. இக்குழு சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மேலாண்மை இயக்குநர், மற்றும் 5 மேலாளர்களை கொண்டுள்ளது. மாவட்ட அளவில் 3 நிர்வாக அலுவலர்கள் (உதவி இயக்குநர்கள்), விரிவாக்க உதவியாளர்கள் (மீன்துறை ஆய்வாளர்கள்), மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் தனி அலுவலர்கள் உதவியுடன் செயல்படுகிறார்கள். இந்த இணையமானது தற்சமயம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் கடலோர மீனவ ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துகிறது.

[1994 ஏப்ரல் 29

(இ) மீனளத்துறையின் வணிக நோக்குப் பணிகளின் முன்னேற்றத்தையும், மேம்பாட்டினையும் அரசு சார்பில்லாத தலைவரும், மேலாண்மை இயக்குநருமானவரால் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் நிர்வகிக்கப்படுகிறது.

2.0 மீன்வளத்தில் முன்னேற்றம்

1992-93-ம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 4.06 இலட்சம் டன்னாக இருந்தது. அதில் உள்நாட்டு மீன் உற்பத்தி 0.98 இலட்சம் டன்னையும், கடல் மீன் உற்பத்தி 3.08 இலட்சம் டன்னையும் கொண்டது. 1993-94-ல் மொத்த மீன் உற்பத்தி 4.22 இலட்சம் டன் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கடல்மீன் உற்பத்தி 3.15 இலட்ச டன் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தி 1.07 இலட்ச டன் ஆகும்) 1994-95-ல் மொத்த மீன் உற்பத்தி 4.51 இலட்சம் டன் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் 3.35 இலட்சம் டன் கடல் மீனும் 1.16 இலட்சம் டன் உள்நாட்டு மீனும் ஆகும்.

3.0. மீன்வள ஆதாரத்தின் நிலை:

3.1. உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாடு 7.98 இலட்சம் ஹெக்டேர் நீர்ப்பரப்பு ஆதாரங்களை பெற்றுள்ளது. இவற்றுள் 3.71 இலட்சம் ஹெக்டேர் மட்டுமே மீன்வளர்ப்புக்கு ஏற்றதாகும். உள்நாட்டு மீன்வளர்ப்பு மேம்பாட்டிற்கு தரமான மீன்குஞ்சுகளே முக்கிய தேவையாகும்.

3.2. மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளிலிருந்து மீன்துறை, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் மூலம் மொத்தம் 40 மில்லியன் கெண்டை இன மீன்குஞ்சுகளும் (Early fry) இயற்கை ஆதாரங்களில் 20 மில்லியன் விரலிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 52233 ஹெக்டேர் பரப்புள்ள 56 நீர்த்தேக்கங்கள் மீன் உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. .இதுவரை 32,000 ஹெக்டேர் பரப்புள்ள பாசனக் குளங்களில்/ஏரிகளில் தீவிர மீன் உற்பத்தி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் மீன்வளர்ப்புக்கு சுமார் 5,100 ஹெக்டேர் நீர்ப்பரப்பு கொண்ட ஊர் குட்டை மற்றும் குளங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

1994 ஏப்ரல் 29]

3.3. கடல் மீன்வளம்:

தற்போது தமிழ்நாட்டு கடற்கரையில் சுமார் 10,027 விசைப்படகுகளும், இயந்திரம் பொறுத்தப்பட்ட மீன்பிடிக்கலன்களும் தவிர ஏறக்குறைய 34,563 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. 362 மீன் இறங்கு துறைகள் உள்ள தமிழ்நாட்டில் சுமார் 1.81 இலட்சம் மீனவர்கள் நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

4. நிதிநிலை:

கடல்மீன் உற்பத்தி 3.60 இலட்சம் டன்னும், உள்நாட்டு மீன் உற்பத்தி 1.33 இலட்சம் டன்னும் ஆக மொத்தம் உற்பத்தி அளவு 4.93 இலட்சம் டன்னை அடையும் பொருட்டு எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ. 31.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மூன்றாவது ஆண்டான 1994-95 ஆண்டு திட்டத்திற்கென ரூ.1661.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தவிரவும் திட்டத்தில் இல்லாத பணிக்கென ரூ. 873.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவ சமூதாயத்தின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன் கடல், உள்நாட்டு மற்றும் கடலோர மீன்வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தியை பெருக்குவதற்கான திட்டங்களுக்கும் இந்த ஆண்டு திட்டம் முக்கியத்துவம் அளிக்கும். 1994-95-ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் சுருக்கமாக கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

5.0. நன்னீர் மீன்வளம்:

5.1. *தற்பொழுது மாநிலத்தில் 22 மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் உள்ளன. எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தேவைப்படும் மீன் விரலிகளின் எண்ணிக்கை 170 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆண்டு சராசரி உற்பத்தி 60 மில்லியன் விரலிகள் ஆகும். (இயற்கை முறையில் சேகரம் செய்தல் மற்றும் பொறிப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட விரலிகள் சேர்த்து) 1993 ஜூலை திங்களில் மணிமுத்தாறு (நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில்) தேசிய மீன்பண்ணை செயல்பட துவங்கியதால் உற்பத்தியை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 29

5.2. மீன்குஞ்சு உற்பத்திக்கென மீன்வளர்ப்போருக்கு உதவுதல்:

மாநிலத்தின் மீன்குஞ்சு தேவை மற்றும் விநியோகத்திற்கு இடையே உள்ள இடைவெளியை குறைத்திட மேலும் மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைக்கு ரூ. 12.50 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை குறைந்த செலவிலான தொழில்நுட்ப வசதியுடன் ஆண்டுக்கு 10 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் பொருட்டு 50 தனியார் துறை மீன்குஞ்சு பண்ணை உரிமையாளர்களுக்கு மானியமாக வழங்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் இருபது சதவீதம் மானியமாக அதிகபட்சமாக ரூ. 25,000 வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சென்னை மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலமாக மீன்பண்ணை பராமரிப்பு பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு கட்டுமானம் பணி முடிவடைந்து மீன்குஞ்சு உற்பத்தி துவங்கியவுடன் மான்யதொகை வழங்கப்படுகிறது. இதுவரை 12 தனியார் மீன்வளர்ப்போர் மீன்குஞ்சு பொறிப்பகத்தை கட்டி முடித்துள்ளனர். இவர்களுக்கு மான்யமாக தலா ரூ. 25,000 -வீதம் மொத்தம் ரூ. 3.00 லட்சம் தரப்பட்டுள்ளது. மற்ற 38 இடங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

5.3. தற்போதுள்ள மீன்குஞ்சு பண்ணைகளை செவ்வைப்படுத்துதலும் மேம்படுத்துதலும்:

தரமான மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க தமிழ்நாட்டில் தற்போதுள்ள கீழ்காணும் ஆறு மீன்குஞ்சுப் பண்ணைகள் 1992-93ல் செப்பனிட்டு பராமரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. பூண்டி
2. லால்பேட்டை
3. மேட்டூர் அணை
4. கிருஷ்ணகிரி
5. மஞ்சளாறு மற்றும்
6. சாத்தியாறு

1993-94ம் ஆண்டு, ரூ. 7.5 இலட்சத்தில் பின்வரும் மீன்குஞ்சு பண்ணைகளின் மேம்படுத்தும் பணி துவங்கப்பட்டுள்ளது.

1. செம்பரம்பாக்கம் (செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்).
2. கரந்தை (தஞ்சாவூர் மாவட்டம்).
3. பூங்கார் (பாவானிசாகர், பெரியார் மாவட்டம்).

1994 ஏப்ரல் 29]

மேற்காணும் பண்ணைகளில் உற்பத்தியாகும் நுண்மீன்குஞ்சுகள் விரலிகளாக வளர்க்கப்பட்டு பின் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர், தஞ்சாவூர் மற்றும் பெரியார் மாவட்டங்களின் உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக அங்குள்ள நன்னீர் நிலைகளில் இருப்பு செய்யப்படும்.

5.4. வைகை மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளில் நிலத்தடி நீர் குழாய் அமைத்தல்:

மீன்துறையில் முதலில் துவங்கிய மீன்பண்ணையில் வைகை மீன் பண்ணை ஒன்றாகும். இந்த மீன்பண்ணையில் 4 சினை மீன் குளங்களும், 34 நாற்றங்கால்களும், 12 வளர்ப்புக் குளங்களும் இருக்கின்றன. இந்தப் பண்ணையின் மூலம் மதுரை மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, திருமங்கலம் தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்புத் திட்டம் மற்றும் சோழவந்தான் நீர்த்தேக்கம் மற்றும் இம்மாவட்டத்திலுள்ள மீனவ கூட்டுறவு சங்கத்தினரால் குத்தகைக்கு எடுக்கப்படும் நீர்நிலைகளுக்கும் இம்மீன்பண்ணையின் மூலம் உற்பத்தியாகும் மீன் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றன. இப்பண்ணைக்கு வைகை ஆற்றிலிருந்து நீர் பெறப்படுகிறது. இதன் மூலம் தேவையான தண்ணீரில் 70 சதவீதம் பெறப்படுகிறது. எனவே ரூ. 2.50 இலட்சம் செலவில் ஆழ்குழாய் கிணறு கூடுதலாக அமைப்பதன் மூலம், கூடுதலாக நீர்வசதி வழங்குவதன் மூலம் அதிகபட்சமாக 130 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்ய இயலும்.

5.5. நீர்த்தேக்க மீன்வளம்:

தமிழ்நாட்டில் 52,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள 56 நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவற்றில் பெரியது மேட்டூர் நீர்த்தேக்கமாகும். நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையின் அளவைப் பொருத்தும், மேற்பகுதி நீர்ப்பரப்பு மற்றும் மாநில எல்லைப் பகுதியில் வரும் நீரின் அளவைப் பொருத்தும், நீர்த்தேக்கங்களின் பரப்பளவு மாறுகிறது.

8 பெரிய நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டின் கீழ் தரப்பட்டுள்ளன. அவை பவானிசாகர், சாத்தனூர் அணை, அமராவதி, ஆழியாறு, திருமூர்த்தி, மஞ்சளாறு, உப்பாறு மற்றும் பாலார்-பொரந்தலார் நீர்த்தேக்கங்களாகும். இவற்றின் மொத்தப் பரப்பளவு 11,175 ஹெக்டேராகும். இது மொத்தப் பரப்பளவில் 22 சதவீதம் ஆகும்.

[1994 ஏப்ரல் 29

சிலநீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமை மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நீர்த்தேக்கங்கள், மேட்டூர் அணை, வீராணம், கொளவாய், சத்தியமூர்த்திசாகர் மற்றும் கடம்பா நீர்த்தேக்கங்களாகும். இவற்றின் மொத்தப் பரப்பளவு 26,000 ஹெக்டேர் ஆகும். (இது மொத்தப் பரப்பளவில் 50சதவீதம்) 15,000 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள மற்ற 43 நீர்த்தேக்கங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. துறை இந்நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து, பின் வளர்த்த மீன்களை அறுவடை செய்கிறது. இயற்கை மாற்றங்கள், நீர்ப்போக்குவரத்து, நீர்த்தேக்கத்தில் இருப்பு செய்யப்படா மீனினங்கள் மற்றும் பிற உயிரினங்களை இரையாகக் கொள்ளும் மீனினங்கள் ஆகியவற்றை பொறுத்து, இந்த நீர்த்தேக்கங்களில் மீன்பிடிப்பு ஒவ்வொரு வருடமும் மாறுகிறது. 1991-92-ம் ஆண்டில் நீர்த்தேக்கங்களிலிருந்து சுமார் 1444.4 மெட்ரிக் டன் மீன்களும், 1992-93-ல் சுமார் 1257.8 மெட்ரிக் டன் மீன்களும் பிடிக்கப்பட்டன. 1993-94-ம் ஆண்டில், ஜனவரி 1994 முடிய 1197 மெட்ரிக் டன் எடையுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

5.6. தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத்திட்டம்:

பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறையின் பொறுப்பில் உள்ள சில பெரிய மற்றும் சிறிய பாசன நீர்த்தேக்கங்களில் தீவிர மீன்வளர்ப்பு மற்றும் விற்பனைத்திட்டம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு வள்ளலார் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்களில் 22,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பிலும் மதுரை மாவட்டத்தில் 10,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பிலும் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகின்றன. அந்தந்த பகுதிவாழ் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், இம்மீன்களைப் பிடித்து விற்பனை செய்து மீனவர்கூட்டுறவு சங்கத்துடன் 50:50 அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றனர். இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள சில நீர்ப்பரப்புகள்/குளங்கள், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 1993-94-ம் வருடம் ஜனவரி திங்கள் முடிய 7.91 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் பிடிக்கப்பட்ட 54.88 டன் மீன்களில், 27.44 டன் மீனவர் பங்காக மீனவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்நீர்நிலைகளில், அதி விரைவாக வளரும் மீனினக் குஞ்சுகள் இருப்பு செய்வது என்பதை வலியுறுத்தி இத்திட்டம் தொடரப்படும்.

1994 ஏப்ரல் 29]

5.7 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

பின்வரும் முக்கிய குறிக்கோள்களுடன் 12 மாவட்டங்களில் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை இயங்கி வருகின்றன.

1. தற்கோதுள்ள மீன்வளர்ப்போர் மற்றும் சிறு குளங்களின் உரிமையாளரை, நவீன மீன்வளர்ப்பு முறைகளை கையாள ஊக்குவித்து அதன் மூலம் மீன்வளர்ப்பில் தேர்ந்த ஒரு புதிய வகுப்பினரை உருவாக்குவது;

2. இருப்பில் இருக்கும் குளங்களில் மீன் உற்பத்தியை தீவிரப்படுத்துதல், மற்ற அரசுத்துறைகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும் நீர்நிலைகள், தூர்ந்துபோன குளங்கள், நீர்சூழ்ந்த பரப்புகள் மற்றும் கிராம சிறுகுளங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு பெற்று தீவிர மீன் வளர்ப்பிற்கு பயன்படுத்துதல்;

 மேற்கூறிய நீர்ப்பரப்புகள், வெவ்வேறு துறைகளிடம் இருப்பதால், அவற்றை வருவாய்த்துறை, பொதுப் பணித்துறை, கோயில்கள் மற்றும் உள்ளூர் ஊராட்சி மன்றங்களிடமிருந்து முன்னுரிமை குத்தகை அடிப்படையில் துறைக்கு பெறுவதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தில், பஞ்சாயத்து மற்றும் இதர துறைகளிடமிருந்து குளங்கள் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டு மீன்வளர்ப்போருக்கு அளிக்கப்படுகிறது. தேர்ந் தெடுக்கப்பட்ட மீன்வளர்ப்போருக்கு கூட்டின மீன்வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. குளம் வெட்டுதல், சீர்ப்படுத்துதல் இடுபொருட்களுக்கான கடன் மற்றும் மானியம் ஆகிய உதவிகள் தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்கப்பட்ட நபர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஜனவரி 1994 வரை 5277.58 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர்நிலைகள் 5451 மீன்வளர்ப்போருக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1258 பேர் ஆதி திராவிடர்களும் 24 பேர் மலைசாதி மக்களும் ஆகும். உள்நாட்டு மீன்வளர்ப்பு முறைகளில்

[1994 ஏப்ரல் 29

6547 மீன்வளர்ப்போருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1992-93-ல் சராசரியாக ஹெக்டேருக்கு 1143 கிலோ மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

6. கடல் மீன்வளம்:

6.1. 20% மானியத்திட்டம் நமது மாநிலந்தான் கடற்கரைகளில் 31-3-93 முடிய 10027 இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி கலன்கள் பயன்படுத்தப்பட்டு, மாநிலத்தின் கடல் மீன்பிடிப்பில் 76% மீன்பிடிக்கப்பட்டுள்ளது. சமீப காலத்தில் எரிபொருள்கள், உதிரிப் பொருட்கள் விலை உயர்வு மற்றும் கூலி உயர்வினால் ஏற்பட்ட பிரச்சனைகளால் தனியார் மீன்பிடி விசைப்படகு வாங்க 20%(ரூ. 1/- இலட்சத்திற்குள்) வழங்கும் திட்டம் அமுல்படுததப்பட்டது. இதில் 20% தொகையை மீன்பிடி விசைப்படகு வாங்குபவரும் 60% தொகையை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாக பெறவேண்டும். 1992-93-ஆம் ஆண்டில் அரசு ரூ. 50/- இலட்சம் மானியம் வழங்கியது.

6.2. மீன்பிடி கலன்களை இயந்திர மயமாக்கல்

மீனவர்கள் உட்பொருந்தும் இயந்திரம், வெளிப்பொருந்தும் இயந்திரங்களை வாங்கிட உதவும் திட்டம் பல வருடங்களாக நடப்பில் உள்ளது. இத்திட்டத்தால் இவ்வியந்திரங்களை வாங்குவதற்கு ரூ. 10,000/-வரை மான்யம் வழங்கப்படுகிறது.

கட்டுமரம், வள்ளம் போன்ற மீன்பிடி கலன்களில் இவைகளை பொருத்துகிறார்கள். 1987-88-ல் இருந்து இதுவரை 3811 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீன்பிடி கலன்களை உடமையாக கொண்டுள்ள மீனவர்கள் கடலில் நெடுநேரம் தங்கி மீன்பிடித்து நல்லநிலையில் மீனை கரைக்கு கொண்டுவர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் காற்றினை நம்பி தொழில்புரிந்த மீனவர்கள் நவீன இயந்திரங்களை பயன்படுத்தும் நிலை உருவாகி உள்ளது. 500 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ. 50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

6.3. மீன்பிடி துறைமுகங்களும், மின்பிடி இறங்குதளங்களும்

கடந்த பல ஆண்டுகளாக கடல் மீனவர்களுக்கு மீன்பிடி கலன்களை பாதுகாப்பாக நங்கூரமிடவும், பிடித்துவரும் மீன்களை கரை சேர்க்கவும் ரூ. 1691.71 இலட்சம் செலவில் 11 நிலையங்களில் மீன்பிடி துறைமுகங்களும், இறங்குதளங்களும் அமைக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 29]

கோட்டைப்பட்டினம் கடற்கரை பகுதிகளில் மீன் ஏலமிடும் இடம், மீன் உலர்த்தும் இடம், வலை பழுதுபார்க்கும் இடம், படகு இறங்குமிடத்து சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகப் பணிகள் நீதிமன்ற தடை உத்தரவு ஒன்றினால் தடைப்பட்டது. இந்த தடை உத்தரவு தற்போது நீக்கப்பட்டது. எஞ்சிய 10 மீட்டர் நீளத்தில் கடல் தடுப்புச் சுவர் அமைத்தல், கடல்நீர் புகாமல் தடுப்புச் சுவருக்கு அப்பால் உள்ள தண்ணீர் நிரம்பிய பகுதிகளை சீர்செய்தல் துறைமுகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகள் துவங்கப்பட்டுவிடும். மீன் ஏலமிடும் கூடம், வலைபின்னும் கூடம், உட்சாலைகள், மின்வசதி ஆகிய 'இதரப் பணிகள்' 1994-95-ல் மேற்கொள்ளப்படும்.

6.4. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திற்கு சில மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளல்

1992-93-ம் வருடம், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் கரையோரச் சுவர் பழுதுபார்த்தல், உட்சாலைகளை தாரிட்டு செப்பனிடுதல்; படகுகளை கட்ட சிமென்டினால் ஆன தூண்களை கட்டுதல் (Bollards) மற்றும் கழிவுநீர் வடிகால்கள் அமைத்தல் போன்ற சில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பு ஆண்டில், கூடுதல் ஜெனரேட்டர் அமைத்தல், மீன் ஏலமிடும் கூடத்திற்கு பழுதுபார்த்தல், கூடுதல் மின்விளககு வசதி, உட்சாலை அமைத்தல், தினசரி மீன்பிடி டோக்கன் வழங்கும் அறையை சீர்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தமிழ்நாடு குடிநீர்வாரியம் துறைமுகத்திற்கு கூடுதல் 1000 லிட்டர் குடிநீர் வழங்க சமீபத்தில் இசைவு அளித்துள்ளது.

6.5. கன்னியாகுமரி மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் கரையோர வசதிகள் ஏற்படுத்துதல்

மீன் ஏலமிடும் மற்றும் சிப்பங்கட்டும் கூடம், வலைப்பின்னும் கூடம், சமுதாயக்கூடம், பனிக்கட்டி நிலையங்கள், பழுதுபார்க்கும் நிலையங்கள், அணுகுசாலைகள், சுற்றுச்சுவர் கட்டுதல், குடிநீர் மற்றும் மின்வசதி ஆகிய அடிப்படை வசதிகள் மாநிலத்தின் கரையோர மீனவர் கிராமங்களில் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வசதிகள் பழையாறு, வாலிநோக்கம், தொண்டு, முட்டம் மற்றும் ஏர்வாடி கிராமங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டன. 1993-94ஆம் வருடம்,

கரையோர வசதிகள், நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பூம்புகார் மற்றும் வெள்ளப்பள்ளம் ஆகிய கிராமங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடிமுனை மற்றும் வள்ளவிளை கிராமங்களில் அமைத்திட அரசு ரூ. 30.01 இலட்சத்திற்கு செலவின அனுமதி அளித்துள்ளது. மீன்துறை துறைமுகப் பிரிவின் முதன்மை பொறியாளர் மூலம் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரர் இறுதி செய்யப்பட்டதும் இக்கிராமங்களில் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

6.6. இராயபுரத்தில் சமுதாயக் கூடம் அமைத்தல்

இராயபுரம் மற்றும் அருகாமையிலுள்ள மீனவர் குப்பங்களில் உள்ள மீனவர் சமுதாயத்தினர் சமுதாய மற்றும் குடும்ப விழாக்களை நடத்த ஏதுவாக, ரூ. 5.00 இலட்சம் செலவில், இராயபுரத்தில் ஒரு சமுதாயக் கூடம் அமைக்கப்படவுள்ளது. மீனவர் சமுதாயத்திற்கு தேவையில்லாத நேரங்களில், இக்கூடத்தினை மற்ற சமுதாயத்தினரும், வாடகைக்குப் பயன்படுத்தலாம். இராயபுரத்தில், இக்கூடம் அமைப்பதற்கான பொருத்தமான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி தொடங்கும்.

6.7 சென்னை மீன்பிடி துறைமுகத்தில், வலை பின்னும் கூடம் அமைத்தல்

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ. 2.00 லட்சம் செலவில் வலைப்பின்னும் கூடம் அமைத்திடும் பணியை சென்னை மீன்பிடி துறைமுக நிர்வாகக்குழு ஏற்றுள்ளது.

மத்திய அரசு, சென்னை மீன்பிடி துறைமுகத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இரண்டாம் நிலைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து உள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவினம் ரூ. 8.50 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான தொகை முழு மானியமாக பெறப்படும்.

மூன்று படகு நிறுத்துமிடங்கள்(Jetties) கராம்பரிய மீனவர்க்கு வலைப்பின்னும் கூடம் மற்றும் படகு பழுதுபார்க்கும் வசதிகள் ஆகியவை அமைக்கும் பணிகள், இத்திட்டத்தில் அடங்கும். தற்போது சென்னை மீன்பிடி துறைமுகத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றிருக்கும் சென்னை மீன்பிடி துறைமுக நிர்வாகக் குழுவே, இரண்டாம் நிலைத் திட்டத்தின் செயலாக்கத்தினையும் ஏற்கும்.

LEGISLATURE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

6.8 காணாமல் போகும் மீன்பிடிப் படகுகள் மற்றும் மீனவர்களைத் தேடி மீட்க முக்கிய இடங்களில் ரேடியோ தொலைபேசி நிலையங்கள் அமைத்தல்.

1993-94-ம் ஆண்டு, இராமேசுவரம் மற்றும் சென்னை ஆகிய இரு முக்கிய இடங்களில் தொடர்புமுனை (Nodal Points) *மையங்கள் அமைத்திட அரசு ரூ. 2.26 இலட்சத்திற்கு செலவின அனுமதி வழங்கியுள்ளது. இவ்விரு இடங்களில் நிலையான தகவல் பெறும் சாதனங்களும், ரேடியோ தொலைபேசியும் நிறுவப்படும். கடலில் இரு மீட்புப் படகுகளில் செய்தி ஒலிபரப்பும் சாதனங்களும் பொருத்தப்படும் இதனால் கரைக்கும், கடலில் இருக்கும் படகுகளுக்கும் தொடர்பு ஏற்படும். கடலில் காணாமல் போகும் படகுகள்/மீனவர்களை கப்பல், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மூலம் தேடும் இந்திய கப்பற்படைக்கு இத்திட்டம் உறுதுணையாக இருக்கும். இந்த கரையில் நிறுவப்படும் நிலையங்கள் (ஆண்டெனா பொறுத்தும் 40 ' உயரமுள்ள தூண் உட்பட) மற்றும் படகுகளில் ரேடியோ, தொலைபேசி சாதனங்களை பொருந்தும் இரண்டு பணிகளும் அரசு நிறுவனமான* (ELCOT) *அரசு மின்னணு கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

6.9. கரையோரத்திலிருந்து கடல்வரை தொடர்பு வசதி

4 கரையோர மாநிலங்களில், கரையோரத்திலிருந்து கடல் பகுதிக்கு தகவல் தொடர்பு ஏற்படுத்த, பெரிய அளவில், மத்திய திட்டத்தின்கீழ், ரூ. 1.27 கோடிக்கான செலவின அனுமதியை மத்திய அரசின ஆழ்கடல் மேம்பாட்டுத்துறை, வழங்கியுள்ளது. இதில் தமிழ்நாட்டிற்கென ரூ. 31.75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை மான்யமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் நாகை மற்றும் தூத்துக்குடியில் மிக உயர்ந்த அலைவரிசை ரேடியோ தொலைபேசி (VHF Radio Telephone MTR 67) *மற்றும் ஆண்டெனா அமைத்திட 90 உயரத்தூண்களும் நிறுவப்படும். ஒவ்வொரு நிலையமும் வாக்கி-டாக்கியும் திசை காட்டியும் உள்ள 125 மீன்பிடி படகுகளுடன் தொடர்பு கொள்ள முடியும். தங்கள் படகுகளில் இச்சாதனங்களை பொறுத்தி உள்ள மீனவர்கள் 25 கி.மீ. சுற்றில் உள்ள இதர மீன்பிடி படகுகளுடனும் கரையோர நிலையங்களுடனும் தொடர்புகொள்ள இயலும். கரையோர நிலையம் அமைக்கவிருக்கும் இடத்தின் மண் பரிசோதனை செய்யப்பட்டு 90 உயரமுள்ள தூண்கள் (அடித்தளத்திற்கு தேவையான பைலீகளின் கன பரிமாணம் உட்பட) அமைப்பதற்கான அளவுகள் குறித்தான*

அறிவுரையும் இந்திய பொறியியல் நிலையத்தின் (IIT) ஆழ்கடல் பொறியியல் மையத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இரு கரையோர நிலையங்கள் அமைப்பட்டவுடன், 250 வாக்கி-டாக்கி பெற்று பயனடைய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கரையோர நிலையத்திலுள்ள கருவிகளை இயக்கவும், பராமரிக்கவும் தாமாக முன்வரும் உள்ளூர் மீனவர் பயனாளிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நாகப்பட்டினத்திலிருந்து ஒரு மீன்துறை ஆய்வாளருக்கும், தூத்துக்குடியிலிருந்து இரு மீன்துறை ஆய்வாளர்களுக்கும் கருவிகளை இயக்கப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி நிலையம் 27-3-94 அன்று துவங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிலையம் செயல்படுகிறது. 50 வாக்கி டாக்கி கருவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6.10 செயற்கைக் கோள் தகவல் மூலம் கடலில் மீன்கள் மிகுதியாகக் கிடைக்கும் பகுதிகள் பற்றிய முன்னறிவிப்பு விரிவாக்கப்பணி.

நம்நாட்டு கடல் மீனவர்கள் பரம்பரையாக தங்களது முன் அனுபவத்தின் அடிப்படையில் மீன் கிடைக்கும் பகுதிக்குச் சென்று மீன்பிடித்து வருகின்றனர். கடலின் நிறம், காற்று வீசும் திசை, நீரோட்டம் போன்ற கடலின் தன்மைகள் பற்றிய தங்கள் அறிவின் அடிப்படையில் கடலில் தொழில் செய்கின்றனர். ஆனால் கடலின் தன்மைகள் அடிக்கடி மாறுபாடு அடைவதால் எப்பொழுதும் மீனவர்கள் செல்லும் பகுதிகளில் மீன் கிடைப்பது உறுதியாக இருப்பதில்லை. கடலின் தன்மைகளும் மீன்களும் காலத்திற்கேற்பவும், இடத்திற்கேற்பவும் மாறிக்கொண்டே இருப்பதால் மீனவர்கள் நல்ல மீன் மிகுந்த பகுதியைத் தேடி அதிக நேரத்தையும், சக்தியையும் செலவழிக்க வேண்டியிருக்கிறது.

தற்போது மீன் மிகுந்த இடங்களை மீனவர்கள் தெரிந்து கொள்வதற்கு செயற்கைக் கோள் தகவல்கள் உதவி புரிகின்றன. முன்னேறிய நாடுகள் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னரே இந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்த தொடங்கிவிட்டனர். நம்நாட்டிலும் இத்தொழில்நுட்பம் மத்திய அரசின் கடல் மேம்பாட்டுத்துறையால் அறிமுகப்படுத்தப்பட்டு ஹைதராபாத்திலுள்ள தேசீய தொலையுணர்வு நிலையத்தின் மூலம் 1990 ஆம் ஆண்டு முதல் கடலோர மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டிலும் இத்திட்டம் 1992ஆம் ஆண்டு முதல் செயல்பட

1994 ஏப்ரல் 29]

தொடங்கி இருக்கிறது. மீன்கள் மிகுதியாகக் கிடைக்கும் பகுதிகள் பற்றிய முன்னறிவிப்பு குறிப்பிட்ட கடலோர ஊரிலிருந்து எவ்வளவு தூரம், எந்த திசை, எவ்வளவு ஆழம் போன்ற விவரங்கள் தந்தி, தொலையச்சு மூலம் தெரிவிக்கப்படுகிறது. வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள் ஆகியவற்றிலும் மாவட்டங்களில் உள்ள மத்திய தந்தி அலுவலகங்கள் உள்ள பேக்ஸ் (FAX) கருவி மூலம் படங்களாகவும் அனுப்பப்படுகின்றன.

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள கடல் நிர்வாக நிலையம் தமிழ்நாட்டில் இத்தொழில்நுட்பத்தை பரப்ப முணைப்பு நிலையமாக செயல்படுகிறது. இத்தொழில் நுட்பத்தை தமிழ்நாட்டு மீனவர்களிடையே விளக்கமாக எடுத்துக்கூறி பரப்புவதில் தமிழ்நாடு மீன்துறை ஈடுபட்டுள்ளது. மீன்துறை அலுவலர்கள் இத்திட்டம் பற்றிய விவரங்கள் அறியும்பொருட்டு அவர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி சென்னை, நாகை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் அளிக்கப்பட்டது. மீனவர்களிடையே இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வு கூட்டங்கள், சதுரங்கப்பட்டினம், உமரிக்குப்பம், கடலூர், பாண்டிச்சேரி, நாகப்பட்டினம், மணமேல்குடி, சின்ன ஏர்வாடி, காரங்காடு மற்றும் இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் நடத்தப்பட்டன. இக்கூட்டங்கள் சென்னையிலுள்ள சமூக சேவை நிறுவனமான கடலோர ஏழை மக்கள் மேம்பாடு செயல்பாட்டு இணைப்பு நிறுவனம், அண்ணா பல்கலைக் கழகம், ஹைதராபாத் தேசீய தொலையுணர்வு நிலையம் ஆகியவற்றுடன் தமிழ்நாடு மீன்துறை இணைந்து நடத்தப்பட்டன. மேலும் இதுபோன்ற கூட்டங்கள் சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூட்டங்கள் மூலம் மீனவர்களிடையே இத்திட்டம் பற்றிய விவரங்களை கற்பிக்கவும் அவர்களிடமிருந்து இத்தொழில் நுட்பம் பற்றிய பின் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கவும் ஆகிய நோக்கங்களுக்காக நடத்தப்படுகின்றன.

மீனவர்களின் ஆலோசனைகள் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமூட்டுவதோடு இந்த முன்னறிவிப்புகளை மிகத் துல்லியமாக அளிப்பதற்கு உதவியாகவும் அமையும். அதன்மூலம் நமது மீனவர்களின் மீன்பிடிப்பு அதிகரித்து பிற முன்னேறிய நாட்டு மீனவர்கள் போல் அவர்களின் வாழ்க்கைத் தரமும் உயர வழிவகை ஏற்படும்.

[*1994 ஏப்ரல் 29*

6.11 மீனவர் பயிற்சி நிலையங்கள்

விசைப்படகினையும், நவீன மீன்பிடி கருவிகளையும் இயக்குவதற்கும் அதனை பராமரிப்பதற்கும் தக்க பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் 6 இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்களை மீன்துறை நிறுவியுள்ளது. ஒவ்வொரு மீனவர் பயிற்சி நிலையமும் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த 50 முதல் 60 வரையிலான மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க போதுமான வசதியும் கொண்டுள்ளது. அத்துடன் சிறு தரக் கம்மியர் பயிற்சியும் மூன்று பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. இம் மீனவர் பயிற்சி நிலையங்களில் மீன்பிடி கலங்களின் பயிற்சி பெற்றவர்கள்; கடலோர காவற்படை துறைமுகக் கழகம், பிற மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் கடற்படை ஆகிய பிரிவுகளில் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். மீனவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கான உதவித்தொகை மாதமொன்றுக்கு ரூ. 100-/ ஆகவும் கடல் தினப்படி 0.75 பைசாவாகவும் வழங்கப்படுகிறது.

6.12. தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம்.

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்கு முறை சட்டம் 1983-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6-ம் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் படகுகளை பதிவு செய்தல், மீன் பிடிப்பை ஒழுங்குப்படுத்துதல், விசைப்படகுகள் கடற்கரையோரப் பகுதிகளில் மீன்பிடிப்பதைத் தடுத்தல் போன்றவை செயற்படுத்தப்படுகின்றன. மீன்துறையின் அதிகாரம் பெற்ற துறை அலுவலர்களால் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மத்திய அரசு ஐந்து பாதுகாவல் படகுகள் வாங்கிட நிதி வழங்குவது அறிவித்துள்ளபடியால் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு முறைப்படுத்தும் சட்டம் 1983ஐ மிகவும் நன்றாக கடைபிடித்திட முடியும். இந்த ஐந்து படகுகள் வாங்குவதற்கான செலவினத்திற்கு முதல் தவணையாக ரூ. 1.80 கோடி மத்திய அரசு ஒப்பளித்துள்ளது. இந்த படகுகளின் நீளம், அகலம், ஆழம் இழுக்கும் திறன், இயந்திரத்தின் சக்தி, இயங்கும் சக்தி (ஒருநாளுக்கு செயல்படும் மணியின்அளவு) படகில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் கருவிகள் அளவுகள் முதலியவற்றை இந்திய அரசு நியமித்துள்ள தொழில்நுட்பக்குழு முடிவு செய்துள்ளது. இந்த படகுகளை வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த படகுகள் சென்னை, மல்லிப்பட்டினம், இராமேசுவரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்படும்.

1994 ஏப்ரல் 29]

6.13. பணியாளர் குடியிருப்பு கட்டுதல் மற்றும் தினசரி மீன்பிடித்தலுக்கு டோக்கன் வழங்கிட சிறு அறைகள் கட்டுதல்:

மீனவர்களின் பாதுகாப்பிற்கும் மற்றும் அவர்களை எளிதில் அடையாளம் காண உதவிடும் வகையில் அவர்களுக்கு தினமும் மீன்பிடிக்க அனுமதி வழங்கிடும் டோக்கன்களை வெவ்வேறு கரைப்பகுதிகளில் வழங்கும் திட்டத்தினை அரசு ஏற்படுத்தியுள்ளது. தற்சமயம் இந்த டோக்கன்கள் தற்காலிகமாக நிறுவப்பட்ட கூடங்களிலிருந்து வழங்கப் படுகின்றன. எந்தவித இடர்பாடும் இல்லாமல் கடலில் தொழிலுக்குச் சென்றிட உதவிடும் பொருட்டு, மீனவர்களுக்கு விரைவாக டோக்கன்கள் வழங்கிட ஏதுவாக, சிறு அறைகள் **(Booths)** ரூ. 1.50 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1. மண்டபம்	..	2	எண்கள்
2. இராமேஸ்வரம்	..	1	எண்
3. ஜகதாப்பட்டினம்	..	1	எண்
4. கோட்டைப்பட்டினம்	..	1	எண்

இத்திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மற்ற இடங்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

6.14 அடையாள அட்டை வழங்கும் முறையில் செயலாற்றும் மீன்துறை அலுவலர்கள் திறமையுடனும், சிரமமின்றியும் செயலாற்ற துறையின் 10 அலுவலர்களுக்கு அலுவலர்கள் குடியிருப்பு ரூ. 13.45 இலட்சம் மதிப்பில் 1994-95-ம் ஆண்டில் கட்டப்பட உள்ளது. அவற்றில் இரண்டு குடியிருப்புகள் மீன்துறை உதவி இயக்குநர்களுக்கும், ஒரு குடியிருப்பு இராமேஸ்வரத்திலும் மற்றொன்று மண்டபத்திலும் மூன்று குடியிருப்புகள் மீன்துறை ஆய்வாளர்களுக்கு இராமேஸ்வரம், மற்றும் மண்டபத்திலும், மேலும் மூன்று குடியிருப்புகள் மீன்துறை சார் ஆய்வாளர்களுக்கு இராமேஸ்வரம், மண்டபம், கோட்டைப் பட்டினம் ஆகிய இடங்களிலும் இரண்டு குடியிருப்புகள் மீன்துறை மேற்பார்வையாளர்களுக்கு ஜெகதாப்பட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினத்தில் அமையும், இத்திட்டம் படிப்படியாக இதர முக்கிய இடங்களிலும் செயல்படுத்தப்படும்.

7.0. கடலோர மீன்வளர்ப்பு:

7.1. உவர்நீர் மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமை அமைத்தல்:

நம் மாநிலத்தில் மொத்தம் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய ஐந்து உவர்நீர் இறால் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்ளன. 1991-ம் ஆண்டில் தஞ்சாவூர், வ.உ.சிதம்பரனார் மற்றும் தென்னாற்காடு-வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் மூன்று உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன. 1992ம் ஆண்டில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஒரு உவர்நீர் மீன்வளர்போர் மேம்பாட்டு முகமையும், 1993-ம் ஆண்டில் இராமநாதபுரத்தில் ஒரு உவர் நீர் மீன்வளர்பபோர் மேம்பாட்டு முகமையும் அமைக்கப்பட்டது. இறால் மீன்வளர்ப்பானது அறிவியல் முறையில் முறையாக செயல்படுத்தப்பட்டால் மிகவும் லாபகரமான செயல்திட்டமாகும். இருப்பினம் இத்திட்டத்தில் 1.5. மீ ஆழமுள்ள குளங்கள் வெட்டுவதற்கும் அக்குளங்களுக்கு கரைகள், நீர் கொண்டு செல்ல கால்வாய்கள், நீர் வெளியேற்றுவதற்கான அமைப்புகள் போன்ற நிலையான அமைப்புகளுக்கு போதுமான நிதி தேவைப்படுகிறது. நீர் இறைப்பதற்கும், காற்றடைப்பான்களை இயக்குவதற்கும் தேவையான அளவில் மின்சாரமும் தேவைப்படுகிறது. மேற்படி நிலையான முதலீட்டுச் செலவீனங்கள் ஒரு ஹெக்டேருக்கு இரண்டிலிருந்து ஐந்து இலட்சங்களாகும். இறால் குஞ்சுகள், இறால் உணவு, பல்வேறு உரங்கள் பண்ணைப்பணியாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கும் நிர்வாக முதலீடு தேவைப்படுகிறது. மீன்வளர்ப்போர்களின் இத்தகைய தேவைகளை பூர்த்தி செய்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுமார் 266 ஹெக்டேர் நிலத்தில் இறால் வளர்ப்பிற்கென 117 கடன் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் 1993-94-ம் ஆண்டில் 42 ஹெக்டேர் நிலத்தில் இறால் வளர்ப்பு மேற்கொள்வதற்கென 23 விண்ணப்பங்கள் வங்கிகளினால் பரிசீலிக்கப்பட்டு, ரூ.72 இலட்சம் கடனாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய விண்ணப்பங்கள் வங்கிகளிடம் நிலுவையாக உள்ளன.

7.2. மீன்வளர்ப்பு தொழில்மையம்:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள தருவைக்குளம் கிராமத்தில் இறால் மீன் வளர்ப்பிற்காக மீன்வளர்ப்பு தொழில்மையம் ஒன்று அமைக்கும் திட்டத்தை அரசு அங்கீகரித்துள்ளது. அரசு சம முதலீடாக ரூ.1.4

1994 ஏப்ரல் 29]

கோடி ஒப்பளித்துள்ளது. அரசு ஆணை பல்வகை எண்.1248 வருவாய்த்துறை, நாள் 13-12-93 ன் படி 49.69 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தை இத்திட்டத்திற்கென எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் முனைவோருக்கு வழங்குவதற்காக, குளங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

7.3. இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்வளர்ப்பு தொழில்மையம்:

இலங்கையின் இனங்கலவரங்களால் பாதிக்கப்படும் இந்திய மீனவர்களின் புனர்வாழ்விற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மீன்வளர்ப்பு தொழில்மையம் அமைப்பதற்கான விரிவான கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. உப்பூர் மற்றும் வளமாவூர் கிராமங்களில் தக்க நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தொழில் மையம் இரால் வளர்ப்பிற்காக 150 ஹெக்டேர் நிலத்தில் அமையும். இத்திட்டத்தினால் 600 மீனவர்கள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்கான அறிக்கை நிதி வழங்கிடும் அமைப்பிற்கு சமர்ப்பிக்கப்படும். இத்திட்டம் தமிழ்நாடு மாநில முதன்மை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

8.0. மீனவர் நலவாழ்வு திட்டங்கள்:

8.1. மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்:

1975-76-ம் ஆண்டில், மீனவர்களின் துயர் துடைத்திட அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டம் அறிவித்ததிலிருந்து 1993-94 ஆம் ஆண்டு வரை 29,304 வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் இதுவரையில் 20,319 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,985 வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 1991-92 ஆம் ஆண்டு முதல் வீடு கட்டி தருவதற்கான செலவினத்தை வீடு ஒன்றிற்கு ரூ. 17,000/-ல் இருந்து ரூ. 26,000/ ஆக திருத்தி அமைத்தது.

1992-93 ஆம் ஆண்டில் இருந்து வீடு கட்டி வழங்கும் திட்டத்தில் மீனவர்கள் பங்கு கொள்வதை ஊக்குவிப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இதனால் வீடு கட்டுவதில் மீனவர்கள் அதிகரிப்பதற்கும், மீனவர்களின் சேமிப்பைக் கொண்டு வீட்டில் கூடுதலாக தேவைப்படும் அலமாரிகள், சமையல் மேடைகள்,

தனியாக குளியல்/கழிவரைகள் முதலிய வசதிகளை அமைத்துக் கொள்ளவும், குறிப்பாக கட்டுமானப் பணியினை விரைவுபடுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. மீனவர்களை ஊக்குவிப்பதற்காக, வீட்டின் மதிப்பீட்டில் 10 விழுக்காடு தொகையை முன்பணமாக கொடுத்து பணியை செய்திடவும், அப்பணத்தை இறுதி தவணையாக அவர்களுக்கு வழ்ங்கப்படும் வகையில் சரிசெய்து கொள்வதன் மூலம் அரசு மீனவர்களை ஊக்குவிக்கிறது. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் விருப்பமுடன் தங்கள் பொறுப்பில் வீடுகளை கட்டுவதற்கு, முன்வராதபோதெல்லாம், கட்டுமான பணியை மீன்துறையின் பொறியியல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டு, ஒப்பந்த புள்ளிமுறை மூலமாகவோ அல்லது அரசு சாரா நிறுவனங்கள் மூலமோ கட்டப்படுகின்றன. 1993-94-ம் ஆண்டில் வீடு கட்டும் திட்டம் அல்லாது 88 ஆழ்கிணறு குழாய்களும், 14 சமுதாய கூடங்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பிரபலமான திட்டம் 1994-95-ம் ஆண்டிலும் தொடரப் படவுள்ளது.

திருச்சினாங்குப்பம் தொகுப்பு வீடுகள் பொறுத்த வரையில் கீழ்க்காணும் நிலைகள் அடையப்பட்டுள்ளது.

492 தொகுப்பு வீடுகள், 15 பகுதிகளாக ஒவ்வொரு பகுதியிலும் கீழ்தளம் மற்றும் இரண்டு மாடிகளை கொண்டுள்ள பணி முடிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான 11 பகுதிகளும் 31-3-94-க்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சியுள்ளவற்றில் 4 பகுதிகள் 1994-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இறுதிக்குள் கட்டி முடிக்கப்பெறும்.

8.2. மீனவர் விபத்துக் காப்புறுதி திட்டம்:

தற்சமயம் மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 10.84 புதுடெல்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு இணையம் லிமிடெட் நிறுவனத்தால் செலுத்தப்படுகிறது. இந்த ஆண்டு சந்தாவினை மாநில மற்றும் மத்திய அரசுகளால் சமமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மீனவர்கள் பங்காக ஏதும் பெறப்படுவதில்லை. மீனவருக்கு இறப்பு மற்றும் நிரந்தரமான உடல் ஊனம் போன்ற இழப்புகள் ஏற்படும்போது காப்பீட்டுத் தொகையாக ரூ. 25,000 வழங்கப்படுகிறது. கண் பார்வை இழப்பு, கை அல்லது கால் இழப்பு போன்ற நிகழ்வுகளுக்கு ரூ. 12,500- வழங்கப்படுகிறது. 1993-94-ம் ஆண்டில் மொத்தம் 2,12,873 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் இக்காப்பீட்டு பலனை பெற்றுள்ளார்கள்.

1994 ஏப்ரல் 29]

இத்திட்டம் தொடங்கப்பட்ட காலம் முதல் 1215 மீனவர் குடும்பங்கள் பயனடைந்ததின் மூலம் மொத்தம் ரூ. 1.76 கோடி காப்பீட்டுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

8.3. கடந்த 1990 முதல் 1993 ஆண்டு வரையிலான காலத்தில் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு 25 மீனவர்கள் இறந்துள்ளனர். இவற்றில் 13 நிகழ்ச்சிகள் 1993-ம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் நிகழ்ந்துள்ளது. இதுகுறித்து நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கடுமையாக இந்திய அரசிற்கு எதிர்ப்பினை தெரிவித்து வந்துள்ளார். முதல்வரின் முனைப்பான செயலின் விளைவாக இந்திய அரசின் அயல் உறவுத் துறை இதுகுறித்து, இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தைகளை தொடங்கியுள்ளது.

1983-ம் ஆண்டில் இலங்கையில் நிகழ்ந்த இனப்பிரச்சினை தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாவது தொடங்கியது. இதனில் சில தாக்குதல்களில் மீன்பிடி கலன்களை கையகப்படுத்துதல் மற்றும் பறிமுதல் செய்தல், வேறு சில நிகழ்ச்சிகளில் மீனவர்களை சிறைப்படுத்தல் போன்ற செயல்கள் இலங்கை கடற்படையினரால் செயல்படுத்தப்படுகிறது. இத்தருணங்களில் மீன்துறை புதுடெல்லியிலுள்ள இந்திய அரசின் அயல் உறவுத்துறை மற்றும் கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் துணைக்கொண்டு மீனவர்களை அடையாளம் கண்டு அவர்களின் விடுதலைக்கு தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். நாம் அவ்வாறு திரும்ப பெறும் மீனவர்களை வரவேற்று அவர்களை வழித்துணையுடன் அவரவரின் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்கிறோம்.

அவ்வாறு திரும்பும் மீனவர்கள் குண்டடிப்பட்ட காயத்துடன் இருப்பின், அவர்கள் அரசு மருத்துவமனைகளில் சேர்ந்திட மீன்துறை ஆவன செய்கிறது. அந்த மீனவர்களுக்கு சிறப்பு சிகிச்சை தேவைப்பட்டால் தொலைதூரம் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைக்கவும் ஆவன செய்யப்படுகிறது. மீனவர் இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பங்களை தொடர்புகொண்டு வருவாய்த்துறையிலிருந்து சட்டப்படியான வாரிசு சான்றிதழ் பெற்றிடவும் இத்துறை ஆவன செய்கிறது. இச்சான்றிதழ் தொகுப்பு மீனவர் காப்பீட்டுத் திட்டத்திலிருந்து நிவாரணம் பெற அடிப்படையான ஒன்றாகும். அவ்வாறு தொகுப்பு காப்பீட்டு திட்டத்தின் கீழ் வரப்பெறாத மீனவர்களுக்கு, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வழங்கப்படுகிறது. இந்த இனத்தில் 1991-92-லிருந்து 1993-94 வரையில் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ. 36,77,500 நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

8.4. 1993ஆம் ஆண்டு நம் தமிழக மீனவர்கள் நெல்லூர் மற்றும் ஓங்கோல் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் தாக்குதலுக்கும் உள்ளாகியுள்ளனர். அவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான தகவல் பெறும்போதெல்லாம் நாம் ஆந்திர அரசிற்கு உடனடியாக எதிர்ப்பு தெரிவித்துள்ளோம். இதுமட்டுமல்லாமல், நெல்லூர் மற்றும் ஓங்கோல் மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு ஆந்திர மீனவர்கள் சட்டவிரோதமாக பிடித்துவைத்துள்ள மீனவர்களை விடுவிக்கிறோம். அதேபோன்று சென்னை மீனவர்களால் சட்ட விரோதமாக பிடித்துவைக்கப்படும் ஆந்திர மீனவர்களையும் விடுவிக்கிறோம். மாவட்ட அளவில் ஒரு குழு மற்றும் மாநில அளவில் ஒரு குழு என இரண்டு கட்ட குழுக்களை நம் மாநில அரசு நியமித்துள்ளது. இக்குழுக்களில் மாவட்ட ஆட்சித்தலைவர், மீன்துறை அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் மீனவர் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பர். இதேபோன்று இரண்டு கட்ட குழுக்களை ஆந்திர மாநில அரசும் நியமித்துள்ளது. இரு மாநில கடல் மீனவர்களுக்கிடையே பிரச்னைகள் ஏற்படும்போது மாவட்ட குழுக்கள் கூடி பேசித்தீர்க்கும். மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுக்கள் வருடத்துக்கொருமுறை கூடி இரு மாநில அளவில் உள்ள பொதுவான பிரச்னைகளை பேசி தீர்வு காணும். இதைத்தவிர இரு மாநில மீனவர்களுக்கிடையில் பிரச்னைகள் ஏற்பட்டால், தங்களுக்குள் பேசித்தீர்த்து உரிய நஷ்டஈடு பெற்றுக்கொள்ளவும் நஷ்டஈடு நிவாரண தீர்வுக்குழு ஒன்று ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

8.5. சென்னைக்கும், இராமேஸ்வரத்திற்கும் துரித தகவல் தொடர்பு வழிகள் அமைத்தல்

இலங்கை கடற்படை தாக்குதலால், நமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு, புயல் மற்றும் வெள்ளம் போன்ற நேரத்தில் ஏற்படும் இயற்கை சேதங்கள் மற்றும் விசைப்படகு மற்றும் கட்டுமரம், நாட்டுப்படகுதாரர்களுக்கு ஏற்படும் தகராறுகளை தீர்க்க அவ்வப்போது களப்பணியாளர்கள் உடனடியாக தலைமையலுவலகத்துடன் தொடர்புகொள்ள மின்அணு தொடர்பு வசதிகள் படிப்படியாக ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. சென்னைக்கும், இராமேஸ்வரத்திற்கும் கனிப்பொறியுடன் தொலைபேசி இணைப்பு

1994 ஏப்ரல் 29]

செய்வதற்கு ரூ. 2.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவரங்கள் கனிப்பொறியில் பதிவு செய்தவுடன் அடுத்தபகுதிக்கு உடனடியாக கிடைக்கும். இதன்மூலம் அரசிற்கு வேகமாக சரியான செய்திகளை பரிமாற்றம் செய்துகொள்ள வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உடனடியாக நிவாரணம் வழங்கவும், திட்டப்பணிகளை உடனடியாக அமுல்செய்யவும் இடர்பாடுகளை நிவர்த்திக்க தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பு கிடைக்கும்.

8.6. தற்போதுள்ள ப்பி.பி.எக்ஸ். போர்டுக்கு பதில் ஈ.ப்பி.ஏ.பி. எக்ஸ் இணைப்பு ஏற்படுத்துதல்:

தொலைபேசி வசதி ஒரு ஆடம்பரபொருளாக இருந்தாலும் நாட்டின் ஒரு முக்கிய தகவல்தொடர்பு கருவியாக பயன்படுகிறது. இது மீன்துறையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இதன்மூலம் மூழ்கிய படகுகள், புயல், வெள்ளம், இலங்கைகடற்படையினரால் நடுக்கடலில் நமது மீனவர்கள் மீது ஏற்படும் துப்பாக்கி சூடு, வானிலை அறிக்கை பெறுதல், அரசு அலுவலகர்களிடமிருந்து தகவல் பெறுதல், பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகளிடமிருந்து பெறப்படும் தேவைகளை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள பயன் படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது மீன்துறையில் இயங்கிவரும் தொலைபேசி இணைப்பகம் முப்பது ஆண்டுகள் முன்பு நிறுவப்பட்டது. தொடர்ந்து பல ஆண்டுகளாக உபயோகப்படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட தேய்மானத்தினால் மாதத்தில் இருபது நாட்கள் இயங்காமல் உள்ளது. இதனால் துறைக்கு கிடைக்கவேண்டிய முக்கிய செய்திகள் உடனடியாக கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த இணைப்பகம் மீன்துறைக்கு மட்டுமல்லாமல், டி.எம்.எஸ் வளாகத்திலிருக்கும் மற்ற துறைகள், கால்நடை பராமரிப்பு துறை வனத்துறை, புள்ளியியல் துறை ஆகிய துறைகளுக்கும் சேர்ந்து இயங்கி வருகிறது. எனவே, தற்போது உள்ள இணைப்பகத்திற்கு பதில், ரூ. 7.50 லட்சம் செலவில் மின்அணு இணைப்பகமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

8.7. சேமிப்பு மற்றும் நிவாரண திட்டம்:

கடல் மீன் பிடிப்பு, பருவ காலத்தை சார்ந்து நடைபெற்று வருகிறது. மீனவர்கள் ஆண்டிற்கு 8 மாதம்தான் கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மீதமுள்ள நான்கு மாதங்களில் கடல் கொந்தளிப்பாக இருப்பதால் மின்பிடிக்கச் செல்வது பாதுகாப்பிற்கு உகந்ததல்ல. எனினும் துணிந்து மீன்பிடிப்பிற்கு சென்றாலும் குறைவான அளவு மீன்களே

கிடைக்கின்றன. எனவே, வறட்சி காலங்களில் மீனவர்களை காத்திட அவர்களுக்கு சிறிதளவாகவேணும் வருமானம் பெறும் அடிப்படையில் இத்திட்டம் அமுல் படுத்தப்பட்டது.

1992-ம் ஆண்டு ஜனவரி திங்களில் இந்திய அரசு தேசீய நலத்திட்டத்தின் கீ'ழ் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் பங்கேற்க முன்வந்தது. இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதம் ஒன்றிற்கு ரூ. 45/--ஐ (ஒரு நாளைய சேமிப்பாக ரூ.1.50/-) திருத்தப்பட்ட திட்டத்தின்கீழ் ஒரு வருடத்தின் எட்டு மாதங்களுக்கு வசூல் செய்யப்படுகிறது. அவ்வாறு வசூல் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.360/- உடன் மத்திய மாநில அரசுகளால் அதே தொகை வழங்கப்படுகிறது. அந்த மொத்தத் தொகை ரூ. 1080/-ஐ (ரூ. 360 X 3) நான்கு வறட்சியான மாதங்களில் ஒவ்வொரு மீனவ பயனடைவோருக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.270/- என்ற அளவில் சமமாக வழங்கப்படுகிறது.

1992–93-ம் ஆண்டினைக் காட்டிலும் 1993-94ம் ஆண்டில் இத்திட்டத்தில் இணைந்த மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டு 82683 உறுப்பினர்களை உள்ளடக்கிய 243 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் பயனடைந்த நிலையில் இன்று 1.11 இலட்சம் மீனவர்களை உள்ளடக்கிய 329 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் வறட்சிகான நிவாரணம் பெறுகிறார்கள். இத்திட்ட மதிப்பீடான 92-93 ஆம் ஆண்டில் ரூ. 5.34 கோடியாக இருந்தது. 1993-94ஆம் ஆண்டில் ரூ.8.80 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது மத்திய மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதுவரையில் 64333 மீனவர்கள் பயனடைய ரூ. 6.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை மீதமுள்ள மீனவர்களுக்கு விரைவில் வழங்கப்படும்.

8.8. மீனவர்களுக்கு புயல் நிவாரணா உதவி அளித்தல் :

1993ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அடித்த புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முழுமையாக சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளை புதிதாக வாங்கவும், பழுதடைந்த படகுகளை பழுது பார்க்கவும், அரசு ரூ. 16.28 இலட்சம் செலவின அனுமதி அளித்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் சேதமடைந்த துறையின் கட்டிடங்கள் மற்றும் இதர சொத்துக்களைப் பழுதுபார்க்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் புயல் நிவாரண நிதி வழங்கப்பட்டது.

1994 ஏப்ரல் 29]

கடந்த புயலின்போது பாதிக்கப்பட்ட சென்னை, செங்கை-எம்.ஜி.ஆர்., தென்னார்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சி, தஞ்சாவூர், நாகை காயிதேமில்லத், புதுக்கோட்டை, இராமநாதபுரம் எட்டு கடலோர மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணமாக அரசாங்கம் ரூ. 46.30 இலட்சங்கள் வழங்கியுள்ளது. இதில் துறையின் படகுகள் மற்றும் பண்ணைகளும் அடங்கும்.

9. மீனவர் கூட்டுறவு சங்கங்கள்

9.1.. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கின்றன. கூட்டுறவு மூலம் மேம்பாட்டுப் பணிகளை ஒருமுகப்படுத்த மீனவர் கூட்டுறவு சங்கங்கள் முயல்கின்றன. இக்கூட்டுறவு சங்கங்கள், மீனவர்களுக்கு கடன் வசதி அளித்தல், மீன்பிடி கருவிகள், தளவாடங்கள், ஆகியவற்றை விநியோகம் செய்தல் மற்றும் பிடித்த மீன்களை விற்பனை செய்யவும் உதவுகின்றன. சில சங்கங்கள் சில இன்றியமையா பொருட்களை விநியோகம் செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. மீனவர்களின் சமூகநிலை மேம்பாட்டிற்கு தேவையான கடன் இடுபொருள் வசதி மற்றும் விற்பனை வசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. தற்சமயம் 2,37,910 மீனவர்கள்/மீனவ மகளிர் கொண்ட 691 பதிவு செய்யப்பட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அரசு பங்கு மூலதனமாக நிதி உதவியை, இச் சங்கங்களுக்கு வழங்குகின்றன. மீனவர் கூட்டுறவு சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற ஏதுவாக, இந்த பங்கு மூலதன வசதி அளிக்கப்படுகிறது.

9.2. ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்

இத்திட்டம், 5 கடலோர மாவட்டங்களான செங்கை எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரியில் முதல்நிலை மீனவர் கூட்டுறவு சங்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 6050 கடல் மீனவர் பயன் பெறுவர். திட்டத்தின் மொத்த செலவினத் தொகையான ரூ. 15.88 கோடியில், தேசீய கூட்டுறவு வளர்ச்சி கழகம், ரூ. 14.49 கோடி கடனாகவும், ரூ.67.44 இலட்சம் மானியமாகவும் அரசுக்கு வழங்க ஒப்புதல் அளித்து. உள்ளது. இதனில் அரசு, தமிழ்நாடு தலைமை மீன்துறை கூட்டுறவு சம்மேளனம் மற்றும் முதல்நிலை மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 786.66 இலட்சம் கடனாகவும், ரூ. 458.38 இலட்சம் பங்கு மூலதனமாகவும், ரூ. 343.16 இலட்சம் மான்யமாகவும் தரவிருக்கிறது.

1993-94-ல் 1290 மீனவர்களைக் கொண்ட 414 பயனனைவோர் அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளது. 34 சங்கங்களில், 22 சங்கங்கள், பங்கு மூலதனத்தை செலுத்தியுள்ளன. இதன்மூலம் அவை செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தை விட 20 மடங்கு அதிகமான கடன் உதவியை சம்மேளனத்திடமிருந்து பெற முடியும். மீன்பிடி உபகரணங்கள் அதாவது படகு, வலை போன்றவை வாங்குவதற்கென, இந்த 22 சங்கங்களுக்கு ரூ. 2.93 கோடி கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது. நாட்டுப் படகுகளுக்கு வெளிப்பொருத்தும்/உட்பொருத்தும் இயந்திரங்கள் 387, வாங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 80 மீனவர்களுக்கும், வ.உ.சிதம்பரனார் மாவட்டத்தில் 20 மீனவர்களுக்கும் 100 வள்ளங்கள் வழங்கிட உள்ளூர் படகு கட்டும் நிலையங்களுக்கு சப்ளை ஆர்டர் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், 22 மெட்ரிக் டன் எடையுள்ள வலை வாங்கிட தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு விவசாய தொழிற் கழகம், திருவனந்தபுரத்திலுள்ள 'மத்ஸ்யாபெட்' (MATSYAFED) நிறுவனங்களுக்கு சப்ளை ஆர்டர் வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய வியாபாரிகளிடம் இருந்து உள்ளூர் கிராமங்களிலேயே, கட்டுமர கட்டைகள் வாங்கப்படுகின்றன.

இத்திட்டத்தில், திட்டம் நிலை மற்றும் செயலாக்கத்தில், பயனடைவோரும் பங்குகொள்ள எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டத்தின் செயலாக்கத்தில் மக்களை ஈடுபடுத்தும் முயற்சி மீனவரிடையே இத்திட்டத்தின் பயன்கள் குறித்தான விவரங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர், இத்திட்டத்தினை, இராமநாதபுரம் மாவட்டத்தில் 17-2-94 அன்று துவக்கி வைத்தார்.

9.3. மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கான பங்கு மூலதன உதவி

1991-92 ம் ஆண்டு முதல், கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கடன் பெற ஏதுவாக மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு பங்கு மூலதன வசதி அளித்து வருகிறது. இக்கொள்கையினால், சில தேர்தெடுக்கப்பட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்கள் படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வாங்கவும் பிடித்த மீன்களை விற்பனை செய்யவும் கடனுதவி பெறுகின்றன.

1993-94-ம் ஆண்டு, 11 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.5.00 இலட்சம் பங்கு மூலதன உதவியாக அளிக்கப்பட்டது.

1994 ஏப்ரல் 29]

10.0. மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்.

10.1. மூங்கிற்கூடைகள் வழங்குதல்

தற்போது மாநிலத்தில் 77 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. 1992-93-ல் 10,000 மீனவ மகளிருக்கு, மூங்கிற்கூடைகள் வழங்க ரூ.10.00 இலட்சம் செலவினம் செய்யப்பட்டது. மீனவ மகளிருக்கு இலவசமாக வழங்கப்பட்ட இக்கூடைகள், மீன்களை விற்பனை செய்வதற்கு உதவின.

1993-94-ம் ஆண்டு (TABCEDCO) *தமிழ்நாடு பிற்பட்டோர் சமூக மேம்பாட்டுக் கழகம் மீன்விற்பனைக்குத் தேவையான மூலதனத்தை மீனவ மகளிருக்கு கடனாக தர முன்வந்தது. 12 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களின் 5000 மகளிர் உறுப்பினர்கள் தலா ரூ. 1,000/- என்ற வகையில் ரூ. 50.00 இலட்சம் கடனாகப் பெற்றுள்ளனர். இத்தொகைக்கான வருடாந்திர வட்டி 6 % ஆகும்.*

10.2. மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திற்கான சிறிய ஊர்தி.

தற்சமயம் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களில் 11210 மகளிர் உறுப்பினர்கள் உள்ளனர். இந்த சங்கங்களின் உறுப்பினர்கள் தற்போது மீன்களை கூடைகளில் பேரூந்துகள் லாரிகள் மற்றும் வேன் ஆகிய ஊர்திகளின் மூலமாக மீன் அங்காடிகளுக்குக் கொண்டு செல்கின்றனர். மீன்மிகவும் விரைவாகக் கெட்டுபோகக்கூடிய தன்மை கொண்ட பொருளாகும். எனவே மீன் மற்றும் இதர பொருட்களை மிகவும் விரைவாகக் கொண்டுசெல்வதற்கு சிறிய ஊர்தி மிகவும் அவசியம் ஆகும். இந்த சிறிய ஊர்தி வாங்குவதற்காக அரசு 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் வழங்கியுள்ளது. 2.5. டன் அளவு உடைய ஒரு மகிந்தரா வேன் வாங்கப்பட்டு சென்னையில் உள்ள சிகப்பதுல்லா மனை மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திற்கு மீன்களை மீன் இறங்கும் இடங்களில் இருந்து அங்காடிகளுக்கு கொண்டுசெல்வதற்காக 4.4.94 அன்று மாண்புமிகு மீன்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

10.3. மீன் விற்பனைக்கான உதவி

1994-95-ல் சுகாதாரமான முறையில் மீன் விற்பனை மேற்கொள்வதற்கென மீனவ மகளிருக்கு மூடியுடன் கூடிய அலுமினியப் பாத்திரங்கள் (Container) *50 % மானிய உதவியுடன் வழங்கப்படவுள்ளன.*

[1994 ஏப்ரல் 29

ஒவ்வொரு பாத்திரத்தின் விலை ரூ. 200/- ஆகும். இதனை ரூ. 100/-க்கு மீனவ மகளிரால் வாங்க இயலும். மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக உள்ள சுமார் 10000 மீனவ மகளிர் இந்த பாத்திரங்களை வாங்க இயலும். இத்திட்டத்திற்கான மானிய உதவித்தொகை ரூ. 10.00 இலட்சம் ஆகும்.

(11) விரிவாக்க கல்வித்திட்டம்

விரிவாக்கத் திட்டத்தின்கீழ், கருத்தரங்குகள் பொருட்காட்சிகள் மாவட்ட மாநில அளவில் நடத்தப்பட்டன. மீனவர்களுக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி பற்றிய விவரங்கள் உள்ளிட்ட மீனளத் துறை அனைத்து செய்திகளும், விவரங்களும் அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

(12) கடல் அருங்காட்சியகம் அமைத்தல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில்மேம்பாட்டுக் கழகம் மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் சென்னைக்கு அருகே ஒரு கடல் அருங்காட்சியகம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. தனியார் இம்முயற்சியில் பங்கு எடுக்க தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஒரு விளம்பரம் கொடுத்துள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கோவாவில் உள்ள தேசீய ஆழ்கடல் கல்வி நிலையத்திடம், இதற்கான தகுந்த இடம் தேர்ந்தெடுக்கும் பணியை ஒப்படைத்துள்ளது. இந்நிலையத்தின் பணிக்கு உதவுவதற்கென சில தகுந்த இடங்களின் பட்டியலும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்ட அறிக்கையை தயார் செய்திட தகுந்த அந்நிய நாட்டு நிறுவனத்தை தேர்ந்தெடுத்தல், திட்டம் தயாரித்தல், திட்டத்தினை செயலாக்கம் செய்ய நிறுவனத்தை (Agency) தேர்ந்தெடுத்தல், கூட்டு முயற்சியில் சேரும் பங்கு தாரரை தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு, தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் தொழில்நுட்ப உதவி வழங்கும்.

(13) தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வரையறுக்கப்பட்டது:

முன்னுரை:

13.1. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் மூலதனம் ரூ. 500.00 இலட்சம், மற்றும் இதனில் செலுத்தப்பட்ட பங்குமுதல் ரூ.320.52 இலட்சம்.

1994 ஏப்ரல் 29]

13.2. இக்கழகம் தற்போழுது கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

(1) கிழக்குக் கடற்கரையில் விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு, நான்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு நாவாய்கள் இயக்குதல்.

(2) எட்டு நீர்த்தேக்கங்களில் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து பராமரிப்பதுடன், அந்நீர்த் தேக்கங்களில் வணிக ரீதியில் மீன்பிடிப்பு நடத்துதல்.

(3) தீவிர மீன்வளர்ப்பு திட்டத்தின் கீழ் பலவகையான குளங்களை நிர்வகித்தில்

(4) நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களில் இருப்பு செய்வதற்கும், மீன்வளர்ப்போருக்கு விற்பனை செய்வதற்கும் நீர்த்தேக்கப் பகுதிகளில் உள்ள மீன்குஞ்சு பண்ணைகளில் தூண்டுதல் முறையில் இனவிருத்தி மூலம் தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்தல்.

(5) சென்னை, மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களை பராமரித்தல்.

(6) மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு துறைகளில் மீனவர்களுக்கு சலுகை / குறைந்த விலையில் டீசல் விற்பனை செய்தல்.

(7) சென்னை மற்றும் இதர முக்கிய நகரங்களில், சில்லரை மீன் விற்பனை நிலையங்களின் மூலம் தரமான மீனை நல்ல நிலையில் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்தல்.

(8) சென்னை இராயபுரத்தில் உள்ள மீன் வலை தயாரிப்பு நிலையத்தில் மீனவர்களுக்கு தரமான வலைகள் தயாரித்து விற்பனை செய்வதற்காக நிர்வகித்தல்

(9) சென்னை அருகே உள்ள நீலங்கரையில் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்து இறால் வளர்ப்போருக்கு விற்பனை செய்தல்.

(10) ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அடிப்படையில் வளர்ப்பு முத்து தயாரித்தல்.

(கடல் வளம்)

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*1994 ஏப்ரல் 29*

13.3. ஆழ்கடல் மீன்பிடிப்பு

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. 1993-94-ம் ஆண்டில் ஜனவரி 1994 முடிய 45.45 டன் இறால் மற்றும் 140.90 டன் மீன் பிடிக்கப்பட்டு ரூ.130.24 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

13.4. உள்நாட்டு மீன்வளம்:

(அ) நீர்த்தேக்கங்கள்: தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறைப்படியாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு பங்கு மீன்பிடிப்பு முறையில் மீனவர்களை பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது.

1. *சாத்தனூர் அணை*
2. *பவானிசாகர்*
3. *அமராவதி*
4. *ஆழியார்*
5. *திருமூர்த்திநகர்*
6. *உப்பார்*
7. *மஞ்சளார்*
8. *பாலார்-பொறந்தலார்*

1993-94-ம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 598.48 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.80.27 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீன்குஞ்சு உற்பத்தி: சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் ஆகிய இடங்களில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளும் அமராவதி, ஆழியார், திருமூர்த்திநகர், மஞ்சளார், பாலார்-பொறந்தலார் மற்றும் உப்பாறு ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளையும் இக்கழகம் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மின்குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், மீன்துறை, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தனியார் மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது. 1993-94 ஆம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 373.40 இலட்சம் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 29]

(இ) குளங்களில் மீன்வளர்ப்பு:

தீவிர மீன்வளர்ப்பு மற்றும் விற்பனை திட்டத்தின் கீழ் 76 பெரிய/சிறிய குளங்களை மீன்வளர்ச்சிக் கழகம் பராமரித்து வருகிறது. 1993-94-ம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 65.26 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 7.64 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

13.5. மீன் பதனிடுதல்:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் 6 பனிக்கட்டி நிலையங்களையும், 4 மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. பவானிசாகர் 3 டன் பனிக்கட்டி நிலையம் நீங்கலாக கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பனிக்கட்டி நிலையங்களையும் பதப்படுத்தும் நிலையங்களும் இராயபுரத்தில் புதியதாக தொடங்கப்பட்ட பனிக்கட்டி நிலையத்தையும் சேர்த்து, அனைத்தும் தனியார் தொழில் முனைவோர்ளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய ரூ. 26.86 இலட்சம் குத்தகைத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

13.6. டீசல் விற்பனை நிலையங்கள் :

இக்கழகம் இராயபுரம், மல்லிப்பட்டினம், தூத்துக்குடி, பழையார் மற்றும் சின்னமுட்டம் அக்கரைப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களில், மீனவர்கள் மற்றும் மீன்பிடிவிசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி ஏழு டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 1993-94-ம் ஆண்டில் சின்னமுட்டம் மற்றும் அககரைப்பேட்டை ஆகிய இடங்களில் டீசல் விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டன. 1993-94 ஆம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 17,032 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.15.75 இலட்சம் தரகுத்தொகை ஈட்டப்பட்டுள்ளது.

13.7. மீன் விற்பனை நிலையங்கள் :

இக்கழகம் சென்னை மதுரை, கோவை, திருச்சி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் மற்றும் வறுத்த மீன் விற்பனை செய்து வருகிறது. 1993-94-ஆம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 604.86 டன் மீன் ரூ. 151.72 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

13.8. மீன்வலை தயாரித்தல்:

இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன் வலை தயாரிக்கும் திறனுடன் மீன் வலை தயாரிப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. 1993-94 ஆம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 43.40 டன் நைலான் வலையும், எச்.டி.பி.இ. வலையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு ரூ. 74.38 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

13.9. இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் :

இக்கழகம் சென்னைக்கு அருகில் உள்ள நீலங்கரையில் ஆண்டிற்கு 16 மில்லியன் உற்பத்தி திறன் உடைய இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் ஒன்றை இயக்கி வருகிறது. 1993-94 -ம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய 10 இலட்சம் இறால் குஞ்சுகள் உறபத்தி செய்யப்பட்டு, ரூ. 1.25 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டு உள்ளது.

13.10. உலர் மீன் கிடங்கு, தூத்துக்குடி.

உலர் மீன் ஏற்றுமதியாளர்களின் நலனைக் கருதி, கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கை இக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. 1993-94--ம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் முடிய ரூ. 0.77 இலட்சம் வாடகை வசூலிக்கப்பட்டுள்ளது.

13.11. வளர்ப்பு முத்துதயாரித்தல் :

தமிழக அரசால் அமைக்கப்பட்ட மதிப்பீடுக் கமிட்டி பரிந்துரைத்துள்ளபடி இக்கழகம் 1-8-1990 முதல் மண்டபத்தில், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அடிப்படையில் வளர்ப்பு முத்துக்களை தயாரிக்கும் திட்டத்தினை துவக்கியுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் ஜனவரி 1994 திங்கள் வரை 2315 காரட் மதிப்புடைய வளர்ப்பு முத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

13.12. கழகத்தின் நிதி நிலை :

1992-93 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ. 548.20 இலட்சம் செலவினத்திற்கு ரூ. 587.78 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. நிகர லாபம் ரூ. 39.58 இலட்சமாகும் 1993-94 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.37.11 இலட்சம் நிகர லாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 29]

14.0. 1994-95-ம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டங்கள்:

1994-95-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1. வைகை மீன்குஞ்சு பண்ணைக்கு நிரந்தரமான தண்ணீர் கிடைக்க ஆழ்கிணறு அமைத்திடல்	2.50
2. தற்போதுள்ள ப்பி.பி.எக்ஸ். போர்டுக்கு பதிலாக ஈ.ப்பி.ஏ.பி. எக்ஸ் (EPABX) சிஸ்டம் அமைத்தல்	7.50
3. சென்னைக்கும் இராமேஸ்வரத்திற்கும் (MODEM) தொடர்புமுறை அமைத்தல்	2.67
4. இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் 10 பணியாளர் குடியிருப்புகளும், அன்றாட அனுமதி சீட்டு வழங்கும் சிற்றறைகள் ஐந்து கட்டுதல்	14.95
5. மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் 10,000 அலுமினிய பாத்திரங்கள் வழங்குதல்	10.00
மொத்தம்	37.62

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
LEGISLATIVE ASSEMBLY

இணைப்பு-IV

[622 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

1994–95

அ. இடஒதுக்கீட்டுக் கொள்கை :

பல்லாண்டுக் காலமாகவே இந்தியாவில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் சில மாநிலங்களில், தமிழ்நாடு ஒன்றாகும். அரசுப்பணிகளிலும், கல்வி நிலையங்களின் அனுமதியிலும் இடஒதுக்கீட்டிற்கான முன்னோடி இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றியது. இக்கொள்கையின் காரணமாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சமூக பொருளாதார மற்றும் கல்வி ஆகிய நிலைகளில் சிறப்பான முன்னேற்றம் அடைந்து வந்துள்ளனர்.

2. தமிழ்நாட்டில் தற்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 18 சதவிகிதமும், பழங்குடியினருக்கு 1 சதவிகிதமும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 சதவிகிதமும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 சதவிகிதமும், பொதுப்போட்டிக்கு 31 சதவிகிதமும் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

3. மொத்த இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்தினை விஞ்சக்கூடாது என்று மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பான வழக்குகளில் இந்திய உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இத்தீர்ப்பினால் தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இந்திய உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளது. இம்மனு உச்சநீதி மன்றத்தில் இன்னமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

[1994 ஏப்ரல் 29

4. மண்டல்குழு பரிந்துரைகள் தொடர்பான வழக்குகளில் உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு மற்றும் கல்வி நிலையங்களில் அனுமதி தொடர்பான வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியவற்றால் கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்ப்பதில் அண்மையில் பெருமளவில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

5. இடஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு விஞ்சக்கூடாது என்ற இடைக்கால ஆணை உள்ளிட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினால் மக்கள் பெருமளவு கொந்தளிப்பில் உள்ளனர். "பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கை ஒரு சமூகப் பிரச்சினை ; அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் செயலாண்மை மற்றும் பொருள் விளக்கம் என்ற நிலைகளின் ஆளுகைக்கு உட்பட்டிருக்க வேண்டும் ; அவ்வப்போது அரசு செயல்படுத்தும் சமூகக் கொள்கை பாதிப்படையச் செய்வதற்குப் பதிலாக ஆதரவாக இருந்திடல் வேண்டும்" என்று மாநில அரசு கருதுகிறது. 1951-ஆம் ஆண்டில் எழுந்த இதே போன்றதொரு சூழ்நிலை தான் அப்போதைய சென்னை மாநில அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையினை நீதிமன்றம் தள்ளுபடி செய்தபொழுது, நாடாளுமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முதல் திருத்தத்தினைக் கொண்டுவர வழிவகை செய்தது.

6. தற்போதுள்ள 69 சதவிகித இடஒதுக்கீட்டினைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. தற்பொழுது உள்ள 69 சதவிகித இடஒதுக்கீட்டுக் கொள்கையினைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்த உதவும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குத் தேவையான திருத்தத்தினைக் கொண்டு வருவதைத்தவிர மாற்று வழி ஏதுமில்லையென்று அரசு கருதுகிறது. அரசுப் பணிகள் மற்றும் கல்விநிலையங்களில் அனுமதி ஆகியவற்றில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைத் தொடர்ந்து செயல்படுத்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குத் தகுந்த திருத்தத்தினை உடனடியாகக் கொண்டுவருமாறு மைய அரசினைக் கேட்டுக்கொண்டு 9-11-1993 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின் நகல் பிரதமருக்கு, முதலமைச்சரால் அனுப்பிவைக்கப்பட்டது.

7. அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டு மக்களின் ஒன்றுபட்ட உணர்வை வெளிப்படுத்திடவும், அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்தம் செய்ய துரித நடவடிக்கைகள்

1994 ஏப்ரல் 29]

மேற்கொள்ளப்பட வேண்டும் என மைய அரசினை வலியுறுத்திடவும், 16-11-93 அன்று தமிழ்நாடு முழுவதும் பொதுவேலை நிறுத்தம் மேற்கொள்ளலாம் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசனையைத் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை ஏற்றுக்கொண்டது. தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான ஆதரவு இருந்ததால் பொது வேலைநிறுத்தம் மிக அமைதியாக நடைபெற்றது.

8. பெரும்பான்மைத் தமிழ்நாட்டு மக்களின் உணர்வினைப் பிரதிபலிக்கும் வண்ணம் 26-11-93-ல் நடைபெற்ற அனைத்துக் கட்சிக்கூட்டம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றத்திற்கு 69 சதவிகித இடஒதுக்கீட்டினைத் தொடர்ந்து செயல்படுத்துவதை உறுதி செய்துகொள்வதில் எவ்வித ஐயப்பாடோ அல்லது காலதாமதமோ கூடாது என்று வலியுறுத்தியது. 'அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படவேண்டும்: அல்லது சிறப்புச் சட்டம் ஒன்றை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும்' என்று அக்கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது. மாநில அரசின் தற்போதைய இடஒதுக்கீட்டுக் கொள்கை தொடர்ந்திடத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் மாநில அரசினைக் கேட்டுக்கொண்டனர். அதற்கேற்ப, குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்குத் தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் இடங்கள் மற்றும் மாநில அரசின் கீழுள்ள பணிகளில் நியமனங்கள் மற்றும் பதவிகளை ஒதுக்கீடு செய்வதற்கான சிறப்புச்சட்டம் 30-12-93 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. பெரும்பான்மைத் தமிழக மக்களின் விழைவுகளுக்குச் செயல்வடிவம் தந்திட இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது. இச்சட்ட முன்வடிவு தற்போது இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

ஆ. நலத்திட்டங்கள் :

9. இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாட்டிற்கென (அ) கல்வி, (ஆ) பொருளாதார மேம்பாடு மற்றும் (இ) இதர நலத்திட்டங்களில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

[1994 ஏப்ரல் 29

(1) கல்வி :

10. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு கல்வி அடிப்படைத் தேவையாகும். ஆகவே, அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தபபட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினருக்கு நல்ல கல்வி வழங்குவதில் கவனம் செலுத்தி வருகிறது. இலவசக்கல்வி அளித்தல், ஆங்கில மொழி வழியில் பயிலும் மாணவ, மாணவியருக்குக் கல்விக் கட்டணத்தை ஈடு செய்தல், புத்தகங்கள், எழுதுபலகைகள் மற்றும் சீருடைகள் இலவசமாக வழங்குதல், படிப்பு உதவித் தொகைகள் வழங்குதல் மற்றும் பள்ளிகளையும், மாணவ, மாணவியர் இல்லங்களையும் பராமரித்தல் போன்றவை அரசு வழங்கும் பலவிதமான சலுகைகளுள் அடங்கும். அனைத்திந்தியப் பணிகளில் சேருவதற்கான தேர்வுகள் எழுதும் மாணவ, மாணவியருக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக தனிப்பயிற்சி நிலையம் ஒன்றையும் சென்னையில் இத்துறை நடத்தி வருகிறது.

பள்ளிகள் :

11. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலத்துறை 293 பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 1993-94 ஆம் ஆண்டில் 53,202 மாணவ, மாணவியர் பயின்று வந்தனர். மேற்கண்ட 293 பள்ளிகளில் சீர்மரபின மக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள மதுரை மற்றும் திண்டுக்கல்--அண்ணா மாவட்டங்களில் மட்டும் 265 பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய 28 பள்ளிகள் சீர்மரபின மக்கள் பரவலாக உள்ள இதர 10 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே நிர்வாக வசதி கருதி இந்த 28 பள்ளிகளும், 1993-ஆம் ஆண்டு மே மாதம், கல்வித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டுள்ளன.

12. இப்பள்ளிகளின் கல்வித்தரத்தையும் மற்றைய பிற வசதிகளையும் மேம்படுத்தும் பொருட்டு இவ்வரசு பல திட்டங்களை செயலாக்கி வருகிறது. 1993-94 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் உள்ள வடக்கம்பட்டி, பூசலாபுரம், பி.அணைக்கரைப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மூன்று நடுநிலைப்பள்ளிகளும், உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. இது போன்று மேலக்கால் மற்றும் தும்மக்குண்டில் உள்ள இரு உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இதற்கான செலவு ரூபாய் 11.40 இலட்சம் ஆகும்.

1994 ஏப்ரல் 29]

இதுபோன்று நடப்பு நிதியாண்டிலும் ரூபாய் 7.92 இலட்சம் செலவில் மேலும் மூன்று நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளாகவும், ஒரு உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாகவும் உயர்த்தப்படவுள்ளன.

13. இக்கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தமிழ் ஆகியவற்றில் நூலகங்களுக்கான புத்தகங்கள் வழங்க ரூபாய் 3.61 இலட்சம் நடப்பு நிதியாண்டில் (1994-95) வழங்கப்படும்.

14. இது தவிர மதுரை மாவட்டத்தில் மேலக்கால் கள்ளர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூபாய் 30.54 இலட்சத்தில் பத்து கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென நடப்பு நிதியாண்டில் (1994-95) ரூபாய் 12.22 இலட்சம் செலவிடப்படஉள்ளது.

15. இவைகளைத் தவிர இப்பள்ளிகளைப் பராமரிப்பதற்கென 1994-95-ல் ரூபாய் 871.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்தகங்கள் - எழுதுபலகைகள் வழங்குதல்:

16. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாக புத்தகங்களும்-எழுதுபலகைகளும் வழங்கிட 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 28.53 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சீருடைகள் (பள்ளிகள்/மாணவரில்லங்கள்):

17. சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஒவ்வொரு வருடமும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளின் போது புதிய சீருடைகள் வழங்கப்படுகின்றன. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக நடத்தப்படும் பள்ளிகளைச் சார்ந்த மாணவரில்லங்களில் தங்கிப்படிக்கும் மாணவ, மாணவியருக்கும் சாதி வேறுபாடின்றி ஆண்டுதோறும் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. 15,880 பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியரும் 58,637 மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியரும் 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 29

18. இத்திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ 62. 33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உதவித்தொகைகள் :

19. பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகைப்படாத பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்குப் பொதுவாக கல்வித்தொகை வழங்கப்படுகின்றன.

பள்ளிப்படிப்பு உதவித்தொகை :

20. பள்ளிப்படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் 9ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் தகுதி வாய்ந்த பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும், 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கும் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறிப்பிட்ட பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மாணவ, மாணவியர் செலுத்தும் சிறப்புக் கட்டணமும், 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் செலுத்தும் தேர்வுக்கட்டணமும் அவர்களுக்கு அரசால் ஈடு செய்யப்படுகின்றன.

பள்ளிமேற்படிப்பு உதவித்தொகை:

21. பள்ளிமேற்படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 12,000/- க்கு மிகைப்படாத, தகுதி வாய்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு பிளஸ் 1 வகுப்பு (மேல்நிலைக்கல்வி) தொடங்கி ஆராய்ச்சி பட்டப்படிப்பு வரையிலும் உதவித்தொகைகள் நேரடியாக பணமாக வழங்கப்படுகிறது. பள்ளி மேற்படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் அரைக்கட்டணச்சலுகை, சிறப்புக்கட்டணம், புத்தகக்கட்டணம், மற்றும் தேர்வுக்கட்டணங்கள் ஆகியவை உதவித்தொகை விதிகள் அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகின்றன. கல்வி நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளிலும் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு, உண்டி, உறையுள் கட்டணங்கள் உதவித்தொகைகள் விதிகள் அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 29]

22. உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 722.16 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலவசக்கல்வி :

23. மூன்றாண்டுப் பட்டப்படிப்பு பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் சட்டம் ஆகிய தொழில்பட்டப்படிப்பு படிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது: (அ) பெற்றோரின்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000/- க்கு மேற்படக்கூடாது, (ஆ) பட்டதாரிகள் இல்லாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக, அம்மாணவ, மாணவியர் இருக்க வேண்டும். மேலும் அம்மாணவ, மாணவியர் அக்குடும்பத்தில் தொழில் படிப்பு படிக்கும் முதல் மாணவராக இருத்தல் வேண்டும்.

24. மேற்கண்ட இலவசக்கல்வித் திட்டம், 1990-91 ஆம் ஆண்டிலிருந்து மேற்கண்ட மூன்று நிபந்தனைகளுக்குட்பட்டு பட்டப்படிப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும், 1991-92 ஆம் ஆண்டிலிருந்து தொழில் பட்டப்படிப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் விரிவாக்கப்பட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

25. இத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியர் கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள் மற்றும் இன்னபிறகட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விளக்களிக்கப்பட்டுள்ளனர். இதனால் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பு அக்கல்வி நிறுவனங்களுக்கு இத்துறையினால் ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டங்களின்கீழ் 1993-94 ஆம் ஆண்டில் 2,07,921 மாணவ, மாணவியர் பயனடைந்தனர்.

26. மேற்கண்ட திட்டங்களுக்கென 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 541.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவு மான்யம் :

27. தனியாரால் நடத்தப்பட்டு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 85/- என்ற வீதத்தில் ஓராண்டில் 10 மாதங்களுக்கு உணவு மான்யம் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000/- க்கு மிகைப்படாமல் உள்ள மாணவ, மாணவியர் இம்மானியம் பெறத் தகுதி உடையவர் ஆவார்கள். 1993-94 ஆம் ஆண்டில் 2,760 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும சீர்மரபின வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயனடைந்தனர்.

28. நடப்பு நிதியாண்டில் (1994-95) இத்திட்டத்திற்கென ரூ. 18.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பரிசுகள் வழங்குதல் :

29. ஒவ்வொரு ஆண்டும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தனித்தனியாக 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவிலான பரிசுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு ரூ. 1,500/- முதல் ரூ. 3,000/- வரையிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கு ரூ. 3,000/- முதல் ரூ.5,000/- வரையிலும் மாவட்ட அளவிலான பரிசுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு ரூ. 150/- முதல் ரூ. 1,500/- வரையிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு ரூ. 300/- முதல் ரூ. 3,000/- வரையிலும் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கும் பொதுவானதாகும்.

30. 1994-95 ஆம் ஆண்டு பரிசுகள் வழங்குவதற்கென்று ரூ. 1.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 29]

பேரறிஞர் அண்ணா நினைவு விருது (12 ஆம் வகுப்பு மாணவ/ மாணவியருக்கு) :

31. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மாணவ, மாணவியருள் ஒவ்வொரு மாவட்டத்திலும், 12-ஆம் வகுப்பு தேர்வில் முதல். இரண்டாம் மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்லூரியில் சேர்ந்துள்ள இரு மாணவர்களுக்கும், இரு மாணவியருக்கும் ஆண்டொன்றுக்கு தலா. ரூ. 2,000/- என பேரறிஞர் அண்ணா நினைவு விருது வழங்கப்படுகிறது.

தந்தை பெரியார் நினைவு விருது (10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு) :

32. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்புத் தேர்வில் முதல், இரண்டாம் நிலை மதிப்பெண்களைப் பெற்று டிப்ளமோ படிப்புக்கு பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்துள்ள இரு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இரு மாணவர்களுக்கும், இரு மாணவியருக்கும் ஆண்டொன்றுக்கு தலா. ரூ. 2,000/- என மூன்றாண்டுகளுக்குத் தந்தை பெரியார் நினைவு விருது வழங்கப்படுகிறது.

33. மேற்கண்ட இரு விருதுகளுக்காக 1994-95 ஆம் ஆண்டில் ரூபாய் 9.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு மாணவ, மாணவியர் விடுதிகள் :

34. அரசின் சார்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக 804 மாணவ, மாணவியர் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1993-94-ல் இவ்விடுதிகளில் தங்கிப் பயின்ற மாணவ, மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 44,004 ஆகும். விடுதிகளில் மாணவ, மாணவியரை அனுமதிப்பதற்குப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000/--க்கு மிகாமல் இருக்க வேண்டும். தற்போது இத்துறையால் நடத்தப்படும 804 மாணவ, மாணவியர் விடுதிகளில் 119 விடுதிகள் மட்டும் அரசுக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏனைய விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன. மாணவ, மாணவியர் நல்ல சூழலில் கல்வி கற்க வேண்டிய தேவைகளை அரசு நன்கு உணர்ந்து, மாணவ மாணவியர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் ஏற்படுத்துவதைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது. 1993-94 ல் மாணவியர்க்கெனப் பதினொன்று புதிய விடுதிக் கட்டிடங்கள் ரூ. 143.00 இலட்சம் செலவில்

கட்ட உத்தரவிடப்பட்டு. அவ்வாண்டில் ரூ. 48.00 இலட்சம் செலவிட அனுமதிக்கப்பட்டது.

35. 1994-95 ஆம் ஆண்டில் 6 பிற்படுத்தபட்ட மாணவியர் விடுதிகளுக்கும், 6 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிகளுக்கும் மொத்தம் ரூ. 68.64 இலட்சம் செலவில் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன.

36. இது தவிர 1994-95ல் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வடகாடு சீர்மரபினர் பெண்கள் விடுதிக்கு ரூ. 2.15 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

37. 1994-95 ஆம் ஆண்டு பள்ளிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவியருக்கென 16 புதிய விடுதிகள் ரூ. 29.84 இலட்சம் செலவில் திறக்கப்பட உள்ளன.

38. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி இத்துறையினரால் தனியார் கட்டிடங்களில் நடத்தப்படும் விடுதிகளில் அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அலுவலர் நேரில் சென்று ஆய்வு செய்துள்ளார். அந்த ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் 409 விடுதிகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

39. மாணவ, மாணவியர் இல்லங்களில் பராமரிப்பைச் சீரமைக்கவும் நல்லமுறையில் நிர்வகிக்கவும், சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரை அல்லது பள்ளித் தலைமை ஆசிரியரைத் தலைவராகவும், இரண்டு பெற்றோர், இரண்டு ஆசிரியர் பிரதிநிதிகள், மாணவர் இல்லத்தின் காப்பாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

40. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும், மாணவ, மாணவியரின் பொது அறிவினை வளர்க்கும் நோக்கோடு ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில நாளேடு ஒவ்வொரு விடுதிக்கும் வழங்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டு ரூ.15.68 இலட்சம் செலவில் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் தங்களது அடிப்படை அறிவை மேம்படுத்திக் கொள்ள வசதியாக எல்லா மாணவ, மாணவியர் இல்லங்களிலும் சிறு நூலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

1994 ஏப்ரல் 29]

உணவுச் செலவு :

41. நடைமுறையில் உள்ள விலைவாசிக் குறியீட்டின் ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும், மாணவ, மாணவியருக்கென உணவுக் கட்டணத்தை 1993-94 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு உயர்த்தி உள்ளது :—

வரிசை எண்.	விடுதி	ஒரு மாணவருக்கு ஒரு மாதத்திற்கு அனுமதிக்கப்பட்ட உணவு கட்டணம் — சென்னை மாநகரம்	புறநகர் பகுதி
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
1.	கல்லூரி மாணவர்/மாணவியர்	180	175
2.	தொழிற்பயிற்சி பெறும் மாணவர்/ மாணவியர்		
3.	பள்ளி மாணவர்/மாணவியர்	120	120

42. இவ்விடுதிகளைப் பராமரிப்பதற்காக 1994-95 ஆம் நிதியாண்டில் ரூ.1,616.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாடு :

43. இலவசக்கருவிகள் வழங்குதல், முடிதிருத்தகங்கள், சலவையகம், நடமாடும் சலவையகம், இலவச வீட்டுமனை ஒதுக்கீடு ஆகிய திட்டங்களின் கீழ் பயன்பெறுவோரின் பெற்றோர்/பாதுகாவலர்/ பயன்பெறுவோர் ஆண்டு வருமான வரம்பினை ரூ.6,400/-லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தி, 1993 -ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவின் பலனாக அதிக எண்ணிக்கையிலான பிற்படுத்தப்பட்டோர் /மிகப் பிற்படுத்திப்பட்டோர்/ சீர்மரபினர் இத்திட்டங்களின்கீழ் பயனடைவார்கள்.

தொழிற்கருவிகளை இலவசமாக வழங்குதல் :

44. முடிதிருத்துவோர், சலவைத்தொழிலாளர் மற்றும் போயர்களுக்கு' முறையே, முடிதிருத்தும் கருவிகள் அடங்கிய பெட்டிகள், துணி தேய்ப்புப் பெட்டிகள், கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தொழிற்கருவிகள் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்குட்பட்டு இருப்பவருக்கு மட்டும் இலவசமாக

வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் வழங்கப்படும் கருவிகள் எண்ணிக்கை வருமாறு :

தொடர் எண்.	கருவியின் பெயர்	ஆண்டுதோறும் வழங்கப்படும் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1.	துணித்தேய்ப்புப் பெட்டிகள்	4,000
2.	முடிதிருத்தும் கருவிகள்	500
3.	கல்லுடைக்கும் கருவிகள்	500

இவ்வகை உதவிகளை 1993-94 ஆம் ஆண்டில் 5,000பேர் பெற்றனர்.

மேற்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமதிப்பீட்டில் ரூ.48.53 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடிதிருத்தகம், சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைத்தல் :

45. கடனுதவியளிக்கும் திட்டத்தின் கீழ் முடிதிருத்தகம், சலவையகம், மற்றும் நடமாடும் சலவையகம் அமைக்கப் பின்வருமாறு கடனுதவியளிக்கப்படுகிறது :—

திட்டத்தின் பெயர்.	பயனடைவோர் எண்ணிக்கை.	அரசு மானியம்	வங்கிக் கடன் உதவி.	பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் ஆகும் மொத்த செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)
		ரூ.	ரூ.	ரூ.
1. முடிதிருத்தகம்	200	1,500	3,500	5,000
2. சலவையகம்	150	1,500	3,500	5,000
3. நடமாடும் சலவையகம்	50	600	1,400	2,000

46. இத்திட்டத்திற்கென சென்ற ஆண்டைப்போன்றே நடப்பு நிதி ஆண்டிலும் (1994-95) 400 பேருக்கு உதவி அளிக்க ரூ. 5.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 29]

நிலம் கையகப்படுத்துதல் :

47. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் வழங்கும் திட்டத்தை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதுவரையில் 11,972 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1993-1994-ம் ஆண்டு மட்டும் 2608 வீட்டுமனைப்பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 119.60 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

48. இத்திட்டத்திற்கென நடப்பு நிதியாண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்துஇந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் :

49. அனைத்து இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதும் மாணவ, மாணவியருக்குப் பயிற்சியளிக்க சிறப்புப் பயிற்சி மையம் ஒன்றை இத்துறை நடத்தி வருகின்றது. அனைத்து இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதும் 25 மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்காக கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் பயிற்சி மையம் ஒன்றை அமைத்துள்ளது. இது தவிர அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, புனித சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை மற்றும் புனித ஜோசப் கல்லூரி, திருச்சி ஆகிய நான்கு இடங்களில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கென பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

50. மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.250-க்கு மேற்படாத வகையில் உணவுக் கட்டணமும், தங்கும் இட வசதியும் அளிக்க அரசு வகை செய்துள்ளது. ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சியில் அதிக எண்ணிக்கையிலான மாணவ, மாணவியர் சேர்ந்து பயன்பெறும் நோக்கோடு சென்னையில் உள்ள சிறப்பு பயிற்சி நிலையம் மற்றும் ஐந்து பயிற்சி நிலையங்களிலும் சேருவதற்கு இருந்த வருமான வரம்பினை (ரூ.24,000/–) அரசு நீக்கியுள்ளது. இந்த தேர்வுகளைத் தவிர, இந்திய தொழில்நுட்பக்கல்வி நிலையங்களில் அனுமதி பெறுவதற்காக நடத்தப்படும் கூட்டு நுழைவுத் தேர்வுகளுக்கும் தனிப்பயிற்சி மையம் மூலமாக பயிற்சி அளிக்க அரசு வகை செய்துள்ளது.

[1994 ஏப்ரல் 29

51. இப்பயிற்சி மையங்களுக்காக, 1994-95 ஆம் ஆண்டிற்கென ரூ. 20.09 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்:

52. தொழிற் பட்டப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு எழுதும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு சென்னை மாநகரம் நீங்கலாக மற்றைய அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அல்லது அரசு மானியம் பெறும் மூன்று மேல்நிலைப்பள்ளிகளில் 15 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பயிற்சி மையங்களில் சேருவதற்குப் பெற்றோர் வருமான வரம்பு ஏதும் இல்லை. இத்திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டப்பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் :

53. இருபது சட்டப் பட்டதாரிகள் நீதித்துறையில் அனுபவம் பெறும் வகையில் முதுநிலை வழக்கறிஞர்களிடம் மூன்று ஆண்டுகள் பயிற்சி பெறும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 750/- பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான வருமான உச்சவரம்பு ரூ.12,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிற்றுவிக்கும் முதுநிலை வழக்கறிஞருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,001/- வீதம் மூன்று ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும்.

54. இத்திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ.6.84 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைத்தொழிற்பயிற்சி மையங்கள் :

55. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்காணூரணியிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வீரகேரளம்புதூரிலும் மூன்று பொதுநோக்குப் பொறியியற் பட்டறைகள் இத்துறையின் நிதி உதவியுடன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககத்தால் நடத்தப்படுகின்றன. இப்பட்டறைகளில் ஒவ்வொரு ஆண்டும் 208 நபர்களுக்கு, பொருத்துதல், பற்றவைத்தல் மற்றும் தகடுவேலைகள் ஆகியவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 29]

56. இத்திட்டத்திற்கென நடப்பு நிதியாண்டில் ரு.30.66 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

57. இதுதவிர 220 மகளிர் பயன்பெறும் வகையில் ஏழு தையற்பயிற்சி மையங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறையில் நாரிழை தயாரிப்பு பிரிவு ஒன்றையும் அரசு நடத்துகிறது.

58. மேற்படி திட்டத்திற்கென 1994-95 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 7.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பணிசார்ந்த பயிற்சி வகுப்புகள்:

59. பணிசார்ந்த பயிற்சிகளுக்குப் பல வசதிகளையும், சலுகைகளையும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்கள் பெருமளவு வேலை வாய்ப்புகளை பெற முடியும். ஆனால் பணிசார்ந்த பயிற்சிக்கான வகுப்புகள் முழுமையான அளவில் அரசு நிறுவனங்களில் இல்லை. எனவே தட்டெழுத்து, சுருக்கெழுத்துப்பயிற்சி மற்றும் கணிப்பொறிப் பயிற்சி ஆகியன தனியார் நிறுவனங்கள் மூலமாகவும், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தின் மூலமாகவும் அளிக்கப்படுகின்றது. இந்நிறுவனங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அரசு உதவித்தொகை அளித்து வருகிறது. 1993-94ஆம் ஆண்டு ரூ.32.52 இலட்சம் செலவில் 1000 மாணவ, மாணவியர் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியும், 175 மாணவ, மாணவியர் கணிப்பொறி பயிற்சியும் மற்றும் 250 மாணவர்கள் கனரக ஓட்டுநர் பயிற்சியும் பெற்றனர். நடப்பு நிதியாண்டில் (1994-95) 175 மாணவ, மாணவியருக்கு கணிப்பொறி பயிற்சியும், 250 மாணவர்களுக்கு கனரக ஓட்டுநர் பயிற்சியும் மற்றும் 1000 மாணவ, மாணவியருக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

60. 1994-95 ஆம் ஆண்டிற்கு மேற்படி பயிற்சித் திட்டங்களுக்கென ரூ.32.06 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் நலம் :

61. திருத்தி அமைக்கப்பட்ட மாநில சிறுபான்மையினர் நல ஆணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் மாநில சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டங்களிலும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்புகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதை மதிப்பீடு செய்து, எல்லா பாதுகாப்புத் திட்டங்களையும்

அமுல்படுத்துவதற்கும், செவ்வனே நிறைவேற்றுவதற்கும் வேண்டிய பரிந்துரைகள் செய்வது போன்ற பணிகளைச் செய்து வருகிறது. சிறுபான்மையினர் நல ஆணையம் சிறுபான்மையினர் நிறைந்துள்ள பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய குறைகளை ஆய்வு செய்து அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான வழிவகைகளை அரசுக்குத் தெரிவித்து வருகிறது. தமிழ்நாட்டில், முகம்மதியர், கிருத்துவர், சீக்கியர், புத்த மதத்தினர் மற்றும் பார்சீஸ் ஆகிய இனத்தவர்களையே சிறுபான்மை சமுதாயத்தினர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 90 சதவிகித முகம்மதியர் மற்றும் 80 சதவிகித கிருத்துவர்கள் ஆகியோர் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் அனுபவித்து வரும் எல்லா சலுகைகளையும் பயன்களையும் பெற்று வருகின்றனர்.

62. தமிழ்நாட்டில் மதம் மற்றும் மொழிவாரி சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலை குறித்த ஆய்வு ஒன்றை மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு, இப்பணி செயல் மதிப்பீட்டு ஆராய்ச்சித்துறையிடம் அளிக்கப்பட்டு ஆய்வு நடைபெற்று வருகின்றது.

63. ஏற்கனவே 1961, 1965 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின் தொடர்ச்சியாக, ஒரு குறிப்பிட்ட பகுதியில் மாநிலத்தின் பெரும்பான்மை மக்களின் மொழியான தமிழ் அல்லாத வேறு மொழியினைப் பயன்படுத்தும் மொழிவாரிச் சிறுபான்மையினர் எண்ணிக்கை, 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டின் அடிப்படையில் 15 சதவிகிதத்திற்கு மேல் இருந்தால் அம்மொழியினைச் சில குறிப்பிட்ட நடைமுறைகளுக்கு மட்டும் பயன்படுத்தும் வகையில் அப்பகுதியை "உள்ளூர் பகுதியாக" அறிவித்து அரசாணை (நிலை) எண்.83 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நாள் 29-12-93ல் வெளியிடப்பட்டுள்ளது.

64. தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தும் மத்திய அரசின் செயற்குறிப்பின் தொடர்ச்சியாக, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் ஆகிய நிறுவனங்களில் இருந்து நிதி வசதி பெற்றிட ஏதுவாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பெயரை "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்

1994 ஏப்ரல் 29]

பொருளாதார மேம்பாட்டுக் கழகம்" என மாற்றி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

65. தேசிய சிறுபான்மையினர் ஆணையம், தேசிய அளவில் மாநில சிறுபான்மையினர் ஆணையங்கள் மற்றும் நிதி வளர்ச்சிக் கழகங்களின் கூட்டத்தை புதுடெல்லியில் 7-2-94 அன்று கூட்டியது. தேசிய சிறுபான்மையினர் நல ஆணையத்தின் குறிக்கோள்கள், பாரதப் பிரதமரின் 15 அம்ச திட்டங்கள், வகுப்பு நல்லிணக்கம், பொதுத்துறைகளில் சிறுபான்மையினருக்கான வாய்ப்புகள், சிறுபான்மையினருக்கான கல்வி, சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாடு போன்ற சில முக்கிய அம்சங்கள் அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் :

66. மண்டல் குழு பிரிந்துரைகள் தொடர்பான வழக்கில் இந்திய உச்சநீதி மன்றம் பிறப்பித்த கட்டளைக்கிணங்க, "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்" என்ற நிரந்தர ஆணையம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாணையத்தின் அமைப்பு முறை பின்வருமாறு :-

1) மாண்புமிகு நீதியரசர் திரு கே. சண்முகம் (ஓய்வு) .. தலைவர்
2) திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப. .. உறுப்பினர்-செயலர்
3) திரு. யு. எஸ். நடராஜன், இ.ஆ.ப. (ஓய்வு) .. உறுப்பினர்
4) திரு. எம். மாணிக்கவேலு, இ.ஆ.ப. (ஓய்வு).. உறுப்பினர்
5) திரு. சி. முருகதாஸ், பொருளாதாரப் பேராசிரியர் .. உறுப்பினர்
6) திரு. சி. முத்துசாமி, இ.ஆ.ப. (ஓய்வு) .. உறுப்பினர்
7) திரு. டி. சுந்தரம், சமூகவியல் பேராசிரியர் .. உறுப்பினர்

அலுவலால் உறுப்பினர்கள்

8) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் .. உறுப்பினர்
9) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் .. உறுப்பினர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

67. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் அலுவல் ஆய்வு வரம்புகள் :

1) பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் மற்றும் அப்பட்டியலிருந்து நீக்குதல்.

2) பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்கள் குறித்து குறிப்பிட்ட கால அளவிலான மறு ஆய்வு.

3) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டின் பயன்பாட்டிலிருந்து முன்னேறிய வகுப்பினரை நீக்கம் செய்வது.

4) எந்தவொரு பணித்தொகுதியின் வகுப்பினையும் இடஒதுக்கீட்டின் எல்லையிலிருந்து நீக்குவது.

5) பதவி உயர்வில் இட ஒதுக்கீடு.

இவ்வாணையம் விரிவான ஆய்விற்குப்பின் (அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டின் பயன்பாட்டிலிருந்து முன்னேறிய பிரிவினரை நீக்கம் செய்வது, (ஆ) பதவி உயர்வில் இட ஒதுக்கீடு ஆகியவற்றின் மீது பரிந்துரைகளை அனுப்பியுள்ளது. அவை அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

68. சில வகுப்புகளைப் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் பல்வேறு சமூக சங்கங்களும் தனி நபர்களும் அளித்துள்ள முறையீடுகளின் மீது இவ்வாணையம் தற்போது விசாரணை செய்து வருகிறது.

69. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் திரு. ஆர். என். பிரசாத் அவர்களும், அவ்வாணையத்தின் உறுப்பினர்-செயலர் திரு. பி. எஸ். கிருஷ்ணன் அவர்களும் 1993-94ல் இம்மாநிலத்திற்கு வருகை தந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை இனம் கண்டறிவதற்கான அளவுகோல்கள்/குறியீடுகள் மற்றும் பொதுப்பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவம் ஆகியவை குறித்து மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். கேரள மாநில பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையத்தின் உறுப்பினர்-செயலர் திரு. பி.ஜி. முரளிதரன் அவர்களும் அண்மையில் சென்னைக்கு வருகை தந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து கண்டறிந்தார்.

1994 ஏப்ரல் 29]

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.

70. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அரசால் 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ், 16-11--1981ல் பதிவு செய்யப்பட்டு, தனது பணியை 22-5-82 ஆம் நாள் முதல் தொடங்கியது. இதற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை ரூபாய் 10 கோடி ஆகும். தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்குப் பங்கு மூலதனமாக ரூ.2,31,56,000/- ஐ வழங்கியுள்ளது.

இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:-

1. பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அவைகளுக்கு தொடக்க நிதியுதவி வழங்குவது.
2. பிற்படுத்தப்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் எனக் கருதப்படும் வழிகளில், பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளல்.

71. இந்நிறுவனம், தொழிற் கூட்டுறவு சங்கங்களின் திட்டங்களுக்கு, மொத்த முதலீட்டுத் தொகையில் ஆரம்ப கால முதலீட்டுக் கடனாக 20 விழுக்காடு தொகையை மற்றும் அதிக பட்சமாக ரூ. 3.00 இலட்சம் வரை கடனாக வழங்கி வருகிறது. எஞ்சிய 80 விழுக்காடு முதலீட்டுத் தொகையை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்/கூட்டுறவு வங்கிகள் அல்லது இதர நிதி நிறுவனங்களில் இருந்து பெற்றிட ஏற்பாடு செய்கிறது. தற்பொழுது புதுதில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனம் தனிநபர் முதலீட்டுத் தொகை பயனாளியின் பங்குத் தொகையான 10 விழுக்காடு போக எஞ்சியுள்ள திட்டத்தொகையான 70 விழுக்காடு தொகையைக் காலக்கடனாக வழங்குகிறது.

72. நடப்பாண்டு முதல், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து, ஆரம்ப முதலீட்டுக் கடன், காலக்கடன், பயிற்சி வசதிகளுக்காக மான்யம் போன்றவைகளுக்கு நிதி உதவியைப் பெற்றுத் தரும் வழிகோலும் முகமையாக (Channelising Agency) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் செயல்பட்டு வருகிறது.

73. இந்நிறுவனம், 1993-94ஆம் ஆண்டில், மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள், தொழிற் கூட்டுறவு சங்கங்கள், பிற்படுத்தப்பட்ட மாணவ விடுதிகள் மற்றும் தனிநபர்களைச் சேர்ந்த, 13,032 பயனாளிகளுக்கு ரூ. 37.30 இலட்சம் ஆரம்ப முதலீட்டுக் கடனாகவும், மற்றும் ரூ. 78.27 இலட்சம் காலக்கடனாகவும் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட காலக்கடன்) வழங்கியுள்ளது.

74. மைய அரசால் நிறுவப்பட்டுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களுக்கேற்ப தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் செயல்பட, அரசு அனுமதித்துள்ளது. 1994-95ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த 10,000 பயனாளிகளுக்கு 13 கோடி ரூபாயை இக்கழகம் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

1994-95ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள்:-

75. 1. பிற்படுத்தப்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின மாணவியர்க்கென்று ரூ. 29.84 இலட்சம் செலவில் 16 புதிய விடுதிகள் தொடங்கப்படும்.

2. பிற்படுத்தப்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மாணவியர்க்கென்று தற்போது வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் விடுதிகளில் 12 விடுதிகளுக்கு ரூ. 68.64 இலட்சம் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

3. மூன்று நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஒரு உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாகவும் ரூ. 7.92 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்படும்.

4. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் உள்ள 65 மாணவர் விடுதிகளில் ரூ. 3.90 இலட்சம் செலவில் மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

5. சீர்மரபினர் பள்ளிகளில் கூடுதலாக பத்து வகுப்பறைகள் ரூ. 30.54 இலட்சம் செலவில் கட்ட வகை செய்யப்பட்டு, நடப்பு நிதியாண்டில் இதற்கென ரூ. 12.22 இலட்சம் செலவிடப்படும்.

1994 ஏப்ரல் 29]

6. சீர்மரபினர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 3.61 இலட்சம் செலவில் ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தமிழ் ஆகியவற்றில் நூலகங்களுக்கான புத்தகங்கள் வாங்கப்படும்.

7. முதுகுளத்தூர் மற்றும் செக்கானூரணியில் இயங்கும் தொழிற் பயிற்சி நிலைய கட்டிடங்களுக்கு ரூ. 4.01 இலட்சம் செலவில் மின்சாரக் கம்பி புதுப்பிக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.

8. புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு சீர்மரபினர் மாணவியர் விடுதிக்கு ரூ. 2.15 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

முடிவுரை:

76. இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கென இவ்வரசு பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இவ்வரசு முன்னெப்போதும் போல், இவ்வகுப்பினரின் சீரிய நலனைக் கட்டிக்காக்கவும், அவர்கள் முன்னேற்றத்திற்கும் அனைத்து வழிகளிலும் தொடர்ந்து பாடுபடும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

1994-95-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூபாய் ஆயிரத்தில்)

நிர்வாகம்	பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு ..	22,841			
	சிறுபான்மையினர் நலம் ..	1,528	பிற்படுத்தப்பட்ட வகுப்பு ..	1,89,836	1,92,275
	பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ..	911	சிறுபான்மையினர் நலம் ..	1,528	
	மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு ..	4,191	பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ..	911	
			மிகப்பிற்படுத்தப்பட்டோர் ..	2,50,400	2,53,873
			சத்துணவு ..	3,473	
திருப்பி வசூலிக்கப் பட்டவை.	பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு ..	1,381	திருப்பி வசூலிக்கப்பட்டவை ..		3,615
	மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு. ..	2,234	மொத்தம்		**4,49,763**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விவரம்	திட்டப்பணிகள்			திட்டத்தில் சேராதவை			மொத்தம்	
	பி.வ.	மி.பி.வ.	சீ.ம.	பி.வ.	மி.பி.வ.	சீ.ம.	பி.வ.	மி.பி.வ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1. படிப்புதவி தொகை	2095	1238	500	46554	16545	5279	48649	23562
2. இலவசக் கல்வி	20460	33685	..	..	..	..	20460	33685
3. பள்ளிகள்	..	..	7620	..	..	79548	..	87168
4. புத்தகங்களும் எழுது பலகைகளும்	..	..	1283	..	..	1570	..	2853
5. உடைகள்	1023	750	2946	536	365	613	1559	4674
6. உணவு மானியம்	163	138	..	1066	517	5	1229	660
7. விடுதிகள்	21225	14619	5740	67279	31943	20876	88504	73178
8. பல்கலைக்கழகத்திற்கு இழப்பீடு	..	..	..	27	13	..	27	13
9. ஆசிரியர்களுக்கு வீடுகள்	..	..	15	..	..	..	..	15
10. வேளாண்மை	..	..	..	..	..	5	..	5
11. பல்நோக்கு பொறியியல் பட்டறைகள்	..	..	451	..	..	2615	..	3066
12. குடிசைத் தொழில்கள்	..	..	..	607	..	158	607	158
13. இலவசக் கருவிகள்	..	5115	..	..	293	..	..	5408

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
14. சலவைத்துறை	..	230	..	..	..	..	..	230
15. சிறப்புத் தனிப்பயிற்சி நிலையம்	615	..		1394	..	..	2009	..
16. வீட்டுமனை கையகப்படுத்துதல்	..	10000	..	..	300	..	..	10300
17. சீர்மரபினர்களுக்கு வீட்டு வசதி	..	..	1	..		..	..	1
18. மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி	..	140	..	12	..	..	12	140
19. பட்டயகணக்கர் படிப்பு	..	..	..	3	2	..	3	2
20. பரிசுகள் வழங்குதல்	1127	..	..	..	..	..	1127	..
21. வேலைவாய்ப்பு பயிற்சி திட்ட மாணவர் இல்லம்	1347	..	..	..	..	..	1347	..
22. பணிசார்ந்த பயிற்சி (சுருக்கெழுத்து, கனரக ஓட்டுனர் பயிற்சி, கணிப்பொறி பயிற்சி)	778	1081	..	..	..	..	778	1081
23. சட்டப்பட்டதாரிகளுக்கு பயிற்சி	684	..	..	..	..	..	684	..
24. பள்ளிகள், மாணவர் இல்லங்கள் கட்டுதல் (பழுது பார்த்தல்)	..	10		..	..	..	..	10
மொத்தம்	**49517**	**67006**	**18556**	**117478**	**49978**	**110669**	**166995**	**246209**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மொத்தம் 1993-94

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ..	1,66,664		
மாநில சிறுபான்மையினர் ஆணையம் ..	724	1,67,388	
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ..		2,36,523	
சத்துணவு ..		3,396	4,07,307

மொத்தம் 1994-95

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ..	1,89,836		
மாநில சிறுபான்மையினர் ஆணையம் ..	1,528		
பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ..	911	1,92,275	
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ..	2,50,400		
சத்துணவு ..	3,473	2,53,873	4,46,148+
திருப்பி வசூலிக்கப்பட்டவை ..			3,615
மொத்தம் ..			**4,49,763**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS